வைத்ய பத்திரிகை வெளியீடு:

ஸ்ரீ:

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# யோகரத்நாகரம்

## சிகித்ஸாஸ்தானம்

1 – 2 பகுதிகள்

பைஷஜ்யரத்நாவளி—பாவப்ரகாச நூல்களின்
விசேஷக் குறிப்புகளுடன் அடங்கியது.

தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலம்
திருச்சி 2.

வைத்யசந்திரிகை வெளியீடு:

ஸ்ரீ:

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# யோகரத்நாகரம்

## சிகித்ஸாஸ்தானம்

1 – 2 பகுதிகள்

பைஷஜ்யரத்நாவளி—பாவப்ரகாச நூல்களின்
விசேஷக் குறிப்புகளுடன் அடங்கியது.

முதற்பகுதி:
ஜ்வர அதிஸார கிரஹணீ அதிகாரங்கள்.

இரண்டாம்பகுதி:
அர்சஸ் அக்னிமாந்த்ய அஜீர்ணாதிகாரங்கள்

வைத்யவிசாரத S. V. ராதாகிருஷ்ணசாஸ்திரி
ஆயுர்வேதசிரோமணி அவர்களால்
தமிழாக்கப்பெற்று

தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலம்
சார்பில்

வைத்யசந்திரிகை ஆசிரியர்
ஸ்ரீ. S. M. ஸுந்தரராஜாசாரியர் அவர்களால்
வெளியிடப்பெற்றது.

ஸ்ரீ விலாஸம் பிரஸ்,
— ஸ்ரீரங்கம். —

1961

உ

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# முன்னுரை.

தஞ்சாவூர்.

வைத்யசந்திரிகையின் பல முக்கிய நோக்கங்களில் ஆயுர்வேத மூலக்ரந்தங்களில் உள்ள பல அரிய விஷயங்களை மூலமான ஸம்ஸ்கிருத பாஷையில் இருப்பவைகளைத் தமிழில் மொழி பெயர்த்து விளக்கத்துடன் வெளியிடுவதும் ஒன்றாகும். இப்பணியிலே இப்பத்திரிகையின் ஸ்தாபகரும் போஷகருமாக விளங்கா நின்ற பண்டித ஸ்ரீ. நாராயண அய்யங்கார் அவர்கள் ஈடுபட்டு வெளியிட்டுள்ள நூல்கள் பல. அதிலே முற்றுப் பெறாத ஒரே பணி யோகரத்நாகரத்தின் மொழிபெயர்ப்பாகும். அவர்கள் யோகரத்நாகரத்தின் ஸூத்ரஸ்தானப் பகுதியை மாத்திரம் வைத்யசந்திரிகை மூலம் வெளியிட்டிருந்தார்கள். பின்னர் ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. B. நடராஜசாஸ்திரீ அவர்கள் ஸம்ஸ்கிருத மூலத்துடன் அதே ஸூத்ரஸ்தானத்தின் ஒரு பகுதியை தமது விசேஷித்த விளக்கவுரைகளுடன் வைத்யசந்திரிகையில் வெளியிட்டார்கள். யோகரத்நாகரத்தின் மற்ற பகுதிகளையும் வெளியிடுமாறு மஹாமண்டல அங்கத்தினர்கள் கோரியதற்கிணங்க யோகரத்நாகரத்தின் சிகித்ஸா ஸ்தானத்தை வைத்யசந்திரிகையின் உதவி ஆசிரியர் ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி மேற்கொண்டு 1957 பிப்ரவரி மாதம் முதல் தொடர்ந்து வைத்யசந்திரிகை வாயிலாக வெளியிட்டார். அதன் மறு பதிப்பே இன்று புத்தக உருவில் வெளியாகிறது.

தமிழ் மொழிபெயர்ப்பு மிகவும் சுருக்கமாக—ஆனால் ஒரு விஷயத்தையும் விடாது— தேவையான விடங்களில் தக்க விளக்கங்களுடன் வெளியாகியுள்ளது.

யோகரத்நாகரத்தின் தமிழ் மொழிபெயர்ப்பைப் பார்த்த அன்பர்கள் பாவப்பிரகாசத்தையும் பைஷஜ்ய ரத்நாவளியையும் இதைப் போலத் தொடர்ந்து தமிழாக்கி வெளியிடக் கோரினர். யோகரத்நாகரம் பாவப்ரகாசம் பைஷஜ்யரத்நாவளி இம்மூன்றும் மருந்து யோகங்களின் தொகுப்பு நூல்கள். அவைகளில் ஒரு நூலில் காணப்படும் சில மருந்துகளே மற்ற நூல்களிலும் காணப்படுகின்றன. மற்ற வியாதி நிதானம் முதலிய குறிப்புகள் எல்லாவற்றிலும் சமமே. ஆகையால் இவைகளைத் தனித்

தனியே தமிழாக்கி வெளியிடுவதைவிட யோகரத்நாகரத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு மற்ற இரு நூல்களிலும் விசேஷமாகக் காணும் அம்சங்களைப் பொறுக்கிச் சேர்த்து ஆங்காங்கு புகுத்தி வெளியிடுதல் காலதாமதத்தைத் தவிர்க்கும் என்று கருதி ஆங்காங்கு மற்ற இருநூல்களின் விசேஷப் பகுதிகளையும் சேர்த்தே இந்த மொழிபெயர்ப்பு வெளியாகியுள்ளது. ஆக வெளியான பகுதிகளில் பைஷஜ்யரத்நாவளி— பாவப்ரகாசம். இவ்விரண்டும் முழுவதும் தமிழாக்கப்பட்டு விட்டதாகக் கருதலாம்.

யோகரத்நாகரத்தின் ஒரு விசேஷ மதிப்பு என்னவெனில், ஸ்வதந்திர நூலாக இல்லாமல் பல நூல்களிலுள்ள விசேஷங்களை — ஒரு சிகித்ஸகனுக்குத் தேவைப்படுபவை யனைத்தையும் ஒருங்கே மூல நூல்களின் வாக்யங்களைக் கொண்டே அமைத்திருப்பதும் ஸர்வாங்கங்களிலும் நிறைவுகொண்டிருப்பதுமே. மற்ற இருநூல்களில் இந்நிறைவிருப்பதாகக் கூறமுடியாது. சில யோகங்கள் தனித்த பெருமையுள்ளதாகக் கூறப்பட்டுள்ளதே இவைகளுக்குத் தனிப்பெருமை. ஆகையால் யோகரத்நாகரத்தை மூல நூலாக வைத்துக்கொண்டது மிகவும் பொருத்தமானது.

இந்நூலில் கண்டுள்ள யோகங்கள் பல சிறிய மாறுதல்களுடன் வேறு நூல்களில் காணப்படுகின்றன. அவைகளையும் ஆங்காங்கு குறிப்புகளாக கொடுத்துள்ளது இந்த யோகங்கள் சம்பந்தப்பட்ட விவரங்களை ஒருங்கே காண வசதியாக அமைத்துள்ளது.

ஜ்வரம் அதிஸாரம் கிரஹணி எனும் மூன்று நோய்களைப் பற்றி முதற் பகுதியிலும் அர்சஸ், அக்னிமாந்த்யம், அஜீர்ணம் எனும் மூன்று நோய்களைப் பற்றி இரண்டாவது பகுதியிலும் நிதானமும் சிகித்ஸையும் கூறப்பட்டுள்ளன. மற்ற பகுதிகள் சீக்கிரமே வெளியாகுமென நம்புகிறோம்.

இந்நூலைத் திறம்பட வமைத்துக் கொடுத்த நமது நண்பர் S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி அவர்கட்கு மகாமண்டலம் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

ஸ்ரீரங்கம்,
1—8—61

S. M. ஸுந்தரராஜாசார்ய,
வைத்யசந்திரிகை ஆசிரியர்.

ஸ்ரீ:

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# யோகரத்னுகரம்.

4218.

## ஜ்வராதிகாரம்

தக்ஷனிடம் ஏற்பட்ட அவமானத்தால் கொதித்தெழுந்த ருத்ரனின் பெரு மூச்சிலிருந்து ஜ்வரமெனும் நோய் முதலில் உலகில் கண்டது.

ஜ்வரம் எட்டு வகைப்படும். வாத ஜ்வரம், பித்த ஜ்வரம், கப ஜ்வரம், வாதபித்த ஜ்வரம், வாதகப ஜ்வரம், பித்தகப ஜ்வரம், ஸங்நிபாத ஜ்வரம், ஆகந்து ஜ்வரம் என.

**ஜ்வரத்தின் ஸம்ப்ராப்தி:** (வரும் வகை). மித்யாஹார விஹாரங்களால் (வழி தவறி உணவேற்பது, நடத்தை) ஆமாசயத்திலுள்ள தோஷங்கள் கோஷ்டத்திலுள்ள அக்னியை வெளிப்படுத்தி ரஸத்துடன் உடலுள் முழுவதும் பரவச் செய்து ஜ்வரத்தை உண்டு பண்ணுகின்றன.. *

---

* அகாலத்தில், அளவு மீறி, உடலுக்கு ஏற்காததும் கெட்டுவிட்டதுமான உணவை ஏற்பது மித்யாஹாரமெனப்படும். சக்தியில்லாதிருக்கையில் சக்திக்கு மீறி செய்யப்படுவதும் தகாததுமான செய்கையும், சக்தியிருந்து சோம்பியிருத்தலும் மித்யாவிஹாரமெனப்படும். ஆமாசயமென்பது தொண்டையிலிருந்து கிரஹணி (டுயோடினம்) க்குமேல் உள்ள அவயவங்களுக்கு ஆமாசயம் எனப் பெயர். இது அன்னத்தை பக்குவமாக்கத் தகுதி பெறச் செய்யுமிடம். இங்குள்ள அன்னம் ஆமம் எனப்படும். ரஸம் என்பது அன்னத்திலிருந்து சாரமாகப்பிரிக்கப்படுவதும், ரக்தமாக மாறத் தகுதி உள்ளதுமான திரவத்திற்குப் பெயர், Lymph, Plasma. இவ்விரண்டும் ரஸாம்சங்களே. அக்னி பலம் மந்தமாக இருக்கும்போது ஆகார ரஸம் பாகமடையாமலே தனது போஷ்ய தாதுவான ரஸத்துடன் கலந்து விடுவதால் கனத்துப்போய் ஸ்ரோதஸ்ஸுகளை அடைத்து உள்ளே உள்ள உஷ்ணத்தை வெளியாகாமல் தடுத்தும் ஸாரமலங்கள் தனித்துப் பிரியாது செய்தும், சரீரத்தில் வெப்பத்தை மிகுதியாக்கி ஜ்வரத்தை ஏற்படுத்தி விடுகிறது. ஜ்வரம் என்றால் தாபம் மிகுந்தநிலை எனப்பொருள். 'ஜ்வர ஸந்தாபே' என்ற தாதுவிலிருந்தும் உண்டான சொல். சரீரத்தைப்பற்றி உண்டாகும் நோய்களில் கொதிப்பு மிகுந்து உடலில் சூடு அதிகமாகுவதும் மனத்தைப்பற்றி ஏற்படுபவைகளில் கொதிப்பு மிகுந்து மனவேதனை (தாபம்) மிகுந்து காணுவதும் உண்டு.

**பூர்வ ரூபம் :** களைப்பு, வெறுப்பு, நிறம் மங்குதல் ருசியின்மை, கண்களில் நீர் தேங்குதல், குளிரிலும் காற்றிலும் வெப்பத்திலும் இயற்கைக்கு மாருன வகையில் திடீரென ஏற்படும் விருப்பும் வெறுப்பும், கொட்டாவி, உடல் முழுவதும் பிடித்துவிடவேண்டிய உணர்வூட்டும் வலி, உடல் கனத்தல், மயிர் சிலிர்த்தல், அரோசகம், பிரக்ஞை இழத்தல், உத்ஸாஹம் குன்றிப் போதல், குளிர்— இவை ஜ்வரம் வருமுன் காணப்படும் பொதுக் குறிகள். வாயு மிகுந்திருந்தால், கொட்டாவி அதிகமும், பித்தம் மிகுந்திருக்க கண்ணெரிச்சலும், கபத்தில் பசியின்மையும் உணவேற்காமையும் இரண்டு தோஷங்கள் மிகுந்திருக்க அந்த இரண்டு தோஷங்களின் குறிகளும், ஸந்நிபாதத்தில் ஸந்நிபாதக் குறிகளும் காணப்படும்.

**ஜ்வரத்தில் பொதுவான குறிகள் :** வியர்வை தடைபடுதல், உடலில் காந்தல், உடல் முழுவதும் பிடிப்பிருப்பதுபோன்ற உணர்வு இவை காணப்பட்டால் ஜ்வரமெனக் கொள்ளலாம்.

**வாத ஜ்வரக் குறிகள் :** நடுக்கம், ஜ்வரவேகம் அடிக்கடி மாறுவது, தொண்டை, அண்ணம் இவை வரண்டு போதல், தூக்கமின்மை, தும்மல் தடைபடுதல், உடல் வரட்சி, தலை வலி, மார் வலி, உடல் முழுவதும் வலி, வாய் கசந்துபோதல், மலக்கட்டு, வயிற்றில் குத்துவலி, பொருமல், கொட்டாவி இவை வாத ஜ்வரத்தின் அறிகுறிகள்.

**பித்த ஜ்வரக் குறிகள் :** கடுமையான தாபம், மலமிளகி அதிகமாக வெளியாதல், தூக்கக் குறைவு, வாந்தி, தொண்டை அண்ணம், வாய், மூக்கு இவைகளில் வேக்காடு, வியர்வை, பிதற்றல், வாயில் கசப்பு, மயக்கம், எரிச்சல், உடல் திமிர்கொள்ளுதல், நாவரட்சி, மலமும் மூத்திரமும் கண்ணும் தோலும் மஞ்சள நிற மடைதல், தலை சுற்றுதல் இவை பித்த ஜ்வர லக்ஷணமாகும்.

**கப ஜ்வரக் குறிகள் :** மெதுவாக ஜ்வரம் ஒரே நிலையில் பரவுதல், சோம்பல், வாய் இனித்தல், மலமும் மூத்திரமும் கண்ணும் தோலும் வெண்ணிறமடைதல், உடல் அசைவற்றுக் கிடத்தல், பசியின்மை, உடல் கனத்தல், குளிர், உமட்டல், மயிர் சிலிர்த்தல், நல்ல தூக்கம், ஸ்ரோதஸ்ஸுகள் அடைபட்டிருத்தல், மலக் குறைவு, வாயில் ஜலம் ஊறுதல், அதிக மூத்திரம், உடலில் சூடு அதிகமின்மை, வாந்தி, அக்னி பலக்குறைவு, சரியாமை, சளி, அரோசகம், இருமல், கண் வெளுத்துக் காணுதல் இவை கப ஜ்வரத்தின் அறிகுறியாம்.

**வாதபித்த ஜ்வரக் குறிகள் :** நாவரட்சி, மயக்கம், தலை சுற்றுதல், எரிச்சல், தூக்கமின்மை, தலைவலி, வாய் தொண்டை

வரட்சி, வாந்தி, மயிர் சிலிர்த்தல், அருசி, கண்ணிருண்டுபோதல், பூட்டுகளில் வலி, கொட்டாவி இவை வாதபித்த ஜ்வர லக்ஷண மாகும்.

**வாதகப ஜ்வரக் குறிகள்:** உடல் அசையாமை, பூட்டுகளில் வலி, தூக்கம், உடல் கனத்தல் கழுத்துப் பிடிப்பு, சளி, இருமல், வியர்வை வராதிருத்தல், மத்யமவேகத்தில் ஜ்வரம் இவை வாதகப ஜ்வரத்தின் அறிகுறிகள்.

**பித்தகப ஜ்வரக் குறிகள்:** வாயில் ஏதோ பூசப்பட்டது போன்ற உணர்ச்சி, வாய் கசப்பு, சோர்வு, மயக்கம், இருமல், அரோசகம், நாவரட்சி, அடிக்கடி எரிச்சலும் குளிரும் மாறி மாறி வருதல் இது பித்தகப ஜ்வரத்தின் அறிகுறிகள்.

**ஸந்நிபாத ஜ்வரக் குறிகள்:** ஒன்றுக்கொன்று ஒவ்வாத அன்னபான விஹாரங்களைக் கலந்து உபயோகிப்பதாலும், அஜீர்ணம் அடிக்கடி ஏற்படுமாறு நடந்துகொள்வதாலும், மூன்று தோஷங்களும் அளவில் அதிகமாகி ஜ்வரத்தை உண்டாக்கும். அப்போது சிறிது நேரம் குளிரும், சிறிது நேரம் எரிச்சலும், எலும்புப் பூட்டுகளிலும் தலையிலும் வலி, கண்களில் கண்ணீர் கசிந்தும் கலங்கியும் சிவந்தும் வெளியாகியும் உள்ள நிலை, காதுகளில் சத்தமும் வலியும், தொண்டையில் ஊவாமுள் நிரம்பியது போன்ற நிலை, சோம்பல், மயக்கம், பிதற்றல், இருமல், சுவாஸம், அரோசகம், மயக்கம், கை கால்கள் சில்லிடுதல், பகலில் கடுந் தூக்கம், இரவில் கண் விழிப்பு அல்லது எப்பொழுதுமே தூக்கம் அல்லது தூக்கமின்மை, அதிக வியர்வை அல்லது வியர்வையின்மை, பாடுவதும் ஆடுவதும் சிரிப்பதும் முதலிய மாறிய சேஷ்டைகள் ஆரம்பித்தல், நாக்கு வெந்து சுரசுரப்புடனிருத்தல், உடல் பூட்டுகள் நழுவிவிட்டது போன்ற தளர்ச்சி, கபத்துடன் கலந்து ரத்தமும் பித்தமும் காறித்துப்புதல், தலையை புரட்டிக் கொண்டே இருத்தல், நாவரட்சி, தூக்கமின்மை, மார் வலி, வியர்வை மலம் மூத்திரம் இவை வெகு காலம் கடந்து குறைந்த அளவில் வெளியாதல், ஜ்வரவேகத்திற்கேற்ப உடல் அதிகம் இளைக்காதிருத்தல், அடிக்கடி தொண்டையில் கூவல் சப்தமேற்படுதல், உடல்மேல் கருஞ் சிவப்பு நிறமுள்ள சிறிய சினப்புகளும் மண்டலங்கள் சாறுதல், வாய் பேசாமை, ஸ்ரோதஸ்ஸுகள் வெந்துபோதல், வயிறு கனத்தல், தோஷங்கள் சீக்கிரம் ஜீர்ணமல்லது பாகமடையாதிருத்தல் இவை ஸந்நிபாத ஜ்வர லக்ஷணமாகும்.

**ஸந்நிபாத ஜ்வரங்களின் வகைகளும் காரணங்களும்:** புளிப்பு, நெய்ப்பு (ஸ்நிக்தம்), சூடு, தீக்ஷணம் இவை மிகுந்தவையும், உரைப்பு, இனிப்பு, துவர்ப்பு மிகுந்தவையும் வரட்சி மிக்கதாயும்

சீக்ரத்தில் ஜீர்ணமாகாததாயும் உள்ள ஆகாரங்கள் திருப்திக்கு மேற்பட்டு அருந்துதல், காமம், கோபம், சோகம், தேகப்பயிற்சி, கவலை, ஸ்திரீ ஸங்கம், அதிகமாகப் பேசுதல் இவைகளில் அதிகம் ஈடுபடுதலாலும், முக்யமாக வஸந்தருதுவிலும், சரத்ருதுவிலும், வருஷருதுவிலும் கோபமடையும் மூன்று தோஷங்களும் சேர்ந்து ஜ்வரத்தை உண்டாக்குகின்றன.

இவை பதின்மூன்று விதம். ஸந்திகம் அந்தகம், ருக்தாஹம், சித்தவிப்ரமம், சீதாங்கம், தந்திரிகம், கண்டகுப்ஜம், கர்ணகம், புக்னநேத்ரம், ரக்தஷ்டீவி, பிரலாபகம், ஜிஹ்வகம், அபிந்யாஸம் என. இவைகள் முறையே 7, 10, 20, 24, 15, 25, 13, 90, 8, 10, 14, 16, 15 நாட்களில் பிராணஹானியை உண்டுபண்ணும். உடன் பிராணஹானி ஏற்படுவதுமுண்டு. மேலும் ஸந்திகம், தந்திரிகம், கர்ணகம், கண்டகுப்ஜகம், ஜிஹ்வகம், சித்தவிப்ரமம் இவை ஆறும் சிகித்ஸையால் குணமடையக் கூடியவை. மற்றவை அஸாத்தியம்.

**ஸந்திக ஸந்நிபாதம்:** பூர்வரூப நிலையில் சூலம் மிகுந்தும், உடல் வரட்சி, வாயு மிகுதி, அதிகவலி, நல்ல கபக்கட்டு, ஜ்வர வேகம், பலக்குறைவு, தூக்கமின்மை இவை ஸந்திகத்தின் அறிகுறிகள்.

**அந்தக ஸந்நிபாதம்:** எரிச்சல், உட்காந்தல், மயக்கம், தலையாட்டம், விக்கல், இருமல் இவை மிகுந்து ப்ராணபாயமளிக்கும் ஜ்வரமிது.

**ருக்தாஹம்:** பிதற்றல், உட்காந்தல், அதிகமான மயக்கம், பசியின்மை, தளர்ச்சி, தலைசுற்றுதல், தொண்டை, மென்னி தாடை— இவைகளில் வேதனை மிகுதி, ஓயாத நாவரட்சி, இருமல், சுவாஸம், விக்கல் இவை மிகுந்து கஷ்டம் ஏற்படுதல், இந்த உபத்ரவங்களுடன் காணப்படுவது ருக்தாஹக ஸந்நிபாதமாகும். மிகவும் கஷ்டப்பட்டு சிகித்ஸித்தால் குணம் பெறலாம்.

**சித்தப்பிரமம்:** உடல் முழுதும் வலி, மயக்கம், திமிர், உட்காந்தல், தலைசுற்றல், அங்கங்களில் தளர்ச்சி, சிரிப்பு, பாட்டு, குதித்தல், பிதற்றல் இவைகளுடன் காணப்படுவது சித்தப்பிரம ஸந்நிபாதம். இது குணமடையாது.

**சீதாங்க ஸந்நிபாதம்:** பனிபோன்று குளிர்ந்த அங்கங்கள், நடுக்கம், சுவாஸம், விக்கல், தளர்ந்த அங்கங்கள், சிரமப்பட்டுப் பேசுதல், கடும் ஜ்வரம், அயர்வு, வலி, காஸம், வாந்தி, பேதி, இவைகளுடனுள்ளது சீதாங்கமாகும். இது சீக்ரம் பிராணஹானி விளைவிக்கும். அஸாத்யம்.

**தந்திரிகம் :** அதிகமான சோம்பல், அயர்வு, ஜ்வரம், கபம், நாவரட்சி, நாக்கு கறுத்து தடித்து முள் நிரம்பியிருப்பது, அதிஸாரம், சுவாஸம், ஓய்வு, உட்காந்தல், காதுவலி. தொண்டைக்கம்மல், இவை மிகுந்து எப்போதும் படுத்துக் கொண்டே இருப்பது தந்திரிக ஸந்நிபாதமாகும,

**கண்டகுப்ஜம் :** தலைவலி, தொண்டைக் கட்டு, எரிச்சல், மயக்கம், நடுக்கம், ஜ்வரம், ரக்தவாதத்தால் ஏற்படும் வேதனைகள், தாடை அசைக்க முடியாமை. தாபம், அழுகை, மூர்ச்சை—இவைகளுடன் வரும் ஜ்வரம் கண்டகுப்ஜ ஸந்நிபாதமாகும், மிகவும் கஷ்டப்பட்டு சிகித்ஸை செய்யத் தகுந்தது.

**கர்ணகம் ;** பிதற்றல், காது கேளாமை, தொண்டைக்கட்டு, உடல்வலி, சுவாஸம், காஸம், வாயில் ஊறல், காதுக்குப் பின்னும் கழுத்திலும் வலி, இதுகளுடன் கூடிய ஜ்வரம் கர்ணக ஸந்நிபாதமாகும். இதுவும் கஷ்ட ஸாத்யமே, ஸந்நிபாத ஜ்வரத்தின் கடைசியில் காதினடியில் பெரும் வீக்கம் ஏற்படும், இது வந்தால் ஒரு சிலர் தான் பிழைப்பர். ஜ்வரத்தின் ஆரம்பத்தில் காது அடியில் வீக்கம் ஏற்பட அஸாத்யமாகும், ஜ்வரத்தின் நடுவில் ஏற்பட கஷ்ட ஸாத்யம், ஜ்வரம் விட்ட பின் ஏற்பட்டால் ஸுக ஸாத்ய மென்றும் சிலர் கூறுவர்.

**புக்ன நேத்ர ஸந்நிபாதம் :** ஜ்வரம், பலக்குறைவு, மறதி, சுவாஸம், கண் பிதுங்கி வெளியாகுதல், மயக்கம், பிதற்றல், தலைசுற்றல், நடுக்கம், வீக்கம்—இவை புக்னநேத்ரத்தின் அறிகுறியாகும், இது சீக்ரம் மரணத்தை அளிக்கும்.

**ரத்தஷ்டீவி ஸந்நிபாதம் :** ஜ்வரம், வாந்தி, தாஹம், மோஹம், குத்துவலி, அதிஸாரம், விக்கல், வயிறு உப்புசம், தலைசுற்றல், அரிப்பு, சுவாஸம், ஞாபகமின்மை, நாக்கில் கருஞ்சிகப்பான மண்டலங்கள் தெரிதல், ரக்தவாந்தி இவை ரக்தஷ்டீவிஸந்நிபாத லக்ஷணமாகும். இதுவும் பிராண நாசம் உண்டாக்கவல்லது,

**பிரலாபக ஸந்நிபாதம் :** நடுக்கம், பிதற்றல், உட்காந்தல், தலைவலி, வாயு சேஷ்டைகள் மிகுதி, வேறிடத்தில் ஞாபகம், ஞாபகப் பிசகு, அதிகப் பேச்சு உள்ள இதுவும் அஸாத்யமே.

**ஜிஹ்வக ஸந்நிபாதம் :** சுவாஸம், காஸம், உட்காங்கை இவைகளால் உடல் தளர்ச்சி, நாக்கின் மேல் கடினமான முட்கள் படர்ந்திருத்தல், காது கேளாமை, மிகுந்த பலஹீனம் இவை இதன் அறிகுறிகளாம். மிக்வும் கஷ்டப்பட்டு சிகித்ஸை செய்யலாம்.

**அபின்யாஸம் :** வாயில் பிசுபிசுப்பு, தூக்கமின்மை, பிரக்ஞை இழத்தல், கஷ்டப்பட்டுப் பேசுதல், பலம் குன்றுதல், மூச்சுவிட

முடியாமை இவைகளுடன் கூடிய மூன்று தோஷங்களின் லக்ஷண மும் காணப்படும் ஸந்நிபாத ஜ்வரம் அபின்யாஸமாகும். இது வும் அஸாத்யமே.

**மற்ற ஸந்நிபாத நிலைகள்— வாதோல்பண ஸந்நிபாதம்— விஸ் பாரகம்:** மூன்று தோஷங்களும் கோபித்த ஸந்நிபாத நிலையி லும் வாதம் எல்லாவற்றிலும் மிகுந்திருக்க வாதோல்பணமாகின் றது. இதை விஸ்பாரகம் என்பர். சுவாஸம், காஸம், தலைசுற் றல், மயக்கம் ஞாபகமின்மை, நடுக்கம், விலாப்பக்கங்களில் வலி, கொட்டாவி, வாய் துவர்ப்பாக இருத்தல் இவை அதன் அறி குறிகள்.

**பித்தோல்பணஸந்நிபாதம்- ஆசுகாரீ:** மலமிளகிப் போதல், தலைசுற்றல், மூர்ச்சை, வாய்ப்புண், உடலில் சிகப்பு புள்ளிகள், எரிச்சல். இவை பித்தம் மிகுந்த ஸந்நிபாத ஜ்வரமாகிய ஆசுகாரி யின் லக்ஷணங்கள்.

**கபோல்பண ஸந்நிபாதம்–கம்பனம்;** உடம்பு அசைவின்மை. தொண்டை அடைத்துப் பேசுதல். இரவில் அதிகத் தூக்கம். கண்கள் குத்திட்டிருப்பது, வாயில் இனிப்பு—இவை கபோல்பண ஸந்நிபாதமாகிய கம்பனத்தின் அறிகுறிகள்.

**ஸாத்யாஸாத்யலக்ஷணம்:** கெட்ட தோஷங்கள் அளவில் மிக அதிகமாகி, அக்னிபலம் (பசி, ஜீர்ணசக்தி) குன்றி, எல்லா லக்ஷணங்களும் நிரம்பியிருக்க அஸாத்யமாகும். இவைகளின் பலம் சற்றுக் குறைந்திருக்க கஷ்ட ஸாத்யமாகும். 7—10—12 தினங்களில் ஒன்றில் இவ்வியாதி கடுமையாகி திடீரென சமன மடையும். அல்லது பிராணஹானி ஏற்படும். முறையே 7 அல் லது 14-வது நாளில், 9 அல்லது 18-வது நாளில் 11 அல்லது 22-வது நாளில் வாத-பித்த-கபோல்பண ஸந்நிபாத ஜ்வரங்கள் குறையும் அல்லது மரணமுண்டாக்கும் என்பர்.

மலபாக மேற்பட ஜ்வரம் குறைந்து ஆரோக்கியமும், தாது பாகம் ஏற்பட மரணமும் உண்டாகும்.

**மலபாக— தாதுபாக லக்ஷணங்கள்—** தோஷங்கள் கோபித்த நிலைக்கு மாறிய நிலை, ஜ்வரம் குறைவது, தேகம் கனம் குறைந்து இலேசாவது, இந்திரியங்கள் தெளிந்திருப்பது இவை மல(தோஷ) பாகத்தின் அறிகுறிகள். (அதாவது தோஷங்களின் கோபம் மாறி அதிகப்பட்ட கெட்ட தோஷங்கள் சரீரத்தை விட்டு வெளி யாகிவிட்டன என்று பொருள்.) அல்லது இந்த மலபாகக் குறி கள் தென்படாமல், மாறுபட்ட குறிகளும் கண்டு, தொப்புளுக்கு மேல், ஹிருதயத்தின் கீழ் தொடும் போது வலி ஏற்பட தாது

பாகம் ஏற்பட்டு விட்டதெனக் கொள்ளலாம். (அதாவது அங்குள்ள அவயவங்கள் புண்ணுகி, உடல் வளர்ச்சிக்கான தாதுக்களும் சீர்கெட்டு விட்டன என்பது பொருள்.)

மற்றொருவித பரீக்ஷையுமுண்டு. ஐந்து ஞானேந்திரியங்களும் சக்தி பெற்று சுறுசுறுப்புடனிருந்தும், ஜீர்ண சக்தி பசி சரியாகியும், நாவரட்சி எரிச்சல் போன்ற சிரமம் குறைந்தும் ஜ்வரம் இறங்கியும் இருக்க தோஷ பாகம் எனும் மலபாகம் அடைந்து விட்டதெனக் கொள்க. ஹிருதயத்திலிருந்து தொப்புள் வரை உள்ள இடங்களில் வலி மிகுந்து அதிஸாரம், கடுமையான ஜ்வரம், தாஹம், அசதி மூச்சத் திணறல், ருசி இன்மை, எல்லாவற்றிலும் வெறுப்பு, கிடை கொள்ளாமை — இவை தாதுபாகலக்ஷணமாகும்.

**ஆகந்துஜ்வரம் :** அபிசாரகாரியங்கள், அடி முதலியவை, பெரியோர்களின் சாபம், பூதப்ரேத பிசாசபீடை, இவைகளால் திடீரென முதலில் ஜ்வரம் ஏற்பட்டுப் பிறகு திரிதோஷ லக்ஷணங்கள் வ்யக்தமாகும். ஒவ்வொரு காரணத்திற்கேற்ப தனிப்பட்ட லக்ஷணங்கள் புலப்படும்

**அபிஷங்கஜ்வரம் :** பூதபீடை, ஔஷதிகளின் மணம், பயம், சோகம், விஷம், காமம், கோபம், இவைகளால் ஏற்படும் ஜ்வரம் அபிஷங்க ஜ்வரமாகும். விஷத்தால் உண்டான ஜ்வரத்தில் வாய் கறுத்துக் காணும். அதிஸாரம் அன்னத்தில் அருசி, தாகம், குத்துவலி, மயக்கம் இவை இருக்கும். சில விஷப்பூண்டுகளின் மணத்தால் ஏற்பட்ட ஜ்வரத்தில், மூர்ச்சை, தலைவலி, வாந்தி, கண்ணிருட்டிப் போதல், இவை காணப்படும். காமத்தால் ஏற்பட்டதில், மனத்தளர்ச்சி, சோம்பல், அசதி, அருசி, ஹிருதயத்தில் வலி, உடல் காய்ந்து வரண்டு போதல்— இவை காணப்படும், பயத்தாலும் சோகத்தாலும் ஏற்பட்டதில் நடுக்கம் மிகுந்திருக்கும், ஏவல், பில்லி முதலியவைகளால் ஏற்பட்டதிலும், பெரியோர்களுக்குச் செய்த அபசாரத்தின் பயனுக ஏற்பட்ட சாபத்தால் ஏற்பட்டதிலும், மயக்கம் தாகம் இவை அதிகமாகும். பூதபீடையால் ஏற்பட்டதில் பூதாதிகளின் ஸ்வபாவத்திற்கேற்ற லக்ஷணங்கள் இருக்கும். இவைகள் மனதை வெகுவாக பாதிக்க வல்லவை.

**விஷம ஜ்வரம் :** முன்னிரவு, நள்ளிரவு, பின்னிரவு, முற்பகல், நடுப்பகல், பிற்பகல் என்ற ஒருநாளின் ஆறு காலங்களில் விட்டு விட்டுத் திரும்பத் திரும்ப ஜ்வரம் வந்து போகும், ஜ்வரம் அடியோடு விடுவதில்லை. ஜ்வரத்தின் அறிகுறிகளான நிறமாறுதல், உடல் கனத்திருத்தல், அசதி முதலியவை ஜ்வரம் விட்டிருக்கும்

நேரத்திலும் இவனிடம் காணப்படுகின்றதாதலால், ஜ்வரம் இவனிடமிருந்து நீங்கவில்லை என்பது நிச்சயமாகும். ஜ்வர தாப வேகம் தணிந்தவுடன் ஜ்வரம் போய்விட்டதென்ற நினைவு ஏற்படலாம். தலைகனம் அசதி, உடல் வாடி இருத்தல், ஆகாரத்தில் வெறுப்பு, வாயில் ஒரு அசட்டு இனிப்பு, ருசியின்மை, கசப்பு— இவை தொடர்ந்திருக்கும். ஜ்வரமானது சரீரத்திலுள்ள தாதுக்களில் தாற்காலிகமாக மறைந்து பிறகு வெளிப்படும்.

இவ்விதம் மறைந்திருக்கும் ஜ்வர தோஷம், ஸூக்ஷ்மமாயிருந்தால் விறகு இல்லாது மங்கிய நெருப்பு போல், பலமின்றி கண்ணுக்குப் புலப்படாதிருக்கும், இதுவே விஷம ஜ்வரமாகும்,

**விஷம ஜ்வரத்தின் ஸ்வரூபம் :** அஹிதங்களை ஸேவிப்பதால், ஜ்வரமுண்டாக்கும் தன்மை அடைந்த தோஷம், பலம் பெறுதிருப்பதால், நித்ய ஜ்வரத்தை உண்டாக்கும் சக்தி பெறுதிருந்து காலம் முதலியவைகளின் பலத்தால் பலம் பெற்று விஷம ஜ்வரத்தை உண்டாக்கலாம், அல்லது ஸந்நிபாதாதி ஜ்வரங்கள் திடீரென விட்டபின், தோஷபாகம் சரியாக ஆகாமல் சேஷமிருக்க, அதுவும் காலபலத்தை அடைந்து ஜ்வரத்தை உண்டாக்கலாம், இவ்விதம் உண்டாகும் விஷம ஜ்வரங்கள் உஷ்ணத்தாலோ சீதத்தாலோ, ராத்திரியிலோ பகலிலோ கோபத்தை அடையும் அல்லது சமனத்தை அடையும், ஆக நேரம் பூராவுமில்லாமல் விட்டு விட்டும் சீதம் அல்லது உஷ்ணத்தை முன்னிட்டுக் கொண்டு, ஜ்வரவேகமும் அடிக்கடி மாறும் வகையில் ஏற்படும் ஜ்வரம் விஷம ஜ்வரமாகும்,

ஸந்ததம், ஸததம், அன்யேத்யுஷ்கம், த்ருதீயகம், சதுர்த்தம் என இவை 5 வகை, ஸந்நிபாத (மூன்று தோஷங்கள் கூடி) த்தால் ஏற்படுபவை. ஆஹார ரஸத்திலிருந்து ரஸதாதுவைப் பற்றிய தோஷங்கள் ஸந்ததத்தையும், ரக்தத்தைப் பற்றியவை ஸததத்தையும் மாம்ஸத்தைப் பற்றி அன்யேத்யுஷ்கத்தையும் மேதஸைப் பற்றி திருதீயகத்தையும், அஸ்தியையும் மஜ்ஜையையும் பற்றி சாதுர்த்திகத்தையும் உண்டாக்கும்,

**ஸந்ததம்** என்பது (ஸந்நிபாதத்தால் ஏற்பட்ட விஷமஜ்வரம்) தொடர்ந்து ஜ்வரம் முழுவதும் விடுபடாமல் வேகத்தில் மாத்திரம் தாழ்ந்தும் அதிகமாகியும், ஏழு அல்லது பத்து அல்லது பன்னிரண்டு நாட்கள் அடித்தால், அதை ஸந்ததம் என்கிறோம்.

**ஸததம்** என்பது பகலில் ஒரு முறை ஜ்வரம் வந்து, நின்று இரவிலும் ஜ்வரம் வந்து நின்றுவிடுவதற்கு—ஆக இரண்டு நேரங்களிலும் விஷமமாக ஏற்படுவதற்குப் பெயர்,

**அன்யேத்யுஷ்கம்** என்பது - ஒருநாளில் ஒருதடவை ஏற்பட்டு நின்ற பின், மறுநாள் தொடர்ந்து ஏற்படுவது.

**த்ருதீயகம்** என்பது— நடுவில் ஒருதினம் விட்டு மூன்றுவது நாள் ஏற்படுவது.

**சதுர்த்தகம்** அல்லது **சாதுர்த்திகம்**. நடுவில் இரண்டு நாட்கள் ஜ்வரமில்லாதிருந்து நான்காவது நாள் ஏற்படுவது.

ஆக தோஷம் எவ்வகையில் பிரகோபமடைகிறதோ அந்த தோரணையில் ஜ்வரத்தை உண்டாக்குகின்றது. ஸமுத்ரத்தின் அலை காற்றின் பலம் பெற்று கரையை எதிர்த்து வெகுதூரம் முன்னேறி வேகம் தணிந்ததும் எவ்விதம் தானே தன்னிலையை அடைகிறதோ, அதேமாதிரி விஷமஜ்வரத்தில் தானே வேகமாக ஜ்வரம் ஏறுவதும் இறங்குவதும் ஏற்படும்.

கபம் மிகுந்திருக்க காலையிலும், முன்னிரவிலும்; பித்தம் மிகுந்திருக்க நடுப்பகலிலும் நள்ளிரவிலும்; வாதம் மிகுந்திருக்க மாலையிலும், பின்னிரவிலும் ஜ்வரம் உண்டாகும். வாயு இல்லாமல் விஷம ஜ்வரம ஏற்படாது. (இந்த விஷமத் [ஒரே நிலை யில்லாத் தனமை] தன்மையே வாயுவால் ஏற்படுவது தானே.) ஆக கப பித்தங்கள் வாத பலங் கொண்டு தான் இயங்க முடியும். எனவே கபம் மிகுந்து வாதபலம் கொண்டு ஜ்வரத்தை உண்டாக்கும்போது ஆரம்பத்தில் குளிர் மிகுதியாயும், பித்தம் மிகுந்து வாதபலம கொண்டு ஜ்வரம ஏற்படும் போது எரிச்சல்— சூடு மிகுதியாயும், வாதம் மிகுந்து ஜ்வரம் உண்டாகும் போது காலம் மாறி மாறியும், வெகு நேரம் உடல் நடுக்கத்துடனும் ஏற்படும்.

ரஸ தாதுவின் ஸ்தானத்தில் வாயு பித்தத்தையும் கபத்தையும் விதாஹமடையச் செய்ய விஷமஜ்வரம் ஏற்படுகின்றது.

**ஜ்வர - உபத்ரவங்கள்—** மூச்சுத்திணறல், மூர்ச்சை, அரோசகம், வாந்தி, தாஹம், அதிஸாரம், மலபந்தம், விக்கல், இருமல், உடம்பில் கடுப்பு வலி இவை பத்தும் ஜ்வரத்தின் உபத்திரவங்கள்.

**ஆமஜ்வரக் குறிகள்—** அசதி, சோம்பல், ஜீர்ணமின்மை, நாக்கில் ருசி மாறுதல், உடல் கனத்தல், பசியின்மை, மூத்திரம் அதிகமாகப் பெருகுதல், உடல் திமிர்த்து இருத்தல், ஜ்வரம் மிகுந்திருத்தல்-இவை ஆம ஜ்வர லக்ஷணம். இந்நிலையில் ஜ்வரம் குறைய சிகித்ஸை செய்யக் கூடாது. தோஷங்கள் பாகமடையாத இந்த ஆம நிலையில் சோதனமாகவோ சமனமாகவோ மருந்துகள் கொடுக்க வியர்தி அதிகமாகும்.

**பச்யமான ஜ்வரக் குறிகள்**— ஜ்வரவேகம் மிகுதி, அதிக நாவரட்சி, பிதற்றல், சுவாஸம், தலைசுற்றல், மலப்ரவிருத்தி, உமட்டல் இவை தோஷங்கள் பாகமடையும் தறுவாயிலுள்ளதைக் காட்டும் குறிகள்.

**நிராமஜ்வரக் குறிகள்**— பசி, உடல் வாடியிருத்தல், உடல் இலேசாகுதல், ஜ்வரம் குறைதல், தோஷம் பாகமடைந்து வெளியாகுதல், உத்ஸாஹம்— இவை தோஷங்கள் பாகமடைந்து விட்டதைக் குறிப்பிடுபவை.

தோஷங்கள் பாகமடைவதன் பொருட்டு லங்கனம் செய்யப் பட்டால், அது சரியாக ஆனால், அன்னத்தில் விருப்பம், உடல் இலேசாகுதல், வாட்டம், ஆரோக்யம் பெற்றதான உணர்ச்சி, தெளிவு, உபத்ரவங்கள் விலகுதல்— இவைகள் அறிகுறி. லங்கனமதிகமாகக் கையாளப் பட்டால், தூக்கம், அசதி, ஓய்ச்சல், மயக்கம், நாவரட்சி, உடல் வரட்சி, பலக் குறைவு, சுவாஸம் முதலிய உபத்ரவங்கள் அதிகமாகும.

**ஜ்வரம் விட்டதன் குறிகள்** வியர்வை, உடல் லகுவாதல், தலையில் அரிப்பு, வாய் வேக்காளம், தும்மல், ஆகாரத்தில் விருப்பம் இவை ஜ்வரம் விட்டதன் அறிகுறிகள், சோர்வும் களைப்பும் நீங்கி மயக்கம் தெளிந்து, புலன்கள் அயர்வு நீங்கி இயற்கையான பலம் திரும்பிப் பெறுவது ஜ்வரம் விட்டதன் அறிகுறி. ஜ்வரம் நின்றும் தலைவலி விடாதிருந்தால், ஜ்வரம் விட்டதாக நினைக்கக் கூடாது. ஜ்வரம் திரும்பவும் வந்து விடும்.

## ஜ்வரத்தில் பொதுவான சிகித்ஸை முறை

**லங்கனம்**[1] ஜ்வரத்தின் ஆதியில் லங்கனமும், மத்தியில் பாசனமும்,[2] முடிவில் விரேசனமும் கொடுக்கலாம், க்ஷயம்,

---

1. லங்கனம்—ஒரு திரவ்யம் அல்லது செய்முறை சரீரத்தை லகுவாக்கினால் அதை லங்கனம் என்பர். லங்கன குணமுள்ள திரவ்யங்கள் அனேகமாக லகு-உஷ்ண-தீக்ஷ்ண-விசத-ரூக்ஷ-ஸூக்ஷ்ம-கர-ஸர-கடின குணமுள்ளதாக இருக்கும். ஒரு வகை சிகித்ஸை முறையை லங்கனம் என்ற பெயரால் குறிப்பிடுவதுண்டு. இவைகளால் கனம் குறைந்து உடல் இலேசாகுவதால் இப்பெயர். வமனம், விரேசனம், ஆஸ்தாபனம் (கஷாய பஸ்தி) சிரோவிரேசனம் (நஸ்யம்) ஜலம் குறைத்து சாப்பிடுதல், காற்றுள்ள இடத்தில் அதிகமாக இருத்தல், நல்ல வெயிலில் இருத்தல், பாசன மருந்துகள் சாப்பிடுதல், உபவாஸம் இவை பத்தும் லங்கன சிகித்ஸைக்குட்பட்டவை. சிலர் ரக்த மோக்ஷணத்தையும் தீபன மருந்துகளையும் லங்கன வகுப்பில் சேர்த்துக் கூறுவர். இங்கு லங்கனம் என்பதால் உபவாஸம் என்ற ஒரு முறை மட்டும் குறிப்பிடப்படுகின்றது.

2. பாசனம்-அக்னி குணம் மிகுந்த திரவ்யங்களாலானது. அபக்வமான தோஷ தாது மலங்களையும் ஆஹாரத்தையும் பாகம் செய்ய வல்லது. ஆஹாரத்தை பாகம் செய்வதில் உதவுவது.

வாதஜ்வரம், பயம், கோபம, காமம், சோகம், களைப்பு இவைகளால் ஏற்பட்ட ஜ்வரம இவைகளைத் தவிர மற்ற ஜ்வரங்களில் லங்கனம் தான் முதலில் செய்யததக்கது. ஆமாசயத்தில் இருந்து கொண்டு ஜீர்ண சக்தியைக் கெடுத்து, அதன் மூலம் மப்பின (ஆமத்தின்) சேர்க்கை ஏற்பட்டு ரஸ ரக்தாதிகளின் ஸஞ்சார மார்க்கங்கள் அடைபடுவதால் ஜ்வரம் ஏற்படுவதை முன்னிட்டு அந்த ஆம (மபபு) தோஷத்தை நீக்க லங்கனத்தைக் கையாள வேண்டும் அதுவும் ஜ்வர ஆரம்ப நிலையிலோ, பூர்வரூப நிலையிலோ சரீர பலத்தையும் கவனத்துடன காப்பாற்றிக்கொண்டு (சரீர பலம் குறையாமல்) லங்கனத்தைக் கையாளவேண்டும். ஏனெனில் ஆரோக்யம் சரீர பலத்தை ஆதாரமாகக் கொண்டது. ஆரோக்யத்தைப் பெறுவதற்கே சிகித்ஸை செய்வது. (அதனால் லங்கனத்தால் பலம் குறையவிடக்கூடாது.)

தோஷங்களும் அக்னி (ஜீர்ணசக்தி) யும் தன்நிலையிலில்லாத போது லங்கனம் செய்வதால் தோஷஙகள் பாகமடைந்து ஜ்வரம் குறைந்து பசி தூண்டப்பட்டு உணவில் விருப்பமும் ருசியும் உடல் இலேசாக ஆகுதலும் ஏற்படுகின்றது.

**லங்கனம் கூடாது**—வாதஜ்வரம், க்ஷயத்தில் ஏற்பட்ட ஜ்வரம், நல்ல பசியுள்ளவன், கர்ப்பிணி, பலம் மிகக் குறைந்தவன், பாலன், கிழவன், பயந்தவன், நாவரட்சியுள்ளவன், வாதம் மேனோக்கி உள்ளவன் இவர்களுக்கு லங்கனம் கூடாது.

**லங்கனம் எத்தனை நாள் ?** லங்கனம் செய்யும்போது அதை ஸஹிக்கும் தன்மையை தோஷஙகளே சரீரததிற்கு அளிக்கின்றன. தோஷ பாகம் ஏற்பட்ட பின்னர் ஒருவன் லங்கனத்தைத் தாங்க மாட்டான். வாத ஜ்வரத்தில் ஏழு நாட்களிலும் பித்த ஜ்வரத்தில் பத்து நாட்களிலும், கப ஜ்வரத்தில் பன்னிரண்டு நாட்களிலும் ஜ்வரம் பாகமடையும், வாதத்தில் 2 நாட்களும், பித்தத்தில் ஒரு நாளும், கபத்தில் நான்கு நாட்களும், வாத பித்தத்தில் 7 நாட்களும், கப பித்தத்தில் 10 நாட்களும். கப வாதத்தில் 12 நாட்களும், ஸந்நிபாதத்தில் 21 நாட்களும் பாகமடைய காலவரை என்பர். ஜ்வரம் ஆரம்பித்து ஏழு நாட்கள் வரை தருண ஜ்வரம் என்றும், பிறகு 12 வது நாள் வரை மத்யம ஜ்வரம் எனவும், பிறகு புராண ஜ்வரம் என்றும் கூறுவர். பொதுவாக ஏழு நாட்களில் ஏழு தாதுக்களில் சேர்ந்திருந்த மலங்கள் பாகமடைந்துவிடலாமாதலால்; ஏழு நாட்களுக்குப் பிறகு எட்டாவது நாளில் அந்த ஜ்வரம் நிராமம் (மப்பு நீங்கியதாக) ஆகிவிடும் என்று சரகாதர் கருத்து.

**விருத்தவாக்படர் கூறுவது:—** எல்லா ஜ்வரங்களிலும் ஏழு நாட்களுக்குப் பின்னரே கஷாயம் (துவர்ப்பு ரஸ ப்ரதானமான

ஜ்வர சமனௌஷதம் கொடுக்கலாம். அல்லது ரோகம் விடுபடுமளவு லங்கனத்தையே கையாளுவது நலம். தருண ஜ்வரத்தில் கஷாயம் கொடுக்கக்கூடாது. கஷாயத்தால் அமுக்கப்பட்ட ஜ்வர காரண தோஷம் வெளியேறாமல் பிறகு சுலபமாக சிகித்ஸை செய்ய முடியாதபடி வியாதியை வளர்த்து விடும்.

**விதேஹர் கூறுவது :–** எல்லா ஜ்வரங்களிலும் முதல் ஏழு நாட்களில் மிக லகுவான உணவு கொடுக்கவேண்டும். வேகம் குறையும் வரை இதை அனுசரிக்க வேண்டும். இல்லாவிடில் ஜ்வர வேகம் கடுமையாகும். தோஷத்திலும் தாதுவிலும் தங்கியிருக்கும் மலம் பாகம் அடைந்த பின்னர் பசி ஏற்படும். அப்போது தான் உணவு கொடுக்கலாம்.

**வாக்படர் கூறுவது :—** ஜ்வரமிருக்கும்போதும், ஜ்வரம் விட்ட பின்னரும், மாலையில் லகுவான ஆஹாரத்தைக் கொடுக்கலாம். ஏனெனில், மாலை வேளைகளில் கபம் குறைந்து அக்னி பலம் மிகுந்துவிடுவதால் ஜீர்ணம் நன்கு ஆகும். அல்லது தேகத்திற்கேற்றவாறும், பழக்கத்திற் கேற்றவாறும் உணவு நேரத்தை மாற்றிக் கொள்ளலாம். அக்னி பலம் குன்றியவனும்கூட அவனவனுக்குப் பழக்கமான உணவு நேரத்தில் சாப்பிட அஜீர்ணம் ஏற்படுவதில்லை.

கஷாயங்கள், கஞ்சி முதலிய திரவமானத்திய உணவுகள் இவைகளைக் கொண்டு லங்கன முறையில் காலத்தைத் தள்ள வேண்டும். பித்தமின்றிச் சூடில்லை. சூடின்றி ஜ்வரமில்லை. அதனால் பித்தத்தை அதிகரிக்கச் செய்யும் உணவு முதலியவைகளைத் தள்ளவேண்டும். அதிலும் பித்தத்தால் ஏற்பட்ட ஜ்வரத்தில் இவைகளை அதிக அளவில் தள்ளவேண்டும். ஸ்நானம், எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதல், உடலில் சந்தனம் முதலியவைகளைப் பூசிக்கொள்ளுதல், உபவாஸத்தைத் தவிர மற்ற லங்கன முறைகள் இவைகளை அடியோடு விலக்குதல் வேண்டும்.

கடும் வலியுடன் ஆமம் மிகுந்து ஏற்படும் அஜீர்ணத்தில் வலியைக் குறைப்பதற்கான ஔஷதம் கெடுதி அளிப்பதுபோல், கடும் வேதனையுடன் ஆமம் மிகுந்து ஏற்படும் அஜீர்ண (தருண) ஜ்வரத்திலும் ஆமபாசனத்திற்கான ஔஷதங்கள் கொடுக்கக் கூடாது. அதனால் ஆமம் அதிகமாகுமே தவிர குறையாது. (பால் விஷத்தை மாற்றக்கூடியதே. ஆயினும் அதை பாம்பிற்குக் கொடுக்க விஷத்தையே அது வளர்க்க நேருகிறது. அவ்விதம் ஆமபாசனமான ஔஷதங்கள்கூட ஆமம் மிகுந்து அக்னி பலம் குன்றிய நிலையில் ஆமபாகத்திற்கு உதவுவதில்லை.)

பித்தம் மிகுந்த நிலையில் கசப்பும் கபம் மிகுந்த நிலையில் உரப்பும் நல்லது. துவர்ப்பு கப பித்தஹரமாக இருந்தாலும், தருண ஜ்வரத்தில் (பித்த கப ஜ்வரத்தில்கூட) நல்லதல்ல. ஏனெனில் துவர்ப்பின் ஸ்தம்பன குணம், மலத்தை ஸ்தம்பிக்கச் செய்து ஜ்வரத்தை தாதுக்களுள் பரவச்செய்து விஷம ஜ்வரமாக மாற்றுவதுடன் ருசியின்மை, உமட்டல், விக்கல், வயிறு உப்புசம் முதலியவைகளைச் செய்கின்றது.

ஏழு நாட்களுக்குப் பிறகோ, பத்து நாட்களுக்குப் பிறகோ ஜ்வரத்தைக் குறைக்கும் மருந்தைக் கொடுக்கலாம். அதுவும் லகுவான பத்ய உணவுடன், ஆமம் குறைந்த பிறகுதான் நல்லது. ஏழு அல்லது பத்து நாட்கள் கழிந்தும் ஆமம் குறையாதிருந்தால், அல்லது ஆமம் மிகுந்திருந்தால், ஜ்வரஹரமான மருந்துகள் கொடுக்கக்கூடாது. ஏனெனில் ஜ்வரம் கடுமையாயிருக்கும் நிலையில் ஆமம் பாகமடையாதபோது ஜ்வரஹரமான ஔஷதங்களால் 'ஆமம மேலும் வலுவடைந்து, [1] தந்த்ரையும் உடல் திமிர்த்திருத்தலும் அதிகமாகி, கொடுத்த மருந்தும் ஜீர்ணமாகாமல் மேல் ஜ்வரதாபத்தை வளரச் செய்யும். அதனால் ஜ்வர உபத்ரவங்கள் குறைந்து உடல் லேசாகி இந்திரியங்களுள் சோர்வகன்று, மல மூத்திரங்கள் தானே வெளியாகும் நிலை வந்த பின்னர்தான் ஜ்வரத்தைக் குறைக்கும் மருந்துகளைக் கொடுக்கலாம். 7 10-12 என்ற நாட்கணக்கைக்கூட புறக்கணித்துவிட்டு ஜ்வரமேற்பட்டு ஏழுக்குக் குறைந்த நாட்களாகியிருந்தால் முன் கூறிய லக்ஷணங்கள காணப்பட்டால் ஜ்வரஹர ஔஷதங்கள் கொடுப்பதில் தவறொன்றுமில்லை.

**வ்ருத்தவாக்படர் கூறுவது :-** வாதத்தாலோ பித்தத்தாலோ கபத்தாலோ தனித்து ஜ்வரங்கள் ஏற்படும்போது முறையே 6-10-12 தினங்கள் தாண்டியதும் அன்னம் கொடுக்கலாம். த்வந்த்வ ஜ்வரத்திலும் ஸந்நிபாத ஜ்வரத்திலும் ஆரோக்ய நிலை வந்த பின்னரே அன்னம் கொடுக்கலாம். பயறு, துவரை, கடலை, கொள்ளு, வயல் பயறு இவைகளைக்கொண்டு அவரவர்களுக்கேற்றவாறு பாசனமான யூஷங்கள், பேயா, யவாகூ இவைகளைத் தயாரித்துக் கொடுக்கலாம்,

**சக்ரதத்தத்தில் கூறியது :** தருண ஜ்வரத்தில் பகல் தூக்கம், ஸ்நானம், சாப்பாடு, மைதுனம், கோபம், நல்ல காற்றுள்ள இடத்தில் வஸிப்பு, தேகப் பயிற்சி, துவர்ப்பு ருசியுள்ளவை இவைகளைத்

---

1. தந்த்ரை- உணர்வு குன்றி, சரீரம் கனத்து, கண்களில் நீர்கசியக் கொட்டாவி விட்டுக்கொண்டு, அசதியும் தூக்கம் வரும்போல கிறுகிறுப்புமிருக்கும் நிலையை தந்த்ரை யென்பர்.

தள்ள வேண்டும். காற்று வீசி அடிக்காத இடத்தில் படுத்திருப்பது, வெனனீர் உபயோகித்தல், அதிகமாகப் பேசாமை, கோபமின்மை காமமின்மை, வருத்தப்படாமை இவைகளைக் கையாள சீக்கிரம் வியாதி குறைந்துவிடும்.

**வென்னீர் :** வென்னீர் கபம், மேதஸ், வாயு ஆமம் இவைகளைக் குறைக்க வல்லது. பசியைத் தூண்டும். மூத்திரத்தைப் பெருக்கி வெளியாக்கி பஸ்தியை சுத்தி செய்யும். காஸம், ச்வாஸம், ஜ்வரம் இவைகளைக் குறைக்கும். ஜவரத்தில் எந்நேரத்திலும் நல்ல பத்யமாகும்.

வென்னீர் நல்லதா எனபதை கீழ் கண்ட பரீக்ஷையால் சோதிக்கலாம், கொதிக்க வைக்கப் படும்போது சுழலின்றி நுரையின்றி அழுக்கின்றி காணப்படின் நல்லது. பாதி அளவு குறையும் வரை கொதிக்க வைக்கப்பட்டதே நல்ல வென்னீர்.

கால் பங்கு குறையும் வரை காய்ச்சியது வாத நோய்களுக்கு நல்லது, பாதி அளவு வரை குறையக் காய்ச்சியது பித்தநோய்களிலும், முக்கால் பங்கு குறையக் காய்சியது கபநோயிலும் சிறந்தது. முக்கால்பங்கு குறையக் காய்ச்சிய வென்னீர் நல்ல பாசனம். பசியைத் தூண்டும்; லகு, த்வந்த்வ நோய்களிலும், ஸந்நிபாதத்திலும் மிகவும் ஏற்றது. சரத்ருதுவில் அரைக்கால் பங்கும், ஹேமந்தருதுவில் கால்பங்கும், சிசிரருதுவிலும் வஸந்தருதுவிலும் க்ரீஷ்மருதுவிலும் பாதியும், ருது லக்ஷணம், மாறி, மாறுபட்ட லக்ஷணத்துடன் கூடியுள்ள ருதுவிலும் அதிக மழைகாலத்திலும் எட்டில் ஏழுபங்கும் குறையுமாறு காய்ச்சிய வென்னீரை உபயோகித்தல் நல்லது.

இரவில் வென்னீரை சாப்பிட கபக்கட்டை உடைத்தும், வாயுவை தன் வழியே கீழே இழுத்தும், அஜீர்ணத்தை ஜீர்ணம் செய்வித்தும் உதவுகின்றது. நன்கு தாரையாக ஆற்றி ஆறியதும் காற்றின் வேகம் பட்டு ஆறியதுமான வென்னீர் சரீரத்தினுள் வாதமலாதி ஸஞ்சாரத்தை ஸ்தம்பிக்கச் செய்வதுடன் தானும் ஜீர்ணமாகாது. நன்கு காய்ச்சித் தானே ஆறிய வென்னீர் மூன்று தோஷ கோபங்களையும் மாற்றவல்லது. லகுவாகும், பகலில் காய்ச்சிய வென்னீர் இரவில் சாப்பிட எளிதில் ஜீர்ணமாகாது. அம்மாதிரியே முன்னிரவில் காய்ச்சிய வென்னீர் மறு பகலில் ஜீர்ணமாகாது ; குருவாகிவிடும்.

தணல் நிறமாகக் காய்ச்சப்பட்ட இரும்புத் துண்டைப் போட்டுச் சூடாக்கியதும், கொட்டாங்கச்சி எரித்துப் போட்டு அவித்தெடுக்கப்பட்ட ஜலமும் நல்லது. உடல் வலி நோய்களை நீக்கவல்லது.

தருண ஜ்வரம், சளி, பக்கவலி, (விலாவலி) தொண்டைக் கட்டு, வயிறு உப்புசம் வாத கபத்தால் ஏற்பட்ட வியாதி அருசி கிரஹணி (கிராணி) குல்மா ச்வாஸம் காஸம், விதரதி, விக்கல் இவைகளிலும் பேதிக்கும் வாந்திக்கும் மற்ற சோதன சிகித்ஸை களுக்குப் பிறகும், ஸ்னேஹபானம் செய்த உடனும் வெனனீர் சாப்பிடுவது நல்லது.

அருசி சளி, வாயில் ஜலம் ஊறுதல், வீக்கம், க்ஷயம், அக்னி மந்தம் உதரம், குஷ்டம், ஜ்வரம், நேத்ர வியாதிகள், விரணம், மதுமேஹம், இவைகளில் வென்னீரையும் அளவில் மிகவும் குறைத்தே சாப்பிட வேண்டும்.

மூர்ச்சை, பித்தம் மிகுதி, உஷ்ண மிகுதி, எரிச்சல், மதாத்யயம், தலை சுற்றுதல், அசதி நடுவழியில் ஏற்படும் வாந்தி, மேனேக்கும் ரக்தபித்தம், இவைகளில் குளிர்ந்த நீர் பருக நல்லது. சரத்ருதுவிலும வஸந்தருதுவிலும் ஜலம அதிகம் பருகத் தகுந்தது. சரத்ருதுவில் நதீஜலம சாப்பிடத் தகுந்ததே. ஆனால் வஸந்தத்தில் அது நல்லதல்ல. வர்ஷருதுவிலும் வஸந்தருதுவிலும் கிணற்று நீரும் சரத்ருதுவில் குளத்து நீரும், மற்ற மூன்று ருதுக்களில் ஆற்று நீரும் சாப்பிட நல்லது.

**மருந்துகளின் அளவு:** ஸ்நேஹங் (கிருதம் தைலம் முதலியவை) களுக்கும் கஷாயத்திரவ்யத்திற்கும் உத்தம அளவு (அதிக பக்ஷ அளவு) ஒரு பலம் (நான்கு தோலா) ஆகும். முக்கால் பலம் மத்யம அளவு. அரைப்பலம் குறைந்த அளவு. சூர்ணம் கல்கம் குடிகை முதலியவை ஒரு கர்ஷம் (தோலா) ஆகும். கஷாயத்தில் கலக்கவேண்டிய தேன் நெய் முதலியவையும் ஒரு தோலாவாகும். கஷாயம் போடும் போது அதற்கான சரக்குகள் ஒருபலம் எடுத்து பதினாறு பலம் ஜலம் விட்டு நான்கு பலம் மீதமாகுமாறு காய்ச்சி வடிகட்டிச் சாப்பிட வேண்டும். நல்ல அக்னி பலமுள்ளவனும் பெருத்த சரீரமுள்ளவனும் நான்கு பல அளவு கஷாயம் சாப்பிடலாம். அவ்வித மல்லாதவர் பாதி அளவு சாப்பிடலாம், அல்லது எட்டில் ஒருபங்கு மீதமாகுமாறு (2 பலம் மீதமாகுமாறு) காய்ச்சி அதைச் சாப்பிடச் சொல்வதும் உண்டு. ஏழு நாட்களாகி ஆமம் இருக்கும் போது 2 பல அளவு பாசன கஷாயத்தைச் சாப்பிட வேண்டுமென்று விருத்த வைத்ய பரம்பரை கூறுகிறது.

**ஔஷதம் ஜீர்ணமானதன் லக்ஷணம்:** அன்னம் ஏற்காது, மருந்தைமட்டும் சாப்பிடும் போது மருந்தின் சக்தி வீர்யம் மிகுந்து காணும். வியாதிகளையும் குறைக்கவல்லது. ஆனால்

பாலர்கள், கிழவர்கள், யுவதிகள், துர்பலர்கள் ஆஹாரமின்றி மருந்து மட்டும் சாப்பிட அதிகமாகக் களைப்பையும் பலக்குறைவையும் அடைகிறார்கள் ஔஷதம் ஜீர்ணமாகிவிட்டதா என்பதை, வாயு அனுலோமித்திருத்தல், வேதனைக்குறைவு, பசி, தாகம், நல்ல தெளிந்த மனம், உடல் இலேசாக இருத்தல், சுத்தமான ஏப்பம் இவைகளைக் கொண்டு தீர்மானிக்க முடியும். க்லமம்* (அசதி) எரிச்சல். அங்கங்களில் தளர்ச்சி, தலைசுற்றுதல், மூர்ச்சை, தலைவலி, ஒன்றிலும் ப்ரியமில்லாமை, வாந்தி. ஞாபக மற்றுப் போதல், இவை மருந்து ஜீர்ணமாகாததன் அறிகுறிகள். மருந்து ஜீர்ணமாகாதிருக்கும் போது சாப்பிட்ட உணவும், உணவு ஜீர்ணமாகாதிருக்கும போது ஏற்ற மருந்தும் வியாதியை தணிக்காமலிருப்பதுடன், வேறு ரோகங்களுக்கும் காரணமாகின்றன, ஆஹாரத்திற்கு முன் சாப்பிட்ட மருந்து சீக்கிரம் ஜீர்ணமடைந்தும் ஆஹாரத்தில் மறைக்கப் படுவதால், பலத்தைக் குறைக்காமலும், வெருட்டி வெளியாகாமலும் இருக்குமாதலால், பயந்தவன, சிசு, வயதானவர்கள் ஸ்திரீகள் இவர்களுக்கு சாப்பாட்டிற்கு முன்னதாக மருந்தைக் கொடுக்கவேண்டும்.

**ஜ்வரத்தில் பத்திய உணவு பதார்த்தங்கள் :** சிறு கீரை, வாஸ்துக் கீரை, இளம் முள்ளங்கி, பேய்ப்புடல், புடல், பீர்க்கு, சீந்தில் இலை, கருவேப்பிலை, வேப்பம்பூ, பிராய் இலை, கீரைப்பாலை, புளியாரை, நீராரை இவைகளின் இலை— பயறு, கொத்துக்கடலை, கடலை, கொள்ளு, காட்டுப் பயறு இவைகள் பருப்பு வகையில்; சீவல் பக்ஷி, வேழாம்பல் பக்ஷி, கருப்பு மான், வெள்ளைப்புள்ளி மான், எட்டடிமான், முயல், கருப்பு வாலுள்ள மான். இவைகளின் மாம்ஸம் மாம்ஸ உணவுப் பழக்கமுள்ளவர்களுக்கு; (வான்கோழி, க்ரௌஞ்ச பக்ஷி, மயில், தித்திரி, கோழி இவைகளின் மாம்ஸம் உதவாது எனச் சிலர்.) கத்தரி, கக்கரி, புடல், மெதுபாகல் இவைகளின் காய்கள் இவைகளைக் கொண்டு நெய் எண்ணெய் இல்லாது தயாரித்த வியஞ்சனங்கள், ஒரு வருஷம் பழையதான அரிசியால் ஆன அன்னம், இரண்டு வருஷங்கள் பழையதான கோதுமை முதலானதாலான ரொட்டி இவை போன்று வேறு பழக்கமானதும் கேடு விளைவிக்காததுமான உணவுப் பொருள்கள் இவை பத்ய உணவுப் பதார்த்தங்களாகும்.

**பொதுவாக ஔஷதம் எவ்விதம் ஏற்பது?** உட்கார்ந்து ஓய்வெடுத்துக்கொண்டு தெளிந்த மனதுடன் தங்கம் வெள்ளி

---

*க்லமம் என்பது அசதி. சரீரத்திற்கு வேலை முதலியவைகளால் ஏற்படும் களைப்பு மில்லாமல், பெருமூச்சு மில்லாமல் இந்திரியங்களின் செய்கைகளில் தடங்கல் ஏற்படும் வகையில் உண்டாகும் அசதியை இதனால் குறிப்பிடுகின்றனர்.

அல்லது மட்பாத்திரத்திலுள்ள மருந்தை அகம் மகிழ்ச் சாப்பிட்டு, பாத்திரத்தைக் கவிழ்த்து வைக்கவேண்டும். பிறகு தாம்பூலம் முதலியவைகளை ஸேவிக்கலாம். மருந்து சாப்பிட்டதும் வாய் கொப்பளிக்கக்கூடாது. யமதூதர்கள், பிசாசர்கள், யக்ஷர்கள், கந்தர்வர்கள், ராக்ஷஸர்கள் ஔஷத வீர்யத்தை அபஹரிக்காமலிருப்பதற்காக வாய் கொப்பளித்துத் துப்பாமல் இருக்க வேண்டும். கஷாயம், கல்கம் இவை மூன்று யாமங்களுக்குள்ளாகவும், அஞ்சனம் சூர்ணம் இவை மூன்று மாதங்களுக்குள்ளாகவும், லேகியங்கள், குடங்கள் ஆறுமாதத்திற்குள்ளும், தைலமும் கிருதமும் ஒரு வருஷத்திற்குள்ளும் உபயோகிக்கத் தக்கவை. பிறகு அவை தன் வீர்யமிழந்துவிடும்.

**பாசன கஷாயங்கள் :—** அஜீர்ணமான உணவை ஜீர்ணிக்கச் செய்யவும், தோஷங்களிலுள்ள ஆமத்தை நீக்கவும் உதவும் மருந்து பாசனமாகும்.

**ஸம்சமன மருந்துகள் :—** தோஷங்களை ஆமம் நீக்கி சுத்தி செய்யாமலும், ஸமதோஷங்களை அதிகப்படுத்தாமலும், விஷம தோஷங்களை தன்னிலைக்குக் கொணர்ந்தும் வியாதியைத் தணிக்க வல்ல மருந்திற்கு ஸம்சமனமெனப் பெயர்.

ஆமதோஷத்துடனுள்ள நோயாளிக்கு ஏழாவது நாளிலிருந்து பாசன மருந்தைக் கொடுக்கலாம். ஆமமில்லை என்பதை அறிந்து ஸம்சமன மருந்தைக் கொடுக்கலாம். ஒரு சிகித்ஸையைச் செய்து அது பலனளிக்காமல் போனால் அதன் வேகம் சாந்தமான பிறகு வேறு சிகித்ஸையைச் செய்யலாம். ஒன்றின் வேகம் தணியாதிருக்கும் போதே வேறு சிகித்ஸையைச் செய்து குழப்புவது தவறு.

## ஜ்வரத்தில் பாசன சிகித்ஸை

### வாத ஜ்வரத்தில் சிகித்ஸை

**குடுச்யாதி பாசன கஷாயம் :—** சீந்திற்கொடி, கண்டந்திப்பிலி, சுக்கு இவைகளாலான கஷாயத்தை முழுக்குறிகளுடன் காணும் வாத ஜ்வரத்தில் ஏழாவது நாள் கொடுக்கலாம்.

**கிராதாதி கஷாயம் :—** நிலவேம்பு, கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி, விலாமிச்சைவேர், கண்டங்கத்திரிவேர், முள்ளுக்கத்திரிவேர், நெரிஞ்சில், காட்டுப்பயறுவேர், காட்டுளுந்துவேர், ஓரிலைவேர், மூவிலைவேர், சுக்கு இவைகளின் கஷாயம் வாத ஜ்வரத்தில் நல்லது.

**சாலிபர்ண்யாதி கஷாயம் :—** மூவிலேவேர், சிற்றுமுட்டிவேர், சித்தரத்தை, சீந்திற்கொடி, நன்னாரி இவைகளின் கஷாயத்தை இளஞ்சூடாகச் சாப்பிட வாத ஜ்வரத்தில் நல்லது.

**காச்மர்யாதி கஷாயம் :—** குமிழம்வேர், நன்னாரிவேர், திராக்ஷை' தருய்பூண்டு, சீந்திற்கொடி இவைகளின் கஷாயத்தை வெல்லம் சேர்த்து சாப்பிட வாத ஜ்வரம் போம்.

**மரிசாதி சூர்ணம் :—** மிளகு, வளையலுப்பு, சுக்கு, நிலவேம்பு, கடுக்காய், திப்பிலி, கடுகுரோகிணி இவைகளை வகைக்கு சம எடை சேர்த்துத் தூள் செய்து சாப்பிட நல்லது. (அளவு 10-40 யவ எடை.)

**திரிபலாதி மோதகம் :—** கடுக்காய்தோல், தான்றிக்காய்தோல், நெல்லிமுள்ளி, சுக்கு, மிளகு, திப்பிலி இவை வகைக்கு சம எடை. எல்லாவற்றிற்கும் சமம் செவதைவேர், ஸர்வ ஸமம் வெல்லம் இவைகளை மோதகமாக (தூள் செய்ய வேண்டியவைகளைத் தூளாக்கி வெல்லத்துடன் சேர்த்து இடித்தோ, வெல்லத்தைப் பாகாக்கிக் கூட்டியோ இடித்து அரைத்தோலா அளவு உருண்டைகளாக்கி) செய்து கொண்டு ஒரு மோதகத்தை சாப்பிட்டு மேல் வென்னீர் சாப்பிட வாத ஜ்வரத்தில் ஏற்படும் பக்க வலி, அருசி, இருமல், ஜ்வர வேகம் இவை குறையும்.

**பித்த ஜ்வரத்தில் சிகித்ஸை :**

**கட்பலாதி பாசன கஷாயம் :—** காய்பல் * வெட்பாலே அரிசி, அம்பாடங்கிழங்கு, கடுகுரோகிணி, கோரைக்கிழங்கு இவைகளாலான கஷாயத்தை தீவ்ரமான பித்த ஜ்வரத்தில் பத்தாவது நாள் கொடுக்க நல்லது.

**துராலபாதி கஷாயம் :—** சிறுகாஞ்சூரிவேர், பர்படகம், கவுளா, நிலவேம்பு, ஆடாதோடைவேர், கடுகுரோஹிணி இவைகளின் கஷாயத்தில் சர்க்கரை நிறைய சேர்த்துச் சாப்பிட நாவரட்சி ரக்த பித்தம், ஜ்வரம், உடல் எரிச்சல் இவைகள் குணமாகும்.

**திராக்ஷாதி கஷாயம் :—** திராக்ஷை, கடுக்காய், பர்படகம், கோரைக்கிழங்கு, கடுகுரோஹிணி, சரக்கொன்னைப்புளி இவைகளின் கஷாயத்தை பிதற்றல், ஞாபகமின்மை, தலை சுற்றுதல், எரிச்சல், நாவரட்சி, உடல் வரட்சி இவைகளுடன் கூடிய பித்த ஜ்வரத்தில் கொடுக்க நல்லது.

---

* **காய்பல். कायफल** என்ற ஹிந்திப் பெயர். வடநாட்டில் குமாயூன் மலை, நேபாளம், வடபஞ்சாப், கட்வால் முதலிய இடங்களில் கிடைக்கும். கடைகளில் கிடைப்பது அதன் பட்டை. சிவந்தும் கனத்தும் துவர்ப்பும் கசப்புமுள்ளதாக இருக்கிறது. பட்டைத் தூளை முகர்ந்து பார்க்க தும்மல் வரும். Myrica nagi (மைரிகா நேகி) என லாடின் பெயர்.

**பர்படாதி கஷாயம் :–** (விருந்த மாதவத்திலிருந்து) தனித்துப் பர்படகமே கஷாயமிட்டுக் கொடுக்க பித்த ஜ்வரம் நீங்கும். இத்துடன் சந்தனம், விலாமிச்சைவேர், கொத்துமல்லி விதை இவைகளையும் சேர்த்துக் கொடுக்க மிகவும் குணமுள்ளதாகும்.

**மற்ற முறைகள் :—** அத்திப் பிசினை சர்க்கரை சேர்த்துக் கொடுக்க எரிச்சல் நீங்கும்.

சிந்திற்கொடி கஷாயம் சர்க்கரை சேர்த்துக் கொடுக்க ஜ்வரம் குறையும்.

திராக்ஷை, சிந்திற்கொடி, கோரைக்கிழங்கு, பர்படகம், கடுகு ரோஹிணி இவைகளின் கஷாயம்; சந்தனம், வெட்டிவேர், விலாமிச்சைவேர், பர்படகம், கோரைக்கிழங்கு, சுக்கு இவைகளின் கஷாயம்; சிந்திற்கொடி, நெல்லிமுள்ளி, பர்படகம் இவைகளின் கஷாயம்; இவை ஒவ்வொன்றும் பித்த ஜ்வரத்தில் சிறந்த குணமளிப்பவை.

வெட்டிவேர், விலாமிச்சைவேர், கோரைக்கிழங்கு, பர்படகம், சுக்கு, செஞ்சந்தனம் இவைகளின் கஷாயத்தை நன்கு ஆறிய பிறகு சாப்பிட, வாந்தி எரிச்சல் நாவரட்சியுடன் உண்டாகும் நவ ஜ்வரம் குறையும்.

கடுகுரோகிணியையும் சர்க்கரையையும் வென்னீரில் குழப்பிச் சாப்பிட பித்த எரிச்சல், புளிப்பு, நாவரட்சி, தலை சுற்றல் இவைகளுடன் ஏற்படும் பித்த ஜ்வரம் நீங்கும்.

வேப்பிலையை இடித்து சிறிது ஜலம் விட்டு இடித்துப் பிழிந்த சாற்றைக் கடைந்தோ குலுக்கியோ ஏற்படும் மேலுள்ள நுரையைத் தடவ, எரிச்சல் நாவரட்சி தலை சுற்றல் முதலியவை தணியும்.

மாதுளம்பூவின் கேஸரத்தைத் தேனும் இந்துப்பும் சேர்த்து அரைத்துத் தடவ தொண்டை, நாக்கு, மேல் அண்ணம், தலை இவைகளில் ஏற்படும் வரட்சி தணியும்.

**கப ஜ்வரத்தில் சிகித்ஸை :**

**பீஜபூராதி பாசனம் :–** மாதுளைவேர், கடுக்காய், சுக்கு, கண்டங்திப்பிலி இவைகளின் கஷாயத்தை யவக்ஷாரம் சேர்த்துக் கப ஜ்வரத்தில் 12-வது நாள் சாப்பிட நல்ல பாசனமாகும்.

நிலவேம்பு வேப்பம்பட்டை, திப்பிலி, பூலாங்கிழங்கு, சுக்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, சீந்திற்கொடி, முள்ளுக்கத்திரிவேர் இவைகளின் கஷாயம் கப ஜ்வரத்தைப் போக்கும்.

பேய்புடல், திரிபலை, கடுகுரோஹிணி, பூலாங்கிழங்கு, ஆடாதோடை, சீந்திற்கொடி இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துச் சாப்பிடலாம்.

கண்டங்கத்திரி, சீந்திற்கொடி, திப்பிலி, சுக்கு இவைகளின் கஷாயம், ஜ்வரம், சுவாஸம், கப காஸம், சூலம், அக்னிமந்தம் இவைகளைப் போக்கும்.

**சாதுர்பத்ராவலேஹம் :—** கர்கடசிருங்கி திப்பிலி, காய்பல், புஷ்கரமூலம் இவைகளை இடித்துத் தூள்செய்து தேன் விட்டு அரைத்து லேஹ்யமாக்கி சாப்பிட கப காஸத்துடனும் சுவாஸத்துடனும் ஏற்படும் கப ஜ்வரம் குறையும்.

சிறுதேக்கு, சீந்திற்கொடி, கோரைக்கிழங்கு, தேவதாரு, முள்ளுக்கத்திரி, சுக்கு, திப்பிலி, புஷ்கரமூலம் இவைகளின் கஷாயம், ஜ்வரத்தைத் தணித்தும், சுவாஸ சிரமத்தை நீக்கியும், பசியும் ருசியும் உண்டாக்கியும் கப ஜ்வரத்தில் உதவுகின்றது.

**பொதுவாக எல்லா ஜ்வரங்களிலும் சிகித்ஸை :**

நெல்லிக்காய், கடுக்காய், திப்பிலி, சித்ரமூலப்பட்டை இவை எல்லா ஜ்வரத்திலும் நல்லது. மலத்தை இளக்கி வெளியாக்கும். பசி தூண்டும். ஜீர்ணமாக்கும்.

சீந்திற்கொடி, வேப்பம்பட்டை, சந்தனம், பத்மகம், கொத்துமல்லி விதை இவைகளின் கஷாயம் ஜ்வரம், உமட்டல், வாந்தி, நாவரட்சி, எரிச்சல், அரோசகம் இவைகளைப் போக்கும்.

சீந்திற்கொடி, கோரைக்கிழங்கு, சிறுகாஞ்சூரிவேர், சுக்கு இவைகளின் கஷாயம் வாத ஜ்வரத்திலும், சிறுகாஞ்சூரிவேர், பர்படகம், கோரைக்கிழங்கு, நிலவேம்பு இவைகளின் கஷாயம் பித்த ஜ்வரத்திலும், கோரைக்கிழங்கு ஆடாதோடைவேர், சுக்கு, சிறுகாஞ்சூரிவேர் இவைகளின் கஷாயத்தை கப ஜ்வரத்திலும் கொடுக்கலாம்.

**அஷ்டகுண மண்டம் * :-** கொத்துமல்லிவிதை, சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, பயறு, அரிசி இவைகளைக்கொண்டு தயாரித்த கஞ்சித்தெளிவை எண்ணெய்யில் பொரித்த பெருங்காயம் தாளித்துக்கொட்டி சாப்பிட பசி அதிகமாகும். ஸுலபமாக ஜீர்ணமாகும். பலம் உயிரளிக்கும். பஸ்தி சுத்தியாகி சிறுநீர் நன்கு பிரியும். ஜ்வரம் நீங்கும்.

---

* **செய்முறை :—** அரிசியையும் பயற்றம்பருப்பையும் லேசாக வறுத்து 14 பங்கு ஜலத்தை விட்டுக் காய்ச்சி வெந்ததும் இறக்கி, கொத்துமல்லி விதை முதலியவைகளைத் தூள்செய்து போட்டு மூடி வைத்து, மேல் தெளிவை மட்டும் சாப்பிடவேண்டும்.

**வாத பித்த ஜ்வர சிகித்ஸை :**

**பஞ்சபத்ர கஷாயம் :—** சீந்திற்கொடி, பர்ப்படகம், கோரைக் கிழங்கு, நிலவேம்பு, சுக்கு இவைகளின் கஷாயம் வாத பித்த ஜ்வரங்களில் நல்லது.

ஓரிலைவேர், மூவிலைவேர், காட்டுளுந்துவேர், காட்டுப்பயறு வேர், நெரிஞ்சில்முள், கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி, சுக்கு, நில வேம்பு இவைகளின் கஷாயம் இதில் நல்லது.

திரிபலை, குமிழம்வேர், சித்தரத்தை, சரக்கொன்னைப்பட்டை, ஆடாதோடைவேர் இவைகளின் கஷாயமும் நல்லது.

**வாத கப ஜ்வரத்தில் சிகித்ஸை :**

முள்ளுக்கத்திரிவேர், ஓமம், சீந்திற்கொடி இவைகளின் கஷா யத்தை திப்பிலித்தூள் சேர்த்துக்கொடுக்க கப வாத ஜ்வரம், ச்வாஸம், சூலம், பீநசம், காசம் இவைகள் நீங்கும்.

கண்டங்கத்திரிவேர், சீந்திற்கொடி, சுக்கு, புஷ்கரமூலம் இவை களின் கஷாயம், ச்வாஸச்ரமம், காஸம், அருசி, பக்கவலி இவை களுடன் கூடிய கபவாத-ஸந்நிபாத ஜ்வரங்களில் நல்லது.

சரக்கொன்னைப்பட்டை, கண்டந்திப்பிலி, கோரைக்கிழங்கு, கடுகுரோகிணி, கடுக்காய் இவைகளின் கஷாயம் வாதகப ஜ்வரத் தைப் போக்க வல்லது.

கோரைக்கிழங்கு, பர்படகம், சுக்கு, சீந்திற்கொடி சிறுகாஞ்சூரி வேர் இவைகளின் கஷாயம் அரோசகம், வாந்தி, எரிச்சல், வரட்சி இவைகளுடன் கூடிய கபவாத ஜ்வரத்தில் நல்லது.

நிலவேம்பு, கோரைக்கிழங்கு, கடுகுரோஹிணி, சீந்திற்கொடி, சிறுகாஞ்சூரிவேர், பர்படகம், சுக்கு இவைகளின் கஷாயமும் இதில் நல்லது.

**பித்த கப ஜ்வரத்தில் சிகித்ஸை :**

**அம்ருதாஷ்டக கஷாயம் :—** சீந்திற்கொடி, வேப்பம்பட்டை, கடுகுரோஹிணி, கோரைக்கிழங்கு, வெட்பாலையரிசி, சுக்கு, பேய் புடல், சந்தனத்தூள் இவைகளின் கஷாயத்தை திப்பிலித்தூள் சேர்த்துக் கொடுக்க வாந்தி, அருசி, உமட்டல், எரிச்சல், நாவரட்சி இவைகளைப் போக்க வல்லது.

**படோலாதி கஷாயம் :—** பேய்புடல், சந்தனத்தூள், மருள் வேர், வட்டத்திருப்பி, கடுகுரோஹிணி, சீந்திற்கொடி திப்பிலி இவைகளின் கஷாயம், வாந்தி, எரிச்சல், அரிப்பு, விஷம் இவை களுடன் கூடிய பித்த கப ஜ்வரத்தில் நல்லது.

பேய்புடல், வேப்பம்பட்டை, திரிபலை, அதிமதுரம், சிற்றுமுட்டி இவைகளின் கஷாயம் பித்த கப ஜ்வரத்தில் நல்லது.

கடுகுரோகிணி, விலாமிச்சைவேர், சித்தாமுட்டிவேர், கொத்துமல்லிவிதை, பர்படகம், கோரைக்கிழங்கு இவைகளின் கஷாயம் திரும்பத்திரும்ப வரும் பித்தகப ஜ்வரத்தைப் போக்கும்.

கண்டங்கத்திரி, சீந்திற்கொடி, சிறுதேக்கு, சுக்கு, வெட்பாலை அரிசி, ஆடாதோடைவேர், நிலவேம்பு, சந்தனம், கோரைக் கிழங்கு, பேய்புடல், கடுகுரோகிணி இவைகளின் கஷாயம் எரிச்சல், நாவரட்சி, அருசி, விக்கல், காஸம், ஹிருதயவலி, பக்கவலி இவை களுடன் கூடிய ஜ்வரத்தில் நல்லது.

செஞ்சந்தனம், பதிமுகம், கொத்துமல்லிவிதை, சீந்திற் கொடி, வேப்பம்பட்டை இவைகளின் கஷாயம், நாவரட்சி எரிச்சல் வாந்தி இவைகளுடன் கூடிய ஜ்வரத்தில் நல்லது.

**லாஜமண்டம்–பொரிக்கஞ்சி :–** நெல் பொரி அல்லது வறுத்த அரிசி கொண்டு தயாரித்த கஞ்சி லாஜமண்டமாகும் கபபித்த நோய்களைப் போக்க வல்லது. மலத்தைக் கட்டும், நாவரட்சியைப் போக்கும். ஜ்வரத்தைத் தணிக்கும்.

ஜீரகத்தையும் பாகலிலை போட்டுக் காயவைத்த வென்னீரை யும் குளிருடன் ஆரம்பிக்கும் ஜ்வரத்தில் கொடுக்க நல்லது.

**ஸந்நிபாத ஜ்வர சிகித்ஸை :**

**பொதுவான சிகித்ஸை :—** முதலில் ஆமத்தையும் கபத்தை யும் போக்க சிகித்ஸை செய்து, ஆமமகன்று, கபம் குறைந்ததும் பித்தத்திற்கும் வாயுவிற்கும் சிகித்ஸை செய்யவேண்டும். லங் கனம், மணல் ஒத்தடம், நசியம், கொப்பளித்தல், அஞ்சனம் இவைகளை முதலில் உபயோகிக்க கபமும் ஆமமும் விலகும்.

**லங்கனம் :—** முதல் மூன்று தினங்களோ, ஐந்து தினங்களோ, பத்து தினங்களோ அல்லது ஆரோக்யம் பெறும் வரையிலோ லங்கனத்தைக் கையாளுவது நல்லது. உடலில் வியாதியை உண்டாக்கிய ஆமதோஷமிருக்கும்வரை லங்கனத்தைத் தாங்கும் சக்தி உடலுக்கு உண்டு. ஆமம் விலகியபின் மனிதன் லங்கனத் தைத் தாங்க முடியாது.

ரஸத்தில் தோஷமிருந்தால், ரஸத்தை சுத்தி செய்வதும், ரக்தத்திலிருந்தால், ரக்தமோக்ஷணமும், மாம்ஸத்திலிருந்தால், விரேசனமும், மேதஸிலிருந்தால் கொழுப்பைக் குறைக்கக்கூடிய தும், அஸ்தியி(எலும்பி)லிருந்தால் விரேசனம், வமனம், ஒத்தடம், உடலைப் பிடித்துவிடுதல் இவையும் செய்யவேண்டும். மஜ்ஜை யிலும் சுக்கிலத்திலும் தோஷமிருந்தால் ஜ்வரம் நிவிருத்தியாகாது.

ஒரு சிகித்ஸை வழியில் சென்று அதில் பலனடையாததைக் கண்டபிறகே முன் செய்த சிகித்ஸையின் வேகம் தணிந்த பிறகே வேறு முறையைக் கையாளவேண்டும். ஒன்றுமேல் ஒன்ருகக் கையாண்டு குழப்பக் கூடாது.

முகவாய்க்கட்டை முதலிய இடங்களில் சூடுபோடுதல், ருத்ராபிஷேகம், பிராம்மணர்களுக்கு போஜனமளித்தல், நவக்ரஹ ஜபம், மந்திரங்களால் ரக்ஷை கட்டுதல் இவைகளும் செய்யவேண்டும்.

**பாசனம் :—** கண்டங்கத்திரிவேர், முள்ளுக்கத்திரிவேர், சுக்கு, கொத்துமல்லிவிதை, தேவதாரு இவைகளின் கஷாயம் நல்ல பாசனமாகும்.

**வாலுகாஸ்வேதம் :—** மண் வாணுயில் மணலை இட்டு வறுத்து காடியைத் தெளித்து அதனுல் ஒத்தடம் கொடுக்க வாத கபங்களால் ஏற்படும் உடல் வலி, குத்துவலி, தலைவலி இவை நீங்கும்.

**நஸ்யம் :—** மாதுளம்பழச் சாற்றையும் இஞ்சிச்சாற்றையும் சற்றுச் சூடாக்கி இந்துப்பு, உப்பு, ஸௌவர்சல உப்பு இவைகளைக் கரைத்து நஸ்யமிட நல்லது. அதனுல் கபம் உடைந்து வெளியாகுவதால், தலை, ஹிருதயம், பக்கம், கழுத்து, முகம் இவைகளில் ஏற்படும் வலி தணிகிறது.

இலுப்பை வைரம், இந்துப்பு, வசம்பு, சுக்கு, திப்பிலி இவைகளைத் தூளாக்கி ஜலம் விட்டரைத்து அதன் ஜலத்தில் நஸ்யமிட மூர்ச்சை தெளிந்து உணர்வு பெறுவான். இந்துப்பு, வெண் மிளகு, கடுகு, வெண்கோஷ்டம், திப்பிலி இவைகளை ஆட்டு மூத்திரம் விட்டரைத்து நஸ்யமிட தந்திரை விலகும்.

**நிஷ்டீவனம் :—** இந்துப்பு சுக்கு, திப்பிலி, மிளகு இவைகளை இஞ்சிச்சாறு விட்டுக் குழப்பி வாயில் நிரப்பிக்கொண்டு சிறிது நேரம் கழித்துக் குதப்பித் துப்ப, மார்பு கழுத்து பக்கம் தலை தொண்டை இவைகளில் அடைத்துள்ள கபம் வெளியாகும். உடலும் இலேசாக ஆகும்.

## லேஹங்கள்

**கட்பலாவலேஹம் :—** காய்பல், புஷ்கரமூலம், கர்கடசிருங்கி, திப்பிலி இவைகளைத் தூளாக்கித் தேன் விட்டுக் குழப்பி வாயில் அடக்கிக்கொள்ள, அடைத்துள்ள கபம் வெளியாகும்.

**அஷ்டாங்காவலேஹம் :—** காய்பல், புஷ்கரமூலம், கர்கடசிருங்கி, சுக்கு, மிளகு, திப்பிலி, சிறுகாஞ்சூரிவேர், கருஞ்சீரகம் இவைகளைத் தூள்செய்து தேன் சேர்த்துக் குழப்பி வாயிலடக்கிக்

கொள்ள விக்கல், கப காஸம், சுவாஸம், தொண்டைக்கட்டு, சளிக் கட்டு இவைகள் நீங்கும். கபம் மிகுந்திருந்தால் இஞ்சிச் சாறும் சேர்த்துக் கொள்ளலாம்.

**அஞ்சனம்:—** சிறுவாகை விதை, திப்பிலி, மிளகு, இந்துப்பு, உள்ளிப்பூண்டு, மனோசிலை, வசம்பு இவைகளை கோமூத்திரம் விட்டரைத்து அஞ்சனமிடலாம். கஸ்தூரி, மிளகு இவைகளை குதிரையின் லாலை (வாயில் ஊறும் நீர்) யும் தேனும் விட்டரைத்து அஞ்சனமிட தந்த்ரை விலகும். தந்த்ரைக்கு சுக்கு, திப்பிலி, மிளகு இவைகளின் தூளை மூக்கில் ஊதிவிட நல்லது. குதிரையின் உமிழ் நீர் விட்டு மனோசிலையை அரைத்து அஞ்சனமிட தந்த்ரை விலகும். வெள்வேல் இலையையும் கடுக்காயையும் போட்டு வேக வைத்து அரைத்துப் பூச உடலில் ஏற்படும் வியர்வைக் கெடுதலைப் போக்க வல்லது. நிலவேம்பு, கடுகுரோகிணி, கோஷ்டம், கருஞ் சீரகம், வெட்பாலையரிசி, பூலாங்கிழங்கு இவைகளை ஸம அளவு சேர்த்து இடித்துத் தூள் செய்து உடல் மேல் பூசிக்கொள்வதும் தேய்த்துக் கொள்வதும் நல்லது. வியர்வை மிகுதியையும் தொண்டை அடைப்பையும் குறைத்து ஸந்நிபாதத்தில் உதவி செய்யும்.

வியர்வை மிகுதியாக இருக்கும்போது, வறுத்த கொள்ளுத் தூளையோ, பழைய வரட்டித் தூளையோ, பழகிய உப்புப் பானையையோ தூள் செய்து பூசிக்கொள்ள நல்லது. ஜீரகம், வசம்பு, சுக்கு, திப்பிலி, கருஞ்சீரகம் இவைகளின் சூர்ணம், நில வேம்பு, கடுகுரோஹிணி, கடுக்காய், திப்பிலி, காய்பல், வசம்பு இவைகளின் தூளையோ மேல் பூச அதிவியர்வையையும் உடல் சில்லிட்டுப் போவதையும் குறைக்கும்.

வத்ஸநாபி ஒருபங்கு, மிளகு 3 பங்கு, வராட்டிச் சாம்பல் 16 பங்கு இவைகளைக் கலந்து ஊமத்தை இலைச் சாறு விட்டு பாவனை செய்து வெய்யிலில் உணர்த்தித் தூள் செய்து மேல் பூச வியர்வை நிற்கும்.

அல்லது பட்டாணிக்கடலையை வறுத்து ஓமம், வசம்பு, திப்பிலி சேர்த்து இடித்துத் தூள் செய்து மேல் பூச வியர்வை யைக் குறைக்கும்.

**ஜிஹ்வாலேபம் :-** நாக்கு உலர்ந்து வெடித்துப் போகும்போது திராக்ஷைப்பழத்தைத் தேன் விட்டரைத்து நெய் சேர்த்துக் குழப்பித் தடவ நல்லது. தங்கம், முத்து, வெள்ளி, பவழம், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, சோழி, திராக்ஷை, அதிமதுரம், வில்வவேர், கோஷ்டம், பேரீச்சை, மூக்கரட்டை, திராக்ஷை, திப்பிலி, சுக்கு, புத்திரஜீவித்தழை, மான்கொம்பு, தேத்தான்

விதை, ஆமணக்கு வேர், நாணல் வேர், கடுகு, நாயுருவி விதை, வெள்ளைச்சாரணை வேர் இவைகளை முலைப்பால் விட்டரைத்து நெற்றிக்குப் பத்துப் போடலாம்,

**பஞ்சமுஷ்டிகயூஷம் :** யவை, இலந்தை விதை, கொள்ளு, பயறு, முள்ளங்கி இவை வகைக்கு ஒரு பலம் எடுத்து 8 பங்கு ஜலமிட்டுக் கஞ்சியாக்கிக் கொள்ளவும், குல்மம், சூலம், ச்வாஸம், காஸம், க்ஷயம், ஜ்வரம் இவைகளில் சிறந்த உணவாகும்,

**ஸப்தமுஷ்டிகயூஷம் :** கொள்ளு, யவை, இலந்தை விதை, பயறு, காய்ந்த முள்ளங்கி, சுக்கு, கொத்துமல்லி விதை இவைகளைக்கொண்டு முன் போலத் தயாரித்த கஞ்சி கபவாதங்களைப் போக்கும். ஸந்நிபாத ஜ்வரங்களில் சிறந்த உணவு.

**ஸித்தார்த்தாதி பிரலேபம் :** கடுகு, வசம்பு, பெருங்காயம், புங்கம்பட்டை, தேவதாரு, மஞ்சிட்டி, திரிபலை. வெள்ளை வாலுளுவைப் பட்டை, திரிகடு, ஞாழல்பூ, சிறுவாகை, மஞ்சள், மரமஞ்சள் இவைகளை ஸம அளவில் எடுத்து ஆட்டு மூத்திரம் அல்லது கோமூத்திரம் விட்டரைத்துப் பூச நல்லது. எல்லா ஜ்வரங்களும் போம்.

## ஸந்நிபாத ஜ்வரங்களில் கஷாயங்கள்.

**த்வாத்ரிம்சதங்க கஷாயம் :** சிறுதேக்கு, நிலவேம்பு, வேப்பம் பட்டை, கோரைக் கிழங்கு, கடுகு ரோஹிணி, வசம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, ஆடாதோடை வேர், பேய்கும்மட்டி வேர், சித்தரத்தை, நன்னாரி, பேய்புடல், தேவதாரு, மஞ்சள், பெருவாகை வேர், பாதிரிவேர், வல்லாரை, மரமஞ்சள், சீந்திற்கொடி, செவதை வேர், அதிவிடயம், புஷ்கரமூலம், தராக்கொத்து, கண்டங்கத்திரி வேர், முள்ளுக்கத்திரிவேர், வெட்பாலையரிசி, தானிக்காய், நெல்லிமுள்ளி, கடுக்காய், பூலாங்கிழங்கு இவை வகைக்கு சம எடை சேர்த்துக் கஷாயமிட்டுச் சாப்பிட 13 ஸந்நிபாதங்கள், சூலம், இருமல், விக்கல், ச்வாஸம், அர்சஸ் (மூலம்) வயிறு உப்புசம், துடை திமிர்த்தல், (ஊருஸ்தம்பம்) குடல் இரக்கம், (அந்திர விருத்தி) தொண்டை நோய்கள், ருசியின்மை, பூட்டுகளில் பிடிப்பு, வலி இவைகளை அறவே நீக்கும், (32 சாக்குகள் கொண்டது).

**அஷ்டாதசாங்க கஷாயம் :** நிலவேம்பு, தேவதாரு, தசமூலம், (வில்வ வேர், முன்னைவேர், பெருவாகை வேர், பாதிரி வேர், குமிழம் வேர், கண்டங்கத்திரி வேர், முள்ளுக்கத்திரி வேர், ஓரிலைவேர் மூவிலை வேர், நெரிஞ்சில் வேர்) சுக்கு, கோரைக்கிழங்கு, கடுகு ரோகிணி, வெட்பாலை யரிசி, கொத்துமல்லி விதை, யானைத்

திப்பிலி இந்த 18 சரக்குகள் கொண்ட கஷாயத்தைச் சாப்பிட சோர்வு, பிதற்றல், இருமல், ருசியின்மை, எரிச்சல், மயக்கம், ச்வாஸம் இத்துடன் கூடிய எல்லா ஜ்வரங்களும் குணமாகும்.

**பஞ்சதிக்தக கஷாயம் :** கண்டங்கத்திரிவேர், புஷ்கரமூலம், நிலவேம்பு, சீந்திற்கொடி, சுக்கு இவ்வைந்து கசப்பு சரக்குகளின் கஷாயமும் மிக நல்லது.

**தார்வ்யாதி கஷாயம் :** மரமஞ்சள் மேல் தோல், கோரைக் கிழங்கு, நிலவேம்பு, திரிபலை, கண்டங்கத்திரி வேர், பேய்புடல், மஞ்சள், வேப்பம்பட்டை இவைகளின் கஷாயம் ஸந்நிபாத ஜ்வரத்தில் பிரக்ஞையற்றிருப்பவனுக்கு உணர்வூட்ட நல்லது.

**கபப்பிரதான ஸந்நிபாதத்தில் :** கண்டந்திப்பிலி, வெட்பாலைப் பட்டை, தேவதாரு, வாய்விளங்கம், சிறுதேக்கு, கருசலாங்கண்ணி, சுக்கு மிளகு திப்பிலி, கொடிவேலி வேர்பட்டை, காய்பல், புஷ்கரமூலம், சித்தரத்தை, கடுக்காய், கண்டங்கத்திரி வேர், முள்ளுக்கத்திரி வேர், ஜீரகம், ஜடாமாஞ்சி, சீமை நிலவேம்பு, வசம்பு, செவ்வியம், வட்டத்திருப்பி இவைகளின் கஷாயம் எல்லா ஸந்நிபாதங்களையும் போக்கும், புத்தித் தடுமாறல் வியர்வை மிகுதி சில்லிட்டுப் போதல், பிதற்றல், சூலம், வயிற்று உப்பிசம், வித்திரதி (விப்புருதி) மற்றும் கபவாதம் மிகுந்த நோய்கள், பிரசவித்த மாதர்களுக்கு வரும் சூதிகா நோய்கள் இவைகளில் நல்லது.

**வாதப் பிரதான ஸந்நிபாதத்தில் அர்காதி கஷாயம் :** எருக்கம் வேர் நன்னாரி வேர் சீமை நிலவேம்பு தேவதாரு சித்தரத்தை கருநொச்சி வசம்பு முன்னைவேர் முருங்கைப்பட்டை திப்பிலி கண்டந்திப்பிலி செவ்யம் கொடிவேலிவேர்பட்டை சுக்கு அதிவிடயம் கருசலாங்கண்ணி இவைகளின் கஷாயம் தீவ்ரமான ஸந்நிபாத ஜ்வரங்களையும் போக்க வல்லது. தனுர்வாதம் பல் கிட்டிப் போதல் உடல் சில்லிட்டுப் போதல் இருமல் ச்வாஸம் ஸூதிகா வாதங்கள் இவைகள் எல்லாம் நீங்கும். எருக்கம் வேர் கண்டந்திப்பிலி முருங்கை மரமஞ்சள் மேல் தோல், செவ்வியம் கருநொச்சி திப்பிலி சிற்றரத்தை கையாந்தரை மூக்கரட்டை வேர் கொடிவேலி வேர் பட்டை வசம்பு நிலவேம்பு சுக்கு இவைகளின் கஷாயம் ஸந்நிபாத ஜ்வரங்களைப் போக்கும். உடல் மறத்துப் போதல், ஸூதிகாவாத ரோகங்கள், உடல் சில்லிட்டுப போதல் அபஸ்மாரம் இவைகளில் மிக நல்லது.

**தசமூலாத்யஷ்டாதசாங்கம் ;** தசமூலம் பூலாங்கிழங்கு கர்கடசிங்கி புஷ்கரமூலம் சிறுகாஞ்சூரி வேர் சுக்கு வெட்பாலையரிசி

பேய்புடல் கடுகுரோஹிணி ஸந்நிபாத ஜ்வரத்தில் இருமல் மார்பில் மூச்சுப் பிடிப்பு பக்கவலி ச்வாஸம் விக்கல் வாந்தி இவைகளுக்கு மிகவும் குணம் தரும்.

**லசுனாதி கஷாயம் :** உள்ளிப் பூண்டு நிலவேம்பு சிறுதேக்கு அதிவிடயம் இவைகளை மனிதனின் சிறுநீரில் கஷாயமிட்டுக் கொடுக்க கடுமையான ஸந்நிபாதமும் தீரும்.

## ஸந்திகம் முதலியவைகளுக்கு விசேஷ சிகித்ஸை.

**ஸந்திக ஜ்வரத்தில் :** லங்கனம் வேது பிடிப்பது இலை முதலியவைகளை வேக வைத்துக் கட்டுவது மற்றும் வரட்சி உண்டாக்கும் எல்லா முறைகளும் நல்லதே. திப்பிலியும் சிறு பஞ்சமூல (முள்ளுக்கத்திரி வேர் கண்டங்கத்திரி வேர் ஓரிலை வேர் மூவிலை வேர் நெரிஞ்சில் முள்)மும் அரைத்துக் கலந்த கொள்ளுக் கஞ்சியை இந்துப்பும் சுக்கும் மேம்பொடியாகப் போட்டுச் சாப்பிடுவது நல்லது.

**ராஸ்னாதி கஷாயம் :** அரத்தை சுக்கு சீந்திற்கொடி முள் குறிஞ்சி வேர் கோரைக் கிழங்கு தண்ணீர்விட்டான் கிழங்கு, கடுக்காய் தேவதாரு கடுகுரோஹிணி கச்சோரம் ஆடாதோடை வேர் ஆமணக்கு வேர் தசமூலம் இவைகளின் கஷாயத்தை காலையில் சாப்பிட நல்லது. மன்யாஸ்தம்பம் (மென்னிப்பிடிப்பு) அந்திரவிருத்தி ஜ்வரம் பிடரிவலி இடுப்பு வலி பூட்டுகளில் வலி எல்லா அங்கங்களிலும் வலி இவை நீங்கும்.

**அம்ருதோரு பூகாதி கஷாயம் :** சீந்திற்கொடி சிற்றாமணக்கு வேர் சுக்கு தேவதாரு சித்தரத்தை கடுக்காய் இவைகளின் கஷாயம் சாப்பிட நல்லது. எல்லா வாத ரோகங்களும் நீங்கும்.

**கிரந்திகாதி கஷாயம் :** கண்டந்திப்பிலி, தான்றிக்காய், கடுக்காய். சரக்கொன்னை வேர் பட்டை, நெல்லிமுள்ளி ஆடாதோடை வேர் இவைகளின் கஷாயத்தை சிற்றாமணக் கெண்ணெய் கலந்து கொடுக்க நல்லது.

**அந்தக ஜ்வரத்தில் :** இது வந்தவுடனேயே பிராணவியோகம் ஏற்பட்டு விடுவதால் இதற்கு சிகித்ஸை கிடையாது.

**ருக்தாஹத்தில் :** கோரைக்கிழங்கு, சந்தனம், சுக்கு, வெட்டி வேர், விலாமிச்சை வேர், பர்படகம் இவைகளின் கஷாயத்தை நன்கு ஆற வைத்துக் குளிர்ந்த பின் சாப்பிட நல்லது. இலந்தை இலையை அரைத்து சந்தனக் குழம்பும், வேப்பிலையை அரைத்து ஜலத்தில் கடைந்து எடுத்த நுரையையும் சேர்த்து உள்ளங் காலில் பூசலாம். முன்னிரவில் அரிசியைக் களைந்தெடுத்த

ஜலத்தை மறுதினம் சர்க்கரை கலந்து சாப்பிட மிகக் கடுமையான உள்ளெரிச்சலும் நீங்கும்.

**பூநிம்பாதி கஷாயம்:** நிலவேம்பு, வல்லாரை, திராக்ஷை, கோரைக் கிழங்கு, வசம்பு, விலாமிச்சை வேர், சரக்கொன்னைப் பட்டை, கடுகுரோஹிணி, கடுக்காய், நெல்லிமுள்ளி, தானிக்காய், சிற்ருமுட்டி வேர், வேப்பம்பட்டை, பேய்ப்பிர்க்கு, தசமூலம் இவைகளின் கஷாயம் எல்லா ருக்தாஹ ஜ்வரங்களையும் வாத ஜ்வரங்களையும் போக்கும்.

அகில், பச்சைக் கற்பூரம், யானைவணங்கி, நாகணம், தகர விதை, வெட்டிவேர், சந்தனம் இவைகளை இடித்துத் தேன் சேர்த்துக்கொண்டு தணலிலிட்டுத் தூபமிட நல்லது. அல்லது கருநொச்சி, குக்கில், கடுகு, வேப்பம்பட்டை, வெள்ளைக் குங்கிலியம் இவைகளின் தூபமும் நல்லது. நல்ல அழகுள்ள யுவதியை ஆலிங்கனம் செய்துகொள்ளச் சொல்லி, அதனுல் நோயாளிக்கு உணர்ச்சி ஏற்பட்டதும், அவளை அகலச் செய்துவிட ஜ்வரவேகம் தணியும்.

**சித்த விப்ரமத்தில்:** கடுக்காய், பர்படகம் கடுகுரோகிணி, திராக்ஷை, தேவதாரு, கோரைக் கிழங்கு, நிலவேம்பு, சரக்கொன்னைப்பட்டை, பேய்ப்புடல், நெல்லிமுள்ளி இவைகளின் கஷாயம் இதில் நல்லது. கடுக்காய், பர்படகம், கருப்பு திராக்ஷை, சங்கங்குப்பி, கடுகுரோகிணி, கோரைக் கிழங்கு, சரக்கொன்னைப் பட்டை, தேவதாரு, வல்லாரை இவைகளின் கஷாயம் நல்லது.

**பிரசேதனவடி:** திப்பிலி, மிளகு, வசம்பு, இந்துப்பு புங்கம் விதை, கடுக்காய், தானிக்காய், கடுகு, பெருங்காயம், சுக்கு இவைகளை வெள்ளாட்டு மூத்திரம் விட்டரைத்து மாத்திரை செய்து கொள்ளவும். அதை இழைத்துக் கண்களுக்கு அஞ்சனமிட எல்லா மயக்கங்களும் தெளியும். சித்தப் பிரமம், அபஸ்மாரம், பூதபீடை, தலைவலி, கண்வலி இவை நீங்கும். (பாவப்ரகாசம்).

**சீதாங்கத்தில்:** சீதாங்க ஸந்நிபாதம் சிகித்ஸைக்குக் கட்டுப் படாததே. எருக்கம் வேர், ஜீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, சிறு தேக்கு, கண்டங்கத்திரிவேர், சுக்கு, புஷ்கரமூலம் இவைகளின் கஷாயத்தை கோமூத்ரம் கலந்து அல்லது கோமூத்ரத்திலேயே தயாரித்துக் கொடுக்க உடல் சில்லிடுதல், மயக்கம், ச்வாஸம், கபம் கட்டுதல், இருமல் இவை நீங்கும். சுத்தி செய்த ரஸம், சுத்தி செய்த நாபி, மிளகு ஊமத்தங்காய் சாம்பல் இவை முறையே 1-1-4-8 என்ற அளவில் சேர்த்து அரைத்து வைத்துக்கொண்டு உடல் மேல் பூச, அதிகம் வியர்வை ஏற்படுவதையும் சில்லிடுவதையும் தடுக்கும்.

**தந்த்ரிகத்தில்:** ஜ்வரம் வந்தவுடனேயே கண் திறந்து பார்க்க முடியாமல் அயர்வும் களைப்பும் ஏற்படுகிறது. இது கஷ்டஸாத்யம். சிறுதேக்கு, புஷ்கரமூலம், கடுக்காய், கண்டந்திப்பிலி, சுக்கு, சீந்திற்கொடி இவைகளின் கஷாயம் காலை வேளைகளில் சாப்பிட நல்லது. சித்தரத்தை, மனோசிலை, ஏலரிசி இவைகளை அரைத்து கண்ணிற்கு அஞ்சனமிடலாம். சீந்திற்கொடி, பேய்புடல், ஆடாதோடை, திரிகடு இவைகளின் கஷாயம் சாப்பிட நல்லது. கோஷ்டம், வரித்தும்மட்டி, சுக்கு, மிளகு, மஞ்சள், மரமஞ்சள், வசம்பு, திப்பிலி இவைகளை ஆட்டு மூத்திரமிட்டரைத்துக் குழப்பி மூக்கில் நஸ்யமிட நல்லது.

**கண்ட குப்ஜகத்தில்,** சுக்கு, மிளகு, திப்பிலி, வெட்பாலையரிசி, கடுகுரோகிணி, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, ஆடாதோடை வேர், மஞ்சள், மரமஞ்சள் இவைகளின் கஷாயம் சாப்பிட நல்லது. கர்கடகசிருங்கி, வெட்பாலையரிசி, தாழை விழுது, கோரைக் கிழங்கு, பூலாங்கிழங்கு, நிலவேம்பு, சிறுதேக்கு, மஞ்சள், கடுகுரோகிணி, புஷ்கரமூலம், கொடிவேலி வேர் பட்டை, மிளகு, கண்டங்கத்திரி, ஆடாதோடை, நெல்லிமுள்ளி, தேவதாரு, கடுக்காய், செவ்யம், சுக்கு, திப்பிலி, காய்பல் இவைகளின் கஷாயம் சூடாகச் சாப்பிட கண்டகுப்ஜம் விலகும். திப்பிலி, நாயுருவி விதை இவைகளையோ சுக்கு, மிளகு, திப்பிலி, பேய்ச்சுரை இலை இவைகளையோ ஜலம் விட்டு நெகிழ அரைத்து நஸ்யமிடலாம்.

**கர்ணகத்தில்:** அட்டை விட்டு ரத்தத்தை வெளியாக்குதல், (ஸ்னேஹபான முறைப்படி) நெய்யைக் குடித்தல், இது இரண்டும் ஹிதமாகும். முதலில் அட்டையை விட்டு காதின் பின்புறமுள்ள ரத்தக் கட்டை வெளியாக்க வேண்டும். பிறகு திரிபலா கிருதத்தையோ பழைய நெய்யையோ கிருதபான முறைப்படி சாப்பிடச் செய்யலாம். கபபித்த தோஷங்களை விலக்கும் மேற்பூச்சுகளும் வியாதி வேகம் தணிய உதவும் ஔஷதங்களும் நல்லவை. ரக்தமோக்ஷணம் செய்ய முதுகுப் புறத்தில் பயறிலை போன்ற நிறமும் வயிற்றில் சிவப்பும் ஆறு அங்குல நீளமுமுள்ள அட்டை நல்லது. இதை பத்ரிகை என்பர். சித்தரத்தை, முள்ளுக்கத்திரி, கடுக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகிணீ, கோரைக் கிழங்கு, புஷ்கரமூலம், கர்கடகசிங்கி, சீந்திற்கொடி, சிறுதேக்கு இவைகளின் கஷாயம் சாப்பிட நல்லது. மிளகு, தசமூலம், திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, மஞ்சள், சுக்கு, கடுகுரோகிணி, நிலவேம்பு இவைகளின் கஷாயத்தை இந்துப்பு சேர்த்து சாப்பிடுவது நல்லது. பெருங்காயம், மஞ்சள், மரமஞ்சள், பேய்தும்மட்டிக்காய், இந்துப்பு, தேவதாரு, கோஷ்டம்

எருக்கம்பால் இவைகளைக்கொண்டு தயாரித்த மேல் பூச்சு காதின் பின்புறம் ஏற்படும் கட்டியைத் தணிக்கும், சேராங்கொட்டை, லவங்கப்பட்டை, கொடிவேலி வேர் பட்டை, வெல்லம், செவதை வேர், கோஷ்டம், அன்னபேதி இவைகளை எருக்கம் பாலிட்டரைத்து மேல் பூசலாம். ஏழு நாட்களில் கர்ண க்ரந்தி குறைந்து விடும். திப்பிலித் தூளையும் இந்துப்பையும் வெந்நீர் விட்டு குழைத்துக்கொண்டு மூக்கில் நஸ்யமிட வியாதி உடன் குறையும். தந்தீமூலம், கொடிவேலி வேர் பட்டை, வெல்லம், சேராங்கொட்டை, அன்னபேதி இவைகளைக் கள்ளிப்பாலும், எருக்கம் பாலும் விட்டரைத்துப் பூச நல்லது. சுக்கு, தேவதாரு, சித்தரத்தை, கொடிவேலிவேர்பட்டை இவைகளை அரைத்துப் பூச, கழுத்து வீக்கம் தணியும், கொள்ளு, காய்பல், சுக்கு, கருஞ்சீரகம் இவை ஸம அளவு சேர்த்தரைத்துக் கொதிக்க வைத்து இளஞ்சூடாக காதின் அடியில் பத்துப் போட நல்லது.

மாதுளம் வேர் பட்டை, முன்னை வேர், கொள்ளுக்காய்வேளை, கொடிவேலி வேர் பட்டை, பேய்சுரை, திப்பிலி, எட்டிக்கொட்டை இவைகளை அரைத்துப் பூசலாம், காட்டுக் கருணைக் கிழங்கை அரைத்துப் பூசுவதும் நல்லது. நண்டின் மாம்ஸத்தால் வேது கொடுப்பதும் அதை வைத்துக் கட்டுவதும் நல்லது. ரத்த மோக்ஷணம் செய்தபின் அதன் மேல் கடுகு, இந்துப்பு, வசம்பு, ஒட்டடை, சுக்கு, மஞ்சள் இவைகளை ஜலம் விட்டரைத்துப் பூச வலியும் வீக்கமும் குறையும்.

**புக்னநேத்ரத்தில் :** மரமஞ்சள், கோரைக் கிழங்கு, நிலவேம்பு, கடுக்காய், நெல்லிமுள்ளி, தானிக்காய், கண்டங்கத்திரி, பேய்புடல், மஞ்சள், வேப்பம் பட்டை இவைகளின் கஷாயத்தை பிரக்ஞையற்றவனுக்குக் கொடுக்க உணர்வுண்டாகும், நிலவேம்பு, வசம்பு, திப்பிலி, மிளகு, உள்ளிப்பூண்டு, கடுகு இவைகளைத் தேன் விட்டரைத்து நாக்கிலிட்டு சுவைத்துச் சாப்பிடலாம், இந்துப்பு திப்பிலி இவைகளை அரைத்து அஞ்சனமிடலாம். வசம்பு, மிளகு பெருங்காயம், இலுப்பை வைரம் இவைகளை அரைத்துக் குழப்பி மூக்கில் நஸ்யமிடலாம். மிளகு, அமுக்கராக் கிழங்கு, திப்பிலி, இந்துப்பு, உள்ளிப்பூண்டு, அதிமதுரம், வசம்பு, இஞ்சி இவைகளை ஆட்டு மூத்திரம் விட்டரைத்து நஸ்யமிட நல்லது,

**ரக்த ஷ்டீவியில் :** பர்படகம், சிறுகாஞ்சூரி வேர், ஆடாதோடை, முகர்புல், கடுகுரோகிணி, ஞாழல்பூ இவைகளைக் கஷாயமிட்டுச் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட வாய் வழியே ரக்தம் கசிவது நிற்கும். கோரைக் கிழங்கு, பதிமுகம், பர்படகம், சந்தனம், ஜாதிப்

பூ, தண்ணீர்விட்டான் கிழங்கு அதிமதுரம், வேப்பம்பட்டை, வெட்டி வேர், கொடிவேலி வேர் பட்டை, சந்தனம் இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துச் சாப்பிட ரத்தம் கக்குவதை நிறுத்தும்.

**பிரலாபகத்தில் :** தகர விதை, அமுக்கராக் கிழங்கு, பர்படகம், சங்கங்குப்பி, தேவதாரு, கடுகுரோகிணி, பிராம்மி, ஜடாமாஞ்சி கோரைக் கிழங்கு சரக்கொன்னைப் பட்டை, மூன்று முகமுள்ள ஹிமாலயக் கடுக்காய், (கிடைக்கா விடத்து பெருங் கடுக்காய்) திராக்ஷை இவைகளைக் கஷாயமாக்கிச் சாப்பிட பிதற்றல் நிற்கும். கோரைக் கிழங்கு, தசமூலம், வெட்டி வேர், சுக்கு, சந்தனம், சரக்கொன்னைப் பட்டை, ஆடாதோடை, பர்படகம் இவை ஸம அளவு எடுத்துக் கஷாயமிட்டுச் சாப்பிடப் பிரலாபக ஜ்வரம் நீங்கும்.

**ஜிஹ்வகத்தில் :** கண்டங்கத்திரி, சுக்கு, புஷ்கரமூலம், கடுகு ரோகிணி, சித்தரத்தை, சீந்திற்கொடி, சிறுதேக்கு, கர்கடசிங்கி, பூலாங்கிழங்கு, சிறுகாஞ்சூரி வேர், ஆடாதோடை வேர், கோரைக் கிழங்கு, வல்லாரை, வசம்பு, நிலவேம்பு இவைகளைக் கஷாயமிட்டு சாப்பிட ஜிஹ்வக ஜ்வரம் நீங்கும். தேவதாரு நிலவேம்பு தானிக் காய் கடுக்காய் பேய்புடல் மஞ்சள் மரமஞ்சள் சுக்கு கண்டங் கத்திரி வேர் புஷ்கரமூலம் கோரைக் கிழங்கு சீந்திற்கொடி ஆடா தோடை வேர் இவைகளின் கஷாயம் ஜிஹ்வகத்தில் நல்ல லாபம் தரும். காரமானவைகளை புளிப்பு மாதுளப்பழச் சாறும் இந் துப்பும் கூட்டிக் குழப்பி நாக்கில் தடவலாம்.

**அபின்யாஸத்தில் :** சுக்கையும் பெருங்காயத்தையும் கருச லாங்கண்ணிச் சாறு விட்டரைத்துச் சாப்பிட நினைவு பெறுவான். மிளகு இந்துப்பு திப்பிலி ஜடாமாஞ்சி இலுப்பை வைரம் காய் பல் இவைகளை தேன் விட்டரைத்து வென்னீரில் குழப்பி நஸ்ய மிட எந்த கடினமான மோகமும் விலகி, இந்திரியங்களின் ஸ்வாதீனம் பெற்று கலக்கமில்லாமலிருப்பான். உள்ளிப்பூண்டு மிளகு திப்பிலி இந்துப்பு வசம்பு சிறுவாகைவிதை சுக்கு இவைகளை கோமூத்ரம் விட்டரைத்து கண்களில் அஞ்சனமிட கபவாதங்களாலோ ரக்த பித்தத்தாலோ ஏற்படும் அபின்யாஸ உபத்ரவங்கள் குறையும். அபின்யாஸத்தில் நினைவு வராமலிருப் பவனுக்கு இரு கால்களிலும் நெற்றியிலும் சந்திரன் போன்று வட்டமாக இருப்பு சலாகையால் சுட்டுவிட்டால் உடன் நினைவு ஏற்படும். கர்கடசிங்கி சிறுகாஞ்சூரி வேர் புஷ்கரமூலம் சிறு தேக்கு பூலாங்கிழங்கு கண்டங்கத்திரி இவைகளின் கஷாயம் கப மதிகமான அபின்யாஸத்தைப் போக்க வல்லது. தராக் கொத்து தசமூலம் புஷ்கரமூலம் சிற்றாமணக்கு வேர் கருஞ்சீரகம்

சிறுதேக்கு சீந்திற்கொடி ஆடாதோடை வேர் பூலாங்கிழங்கு கர்கடசிங்கி சுக்கு மிளகு திப்பிலி மூக்கரட்டை வேர் இவைகளின் கஷாயத்தில் கோமூத்திரம் சேர்த்துக் கொடுக்க கபம் முற்றி வரும் அபின்யாஸ ஜ்வரம் விலகும். மஞ்சிட்டி கொடிவேலி வேர் பட்டை வில்வப் பிஞ்சு பூலாங்கிழங்கு சுக்கு புங்கம் பட்டை மஞ்சள் தராக்கொத்து முள்ளுக் கத்திரி ஆடாதோடை வேர் மிளகு திப்பிலி இவைகளின் கஷாயத்தைச் சாப்பிட எல்லா அங்கங்களிலும் ஏற்படும் எல்லா வியாதிகளும் நீங்கிவிடும், சந்தனம் வெட்டி வேர் கண்டங்கத்திரி வேர் வில்வப்பழம் இந்துப்பு காஞ்சூரி வேர் சுக்கு கல்லூர்வஞ்சி ஆமணக்கு வேர் இவைகளின் கஷாயம் அபின்யாஸத்தில் ஏற்படும் வலியைப் போக்கும்.

**சிருங்க்யாதி கஷாயம் :** கர்கடகசிங்கி சிறுதேக்கு கடுக்காய் ஓமம் திப்பிலி நிலவேம்பு பர்படகம் தேவதாரு வசம்பு கோஷ்டம் சிறுகாஞ்சூரி வேர் காய்பல் சுக்கு கோரைக்கிழங்கு மல்லிவிதை கடுகுரோகிணி வெட்பாலையரிசி வட்டத்திருப்பி அரேணுகம் யானைத்திப்பிலி நாயுருவி விதை, கண்டந்திப்பிலி கொடிவேலி வேர் பட்டை பேய்தும்மட்டி வேர் சரக்கொன்னைப் பட்டை வேப்பம் பட்டை, கார்போகரிசி வாய்விளங்கம் மஞ்சள் மரமஞ்சள் ஜீரகம் கருஞ்சீரகம் இவைகளைக் கஷாயமாகத் தயாரித்து பெருங்காயத் தூள் அதில் தூவி இஞ்சிச் சாறு சேர்த்துச் சாப்பிட அபின்யாஸம் அதில் ஏற்படும் அயர்வு பிரமேஹம் காதுவலி 13 ஸந்நிபாதங்கள் விக்கல் ச்வாஸம் காஸம் மற்ற உபத்ரவங்கள் எல்லாம் விலகும், (பாவப்ரகாசம்).

முன்கூறிய பார்ங்க்யாதி கஷாயம் முதலியதும் இங்கு நல்ல குணம் தரவல்லவை. உயிருள்ள வரை மருந்து உட்செல்லும் வரை சிகித்ஸை செய்ய வேண்டும். தைவத்தின் வழி வக்ரமானது.

## ஆகந்து ஜ்வரங்களில் சிகித்ஸை

அபிசாரம் சாபம் இவைகளால் ஏற்பட்ட ஜ்வரத்தை ஹோமம் முதலிய சாந்திகளால் தணிக்க வேண்டும், கிரஹங்களின் பீடையாலும் தூமகேது போன்ற உத்பாதங்களாலும் ஏற்பட்டதை தானம் சாந்திகள் விருந்தளித்தல் இவைகளால் மாற்ற வேண்டும். பூதங்கள் பிசாசங்களால் ஏற்படும் ஜ்வரங்களில் பூத வித்யையில் குறிப்பிட்டுள்ள கட்டு ஆவேசம் தாடனம் இவைகள் செய்ய வேண்டும். மானஸ ஜ்வரத்தில் மனதிற்கு அமைதி அளிப்பதே சிகித்ஸையாகும். இலுப்பை வைரம் மிளகு இந்துப்பு திப்பிலி வசம்பு இவைகளை நஸ்யமிட பூத ஜ்வரம் விலகும், அடி

பட்டதால் ஏற்பட்ட ஜ்வரத்தில் உஷ்ணமான முறைகளை விட்டு துவர்ப்பும் இனிப்பும் பிசுபிசுப்பு மிக்கதுமான மருந்துகளைக் கொடுக்கவேண்டும். மற்றும் நெய்யை கிருதமான முறையில் உட்கொள்வதாலும் மேல் பூசுவதாலும் அபிகாத ஜ்வரம் விலகும். மூளை வளர உதவுவதும் உடலுக்கு ஒத்துக்கொள்ளக் கூடியதுமான மாம்ஸ ரஸம் கலந்த உணவு நல்லது. கொலை பூதாவேசம் ஏவல் கைகால் ஒடிந்து போதல் பொருள் நஷ்டம் இவைகளால் ஏற்பட்ட ஜ்வரத்தில் கள், பால் இவைகளை அதிகமாகக் கொடுக்க குணம் தரும். பச்சிலை நெடியாலும் விஷ மருந்துகளாலும் ஏற்பட்ட ஜ்வரத்தில் விஷத்தையும் பித்தத்தையும் தணிக்க வல்ல கஷாயங்களாலும் ஸர்வகந்த * கஷாயத்தாலும் சிகித்ஸை செய்யலாம். கோபத்தால் ஏற்பட்ட ஜ்வரத்தில் பித்தத்தைத் தணிப்பதும், காமத்தால் ஏற்பட்டதில் யுவதிகள் நல்வார்த்தை பரிவுரை இஷ்டத்தைப் பூர்த்தி செய்தல், வாயுவை சமனப்படுத்தல் இவையும். காம சோக பயங்களால் ஏற்பட்டதில் உத்ஸாக மூட்டுவதும், பயத்தால் ஏற்பட்டதில் ஜலமத்தியில் நிறுத்தி வைப்பதும், கோபத்தால் ஏற்பட்ட ஜ்வரத்தில் காமத்தை வளர்ப்பதும், காமத்தால் ஏற்பட்டதில் கோபத்தை உண்டாக்குவதும், பயத்தாலும் சோகத்தாலும் ஏற்பட்டதில் காமத்தையும் கோபத்தையும் தூண்டுவதும் ஏற்ற சிகித்ஸை களாகும்.

## விஷம ஜ்வரத்தின் சிகித்ஸை.

ஜ்வரம் விட்ட பின்பும், தாதுக்களில் ஒளிந்திருக்கும் சமனமடையாத சிறிதளவு தோஷம் கூட இலேசான காரணத்தினால் விஷம ஜ்வரத்தை உண்டாக்கி விடுகின்றது. விஷம ஜ்வரம் இரு வகைப்பட்டதாகும். ஒன்று மிகுந்த குளிருடன் ஆரம்பிக்கும். மற்றொன்று கடும் எரிச்சலுடன் ஆரம்பிக்கும். ஜ்வரம் விட்ட பின்னர் உடல் மெலிந்திருக்கும் தருவாயில், பத்ய முறை தவறியவர்களுக்கு, சிறிதளவு மிகுந்த தோஷம் கூட கடும் ஜ்வரத்தை உண்டாக்கும். ஒருநாளில் இரு தடவை, தினமும் ஒரு தடவை விட்டு விட்டு, ஒருநாள் விட்டு ஒரு நாள், இரு நாள் விட்டு ஒரு நாள், மூன்று நாள் விட்டு நான்காம் நாள், இவ்வகையில் வரும் விஷம ஜ்வரங்களும் ஜீர்ண ஜ்வரமு (நாட்பட்ட ஜ்வரம்)ம் வெகு நாட்கள் வரை உபத்ரவித்துக் கொண்டே இருக்கும்.

---

* ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, பச்சிலை, கர்பூரம், வால்மிளகு, அகில், குங்குமப்பூ, கிராம்பு இவை 'ஸர்வகந்தம்' எனப்படும்.

இவைகளுக்கான சிகித்ஸை இனி குறிப்பிடப்படுகின்றது வாதம் முற்றி வருவதில் நெய்களும் அனுவாஸனத்துடனுள்ள பஸ்திகளும், பிசுபிசுப்புள்ளதும் உஷ்ணமானதுமான அன்ன பானங்களும் நல்லவை. பித்தம் மிகுந்து வருவதில், விரேசனம், பால், தயாரித்த நெய்கள், கசப்பும் சீத குணமுமுள்ளவை நல்லவை. கபம் மிகுந்து காணுவதில், வாந்தி, பாசனம், வரண்ட அன்ன பானங்கள், லங்கனம், துவர்ப்பும் சூடுமுள்ளவை இவை நல்லவை.

**ஸந்தத ஜ்வரத்தில்:** பம்பத்துராய், கடுகுரோகிணி, சிறுகாஞ்சோரி வேர், நன்னாரி இவைகளின் கஷாயத்தைக் கொடுக்கலாம். இந்த கஷாயத்தில் வாதம் மிகுந்த நிலையில் கொடுக்கும்போது வீசம் பங்கு தேனும் கால் பங்கு சர்க்கரையும் சேர்த்தும், பித்தம் மிகுந்த நிலையில் அரைக்கால் பங்கு சர்க்கரையும் அரைக்கால் பங்கு தேனும் சேர்த்தும், கபம் மிகுந்த நிலையில் கால் பங்கு தேனும், வீசம் பங்கு சர்க்கரையும் சேர்த்தும் கொடுக்க வேண்டும்.

**ஸதத ஜ்வரத்தில்:** ஆடாதோடை, பேய்புடல், திரிபலை, திராக்ஷை, சரக்கொன்னை வேர்ப் பட்டை, வேப்பம்பட்டை இவைகளின் கஷாயத்தைத் தேனும் சர்க்கரையும் சேர்த்துக் கொடுக்கலாம். கோட்டானின் வலது பக்கத்து இறக்கையை வெள்ளை நூலில் கட்டி இடது காதில் வைத்துக்கொள்ளலாம்.

**அன்யேத்யுஷ்க (ஒருநாள் விட்டு ஒருநாள் வரும்) ஜ்வரத்தில்:** திராக்ஷை, பேய்புடல், வேப்பம்பட்டை, கோரைக் கிழங்கு, வெட்பாலையரிசி, திரிபலை, சீந்திற்கொடி இவைகளின் கஷாயத்தை ஆறிய பின் சாப்பிட நல்லது.

**திருதீயக (மூன்றும் நாள் முறை) ஜ்வரத்தில்:** சந்தனம், கொத்துமல்லி விதை, சுக்கு, விலாமிச்சை வேர், திப்பிலி, கோரைக் கிழங்கு இவைகளின் கஷாயத்தை தேனும் சர்க்கரையும் சேர்த்துச் சாப்பிட நல்லது. சிலந்தி வலையைப் பொசுக்கி எடுத்த மையைக் கொண்டு கண்களுக்கு அஞ்சனமிடலாம்.

**சாதுர்த்திக (நான்காம் நாள் முறை) ஜ்வரத்தில்:** ஆடாதோடை வேர், நெல்லிமுள்ளி, ஓரிலை வேர், மூவிலை வேர், தேவதாரு, கொத்துமல்லி விதை, சுக்கு இவைகளின் கஷாயத்தைத் தேனும் சர்க்கரையும் சேர்த்துக் கொடுக்க நல்லது. கடுக்காய், ஓரிலை வேர், மூவிலை வேர், சுக்கு, தேவதாரு, நெல்லிமுள்ளி, ஆடாதோடை வேர் இவைகளின் கஷாயத்தைத் தேனும் சர்க்

கரையும் சேர்த்துச் சாப்பிடுவது நல்லது. பழைய நெய்யுடன் பெருங்காயத்தைத் தூள் செய்து கலந்து நஸ்யமிட நல்லது. அகத்தி இலைச் சாறையும் நஸ்யமிட நல்லது. சிறுவாகைப்பூ, மஞ்சள், மரமஞ்சள் இவைகளின நஸ்யமும் பயனளிக்கும். இடையில் வஸ்திரமின்றி இருந்து கொண்டு காதில் நெய்சட்டிப் பூண்டை தரிப்பதாலும், தும்பைப்பூச் சாற்றைக் கொண்டு அஞ்சனமிடுவதாலும் நான்காம் நாள் முறை ஜ்வரம் விலகும். கன்னிப் பெண் கையால் நூலைத் துண்டித்து அதைக் கொண்டு நாயுருவி வேரைக் கட்டி ஞாயிற்றுக்கிழமை ரக்ஷை கட்டிக்கொள்ள மூன்றும் நாள் முறை ஜ்வரமும் நான்காம் நாள் முறை ஜ்வரமும் விலகும். காக்கைக் கொல்லி, சித்தாமுட்டி, ஞாழல் வேர், கருசலாங்கண்ணி, நாயுருவி இவைகள் ஒவ்வொன்றையும் புஷ்ய நக்ஷத்திரத்தில் தரித்துக் கொள்ள நல்லது. குக்கிலையும் கோட்டானிறக்கையையும் கருப்புத் துணியில் முடித்துத் தூபமிட ஜ்வரம் நிற்கும். கற்றாழை வேர் ஒரு தோலா எடை வென்னீரில் அரைத்துக் கலக்கிக் குடித்து வாந்தி எடுக்க நாட்பட்ட முறை ஜ்வரமும் நின்றுவிடும்.

கடுக்காய் தூளைத் தேனுடனும், வர்த்தமான பிப்பலியும், வெல்லத்துடன் ஜீரகமும், வெல்லத்துடன் திரிபலையும் சாப்பிட விஷம ஜ்வரம் நீங்கும்.

**வர்த்தமான பிப்பலீ:** தினமும் கிரமமாக 3-5-7 அல்லது பத்து திப்பிலிகளை சரீர சக்திக்கேற்றவாறு அதிகப்படுத்திக் கொண்டே வந்து (முதல் நாள் மூன்று, இரண்டாம் நாள் ஆறு, மூன்றும் நாள் ஒன்பது என்றவாறு) பிறகு அதே அளவில் கிரமமாகக் குறைத்துக்கொண்டும் வந்து திப்பிலியை ரஸாயன முறையில் ஸேவித்து பால் உணவு மாத்திரம் உட்கொள்பவனுக்கு ச்வாஸம், காஸம், ஜ்வரம், உதரம், மூலம், வாதரக்தம், க்ஷயம் இவை நீங்கும்.

தினமும் ஐந்து திப்பிலி வீதம் அதிகமாக்கிக்கொண்டு பத்து தினங்கள் சாப்பிட்டு பிறகு தினம் 5 திப்பிலிகள் வீதம் கிரமமாகக் குறைத்துச் சாப்பிட்டு வரலாம். பால் உணவு மாத்திரம் உட்கொள்ள வேண்டும்.

(முதல் முறையில் உடல் நிலையையும் வியாதி நிலையையும் அனுஸரித்து அதிக பக்ஷ அளவைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.)

**பஞ்சஸாரம்:** நெய் தேன் காய்ச்சிய பால், சர்க்கரை, திப்பிலித் தூள் இவ்வைந்தையும் மத்தால் கடைந்து சாப்பிட்டு வர முறை ஜ்வரம், ஹ்ருதய ரோகம், ச்வாஸம், காஸம் க்ஷயம் இவை நீங்கும்.

**நிதிக்திகாதி கஷாயம் :** கண்டங்கத்திரி வேர், சுக்கு, சீந்திற் கொடி இவைகளின் கஷாயத்தை திப்பிலித் தூள் மேம்பொடி சேர்த்துச் சாப்பிட நாட்பட்ட ஜ்வரம், அரோசகம், காஸம், சூலம், ச்வாஸம், அக்னி மந்தம், அர்திதம், பீநஸம் இவை நீங்கும்.

பேய்புடல், அதிமதுரம், கடுகுரோகிணி, கோரைக் கிழங்கு, கடுக்காய் இவைகளின் கஷாயம் அல்லது திரிபலே, சீந்திற்கொடி ஆடாதோடை வேர் இவைகளின் கஷாயம் நல்லது.

திராக்ஷை, கிராம்பு, சுக்கு, லவங்கப்பட்டை, கொத்துமல்லி விதை கடுக்காய், சோம்பு, கோரைக் கிழங்கு, சீந்திற்கொடி, சரக் கொன்னேப் பட்டை இவைகளின் கஷாயம் வாத பித்த ஜ்வரங் களேப் போக்க வல்லது.

**பார்ங்க்யாதி கஷாயம் :** சிறுதேக்கு, கோரைக் கிழங்கு, பர் படகம், சிறுகாஞ்சூரி வேர், சுக்கு, நிலவேம்பு, கோஷ்டம், திப்பிலி கண்டங்கத்திரி வேர், சீந்திற்கொடி இவைகளின் கஷாயம் ஐந்து வித விஷம ஜ்வரங்களேயும் நாட்பட்ட ஜ்வரத்தையும் போக்கும். மற்ருென்று-சிறுதேக்கு, பர்படகம், சுக்கு, ஆடாதோடை வேர், திப்பிலி, நிலவேம்பு, வேப்பம்பட்டை, சீந்திற்கொடி, கோரைக் கிழங்கு, சிறுகாஞ்சூரி வேர் இவைகளின் கஷாயம் எல்லா ஜீர்ண ஜ்வரங்களேயும் தாதுகத ஜ்வரங்களேயும் முறை ஜ்வரங்களேயும் போக்க வல்லது.

சீந்திற்கொடி, நெல்லிமுள்ளி, சுக்கு, கோரைக் கிழங்கு, கண் டங்கத்திரி வேர் இவ்வைந்தின் கஷாயம் தேனும் திப்பிலித் தூளும் சேர்த்துச் சாப்பிட நல்லது. அவ்விதமே சீந்திற்கொடி, கோரைக் கிழங்கு, நெல்லிமுள்ளி இம்மூன்றின் கஷாயம் தேன் விட்டுச் சாப்பிட நல்லது. திராக்ஷை, சீந்திற்கொடி, சுக்கு இவை களின் கஷாயத்தை திப்பிலித் தூள் சேர்த்துச் சாப்பிட சுவாஸம் சூலம், காஸம், அக்னி மந்தம், ஜீர்ண ஜ்வரம், நாவரட்சி இவை விலகும். சிறுகாஞ்சூரி வேர், விலாமிச்சை வேர், கண்டங்கத்திரி வேர், கோரைக் கிழங்கு, அதிமதுரம், கடுக்காய், ஜீரகம், சுக்கு, ஆடாதோடை வேர், சீந்திற்கொடி, அரேணுகம் இவைகளின் கஷாயத்தில் தேனும் திப்பிலித் தூளும் சேர்த்துச் சாப்பிட எரிச்சல், அதிக வியர்வை, உடல் வரளுதல், கிருமி, ரக்த பித்தம், உடல் குளிர்தல், புத்திப் பிரமம், சுவாஸம், சூலம், தாஹம் இவை களுடன் கூடிய முறை ஜ்வரங்கள் விலகும். கோரைக் கிழங்கு நெல்லிமுள்ளி, சீந்திற்கொடி, சுக்கு, கண்டங்கத்திரி இவைகளின் கஷாயம் தேனும் திப்பிலித் தூளும் சேர்த்துச் சாப்பிட நல்லது,

**தார்வ்யாதி கஷாயம் :** மரமஞ்சள், தேவதாரு, வெட்பாலை யரிசி, மஞ்சிட்டி, சரக்கொன்னைப் பட்டை, வட்டத்திருப்பி, கண்டந்திப்பிலி, சுக்கு, நிலவேம்பு, யானைத் திப்பிலி, தார்பூண்டு, பதிமுகம், வசம்பு, கொத்துமல்லி விதை, சுக்கு, கோரைக்கிழங்கு, ஸரளதேவதாரு, முருங்கைப் பட்டை, வெட்டிவேர், கடுக்காய், முள்ளுக்கத்திரி வேர், பர்படகம், தர்ப்பை வேர், கடுகுரோகிணி, நன்னாரிவேர், சீந்திற்கொடி, புஷ்கரமூலம் இவைகளின் கஷாயம் எல்லா விஷம ஜ்வரங்களிலும் நல்லது. [ஆரோக்யதர்பணம்]

**சிருங்க்யாதி (64) கஷாயம் :** கர்கடசிங்கி, பெருங்காயம் நிலவேம்பு, மஞ்சள், கோஷ்டம், அரேணுகம், கடுகுரோகிணி, சித்தரத்தை, சிற்றுமணக்கு வேர், உள்ளிப் பூண்டு, மரமஞ்சள், சரக்கொன்னைப் பட்டை, கடுகு, தார்பூண்டு, செவதை வேர், கொடிவேலி வேர் பட்டை, தகர விதை, நன்னாரி, சீந்திற்கொடி, கொம்பரக்கு, தந்திமூலம், கொத்துமல்லி விதை, வாய்விளங்கம், ஏலம், வேப்பம்பட்டை, குக்கில், ஆடாதோடை வேர், வெட்பாலை அரிசி பாசிப்பயறு, தேவதாரு, சிற்றுமுட்டி வேர், தண்ணீர் விட்டான் கிழங்கு, பிரம்மி, சிறுதேக்கு, ஆனைத் திப்பிலி, சுக்கு, கடுக்காய், சிறுகாஞ்சூரி வேர், பெருங்குரும்பை, செவதை வேர், கண்டந்திப்பிலி, திப்பிலி, கோரைக்கிழங்கு, ஜீரகம், ஓமம், சோம்பு, அகில், சந்தனம், வெட்பாலை பட்டை, செவ்வியம், ஆதண்டம் வேர், வசம்பு, காட்டுமுல்லை வேர், தசமூலம் இந்த 64 சரக்குகளைக் கொண்ட கஷாயம் எல்லா வித ஜ்வரங்களையும் வாதநோய்களையும் போக்கி அக்னியைத் தூண்டி பலமளிக்க வல்லது.

**க்ஷுத்ராதி கஷாயம் :** கண்டங்கத்திரி வேர், சுக்கு, கோரைக் கிழங்கு, பர்படகம், ருத்திரசடை, நிலவேம்பு, வேப்பம்பட்டை, சீந்திற்கொடி, சிறுதேக்கு, சந்தனம், புஷ்கரமூலம், பேய்புடல், கடுகுரோகிணி, ஆடாதோடை வேர், தாமரைத் தண்டு, வெட்பாலையரிசி இவைகளின் கஷாயம் எல்லா விஷம ஜ்வரங்களையும் கண்டிக்கும்.

**சக்ராஹ்வாதி கஷாயம் :** வெட்பாலையரிசி, தகரவிதை, அதிவிடயம், சீந்திற்கொடி, கருநொச்சி, கருசலாங்கண்ணி, சுக்கு, கண்டங்கத்திரி வேர், ஓமம் இவைகளின் கஷாயம் எல்லா குளிர் ஜ்வரங்களையும் போக்கும்.

**ரஸோந கல்கம் :** உள்ளிப்பூண்டை அரைத்து எள்ளுத் தூளுடனோ நல்லெண்ணெய்யுடனோ நெய்யுடனோ சாப்பிட விஷம ஜ்வரம், வாத கப நோய்கள் நீங்கும்.

சித்தரத்தை சுக்கு திப்பிலி இவைகளின் கல்கத்தை வென்னீருடன் சாப்பிட ச்வாஸம் காஸம் அக்னி மந்தம் முறை ஜ்வரம் நீங்கும். ஜீரகம், உள்ளிப் பூண்டு, திரிகடு, வட்டத்திருப்பி இவைகளை அரைத்துக் கல்கமாக்கி குளிர் ஜ்வரமாரம்பிக்கும் போது வென்னீரில் கரைத்து வெல்லம் சேர்த்துச் சாப்பிட நல்லது. துளசிச் சாறு தும்பைப் பூச்சாறு மிளகுத் தூள் சேர்த்துச் சாப்பிட முறை ஜ்வரங்கள் விலகும். மஞ்சள், திப்பிலி, மிளகு, இந்துப்பு இவைகளைத் தூள் செய்து நல்லெண்ணெய் விட்டு அரைத்துக் கண்களிலிடலாம். வசம்பு கடுக்காய் இவைகளைத் தூள் செய்து நெய் கலந்து தூபமிடலாம். ஆட்டுத் தோலும் மயிரும், வசம்பு, கோஷ்டம். குக்கில், வேப்பிலை, தேன் இவைகளைத் தூபமிடலாம். பாம்புச் சட்டை, கடுகு, பெருங்காயம், வேப்பிலை இவைகளைத் தூபமிட விஷம ஜ்வரத்தில் பூதபாதை யில்லாமல் தடுக்கும்.

**அஷ்டாங்க தூபம் :** குக்கில், வேப்பிலை, வசம்பு, கோஷ்டம், கடுக்காய், கடுகு. யவை யரிசி இவைகளைத் தூளாக்கி நெய் கலந்து தூபமிடலாம்.

**மாஹேச்வர தூபம் :** பருத்தி விதை. மயில் தோகை. முள்ளுக் கத்திரி வேர், சிவநிர்மால்யம். சிலாரஸ். லவங்கப்பட்டை, ஜடா மர்ஞ்சி, புனுகு. நாகணம், வசம்பு. தலை மயிர். பாம்புச் சட்டை யானைக் கொம்பு. பெருங்காயம். மிளகு இவை சமனெடை சேர்த்துத் தூபம் தயாரித்துத் தூபமிட எல்லாவித பூத பிசாச பாதைகள் விலகும். ஜ்வரம் தணியும்,

## சூர்ணங்கள்.

**தான்யகாதி சூர்ணம் :** கொத்துமல்லி விதை கிராம்பு, சுக்கு இவைகளின் சூர்ணம் வென்னீருடன் சாப்பிட தருண ஜ்வரம் விலகும். இவைகளின் கஷாயம் அக்னி மந்தம், ச்வாஸம், அஜீர்ணம். விஷம ஜ்வரம் இவைகளைப் போக்கும்.

**கோரோசனதி சூர்ணம் :** கோரோசனை, மிளகு, சித்தரத்தை, கோஷ்டம், திப்பிலி இவைகளின் சூர்ணம் வென்னீருடன் சாப்பிட நல்லது.

**பார்ங்க்யாதி சூர்ணம் ;** சிறுதேக்கு, கர்கடகசிங்கி, செவ்வியம், தாளிசபத்திரி, மிளகு, கண்டந்திப்பிலி இவை வகைக்கு 8 தோலா, சுக்கு 24 தோலா, யானைத்திப்பிலி 8 தோலா, திப்பிலி 8 தோலா, ஏலரிசி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, விலாமிச்சை வேர் இவை வகைக்கு 4 தோலா, மூங்கிலுப்பு 16 தோலா, எல்லாவற்றிற்கும் சமம் சர்க்கரை, இவைகளின் சூரணம் எட்டு

வகை ஜ்வரத்தையும் போக்கும், வீக்கம், வயிற்று வலி, வயிறு உப்புசம் இவைகளைப் போக்க வல்லது.

**அனந்தாதி சூர்ணம் :** நன்னாரி, வெட்டி வேர், கோரைக் கிழங்கு, சுக்கு, கடுகுரோஹிணி இவைகளின் சூர்ணத்தை ஸூர்யோதயத்திற்கு முன் வென்னீருடன் சாப்பிட ஜ்வர மிறங்கும். பசியும் அதிகமாகும்.

**திராக்ஷாதி சூர்ணம் ;** திராக்ஷை, சீந்திற்கொடி, பூலாங்கிழங்கு, கர்கடசிங்கி, கோரைக்கிழங்கு, செஞ்சந்தனம், சுக்கு, கடுகு ரோஹிணி, வட்டத்திருப்பி, நிலவேம்பு, காஞ்சூரி வேர், விலா மிச்சை வேர், பதிமுகம், கொத்துமல்லி விதை, வெட்டி வேர், கண்டங்கத்திரி வேர், புஷ்கரமூலம், வேப்பம் பட்டை ஆக 18 சரக்குகளையும் இடித்துத் தூள் செய்து சாப்பிட நாட்பட்ட ஜ்வரம் அருசி, ச்வாஸம், காஸம், வீக்கம் இவைகளைப் போக்கும்,

**தாத்ரியாதி சூர்ணம் :** நெல்லிமுள்ளி, கடுக்காய், இந்துப்பு, கொடிவேலி வேர் பட்டை, திப்பிலி இவைகளின் சூர்ணத்தை வென்னீருடன் சாப்பிட ஜீர்ண ஜ்வரம், அரோசகம், மந்தாக்னி, மலச் சிக்கல் முதலியன தீரும்.

**தாளீசாதி சூர்ணம். — தாளீசாதி வடி :** தாளீசபத்திரி ஒரு தோலா, மிளகு 2 தோலா, சுக்கு 3 தோலா, திப்பிலி 4 தோலா, மூங்கிலுப்பு 5 தோலா, ஏலரிசி ½ தோலா, லவங்கப் பட்டை ½ தோலா, சர்க்கரை 32 தோலா ; இவைகளைச் சூர்ணம் செய்து கொள்ளவும். பசியைத் தூண்டி ஜீரணத்தைச் சரியாக்கி காஸம் ச்வாஸம், ஜ்வரம், வாந்தி, பேதி, வீக்கம், வயிறு உப்புசம், மண்ணீரல் வீக்கம், கிரஹணீ, பாண்டு இவைகளைப் போக்க வல்லது. இதே யோகத்தைச் சர்க்கரையைப் பாகாக்கிக் கொண்டு சூர்ணத்தைப் போட்டுக் கிளறி மாத்திரையாக்கிக் கொள்ள தாளீசாதி வடியாகும்.

**ஸிதோபலாதி சூர்ணம் :** சர்க்கரை 16 தோலா, மூங்கிலுப்பு 8 தோலா, திப்பிலி 4 தோலா, ஏலரிசி 2 தோலா, லவங்கப் பட்டை ஒரு தோலா. இவைகளைத் தூள் செய்து தேனும் நெய்யும் சேர்த்துச் சாப்பிடவும். ச்வாஸம், காஸம், க்ஷயம், கை கால்களில் எரிச்சல், அக்னி மந்தம், நாவில் ருசியின்மை, பக்க வலி, அருசி ஜ்வரம், மேனேக்கிய ரக்த பித்தம் இவைகளைப், போக்க வல்லது.

**திரிபலா பிப்பலீ :** கடுக்காய், நெல்லிமுள்ளி, தான்றிக்காய், திப்பிலி இவைகளைத் தூள் செய்து தேன் சேர்த்துச் சாப்பிட காஸம் ச்வாஸம்; ஜ்வரம் நீங்கும். மல மிளகிப் போகும். பசி தூண்டப்பெறும்.

**கட்பலாதி சூர்ணம்:** கர்ய்பல், கோரைக் கிழங்கு, கடுகு ரோகிணி, பூலாங்கிழங்கு, கர்கடசிருங்கி, புஷ்கரமூலம் இவை களின் தூளைத் தேனும் இஞ்சிச் சாறும் சேர்த்துச் சாப்பிட ஜ்வரம், காஸம், சுவாஸம், அருசி போகும். தொண்டைக்கு நல்லது. வயிற்றுப் பொறுமல், வலி, வாந்தி, க்ஷயம் இவை நீங்கும்.

**லகுஸுதர்சன சூர்ணம்:** சீந்திற்கொடி, கண்டந்திப்பிலி, திப்பிலி, கடுகுரோகிணி, கடுக்காய், சுக்கு, கிராம்பு, வேப்பம் பட்டை, சந்தனத் தூள் இவை வகைக்குச் சம எடை, எல்லாவற் றிற்கும் பாதி நிலவேம்பு இவைகளைத் தூள் செய்து கொண்டு சாப்பிட எல்லா ஜ்வரங்களும் நீங்கும். (யோக ரத்ன ஸமுச்சயம்)

**ஸுதர்சன சூர்ணம்:** (பேடர் கூறியது) தாளீசபத்திரி, திரி பலை, திரிகடு, லவங்கப்பட்டை, தார்பூண்டு, செவதை வேர், பெருங்குரும்பை, கண்டந்திப்பிலி, மஞ்சள், மரமஞ்சள், பூலாங் கிழங்கு, சிற்றுமுட்டி வேர், கோஷ்டம், கண்டங்கத்திரி வேர், முள்ளுக் கத்திரி வேர், கோரைக் கிழங்கு, பர்படகம், வேப்பம் பட்டை, புஷ்கரமூலம், சிறுதேக்கு, ஓமம், சந்தனத் தூள், செவ் யம், கொடிவேலி வேர் பட்டை, வெண்தாமரை, தகர விதை, விலாமிச்சம் வேர், வாய்விளங்கம், வசம்பு, காஞ்சூரி வேர், வெட் பாலை யரிசி, சங்கங்குப்பி வேர், வெட்பாலைப் பட்டை, தேவதாரு, வெட்டி வேர், முருங்கை விதை, பேய்புடல், கடுகுரோகிணி, தாமரை இலை, அதிவிடயம், காகோலி, தேன், குங்குமப்பூ மூங்கி லுப்பு, கிராம்பு, ஓரிலை, சிலாஜது, மூவிலை வேர், சாமந்திப்பூ, இவை வகைக்குச் சமனெடை, எல்லாவற்றிற்கும் சமம் நிலவேம்பு இவைகளைச் சூர்ணம் செய்து உபயோகிக்கவும். கப வாத நோய் களிலும் தனிப்பட்ட ஜ்வரங்களிலும் ஸம்ஸர்க—ஸந்நிபாத ஜ்வரங் களிலும் விஷம ஜ்வரங்களிலும் நல்லது. நாவரட்சி, மயக்கம், ஞாபகமின்மை, ஏக்கம், சோம்பல், அசதி, ச்வாஸம், காஸம், அரோசகம், பாண்டு, காமாலை, விலாவலி, முதுகு வலி- முழங்கால் வலி, இடுப்புப் பிடிப்பு, மென்னிப் பிடிப்பு, தலை வலி இவை களுடன் கூடிய ஜ்வரங்களில் மிகவும் நல்லது, இடுவிஷம், பல தேசத்து ஜலத்தைக் குடிப்பதால் ஏற்படும் நோய்கள், ஸ்திரீ களின் மாதவிடாய் தோஷங்கள் இவைகளைப் போக்கும். வென்னீருடன் சாப்பிடலாம். குளிர்ந்த ஜலத்துடன் சாப்பிட பித்த விகாரங்கள் போகும்.

**ஸுதர்சன சூர்ணம்** (சார்ங்கதரஸம்ஹிதை) திரிபலை, மஞ்சள், மரமஞ்சள், கண்டங்கத்திரி வேர், முள்ளுக்கத்திரி வேர், பூலாங் கிழங்கு, திரிகடு, கண்டந்திப்பிலி, பெருங்குரும்பை வேர்,

சீந்திற்கொடி, காஞ்சூரி வேர், கடுகுரோகிணி, பர்படகம், கோரைக் கிழங்கு, தார்பூண்டு, வெட்டிவேர், வேப்பம்பட்டை, புஷ்கரமூலம், அதிமதுரம், வெட்பாலைப்பட்டை, ஜீரகம், வெட்பாலையரிசி, சிறு தேக்கு, முருங்கை விதை, படிக்காரம் பொரித்தது, வசம்பு, லவங்கப்பட்டை, பதிமுகம், விலாமிச்சை வேர், சந்தனத்தூள், அதிவிடயம், சிற்றுமுட்டி வேர், ஓரிலை வேர், மூவிலை வேர், வாய் விடங்கம், அஸாரூன், கொடிவேலிவேர் பட்டை, தேவதாரு, செவ்யம், பேய்புடல், ஜீவகம், ருஷபகம், கிராம்பு, மூங்கிலுப்பு, தாமரைத் தண்டு, காகோலி, பச்சிலை, ஜாதிபத்திரி, தாளீச பத்திரி, இவை ஸம எடை, எல்லாவற்றிற்கும் பாதி அளவு நில வேம்பு-இவைகளைத் தூள் செய்து கொள்ளவும். எட்டு வகை ஜ்வரம், தாதுகதஜ்வரம், மானஸஜ்வரம், ஜீர்ணஜ்வரம், விஷம ஜ்வரம், மயக்கம், அசதி, தலை சுற்றுதல், நாவரட்சி, ச்வாஸம், காஸம், பாண்டு, ஹிருதய ரோகம், காமாலை, இடுப்பு வலி, முதுகு வலி, முழங்கால் வலி, விலா வலி இவைகளைப் போக்கும். குளிர்ந்த ஜலத்துடன் சாப்பிட நல்லது.

✲ **ஸுதர்சன சூர்ணம்** : (பைஷஜ்ய ரத்னவளி) மஞ்சள் நிறமுள்ள சந்தனம், மஞ்சள், தேவதாரு, வசம்பு, கோரைக்கிழங்கு, கடுக்காய்தோல், சிறுகாஞ்சூரி வேர், கர்கடசிங்கி, கண்டங்கத்திரி வேர், சுக்கு, தார்பூண்டு, பர்படகம், வேப்பம்பட்டை, கண்டந்திப்பிலி, வெட்டிவேர், பூலாங்கிழங்கு, புஷ்கரமூலம், திப்பிலி, பெருங்குரும்பை வேர், வெட்பாலைப் பட்டை, அதிமதுரம், முருங்கை விதை, அல்லிக்கிழங்கு, வெட்பாலையரிசி, தண்ணீர் விட்டான் கிழங்கு, மாமஞ்சள், செஞ்சந்தனம், பதிமுகம், ஸரளதேவதாரு, விலாமிச்சை வேர், லவங்கப்பட்டை, பொரித்த படிக்காரம், ஓரிலைவேர், மூவிலைவேர், ஓமம், அதிவிடயம், வில்வப் பிஞ்சு, மிளகு, பச்சிலை, நெல்லி முள்ளி, கடுகுரோகிணி, கொடிவேலிவேர் பட்டை, பேய்ப்புடல் இவை வகைக்குச் சம எடை; எல்லாவற்றிற்கும் பாதி நிலவேம்பு இவைகளின் சூர்ணம், எல்லா தோஷ ஜ்வரங்கள், முறை ஜ்வரங்கள், [1] ப்ராகிருத ஜ்வரம், [2] வைக்ருத ஜ்வரம், சாதாரண ஜ்வரம், கடும் ஜ்வரம், [3] அந்தர்வேக ஜ்வரம்,

---

1. ப்ராகிருதஜ்வரம் : வர்ஷருதுவில் வாத ஜ்வரமும், சரத்ருதுவில் பித்த ஜ்வரமும், வஸந்தருதுவில் கபஜ்வரமும் ஏற்பட்டால் ப்ராகிருதஜ்வரம். இவை இயற்கையை ஒட்டி அதிகப்படும் வாதாதிகளால் ஏற்படுபவை.

2. வைக்ருதஜ்வரம் : வர்ஷருதுவில் பித்த-கப ஜ்வரமும், வஸந்தருதுவில் வாத-பித்த ஜ்வரமும், சரத்ருதுவில் வாத-கப ஜ்வரமும் ஏற்படுவது இயற்கைக்கு எதிராக (அதிகமாகக் கூடாத) வாதாதிகளால் ஏற்படக் கூடியது.

3. அந்தர்வேகஜ்வரம் : ஜ்வரத்தின் வேகம் வெளிப்பக்கம் தெரியாது. உட்காங்கை மிகுதி, நாவரட்சி முதலியன குறைந்திருக்கும். கை கால் பூட்டு களில் வலி மிகுதி, வியர்வையின்மை, மல மூத்திரக் கட்டு இவை அறிகுறிகள்.

[1] பஹிர்வேகஜ்வரம், ஸாமஜ்வரம், நிராமஜ்வரம், கெட்ட ஜலத்தால் ஏற்பட்டதும், விரோதமுள்ள மருந்துகள் உண்பதால் ஏற்பட்டதுமான ஜ்வரம், குலைக்கட்டி, ஈரல் கட்டி, குல்மம் இவைகளைப் போக்க வல்லது.

**லவங்காதி சூர்ணம்:** கிராம்பு, ஜாதிக்காய், திப்பிலி இவை வகைக்கு ஒரு தோலா, மிளகு 2 தோலா, சுக்கு 16 தோலா, எல்லாவற்றிற்கும் ஸமம் சர்க்கரை—இவைகளின் சூர்ணம் வாதத்தால் ஏற்படும் உபத்ரவங்களைத் தணிக்க நல்லது. காஸம், ஜ்வரம், அருசி, பிரமேஹங்கள், குல்மம், ச்வாஸம், அக்னி மந்தம், கிரஹணி இவைகளைப் போக்க வல்லது.

**லவங்காதி சூர்ணம்:** (சார்ங்கதரஸம்ஹிதை) கிராம்பு, சூடம், ஏலரிசி, லவங்கப்பட்டை, சிறு நாகப்பூ, ஜாதிக்காய், விலாமிச்சை வேர், சுக்கு, கருஞ்சீரகம், அகாரகில், மூங்கிலுப்பு, ஜடாமாஞ்சி, நீலோத்பலக்கிழங்கு, திப்பிலி, சந்தனம், அஸாரூன், வெட்டிவேர், வால் மிளகு இவை வகைக்கு சமனெடை, எல்லாவற்றிற்கும் பாதி சர்க்கரை. இவைகளின் சூர்ணம் பசி ருசி, திருப்தி, தாது புஷ்டி, பலமளிக்க வல்லது. ஹிருதய ரோகம், தொண்டை நோய், காஸம், விக்கல், பீநஸம், ராஜயக்ஷ்மா, தமகச்வாஸம், அதிஸாரம், உரக்ஷதம், பிரமேஹம், அருசி, குல்மம் இவைகளில் மிகவும் உதவும்.

✲ **நிம்பாதி சூர்ணம்:** (பாவப்ரகாசம்) வேப்பிலை 10 தோலா, கடுக்காய் தோல், தான்றிக்காய் தோல், நெல்லிமுள்ளி, சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, கந்தக வெடியுப்பு, ஸௌவர்சல உப்பு வகைக்கு ஒரு தோலா, ஓமம் 5 தோலா யவச்சாரம் 2 தோலா இவைகளை இடித்துத் தூள் செய்து தினம் காலை ($\frac{1}{8}$-$\frac{1}{2}$ தோலா அளவு) சாப்பிட எல்லா முறை ஜ்வரமும் தாது ஜ்வரங்களும் நீங்கும்.

✲ **ஜ்வரபைரவ சூர்ணம்:** (பைஷஜ்யரத்னாவளி) சுக்கு, தார்பூண்டு, வேப்பம்பட்டை, சிறுகாஞ்சூரி வேர், கடுக்காய், கோரைக்கிழங்கு, வசம்பு, தேவதாரு, கண்டங்கத்திரி, கர்கடசிங்கி, தண்ணீர்விட்டான் கிழங்கு, பர்படகம், கண்டந்திப்பிலி, பேய் தும்மட்டிக்காய் அல்லது வேர், புஷ்கரமூலம், பூலாங்கிழங்கு, மருள்வேர், திப்பிலி, மஞ்சள், மரமஞ்சள், வெள்ளைலோத்திரப்பட்டை, சந்தனம், கோரைக்கிழங்கு, வெட்பாலையரிசி, வெட்பாலைப்பட்டை, அதிமதுரம், கொடிவேலிவேர் பட்டை, கல்யாண முருங்கைப் பட்டை, சிற்றாமுட்டி வேர், அதிவிடயம், கடுகுரோகிணி, நிலப்பனைக்கிழங்கு, பதிமுகம், ஓமம், ஓரிலை, மிளகு, சீந்திற்கொடி, வில்வப்பிஞ்சு அல்லது வேர், வெட்டிவேர், படிக்காரம், லவங்கப்பத்திரி,

1. பஹிர்வேகஜ்வரம்: வெளிச் சூடு மிகுந்து காணும். மற்ற லக்ஷணங்களும் முன்போலவே இருக்கும்.

லவங்கப்பட்டை, நெல்லிமுள்ளி, மூவிலைவேர், பேய்புடல், சுத்த கந்தகம், சுத்த ரஸம், அயபஸ்மம், அப்ரக பஸ்பம், சுத்த மனேசிலை இவை வகைக்கு ஸம அளவு, எல்லாவற்றிற்கும் பாதி நிலவேம்பு; இவைகளைச் சூர்ணம் செய்து கொள்ளவும். [ரஸத்தையும் கந்தகத்தையும் சேர்த்து அரைத்துக் கஜ்ஜலி செய்துகொண்டு பிறகு மனேசிலை பஸ்மங்கள் இவைகளைக் கலந்து அரைத்துப் பிறகு சிறிது சிறிதாக மற்ற சூர்ணத்தையும் சேர்த்து அரைத்து நன்கு கலந்துகொள்ளவேண்டும்]. இதுவும் ஸுதர்சன சூர்ணத் (பை. ர.) தின் குணமுள்ளது. மிகவும் சிறந்தது. அக்னிமந்தம், உதரம், அந்திர விருத்தி (குடல் இறக்கம்) பாண்டு, தலை வலி, ஸர்வாங்க வீக்கம், வாத வியாதி இவைகளில் விசேஷமான குணத்தை அளிக்க வல்லது.

✱ **ஜ்வரநாகமயூர சூர்ணம்:** (பைஷஜ்ய ரத்னவளி) அயஸ்லிந்தூரம், அப்ரக பஸ்மம், பொரித்த வெங்காரம், தாம்ரபஸ்மம், தாளக பஸ்மம், வெள்ளீய பஸ்மம், ரஸம், கந்தகம், முருங்கை விதை, திரிபலை, சந்தனம், அதிவிடயம், வட்டத்திருப்பி, வசம்பு, மஞ்சள், மரமஞ்சள், விலாமிச்சை வேர், கொடிவேலி வேர் பட்டை, தேவதாரு, பேய்புடல், ஜீவகம், ருஷபகம், (கிடைக்காவிடத்து நிலப்பூசனிக் கிழங்கு-பால் முதுக்கன் கிழங்கு) ஜீரகம், தாளீசபத்திரி, மூங்கிலுப்பு, கண்டங்கத்திரி வேரும் காயும், பூலாங்கிழங்கு, பச்சிலை, திரிகடு, சீந்திற் சர்க்கரை, கொத்துமல்லி விதை, கடுகுரோஹிணி, பர்படகம், கோரைக்கிழங்கு, வெட்டிவேர், வில்வவேர், அதிமதுரம் இவை வகைக்கு ஒவ்வொரு தோலா, கருஞ்சீரகம் 4 தோலா, பனைவேர் க்ஷாரம் 4 தோலா, மஞ்சள் பூவுள்ள குறுந்தோட்டி 4 தோலா, நிலவேம்பு 4 தோலா, கஞ்சா 4 தோலா இவைகளை முறைப்படி சேர்த்துத் தூள்செய்து கொள்ளவும். [முதலில் ரஸகந்தகங்களை கஜ்ஜலி செய்துகொண்டு, பிறகு பஸ்மங்களைச் சேர்த்துப் பிறகு மற்ற சூர்ணங்களையும் சிறிது சிறிதாகச் சேர்த்து அரைத்து எடுத்துக் கொள்ளவும்]. 15 யவ அளவில் ஆரம்பித்து தினம் 3 யவ அளவு அதிகமாக்கிக்கொண்டே வந்து ¼ தோலா வரை சாப்பிடலாம். ஸந்ததம் முதலிய முறை ஜ்வரங்கள், க்ஷய ஜ்வரம், தாது ஜ்வரம், காம-சோக-பூதாவேச-அபிசார-சீத-தாஹ ஜ்வரங்கள், நாட்பட்ட விஷம ஜ்வரங்கள், ஈரல் குலைக்கட்டி, உதரம், காமலை, பாண்டு, வீக்கம், மயக்கம், தலை சுற்றுதல், நாவரட்சி, இருமல், சூலம், வயிறு உப்புசம், க்ஷயம், குல்மம், ஆமவாதம், பிடரி வலி, இடுப்பு வலி, முழங்கால் விலாப்புற வலி—இவைகளில் நல்லது. குளிர்ந்த ஜலம் அனுபானமாகச் சாப்பிடவேண்டும். வென்னீருடன் சாப்பிடக் கூடாது.

**குரண்டகாதி லேஹ்யம்:** மஞ்சள் பூவுள்ள கருங்குறிஞ்சி வேர் 64 தோலா இடித்து 3¼ படி ஜலத்திலிட்டுக் கஷாயம் வைத்து ⅛ பங்கு மீதமாகும்போது இறக்கி வடிகட்டி அதை மறுபடியும் இளந்தீயிலிட்டு மூன்றில் ஒரு பங்கு மீதமாகும்போது கீழ் கண்ட

சரக்குகளின் சூர்ணத்தை அதில் கலக்கிக்கொள்ளவும். ஏலரிசி, கிராம்பு, திரிபலை, செவ்யம், பச்சிலை, சிறுநாகப்பூ, சிறுதேக்கு, கண்டந்திப்பிலி, வட்டத்திருப்பி, திப்பிலி, கொடிவேலி வேர் பட்டை, கோஷ்டம், இலந்தைக் கொட்டை, ரஸாஞ்சனம், ஓமம், பிரண்டை, வாய்விளங்கம், ஜீரகம், கருஞ்சீரகம், வெட்பாலையரிசி, கோரைக்கிழங்கு, பெருஞ்ஜீரகம், இந்துப்பு, கடுகுரோஹிணி, அதிவிடயம், பெருங்குரும்பை வேர், புங்கம்பட்டை, பெருவாகை வேர், வசம்பு இவை வகைக்கு சமனெடை சேர்த்துத் தூளாக்கி (சுமார் 32 தோலா) அதை முன் சொன்ன பாகத்தில் போட்டுக் கிளறி லேகியமாக்கிக் கொள்ளவும். நெல்லிக்காய் அளவு 21 தினங்கள் வெந்நீருடன் சாப்பிட்டு வர எல்லா ஜ்வரங்களும், அக்னி மந்தம், அருசி முதலானவைகளும் தாதுகதஜ்வரங்களும் போம். ச்வாஸம், காஸம், தொண்டை நோய் போகும்.

## கிருதங்கள் [1]

**கிருதங்கள் கொடுக்கவேண்டிய நிலை:** கஷாயங்கள், வமன மருந்துகள், லங்கனம், பத்திய உணவு—இவ்வளவு கொடுத்தும் ஜ்வரம் தணியாதபோது, அவனுக்கு உள் வரட்சி மிகுந்து காணப் பட்டால், அப்பொழுது நெய் மிகவும் குணம் தரவல்லது. கபம் குறைந்து வாதமும் பித்தமும் மிகுந்த நிலையில், தோஷபாகம் ஏற்பட்ட பின் கொடுக்க அமிருதமாகும். இதற்கு மாறுபட்டுள்ள நிலையில் கொடுக்க விஷம் போன்று கெடுதல் செய்யும்.

**பஞ்சதிக்த கிருதம்:** ஆடாதோடை வேர் பட்டை, வேப்பம் பட்டை, சீந்திற்கொடி, முள்ளுக்கத்திரி வேர், பேய்புடல்—இவை களின் கஷாயம் 4 பங்கு நெய் ஒரு பங்கு, ஆடாதோடை முதலிய வைகளின் கல்கம் கால் பங்கு—இவைகளைக்கொண்டு தயாரித்த நெய் விஷம ஜ்வரம், பாண்டு, குஷ்டம் விஸர்பம், கிருமி, மூலம் இவைகளைப் போக்க வல்லது.

**அமிருதாதி கிருதம்:** சீந்திற்கொடி, திரிபலை, பேய்புடல், காஞ்சூரி வேர் இவைகளின் கஷாயமும் கல்கமும் முன்போல;

---

1. கிருதங்கள் தயாரிக்கும் முன் நெய்க்கு மூர்ச்சனை என்னும் ஸம்ஸ்காரம் செய்வது வழக்கம். நெய்யிலுள்ள கெடுதல்கள் இதனால் அகலும். செய்முறை :- நெய் 64 தோலா எடுத்து ஈயம் பூசிய கடாயிலிட்டு அடுப்பிலேற்றி நன்கு சூடாக்கிக் கீழிறக்கிக் கொள்ளவும். ஆறிய பின், அதில் கடுக்காய் தோல், தான்றிக்காய் தோல், நெல்லிமுள்ளி, கோரைக்கிழங்கு, மஞ்சள். துரிஞ்சிப்பழச்சாறு இவை வகைக்கு ஒரு பலம் எடுத்து அரைத்துக் கலக்கி இளந்தீயிலிட்டு நுரையும் அலையும் அடங்கும் வரை காய்ச்சி வடிகட்டி எடுத்துக் கொள்ளவும். இவ்விதம் தயாரித்த பின்னரே நெய்யை யோகங்கள் தயாரிக்க உபயோகிப்பது நல்லது. நெய்யில் உள்ள தோஷங்கள் விலகி, நெய் தன்னுடன் சேரும் சரக்குகளின் ஸாரத்தை ஏற்கத் தகுதி பெறுகிறது.

பசும்பால் நான்கு பங்கு, நெய் ஒரு பங்கு; தயாரித்த கிருதம் விஷம ஜ்வரம், க்ஷயம், குல்மம், அருசி, காமலை இவைகளைப் போக்க வல்லது.

[1] **ஷட்பல கிருதம் :** திப்பிலி, கண்டந்திப்பிலி, செவ்யம், கொடிவேலி வேர் பட்டை, இஞ்சி, இந்துப்பு இவை வகைக்கு 4 தோலா, நெய் 64 தோலா, பால் $1\frac{5}{8}$ படி (ஜலம் பாகத்திற்காக $1\frac{5}{8}$ படி) இவைகளுடன் தயாரித்த நெய் விஷம ஜ்வரம், அக்னி மந்தம், அருசி இவைகளைப் போக்க வல்லது.

**மஹாஷட்பல கிருதம் :** ஆவல் பட்டை, கொடிவேலிவேர் பட்டை, திப்பிலி, கண்டந்திப்பிலி, செவ்யம், கொடிவேலிவேர் பட்டை, சுக்கு, கல்லுப்பு, ஜீரகம், கருஞ்சீரகம், வெடியுப்பு, யவச்சாரம், கந்தக வெடியுப்பு, பெருங்காயம், கொட்டக்கரந்தை வேர், இந்துப்பு, இவை வகைக்கு 2 தோலா கல்கம்; இதற்கு நான்கு பங்கு நெய்; நெய்க்கு நான்கு பங்கு இஞ்சிச்சாறு; புளித்த காடி நான்கு பங்கு இவைகளை நெய் பாக முறைப்படி காய்ச்சி சாப்பிடவும். அரோசகம், அக்னிமந்தம், மண்ணீரல் பெருத்தல் ஜ்வரம், ச்வாஸம் இவை போகும்.

❊ **பிப்பல்யாதி கிருதம் :** (பைஷஜ்ய ரத்னவளி) திப்பிலி, சந்தனம், கோரைக்கிழங்கு, விலாமிச்சை வேர், கடுகுரோகிணி, வெட்பாலையரிசி, கீழாநெல்லி, நன்னாரிவேர், அதிவிடயம், ஓரிலை வேர், திராக்ஷை, நெல்லி முள்ளி, வேப்பிலை, தார்பூண்டு, கண்டங்கத்திரி வேர் இவைகளின் கல்கம், கல்கத்திற்கு நான்கு பங்கு நெய்; (நெய்க்கு நான்கு பங்கு ஜலம்) சேர்த்துக் காய்ச்சிய கிருதம் நாட்பட்ட ஜ்வரத்தையும், க்ஷயம், ச்வாஸம், விக்கல்,

---

1. க்ஷீரஷட்பல கிருதம் என்று இதற்கு மற்ற நூல்களில் பெயர் காணப்படுகின்றது. நெய்க்கு நான்கு பங்கு பால் சேர்க்கப்படும்போது, நெய் பாகம் நன்ருக அமைவதற்காக ஜலமும் நான்கு பங்கு சேர்ப்பது நல்லது. வேறு திரவமில்லாது ஸ்வரஸங்களும் பாலும் மட்டும் சேர்த்துக் காய்ச்சப்படும் நெய் செய்முறைகளில் ஜலம் நான்கு பங்கு சேர்ப்பது பொதுவான வழக்கம், ஸுச்ருத உதர சிகித்ஸையிலும், சரக குல்ம சிகித்ஸையிலுமுள்ள க்ஷீரஷட்பல கிருதத்தில் நெய்க்குச் சமம் பால் சேர்க்கச் சொல்லியிருப்பதும் கவனிக்கத் தக்கது. அங்கும் பொது முறைப்படி நான்கு பங்கு ஜலம் சேர்ப்பது பாகம் நன்கு அமைய உதவும், பைஷஜ்ய ரத்னவளி ஆசிரியர், இந்த யோகத்தில் மூலத்தில் நெய்க்குச் சமம் பால் சேர்க்கக் கூறிவிட்டு, பிறகு வேறு திரவங்கள் சேர்க்கப்படாமையால் நான்கு பங்கு பால் சேர்க்கலாம் என விவரித்திருப்பது யோசிக்கத் தக்கதே. பால் ஒரு பங்கு சேர்த்தாலும் நான்கு பங்கு சேர்த்தாலும், ஜலமும் நான்கு பங்கு சேர்ப்பது நல்லதே.

स्वरसक्षीरमंगल्यैः स्नेहो यत्रेरितः क्वचित् ।
जलं चतुर्गुणं तत्र वीर्याधानार्थमावपेत् ॥

தலை வலி, அருசி, உடல் காங்கை, விஷமமான அக்னி இவைகளில் மிகவும் நல்லது. சில நூல்களில் நெய்க்கு சமம் பால் சேர்த்து இதைத் தயாரிக்கச் சொல்லப்படுகின்றது.

✳ **தசமூல ஷட்பல கிருதம் :** (பைஷஜ்ய ரத்னுவளி) நெய் (64 தோலா) பசுவின் பால் (64 தோலா) தசமூல கஷாயம் [1] (256 தோலா) திப்பிலி, கண்டந்திப்பிலி, செவ்யம், கொடிவேலிவேர் பட்டை, சுக்கு, யவச்சாரம் இவை வகைக்கு 4 தோலா. இவைகளைக்கொண்டு தயாரித்த நெய் ஜ்வரம், காஸம், அக்னி மந்தம், மண்ணீரல் பெருக்கம், பாண்டு, வாதபித்த கப வியாதிகள் இவைகளில் நல்லது.

✳ **வாஸாதி கிருதம் :** (பைஷஜ்ய ரத்னுவளி) ஆடாதோடை வேர், சீந்திற்கொடி, கடுக்காய், நெல்லிமுள்ளி, தான்றிக்காய், தார்பூண்டு, சிறு காஞ்சூரி வேர் இவைகளின் கஷாயம் 128 தோலா, பசுவின் பால் 128 தோலா, நெய் 64 தோலா, கண்டந்திப்பிலி, திராக்ஷை, சந்தனம், அல்லிக் கிழங்கு, சுக்கு இவைகளின் கல்கம் 16 தோலா இவைகளை கிருதபாக முறைப்படி காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும். இதுவும் நாட்பட்ட ஜ்வரங்களில் நல்லது.

✳ **குடூச்யாதி கிருதங்கள் :** (பை. ர.) சீந்திற்கொடி, திரிபலை, ஆடாதோடை, திராக்ஷை, சிற்றாமுட்டி வேர் இவ்வைந்தைக் கொண்டும் தனித் தனியாக கிருதம் தயாரித்துக்கொண்டு சாப்பிட ஜ்வரம் தீரும். (தயாரிக்கும் முறை :- சீந்திற்கொடியின் கஷாயம், 256 தோலா, நெய் 64 தோலா· சீந்திற்கொடி கல்கம் 64 தோலா, கிருதபாக முறைப்படி தயாரிக்கவும், இவ்விதமே மற்றவைகளையும் தயாரிக்கவும்).

## தைலங்கள் [2]

**அச்வகந்தாதி தைலம் :** [3] அமுக்கராக்கிழங்கு, சித்தாமுட்டி வேர், கொம்பரக்கு இவை வகைக்கு 64 தோலா எடுத்து இடித்து

---

1. தோலாக் கணக்கில் திரவ அளவு: ஒரு படி ஜலம்-160 தோலா-64 அவுன்ஸ் : ஒரு அவுன்ஸ் இரண்டரைத் தோலா.

2. தைலங்கள் தயாரிக்கும் முன் சேர்க்கும் நல்லெண்ணெய்யிலுள்ள கெடுதல்களை யகற்ற தைல மூர்ச்சனை செய்வதுண்டு. அதன் வழி பின் வருமாறு :- நல்லெண்ணெய் 64 தோலாவைக் கடாயிலிட்டு நன்கு சூடாக்கி நுரை மறையும் வரை வைத்திருந்து ஆறவிடவும் பிறகு அதில் மஞ்சிட்டி' கடுக்காய், தானிக்காய், நெல்லிமுள்ளி, கோரைக்கிழங்கு, மஞ்சள், விலாமிச்சை வேர், வெள்ளை லோத்திரப்பட்டை, தாழம்பூ, ஆலம் மொக்கு இவைகளை வகைக்கு சம எடை அளவில் மொத்தம் 16 தோலா எடுத்து ஜலம் விட்டு அரைத்துக் கலக்கி ஜலம் சுண்டும் வரை காய்ச்சி, மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டிக்கொள்ளவும். இவ்விதம் எடுத்த நல்லெண்ணெய்யில் தயாரித்த தைலங்கள் மிகவும் நல்ல குணமளிக்கும்,

3. இதை அச்வகந்திபலாலாக்ஷாதி — பலாச்வகந்நாதி என்றும் குறிப்பிடுவர்.

ஜலம் 6¼ படி விட்டு அதன் கால் பங்கு மீதமாகக் கஷாயமாக்கி வடிகட்டிக்கொள்ளவும். நல்லெண்ணெய் 96 தோலா, தயிர் தெளிவு 384 தோலா ; அமுக்கராக்கிழங்கு, மஞ்சள், மரமஞ்சள், அரேணுகம், கோஷ்டம், கோரைக்கிழங்கு, சந்தனம், கஸ்தூரி, மஞ்சள், கடுகுரோகிணி, சதகுப்பை, கொம்பரக்கு, மருள் வேர், முள்ளங்கி விதை, தேவதாரு, மஞ்சிட்டி, அதிமதுரம், விலாமிச்சை வேர், நன்னாரி இவை வகைக்கு ஸமனெடை சேர்த்து 24 தோலா கல்கமாக அரைத்துக் கலக்கித் தைலம் காய்ச்சவும். இதன் அப்பியங்கத்தால் உட்காங்கை, ஜ்வரங்கள் நீங்கும். எல்லா தாதுக்களும் புஷ்டியடையும்.

**ஷட்தக்ர தைலம் :** [1] ஸர்ஜக்ஷாரம், சுக்கு, கோஷ்டம், மருள் வேர், கொம்பரக்கு, மஞ்சள், மஞ்சிட்டி இவை ஸம அளவு சேர்த்து 16 தோலா கல்கம், நல்லெண்ணெய் 64 தோலா, வெண்ணெய் எடுக்காத பசுவின் மோர் [2] 384 தோலா — இவைகளை விட்டுக் காய்ச்சிய தைலம், குளிர் முறை ஜ்வரம், தாப முறை ஜ்வரம் இவைகளில் மிகவும் நல்லது.

**லதுலாக்ஷாதி தைலம் :** கொம்பரக்கு, மஞ்சள், மஞ்சிட்டி இவைகளின் கல்கம் 16 தோலா, நல்லெண்ணெய் 64 தோலா, காடி 384 தோலா இவைகளைக்கொண்டு தயாரித்த தைலம் குளிருடனும் எரிச்சலுடனும் ஆரம்பிக்கும் முறை ஜ்வரங்களில் நல்லது.

**பிருஹத்லாக்ஷாதி தைலம் :** நல்லெண்ணெய் 64 தோலா, கொம்பரக்கு திரவம் [3] 64 தோலா, பசுவின் பால் 64 தோலா, ஜலம் 256 தோலா, வெள்ளை லோத்திரப் பட்டை, காய்பல், மஞ்சிட்டி, கோரைக்கிழங்கு, பதிமுகம், சந்தனம், அல்லிக்கிழங்கு, அதிமதுரம் இவை வகைக்கு 2 தோர்லா கல்கம். இவைகளைக்

---

1. இதற்கு ஷட்கட்வர தைலம் என பைஷஜ்ய ரத்னுவளியில் பெயர்.

2. தோய்த்த தயிரில் வெண்ணெய் எடுக்காமல் கால் பங்கு ஜலம் சேர்த்துக் கடைந்த மோர்.

3. கொம்பரக்குத் திரவம் எடுக்கும் முறை. (பை. ர.) கொம்பரக்கைத் தூளாக்கிக்கொண்டு, அதில் 6 பங்கு ஜலத்தில் 21 தடவை கசக்கி வடிகட்டிய ஜலத்தை எடுத்துக்கொள்ளலாம். அதாவது கொம்பரக்கு 12 தோலாவை இடித்து அதை நனைத்துப் பிசியத் தேவையான வென்னீர் விட்டு நன்கு கசக்கி 2-3 மணி நேரம் ஊறிய பின்னர் கசக்கித் துணியிலிட்டுப் பிழிந்துகொள்வது: பிறகு அந்த சக்கையில் மறுபடியும் வென்னீர் விட்டுப் பிசைந்து முன் போலவே திரவம் எடுத்துக் கொள்ளலாம். இவ்விதம் அரக்கிலுள்ள சிவப்பு நிறம் மாறும் வரை எடுத்துக்கொண்டு வரலாம். ஆக 12 தோலா கொம்பரக்கிலிருந்து 64 தோலா திரவம் எடுக்க முடியலாம்: அல்லது 8 பங்கு ஜலம் விட்டு நான்கு பங்கு மீதமாகுமாறு கஷாயமாக்கி வடிகட்டிக்கொள்ளலாம். இதில் அரக்கு பாத்திரத்தின் அடியில் பிடித்துவிடுமாதலால் சூட்டுடன் இருக்கும்போது அரக்கைச் சுரண்டி எடுப்பது நல்லது.

கொண்டு தைலம் தயாரித்துக் கொள்ளவும். இந்த தைலத்தை வாயில்விட்டுக் கொப்புளிக்கப் பல் நோய் நீங்கும். மேல் தடவி ஸ்நானம் செய்ய காங்கை நீங்கும். பலம், புஷ்டி தரும்.

**ஷட்சரண தைலம்:** கொம்பரக்கு, அதிமதுரம், மஞ்சிட்டி, மருள் வேர், சந்தனம், நன்னுரி வேர் இவைகளின் கல்கம் 16 தோலா, நல்லெண்ணெய் 64 தோலா, ஜலம் 256 தோலா, தைலம் காய்ச்சிக்கொள்ளவும். ஜ்வரத்தில் நல்ல அப்யங்க தைலம்.

**அங்காரக தைலம்:** கொம்பரக்கு, மருள்வேர், மஞ்சள், மர மஞ்சள் மஞ்சிட்டி, பேய்த்தும்மட்டிக்காய், முள்ளுக்கத்திரி வேர், இந்துப்பு, கோஷ்டம், சித்தரத்தை, ஜடாமாஞ்சி, தண்ணீர் விட்டான் கிழங்கு இவைகளின் கல்கம் 16 தோலா, நல்லெண் ணெய் 64 தோலா, ஆரநாளம்[1] 256 தோலா. இவைகளைக் கொண்டு தயாரித்த தைலம் எல்லா ஜ்வரங்களையும் போக்கும்.

✲ **பிருஹதங்காரக தைலம்:** (பைஷஜ்ய ரத்னுவளி.) கொம்பரக்கு முதலியவைகளுடன் காய்ந்த முள்ளங்கிக் கிழங்கு, மூக்கரட்டை, தேவ தாரு, சித்தரத்தை, சுக்கு இவைகளையும் சேர்த்துக் கல்கமாக்கித் தயாராக்கிய தைலம் பிருஹதங்காரகம் எனப்படும். இதை விசேஷயாக பாண்டு வீக்கம் உள்ள ஜ்வரங்களில் உபயோகிக்க நல்லது.

**மத்யம லாக்ஷாதி தைலம்:** நல்லெண்ணெய் 64 தோலா, கொம்பரக்கு திரவம் 256 தோலா, தயிர் தெளிவு 256 தோலா கோஷ்டம், அதிமதுரம், மரமஞ்சள், கோரைக்கிழங்கு, கடுகு ரோகிணி, சோம்பு, அரேணுகம், சந்தனம், சித்தரத்தை—வகைக்கு ஒரு தோலா அளவில் கல்கம், இதைத் தைல பாக முறைப்படி தைலம் காய்ச்சிக்கொள்ளவும். இது நாட்பட்ட ஜ்வரத்திலும் விஷம ஜ்வரங்களிலும், க்ஷயத்திலும் நல்லது. சிசு, வ்ருத்தர்கள், கர்ப்பிணி இவர்களுக்கு மிகவும் ஏற்றது.

**சந்தனபலாலாக்ஷாதி தைலம்:** சந்தனம். சிற்றுமுட்டிவேர், கொம்பரக்கு, வெட்டிவேர், இவை வகைக்கு 64 தோலா, இவைகளை $12\frac{1}{2}$ படி ஜலத்தில் இட்டு அதில் கால் பங்கு மீத மாகக் கஷாயமிட்டு வடிகட்டிக் கொள்ளவும். நல்லெண்ணெய் 128 தோலா, பசுவின்பால் 256 தோலா, சந்தனம். விலாமிச்சை வேர், அதிமதுரம், சதகுப்பை, கடுகுரோகிணி, தேவதாரு, மஞ்சள், கோஷ்டம், மஞ்சிட்டி, அகர், வெட்டிவேர், அமுக்கராக்

1. கோதுமையை வேகவைத்தோ வேகவைக்காமலோ ஜலத்தை விட்டு புளிக்க வைத்தெடுத்த காடி ஆரநாளம் எனப்படும்.

கிழங்கு, சிற்றாமுட்டிவேர், மரமஞ்சள், மருள்வேர், கோரைக்கிழங்கு, முள்ளங்கி விதை, ஏலரிசி, லவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, சித்தரத்தை, கொம்பரக்கு, பச்சிலை, சண்பகமொட்டு, சிலாரஸ், நன்னாரி, கச்சோரம், பூலாங்கிழங்கு-இவை சம அளவில்; எல்லாம் சேர்த்து 32 தோலா கல்கம். இவைகளைத் தைலமாகக் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். ஏழு தாதுக்களையும் புஷ்டி செய்யும். காஸம் சுவாஸம் க்ஷயம் வாந்தி பெரும்பாடு ரக்தபித்தம், பித்த கப நோய்கள், அரிப்பு, கொப்புளம், எரிச்சல், தலைநோய், கண்ணோய், அங்க எரிவு, வீக்கம், காமலை முதலிய நோய்களில் அப்பியங்கத்திற்கு நல்லது. உடலுக்கு காந்தி மென்மையளிக்கும். வாத நோய்களிலடிபட்டவர்களுக்கும் தாது குன்றி இளைத்தவர்களுக்கும், பாலர் வ்ருத்தர் நடுவயதினர் அனைவருக்கும் சிறந்தது. முக்கியமாக எல்லா ஜ்வரங்களுக்கும் நல்லது.

❊ **லாக்ஷாதிதைலம்:** (பாவப்ரகாசம்.) கொம்பரக்கு 10 தோலா, மஞ்சிட்டி 6 தோலா சந்தனம், செஞ்சந்தனம், லவங்கப்பட்டை, லவங்கப் பத்திரி, வெட்டிவேர், முராமாஞ்சி, கோரைக்கிழங்கு, இவை வகைக்கு 4 தோலா, சீமை நிலவேம்பு, செவதை வேர், கடுகு ரோகிணி, சீந்திற் கொடி, திப்பிலி, பர்படகம், கண்டங்கத்திரி வேர், வாய்விளங்கம், சுக்கு, நெல்லிமுள்ளி, ஆடாதோடை வேர், சித்தரத்தை, மஞ்சள், விலாமிச்சை வேர், நொச்சி, இவை வகைக்கு 2 தோலா இவைகளை $3\frac{3}{4}$ படி பசுவின் பால் விட்டரைத்துக் குழப்பி நல்லெண்ணெய் 400 தோலாவுடன் சேர்த்து தைலம் காய்ச்சவும். இதைத் தேய்த்துவிட[1] எல்லா ஜ்வரங்களையும் போக்கும். சரீரத்தில் பலம், வீர்யம், புஷ்டி அதிகமாகும். களைப்பு நீங்கும். எலும்பிலேற்படும் வலி கூட தணியும். நல்ல தூக்கம் வரும்.

❊ **லாக்ஷாதிதைலம்:**[2] (பாவப்ரகாசம்.) கொம்பரக்குத் திரவம் 64 தோலா, நல்லெண்ணெய் 64 தோலா, தயிர் தெளிவு 256 தோலா, அமுக்கராக்கிழங்கு, மஞ்சள், தேவதாரு, அரேணுகம், கோஷ்டம், கோரைக் கிழங்கு, சந்தனம், மருள்வேர், கடுகுரோஹிணி, சித்தரத்தை, சததப்பை அதிமதுரம் இவை வகைக்குச் சமனெடையாக மொத்தம் 16 தோலா,

1. லாக்ஷாதிதைலம் முதலியவைகளை நாட்பட்ட ஜ்வரங்களிலும் மற்ற ஜ்வரங்களிலும், ஜ்வரவேகமிருக்கும்போதே சிறிது சிறிது தலை உள்ளங்கால் கை மார்பு முதலிய இடங்களில் தேய்த்துத் தேவையாகின் ஸ்னானமும், இல்லாவிடில் துணியால் துடைப்பதும் செய்விப்பது அனுபவஸ்தர்களின் வழக்கம். ஜ்வரவேகம் குறைய வெகுவாக இது உதவும். ஜ்வர வேகமில்லாத சமயத்துத் திரும்ப ஜ்வரம் வராமலிருக்கவும் இதன் உபயோகம் உண்டு.

2. கொம்பரக்கு திரவம் 256 தோலா சேர்த்து இதே யோகம் பைஷஜ்ய ரத்னாவளியில் ப்ருஹல்லாக்ஷாதி தைலம் என்ற பெயருடனுள்ளது.

தைலம் காய்ச்சிக் கொள்ளவும். ஜ்வரம், க்ஷயம், உன்மாதம், ச்வாஸம், அபஸ்மாரம், வாதநோய்கள் இவைகளில் நல்லது. பூத பிசாச பீடை விலகும். கர்பிணிகளுக்கு மிக நல்லது.

✲ **மஹாலாக்ஷாதி தைலம் :** (பாவப்ரகாசம்.) கொம்பரக்கு, மஞ்சள் மஞ்சிட்டி, இலந்தைக் கொட்டை, அதிமதுரம், சிற்றாமுட்டிவேர், விலாமிச்சைவேர், சந்தனம், சண்பகமொட்டு, நீலோத்பலக்கிழங்கு, இவை வகைக்கு 24 தோலா, இவைகளை 12 படி ஜலத்திலிட்டு 3 படி மீதமாகக் கஷாய மிட்டு வடிகட்டிக் கொள்ளவும். அரேணுகம், பதிமுகம். அமுக்கராக்கிழங்கு, நொச்சி, கச்சோரம். கோஷ்டம், தேவதாரு, நாகணம், லவங்கப்பட்டை, சதகுப்பை, வெண்தாமரை, ஜடாமாஞ்சி, அதிமதுரம், இவை வகைக்கு ஒரு தோலா அளவு எடுத்துக் கல்கமாக்கிக்கொள்ளவும். நல்லெண்ணெய் 128 தோலா, தயிர் தெளிவு, சுக்தம் [1] ஆரநாளம் பசுவின் பால் இவை வகைக்கு 256 தோலா, இவைகளைத் தைலமாக்கிக்கொள்ளவும். இந்த தைலம் உடம்பு எரிச்சலைப் போக்க வல்லது. பிதற்றல், நாவரட்சி தொண்டை வரட்சி, மயக்கம் முதலிய உபத்ரவங்களுடன் கூடிய வாதபித்த கப ஜ்வரங்களைப் போக்கும். க்ரஹபீடை பூதபீடையுள்ள சிசுக்களுக்கு அப்யங்கத்திற்கு நல்லது.

✲ **மஹாஷட்குணதக்ரதைலம்—** (பாவப்ரகாசம்) சித்தரத்தை, சுக்கு, கோஷ்டம், சந்தனம், மஞ்சள், அதிமதுரம், திப்பிலி, சிற்றாமுட்டி வேர், கொம்பரக்கு, இந்துப்பு, நன்னாரி, மருள்வேர், தேவதாரு, செம்மரப்பட்டை, விலாமிச்சைவேர், கடல்நுரை, ஓட்டுப்புல்-இவைகள் கல்கமாக 16 தோலா. நல்லெண்ணெய் 64 தோலா, பசுவின் மோர் 384 தோலா ; இவைகளைக் கொண்டு தைலம் தயாரித்து குளிர், எரிவுடன் ஆரம்பிக்கும் முறைஜ்வரங்களில் அப்பியங்கம் செய்விக்கலாம்.

✲ **பத்மகாதி தைலம் —** (பாவப்ரகாசம்) பதிமுகம், (பத்மாக்) நீலோத்பலக்கிழங்கு, செங்கழுநீர் கிழங்கு, தாமரைத்தண்டு, தாமரைக் கிழங்கு, புஷ்காரமூலம், ஆம்பல்கிழங்கு, விலாமிச்சைவேர், மஞ்சிட்டி, தாமரைப்பூ, காவி, காய்பல், நன்னாரி, மாகாளி, வெள்ளை லோத்திரப் பட்டை, நால்பால்மரப்பட்டை, ஈச்சங் குருத்து, நெல்லிமுள்ளி, தண்ணீர் விட்டான் கிழங்கு இவைகளின் கஷாயம் 4 பங்கு, நல்லெண்ணெய் கொம்பரக்கு திரவம், பால், சுக்தம், தயிர் தெளிவு, காடி இவை வகைக்கு

1. கிழங்கு வேர் பழம் முதலியவைகளை சிறிது எண்ணெய்யும் உப்பும் கலந்து புளிக்கவிட்டு தயாரித்த காடி சுக்தமெனப் படும். கோதுமையை வேகவைத்தோ வேகவைக்காமலோ ஜலத்திலிட்டு புளிக்கவைத்துத் தயாரித்த காடி ஆரநாளம் எனப்படும்.

ஒரு பங்கு, பதிமுகம் முதலியவைகளின் கால் பங்கு இவைகளைக் கொண்டு தயாரித்த தைலம் உடலுக்கு நல்லது. எரிச்சல் ஜ்வரம் தணியும்.

✲ **பிருஹத்கட்வர தைலம்:** (பைஷஜ்ய ரத்னுவளி) சுக்தம், ஆரநாளம், தயிர் தெளிவு, மோர், எலுமிச்சம்பழச்சாறு, நல்லெண்ணெய் இவை வகைக்கு 128 தோலா, [1] திப்பிலி, கொடிவேலிவேர் பட்டை, வசம்பு, ஆடாதோடை, மஞ்சிட்டி, கோரைக்கிழங்கு, கண்டந்திப்பிலி, ஏலம், அதிவிடயம், அரேணுகம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், திராக்ஷை, முள்ளுக்கத்திரி வேர், நிலவேம்பு, வில்வவேர், சந்தனம், சிறுதேக்கு, கருஞ்செவதை வேர், கடுக்காய் தோல், நெல்லிமுள்ளி, மூவிலைவேர், கருஞ்சீரகம், கடுகு, பெருங்காயம், கடுகுரோகிணி, வாய்விளங்கம் இவை சம எடையில் மொத்தம் 32 தோலா கல்கம்: பாகத்திற்காக ஜலம் 512 தோலா. இதனுல் தயாரிக்கப்பட்ட தைலம் மிகவும் சிறந்தது. வாத கப ஜ்வரம், முறை ஜ்வரம், மாதக்கணக்கிலிருக்கும் ஜ்வரம் இவைகளில் நல்லது.

✲ **பிருஹத் பிப்பல்யாதி தைலம்:** (பை. ர.) திப்பிலி, கோரைக் கிழங்கு, கொத்துமல்லி விதை, இந்துப்பு, திரிபலை, வசம்பு, ஓமம், ஜீரகம், வெண்சந்தனம், புஷ்கரமூலம், பூலாங்கிழங்கு, திராக்ஷை, பேய்தும்மட்டி வேர், மூவிலைவேர், நெரிஞ்சில் முள், நிலவேம்பு, வேப்பிலை, மலை வேப்பிலை, கண்டங்கத்திரி வேர், சீந்திற்கொடி, ஓரிலை வேர், முள்ளுக் கத்திரி வேர், தந்திமூலம், கொடிவேலிவேர் பட்டை, மரமஞ்சள், மஞ்சள், புளி, பர்படகம், யானைத்திப்பிலி இவை வகைக்கு ஒரு தோலா. இவை களைக் கல்கமாக்கி, நல்லெண்ணெய், தயிர் தெளிவு, காடி, மோர், எலுமிச்சம்பழச்சாறு இவை வகைக்கு 128 தோலா சேர்த்துத் தைலம் காய்ச்சவும். எல்லா வித ஜ்வரங்களிலும் சிறந்த அப்யங்க தைலம்.

✲ **கிராதாதி தைலம்:** (பை. ர.) மருள் வேர், கொம்பரக்கு, மஞ்சள், மரமஞ்சள், மஞ்சிட்டி, பேய்தும்மட்டி, விலாமிச்சைவேர், புஷ்கரமூலம், சித்தரத்தை, யானைத்திப்பிலி, திரிகடு, வட்டத்திருப்பி, வெட்பாலையரிசி, இந்துப்பு, கடல் உப்பு, கந்தகவெடியுப்பு, ஆடாதோடை வேர், எருக்கம் வேர், கருஞ்செவதை, தேவதாரு, சிகப்புத்தும்மட்டிக்காய், இவைகளின் கல்கம் 32 தோலா, தயிர் தெளிவு, ஆரநாளம், நிலவேம்பு கஷாயம். நல்லெண்ணெய் வகைக்கு 128 தோலா, இவைகளைத் தைல மாகக் காய்ச்சி உபயோகிக்கவும். தாதுகத ஜ்வரம், காமாலை, கிரஹணி, அதிஸாரம், ஹலீமகம்; மண்ணீரல் பெருக்கம், பாண்டு, வீக்கம், இவைகளைப் போக்க வல்லது

---

1. திப்பிலி முதல் ஆரம்பமாகும் இந்த சரக்குகளுக்கு கிருஷ்ணுதிகணம் எனப் பெயர். ஜ்வரஹரமான சரக்குகளின் தொகுப்பு இது.

✲ **மஹாகிராதாதி தைலம் :** (பை. ர.) நிலவேம்பு 400 தோலா, ஜலம் 12½ படி ; கால் பங்கு மீதமாகும்படி கஷாயமாக்கிக்கொள்ளவும். கடுகெண்ணெய் 128 தோலா [1] மருள்வேர் கஷாயம், கொம்பரக்குத்திரவம், காடி, தயிர் தெளிவு, இவை வகைக்கு 128 தோலா, நிலவேம்பு, யானைத் திப்பிலி, சித்ரத்தை, கோஷ்டம், கொம்பரக்கு, பேய்தும்மட்டிவேர், மஞ்சிட்டி, மஞ்சள், மரமஞ்சள், மருள்வேர், அதிமதுரம், கோரைக்கிழங்கு, மூக்கரட்டைவேர், இந்துப்பு, ஜடமாஞ்சி, முள்ளுக்கத்திரி வேர், நவச்சாரம், விலாமிச்சைவேர், தண்ணீர்விட்டான்கிழங்கு, செஞ்சந்தனம், கடுகுரோஹிணி, அமுக்கராக்கிழங்கு, சோம்பு, அரேணுகம், தேவதாரு, வெட்டிவேர், பத்மகம், கொத்துமல்லிவிதை, திப்பிலி, வசம்பு, கச்சோரம், கடுக்காய்தோல், தானிக்காய்தோல், நெல்லிமுள்ளி, ஓமம், குரோசாணி ஓமம், கர்கடசிங்கி, நெருஞ்சிமுள், ஓரிலைவேர், மூவிலைவேர், தந்தீமூலம், வாய்விளங்கம், ஜீரகம், கருஞ்சீரகம், மலைவேப்பம் பட்டை, கொட்டக்கரந்தை, யவச்சாரம், சுக்கு இவை வகைக்கு இரு தோலா—இவை கல்கம், இவைகளைக்கொண்டு இளந்தீயில் தைலம் காய்ச்சி உபயோகிக்க எல்லா விஷம ஜ்வரங்கள், வீக்கம், மண்ணீரல் பெருக்கம், ப்ரமேஹம், பாண்டு முதலியவைகளைப் போக்க நல்லது.

✲ **ஜ்வர பைரவ தைலம் :** (பை. ர.) சீந்திற்கொடி, ஆடாதோடை, வேப்பம்பட்டை, மருள் வேர், சந்தனத்தூள், நிலவேம்பு, சீமை நிலவேம்பு, நொச்சி இலை இவைகளெல்லாம் (வகைக்குச் சம எடையாக) 400 தோலா : 12½படி ஜலத்திலிட்டுக் கால் பங்கு மீதமாகக் காய்ச்சிக்கொள்ளவும். வடிகட்டி அதில் நல்லெண்ணெய் 256 தோலா, சீந்திற்கொடி, அதிவிடயம், தேவதாரு, மஞ்சள், மரமஞ்சள், கீரைப்பாலை, திப்பிலி, கண்டந்திப்பிலி, முருங்கை விதை, மூவிலைவேர், கொம்பரக்கு, பேய்புடல், கொத்துமல்லி விதை, கோஷ்டம், நிலவேம்பு, சிறுநாகப்பூ, மருள்வேர், அமுக்கராக் கிழங்கு, ஸரள தேவதாரு, கண்டங்கத்திரி வேர் இவை வகைக்கு 4½ தோலா இவை கல்கம் ; பால் 512 தோலா தைலம் காய்ச்சிக்கொள்ளவும். நாட்பட்ட ஜ்வரம், விஷம ஜ்வரங்கள், கல்லீரல் மண்ணீரல் வீக்கம், காமாலை, பாண்டு, வீக்கம் இவைகளைப் போக்க வல்லது.

---

1. கடுகெண்ணெய் மூர்ச்சனை செய்யும் விதம் : கடுகெண்ணெய் 128 தோலா, நெல்லிமுள்ளி, மஞ்சள், கோரைக்கிழங்கு, வில்வப்பழச்சத்து, மாதுளைவேர்பட்டை, சிறுநாகப்பூ, கருஞ்சீரகம், விலாமிச்சைவேர், வெட்டிவேர், தானிக்காய் தோல், இவை வகைக்கு ஒருதோலா, மஞ்சிட்டி 8 தோலா இவை கல்கம், ஜலம் 512 தோலா இவைகளைச்சேர்த்து மெழுகுப்பதம் வரும் வரை காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். இது தைலத்திலுள்ள ஆம தோஷத்தைப் போக்கும்.

## பாகங்கள்

**ஸேவந்தீ பாகம் :** ஸேவந்தி என்னும் மஞ்சள் கலந்த வெள்ளை நிறமுள்ள காட்டு ரோஜா புஷ்பம் (Rosa Alba) ஆயிரம் எடுத்து 64 தோலா நெய்யில் வதக்கிக்கொள்ளவும். அதில் கல்கண்டு 256 தோலா, ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, வகைக்கு 4 தோலா, திராக்ஷை 24 தோலா, தேன் 32 தோலா, சீந்திற்சக்கரை 2 தோலா இவைகளைக் கலக்கி பாகாகத் தயாரித்துத் தினமும் ஒரு தோலா அளவு சாப்பிட நாட்பட்ட ஜ்வரம், க்ஷயம், காஸம், அக்னிமந்தம், பிரமேஹம், பிரதரம், ரத்தக்கெடுதியால் ஏற்படும் நோய்கள், குஷ்டம், மூலம், கண்ணோய் வாய்ப்புண் முதலியவை குணப்படும்.

**பிப்பலீ பாகம் :** அரிசி திப்பிலி 64 தோலா எடுத்து அதைப் பால்[1] விட்டரைத்து விழுதாக்கவும், நெய் 128 தோலா, கல்கண்டு 256 தோலா இவைகளைக் கலந்து பாகு ஆகத் தயாரித்துக் கொள்ளவும். ஆறியதும் அதில் ஏலரிசி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ இவை வகைக்கு 3 தோலா தூள் செய்து கலந்து கொள்ளவும். இதைத் தினமும் ஜீர்ணசக்தி நோயின் தன்மையறிந்து சாப்பிட பலமளிக்கும். தாதுபுஷ்டி ஹிருதயபலம், காந்தி அளிக்கும். நாட்பட்ட ஜ்வரம், க்ஷயம், வாந்தி நாவரட்சி, அருசி, ச்வாஸம், உடல் காய்தல், விக்கல், காமலை, ஹிருதய ரோகம், பாண்டுரோகம், தொண்டை நோய், வாதரத்தம், பீநஸம், ஆமவாதம் இவைகள் போகும். திப்பிலியை ரஸாயனமாக உபயோகிக்க இது நல்ல முறை.

## ரஸௌஷதங்கள்

**நவ ஜ்வரேபாங்குசம். :** [ரஸராஜலக்ஷ்மியிலிருந்து] சுத்த கந்தகம், பொரித்த வெங்காரம், சுத்தரஸம், சுத்த தாளகம்[2] இவை வகைக்கு சம எடை, ரஸத்தையும், கந்தகத்தையும் முதலில் கஜ்ஜலி செய்துகொண்டு பிறகு மற்ற இரண்டையும் சேர்த்துக்கொண்டு அரைத்து மீன் பித்தத்தால் இரண்டுதினம் பாவனை செய்தரைத்து 2 யவ அளவு மாத்திரை செய்துகொள்ளவும். புதிதாக வந்த ஜ்வரம் ஆமவேகம் மிகுந்து காணும்போது கொடுக்கத்தக்கது. உடன் வியர்வை உண்டாகும். ஜ்வரம் இறங்கும். மோர் கலந்த அன்னமும் கத்தரிக்காய் வேகவைத்தும் சாப்பிடுவது பத்தியமாகும்.

---

1. பைஷஜ்யரத்னவளியில் நான்கு மடங்கு (256 தோலா) அளவு பால் விட்டரைத்துக் கொள்ளுமாறு கூறப்படுகின்றது.

2. இதே யோகத்தில் தாளகத்திற்கு பதில் சிலர் மிளகு சேர்ப்பதும், எல்லாவற்றிற்கும் சமம் சர்க்கரையைச் சேர்ப்பதும் உண்டு.

**நாராயணஜ்வராங்குசம் :** [1] சுத்த வெள்ளைப் பாஷாணம், சுத்த வத்ஸநாபி, சுத்த ரஸம், சுத்த கந்தகம், சுத்த தாளகம், சுக்கு, மிளகு, திப்பிலி, சோழிபஸ்மம், சுத்த கஞ்ஜா [2] சுத்த ஊமத்தை விதை, பொரித்த வெங்காரம் இவை வகைக்கு சம எடை, இஞ்சிச் சாறு விட்டு மூன்றுநாட்களரைத்து ஒரு யவ எடை மாத்திரை செய்து கொள்ளவும். இதை [3] தருண ஜ்வரத்தில் சாப்பிட்டு மேல் துணியால் நன்கு போர்த்திக்கொள்ள வியர்வை ஏற்பட்டு ஜ்வரம் குறையும். இச்சாபத்தியம். தயிர் குளிர்ந்த ஜலம் முதலியவைகளை கொடுக்கலாம்.

**பஞ்சாமிருதரஸம் :** தங்கபஸ்மம் ஒரு தோலா, வெள்ளிபஸ்மம். 2 தோலா, தாம்ரபஸ்மம் 3 தோலா, காரீய பஸ்மம் 4 தோலா, அயஸ் பஸ்மம் 5 தோலா இவைகளைக் கல்வத்திலிட்டு ஒருநாள் மகர மீன் பித்தத்தை விட்டரைத்து 2 யவ அளவில் மாத்திரை செய்துகொள்ளவும். சர்க்கரையும் இஞ்சிச்சாறும் சேர்த்துக் கொடுக்க எல்லா ஜ்வரங்களும் போகும்,

**ஜீர்ணஜ்வராங்குசம் :** ரஸஸிந்தூரம். அப்ரக பஸ்மம், காரீய பஸ்மம், தாம்ரபஸ்மம், காந்தபஸ்மம், வைக்ராந்தபஸ்மம், சுத்த லிங்கம், பொரித்த வெங்காரம், சுத்த கந்தகம், சுத்த வத்ஸநாபி, வெண்கோஷ்டம் இவை வகைக்குச் சம எடை; திரிகடு (சுக்கு மிளகு திப்பிலி) கஷாயம் திரிபலா (கடுக்காய் தான்றிக்காய் நெல்லிமுள்ளி) கஷாயம், கோரைக்கிழங்கு கஷாயம், கையாந்தரைச் சாறு, நொச்சிச்சாறு இவைகளைத் தனித்தனியாக விட்டு ஒவ்வொன்றிலும் இரண்டுநாள் அரைத்து 5 யவ அளவு மாத்திரை உருட்டிக் கொள்ளவும். தகுந்த அனுபானத்தில் கொடுக்க நாட்பட்ட ஜ்வரம். க்ஷயம், காஸம், அக்னிமந்தம், பாண்டு. ஹலீமகம், குல்மம், உதரம், அர்திதம், கிரஹணீ, சூலம், அருசி இவைகளைப் போக்கும். காந்தி, தேஜஸ், பலம், புஷ்டி, வீர்யவிருத்தி அளிக்கும்.

**முக்தாபஞ்சாமிர்தரஸம் :** முத்து பஸ்மம் 8 தோலா, பவழ பஸ்மம் 4 தோலா, வெள்ளீயபஸ்மம் 2 தோலா, சங்கபஸ்மம், 1 தோலா. முத்துச்சிப்பி பஸ்மம் 1 தோலா இவைகளை கருப்பஞ்

---

1. ரஸம் கந்தகம் சேர்ந்த மருந்துகளில் முதலில் ரஸத்தையும் கந்தகத்தையும் சேர்த்தரைத்து கஜ்ஜலிசெய்துகொண்டபின்னர் பாஷாணச்சரக்குகள் பஸ்மங்கள் மூலிகைச்சரக்குகள் முதலியவைகளை முறையாகச் சேர்த்தரைத்து, பின்னர் தேவையான பச்சிலைச்சாறு அல்லது பாவனைக்கான திரவம் விட்டரைத்துக் கொள்ளுவது முறை.

2. சில நூல்களில் கஞ்சா கூறப்படவில்லை

3. கடுமையான ஜ்வரத்தில் முதல் ஏழுநாள் அல்லது ஆமபாகம் ஏற்படும்வரை தருணஜ்வரம் என்பர்.

சாறு, பசுவின்பால், பால்முதுக்கன் கிழங்குச் சாறு, கற்றுழைச் சாறு, தண்ணீர்விட்டான் கிழங்குச் சாறு, துளசிச்சாறு, சிறு செருப்படிச்சாறு—இவைகள் ஒவ்வொன்றிலும் 6–6 மணி நேரம் அரைத்து லகுபுடமாக 5 புடமிடவும். இதிலிருந்து 8 யவ அளவு திப்பிலி சூர்ணத்துடன் தேன் சேர்த்துக் கொடுத்து மேல் கன்று போட்டு நாளான பசுவின்பால் சாப்பிட்டு லகுவர்ன ஆகாரம் சாப்பிட நாட்பட்ட ஜ்வரம் நீங்கும். அதனதன் ஏற்ற அநுபானத்துடன் சாப்பிட அனேக வியாதிகள் விலகும்.

**திரிபுவனகீர்த்திரஸம்:** சுத்தலிங்கம், சுத்த வத்ஸநாபி, சுக்கு, மிளகு, திப்பிலி, பொரித்த வெங்காரம் கண்டந்திப்பிலி இவை வகைக்கு சம எடை சேர்த்துக் கல்வத்திலிட்டு துளசிச் சாறு, இஞ்சிச்சாறு, கரு ஊமத்தை இலைச்சாறு இவைகளில் ஒவ்வொன்றிலும் 3–3 பாவனைகள் செய்து அரைத்து 2 யவ அளவு மாத்திரை செய்துகொள்ளவும். இஞ்சிச்சாறும் தேனும் சேர்த்து சாப்பிட எல்லா ஸந்நிபாத ஜ்வரங்களும் விலகும்.

**மஹாஜ்வராங்குசரஸம்;** சுத்தரஸம், சுத்த வத்ஸநாபி, சுத்த கந்தகம் வகைக்கு ஒரு தோலா, சுத்த ஊமத்தைவிதை 3 தோலா திரிகடுசூர்ணம் 12 தோலா இவைகளை மஞ்சள் பூவுள்ள பிரும்ம தண்டிச்சாறு விட்டு நான்கு நாட்கள் அரைத்து வெயிலில் காயவைத்துத் தூளாக்கி வேளைக்கு 2-4 யவ அளவு எலுமிச்சம் பழச்சாறும் இஞ்சிச்சாறும் சேர்த்துச் சாப்பிட முறை ஜ்வரங்கள் எல்லாம் விலகும். ஜ்வரவேகம் ஒரு யாமத்தில் இறங்கிவிடும்.

**சீதாங்குசம்:** சுத்த மயில் துத்தம், பொரித்த வெங்காரம், சுத்த கர்பர (பால்) துத்தம், சுத்த வத்ஸநாபி, சுத்த கந்தகம், சுத்த தாளகம் இவை வகைக்கு சம எடை கல்வத்திலிட்டரைத்து பாகலிலைச்சாறுவிட்டு மூன்றுமணி நேரம் அரைத்து 2 யவ யளவு மாத்திரை செய்துகொள்ளவும். சர்க்கரை ஜீரகத்தூள் சேர்த்துச் சாப்பிட எல்லா முறை குளிர் ஜ்வரங்களும் நீங்கும்.

**ஜ்வரக்னீ வடீ:** சுத்த ரஸம், கரியபோளம், திப்பிலி, கடுக்காய் அக்கராகாரம், கடுகெண்ணெய்யில் சுத்தம் செய்த கந்தகம், இவை வகைக்கு ஒரு தோலா. பேய்த்தும்மட்டிக்காய் 4 தோலா இவைகளை பேய்த்தும்மட்டிக்காய் சாறு விட்டரைத்து 5 யவ அளவு மாத்திரை உருட்டிக் கொள்ளவும். இதை சீந்திற்கொடி கஷாய அனுபானத்துடன் கொடுக்க எல்லா ஜ்வரமும் நீங்கும்.

**ஸந்நிபாதபைரவரஸம்:** ரஸம் 3 தோலா, கந்தகம் 3 தோலா, வெள்ளி பஸ்மம், அப்ரகபஸ்மம், தாம்ரபஸ்மம் வெள்ளீயபஸ்மம், காரீய பஸ்மம், அயஸ்ஸிந்தூரம் இவை வகைக்கு ஒரு தோலா-

இவைகளைக்கல்வத்திலிட்டு அரைத்து முருங்கை இலை, மஞ்சள் பூவுள்ள பிரும்மதண்டி, சுக்கு, வில்வ இலை, முள்ளுள்ள சிறுகீரை இவைகளின் சாறு ஒவ்வொன்றிலும் 3 மணிநேரமரைத்து வில்லை தட்டி மல்துணியில் சுற்றி ஒரு சிறிய சராவத்தில் அல்லது காசகுப்பியில் வைத்து மூடி சீலை செய்து அதை உப்பு நிரப்பிய பானையில் நடுவில் வைத்து 6 மணிநேரம் எரித்து எடுத்து அந்த வில்லைகளைக் கல்வத்திலிட்டு அரைத்துக் கொள்ளவும். அத்துடன் பவழபஸ்மம் 1 தோலா, சுத்த நாபி $\frac{1}{3}$ தோலா சேர்த்து கருநாகத்தின் விஷம் விட்டரைத்துக்கொள்ளவும். பிறகு அஸாருன், நிலப்பனைக்கிழங்கு, ஜடாமஞ்சி, பிரும்மதண்டி, நொச்சி, திப்பிலி தாமரை இலை, ஏலரிசி, கொடிவேலிவேர் பட்டை, துளசி, சதகுப்பை, தேவதாளிப்பீர்க்கு, ஊமத்தை, அகத்தி இலை, கொட்டைகரந்தை இலுப்பைப்பூ, ஜாதி இலை, மலங்காரைக்காய் இவைகளில் ஒவ்வொன்றின் சாறு அல்லது கஷாயம் விட்டு ஒவ்வொரு வேளை அரைத்துக்கொள்ளவும். பிறகு 2 யவ அளவு மாத்திரை 16 மிளகின் தூளும் புளிப்புமாதுளைச் சாறும் இஞ்சிச்சாறும் தேனும் சேர்த்துச் சாப்பிட எல்லா ஸந்நிபாதங்களும் நீங்கும்.

**ஸந்நிபாதபைரவம் (லகு) :** ரஸம், கந்தகம், மண்டூரம் இவை வகைக்கு ஒரு தோலா, வத்ஸநாபி 3 தோலா இவைகளை இஞ்சி, புளிப்பு மாதுளை, கருசலாங்கண்ணி முன்னை இலை, நொச்சி இவைகளின் சாற்றில் ஒவ்வொரு பாவனை செய்து 3-6 யவ அளவு தேனில் கொடுக்க நல்லது, குளிர்ந்த காற்று, குளிர்ந்த ஜலத்தில் ஸ்னானம், குளிர்ந்த ஜலம் குடித்தல், சர்க்கரை சேர்த்த பால் இவை பத்தியம். ஸந்நிபாத ஜ்வரத்தில் நல்லது.

**விச்வதாபஹரம் :**1 சுத்த ரஸம், தாம்ரபஸ்மம், கருஞ்செவதை சுத்த கந்தகம், கடுகுரோகிணி, சுத்த நேர்வாளவிதை, திப்பிலி, சுத்த எட்டிக்கொட்டை, கடுக்காய் இவை வகைக்குச் சம எடை; ஊமத்தை இலைச்சாற்றில் ஒரு நாளரைத்து 4-8 யவ அளவு மாத்திரை உருட்டி இஞ்சிச்சாறு சேர்த்துச் சாப்பிட எல்லா புது ஜ்வரங்களும் குறையும். மலசுத்தி ஏற்படும். பயற்றங்கஞ்சி பத்தியம்.

---

1. த்ரைலோக்யதாபஹரணம், த்ரைலோக்யடம்பரம் என்ற மாற்றுப் பெயர்களுமுண்டு. கீழ்க்கண்டவாறு செய்முறையில் மாறுதல்கள் சில நூல்களில் காணப்படுகின்றன. கரு ஊமத்தைஇலைச்சாற்றிற்குப் பதில் சில நூல்களில் கள்ளிப்பாலும், வேறிடத்தில் கள்ளிப்பாலும் ஊமத்தை இலைச்சாறும், வேறிடத்தில் கள்ளிப்பாலும் இஞ்சிச்சாறும், வேறிடத்தில் திப்பிலிக்குப் பதில் திரிபலையும் காணப்படுகின்றன. இவைகளை யுக்தியாகச் சேர்த்துக் கொள்ளுதல் நலம்.

**மிருத்யுஞ்ஜயரஸம்:** [1] நாபி, கந்தகம், மிளகு, பொரித்த வெங்காரம், திப்பிலி இவை வகைக்கு ஒரு தோலா, லிங்கம் 2 தோலா; இஞ்சிச்சாறு விட்டரைத்துப் பயறளவு மாத்திரை தேனுடன் சேர்த்துச் சாப்பிட எல்லா ஜ்வரங்களும் நீங்கும். எலுமிச்சம்பழச்சாற்றுடன் சாப்பிட நாட்பட்ட ஜ்வரங்களும், ஓமம் வெல்லம் சேர்த்துச் சாப்பிட விஷம ஜ்வரங்களும் இஞ்சிச் சாற்றுடன் அருந்த ஸந்நிபாத ஜ்வரங்களும் நீங்கும்.

**அம்ருதகலாநிதி:** நாபி 2 தோலா, சோழி பஸ்மம், 5 தோலா, மிளகு 9 தோலா இவைகளை ஜலம் விட்டரைத்து பயறளவு மாத்திரை உருட்டிக் கொடுக்க கபபித்த ஜ்வரம், அக்னி மந்தம் நீங்கும்.

**ஜ்வரமுராரி:** ரஸம், கந்தகம், காரீய பஸ்மம், அயஸ்ஸிந்தூரம், அப்ரகபஸ்மம், தாம்ரபஸ்மம் இவை வகைக்கு ஒருதோலா; வத்ஸ நாபி ½ தோலா இவைகளை இஞ்சிச்சாறு விட்டரைத்து 2 யவ அளவு மாத்திரை உருட்டி சாப்பிட ஆமஜ்வரம் நீங்கும்.

**சந்திரசேகர ரஸம்:** [2] ரஸம் கந்தகம், மிளகு, பொரித்த வெங்காரம் இவை வகைக்கு ஒரு தோலா, சர்க்கரை 4 தோலா, மீன் பித்தத்தால் பாவனை செய்து அரைத்து 2-4 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். இதை இஞ்சிச் சாற்றுடன் கொடுத்து அனுபானமாக குளிர்ந்த ஜலம் கொடுக்கவும். மோர் சாதம் கத்திரிக்காய் சேர்ப்பது பத்தியம். பித்த கபத்தில் ஏற்படும் கடும் ஜ்வரம் இதனால் நீங்கும்.

---

1. இதில் சுக்கும் ஒரு தோலா சேர்ப்பது வ்ருத்த வைத்ய ஸம்பிர தாயம்.

2. இதற்கு சில நூல்களில் ஜலமஞ்சரி எனப் பெயர். சில நூல்களில் கந்தகம் 2 தோலா, ஆட்டுப் பித்தம், எருமைப் பித்தம், மீன் பித்தம், நரிப் பித்தம், கொட்டக்கரந்தை, வல்லாரை, கோஷ்டம், கொடிவேலிவேர், விஷ்ணுக்ராந்தி, பேய்த்தும்மட்டி, நொச்சி இவைகளின் சாற்றில் அரைப்பு அதிகம். பித்தம் சேர்ந்து தயாராகும் மருந்துகளில் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம், துணி நனைத்துப் பிழிதல் இவைகளில்லாவிடில் மருந்து பலம் பெறாது என்பது வ்ருத்த வைத்ய அனுபவம்.

ये रसाः पित्तसंयुक्ताः प्रोक्ताः सर्वत्र शंभुना ।
जलसेकावगाहाद्यैर्बलिनस्ते तु नान्यथा ॥

**ஸ்வர்ண மாலினீ வஸந்தம் :**[1] தங்கபஸ்மம் அல்லது ரேக்கு ஒரு தோலா, முத்து பஸ்மம் அல்லது பிஷ்டி 2 தோலா, சுத்த லிங்கம் 3 தோலா, மிளகு நான்கு தோலா, பால் துத்தம் (கர்பரம்) 8 தோலா இவைகளைக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்து நல்ல பசு வெண்ணெய் சேர்த்து 3 தினங்கள் அரைத்த பின் எலுமிச்சம் பழச்சாறு விட்டு வெண்ணெய்யின் பிசுபிசுப்பு போகும் வரை அரைத்து 4 யவ அளவு மாத்திரை தயாரித்துக் கொள்ளவும். தேனும் திப்பிலித் தூளும் சேர்த்துச் சாப்பிட எல்லா ரோகங்களும் நாசமடையும். (ஜீர்ண ஜ்வரம், விஷம ஜ்வரம், காஸம் முதலியவை நன்கு சமனமடையும்.)

**லகுமாலினீவஸந்தம் :**[2] சுத்த பால் துத்தம் 2 பங்கு, மிளகு ஒரு பங்கு இவைகளைக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்து வெண்ணெய் சேர்த்தரைத்து பிறகு வெண்ணெய் பிசு பிசுப்பு நீங்குமளவு எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். இதைத் தேனும் திப்பிலித் தூளும் சேர்த்துச் சாப்பிட நாட்பட்ட ஜ்வரம், தாதுஜ்வரம், அதிஸாரம், ரக்தத்துடனும் பித்தத்துடனும் ஏற்படும் அதிஸாரம் போன்ற வியாதிகள், பிரதரம், மூலம், கண்ணோய், கிரகணீ முதலியவை நீங்கும். கர்பிணிக்கும் சிசுவிற்கும் கொடுக்கலாம். கர்பத்திற்கு புஷ்டி ஏற்படும்.

---

1. வஸந்த மாலதீ, ஸுவர்ண வஸந்தமாலதீ, வஸந்தராஜம் என்று மாற்றுப் பெயர்கள் உண்டு.

இந்த முறையைப்போல வெண்ணெய் சேர்த்துப் பிறகு வெண்ணெய்யிலுள்ள பிசுபிசுப்பைப் போக்கும் வரை எலுமிச்சம்பழச்சாறு சேர்த்தரைக்க வேண்டிய முறைகள் பல உள்ளன. வெண்ணெய்யும் எலுமிச்சம்பழச்சாறும் எவ்வளவில் சேர்ப்பது? எத்தனை நாள் அரைப்பது? பாலிலெடுத்த வெண்ணெய்யா, தயிரில் எடுத்த வெண்ணெய்யா? என்பதுபோன்ற பல்வேறு சந்தேகங்கள் ஏற்படும். பெரிய வைத்யர்களின் அனுபவத்தில் தங்க பஸ்மம் ஒரு தோலா என்ற அளவில் எடுத்துக்கொண்டால் மொத்தம் 18 தோலா ஆகும். அதற்கு 10 அல்லது 12 தோலா வெண்ணெய் சேர்த்து பஸ்மம் தனியே தெரியாதபடி குழப்பிக் கொண்டு பிறகு 20-25 தினங்கள் சிறிது சிறிதாக 80 அவுன்ஸ்வரை பழச்சாறு விட்டரைக்க, வெண்ணெய்யின் பிசு பிசுப்பு நீங்கிவிடும். வெண்ணெய்யின் பிசு பிசுப்பை பழச்சாறும், பழச்சாறின் புளிப்பை வெண்ணெய்யும் அகற்றி அமிருதம் போன்ற மருந்து தயாராகும். வெண்ணெய்யின் அளவு குறைந்தால் பழச்சாறின் அளவும் குறையலாம். அரைக்கும் தின அளவும் குறையலாம். ஆனால் மருந்தின் வீர்யம் அதிகமாக முன்சொன்ன அளவிற்குக் குறைவது உசிதமல்ல.

மிளகு என்றாலே இங்கு வெள்ளை மிளகுதான் சேர்க்க வேண்டுமென்பர் சிலர். கருப்புத்தோலுள்ள முழுமிளகை உபயோகிப்பதுதான் நல்லது.

2. ரஸராஜ ரஸம், நவஜ்வராரி, வ்யாதிகஜகேஸரி, ஜ்வரமுராரி, நவஜ்வரமுராரி என்று மாற்றுப் பெயர்கள் உண்டு. செய்முறை ஸ்வர்ணமாலினீ வஸந்தத்தைப் போலவே.

பால் துத்தத்தை மனிதனின் சிறுநீரிலிட்டு 21 நாள் வெயிலி லிட்டு பாவனை செய்து கொள்க.

புளிப்பில்லாத தயிர், பால் அன்னம் பத்தியம்.

**அபூர்வமாலினீவஸந்தம் :** வைக்ராந்த பஸ்மம், அப்ரக பஸ்மம், தாம்ர பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், வெள்ளிபஸ்மம், காரீய பஸ்மம், பவழபஸ்மம், ரஸஸிந்தூரம் (அல்லது பஸ்மம்) அயஸ் ஸிந்தூரம், பொரித்த வெங்காரம், சங்க பஸ்மம் இவைகளை சம அளவு எடுத்து கல்வத்திலிட்டு, விளாமிச்சைவேர், தண்ணீர் விட்டான கிழங்கு, மஞ்சள் இவைகளின் சாறு அல்லது கஷாயம் விட்டு ஒவ்வொன்றிலும் 7-7 நாட்களரைக்கவும். பிறகு கஸ்தூரியும் குங்குமப்பூவும் தனித்தனியே வைக்ராந்த பஸ்மத்தின் அளவில் எடுத்துச் சேர்த்து நன்கு அரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். ஜீரண ஜ்வரம், தாதுஜ்வரம் இவைகளில் தேனும் திப்பிலித் தூளும் சேர்த்தும். பிரமேகங்களில் சீந்திற் சர்க்கரை சேர்த்தும், துருஞ்சிநார்த்தைச் சாற்றுடன் நீர்ச்சுருக்கு கல்லடைப்பு இவைகளையும் போக்கவல்லது.

**பஞ்சவக்த்ரரஸம் :** [1] சுத்த ரஸம், கந்தகம், வத்ஸநாபி, மிளகு வெங்காரம், திப்பிலி, இவைகளை ஊமத்தை இலைச்சாறு விட்டு ஒரு நாள் அரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்துகொள்ளவும். எருக்கம் வேர் கஷாயம் திரிகடு சூர்ணம் இவை அனுபானம். தயிர் அன்னம், குளிர்ந்த ஜலம் பத்யம்; ஸந்நிபாதஜ்வரம் நீங்கும். தேனுடன் சாப்பிட கபம் நீங்கும். நல்ல பசி, ஜீரண சக்தி ஏற்பட எருக்கம் வேர் கஷாயமும் தேனும் அனுபானமாக்கிக்கொள்ளவும். நெய் முதலியவைகள்கூட ஜீர்ணமாகும்.

---

1. மிருத்யுஞ்ஜயம் என்ற மாற்றுப் பெயர் உண்டு. இதன் செய்முறை யிலும் அனுபானம் முதலியவைகளிலும் சில விசேஷ விபரங்கள் பைஷஜ்ய ரத்னவளி முதலிய நூல்களில் காணப்படுகின்றன. அவையாவன: ரஸமும் கந்தகமும் சேர்க்கமுடியாவிடத்தில் லிங்கம் 2 தோலா சேர்த்துக்கொள்ளலாம். லிங்கத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் நன்கு பாவனை செய்து சுத்தமாக்கிக் கொள்ளவும். வத்ஸநாபியை பசுவின் மூத்திரத்திலிட்டு பாவனை செய்து வெயிலில் உலர்த்திக்கொள்ளவும். பயறளவு மாத்திரை எல்லா ஜ்வரங் களிலும் தேனில் கொடுக்கவும். வாதஜ்வரத்தில் தயிர்தெளிவு, கடும் ஸந்நி பாதத்தில் இஞ்சிச்சாறு, அஜீர்ணஜ்வரத்தில் எலுமிச்சம்பழச்சாறு, விஷம ஜ்வரத்தில் ஜீரகமும் வெல்லமும் அனுபானமாகும். கடும் ஜ்வரத்தில் நடு வயதினனுக்கு முழு அளவு நான்கு மாத்திரைகள் கொடுக்கலாம். மிகவும் இளைத்தவன், கிழவன், சிசு, குழந்தை இவர்களுக்கு கால் மாத்திரை போது மானது. நவஜ்வரத்தில் கொடுக்க 3 மணி நேரத்தில் ஜ்வரம் குறையும். இளைக்காதவனுக்கும், கபமில்லையென்றாலும், வாதபித்தஜ்வரத்திலும் எரிச்சல் மிகுந்து காணுமிடத்திலும், சர்க்கரையுடன் கலந்துகொடுத்து மேல் பயமின்றி இளநீர் கொடுக்கலாம்.

**சந்திரகலாரஸம்:** அப்ரக பஸ்மம், லிங்கம், ரஸம், கந்தகம், இவைகளைச் சம அளவில் கல்வத்திலிட்டு 3 மணி நேரம் நன் கரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். இஞ்சிச் சாறும் தேனும் சேர்த்துக் கொடுக்கவும். முதலில் ஏற்பட்ட ஜ்வர மாயின் மோரும் அன்னமும் சேர்த்துக் கொடுக்கலாம்.

இதையே கோரைக்கிழங்கு மாதுளம்பழம், அருகம்புல், தாளம் விழுது, நெய்சட்டிப்பூண்டு, கற்ருழை, பர்படகம், பச்சிலை, தண்ணீர்விட்டான் கிழங்கு இவைகளின் சாறு அல்லது கஷா யத்தில் ஒவ்வொரு தினம் பாவனை செய்து அரைத்துக்கொள்ள வும். பிறகு, அப்ரக பஸ்மத்தினளவில் கடுகுரோகிணி, சீந்திற் சர்க்கரை, பேய்புடல், விளாமிச்சைவேர், மல்லிக்கொடி, சந்தனத் தூள், நன்னரி இவைகளின் சூர்ணம் தனித்தனியாகச் சேர்த்து திராக்ஷைபழக் கஷாயத்தில் 7 நாள் பாவனை செய்து கடலையளவு மாத்திரை செய்து கொள்ளவும் எல்லா பித்த நோய்களையும் போக்க நல்லது. உள்ளெரிச்சல், வெளி எரிச்சல் இவைகளைப் போக்கும். வெயில் நாட்களில் சாப்பிடத் தகுந்தது. பசியைக் குறைக்காது. எல்லா தாப ஜ்வரத்தையும் தலை சுற்றல், மயக்கம், பெரும்பாடு, ரக்த பித்தம், ரக்த வாந்தி, நீர்ச்சுருக்கு எல்லா வற்றையும் போக்கும்.

✲ **ஹிங்குலேச்வர ரஸம்:** [1] (பை, ரத்.) திப்பிலி, லிங்கம், வத்ஸ நாபி மூன்றையும் ஸம அளவு சேர்த்துக் கல்வத்திலிட்டு அரைத்து 2 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். தேனுடன் கொடுக்க வாத ஜ்வரம் விலகும்.

✲ **வ்ருத்தஹிங்குலேச்வரம்:** (பை. ரத்.) லிங்கம், வத்ஸநாபி, சுக்கு, மிளகு, திப்பிலி, பொரித்த வெங்காரம், சுக்கு, சுத்த நேர்வாளப் பருப்பு இவைகளை சம அளவு சேர்த்தரைத்து மாத்திரை செய்து கொள்ளவும். இது மப்பு ஜ்வரத்தைப் போக்க வல்லது.

✲ **சீதபஞ்சீ ரஸம்:** (பை. ரத்.) ரஸம், லிங்கம், கந்தகம், சுத்த நேர்வாளப் பருப்பு இவைகளைச் சம எடை தந்தீமூல கஷாயம் விட்டு அரைத்து மாத்திரை செய்துகொள்க. இஞ்சிச்சாறுடன் 2 யவ அளவு கொடுத்து மேல் குளிர்ந்த ஜலம் அனுபானமாகக் கொடுக்க புது ஜ்வரம் குறையும். பசி எடுத்ததும் கருப்பஞ்சாறும், பாசிப்பயறுக் கஞ்சியும் சாப்பிடவும்.

---

1 பிப்பல்யாதி சூர்ணம், ஜீர்ணஜ்வரஹரம், வாதபஞ்சனம், மிருத ஸஞ்சீவனி என்று மாற்றுப் பெயர்களுண்டு. சில நூல்களில் எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்துக் கொள்ளுமாறு கூறப்படுகிறது. அது ஏற்றுக் கொள்ளத் தக்கது.

✣ **தருணஜ்வராரி ரஸம் :** (பை. ரத்.) நேர்வாளம், கந்தகம், வத்ஸநாபி, ரஸம் இந்த நான்கையும் சம எடை எடுத்து கற்றாழைச்சாறு விட்டு அரைத்து 4 யவ அளவு சர்க்கரை ஜலத்துடன் கொடுக்கலாம். இதை ஜ்வரம் வந்த ஐந்தாம் நாளோ ஆறாம் நாளோ எழாம் நாளோ கொடுக்க மல மிளகி வெளியாகி ஜ்வரம் குறையும். புடலம் பிஞ்சு, பயற்றங் கஞ்சி பத்யம்.

✣ **ஸ்வச்சந்தபைரவ ரஸம் :** (பை. ரத்.) தாம்ர பஸ்மமும் வத்ஸநாபியும் ஸம அளவு சேர்த்துக் கல்வத்திலிட்டு ஊமத்தை இலைச் சாற்றில் 100 தடவை பாவனை செய்து ஒரு யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். இஞ்சிச்சாறு, சர்க்கரை, இந்துப்பு இவைகளுடன் கொடுக்க ஜ்வரத்தைப் போக்கும், பசி எற்பட்ட பின் கரும்பு. திராக்ஷை, சர்க்கரை, கக்கிரிக்காய், தயிர் சேர்ந்த உணவு கொடுக்கவும்,

✣ **ஸ்வச்சந்தபைரவ ரஸம் :**[1] (பை. ரத், இரண்டாவது) திப்பிலி ஜாதிபத்திரி, ரஸம், கந்தகம், வத்ஸநாபி இவைகளை வகைக்குச் சமஎடை கல்வத்திலிட்டு ஜலம் விட்டரைத்து ஒரு யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும், எல்லா புது ஜ்வரங்களிலும் நல்லது.

✣ **நவஜ்வரேபஸிம்ஹ ரஸம் ;** ரஸம், கந்தகம், அயஸ்வஸிந்தூரம், தாம்ரபஸ்மம், காரீய பஸ்மம், மிளகு, திப்பிலி, சுக்கு இவை வகைக்கு ஒரு தோலா, வத்ஸநாபி அரைத்தோலா, இவைகளை இஞ்சிச்சாறு விட்டு இரண்டு நாள் அரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்துகொள்ளவும், நவஜ்வரம், தாதுஜ்வரம் கிரகணி இவைகளைப்போக்க வல்லது,

✣ **நவஜ்வரஹரீவடீ :**[2] (பை, ரத்.) ரஸம் கந்தகம், வத்ஸநாபி, சுக்கு திப்பிலி, மிளகு, கடுக்காய்தோல், தான்றிக்காய் தோல், நெல்லிமுள்ளி, நேர்வாளம் இவை வகைக்குச் சம எடை தும்பைப்பூச்சாறு விட்டரைத்து உளுந்தளவு மாத்திரை செய்து கொள்ளவும். புது ஜ்வரங்களில் நல்ல குணம் தரும்.

✣ **நவஜ்வராரி ரஸம் :** (பை, ரத்.) ரஸம் 1 பங்கு, கந்தகம் 2 பங்கு, வத்ஸநாபி 3 பங்கு நிழலில் காய்ந்த பிரும்மதண்டி 4 பங்கு, நேர்வாளம்

---

1. சில நூல்களில் ஜாதிபத்திரிக்குப் பதில் ஜாதிக்காய் சேர்ப்பதுண்டு. இவைகளில் எல்லாம் சம எடை என்பதற்கு பதிலாக ஜாதிக்காய் ஒன்றரை பங்கு திப்பிலி எல்லாவற்றிற்கும் பாதி என்று அளவில் மாறுதல் காணப்படுகின்றது. அனுபானம் இஞ்சிச்சாறு. தும்பைப்பூச்சாறு, வெற்றிலைச்சாறு. குளிர் ஜ்வரம், விஷூசி. பீநஸம், அஜீர்ணம், அக்னிமந்தம், வாந்தி. கடும் தலைவலி இவைகளில் கொடுக்க நல்லது. தயிரன்னம் பத்தியம் என்பது விசேஷம்.

2. ஸர்வாங்கஸுந்தர ரஸம் என்று மற்றொரு யோகத்தில் வெங்காரம் மாத்திரம் அதிகம். தும்பைப்பூச்சாற்றிற்குப் பதில் ஜலம் விட்டு அரைப்பது. ச்வாஸகாஸம் அக்னிமந்தங்களுடன் கூடியதில் நல்லது.

5 பங்கு, இவைகளை எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து வாய்விளங்க அளவு மாத்திரை செய்து கொள்ளவும். இஞ்சிச்சாறுடன் கொடுக்கலாம். அஜீர்ணமுள்ள ஜ்வரத்தில் கொடுக்க நல்லது.

❋ **த்ரிபுரபைரவ ரஸம்:** (பை. ரத்.) வத்ஸநாபி 1 பங்கு, பொரித்த வெங்காரம் 2 பங்கு, கந்தகம் 3 பங்கு, லிங்கம் 4 பங்கு, நேர்வாளம் 5 பங்கு இவைகளைக் கல்வத்திலிட்டு தந்தீமூல கஷாயமிட்டரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். இஞ்சிச்சாறும் சர்க்கரையும் சேர்த்துச் சாப்பிட அக்னிமந்தம், வாயுவலி, வீக்கம், மலபந்தம், மூலம், கிருமி, ஜ்வரம் இவைகளைப்போக்க வல்லது. மோர் அன்னம் பத்யம்.

❋ **ஜ்வரதூமகேது:** (பை. ரத்.) ரஸம், கடல்நுரை, லிங்கம், கந்தகம், இவைகளை சம அளவில் சேர்த்து 3 நாள் அரைத்து 2 யவ அளவில் மாத்திரைகள் செய்துகொள்ளவும். இஞ்சிச்சாறுடன் புதிய ஜ்வரங்களில் கொடுக்க நல்லது.

❋ **ஸ்ரீராமரஸம்:** (பை. ரத்,) ரஸம் ஒரு பங்கு, கந்தகம் ஒரு பங்கு, மிளகு மூன்று பங்கு, நேர்வாளவிதை மூன்று பங்கு, ஒரு யாமம் தந்தீமூல கஷாயம் விட்டரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்துகொடுக்கவும். ஒரு மாத்திரை இளஞ்சூடான வென்னீருடன் கொடுக்க வயிற்றுவலி, மலபந்தம், வாயுக்கட்டு இவைகளை வெளியாக்கி ஜ்வரத்தைக் குறைக்கும்.

❋ **நவஜ்வராங்குச ரஸம்:** (பை. ரத்.) ரஸம் ஒரு தோலா, கந்தகம் 2 தோலா, லிங்கம் 3 தோலா, நேர்வாளவிதை 4 தோலா - இவைகளை ஒரு யாமம் தந்தீமூலகஷாயம் விட்டரைத்து 2 யவ அளவு மாத்திரை செய்துகொள்ளவும். சர்க்கரையுடன் ஜலம் சேர்த்துச் சாப்பிட மலசுத்தி செய்து ஜ்வரத்தைக் குறைக்கும்.

❋ **ப்ரசண்டேச்வர ரஸம்:** (பை. ரத்,) வத்ஸநாபி, ரஸம், கந்தகம் இவை வகைக்குச் சமனெடை எடுத்துக் கல்வத்திலிட்டு நொச்சியிலைச் சாற்றில் 21 தடவை பாவனை செய்து கொள்ளவும், எள்ளளவு இஞ்சிச் சாறும் தேனும் சேர்த்துக் கொடுக்க நல்லது.

❋ **வைத்யனுதவடி:** (பை. ரத்.) சுத்த ரஸம் 60 யவம் ($\frac{1}{3}$ தோலா) கந்தகம் 60 யவம், இரண்டையும் கஜ்ஜலி செய்து கொண்டு அதில் கடுகு ரோகிணி சூர்ணம் ஒரு தோலா சேர்த்து காட்டுப் பாகலிலைச்சாற்றிலோ திரிபலை கஷாயத்திலோ 3-3 நாள் அரைத்து கடலையளவு மாத்திரை செய்து கொள்ளவும், காட்டுப்பாகலிலைச்சாற்றுடனே வெற்றிலைச் சாற்றுடனே 1-4 மாத்திரை கொடுக்க சூலம் புது ஜ்வரம், பாண்டு, அரோசகம், வீக்கம் இவைகளைப் போக்க வல்லது. அதிகம் மலமிளகினுல் தயிரன்னம் பத்யம். இது லகுவான விரேசன மருந்தாகும்.

✱ **அக்னி குமாரரஸம்:** (பை. ரத்.) மிளகு, வசம்பு, கோஷ்டம், கோரைக்கிழங்கு, இவை வகைக்கு ஒரு தோலா, வத்ஸநாபி 4 தோலா எல்லாவற்றையும் இஞ்சிச்சாற்றில் அரைத்து ஒரு யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். மப்புள்ள ஜ்வரத்தில் இத்துடன் இஞ்சியை அரைத்துத் தேன் சேர்த்தும், கபஜ்வரத்தில் இஞ்சிச்சாறு அல்லது நொச்சிச்சாறு சேர்த்தும், பீநசம் மார்சளியில் இஞ்சிச்சாறுடனும், அக்னி மந்தத்தில் கிராம்புத்தூளுடனும், வீக்கத்தில் தசமூல கஷாயத்துடனும், கிரஹணியில் சுக்குத்தூளுடனும், அதிஸாரத்தில் கோரைக்கிழங்குடனும் ஆமாதிஸாரத்தில் கொத்தமல்லிவிதை, சுக்கு இவைகளுடனும், பக்வாதிஸாரத்தில் குடவெட்பாலைப்பட்டை தேனுடனும், ஸந்நிபாத ஜ்வரம் ஆரம்பிக்கும்போது திப்பிலித்தூள் இஞ்சிச்சாற்றுடனும், காஸத்தில் கண்டங்கத்திரிச்சாற்றுடனும், ச்வாஸத்தில் கடுகெண்ணெய்யும், வெல்லமும் சேர்த்தும் கொடுக்க நல்லது. மப்புள்ள நோய்களில் மப்பைப் போக்க மிகவும் சிறந்த மருந்து.

✱ **அம்ருதமஞ்சரீ ரஸம்:** (பை. ரத்.) லிங்கம், மிளகு, பொரித்த வெங்காரம், திப்பிலி, வத்ஸநாபி, ஜாதிக்காய் இவை வகைக்கு ஸம அளவு எடுத்து எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து 4-6 யவ அளவு மாத்திரை செய்து கொடுக்க ஸந்நிபாத ஜ்வரம், அதில் ஏற்படும் ச்வாஸகாஸம் குணமாகும்.

✱ **ஜ்வரஸிம்ஹரஸம்:** (பை. ரத்.) ரஸம், கந்தகம், தாளகம் சேங்கொட்டை இவை சுத்திசெய்து வகைக்கு சமனெடை சேர்த்துக் கள்ளிப்பால் விட்டு ஒருநாள் அரைத்து மட்குடுவையிவிட்டு மூடி மண்சீலை செய்து 2 யாமம் எரித்துத் தானே ஆறவிட்டு எடுத்து கரிசலாங்கண்ணி, அருகம்புல், கொடிவேலிவேர்பட்டை இவைகளின் சாற்றில் ஒவ்வொரு பாவனை செய்து காயவைத்து அரைத்து வைத்துக்கொள்ளவும். முறை ஜ்வரங்களில் முக்கியமாக 4-வது நாள் வரும் ஜ்வரத்தில் கொடுக்க உடன் ஜ்வரத்தைப் போக்கும். ஜ்வரவேகம் குறைந்ததும் பாசிப்பயறு கஞ்சி பால் கொடுக்கலாம்.

✱ **கதமுராரி:** (பை. ரத்.) ரஸம், கந்தகம். மனோசிலை, அயஸ் ஸிந்தூரம், சுக்கு, திப்பிலி, மிளகு, தாம்ர பஸ்மம், லிங்கம், காரீய பஸ்மம், இவை வகைக்கு 2 தோலா. எல்லாவற்றையும் ஜலம் விட்டரைத்து 2 யவ அளவு மாத்திரை செய்துகொள்ளவும். 1-2 மாத்திரை கொடுக்க நாட்பட்ட மப்பு ஜ்வரம் விலகும்.

✱ **ஜ்வரஹரீவடீ:** (பை. ரத்.) காரீயபஸ்மம், ரஸஸிந்தூரம், தாளகபஸ்மம், வத்ஸநாபி இவை வகைக்குச் சம அளவு சேர்த்து அரைத்து கடுகளவு மாத்திரை செய்து கொள்ளவும். முறை ஜ்வரங்களில் ஜ்வரம்

விடும் நேரத்தில் சர்க்கரையுடன் சாப்பிட்டு பிறகு 2-3 மாத்திரை வரை கொடுக்க ஜ்வரம் விலகும்.

✲ **ரத்னகிரிரஸம்:** (பை. ரத்.) ரஸம், கந்தகம், தாம்ர பஸ்மம், அப்ரக பஸ்மம், தங்க பஸ்மம் இவை வகைக்கு ஒரு தோலா, அய பஸ்மம் ½ தோலா, வைக்ராந்த பஸ்மம் ¼ தோலா, இவைகளைக் கல்வத்திலிட்டு கருசலாங்கண்ணிச்சாறு விட்டரைத்து பர்படி[1] யாகத் தயாரித்துக் கொள்ளவும். பிறகு அதை அரைத்து முருங்கை இலை, ஆடாதோடை இலை, நொச்சியிலை, வசம்பு, கொடிவேலிவேர், கருசலாங்கண்ணி, கொட்டைக் கரந்தை, திராக்ஷ, சீந்திற்கொடி, முன்னை இலை, அகத்தியிலை, வல்லாரை, சீமை நிலவேம்பு, கற்றாழை இவற்றின் சாற்றில் ஒவ்வொன்றிலும் 3-3 நாள் அரைத்துப் பாவனை செய்து காய்ந்ததும் வாலுகாயந்திரத்திலிட்டு லகுவாக 3 மணி நேரம் எரித்து எடுத்துக் கொள்ளவும். 2 யவ அளவு திப்பிலி கொத்துமல்லிவிதைத்தூள் சேர்த்துக் கொடுக்க யாமத்தில் ஜ்வரம் நிற்கும். நல்ல மருந்து. அனுபானத்தைத் தகுந்தவாறு அமைத்துக் கொள்ள எல்லா வியாதிகளிலும் கொடுக்கலாம்.

✲ **பிரதாபமார்த்தண்டரஸம்:** (பை. ரத்.) வத்ஸநாபி 1 தோலா, லிங்கம் 2 தோலா, நேர்வாளவிதை 3 தோலா, வெங்காரம் 4 தோலா இவைகளைக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்துக் கொள்ளவும். இது எல்லா ஜ்வரங்களிலும் கொடுக்க நல்லது.

✲ **ஜயாவடீ:** (பை. ரத்) வத்ஸநாபி, சுக்கு, மிளகு, திப்பிலி, கோரைக் கிழங்கு, மஞ்சள், வேப்பிலை, வாய்விளங்கம் இவை வகைக்கு ஒரு தோலா, முன்னைவேர் 8 தோலா, ஆட்டுமூத்திரம் விட்டரைத்து கடலையளவு மாத்திரை செய்துகொள்ளவும். இது எல்லா வியாதிகளிலும் அனுபானங்களைத் தகுந்தவாறு அமைத்துக் கொடுக்க நல்லது.

✲ **ஜயந்தீவடீ:** வத்ஸநாபி, வட்டத்திருப்பி, அமுக்கராக்கிழங்கு, வசம்பு, தாளீசபத்திரி, மிளகு, திப்பிலி. வேப்பிலை இவை வகைக்கு ஒரு தோலா, எல்லாவற்றிற்கும் சமம் முன்னைவேர். இவைகளை ஆட்டு மூத்திரம் விட்டரைத்து கடலையளவு மாத்திரை செய்துகொள்ளவும். இதுவும் ஜயாவடியைப்போல எல்லா வியாதிகளிலும் கொடுக்கத் தக்கது.

---

1. பர்படி செய்யும் விதம். ரஸத்தையும் கந்தகத்தையும் சேர்த்தரைத்து கஜ்ஜலியான பின் மற்ற பஸ்மங்களையும் சேர்த்தரைத்து இருப்புக்கரண்டியி லிட்டு புகையில்லாமல் எரியாமல் கண கணவென்றிருக்கும் கரி அடுப்பிலிட்டு இருப்புக் கரண்டியால் கிளறி எண்ணெய்போல் உருகியதும் கோமயத்தின் மேல் பரப்பப்பட்ட வாழை இலைமேல் சாய்த்து கத்தியால் தடவி விடவும். அப்பளம்போல் ஆகும். கரண்டியில் ஒட்டிக் கொண்டிருக்கும் மீதியுள்ள பாகத்தை எடுத்துக்கொள்ளவேண்டாம். இலந்தைக் கரி அடுப்பு நல்லது.

**அனுபானங்கள் :—** ஜயாவடிக்கும் ஜயந்திவடிக்கும் உள்ள அனுபானங்கள் பின் வருமாறு— பித்த ஜ்வரத்தில் பாலுடன் நெய்யில்லாது பாசிப்பயற்றங் கஞ்சி நெல்லிமுள்ளித் துவையலுடனும், தேன் மிளகுத்தூள் ஆனந்தபைரவரஸம் இவைகளுடன் ஸந்நிபாதஜ்வரத்திலும், நெய்யுடன் முறை ஜ்வரத்திலும், தேன் திரிகடுசூர்ணம் கோமூத்திரம் இவைகளுடன் குளிர் ஜ்வரத்திலும்; சந்தன கஷாயத்துடன் ரக்த பித்த ஜ்வரத்திலும், தேனுடன் காஸத்திலும், பாலுடன் பாண்டுவிலும், அரிசி கழுவிய ஜலத்துடன் கல்லடைப்பு நீர்ச்சுருக்கிலும், கோமூத்திரத்துடன் உள்ளுக்கும் கோமூத்திரத்திலரைத்து மேல் பூசவும் செய்ய காகணகுஷ்டத்திலும், தாழைவேர் கல்கத்துடன் பிரமேஹங்களிலும், தேனுடன் எல்லா பிரமேகங்களிலும், வெள்ளிலோத்திரப் பட்டை, கோரைக்கிழங்கு, கடுக்காய், காய்பல் இவைகளின் கஷாயம் தேனுடன் மேஹங்களிலும், வெல்லம் வென்னீருடன் ஸந்நிபாத குல்மத்திலும், சுக்குடன் பகந்தரத்திலும், மோருடன் கிராணியிலும், திரிதோஷஜ ரக்தபித்தத்தில் குளிர்ந்த ஜலத்துடனும், கரிசலாங்கண்ணிச்சாறுடன் ராத்திரியில் கண் தெரியாமைக்கும், முலைப்பால் உரைத்துக் கண்ணில் தடவ கண்ணில் மாம்சம் வளருவதிலும் நல்லது.

✲ **சண்டேச்வர ரஸம் :** (பை. ரத்.) ரஸம், கந்தகம், வத்ஸநாபி, தாம்ரம் இவை வகைக்கு சம எடை கல்வத்திலிட்டு ஒரு யாமம் வரை அரைத்து இஞ்சிச் சாறில் ஏழு நாளும், நொச்சிச் சாறில் ஏழு நாளும், அரைத்து குந்துமணி அளவு மாத்திரை செய்து இஞ்சிச்சாறுடன் கொடுக்க வாத பித்த கப த்வந்த்வ ஸந்நிபாத ஜ்வரங்கள் சமனமடையும். குளிர்ந்த ஜலம் விட்டு உடலைத் துடைத்துவிடுவதும், ஸ்னானம் செய்வதும், குளிர்ந்த ஜலம் அருந்துவதும், மாம்பழம் பிலாப்பழம் சாப்பிடுவதும், சந்தனம் பூசிக்கொள்வதும் இதில் ஹிதமாகும்.

✲ **ஜ்வரகேஸரி** (பை. ரத்.) ரஸம், வத்ஸநாபி, சுக்கு, மிளகு, திப்பிலி, கந்தகம், கடுக்காய்தோல், தான்றிக்காய்தோல், நெல்லிமுள்ளி, இவை வகைக்கு ஒரு தோலா, நேர்வாளவிதை 9 தோலா, கரிசலாங் கண்ணிச்சாற்றில் அரைத்துக் குந்துமணி அளவு மாத்திரை செய்து கொள்ளவும். கடுகளவு மாத்திரை ஒரு அவுன்ஸ் இளநீருடன் கொடுக்கலாம். எல்லா ஜ்வரங்களுக்கும் நல்ல மலமிளக்கியாகும். சர்க்கரையுடன் கலந்து கொடுக்க பித்தஜ்வரத்திலும், மிளகுத்தூளுடன் ஸந்நிபாத ஜ்வரத்திலும், திப்பிலி ஜீரகத்தூளுடன் எரிச்சலுள்ள ஜ்வரம், முறை ஜ்வரம், பூதபிசாச ஜ்வரம், மண்ணீரல் வீக்கம், அக்னிமந்தம், அஜீர்ணம், வீக்கம், சூலம், குல்மம், பித்த குஷ்டம், புதுஜ்வரம் இவைகளிலும் நல்லது.

**மேர்ஹாந்த ஸூர்ய ரஸம் :** (பை. ரத்) ரஸத்தையும் கந்தகத்தையும் ஸம எடை எடுத்து கஜ்ஜலி செய்து உள்ளிப்பூண்டுச் சாற்றில் ஒரு யாமம் அரைத்து வைத்துக்கொள்ளவும். அதை உள்ளிப் பூண்டுச் சாற்றுடன் பிசிறி நஸ்யமிட தந்த்ரா மூர்ச்சை தீரும். மிளகுத்தூளுடன் சேர்த்து நஸ்யமிட தந்த்ரா பிதற்றல் மாறும்.

✲ **குலவதூரஸம் :** (பை. ரத்) ரஸம், காரீய பஸ்மம், தாம்ரபஸ்மம், மனேசிலை, துத்தம் இவை ஸம எடை சேர்த்து வேலிப்பருத்திச்சாறு விட்டு அரைத்து மாத்திரை செய்துகொள்ளவும். ஜலம் விட்டரைத்து நஸ்யமிட ஸந்நிபாத ஜ்வரக்குறிகள் மாறும்.

✲ **நஸ்யபைரவம் :** (பை. ரத்) ரஸஸிந்தூரம், தாம்ரபஸ்மம் அயஸ்ஸிந்தூரம், கொடிவேலிவேர்பட்டை, பொரித்த வெங்காரம், பால் துத்த பஸ்மம், சுக்கு, திப்பிலி, மிளகு இவைகளை ஸம அளவில் எடுத்து எருக்கம்பால் விட்டரைத்துக்கொள்ளவும். எருக்கம்பாலுடன் இதை குழப்பி நஸ்யமிட ஸந்நிபாத நிலை மாறும்.

✲ **உன்மத்தரஸம் :** (பை. ரத்.) ரஸமும் கந்தகமும் ஸம எடை சேர்த்து கஜ்ஜலி செய்து ஊமத்தைப்பழச்சாறுவிட்டு ஒருநாள் அரைத்து அதற்கு ஸம எடை திரிகடு (சுக்கு, மிளகு, திப்பிலி) சேர்த்து அரைத்து நஸ்யமிட ஸந்நிபாதம் நீங்கும்.

**அஞ்சனபைரவ ரஸம் :** (பை. ரத்) ரஸம், அயஸ்ஸிந்தூரம், திப்பிலி, சுத்த கந்தகம் இவை வகைக்கு ஒரு தோலா, நேர்வாளம் 12 தோலா இவைகளை எலுமிச்சம்பழச்சாறுவிட்டு அரைத்துக் கண்ணில் அஞ்சனமிட, ஸந்நிபாத ஜ்வரத்தில் ஏற்படும் எல்லா உபத்ரவங்களும் விலகும்.

**ஸௌபாக்யவடி :** (பை. ரத்) பொரித்த வெங்காரம், வத்ஸநாபி, வெண்ஜீரகம், இந்துப்பு, கல்லுப்பு, விளையலுப்பு, வெடி உப்பு, கடலுப்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, அப்ரக பஸ்மம், சுத்த கந்தகம், சுத்த ரஸம் இவை வகைக்கு ஸம எடை சேர்த்து கருநொச்சி இலை, வெண்ணொச்சி இலை கருசலாங்கண்ணி, ஆடாதோடை இலை, நாயுருவி இலை, இவைகளின் சாறுவிட்டு தனித்தனியாக ஒவ்வொரு நாள் அரைத்து மாத்திரை செய்து கொள்ளவும். ஸந்நிபாத ஜ்வரத்தில் நல்ல குணம் தரக்கூடியது. குளிருடனே எரிவுடனே ஆரம்பிக்கும் ஜ்வரம், அதிக வியர்வையால் உடல் சில்லிட்டுப்போதல், அதிகத்தூக்கம், எல்லா உறுப்புகளும் சோர்ந்து மயக்கம் ஏற்படுதல், சூலம், ச்வாஸம், கபகாஸம், மூர்ச்சை, அருசி, நாவரட்சி,

ஜ்வரமிகுதி முதலிய கடும் நோய் நிலைகளைச் சமனம் செய்து குணம் தர வல்லது. சிசுக்களுக்கு 1–2 யவ அளவும் பெரியோர்களுக்கு 6-10 யவ அளவும் கொடுக்கலாம்.

✤ **வேதாள ரஸம் :** (பை. ரத்) [1] ரஸம், கந்தகம், வத்ஸநாபி, மிளகு, தாளகம் இவை ஸம அளவு சேர்த்தரைத்துக் கஜ்ஜலியானவுடன் இஞ்சிச்சாறு விட்டரைத்து ஒரு யவ அளவு மாத்திரை செய்துகொள்ளவும். ஸந்நிபாதத்தில் மிகவும் சிறந்த மருந்து. திப்பிலித்தூள் தேன் சேர்த்தோ இஞ்சிச்சாறுடனோ முருங்கைப்பட்டைக் கஷாயத்துடனோ வாத ஜ்வரத்திலும், சர்க்கரை ஜீரகத்தூள் சேர்த்து பித்த ஜ்வரத்திலும், அதிமதுரம் சர்க்கரை சேர்த்தோ நிலவேம்பு சர்க்கரை சேர்த்தோ முறை ஜ்வரத்திலும், சுக்குத்தூள் தேனுடன் அல்லது திப்பிலித்தூள் தேனுடன் எல்லா ஜ்வரங்களிலும் கொடுக்கலாம். பற்கள் கிட்டி, கண்விழி நிலைகுத்தி, புலன்கள் தன்னிலை இழந்து, மயக்கம், உணர்வின்மை, உடல்வாடி இருத்தல், உடலில் பிசுபிசுப்புடன் ஒரு பூச்சு ஏற்படுதல் — முதலிய ஸந்நிபாத நிலைகளில் வேதாள ரஸம் கொடுக்க நல்லது.

✤ **சக்ரிகா ரஸம் :** (பை. ரத்.) ரஸம், கந்தகம், வத்ஸநாபி, ஊமத்தை விதை, மிளகு, சுத்த தாளகம், ஸ்வர்ணமாக்ஷிகம் இவை ஸம அளவு சேர்த்து தந்தீமூல கஷாயத்தில் அரைத்துக் குந்துமணி அளவு மாத்திரை செய்து கொள்ளவும். ஸந்நிபாதத்தின் எல்லா வகைகளிலும் கொடுக்கலாம்.

✤ **சக்ரீ ரஸம் :** (பை. ரத்) வத்ஸநாபி, மிளகு, தாளகம், ரஸம், கந்தகம், நேர்வாளவிதை, நேர்வாளவேர், திப்பிலி இவை வகைக்குச் சம எடை சேர்த்து இஞ்சிச்சாறு விட்டரைத்து குந்துமணி அளவு மாத்திரை செய்துகொள்ளவும். எல்லா ஸந்நிபாத நிலைகளிலும், முக்யமாக எரிச்சல், நாவரட்சி, தந்த்ரை உள்ள நிலையில் கொடுக்க நல்லது.

✤ **ப்ரம்மரந்திர ரஸம் :** (பை. ரத்) ரஸம், அப்ரக பஸ்மம், கந்தகம், தாளகம், லிங்கம், மிளகு, பொரித்த வெங்காரம், இந்துப்பு இவை வகைக்கு ஒரு தோலா வத்ஸநாபி 8 தோலா இவைகளை நன்கு அரைத்துப் பிறகு 4 தோலா எருமைப் பித்தத்தால் நன்கு அரைத்துக் கொள்ளவும். இதை உடல் நினைவிழந்து, கட்டைபோலான நிலையில் ஸந்யாசநிலை ஏற்பட்டபின் தலை உச்சியில் மயிர் களைந்து கத்தியால் கீறி அவ்விடத்தில் தடவவேண்டும். நினைவு வந்தபின் எரிச்சல் ஏற்பட்டால் ஆயிரம் குடம் குளிர்ந்த ஜலம்

1. சில நூல்களில் இஞ்சிச்சாறு விட்டரைப்பது கூறப்படவில்லை. சில நூல்களில் இஞ்சிச்சாற்றில் 21 நாள் அரைக்கக் கூறப்பட்டுள்ளது. மிளகிற்குப் பதில் ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம் சேர்ப்பதுமுண்டு.

கொண்டு ஸ்னானம் செய்வித்தல், சந்தனம், அகில், கர்பூரம் முதலியவைகளை அரைத்துப் பூசுதல், கருப்பஞ்சாறு, பயற்றங்கஞ்சி, மோர் சாதம் இவை கொடுக்கலாம்.

✻ **ஆனந்தபைரவீவடீ:** [1] (பை. ரத்.) வத்ஸநாபி, சுக்கு, மிளகு, திப்பிலி, கந்தகம், வெங்காரம், தாம்ரபஸ்மம், ஊமத்தை விதை, லிங்கம் இவை வகைக்கு ஸமஅளவு எடுத்து கஞ்சா இலை கஷாயம் விட்டரைத்துக் கடலை அளவு மாத்திரை செய்து கொள்ளவும். அனுபானமாக எருக்கம் வேர் கஷாயம், திரிகடு சூர்ணம் சேர்த்துச் சாப்பிடவும். ஸந்நிபாதம் தீரும்.

✻ **த்ரைலோக்யஸுந்தர ரஸம்:** (பை. ரத்) ரஸம் ஒரு தோலா, கந்தகம் ஒரு தோலா இரண்டையும் கஜ்ஜலியாக்கிக்கொண்டு மூடக் கத்தான், நிலப்பனைக்கிழங்கு, ஊமத்தை இலை, கரிசலாங்கண்ணி, தேவ தாளிப்பீர்க்கு இலை, முன்னையிலை, பிரம்மி இவைகளின் சாறு வகைக்கு 2 தோலா விட்டுத் தனித்தனியாக அரைத்து 5 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும், முத்தோஷ ஜ்வரமும் விலகும். வயிற்றில் ஏற்படும் வாயுக்கட்டு விலகும். இதைச் சாப்பிடும்போது உடலில் எரிச்ச லிருந்தால் இளநீர் கொடுக்கலாம்.

✻ **ம்ருதோத்தாபன ரஸம்:** (பை. ரத்.) ரஸம் ஒரு தோலா, கந்தகம் 2 தோலா, மனோசிலை, வத்ஸநாபி லிங்கம், காந்த பஸ்மம், அப்ரக பஸ்மம், தாம்ர பஸ்மம், அயச்சிந்தூரம், தாளகம், ஸ்வர்ணமாக்ஷிகம் இவை வகைக்கு ஒவ்வொரு தோலா இவைகளை புளிவஞ்சி, புளியாரை எலுமிச்சம்பழம் நொச்சி ஆனைச்சுண்டை இவைகளின் சாற்றில் ஒவ்வொன்றில் 3-3 நாள் அரைத்துப் பூதரயந்திரத்தி [2] விட்டு ஒருநாள் எரித்தெடுக்கவும். பிறகு கொடிவேலிவேர் பட்டை கஷாயம் சேர்த்து

---

1. சில நூல்களில் இதற்கு அனுபானங்கள் வியாதிக்கேற்றவாறு கொடுக்கப்பட்டுள்ளன. சீதாங்க ஸந்நிபாதத்திலும் மற்ற ஸந்நிபாதத்திலும் கொத்தமல்லி விதை, திப்பிலி, சுக்கு, கடுகுரோஹிணி, கண்டங்கத்திரி, திப்பிலி இவைகளின் கஷாயம், பர்படகத்தூள் சேர்த்துக் கொடுக்கலாம். ஸந்நி பாதாதிஸாரத்தில் கடுகுரோஹிணி, வில்வப்பிஞ்சு, ஜீரகத்தூள் இவைகளைத் தயிர்விட்டுக் குழப்பிக் கொடுக்கலாம். கீரைவகை நீக்கவும். மாவிலங்கைப் பட்டைக் கஷாயத்துடன் கல்லடைப்பிலும், கார்போகரிசி எண்ணெய்யுடன் குஷ்டத்திலும், தயிர் தெளிவு சர்க்கரை தேன் விட்டும் யவக்ஷாரம் சர்க்கரை யுடனும் நீர்ச்சுருக்கிலும், காய்ச்சி ஆறிய பசும்பாலும் தேனும் சேர்த்தோ குந்துமணி வேர் கஷாயம் சேர்த்தோ உருத்திர சடை கஷாயம் தேன்சேர்த்தோ பிரமேஹத்திலும் கொடுக்க நல்லது.

2. பூதரயந்திரம். இரண்டு பானைகளின் வாய் ஒன்றாகப் பொருந்தும்படி தயாரித்து மேல் பானையில் உள்புறத்தில் மருந்தை அரைத்துப்பூசி பானை களின் வாயைப் பொறுத்திச் சீலை மண் செய்து குழியிலிட்டு உடுக்குப் போன்று மேல் கீழாக வைத்து மண்ணிட்டு மூடவும். மேல் பானையின் மேல் வெளிப்புறம் மாத்திரம் வெளியிலிருக்க வேண்டும். அதன் மேல் வராட்டி யடுக்கிப் புடமிட்டு எடுத்துக்கொள்ள வேண்டும்.

2 யாமமரைத்து உளுந்தளவு மாத்திரை செய்து கொள்ளவும். பெருங்காயத் தூள், திரிகடு சூர்ணம், இஞ்சிச்சாறு, பச்சைக் கர்பூரம் சேர்த்துக் கொடுக்க ஸந்நிபாத நிலையில் மோஹம் நிரம்பியிருக்கும்போது ஜ்வரம் குறைந்து நினைவு ஏற்படும்.

✲ **ம்ருத ஸஞ்ஜீவன ரஸம்** (பை. ரத்) ரஸம் ஒரு தோலா, கந்தகம் 2 தோலா, அப்ரக பஸ்மம், அயஸ் பஸ்மம், தாம்ர பஸ்மம், வத்ஸநாபி, தாளகம், சோழி பஸ்மம், மனோசிலை, லிங்கம், கொடிவேலிவேர்ப் பட்டை, ஆனைச்சுண்டை, அதிவிடயம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஸ்வர்ணமாக்ஷிகம் இவை வகைக்கு ஒரு தோலா, இவைகளைச் சேர்த்துக் கல்வத்திலிட்டு இஞ்சிச்சாறு, கருநொச்சிச் சாறு, கஞ்சா கஷாயம் இவைகளில் 3–3 தினம் அரைத்துக் காயவைத்து மண்சீலை செய்த குப்பியிலிட்டு வாலுகாயந்திரத்தி லிட்டு 2 யாமம் எரிக்கவும். தானாக ஆறியவுடன் எடுத்து இஞ்சிச் சாற்றுடன் 1–2 யவ அளவு கொடுக்க ஸந்நிபாத நிலைகளில் சிறந்த குணம் அளிக்கும். அகோர மந்திரத்தால் இந்த மருந்தைப் பூஜை செய்து கொடுப்பதும், அகோர மந்திர ஜபம் செய்த ஜலத்தை நோயாளியைச்சுற்றி தெளிப்பதும் மிகவும் நல்லது.

✲ **ஸந்நிபாத பைரவரஸம்** (பை. ரத்.) நல்ல சுத்தி செய்த லிங்கம் $4\frac{1}{2}$ தோலா, கந்தகம் $2\frac{1}{4}$ தோலா, வத்ஸநாபி $2\frac{1}{4}$ தோலா, கரு ஊமத்தை விதை 3 தோலா, வெங்காரம் $1\frac{1}{8}$ தோலா இவைகளை எலுமிச்சம்பழச் சாறு விட்டரைத்து குந்துமணி அளவு மாத்திரை செய்து நிழலில் உலர்த்திக் கொள்ளவும். இஞ்சிச் சாற்றுடன் ஸந்நிபாத நிலைகளில் கொடுக்கத் தகுந்தது.

✲ **சிந்தாமணி ரஸம் :** (1) (பை. ரத்.) ரஸம் 1 தோலா, கந்தகம் 1 தோலா, அப்ரக பஸ்மம் 1 தோலா ; வத்ஸனாபி $\frac{1}{2}$ தோலா, நேர்வாளம் $1\frac{1}{2}$ தோலா கல்வத்திலிட்டு காடியாலரைத்து உருண்டையாக்கி மேல் இளம் வெற்றிலை சுற்றி மடக்கிலிட்டு குக்குடபுடமிடவும். பிறகு எடுத்து $\frac{1}{2}$ தோலா நேர்வாளமும் ; $\frac{1}{2}$ தோலா வத்ஸனாபியும் சேர்த்து குண்டுமணி அளவு மாத்திரை செய்யவும். சுக்கு, திப்பிலி, மிளகு, இந்துப்பு, கொடி வேலி வேர்ப் பட்டை இவைகளின் தூளுடன் சாப்பிட எல்லா ஜ்வரங் களும், சூலம், கிரகணி, மகோதரம் முதலிய நோய்களும் நீங்கும். இதைச் சாப்பிட்ட பின் எரிச்சல் ஏற்பட்டால் குளிர்ந்த ஜலத்தால் தலையை அலம்புவதும், பசி ஏற்பட்டால் தயிர் சாதம் சாப்பிடுவதும் நல்லது.

✲ **சிந்தாமணி ரஸம் :** (2) (பை-ரத்) ரஸம், வத்ஸனாபி, கந்தகம், வெங்காரம், தாம்ர பஸ்மம், யவக்ஷாரம், சுக்கு, திப்பிலி, மிளகு, நேர் வாளம், திரிபலை, இவைகளைச் சம அளவு எடுத்து கொஞ்சம் கொஞ்சமாகத்

தேன் விட்டு 100 நாள் வரை அரைத்து குண்டுமணியளவு மாத்திரை செய்து கொள்ளவும். 1–2 மாத்திரை சுக்குத்தூளுடன் சாப்பிட்டு மேல் இளநீர் சாப்பிடவும். மல சுத்தியானதும் வெண்ணெய் எடுத்த மோர்சாதம் இந்துப்பு, ஜீரகத்தூள் சேர்த்து சாப்பிடவும். ஸன்னிபாதஜ்வரம், நாள் பட்ட ஜ்வரம், விஷம ஜ்வரம், மண்ணீரல் வீக்கம், வயிற்று உப்புசம், காசம், சுவாசம், அக்னிமந்தம் இவைகள் நீங்கும்.

✲ **ரஸராஜேந்திர ரஸம் :** (பை. ரத்.) ரஸம், தாம்ர பஸ்மம், அயஸ் பஸ்மம், அப்ரக பஸ்மம், காரீய பஸ்மம், வெள்ளீய பஸ்மம், கந்தகம், தாளகம், வத்ஸனுபி, இவை வகைக்கு சம எடை சேர்த்து மணத்தக்காளிச் சாறு, மீன், பன்றி, மயில், ஆடு, எருமை இவைகளின் பித்தம், சுக்கு, திப்பிலி, மிளகு, இவைகளின் கஷாயம் இவை ஒவ்வொன்றிலும் ஒவ் வொரு நாள் அரைத்துக் குண்டுமணியளவு மாத்திரை செய்துகொள்ளவும். துளஸிச்சாற்றுடன் 1-2 மாத்திரை கொடுக்கவும். தலைமேல் இடைவிடாது ஜலதாரையும், சர்க்கரையுடன் சேர்த்த தயிர்சாதமும் இதனுல் ஏற்படும் எரிச்சலைக் குறைக்கக் கூடியவை. பித்தம் சேர்த்த மருந்துகளைக் கொடுக்கும்போது ஏற்படும் எரிச்சலைத் தடுக்க நோயாளியை ஜலம் நிறைந்த பாத்திரத்தில் உட்காரவைத்தும் அவன் தலையின்மேல் குளிர்ந்த நீரை தாரையாக ஊற்றியும், குளிர்ந்த நீரை குடிக்கச் செய்தும், சந்தனத்தை பச்சைக்கற்பூரம் சேர்த்து அரைத்து உடலில் பூசியும், இளநீர் சர்க்கரை சேர்த்த புதிய தயிர் இவைகளை அருந்தச் செய்தும் உபசரிக்கவேண்டியது.

✲ **திரிதோஷ நீஹார சூர்ய ரஸம் :** (பை. ரத்.) ரஸம் 1 தோலா, கந்தகம் 2 தோலா கஜ்ஜலி செய்து, கொடிவேலிவேர்ப் பட்டையின் சாற்ருல் 8 நாள் அரைத்து வெய்யிலில் வைத்து, வத்ஸனுபி 8 தோலா சேர்த்து ; மீன், பன்றி, மயில், ஆடு, எருமை இவைகளின் பித்தத்தால் ஒவ்வொரு பாவனை செய்துகொள்ளவும். ஸன்னிபாத ஜ்வரத்தில் நிகரற்றது.

✲ **ஸன்னிபாத சூர்ய ரஸம் :** (பை. ரத்.) லிங்கம், கந்தகம், தாம்ர பஸ்மம், மிளகு, திப்பிலி, வத்ஸனுபி, சுக்கு, கருஊமத்தை விதை இவை களைக் கஞ்சா இலைச் சாற்றில் 3 நாள் அரைத்து குண்டுமணி யளவு மாத்திரை செய்துகொள்ளவும். ஒரு மாத்திரை வெற்றிலையுடன் சாப்பிட்டு. எருக்கவேர் பட்டை கஷாயம் அனுபானமாகச் சாப்பிட, முத்தோஷங் களாலும் ஏற்படும் ஜ்வரங்கள் நீங்கும்.

✲ **பிரதாப தபன ரஸம் :** (பை. ரத்.) கந்தகம், லிங்கம், தாளகம், ரஸம், வெண்காரம், அயஸ் பஸ்மம், பால்துத்த பஸ்மம், ஸர்ஜக்ஷாரம்,

மஞ்சிட்டி, வத்ஸனுபி இவை வகைக்குச் சமனெடை கல்வத்திலிட்டு, கருநொச்சி, ஆனைச்சுண்டை இவைகளின் சாற்றால் 8 யாமம் அரைத்துக் குப்பியிலிட்டு, வாலுகா யந்திரத்தில் 8 யாமம் எரித்து தானாக ஆறியவுடன் எடுத்து இஞ்சிச்சாற்றுடன் ஒரு யவ அளவு கொடுக்க ஸந்நிபாத ஜ்வரம் நீங்கும். தயிர் சாதம், பால், ஆட்டு மாமிசம் இவை பத்ய உணவாகும்.

✲ **ஸ்வேதசைத்யாரி ரஸம் :** (பை. ரத்.) தாம்ர பஸ்மம், சுக்கு, எருக்கம் வேர் இவை வகைக்கு ½ தோலா, பஞ்ச லவணம் 4 தோலா இவைகளை ஒன்றாக அரைத்து லகு புடமிட்டு எடுத்து, அத்துடன் ரஸம், கந்தகம், சங்கபஸ்மம் வகைக்கு 1 தோலா சேர்த்து தேவதாளி பீர்க்கின் சாற்றுடன் 3 நாளும், மயில் பித்தத்துடன் ஒரு நாளும் அரைத்து தயிருடன் சேர்த்துக் கொடுக்கவும். சில்லிட்ட உடல் மீண்டும் சூடு பெறும். நெய், இந்துப்பு, பாசிப்பயறு, பேரீச்சை, கரும்பு, திராக்ஷை இவை பத்யமாகும்.

✲ **சூசிகாபரண ரஸம் :** (பை. ரத்.) வத்ஸனுபி 4 தோலா, ரஸம் ¼ தோலா இரண்டையும் 2 நாள் அரைக்கவும். அவைகளை வெள்ளை மண் பூசிய சராவத்திலிட்டு நன்கு மண் சீலை செய்து அடுப்பிலிட்டு 6 மணி நேரம் எரிக்கவும். ஆறியவுடன் எடுத்து உள் தங்கியுள்ள ரஸத்தை சுரண்டி யெடுத்து காற்றுப் புகாதவாறு குப்பியிலிட்டு அடைக்கவும். ஊசி முனையில் ஒட்டுமளவு ரஸமெடுத்து ஸன்னிபாத நிலையிலுள்ள நோயாளி மூர்ச்சித்திருக்கும்போது அவன் தலையில் கீறி, இதைத் தடவித் தேய்க்க ரத்தத்துடன் மருந்து கலந்தவுடன் மூர்ச்சை தெளியும். உடலில் எரிச்சல் ஏற்பட்டால் இனிப்பான ஆகாரங்கள் கொடுக்கவும்.

✲ **பாடவ ரஸம் :** (பை. ரத்.) ஒரு சட்டியில் உப்பை நிரப்பி அதன் நடுவில் உப்பாலான மூசையையும், அதனுள் பெருங்காயத்தாலான மூசையையும், அதன் நடுவில் 21 நாள் ஜலம் விட்டரைத்த ரஸம், வத்ஸனுபி இவைகளின் கல்கத்தையும் வைத்து மேல் மூடி மண் சீலை செய்து 4 யாமம் எரிக்கவும். எள்ளளவு தகுந்த அனுபானங்களுடன் கொடுக்க; எல்லா ஜ்வரங்கள், கிரஹணி, உதரம், சூலம், அக்னி மந்தம், வாத வியாதி இவை தணியும்.

✲ **கஸ்தூரீபைரவ ரஸம் :** (பை. ரத்.) லிங்கம், வத்ஸனுபி, வெண்காரம், ஜாதிப்பத்திரி, ஜாதிக்காய், மிளகு, திப்பிலி, கஸ்தூரி இவை வகைக்குச் சமனெடை சேர்த்து நன்கு அரைத்து 2-4 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும், ரோகத்திற்கு எற்ற அனுபானத்துடன் கொடுக்க எல்லா ஸந்நிபாதங்களும் நீங்கும்.

✲ **மத்யமகஸ்தூரி பைரவம் :** (பை. ரத்.) காரீய பஸ்மம், பால் துத்தம். கஸ்தூரி, தங்க பஸ்மம், வெள்ளி பஸ்மம் இவை வகைக்கு 1 தோலா, காந்த பஸ்மம், 4 தோலா, ஊமத்தை கன சத்துவம், ரஸபஸ்மம், கிராம்பு, ஜாதிக்காய் இவை வகைக்கு 2 தோலா எல்லாவற்றையும் தும்பைப்பூச்சாறு, வெற்றிலைச்சாறு, இவைகளைவிட்டு அரைக்கவும். பிறகு பச்சைக்கற்பூரம் 2 தோலா திரிகடுசூர்ணம் 2 தோலா சேர்த்து அரைத்து 4-6 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். வாதம் மிகுந்த ஸன்னிபாதம், கபநோய்கள் கர்ப்பநாசம், சுக்கிலநஷ்டம், ப்ர மேகம், விஷம ஜ்வரம், காசம், சுவாசம், க்ஷயம் குல்மம், வீக்கம் முதலிய பெரிய நோய்களில் நல்லது. இதைச் சாப்பிட சுக்கிலக்ஷயம் ஏற்படாது.

✲ **பிருஹத்கஸ்தூரி பைரவ ரஸம் :** (பை. ரத்.) கஸ்தூரி, பச்சைக் கற்பூரம், தாம்ரபஸ்மம், காட்டகத்திப்பூ, பூனைக்காலி விதை, வெள்ளி பஸ்மம், தங்க பஸ்மம், முத்து பஸ்மம், பவழ பஸ்மம், அயஸ் பஸ்மம், வட்டத்திருப்பி. வாய்விளங்கம், கோரைக்கிழங்கு, சுக்கு, வெட்டிவேர், தாளகம், அப்ரக பஸ்மம், நெல்லிமுள்ளி இவை வகைக்கு சம எடை, எருக்கிலைச்சாறு விட்டரைத்து மாத்திரை செய்துகொள்ளவும். இஞ்சிச் சாறுடன் சாப்பிட விஷமஜ்வரம், த்வந்த்வஜ்வரம், பூதஜ்வரம், அபிசார ஜ்வரம் முதலியவைகளைப்போக்கும். வில்வப்பழத்தூள், ஜீரகத்தூள், தேன் சேர்த்துச் சாப்பிட ஆமாதிஸாரகிரஹணி, ஜ்வராதிஸாரம், காசம், அக்னி மந்தம் இவைகளைப் போக்கும். எல்லா ஜ்வரங்களிலும் சிறந்த மருந்து.

✲ **கஸ்தூரிபூஷணரஸம் :** (பை. ரத்.) ரஸம், அப்ரகபஸ்மம், வெண்காரம், சுக்கு. கஸ்தூரி, திப்பிலி, ததநீமூலம், கஞ்சா விதை, பச்சைக்கர்பூரம், மிளகு இவை வகைக்கு சம எடை இஞ்சிச்சாற்றுடன் 7 நாள் அரைத்து இஞ்சிச்சாற்றுடன் கொடுக்க வாத கப ஜ்வரம், பித்த கப ஜ்வரம் திரிதோஷ ஜ்வரம், காசம், சுவாசம், க்ஷயம் இவைகள் நீங்கும். சுக்கிலத்தையும் பலத்தையும் அதிகமாக்கும்.

✲ **கபகேது :** (பை. ரத்.) வெண்காரம், திப்பிலி, சங்க பஸ்மம், வத்ஸநாபி இவை வகைக்குச் சமனெடை இஞ்சிச்சாற்றுடன் 3 நாள் அரைத்து மாத்திரை உருட்டி, சளி, சுவாசகாசம், தலைவலி, தொண்டைக் கம்மல் முதலிய கபரோகங்களில் கொடுக்க நல்லது.

✲ **மஹா கபகேது ரஸம் :** (பை. ரத்.) சங்க பஸ்மம், சுக்கு, மிளகு, திப்பிலி, வெண்காரம் இவை வகைக்கு 1 தோலா, வத்ஸநாபி 5 தோலா, இஞ்சிச்சாறுவிட்டு 3 நாள் அரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்து, இஞ்சிச் சாற்றுடன் சாப்பிட தொண்டை, தலை இவைகளில் ஏற்படும் கப நோய்களைப் போக்கும்.

✲ **ச்லேஷ்மகாலாநலரஸம்:** (பை. ரத்.) ரஸம், கந்தகம், தாம்ர பஸ்மம், துத்தம், மனேசிலை, தாளகம், காய்பல், கரு ஊமத்தை விதை, பெருங்காயம், ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், கோஷ்டம், செவதைவேர், தந்தீ மூலம், சுக்கு, மிளகு, திப்பிலி, சரக்கொன்னைப்புளி, வெள்ளீய பஸ்மம், வெண்காரம் இவை வகைக்குச் சம எடை எடுத்து எருக்கம் பாலில் அரைத்து மாத்திரை செய்து கொள்ளவும். வாத கப ஜ்வரம், பித்த கப ஜ்வரம், ஸன்னிபாத ஜ்வரம், ஜீர்ண ஜ்வரம், வீக்கம் இவைகளில் நல்லது. கபம் மிகுந்த தாது நிலையை வாதம் மிகுந்ததாக மாற்றும்.

✲ **ஜ்வரமாதங்ககேஸரி:** (பை. ரத்.) ரஸம், கந்தகம், தாளகம், ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், யவக்ஷாரம், இந்துப்பு, சர்ஜக்ஷாரம், வேப்பம் விதை, எட்டிவிதை, கொடிவேலி விதை, இவை வகைக்கு ஒரு தோலா. கருஊமத்தை விதை 2 தோலா, வத்ஸனுபி 2 தோலா இவைகளைக் கருநொச்சிச் சாற்றாலரைத்து 2-3 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். ஆமாஜீரணம், காமாலை, பாண்டு, அக்னி மந்தம், எல்லா ஜ்வரங்கள், உதரம்-இவைகளைப் போக்கும்.

✲ **ஜ்வரமுராரி:** (பை. ரத்.) ரஸம், கந்தகம், வத்ஸனுபி, லிங்கம் இவை வகைக்கு 2 தோலா; கிராம்பு ½ தோலா; மிளகு 4 தோலா; ஊமத்தை விதை 8 தோலா; செவதை வேர் 1 தோலா இவைகளை தந்தீ மூலச்சாறு விட்டு 7 நாள் அரைத்து 2 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். அஜீரணம், மலபந்தம், உடல் பிடிப்பு, வலி இவைகளுடன் கூடிய ஜ்வரம், ஆமவாதம், அம்லபித்தம், காசம், சுவாசம், க்ஷயம், உதரம், இருத்ரவலி, சந்திவாதம், மஜ்ஜவாதம், வீக்கம், மண்ணீரல், கல்லீரல்வீக்கம், வாதரோகம் குஷ்டம் இவைகளில் நல்லது.

✲ **ஜ்வரகேஸரீ ரஸம்:** (பை. ரத்.) ரஸம், வத்ஸனுபி, சுக்கு, திப்பிலி மிளகு, கந்தகம், திரிபலை, இவை வகைக்கு ஒரு தோலா, நேர்வாளம் 9 தோலா இவைகளைக் கருசலாங்கண்ணிச்சாறு விட்டரைத்து பெரியோர் களுக்காகக் குந்துமணியளவும், சிறியோர்களுக்காக கடுகளவும் மாத்திரை செய்து கொள்ளவும். சர்க்கரையுடன் சாப்பிட பித்த ஜ்வரம் நீங்கும்; மிளகுடன் சாப்பிட ஸந்நிபாத ஜ்வரமும், திப்பிலி, ஜீரகத்துடன் அருந்த தாஹ ஜ்வரமும் நீங்கும்.

✲ **பஞ்சானனரஸம்:** [1] (பை, ரத்.) வத்ஸநாபி 2 தோலா, மிளகு 4 தோலா, கந்தகம் 2 தோலா, லிங்கம் ஒரு தோலா தாம்ரபஸ்மம் 12 தோலா இவைகளை எருக்கவேர்ப் பட்டைக் கஷாயம் விட்டு அரைத்துக்

1. இதில் அளவு முறையில் சிலர் வேறு விதமாகக் கூறுவர். 'லோசன' என்ற சப்தத்திற்கு கண்கள் மூன்றெனக் கொண்டு கந்தகம் மூன்று தோலா என்றும், சசியுகம் என்ற பாட பேதத்தைக் கொண்டு தாம்ரபஸ்மம் இரண்டு தோலா என்றும் மொத்தம் 12 தோலாவாகக் கூடியது எனக் கருதுவது முண்டு. இதுவும் கவனிக்கத் தக்கதே. பஞ்சானனஜ்வராங்குசம் என்பர் சிலர்.

குந்துமணி அளவு மாத்திரை செய்து கொள்ளவும். ஜ்வரத்தைக் குறைப்பதில் நிகரற்றது. மோர், தயிர் சாதம், இந்துப்பு, சர்க்கரை சேர்த்த பயற்றங்கஞ்சி, சந்தனப்பூச்சு. குளிர்ந்த ஜலம், பசுவின்பால், மாதுளம்பழ ரஸம் இவை குடித்தல் பத்யமாகும்.

✲ **ரஸராஜ ரஸம்:** ரஸம் ஒரு தோலா, கந்தகம் 3 தோலா, ஸ்வர்ணமாக்ஷிகபஸ்மம் ஒரு தோலா, மனோசிலை 2 தோலா, தாளகம் 18 தோலா, தாம்ரம் 5 தோலா சுத்திசெய்த சேங்கொட்டை மூன்று பங்கு, இவைகளைக் கல்வத்திலிட்டு நன்கு அரைத்துப் பிறகு கள்ளிப் பாலில் பாவனை செய்து கெட்டியான மட்குடுவையிலிட்டு வாய் மூடி மண் சீலை செய்து அடுப்பிலேற்றி நான்கு யாமம் எரிக்கவும், தானாக ஆறியதும் எடுத்து அரைத்து 2-4 யவ அளவு வெற்றிலையில் வைத்து மடித்து சாப்பிடவும். எட்டு வித ஜ்வரங்களையும் போக்கும்.

✲ **முத்ரோத்காடக ரஸம் :** (பை.ரத்.) ரஸம், கந்தகம், ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம், வெங்காரம், இந்துப்பு, ஸௌவர்சிலை உப்பு, கந்தக வெடியுப்பு, குக்கில், வத்ஸநாபி இவை வகைக்கு சம அளவு எடுத்து, கரு ஊமத்தை வேர் கஷாயம் விட்டு 7 நாள் பாவனை செய்து, பிறகு நெரிஞ்சில், வெட்பாலை, மணிப்புங்கிலை, கொடிவேலிவேர், வாலுளுவை, மருதோன்றி, திரிபலை, முள்ளுக் கத்திரிவேர் இவை ஒவ்வொன்றின் கஷாயத்திலும் ஒவ்வொரு தடவை பாவனை செய்து அரைத்து 2 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். இதைச் சாப்பிட்டு உடலைப் போர்த்தி இருக்க ஜ்வரம் இறங்கி விடும்.

✲ **பர்ணகண்டேச்வர ரஸம் :** (பை.ரத்.) ரஸம், கந்தகம், மனோசிலை வத்ஸநாபி இவை வகைக்குச் சம எடை கல்வத்திலிட்டு கருநொச்சி இலைச் சாற்றிலும் இஞ்சிச்சாற்றிலும் 3–3 தடவை பாவனை செய்து 2 யவ அளவு மாத்திரை செய்து கொண்டு வெற்றிலையில் வைத்து சாப்பிட ஜ்வரமிறங்கும்.

✲ **சீதபஞ்சீ ரஸம்:** [1] (பை.ரத்) ரஸம், பால் துத்தம், தாளகம், துத்தம், வெங்காரம், கந்தகம், இவை வகைக்குச் சம எடை சேர்த்துப்

---

1, இந்த முறை பல நூல்களில் காணப்படுகின்றது.. வெங்காரத்திற்குப் பதிலாக மனோசிலை சேர்ப்பதும் தாம்ரபாத்திரத்தினுள் வைத்து எரிக்காமலே பாகவிலைச் சாற்றால் அரைத்ததை மாத்திரையாக்கி உபயோகிப்பதும் ரஸ முக்தாவளியில் காணப்படுகின்றது. சீதஹாரி, சீதாரி, பஞ்சானனம். ஜ்வராரி என்ற மாற்றுப் பெயர்களுமுண்டு. இவைகளுடன் வத்ஸநாபி சேர்த்த யோகம் சீதாங்குசம் என்று. இது முன்னர் யோகரத்னாகரத்தில் வந்து விட்டது. இதில் தாம்ர பாத்ர பாகம் கிடையாது. வத்ஸநாபி சேர்ப்பது நல்லதே. சில நூல்களில் துத்தம் விடப்பட்டிருக்கின்றது. பால் துத்தத்தின் ஸ்தானத்தில் தாம்ர பஸ்மம் சேர்க்குமாறு சில நூல்கள் கூறுகின்றன. தாம்ர பாத்ரத்தின் பஸ்ம பாகம் சேருவதால் இது அவ்வளவு அவசியமில்லை. பால் துத்தம் மிகவும் அவசியமானதே. ஸ்வர்ணமாக்ஷிகம் அதிகமாகச் சேர்க்குமாறு ரஸகாமதேனு கூறுகிறது. அதுவும் சேர்ப்பது நல்லதே.

பாகலிலைச் சாற்றில் ஒருநாள் அரைத்து தாம்ரபாத்திரத்தினுள் இரண்டு நெல் கனத்திற்குப் பூசி, தாமிர மூடியால் மூடி மண்சீலை செய்து வாலுகாயந்திரத்திலிட்டு எரிக்கவும். எரிக்கும் போது மணலில் போட்ட நெல் பொரிந்து விடும் காலத்தில் தீயை நிறுத்தி தானே ஆறவிட்டு பாத்திரத்தினுள்ளிருக்கும் ரஸத்தை பஸ்மமான தாம்ரபாகத்தையும் சேர்த்து எடுத்து அரைத்து 2 யவ அளவு வெற்றிலையில் மிளகுத்தூளுடன் சேர்த்து வைத்துச் சாப்பிட ஜ்வரம் மூன்று நாட்களில் நின்றுவிடும்.

✲ **ஜ்வராங்குசம் :** (1) (பை. ரத்.) ரஸம் ஒரு தோலா, கந்தகம் 2 தோலா, வெங்காரம் 2 தோலா, வத்ஸநாபி ஒரு தோலா, மிளகு 5 தோலா, காய்பல் 5 தோலா, நேர்வாளம் 5 தோலா இவைகளை ஒன்றாய்ச் சேர்த்து நன்கு அரைத்து 2 யவ அளவு கொடுக்க நாட்பட்ட ஜ்வரம் போகும்.

✲ **ஜ்வராங்குசம் :** (2) (பை. ரத்.) தாம்ர பஸ்மம் ஒரு தோலா, தாளகம் 2 தோலா இரண்டையும் நன்கு அரைத்து பாகலிலைச் சாற்றால் அரைத்து பூதரயந்திரத்திலிட்டு எரித்து ஆறிய பின் எடுத்து சதுரக் கள்ளிப் பால் விட்டரைத்து மறுபடியும் பூதரயந்திரத்தில் பாகம் செய்யவும். இஞ்சிச் சாற்றுடன் 1-2 யவ அளவு கொடுக்க முறை ஜ்வரங்களனைத்தும் குணமாகும்.

✲ **ஜ்வராங்குசம் :** (3) (பை. ரத்.) மிளகு, வெங்காரம், சங்க பஸ்மம், ரஸம், கந்தகம், வத்ஸநாபி இவைகளை வகைக்குச் சம எடை சேர்த்து வெற்றிலைச் சாற்றாலரைத்து ஒரு யவ அளவு மாத்திரை செய்து தேனில் கொடுக்க எட்டுவித ஜ்வரமும் நீங்கும்.

✲ **ஜ்வராங்குசம் :** (4) (பை. ரத்.) ரஸம் ஒரு தோலா, கந்தகம் ஒரு தோலா, சுக்கு, வெங்காரம், தாளகம், வத்ஸநாபி இவை வகைக்கு ½ தோலா, கருசலாங்கண்ணிச் சாற்றில் 3 நாள் அரைத்து 2 யவ யளவு மாத்திரை செய்து திப்பிலித்தூள் தேன் சேர்த்துக் கொடுக்க முறை ஜ்வரங்கள் நீங்கும்.

✲ **ஸர்வஜ்வராங்குசம் :** (பை. ரத்.) ரஸம், கந்தகம், மிளகு, சுக்கு, திப்பிலி, லவங்கப்பட்டை, நேர்வாளம், கோஷ்டம், நிலவேம்பு, கோரைக் கிழங்கு-வகைக்குச் சம எடை. கரு நொச்சிச் சாற்றிலும், இஞ்சிச் சாற்றிலும் அரைத்து 4 யவ அளவு மாத்திரை. எல்லாவித ஜ்வரங்களுக்கும் நல்லது.

✲ **பிருஹத் ஜ்வராங்குசம் :** (பை. ரத்.) ரஸம், கந்தகம், தாம்ர பஸ்மம், லிங்கம், தாளகம், அயஸ் பஸ்மம், வெள்ளீய பஸ்மம், ஸ்வர்ண

மாக்ஷிக பஸ்மம், பால்துத்தம், மனேசிலை, தங்க பஸ்மம், அப்ரக பஸ்மம், பூங்காவி, வெண்காரம், வெள்ளி பஸ்மம் வகைக்குச் சம எடை. எலுமிச்சம் பழச்சாறு, துளஸிச் சாறு, கொடிவேலிவேர்ப் பட்டைக் கஷாயம், கஞ்சா இலைச் சாறு, புளித் தண்ணீர் இவைகளில் ஒவ்வொன்றிலும் 3 நாள் அரைத்து, கடும் வெய்யிலிலிட்டு 2 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். 8 வகை ஜ்வரங்களிலும், ஜலதோஷத்தினல் ஏற்பட்ட ஜ்வரத்திலும், நாட்பட்ட ஜ்வரத்திலும் நல்லது

✲ **மஹாஜ்வராங்குசம் :** (பை. ரத்.) ரஸம், லிங்கம், தாம்ரபஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், துத்தம், வெள்வங்கபஸ்மம், கந்தகம், பால்துத்தம், மனேசிலை, தாளகம், காந்தக்கல், பூங்காவி, வெண்காரம், நேர்வாளம் வகைக்கு சம எடை. எலுமிச்சம்பழச்சாறு, துளஸிச்சாறு, கொடிவேலி வேர்ப்பட்டைக் கஷாயம், கஞ்சா இலைச்சாறு, புளித்தண்ணீர் இவை ஒவ்வொன்றிலும் 3 நாள் அரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். விஷம ஜ்வரங்கள் நீங்கும்.

✲ **ரவிசுந்தரஜ்வராங்குசம் :** (பை. ரத்.) ரஸம் 1 தோலா, கந்தகம் 1 தோலா, மீன் பித்தம் 1 தோலா, வத்ஸனுபி 1 தோலா, தாளகத்தினல் பஸ்மமாக்கப்பட்ட தாமிர பஸ்மம் 8 தோலா, 21 நாள் எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து வெய்யிலில் இட்டு வைத்துக் கொள்ளவும். எல்லா ஜ்வரங்களிலும் நல்லது.

✲ **ரத்னகிரிரஸம் :** (பை. ரத்.) மனேசிலை, வெண்காரம், லிங்கம், ஜாதிக்காய், கிராம்பு, வகைக்குச் சம எடை, துளஸி, இஞ்சி, பிரம்மதண்டி, இவைகளின் ஒவ்வொன்றின் சாற்றிலும் 3-3 தடவை பாவனை செய்து 2 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். விஷம-வாத-கப-மந்தர-ஆந்த்ரிக-ஜ்வரங்களிலும், மற்ற வாத கப மிகுதியானல் ஏற்படும் நோய்களிலும் ஏற்ற அனுபானங்களுடன் கொடுப்பது நல்லது.

✲ **பிராம்ஹீ வடீ :** (பை. ரத்.) நிழலில் உலர்த்தப்பட்ட பிரமி இலை 5 தோலா, ஸ்வர்ண ஸிந்தூரம் 2 தோலா, அப்ரக பஸ்மம், வெள்ளீயபஸ்மம், கோமூத்ர சிலாஜது, மிளகு, திப்பிலி வாய்விளங்கம் வகைக்கு 1 தோலா, கஸ்தூரி ½ தோலா இவைகளை பிரமிச்சாற்றால் 3 நாட்கள் பாவனை செய்து அரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். ஜ்வரத்திற்குப் பின்னர் ஏற்படும் பலஹீனத்தையும் ஹிருதய பலஹீனத்தையும் நாட்பட்ட ஜ்வரத்தையும், ப்ரலாபகஜ்வரம், மந்தர ஜ்வரம், சூதிகாஜ்வரம் முதலியவைகளையும் போக்கும். மூளைக்கும் ஹிருதயத்திற்கும் பலமளிக்கும். வாதகப மிகுதியான ஸன்னிபாத நிலைகளில் மிகவும் நல்லது.

✲ **விஷமஜ்வரக்னீ வடீ** : (பை. ரத்.) வெள்ளைப்பாஷாணம், லிங்கம், மிளகு வகைக்கு சம எடை துளஸிச்சாற்றிலும், சீந்திற்கொடிச்சாற்றிலும் 5–5 பாவனைகள் செய்து ஒரு யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். கொத்துமல்லிவிதை, சுக்கு, கோரைக்கிழங்கு, விலாமிச்சைவேர், வில்வப் பட்டை, (தான்ய பஞ்சகம்) இவைகளின் கஷாயத்துடனும் பாலுடனும் தினம் 3 வேளை சாப்பிட, எல்லா முறை ஜ்வரங்களும், நாட்பட்ட ஜ்வரங்களும் நாட்பட்ட சுவாச காசங்களும் விலகும்.

✲ **ரத்னப்ரபா வடி** : (பை. ரத்.) ஸ்வர்ண பஸ்மம், அயஸ் காந்த பஸ்மம், வைக்ராந்த பஸ்மம், பால் துத்த பஸ்மம், தேனிரும்பு பஸ்மம், பவழ பஸ்மம், முத்து பஸ்மம் வகைக்குச் சம எடை. மரமஞ்சள் கஷாயத்தில் 7 நாள் அரைத்து 2 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். சதத ஜ்வரம், மண்ணீரல் பெருக்கம், அக்னிமந்தம், காமாலை, கல்லீரல் பெருக்கம் பயங்கரமான நரம்பு வலி இவைகளைப் போக்கும்.

✲ **சீதபஞ்சீ ரஸம்** : (பை. ரத்.) ரஸம், லிங்கம், தாளகம், துத்தம், கிளிஞ்சல் பஸ்மம் இவை வகைக்குச் சம எடை கற்றாழைச் சாற்றில் 7 பாவனை செய்து வில்லை தட்டிக் காய வைத்து மடக்கிவிட்டு சீலை செய்து வாலுகாயந்திரத்தினுள் வைத்து 1 நாள் முழுதும் எரிக்கவும். 2–6 யவ அளவு வரை ஏற்ற அனுபானத்துடன் கொடுக்க எல்லா முறை ஜ்வரங்களும் நீங்கி விடும். உப்பில்லாது பால் அல்லது மோருடன் உணவு ஏற்கவும்.

✲ **சூடாமணி ரஸம்** : (1) (பை. ரத்.) ரஸம், பவழம், தங்கம், வெள்ளி ஈயம், தாமிரம், முத்து, அயம், அப்ரகம் இவைகளின் பஸ்மம் வகைக்குச் சம எடை ஜலம் விட்டு அரைத்து 4–6 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். தாதுகத ஜ்வரம், ஸன்னிபாத ஜ்வரம், விஷம ஜ்வரம், காம சோக ஜ்வரம், காசம், சுவாசம், உடல் முழுதும் வலி, தலை வலி. காது வலி, பல் வலி, தொண்டைக் கட்டு, கிரகணி, ஆமவாதம், இடுப்பு வலி, அக்னி மந்தம், விஷூசி, மூலம், காமலை, பிரமேகம், நீர்ச் சுருக்கு இவைகள் எல்லாவற்றிலும் சிறந்தது.

✲ **பிருஹத்சூடாமணி ரஸம்** : (பை. ரத்.) பவழம், வெள்ளி, அயம், தாளகம், தங்கம், ரஸம் இவைகளின் பஸ்மம், கஸ்தூரி, ஸ்வர்ணசெந்தூரம், கிராம்பு, முத்து, தாளீசபத்திரி, அப்ரக பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், ராஜாவர்த்த (லாஜவர்த) பஸ்மம், நெருஞ்சிமுள், ஜாதிக்காய், ஜாதிப் பத்திரி, மிளகு, பச்சைக் கற்பூரம், துத்த பஸ்மம் வகைக்கு 1 தோலா, அமுக்கராக்கிழங்குத் தூள் 40 தோலா, நொச்சி, கஞ்சா இலை, ஆடா

தொடை, எருக்கம் வேர், நெருஞ்சி முள் இவைகளின் சாற்றில் 7–7 தடவை பாவனை செய்து கொள்ளவும். 2 யவ அளவு மாத்திரை. 8 வித ஜ்வரங்களிலும் மிகவும் சிறந்த ஔஷதம்.

✲ **பிருஹத்ஜ்வரசூடாமணி ரஸம்:** (பை. ரத்.) தங்கம், அயம், வெள்ளி, அப்ரகம் இவைகளின் பஸ்மம், ஸ்வர்ணவிந்தூரம், கஸ்தூரி, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, கிராம்பு, நெருஞ்சிமுள், பச்சைக்கற்பூரம், லவங்கப்பட்டை, நிலப்பனை இவை வகைக்கு 1 தோலா, அமுக்கராக் கிழங்கு 3 தோலா, பவழ பஸ்மம், ரஸவிந்தூரம், ராஜாவர்த்த பஸ்மம் துத்தபஸ்மம் இவை வகைக்கு 3 தோலா; நொச்சி, கஞ்சா, ஆடா தொடை, எருக்கம்வேர்ப்பட்டை, நெருஞ்சி முள் இவைகளின் கஷாயத்தில் பாவனை செய்து கொள்ளவும். 8 வித ஜ்வரங்களும் போகும்,

✲ **பானுசூடாமணி ரஸம்:** (பை. ரத்.) ஸ்வர்ண பஸ்மம், ரஸ விந்தூரம், பவழ பஸ்மம், ஈய பஸ்மம், அயஸ் பஸ்மம், தாமிர பஸ்மம், பச்சிலை, ஓமம், சுக்கு, இந்துப்பு, மிளகு, கோஷ்டம், கருங்காலி வைரம், மஞ்சள், மரமஞ்சள், ரஸாஞ்சனம், ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம் வகைக்குச் சம எடை, இவைகளை ஜலம் விட்டரைத்து 2-4 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். எல்லா ஜ்வரங்களிலும் நல்லது.

✲ **சிந்தாமணி ரஸம்:** (பை. ரத்.) ரஸம், கந்தகம், தாமிரபஸ்மம், அப்ரக பஸ்மம், திரிபலை, திரிகடு, நேர்வாளம் வகைக்கு 1 தோலா, தும்பைப்பூச்சாற்றுலரைத்து 2-4 யவ அளவு மாத்திரை செய்து இஞ்சிச் சாற்றுடன் கொடுக்க வலி அஜீரணத்துடன் கூடிய 8 வித ஜ்வரங்களிலும் நல்லது.

✲ **சிந்தாமணி ரஸம்:** (2) (பை. ரத்.) ரஸம், கந்தகம், வத்ஸனுபி, அயஸ்பஸ்மம், ஊமத்தை விதை வகைக்கு 1 தோலா, தாம்ர பஸ்மம் 2 தோலா, கொடிவேலிவேர்ப் பட்டை 2 தோலா, திரிகடு சூர்ணம் 4 தோலா, இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றிலும், இஞ்சிச்சாற்றிலும் அரைத்து 2 யவ அளவு மாத்திரை செய்து கொடுக்க அக்னிமந்தம், அஜீரணம், அரோசகம், இவைகளுடன் கூடிய 8 வித ஜ்வரங்களுக்கும் நல்லது.

✲ **சிந்தாமணி ரஸம்:** (3) (பை. ரத்.) அயம், தாம்ரம், வெள்ளி, தங்கம், தாளகம், பால்துத்தம், வெண்கலம், ஈயம், பவழம், மூத்து, ஸ்வர்ண மாக்ஷிகம், அன்னபேதி, மனேசிலை இவைகளின் பஸ்மம், ரஸம், கந்தகம், வெங்காரம், பச்சைக்கற்பூரம் இவை வகைக்கு ஒரு தோலா, சிறுதேக்கு, ஆடாதோடை, கருநொச்சி, வெற்றிலை, முன்னை, பாகலிலை, பேய்ப்

புடலிலை, கஞ்சா இலை, மூக்கரட்டை இலை, இஞ்சி இவைகளின் சாற்றில் ஒவ்வொன்றிலும் 7-7 பாவனை செய்வது. 2-6 யவ அளவு மாத்திரை. 8 வித ஜ்வரங்கள், தாதுகதஜ்வரம், வீக்கம், பாண்டு, ஹலீமகம், மண்ணீரல் பெருக்கம், அக்ரமாம்சம், கல்லீரல் நோய் இவைகளில் மிகவும் நல்லது.

✲ **சிந்தாமணி ரஸம் :** (4) (பை. ரத்.) ரஸம், கந்தகம், வத்ஸனுபி, திரிகடு, திரிபலை, மனேசிலை, வெள்ளி பஸ்மம், தங்க பஸ்மம், முத்து பஸ்மம், தாளக பஸ்மம் இவை வகைக்கு 1 தோலா. கஸ்தூரி $\frac{3}{8}$ தோலா. கரிசிலாங்கண்ணி, துளஸி, இஞ்சி இவைகளின் சாற்றில் ஒவ்வொரு பாவனை செய்து 2-4 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். கப-ஸன்னிபாத-விஷம ஜ்வரங்களிலும் அக்னிமந்தம், தலைவலி, வித்ரதி, பகந்தரம் இவைகளிலும் நல்லது.

✲ **த்ரியாஹிகாரி ரஸம் :** (பை. ரத்.) பால் துத்த பஸ்மம் 4 தோலா, சங்க பஸ்மம் 4 தோலா, துத்தம் 1 தோலா இவைகளை தாராய்ப்பூண்டு, முன்னை, சிறுகீரை இவைகளின் சாற்றில் 7-7 பாவனை செய்துகொள்ளவும். 4-6 யவ அளவு மாத்திரை செய்து கொண்டு ஜ்வரத்தைப் போக்கவல்ல கிருதங்களுடன் சாப்பிட மூன்றும் முறை ஜ்வரம் விலகும்.

✲ **சாதுர்த்திகாரி ரஸம் :** (பை. ரத்.) தாளகம், மனேசிலை, துத்தம், சங்கபஸ்மம். கந்தகம் வகைக்குச் சம எடை. கற்றாழைச் சாற்றிலரைத்து ஒரு கஜ புடமிட்டு மறுபடியும் கற்றாழைச்சாற்றிலரைத்து 2 யவ அளவு மோருடனே, மிளகு நெய்யுடனே சாப்பிடவும். இதனல் வாந்தி ஏற்பட்டு ஜ்வரம் நிற்கும்.

✲ **விச்வேச்வர ரஸம் :** (பை. ரத்.) ரஸம், பால் துத்த பஸ்மம், கந்தகம் மூன்றையும் சம அளவு சேர்த்து அரசவேர்ப் பட்டைக் கஷாயத்திலோ, அரசிலைச்சாற்றிலோ ஒரு நாள் அரைத்துப் பிறகு இலந்தை வேர்ப் பட்டைக் கஷாயத்திலும், கண்டங்கத்திரிக் கஷாயத்திலும். மணத்தக்காளி இலைச் சாற்றிலும் 3-3 நாள் அரைத்து 2—3 யவ அளவு மாத்திரை செய்து பசுவின் பாலுடன் கொடுக்க இரவில் ஏற்படும் முறை ஜ்வரம் நீங்கும்.

✲ **விக்ரமகேஸரீ ரஸம் :** (பை. ரத்.) தாம்ர பஸ்மம் ஒரு தோலா, வெள்ளி பஸ்மம் 2 தோலா, வத்ஸநாபி ஒரு தோலா, ரஸம் ஒரு தோலா, கந்தகம் ஒரு தோலா இவைகளை அரைத்து எலுமிச்சம்பழச்சாற்றிலோ எலுமிச்சைமரப்பட்டை கஷாயத்திலோ 21 தடவை பாவனை செய்து அரைத்து வைத்துக் கொள்ளவும். எல்லா ஜ்வரங்களும் நீங்கும்.

✲ **ஜ்வரகால கேது ரஸம்:** (பை. ரத்.) ரஸம், கந்தகம், தாம்ரபஸ்மம், மனோசிலை, தாளகம், சேங்கொட்டை, தாளகம் இவை வகைக்குச் சம எடை கள்ளிச் சாற்றில் பாவனை செய்து வில்லை தட்டிக் கஜபுடமிடவும். தானே ஆறியவுடன் எடுத்து 2-3 யவ அளவு தேனுடன் கொடுக்க 8 வித ஜ்வரங்களும் விலகும்.

✲ **த்ரிபுராரி ரஸம்:** (பை. ரத்.) ஊர்த்வபாதனம், அதப்பாதனம், திர்யக்பாதனம் இம் மூன்றும் செய்து சுத்தமான ரஸம், தாம்ர பஸ்மம், கந்தகம், அயஸ் பஸ்மம், அப்ரகபஸ்மம், வத்ஸநாபி இவை வகைக்கு ஒரு தோலா, வெள்ளி பஸ்மம் ½ தோலா, இஞ்சிச்சாறு விட்டு அரைக்கவும். 2-4 யவ அளவு தேன் சர்க்கரை இஞ்சிச்சாறு இவைகளுடன் கொடுக்க ஜ்வரம், ஜலதோஷம் மண்ணீரல் வீக்கம், உதரம், வீக்கம், அதிஸாரம் இவை நீங்கும்.

✲ **மேகநாத ரஸம்:** (பை. ரத்.) வெள்ளி பஸ்மம் ஒரு தோலா, வெண்கல பஸ்மம் ஒரு தோலா, தாம்ரபஸ்மம் ஒரு தோலா, கந்தகம் 3 தோலா இவைகளை முள்ளுள்ள சிறு கீரைச் சாற்றால் அரைத்துக் கஜ புடமிடவும். இவ்விதம் 6 தடவை முள்ளிக்கீரைச்சாறு விட்டு அரைத்துப் புடமிட பஸ்மமாகும். 2 யவம் வெற்றிலையில் வைத்துச் சாப்பிட விஷம ஜ்வரம் நீங்கும். பாலன்னம் பத்தியம். சுக்கு, அதிவிடயம், கோரைக்கிழங்கு, நிலவேம்பு, சீந்திற்கொடி, வெட்பாலை விதை இவைகளின் கஷாயம் அனுபானமாகக் கொள்ள நல்லது.

✲ **சீதாரி ரஸம்:** (பை.ரத்) தாளகம், 4 தோலா, லிங்கத்திலிருந்து எடுத்த ரஸம் 2 தோலா, கந்தகம் ஒரு தோலா, மனோசிலை ½ தோலா இவைகளைப் பாகல் கொடிச் சாற்றில் அரைத்து இந்தக் கல்கத்தை 7½ தோலா எடையுள்ள ஒரு சிறிய தாம்ர பாத்திரத்தினுள் பூசிக் காய்ந்ததும் அதை ஒரு வாயகன்ற பானையினுள் முகம் கவிழ்த்து வைத்து அதைச்சுற்றி மண்போட்டு சீலை செய்து அதன் மேல் பானை நிரம்புமளவில் மணல் நிரப்பி ஒரு நாள் முழுவதும் எரித்து ஆறிய பின்னர் எடுத்து உள்ளிருக்கும் ரஸத்தை எடுத்துக்கொள்ளவும். குளிருடனோ எரிவுடனோ ஆரம்பிக்கும் எல்லாவித விஷம ஜ்வரங்களையும் போக்கவல்லது.

✲ **ஸ்வச்சந்தபைரவ ரஸம்:** (பை. ரத்) ரஸம் ஒரு தோலா, வத்ஸநாபி ஒருதோலா, கந்தகம் ஒரு தோலா, ஜாதிக்காய் ½ தோலா, திப்பிலி 1¾ தோலா, இவைகளை ஒன்றாக அரைத்து 1-2 யவ அளவு தேனில் வெற்றிலைச் சாற்றுடனோ இஞ்சிச் சாற்றுடனோ தும்பைப்பூச் சாற்றுடனோ கொடுக்க சீத ஜ்வரம், ஸந்நிபாதம், விஷூசீ, விஷம ஜ்வரம்,

பீநஸம், சளி, ஜீர்ணஜ்வரம் அக்னிமந்தம், வாந்தி, தலைவலி, இவைகள் போகும். பலத்தை யொட்டி தயிரன்னம் கூட அளிக்கலாம்.

✲ **ஜ்வராரிரஸம் :** (பை. ரத்.) லிங்கம், கந்தகம், ரஸம், தாம்ர பஸ்மம் காரீயபஸ்மம், அப்ரகபஸ்மம், வெங்காரம், கந்தகவெடியுப்பு, மனோசிலை இவை வகைக்கு ஒருதோலா கல்வத்திலிட்டு சரக்கொன்னை இலைச்சாற்றால் 10 நாளரைத்து 2 யவ அளவு மாத்திரை செய்து இஞ்சிசாற்றுடன்கொடுக்க ஜ்வரம் நீங்கும். எல்லா வலி, கபபித்த உபத்திரவங்களும் விலகும்.

✲ **ஜ்வராசனி :** (பை. ரத்.) ரஸம், கந்தகம், இந்துப்பு, வத்ஸநாபி, தாம்ரபஸ்மம் இவை வகைக்கு ஒரு தோலா, அயஸ் பஸ்மம் 5 தோலா இவைகளை இரும்புக்கல்வத்திலிட்டு இரும்புக் குழவியால் கரு நொச்சிச் சாற்றில் ஒரு நாளரைக்கவும். பிறகு அதில் ஒரு தோலா மிளகுத்தூள் சேர்த்து அரைத்து வைத்துக் கொள்ளவும். 2 யவ அளவு வெற்றிலைச் சாற்றுடன் கொடுக்க காசம், சுவாசம், விஷம ஜ்வரம், வாந்தி, தாதுக்களில் எரிச்சல், உட்காங்கை, நாட்பட்ட ஜ்வரம், கல்லீரல் உதரம், குல்மம், ப்லீஹோதரம், வீக்கம் இவை சமனமடையும்.

✲ **ஜ்வராந்தக ரஸம் :** (பை. ரத்.) தாம்ர பஸ்மம், கந்தகம், ரஸம், உவர்மண், (பூநீர்) ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், அயஸ் பஸ்மம், லிங்கம், அப்ரகம், ரஸாஞ்சனம், தங்க பஸ்மம் இவை வகைக்கு ஒரு தோலா, கல்வத்திலிட்டு [1] பூநிம்பாதிகண கஷாயம் விட்டு 3 நாளரைத்துப் பிறகு தேனும் சேர்த்து அரைத்து 2 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். மூன்றாம் முறை — நான்காம் முறை ஜ்வரம், ஸந்தத ஜ்வரம், ஆமஜ்வரம், பூதஜ்வரம் இவை நீங்கும்.

✲ **வாதபித்தாந்தக ரஸம் :** (பை. ரத்.) ரஸபஸ்மம் அல்லது ரஸ ஸிந்தூரம், அப்ரகபஸ்மம், கோரைக்கிழங்கு, தாம்ரபஸ்மம், அயஸ்பஸ்மம், மாக்ஷிகபஸ்மம், தாளகம், கந்தகம் இவை சம எடை கல்வத்திலிட்டு அதிமதுரம், திராக்ஷை, சீந்திற்கொடி, நெல்லிக்காய், தண்ணீர்விட்டான் கிழங்கு, பால் முதுக்கன் கிழங்கு இவைகள் ஒவ்வொன்றின் சாற்றிலும் ஒவ்வொரு நாள் பாவனை செய்து மாத்திரை செய்து சர்க்கரையும் தேனும் சேர்த்துச் சாப்பிட வாதபித்த ஜ்வரம், எரிச்சல், நாவரட்சி, தலை சுற்றல், உடல்வரட்சி இவை போம். அனுபானம் அதிமதுர கஷாயமும் தேனும்.

---

1, பூநிம்பாதிகணம் :- நிலவேம்பு, தேவதாரு. தசமூலம் சுக்கு, கோரைக் கிழங்கு, கடுகுரோகிணி, வெட்பாலையரிசி, கொத்துமல்லிவிதை, யானைத்திப்பிலி இவையாகும். (இவைகளின் கஷாயம் அசதி பிதற்றல் காஸம் மயக்கம் சுவாஸம் முதலிய உபத்ரவங்களுடன் கூடிய ஸந்நிபாத ஜ்வரங்களில் கொடுக்க நல்லது. ஸந்நிபாத ஜ்வர கஷாயவர்கத்தில் இதைக் காண்க.

✲ **ஜயமங்கள ரஸம் :** (பை. ரத்.) லிங்கத்திலிருந்து எடுத்த ரஸம், கந்தகம், வெங்காரம், தாம்ரபஸ்மம், ஈய பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், இந்துப்பு, மிளகு, காந்த பஸ்மம், வெள்ளி பஸ்மம் வகைக்கு ஒரு தோலா தங்க பஸ்மம், 2 தோலா இவைகளைக் கரு ஊமத்தை இலை, அல்லது வேர் சாறு, பாரிஜாத (பவளமல்லி) இலைச்சாறு, தசமூலகஷாயம், நிலவேம்பு கஷாயம் இவைகள் ஒவ்வொன்றிலும் மூன்று மூன்று நாள் பாவனை செய்து அரைத்து 2-4 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். ஜீரகத் தூள் தேன் சேர்த்துச் சாப்பிட நாட்பட்ட ஜ்வரம், எட்டுவித ஜ்வரம், மேதஸ்—மாம்ஸம்—அஸ்தி சுக்ரம் இவைகளை ஆசிரயித்த ஜ்வரம் இவை களைப் போக்கும். பலம் புஷ்டி அளிக்கும.

✲ **ஜ்வர குஞ்சரபாரீந்த்ர ரஸம் :** (பை. ரத்.) ரஸ விந்தூரம் 1 தோலா, அப்ரக பஸ்மம், ½ தோலா, வெள்ளி பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், ரஸாஞ்சனம், பால்துத்த பஸ்மம், தாம்ர பஸ்மம், முத்து பஸ்மம், பவழ பஸ்மம், அயஸ் பஸ்மம், சிலாஜது, பூங்காவி, மனோசிலை, கந்தகம், தங்க பஸ்மம் இவை வகைக்கு 2 தோலா, இவைகளை மஞ்சள் பூவுள்ள பிரும்மதண்டி, துளசி, மூக்கரட்டை, வன்னி இலை, கீழாநெல்லி, பேய் பீர்க்கு, கடுகு ரோகிணி, ஸோமவள்ளி, அரளி, வாலுளுவை, காட்டுப் பயறு, முதியார்கூந்தல் இவை ஒவ்வொன்றின் சாற்றிலோ கஷாயத் திலோ, 3-3 பாவனை செய்து அரைத்து எடுத்துக் கொள்ளவும். 4-8 யவ அளவு வெற்றிலையில் வைத்துச் சாப்பிட அக்னிபலம் பெருகும். ரோகங்கள் குவிந்து நிற்கும் நிலையில் பிரயோகிக்கச் சிறந்தது. முறை ஜ்வரம், ச்வாஸம், காஸம், பிரமேகம், வீக்கம், பாண்டு, காமலை, கிரஹணீ, க்ஷயம் இவைகளைப் போக்க வல்லது.

✲ **சீதாரி ரஸம் :** (பை. ரத்.) பூசணிக்காய் க்ஷாரஜலம், சுண்ணம்பு நீர், எள்ளு க்ஷாரஜலம் இவை ஒவ்வொன்றிலும் தோலாயந்திரத்தில் ஒவ்வொருநாள் எரித்து சுத்தமாக்கிய தாளகம், ரஸம் வகைக்கு ஒரு தோலா. பாகலிலைச்சாறு விட்டு மூன்று நாள் அரைத்து, வில்லை தட்டி ஒரு மடக்கினுள் வைத்து அதை ஒரு சிறிய தாம்ரக் கிண்ணத்தால் மூடி மேல் மடக்கால் மூடி சுண்ணம்பு கடுக்காய் வெல்லம் உப்பு சாக்கட்டி இவைகளை சேர்த்து அரைத்து மண்சீலை செய்து வாலுகா யந்திரத்திலிட்டு எரித்து வரவும். மணல் மேல் போட்ட நெல் பொரிந்ததும் இறக்கி ஆறவைத்துத் தூள் செய்து துளசிச்சாற்றுடன் கொடுக்க முறை ஜ்வரம் நீங்கும். தேன் திப்பிலித்தூள், சர்க்கரை, ஆட்டுப்பால் இவைகளையும் அனுபானமாக்கிக் கொள்ளலாம். பால் பயற்றங்கஞ்சி நெய்விட்டது இவை உணவு.

✲ **ஜ்வரசூலஹர ரஸம் :** (பை. ரத்.) ரஸம் ஒரு தோலா, கந்தகம் ஒரு தோலா இரண்டையும் கஜ்ஜலிசெய்து மடக்கில் வைத்து மேல் தாம்ரக்

கிண்ணத்தால் மூடி மேல் மடக்கு மூடி சீலை செய்து அடுப்பு மேல் வைத்து கால் கட்டைவிரல் சுற்றளவுள்ள விரகால் சிறு தீயில் 6 மணி நேரம் எரித்தெடுக்கவும். தானுக ஆறியதும் 3-6 யவ அளவு வெற்றிலையில் வைத்துச் சாப்பிட வியர்வை ஏற்பட்டு ஜ்வரம் இறங்கும். இம்மருந்து சாப்பிடுமுன் ஜீரகத்தூளையும் இந்துப்பையும் தேனில் குழைத்து நாக்கில் தடவிக் கொள்ளவும். முறை ஜ்வரம், புது ஜ்வரம் இவை போகும்.

✲ **ஷடானனரஸம் :** (பை. ரத்.) பித்தளை பஸ்மம், வெங்கலபஸ்மம்' தாம்ர பஸ்மம், லிங்கம், திப்பிலி, வத்ஸநாபி இவை சம எடை கல்வத்தி லிட்டு சீந்திற்கொடிச் சாறு விட்டு 6 மணிநேரம் அரைத்து குந்துமணி அளவு மாத்திரை செய்யவும். ஜ்வரம், அக்னிமந்தம், முறைஜ்வரம் நீங்கும். இளநீர், பயற்றங்கஞ்சி, மோர் சாப்பிடலாம்.

✲ **கல்பதரு ரஸம்** (பை. ரத்.) ரஸம், கந்தகம், வத்ஸநாபி, தாம்ர பஸ்மம் இவை வகைக்கு சம எடை — இவைகளை ஐந்து வகை பித்தங்களைக் கொண்டு ஐந்து நாள் அரைத்துப் பிறகு கருநொச்சிச்சாற்றில் ஏழுநாளும் இஞ்சிச் சாற்றில் மூன்று நாளும் அரைத்துக் கடுகளவு மாத்திரை செய்து கொள்ளவும். வேளைக்கு 1-3 வீதம் 7 வேளை கொடுக்கவும். திப்பிலி கஷாயம், ரஸகஜ்ஜலி, வென்னீர் மேல் சாப்பிடவும். சாப்பிட்டதும் துணி போர்த்திப் படுக்க வியர்வை ஏற்பட்டு ஜ்வரம் குறையும். தூங்கி எழுந்ததும் சர்க்கரை சேர்த்த தயிர் கொடுக்கவும். நாட்பட்ட முறை ஜ்வரம், ஜ்வராதி ஸாரம், கிரஹணி, பாண்டு, காமலை, ச்வாஸகாஸம், வலி இவை நிற்கும்.

✲ **தாளாங்க ரஸம் :** (பை. ரத்.) தாளகம் 2 தோலா, துத்தம் ஒரு தோலா, முத்துச்சிப்பி சுண்ணும்பு 4 தோலா இவைகளைக் கல்வத்திலிட்டு கற்றாழைச்சாறு விட்டரைத்து வில்லைதட்டி சஜபுடமிடவும். குந்துமணி அளவு இஞ்சிச்சாற்றுடன் கொடுக்க வாத—பித்த—சீத—சாதுர்த்திக—திருதீயக ஜ்வரங்கள் விலகும்.

✲ **மஹாசந்திரகலா ரஸம் :** (பை. ரத்.) ரஸம், தாம்ர பஸ்மம், அப்ரக பஸ்மம் வகைக்கு ஒரு தோலா, கந்தகம் 2 தோலா இவைகளைக் கோரைக்கிழங்கு மாதுளம் வேர் தாழம் வேர் இவை ஒவ்வொன்றின் கஷாயத்திலும் நெய்சட்டிப்பூண்டு கற்றாழை இவை ஒவ்வொன்றின் சாற்றிலும் ஒவ்வொரு நாள் அரைத்துப் பிறகு பேய்புடல் விலாமிச்சைவேர் திப்பிலி, சந்தனம், நன்னாரி இவைகளின் தூள் வகைக்கு ஒரு தோலா சேர்த்து திராக்ஷை கஷாயத்தில் 7 தடவை பாவனை செய்து நிழலிலுலர்த்தி மாத்திரை செய்து கொள்ளவும். அம்லபித்தம், பிரதரம், அந்தர்தாஹம், ரஸத்தால் ஏற்படும் மூர்ச்சை, ரக்தபித்தம், பித்தஜ்வரம், மூத்ரகிருச்ரம், பிரமேஹம் இவைகளில் நல்லது.

✲ பர்படீரஸம் : (பை. ரத்.) ரஸம் ஒருதோலா, கந்தகம் 2 தோலா, தாம்ர பஸ்மம், அயஸ் பஸ்மம் வகைக்கு கால் தோலா இதை கஜ்ஜலி செய்து இரும்புக் கரண்டியிலிட்டு உருக்கி இரும்புக் கரண்டியால் கிளறி உருகியதும் கோமயத்தின்மேல் வைக்கப்பட்ட வாழை இலையின்மேல் தடவ பர்படியாகும். அதை நொச்சிச் சாற்றில் மூன்று தினம் பாவனை செய்த பின், முன்னை இலை, திரிபலை, கற்றாழை, ஆடாதோடை, சிறுதேக்கு, திரிகடு, கருசலாங்கண்ணி, கொடிவேலிவேர், கொட்டைக்கரந்தை இவைகளின் சாறு அல்லது கஷாயத்தில் ஒவ்வொரு நாள் அரைத்து அனலிவிட்டுச் சிறிது வெதுப்பி எடுத்துக் கொள்ளவும். 4-8 யவ அளவு சீந்திற் கொடி சுக்கு கஷாயத்துடன் சாப்பிட கப ஜ்வரம் நீங்கும்.

✲ த்ரைலோக்ய சிந்தாமணி ரஸம் : (பை. ரத்.) தங்க பஸ்மம், வெள்ளி பஸ்மம், அப்ரக பஸ்மம், வகைக்கு 2 தோலா, அய பஸ்மம் 5 தோலா, பவழ பஸ்மம், முத்து பஸ்மம் 3-3 தோலா, ரஸ பஸ்மம், அல்லது ரஸஸிந்தூரம் 7 தோலா இதைக் கற்றாழைச் சாற்றில் நன்கு அரைத்து 2 யவ அளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்திக் கொள்ளவும். அனுபானம் ஆட்டுப்பால். க்ஷயம், காஸம், குல்மம், பிரமேகம், ஜீர்ண ஜ்வரம், உன்மாதம், ஜலதோஷம் இவைகளைப்போக்கும்.

✲ மஹாராஜவடீ : (பை. ரத்.) ரஸம், கந்தகம், அப்ரக பஸ்மம் வகைக்கு 1 தோலா, ஸமுத்ராபச்சைவிதை, ஈய பஸ்மம், அயபஸ்மம் வகைக்கு ½ தோலா ஸ்வர்ண பஸ்மம், தாம்ர பஸ்மம், பச்சைக் கர்பூரம், வகைக்கு ¼ தோலா, கஞ்சா, தண்ணீர்விட்டான் கிழங்கு, வெள்ளைக் குங்கிலியம், கிராம்பு, நீர்முள்ளி விதை, நிலப்பனைக்கிழங்கு, நிலப்பூசணிக் கிழங்கு, பூனைக்காலி விதை, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, சிற்றாமுட்டி, யானைக்குறுந்தோட்டி இவை வகைக்கு 1/6 தோலா, இவைகளை நிலப்பனைக் கிழங்குக் கஷாயம் விட்டரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். விஷம–தாதுகத–வாத–பித்த–கப–ஸந்நிபாத ஜ்வரங்கள் காஸம், ச்வாஸம், க்ஷயம், கபஸந்நிபாதம், காமலா, பாண்டு, பிரமேகம், ரக்த பித்தம் இவை போகும். பலம் புஷ்டி தாது வீர்ய விருத்தி இவை ஏற்படும்.

✲ ஸர்வதோபத்ர ரஸம் : (பை. ரத்.) அப்ரகபஸ்மம் 2 தோலா, கந்தகம் ஒருதோலா, ரஸம் ½ தோலா, பச்சைக் கர்பூரம், குங்குமப்பூ, ஜடாமாஞ்சி, லவங்கபத்திரி, கிராம்பு, ஜாதிபத்திரி, ஜாதிக்காய், ஏலரிசி, யானைத்திப்பிலி, கோஷ்டம், தாளீசபத்ரி, காட்டகத்திப்பூ, லவங்கப்பட்டை கோரைக்கிழங்கு, கடுக்காய், மிளகு, இஞ்சி, தானிக்காய்தோல், திப்பிலி, நெல்லிமுள்ளி, இவை வகைக்கு ⅓ தோலா இவைகளை ஒன்றாய் அரைத்து

2 குந்துமணி அளவு மாத்திரை செய்து வெற்றிலையில் தேனும் சர்க்கரையும் கலந்து சாப்பிட அக்னி மந்தம், அஜீர்ணம், விஷூசி, பித்த — கப நோய்கள், வாதகபநோய்கள், வயிறு உப்புசம், மூத்ரகிருச்ராம், ஸங்கிரஹ க்ரஹணீ, வாந்தி, அம்லபித்தம், சீதபித்தம், ரக்தபித்தம், நாட்பட்ட ஜ்வரம், தாது கத விஷம ஜ்வரம், காஸம், காமலை, பாண்டு இவை நீங்கும்.

✻ **ஜ்வரார்யப்ரம் :** (பை. ரத்.) அப்ரக பஸ்மம், தாம்ர பஸ்மம், ரஸம், கந்தகம், வத்ஸநாபி வகைக்கு ஒரு தோலா, கரு ஊமத்தை விதை 2 தோலா, சுக்கு மிளகு திப்பிலி இவைகளின் தூள் 5 தோலா—இவைகளை ஜலம் விட்டரைத்து மாத்திரை செய்து கொள்ளவும். வாத—பித்த—கப—ஸந்நிபாத—விஷம—துவந்துவஜ—தாதுகத ஜ்வரங்கள், மண்ணீரல்—கல்லீரல் வீக்கம், விக்கல், காஸம், சுவாஸம், அக்னிமந்தம், அருசி இவை நீங்கும்.

✻ **ஜீவநாநந்தாப்ரம் :** (பை. ரத்.) அப்ரக பஸ்மம் 2 தோலா, ஜீரக சூர்ணம் ஒரு தோலா, கரு ஊமத்தை விதை ஒரு தோலா இவைகளை ஆடாதோடை இலை, கண்டங்கத்திரி, நெல்லிக்காய், கோரைக் கிழங்கு, சிந்திற்கொடி இவைகளின் சாறு அல்லது கஷாயத்தில் அரைத்துக் குந்துமணி அளவு மாத்திரை செய்து சாப்பிட முறை ஜ்வரம், ப்லீஹ யக்ருத் விருத்தி, வாந்தி, ரக்த பித்தம், வாத ரக்தம், கிரஹணீ, ச்வாஸ காஸம். அருசி, சூலம், உமட்டல், அர்சஸ் இவைகளைப் போக்கும். நல்ல ரஸாயனம்.

✻ **சந்தனாதி லோஹம் :** (பை. ரத்.) செஞ்சந்தனம், வெட்டிவேர், வட்டத்திருப்பி, விலாமிச்சைவேர், திப்பிலி, கடுக்காய், சுக்கு, அல்லிக் கிழங்கு, நெல்லிமுள்ளி, வாய்விளங்கம், கோரைக்கிழங்கு, கொடிவேலி வேர்பட்டை இவை வகைச்கு ஒரு தோலா, அயஸ் பஸ்மம் 12 தோலா இவைகளைக் கல்வத்திலிட்டரைத்துக் கொள்ளவும். எல்லா நாட்பட்ட விஷம ஜ்வரங்களிலும் நல்லது.

✻ **விஷமஜ்வராந்தக லோஹம் :** (1) (பை. ரத்.) நிலவேம்பு, பர்படகம், தேவதாரு, ஓரிலை, மனேசிலை, சுக்கு, திப்பிலி, மிளகு, தாய்கொத்து, சிந்திற் சர்க்கரை, வேம்பின் இலை காய் பட்டை வேர் பூ, பேய்ப்புடல், மருள், பால்துத்தபஸ்மம், அப்ரகபஸ்மம் இவை வகைக்கு ஒரு தோலா, தேனிரும்பு பஸ்மம் 13 தோலா இவைகளை ஜலம் விட்டரைத்து 4-8 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். அனுபானம்: நிலவேம்பு கஷாயம். மண்ணீரல் வீக்கம், அக்னிமந்தம், இளைப்பு, கல்லீரல் வீக்கம் இவைகளுடன் ஏற்படும் ஜ்வரங்கள் நீங்கும்.

✲ **விஷமஜ்வராந்தக லோஹம்:** (2) (பை. ரத்.) ரஸம் ஒரு தோலா, கந்தகம் ஒரு தோலா, தாம்ர பஸ்மம் $\frac{1}{2}$ தோலா, ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம் $\frac{1}{2}$ தோலா, அயஸ் பஸ்மம் 3 தோலா இவைகளை முன்னை இலை, நீர்முள்ளி, ஆடாதோடை இலை, இஞ்சி, வெற்றிலை இவைகளின் ஒவ்வொன்றின் சாற்றிலும் ஒவ்வொரு நாள் அரைத்து 2-4 யவ அளவு மாத்திரை உருட்டவும். விஷம ஜ்வரம், மண்ணீரல் வீக்கம், குல்மம் போகும். கண்களுக்கு பலம், உடல் திடம், வீர்யம், புஷ்டி, அக்னிதீப்தி இவை அளிக்கும்.

✲ **விஷமஜ்வராந்தக லோஹம்:** (3) (பை. ரத்.) ரஸம், கந்தகம், ரஸஸிந்தூரம், தங்கபஸ்மம், வெள்ளி பஸ்மம், அயஸ் பஸ்மம், அப்ரக பஸ்மம், தாம்ர பஸ்மம், ஈய பஸ்மம், முத்து பஸ்மம், பவழ பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், தாளகம் இவை வகைக்குச் சம எடை சேர்த்து நொச்சி, வெற்றிலை, மணத்தக்காளி, பர்படகம், திரிபலை, பாகலிலை, தசமூலம், மூக்கரட்டை, சீந்திற்கொடி, ஆடாதோடை, கரிசலாங்கண்ணி, பொன்னங்கண்ணி — இவைகளின் ஒவ்வொன்றின் சாற்றிலும் மூன்று நாளரைத்துக் குந்துமணி அளவு மாத்திரை உருட்டிக் கொள்ளவும். வெல்லமும் திப்பிலித் தூளும் சேர்த்துச் சாப்பிடவும். எட்டுவித ஜ்வரம், தாதுகத ஜ்வரம், அபிகாதாதி ஜ்வரம் முதலியவை நீங்கும்.

✲ **விஷம ஜ்வராந்தக லோஹம்:** (4) புடபக்வம். (பை. ரத்.) லிங்கத்திலிருந்து எடுத்த ரஸம் ஒரு தோலா, கந்தகம் ஒரு தோலா இவை இரண்டையும் கஜ்ஜலி செய்து பர்படி முறைப்படி பர்படியாக்கிக்கொள்ளவும். தங்க பஸ்மம் $\frac{1}{4}$ தோலா, அயஸ் பஸ்மம், தாம்ர பஸ்மம், அப்ரக பஸ்மம் இவை வகைக்கு 2 தோலா, வங்கபஸ்மம், பூங்காவி, பவழம் வகைக்கு $\frac{1}{2}$ தோலா, முத்து பஸ்மம், சங்க பஸ்மம், முத்துச்சிப்பி பஸ்மம் வகைக்கு $\frac{1}{4}$ தோலா—இவைகளை முத்துச் சிப்பியினுள் வைத்து மேல் மண் மூடி புடமிட்டுக்கொள்ளவும். எடுத்து நன்கு அரைத்துக் கொள்வது. 4 யவ அளவு சம அளவில் திப்பிலித் தூளும் நெய்யில் பொரித்த பெருங்காயத் தூளும் இந்துப்பு $\frac{1}{8}$ தோலாவும் சேர்த்துத் தேனில் குழைத்துச் சாப்பிட எட்டுவித ஜ்வரம், ப்லீஹ யக்ருத் விருத்தி, குல்மம், முறை ஜ்வரம், காமலை, பாண்டு, வீக்கம், பிரமேஹம், அருசி, கிரஹணி, ஆமதோஷம், காஸம், சுவாஸம், மூத்ரகிருச்ரம், அதிஸாரம் இவைகளைப் போக்கும். பசி, பலம், புஷ்டி, நிறம் இவை அளிக்கும்.

✲ **ஸர்வஜ்வரஹர லோஹம்:** (1) (பை. ரத்.) கொடிவேலிவேர் பட்டை, திரிபலை, திரிகடு, வாய்விளங்கம், கோரைக்கிழங்கு, ஆனைத் திப்பிலி, கண்டந்திப்பிலி, விலாமிச்சை வேர், தேவதாரு, நிலவேம்பு,

வெட்டிவேர், கடுகுரோகிணி, கண்டங்கத்திரி, முருங்கை விதை, அதிமதூரம், வெட்பாலையரிசி இவை வகைக்கு ஒரு தோலா, அயஸ் பஸ்மம் 20 தோலா, இவைகளை ஜலம் விட்டரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். எட்டுவித ஜ்வரம், நாட்பட்ட ஜ்வரம், ப்லீஹவிருத்தி, யகிருத்விருத்தி இவைகளுடன் ஏற்படும் ஜ்வரம் போகும்.

✲ **ஸர்வஜ்வர ஹர லோஹம்—பிருஹத் (2)** (பை. ரத்.) அயஸ் பஸ்மம், 8 தோலா, ரஸம் 2 தோலா, கந்தகம் 2 தோலா, திரிபலை, திரிகடு, வாய்விளங்கம், கோரைக்கிழங்கு, கண்டந்திப்பிலி, யானைத்திப்பிலி, மஞ்சள், மரமஞ்சள், கொடிவேலிவேர்ப் பட்டை இவை வகைக்கு ஒரு தோலா, இஞ்சிச் சாறு விட்டரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்து இஞ்சிச் சாற்றுடன் சாப்பிட எல்லா ஜ்வரங்கள், நாட்பட்ட ஜ்வரம், மண்ணீரல் வீக்கத்துடன் வரும் ஜ்வரம் நீங்கும்.

✲ **ஸர்வஜ்வரஹர லோஹம்—பிருஹத் (3)** (பை. ரத்.) ரஸம், கந்தகம், தாம்ர பஸ்மம், அப்ரக பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், தங்க பஸ்மம், வெள்ளி பஸ்மம், தாளகம்—இவை வகைக்கு ஒரு தோலா, காந்த பஸ்மம் 4 தோலா, இவைகளை பாகலிலை, தசமூலம், பர்படகம், திரிபலை, சீந்திற்கொடி, வெற்றிலை, மணத்தக்காளி, நொச்சி, மூக்கரட்டை, இஞ்சி, இவைகளில் ஒவ்வொன்றின் சாற்றில் அல்லது கஷாயத்தில் ஒவ்வொரு பாவனை செய்து 2-4 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். திப்பிலித் தூளும் வெல்லமும் சேர்த்துச் சாப்பிடவும், எட்டுவித ஜ்வரங்கள், க்ஷயம், தாதுகத ஜ்வரம், காமஜ்வரம், சோக ஜ்வரம், பூதாவேச ஜ்வரம், நக்ஷத்ர ஜ்வரம், மற்ற எல்லா வகை ஜ்வரங்களையும் போக்கும். கல்லீரல், மண்ணீரல் வீக்கம், காஸம், பாண்டு, அக்னிமந்தம்—இவை போகும். மோருடன் சேர்ந்த அன்னம், பக்ஷி மாம்ஸம் பத்தியமாகும். பூசணி, தக்கரிக்காய், பாகல், சுரை, வாழை, மணத்தக்காளி, மாடப்புறு, காடி, கடலை இவை நீக்கவேண்டும்.

✲ **ஜ்வராந்தக லோஹம் பிருஹத் :** (பை. ரத்.) ரஸம், கந்தகம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி வகைக்கு ஒரு தோலா, ஸ்வர்ண பஸ்மம் ¼ தோலா, வெள்ளி பஸ்மம், அயஸ் பஸ்மம் ½ தோலா, சிலாஜது அப்ரக பஸ்மம், கருசலாங்கண்ணி, கோரைக் கிழங்கு, பொற்றலைக் கையாந்தரை, நாயுருவி, கிராம்பு, திரிபலை, லவங்கப்பட்டை, கண்டந்திப்பிலி, இந்துப்பு, கந்தக வெடியுப்பு, சீந்திற்சர்க்கரை, கண்டங்கத்திரிவேர், உள்ளிப்பூண்டு, கொத்துமல்லிவிதை, ஜீரகம், கருஞ்ஜீரகம், சந்தனம், தேவதாரு, மரமஞ்சள், வெட்பாலையரிசி, நிலவேம்பு, வெட்டிவேர்-இவை வகைக்கு ஒரு தோலா, மிளகு 2 தோலா, இஞ்சிச்சாறு விட்டு எழு நாள் அரைத்து 4 யவ அளவு

மாத்திரை செய்யவும். 6-8 யவ அளவு மாத்திரை செய்து 1-2 மாத்திரை தேனுடன் சாப்பிட, எல்லா ஜ்வரங்களும் போகும். சுக்ரதாதுகத ஜ்வரம், பூத—சிரம—ஸந்நிபாத ஜ்வரங்கள், காமலே, பாண்டு, பிரமேஹம், கிரஹணீ இவைகளைப் போக்கும். பலம், புஷ்டி, வீர்ய விருத்தி அளிக்கும்.

✲ **ஜ்வரவித்ராவண ரஸம்:** (பை. ரத்.) திப்பிலி, அதிவிடயம், கடுகுரோஹிணி, வேப்பிலே, ரஸஸிந்தூரம் இவை வகைக்குச் சம எடை சேர்த்தரைத்துக் கொள்ள எல்லா ஜ்வரங்களும் விலகும்.

✲ **ச்லேஷ்மசைலேந்திர ரஸம்:** (பை. ரத்.) கந்தகம், ரஸம், அப்ரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஜீரகம், கருஞ்சீரகம், பூலாங்கிழங்கு, கர்கடகசிருங்கி, ஓமம், புஷ்கரமூலம், பெருங்காயம், இந்துப்பு, யவக்ஷாரம், வெங்காரம், யானைத்திப்பிலி, ஜாதிப்பத்திரி, அசமதம், அயபஸ்மம், காஞ்சூரிவேர், கிராம்பு, கருஊமத்தை விதை, நேர்வாளவிதை, காய்பல், கொடிவேலிவேர் பட்டை இவை வகைக்கு ஒரு தோலா—இவைகளைக் கல்வத்திலிட்டு வில்வவேர், எருக்கம் வேர், கொடிவேலிவேர், தந்திமூலம், நாயுருவி, துளஸி, ஆடாதோடைவேர், நொச்சிவேர், அரளிவேர், ஊமத்தை வேர், கருஞ்சீரகம், மலைவேம்பு, திப்பிலி, கண்டங்கத்திரி, இஞ்சி இவைகளின் கஷாயம் அல்லது சாறு விட்டு அரைத்து குந்துமணி அளவு மாத்திரை செய்து வேளைக்கு 2-4 மாத்திரை இஞ்சிச்சாறு அல்லது வென்னீருடன் கொடுக்க கப வியாதிகளில் நல்லது. பிரமேகங்கள், சிரோரோகம், வாத வியாதிகள், குல்மம், உதரம், அந்த்ரவிருத்தி, ஆமவாதம், பாண்டு, கிருமி, ஸ்தூலித்தல், மலபந்தம், ஜ்வரம், குஷ்டம், உடல் அரிப்பு இவை போகும்.

✲ **லக்ஷ்மீவிலாஸ ரஸம்:** [1] (பை. ரத்.) அப்ரக பஸ்மம் 4 தோலா, ரஸம் 2 தோலா, கந்தகம் 2 தோலா, பச்சைக்கர்பூரம், ஜாதிபத்திரி, ஜாதிக்காய், ஸமுத்ராப்பச்சை விதை, கரு ஊமத்தை விதை, கஞ்சா விதை, பால்முதுக்கன் கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, சிற்றாமுட்டி, பேராமுட்டி, நெரிஞ்சில்முள், கடம்பம் விதை — இவை வகைக்கு 1 தோலா இவைகளை வெற்றிலேச்சாறு விட்டரைத்து 3 குந்துமணி அளவு மாத்திரை செய்து கொள்ளவும் ஸந்நிபாத—வாத—பித்த—கப—ஜ்வரங்கள், 18 வகை

---

*1. "तदर्धं चन्द्रसंज्ञकं" என்ற மூல பாடத்திற்கு பச்சைக் கர்பூரத்திற்குப் பதில் வெள்ளி பஸ்மம் சிலர் சேர்ப்பர். ரஸமும் கந்தகமும் சேர்த்து 2 தோலா என்றும் சிலர் சொல்வர். சிலர் ரஸம், கந்தகம், கர்பூரம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி இவை ஐந்தும் வகைக்கு 2 தோலா, மற்றவை ஒரு தோலா என்றும், சிலர் அப்ரக பஸ்மம் 4 தோலா, ரஸம் 1 தோலா, கந்தகம் 1 தோலா கர்பூரம் 1 தோலா, ஜாதிபத்திரி அரை தோலா, ஜாதிக்காய் அரை தோலா, மற்றவை அனைத்தும் சேர்த்து 1 தோலா என்றும் கணக்குக் கூறுவர். இவை மூலச்லோகத்திற்குக் கொடுக்கப்படும் வெவ்வேறு பொருளை ஒட்டியவை.*

குஷ்டம், பிரமேகம், நாடிவிரணம், துஷ்டவிரணம், மூலம், பகந்தரம், ச்லீபதம், தொண்டை சதை வளர்தல், அந்திரவிருத்தி, அதிஸாரம், ஆம வாதம், நாக்கு தடித்துப் போதல், தொண்டை அடைப்பு, உதரம், காது, மூக்கு, கண், வாய் நோய்கள், காஸம், பீநஸம், ராஜயக்ஷ்மா, ஸ்தூலித்தல், தலைவலி இவைகளைப் போக்கும். காலையில் தினம் ஒரு மாத்திரை சாப்பிட்டு உளுத்தமாவு, தயிர், பால், கள், அன்னம் ஊற வைத்த ஜலம், சாராயம்—இவைகளைச் சாப்பிட நல்லது. நல்ல யௌவனமும் வீர்ய விருத்தியும் ஏற்படும்.

✤ **கந்தக கஜ்ஜலி:** (பை. ரத்.) கண்டங்கத்திரி நொச்சி கழற்சி இலை இவைகளின் சாறு எடுத்து ஒரு மடக்கிலிட்டு அதில் கந்தகத்தைத் தூள் செய்து இளந்தீயில் எரித்துக் கிளறி கந்தகம் உருகியதும் அதற்குச் சமம் ரஸம் சேர்த்துக் கலந்து இறக்கிக் கல்வத்திலிட்டு அரைக்கவும். இதில் ஒரு குந்துமணி, ஜீரகத் தூள் 15 யவம், இந்துப்பு 15 யவம் சேர்த்துக் கொடுக்கவும். வாந்தியுடன் இருந்தால் சர்க்கரையுடன், மப்பிருந் தால் வெல்லத்துடன், க்ஷயத்தில் ஆட்டுப் பாலுடன், ரத்தாதீஸாரத்தில் வெட்பாலைப்பட்டைச் சாற்றுடன், ரத்த வாந்தியில் அத்திச்சாற்றுடன் கொடுக்க நல்லது.

✤ **ரஸபர்படீ:** (பாவப்ரகாசம்) ரஸத்தை முன்னே இலைச் சாற்றி லும் வெள்ளை ஆமணக்கிலைச் சாற்றிலும் கரிசலாங்கண்ணிச் சாற்றிலும் மணத்தக்காளிச்சாற்றிலும் ஒவ்வொரு தடவை அரைத்து தோலாயந்திரத் தில் எரித்தெடுத்து சுத்தமாக்கிக்கொள்ளவும். இவ்விதம் கந்தகத்தை 3-7 தடவை கருசலாங்கண்ணிச் சாற்றிலரைத்து வெயிலில் உலர்த்தி எடுத்துக் கொள்ளவும். ரஸத்தையும் கந்தகத்தையும் கஜ்ஜலி செய்துகொண்டு இரும்புக்கரண்டியிலிட்டு உருக்கி எருமைச்சாணத்தின் மேலிட்ட வாழை யிலையில் சாய்த்துக் கத்தியால் தடவ அப்பளம் போன்றாகும். உடன் மேல் வாழையிலையை மூடி மேல் சாணமிட்டு அழுத்தவும். ஆறிய பின்னர் எடுத்துக் கல்வத்திலிட்டரைத்துக் கொள்ளவும். 2 யவ அளவு வறுத்த ஜீரகத்தூள், பொரித்த பெருங்காயத் தூள் இவைகளுடன் சேர்த்துச் சாப் பிட்டு மேல் மூன்று வாயளவு குளிர்ந்த ஜலம் சாப்பிடவும். தினம் 2 யவ அளவு வீதம் அளவை அதிகப் படுத்தி 10 நாளானதும் 11-ம் நாள் முதல் கிரமமாக அளவை 2 யவம் வீதம் குறைத்து 20-வது நாள் பூர்த்தி செய்யவும், பாலன்னம் மாத்திரம் சாப்பிடவும். ஜ்வரம், கிரஹணி, அதிஸாரம், காமலை, பாண்டு, சூலம், ப்லீஹம், ஜலோதரம் முதலிய நோய்கள் நீங்கும்.

✤ **கல்பதரு ரஸம்:** (பாவப்ரகாசம்) ரஸம், கந்தகம், வத்ஸநாபி, மனோசிலை, ஸ்வர்ணமாக்ஷிகம், பொரித்த வெங்காரம் இவை வகைக்கு

ஒரு தோலா, சுக்கு 2 தோலா, திப்பிலி 2 தோலா, மிளகு 10 தோலா இவைகளை இஞ்சிச்சாறு விட்டரைத்து மாத்திரையாக்கிக் கொள்ளவும். 2 யவ அளவு இஞ்சிச்சாறுடன் சாப்பிட வாத கப ஜ்வரங்கள் நீங்கும். ச்வாஸம், காஸம், வாயில் ஜலம் ஊறுதல், பசியின்மை, விஸூசிகா, தலைவலி இவை போகும்.

✲ **த்ரிபுரபைரவம் :** (பாவப்ரகாசம்) வத்ஸநாபி ஒரு தோலா, சுக்கு 2 தோலா, திப்பிலி 3 தோலா, மிளகு 4 தோலா, தாம்ர பஸ்மம் 5 தோலா, லிங்கம் 6 தோலா இவைகளை இஞ்சிச்சாறு விட்டரைத்து ஒரு யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். ஜ்வரத்தில் சிறந்தது.

✲ **ம்ருத ஸஞ்சீவனீவடி :** (பாவப்ரகாசம்) வத்ஸநாபி, த்ரிகடு, கந்தகம், வெங்காரம், தாம்ர பஸ்மம், ஊமத்தை விதை, லிங்கம் இவை 9ம் ஒவ்வொரு பங்கு, கஞ்சா கஷாயம் விட்டரைத்து 2 யவ அளவு மாத்திரை செய்து எருக்க வேர் கஷாய அனுபானத்துடன் கொடுக்க ஸந்நிபாத ஜ்வரங்கள் நீங்கும்.

✲ **திரிநேத்ர ரஸம் :** (பாவப்ரகாசம்) ரஸம், கந்தகம், தாம்ரபஸ்மம், இவைகளைப் பசுவின் பால் விட்டரைத்து கடும் வெயிலில்விட்டரைக்கவும். பிறகு நொச்சிச் சாற்றிலும் முருங்கைவேர்ப் பட்டைக் கஷாயத்திலும் அரைத்து உருண்டையாக்கி மூஷைக்குள் வைத்து மூடி மண் சீலை செய்து வாலுகாயந்திரத்திலிட்டு மூன்று யாமம் எரிக்கவும். ஆறியதும் எடுத்து அதில் அரைக்கால் பங்கு வத்ஸநாபி சேர்த்து அரைத்துக் கொள்ளவும். 2 யவ அளவு பஞ்சகோல கஷாயம், ஆட்டுப்பால் இவைகளில் ஒன்றுடன் சாப்பிட ஜ்வரம் நீங்கும்.

✲ **பஸ்மேச்வர ரஸம் :** (பாவப்ரகாசம்) வரட்டிச்சாம்பல் 16 தோலா, மிளகு ஒரு தோலா, வத்ஸநாபி ஒரு தோலா — இவைகளை இஞ்சிச் சாற்றிலரைத்து ஒரு குந்துமணி யளவு சாப்பிட ஸந்நிபாத ஜ்வரம் நீங்கும்.

**அக்னிகுமார ரஸம் :** (பாவப்ரகாசம்) ரஸம் 2 தோலா, கந்தகம் 2 தோலா இவைகளைக் கஜ்ஜலி செய்து சிறுபுள்ளடிச் சாறு விட்டரைத்து வத்ஸநாபி ஒரு தோலா சேர்த்து அரைத்து சிறிய மாத்திரைகளாக்கிக் குப்பியிலிட்டு 24 மணி நேரம் வாலுகா யந்திரத்திலிட்டு எரித்து ஆறியதும் எடுத்து ½ தோலா வத்ஸநாபி, ½ தோலா மிளகு சேர்த்து 1-2 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். ஸந்நிபாத ஜ்வரம், வாதம், அக்னிமந்தம், சூலம், கிராணி, குல்மம், க்ஷயம், கழுத்துக்கு மேற்பட்ட விடங்களில் வரும் நோய், ச்வாஸம், காஸம் இவை போகும்.

## ஆஸவ யோகங்கள்.

✻ **லோஹாஸவம் :** (பை. ரத்.) சுத்தி செய்த அயம், சுக்கு, மிளகு, திப்பிலி, தான்றிக்காய் தோல், கடுக்காய் தோல், நெல்லிமுள்ளி, ஓமம், வாய்விடங்கம், கோரைக்கிழங்கு, கொடிவேலிவேர்பட்டை இவை வகைக்கு 16 தோலா, தேன் 256 தோலா, வெல்லம் 400 தோலா, ஜலம் 12½ படி ஆஸவ முறைப்படி ஒரு மாதம் வைத்தெடுத்து உபயோகிக்கவும். பாண்டு, வீக்கம், குல்மம், உதரம், மூலம், ஜீர்ணஜ்வரம், மண்ணீரல் வீக்கம், காஸம், சுவாஸம், பகந்தரம், அருசி, கிரஹணி, ஹ்ருதய ரோகம் இவை நீங்கும்.

✻ **அம்ருதாரிஷ்டம் :** (பை. ரத்.) சீந்திற்கொடி 400 தோலா, தசமூலம் 400 தோலா, 50 படி ஜலத்தில் 12½ படி மீதமாகக் காய்ச்சவும். வெல்லம் 1200 தோலா, ஓமம் 64 தோலா, பர்படகம் 8 தோலா, ஏழிலம் பாலைப்பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, கோரைக்கிழங்கு, சிறுநாகப்பூ, கடுகுரோகிணி, அதிவிடயம், வெட்பாலையரிசி இவை வகைக்கு 4 தோலா, இவைகளை பிரக்ஷேபமாக்கிச் சேர்த்து ஒரு மாதம் வைத்திருந்து எடுத்து உபயோகிக்கவும். ஜ்வரங்கள் நீங்கும்.

✻ **மிருதஸஞ்சீவனீஸுரா :** (பை. ரத்.) பழைய வெல்லம் 1000 தோலா, கருவேலம்பட்டை 30 தோலா, மாதுளம்பட்டை, ஆடாதோடை திரிபலை, விஷ்ணுக்ராந்தி, அதிவிடயம், அமுக்கராக்கிழங்கு, தேவதாரு வில்வவேர், வாகைவேர், பாதிரிவேர், ஓரிலை வேர், மூவிலை வேர், கண்டங்கத்திரி வேர், முள்ளுக்கத்திரி வேர், நெரிஞ்சில் முள், இலந்தை வேர், பேய்தும்மட்டிக்காய், கொடிவேலி வேர் பட்டை, பூனைக்காலிவேர், மூக்கரட்டை வேர், இவை வகைக்கு 40 தோலா, 48 படி ஜலத்தில் வெல்லத்தைக் கரைத்து மற்றவைகளையும் இடித்துப் போட்டு 15 நாள் வைத்திருந்து பின் அதில் பாக்கு 128 தோலா, ஊமத்தை வேர், கிராம்பு, பதிமுகம், விலாமிச்சை வேர், சந்தனம், சதகுப்பை, ஓமம், மிளகு, ஜீரகம், கருஞ்சீரகம், பூலாங்கிழங்கு, ஜடாமஞ்சி, லவங்கப்பட்டை, ஏலரிசி, ஜாதிக்காய், கோரைக்கிழங்கு, கண்டந்திப்பிலி, சுக்கு, வெந்தயம், மேஷசிருங்கி, செஞ்சந்தனம் இவை வகைக்கு 8 தோலா இடித்துப்போட்டு மறுபடியும் 15 நாள் வைத்திருந்து மயூரயந்திர (தீநீர் எடுப்பது) த்திலிட்டு எரித்துத் தீநீர் வாங்கவும். இது மிருதஸஞ்சீவனி மத்யமாகும். பலம் வயதுக் கேற்பச் சாப்பிட தேகம் திடம் பெறும். புஷ்டி, பலம், நிறம் உண்டாகும். ஸந்நிபாத ஜ்வரம், விஸூசி, உடல் சில்லிடுதல் இவைகளில் கொடுக்க நல்லது.

✻ **மிருகமதாஸவம் :** (பை. ரத்.) முன்னர் கூறிய முறைப்படி எடுத்த மிருதஸஞ்சீவனி ஸுரை 200 தோலா, தேன் 100 தோலா,

ஜலம் 100 தோலா, கஸ்தூரி 16 தோலா, மிளகு, கிராம்பு, ஜாதிக்காய், திப்பிலி, லவங்கப்பட்டை, வகைக்கு 8 தோலா இவைகளைப் பானையிலிட்டு மூடி வைத்திருக்கவும். ஒரு மாதமானதும் எடுத்துக் கொடுக்கவும். காலரா விக்கல், திரிதோஷ ஜ்வரங்களில் ஸந்நிபாத நிலை இவைகளில் கொடுக்கலாம்.

## தாது கத ஜ்வரங்கள்.

**ரஸ கத ஜ்வரம்:** ஜ்வரம் ஆமாசயத்திலுள்ள ஆமத்தின் தொடர்பு கொண்டு ரஸத்தையும் பற்றினால் உடல் கனத்தல், ஹிருதயத்தில் வெகுட்டல், உடல் அசதி, வாந்தி, அருசி, களைப்பு இவை ஏற்படும்.

**ரக்த கத ஜ்வரம்:** ரத்தம் காரி துப்புதல், எரிச்சல், மயக்கம், வாந்தி, தலை சுற்றுதல், பிதற்றல், கட்டிகள், நாவரட்சி இவை ரக்தத்தைப் பற்றி ஜ்வரம் ஏற்படும்போது காணும் குறிகளாகும்.

**மாம்ஸ கத ஜ்வரம்:** கணுக்கால் குடைதல், மயக்கம், மல மிளகிப்போதல், சிறுநீர் அதிகமாகப் பிரிதல், உடலில் சூடு அதிகரித்தல். உள் எரிச்சல், கை கால் உதறுதல், களைப்பு இவை மாம்ஸத்தைப் பற்றிய ஜ்வரத்தின் அறிகுறிகளாகும்.

**மேதோகதஜ்வரம்:** அதிக வியர்வை, நாவரட்சி, மயக்கம், பிதற்றல், வாந்தி, உடல்நாற்றம், அருசி, களைப்பு, சகிப்புத் தன்மை குறைதல் இவை மேதஸைப் பற்றிய ஜ்வரத்தின் அறி குறிகளாகும்.

**அஸ்தி கத ஜ்வரம்:** எலும்புகள் முறிவதுபோல் வலி, தொண்டையில் கூவுதல், ச்வாஸம், வாந்தி, பேதி, கை கால் உதறுதல், இவை எலும்பைப் பற்றிய ஜ்வரத்தின் அறிகுறி களாகும்.

**மஜ்ஜ கத ஜ்வரம்:** ஜ்வரம் வரும்போதே கண்ணிருண்டு விடுதல், விக்கல், இருமல், உடல் சில்லிடுதல், வாந்தி, உள் ளெரிச்சல், கடும் சுவாஸம் மர்மஸ்தானங்களில் வலி. இவை மஜ்ஜதாதுவைப்பற்றிய அறிகுறிகள்.

**சுக்ரகதஜ்வரம்:** லிங்கம் திமிர்த்து சுக்கிலம் அடிக்கடி வெளி யாகி மரணமுண்டாம், இது சுக்கிலத்தை ஜ்வரம் பற்றுவதின் அறிகுறிகள்.

**தாது கத ஜ்வர சிகித்ஸை:** ரஸ கத ஜ்வரத்தில் வாந்தி செய் வித்தலும் லங்கனம் செய்தலும்; ரக்த கத ஜ்வரத்தில் ரக்த ப்ரஸாதனமான சரக்குகளால் தயாரித்த ஜலத்தை உடலில்

அபிஷேகம் செய்வது, ரக்தகோபசமன மருந்துகள், மேல்பூச்சு, ரக்தத்தை அட்டை, குடுவை முதலியவைகளால் வெளியாக்குதல்; மாம்ஸ கதத்தில் கடும் விரேசனம், மேதோ கதத்தில் கொழுப்பைக் குறைக்கும் முறைகள், அஸ்தி கதத்தில் வாதஹர சிகித்ஸை, பஸ்தி எண்ணெய் தேய்த்து விடுதல், பிடித்து விடுதல் இவை சிகித்ஸையாகும். மஜ்ஜ சுக்ர கத ஜ்வரங்களுக்குச் சிகித்ஸை கிடையாது.

**ஆமாசய கத ஜ்வர சிகித்ஸை :** மப்பினால் ஏற்படும் ஜ்வரத்தில் கடுகுரோகிணி, கோரைக்கிழங்கு, கண்டந்திப்பிலி கடுக்காய் இவைகளின் கஷாயம் நல்லது.

**மந்தர ஜ்வரம் :** ஜ்வரம் ஏற்படும்போதே எரிச்சல், தலை சுற்றுதல், மயக்கம், அதிஸாரம், வாந்தி, நாவரட்சி, தூக்கமின்மை, முகம் சிவந்து நாவும் அண்ணமும் வரண்டுபோதல், கழுத்தைச் சுற்றிக் கடுகளவில் சினப்புகள் இவைகள் காண மந்தர ஜ்வரமாகும்.

**சிகித்ஸை :** கோரைக்கிழங்கு, பர்படகம், அதிமதுரம், திராக்ஷை இவை ஸம அளவு 16 பங்கு ஜலத்தில் அரைக்கால் பங்கு மீதமாகக் கஷாயமிட்டு தேனுடன் சாப்பிடலாம். சந்தனம், விலாமிச்சைவேர் கொத்துமல்லிவிதை, வெட்டிவேர், பர்படகம், கோரைக்கிழங்கு, சுக்கு இவை ஸம அளவு சேர்த்துக் கஷாயமிட்டுச் சாப்பிடலாம்.

அரசமரத்தடியில் வசித்தல், ஹோமம், மந்திரம், சிவபூஜை, விஷ்ணு ஸஹஸ்ரநாமம் படித்தல், நவரத்ன மணிகளைக் கழுத்தில் தரித்தல், பெரியோர்களின் ஆசி இவை எல்லா ஜ்வரங்களையுமே போக்கும். சமுத்திரத்தின் வடகரையில் த்விரதன் என்ற வானர வீரன் இருக்கிறான்: அவனை நினைக்க ஜ்வரங்கள் இறங்கும்.

**துர்ஜல ஜ்வரம் :** கெட்ட தண்ணீரை உபயோகித்தலாலோ, அல்லது ஜலத்தால் கெடுதி ஏற்பட்டோ ஏற்படும் ஜ்வரங்களில் கடுக்காய், வேப்பிலை, சுக்கு, இந்துப்பு, கொடிவேலிவேர்பட்டை இவைகளின் சூர்ணத்தைச் சாப்பிடலாம். 4 தோலா சுக்கு கஷாயத்தில் தேன் சேர்த்துச் சாப்பிட அருசி, அக்னிமந்தம், பீநஸம், காஸம், ச்வாஸம், உதரம், ஜலதோஷம் இவை நீங்கும். மனமும் கண்களும் தெளிவடையும்.

**துர்ஜல ஜேதா ரஸம் :** சுத்த வத்ஸநாபி 2 தோலா, சோழி பஸ்மம் 5 தோலா, மிளகு 9 தோலா இவைகளை இஞ்சிச்சாறு விட்டரைத்துப் பயறளவு மாத்திரை செய்து கொடுக்க மப்புடனும் ஜலதோஷத்துடனும் ஏற்படும் ஜ்வரங்களில் நல்லது. அஜீர்ணம் வயிறு உப்புசம், மலக்கட்டு, வயிற்றுவலி, ச்வாஸம், காஸம் இவை களுடன் ஏற்படும் ஜ்வரத்தில் மிகவும் நல்லது.

**படோலாதி கஷாயம் :** பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, சீந்திற் கொடி, ஆடாதோடை வேர், சுக்கு, கொத்துமல்லிவிதை, நில வேம்பு இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துச் சாப்பிட கடும் ஜலதோஷமும் குணமாகும்.

**ஜலதோஷம் ஏற்படாமல் காப்பாற்ற :** சாப்பாட்டிற்குப் பின் தின மும் சுக்கு, கடுகு, கடுக்காய் மூன்றையும் கல்கமாக்கிச் சாப்பிடும் பழக்கமுள்ளவனுக்கு எல்லா தேசத்து ஜலமும் ஒத்துக் கொள்ளும், ஜலதோஷம் ஏற்படாது.

**ஜ்வரத்தில் பத்யாபத்யங்கள் :** வியாதியின் காரணம், அதன் சிகித்ஸை, பத்யம் இவை மூன்றையும் நன்கு கவனிக்க நீர்வற்றிய தும் தீய்ந்து விடும் முளைபோல் சக்தி இழந்து விடும். அபத்யம் ஏற்பட வியாதி என்னும் விதைக்கு நீர் வார்த்தாற்போலாகும். மருந்தின்றி பத்யத்தாலேயே வியாதியைப் போக்க முடியலாம். ஆனல் பத்யமின்றி நூற்றுக்கணக்கான மருந்துகளாலும் பயனில்லை. ஆக முத்தோஷங்கள், தூஷ்யங்களான தாதுக்கள், தேசம், காலம், சூழ்நிலை, அவனவனுக்கு ஒத்துக்கொள்வது, ஒத்துக்கொள்ளாதது, பலம், வயது, வியாதியில் ஏற்பட்ட மாறு தல்கள், கொடுக்கும் மருந்து, அவனது அக்னி பலம், அதற் கேற்ற உணவு இவை ஒவ்வொன்றிலும் சிகித்ஸை செய்பவன் மனதைச் செலுத்த வேண்டும்.

**தருண ஜ்வரத்தில் பத்யம்:** வாந்திக்குக் கொடுப்பது, லங்கனம், ஜ்வரம் ஆரம்பித்த உடனேயே ஜ்வரஹர மருந்துகள் கொடுக்காது இயற்கைக்கு அவகாசமளித்தல், கஞ்சி, வியர்வை அளிக்கும் உபசாரங்கள், கசப்பு, உரைப்பு மிக்கவைகளை அருந்து தல், ஆமத்தை (மப்பை) பாசனம் செய்பவை இவை ஹித மாகும்.

**ஸந்நிபாதத்தில் ஹிதமானவை:** ஆமமும் கபமும் நீங்க லேஹ்யம், அஞ்சனம், நஸ்யம், கொப்பளிக்கும் மருந்து, ரஸக்ரியை, கைகால் கழுத்து மென்னி இவ்விடங்களில் வியர்த்துச் சில்லிட்டால் வருத்த கொள்ளுத் தூளைத் தேய்த்து விடுதல் இவை ஹிதமளிக்கும்.

**தருண ஜ்வரத்தில் அஹிதமானவை:** ஸ்னானம், வாந்தி, புணர்ச்சி, துவர்ப்பு மிக்கவை, உடல் பயிற்சி, தைலம் தேய்த்தல், பகல் தூக்கம், பால், நெய், பருப்பு வகை, மாமிச உணவு, மோர், கள், இனிப்புமிக்கவை, குருவானவை, திரவம் மிக்கது, உணவு, அதிகக்காற்று, ஊர் சுற்றுதல், கோபம் இவைகளைத் தவிர்க்க வேண்டும்.

**மத்யம ஜ்வரத்தில் ஹிதமானவை:** ஜ்வரதோஷம் முழுதும் பாகமடையாமலும் சிறிது பாகம் ஏற்பட்டுமிருக்கும் நடுநிலையில் பழைய சம்பா, கத்தரி, முருங்கை, பாகல், பிரப்பங்குறுத்து, உளுந்து, பேய்புடல், கக்கரி, பயறு, துவரை, கொள்ளு, கடலை, மங்குட்டப்பயறு, இவைகளின் கஞ்சி, வட்டத்திருப்பி, சீந்திற் கொடி, சக்ரவர்த்திக்கீரை, சிறுகீரை, பாலைக்கீரை, மணத்தக்காளி, திராக்ஷை, விலாம்பழம், மாதுளம்பழம், லகுவாயும் அவனவனுக்கு ஒத்துக் கொள்பவையும் தோஷ கோபத்திற்குக் காரண மாகாதவையுமான உணவும் மருந்தும் நல்லது.

**நாட்பட்ட ஜ்வரத்தில் ஹிதமானவை:** பேதிக்குக் கொடுத்தல், கண்ணுக்கு மை, நஸ்யம், புகைபிடித்தல், அனுவாஸனவஸ்தி, ஸிராவேதம், ஜ்வரத்தை அடக்கும் மருந்துகள், உடற்பூச்சு, எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதல், அமிழ்ந்து குளித்தல், சீதோபசாரம் இவை நல்லவை. கலைமான், புள்ளிமான், மயில், சீவல் பட்சி, முயல், சிட்டுக்குருவி, கோழி, சக்ரவாகம், கரிவால் பட்சி—இவைகளின் மாம்ஸம், பசு ஆடு இவைகளின் பாலும், நெய்யும் கடுக்காய், மலையருவி ஜலம், சிற்றுமணக்கெண்ணெய், வெண்சந்தனம், நிலவு, மனதிற்கு ஆனந்தமளிக்கும் வகையில் பிரியமானவர்களைக் கட்டித் தழுவுதல், (காமவிகாரம் ஏற்படாத வகையில்) இவை சிறந்தவை.

**ஆகந்து ஜ்வரங்களில் ஹிதமானவை:** பொதுவாக தோஷ கோபமில்லாது அடிதடி, கோபம், காமம், முதலியவைகளால்

ஏற்படும் ஜ்வரங்களில் முதலில் லங்கனம் அவசியமில்லை. அபிசாரம், சாபம் முதலியவைகளுக்கு ஜபமும் ஹோமமும். கிரஹபீடையால் ஏற்பட்டதில் தானமும் மந்திர ஜபமும், காமசோக பயங்களால் ஏற்பட்ட ஜ்வரத்தில் வாதஹரமானவை, மனம் தேறுதல், இஷ்டத்தைப் பெறுதல், உத்ஸாஹம் சந்தோஷம் இவை; கோபத்தால் ஏற்பட்ட ஜ்வரத்தில் பித்தஹரமானவை, பிரியையின் நல்வார்த்தை இவை. ஓஷதிகளின் விஷக் காற்று பட்டு ஏற்படுவதில் விஷம் நீங்க பித்த பிரஸாதன சிகித்ஸை; வழி நடந்த களைப்பால் ஏற்படுவதில் எண்ணெய் ஸ்நானமும் களைப்பு நீங்கப் பகல் தூக்கமும்; மனக்கலக்கத்தால் ஏற்பட்டதில் மனதிற்கு தேறுதலும், அடியால் ஏற்பட்டதில் நெய் உள்ளுக்குச் சாப்பிடுவதும், மேலுக்குத் தடவிக் கொள்வதும், ரத்த மோக்ஷணம், மத்யமருந்துதல், மாம்ஸ ரஸம் சேர்ந்த உணவு. புண்ணால் ஏற்பட்டதில் புண் ஆறுவதற்கான சிகித்ஸை இவை நல்லது.

விஷம ஜ்வரத்தில் ஹிதமானவை: விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம், வேத பாராயணம், தேவ குரு பூஜை, பிரம்மசர்யம், தவம், ஹோமம், தானம், ஜபம், ஸாதுக்களை அண்டுதல், ரத்னங்களையும் சித்த மூலிகைகளையும் தரித்தல், மங்களமான நற்காரியங்களைச் செய்தல் இவை ஹிதமாகும்.

உடலில் வலுவேற்படும் வரை ஜ்வரத்திலிருந்து விடுபட்டவன் தேகப் பயிற்சி, புணர்ச்சி, ஸ்னனம், நடை இவைகளைத் தவிர்க்க வேண்டும்.

ஜ்வர சிகித்ஸை முற்றிற்று.

# 2. அதிஸாரம்.

**நிதானம் :** எளிதில் ஜீர்ணமாகாத குரு, ஸ்நிக்த, ரூக்ஷ, உஷ்ண, திரவ, ஸ்தூல, சீதள குணமுள்ள உணவுப்பொருளே அதிக அளவில் ஏற்பதும், ஒன்றுக்கொன்று விரோதமுள்ள பொருளாக ஒருங்கே சாப்பிடுவதும், முன் உண்ட உணவு ஜீர்ண மாகாத போது உண்பதும், விஷம உணவு உண்பதும், அளவுக்கு மீறி உண்பதும் விஷம், பயம், சோகம் இவைகளும், கெட்ட தண்ணீரையும் மதுவையும் தேக ப்ரக்ருதிக்கு ஒவ்வாததையும் சாப்பிடுவதும், ஜலத்தில் வெகுநேரம் விளையாடுவதும் மல மூத்ர வேகங்களைக் கட்டுப்படுத்துவதும் கிருமி நோயும் அதிஸார நோய்க்குக் காரணமாகின்றன.

**ஸம்ப்ராப்தி :** சரீரத்தில் உள்ள ரஸம் ரக்தம் மூத்ரம் வியர்வை முதலியதாக இருக்கும் ஜல தாதுப்பொருள் அளவில் அதிகமாகி குடலுள் சேர்ந்து ஜடராக்னியைத் தணித்து மலத்துடன் சேர்ந்து வாயுவால் கீழே உந்தப்பட்டு குத மார்க்கம் வழியே அதிக அளவில் வெளியாகிறது. இது அதிஸாரமாகும். வாதாதி ஸாரம், பித்தாதிஸாரம், கபாதிஸாரம், திரிதோஷாதிஸாரம், சோகாதிஸாரம், ஆமாதிஸாரம் என்று இது ஆறு வகைப்படும். சிலர் அதிஸாரம் காரண வேற்றுமையால் பல வகைப்படும் என்பர். தன்வந்தரி இதை ஒத்துக் கொள்ளவில்லை.

**பூர்வரூபம் :** ஹிருதயம், தொப்புள், குதம், அடிவயிறு, மேல் வயிறு பிரதேசங்களில் ஊசிகுத்துவதுபோன்ற குத்துவலி, உடல் தளர்ச்சி, வாயுப்பொருமல், மலக்கட்டு, கீழ்வாயு பிரியாமை, அஜீர்ணம் இவை அதிஸாரம் ஏற்படுவதற்கு முன் காணும் குறிகள்.

**ரூபம்: வாதாதிஸாரம் :** வாதத்தால் ஏற்படும் அதிஸாரத்தில் சிவந்து நுரையுடன் சிறிது சிறிதாக அடிக்கடி மப்புடன் வலியும் இரைச்சலும் கூடி மலம் வெளியாகும்.

**பித்தாதிஸாரம் :** பித்தத்தால் ஏற்படுவதில் மஞ்சள் நிறத்தில் அல்லது சிறிது நீலமும் சிகப்பும் கலந்த நிறத்தில் நாவரட்சி, மயக்கம், எரிச்சல், வயிற்றில் புண் இவைகளுடன் மலம் வெளி யாகும்.

**கபாதிஸாரம்.** கபத்தால் ஏற்படுவதில் வெளுத்து குழம்பாக கபத்துடன் கலந்து துர்நாற்றத்துடன் குளிர்ந்த மலம் வெளி யாகும். அப்போது உடல் சிலிர்க்கும்.

**திரிதோஷாதிஸாரம் :** திரிதோஷங்களாலும் ஏற்படுவதில் பன்றிக் கொழுப்பும் மாம்ஸம் கொதித்த ஜலமும் போல மூன்று

தோஷாதிஸாரங்களின் குணங்களும் ஒரே இடத்தில் காணப்பட்டு மலம் வெளியாகும். இது மிகவும் கஷ்டப்பட்டுத் தான் சிகித்ஸை க்கு வசப்படக் கூடியது.

**சோகாதிஸாரம் :** அந்தந்த மன திற்குக் கஷ்டமளிக்கும் காரணங்களால் மனம் வருந்தி உணவு குன்றி வாடும்போது சோகத்தால் ஏற்படும் சூடு குடலுள் புகுந்து உணவுக்குறைவால் விஷமமாகியிருக்கும் ஜடராக்னியுடன் கலந்து குந்துமணி நிறத்தில் ரத்தம் மலம் கலந்தோ, கலக்காமலோ, நாற்றத்துடனோ, நாற்றமில்லாமலோ வெளியாகும். இது மிகவும் கஷ்ட ஸாத்யம்.

**ஆமாதிஸாரம் :** உண்ட உணவு ஜீர்ணமாகாததால், ஏற்படும் திரிதோஷகோபம் குடலையும் தாதுக்களையும் மலங்களையும் கெடுத்து அவைகளின் கெடுதிக்கேற்ப பல நிறங்களில் வலியுடன் மலத்தை வெளியாக்குகின்றது. இதுவும் கஷ்ட ஸாத்யம்.

**ஆமபக்வலக்ஷணங்கள் :** வாத-பித்த கப லக்ஷணங்கள் தனித்துக் கண்டும், ஜலத்தில் போட அமிழ்ந்தும், மிகுந்த நாற்றமும் குழகுழப்பும் ஏற்பட்டும் மலம் வெளியானால் ஆமமாகும். ஜடராக்னியின் பலம் குறைவதால் ஜீர்ணியாத உணவுச்சத்தை ஆமம் என்பர். இதற்கு மாறுபட்ட குறிகளும் சரீரத்தில் கலகலப்பும் ஏற்பட அதிஸாரம் பக்வமடைந்து விட்டதாகக் கொள்ளலாம்.

**அஸாத்தியக் குறிகள் :** உபத்ரவங்கள் அதிகமில்லாவிட்டாலும், ரஸம் முதலிய தாதுக்கள் அதிகம் கெடாதபோதிலும் குழந்தைகளுக்கும் வயோதிகர்களுக்கும் ஏற்படும் முழு ரூபங்களுடனும் உபத்ரவங்களுடனும் காணும் அதிஸாரம் அஸாத்யமாகும். தாதுக்கள் அதிகம் கெட்டிருந்தால் யுவர்களுக்கும் அஸாத்தியமாகும். உள்ளிப்பூண்டு நாற்றமும் சவ நாற்றமும் கடுமையான கெட்ட நாற்றமும் கொண்டதும் மிகக் குழகுழப்புடையதும், மாமிசம் அலம்பிய ஜலம் போன்றதும், பழுத்த நாவல்பழ நிறமுடையதும், நெய், தேன், பால் எண்ணெய், கெட்டியான தயிர் போன்றதும், பாசி நிறத்திலுள்ளதுமான அதிஸாரம் சிகித்ஸைக்கு வசப்படாது

**உபத்திரவங்கள் :** உடல் வீக்கம், வயிற்றுவலி, ஜ்வரம், நாவரட்சி, ச்வாஸம், காஸம், அருசி, வாந்தி, மயக்கம், விக்கல் இவை அதிஸாரத்தில் ஏற்படும் உபத்ரவக்குறிகள். இவை ஏற்பட்டால் நோயாளி கைவிடத்தகுந்தவன்.

**ரத்தாதிஸாரம் :** பித்தத்தை அதிகப்படுத்தும் உணவுப் பொருளை அதிக அளவில் உண்ணும்போது ரத்தமே மலத்துடன்

அதிகமான அளவில் வெளியாகும். இதில் சேரும் வாயு முதலிய தோஷங்களின் சேர்க்கையை அதனதன் குறிகளைக் கொண்டு கண்டு பிடிக்கலாம்.

**பிரவாஹிகா–வயிற்றுக்கடுப்பு–சீதபேதி:** உடலுக்கு அஹித மான உணவை ஏற்பவனுடைய குடலில் வாயு மிகுந்து அங்கு குடலுட்புறத்தில் அமைந்திருக்கும் கபப் பூச்சைக் கெல்லி வெளி யேற்றுகிறது. இதனால் முக்கி முக்கி மலத்தை வெளியேற்றும் முயற்சியில் கபத்துடன் சிறிது சிறிதாக மலமும் அடிக்கடி வெளி யாகிறது. வாதம் மிகுந்த நிலையில் அதிகக் குத்துவலியும், பித்தம் மிகுந்த நிலையில் அதிக எரிச்சலும், கபம் மிகுந்த நிலையில் மலத்துடன் அதிகக் கபமும், ரத்தம் மிகுந்த நிலையில் ரத்தமும் வெளியாகி முறையே வாதப்பிரவாஹிகை, பித்தப்ரவாஹிகை, கபப் பிரவாஹிகை, ரத்தப்பிரவாஹிகை ஏற்படுகிறது. கொழுப்பு மிக்க உணவை உண்பவனுக்கும், வரண்டபொருள் உண்பவனுக் கும் இது ஏற்படலாம். ஆமபக்வ லக்ஷணங்கள் அதிஸாரத்தில் கூறப்பட்டுள்ளவையே.

**அதிஸாரம் - பிரவாஹிகை குணமடைந்ததன் குறி:** மலம் வெளியாகாமல் சிறுநீரும் கீழ்வாயுவும் தனியே பிரிந்து, ஜடராக்னி பலம்பெற்று குடலும் லகுவாகி கலகலப்பு பெற்றதும் இந்த வயிற்றுநோய் குணமடைந்துவிட்டதாகக் கருதலாம்,

**ஜ்வராதிஸாரம்:** ஜ்வரத்திற்கும் அதிஸாரத்திற்கும் கூறப் பட்டுள்ள தனிக்குறிகள் சேர்ந்து காணில் ஜ்வராதிஸாரமாகும். அதனால் இங்கு தனித்துக் கூறப்படவில்லை.

**அதிஸாரத்தில் மரணக்குறி:** உடல் விரைத்து, உதரலுடன் வயிறு உப்புசம் ஏற்பட்டு உடல் குளிர்ந்தால் மரணம் சமீபித் துள்ளது என அறியலாம். அடங்கா நாவரட்சி, காஸம், உடல் காய்ந்து போதல், ஜ்வரம் எரிச்சல், மூர்ச்சை, விக்கல், அன்ன த்வேஷம், வாந்தி, சூலம் இவை ஏற்பட்டுவிட்டால், பிறகு கோவிந்த! கோபால! கதாதர! என்று கடவுள் பெயரை ஜபிப்பதுதான் நல்லது.

**சிகித்ஸை:** அதிஸாரம் ஆரம்பிக்கும் நிலையில் லங்கனம் நல்லது. ஷடங்கயூஷம் அல்லது பிப்பல்யாதியூஷம் சாப்பிடலாம்.

**ஷடங்கயூஷம்:** பயற்றங்கஞ்சியை மாம்ஸரஸம், மோர், கொத்துமல்லிவிதை ஜீரகம், இந்துப்பு சேர்த்துச் சாப்பிடலாம். இது ஒரு ஷடங்கயூஷமாகும். நல்ல தீபனம். கிரஹணியில் ஏற் படும் கெடுதல்களைப் போக்கவல்லது. அரோசகம் ஜ்வரமிருந் தாலும் நல்லது. பிரவாஹிகையில் ஏற்றதல்ல. வில்வம்பிஞ்சு

அல்லது வில்வப்பழத்தினுள் சதை, கொத்துமல்லிவிதை, ஜீரகம், வட்டத்திருப்பி, சுக்கு, எள்ளு இவைகளை அரைத்துச் சேர்த்துத் தயாரித்த கஞ்சி அதிஸாரத்தில் நல்லது.

**பொதுமுறை:** ஆமம்-பக்வம் என்ற நிலைகளை அறிந்து பின்னர் சிகித்ஸை செய்யவேண்டும். ஆமமாக இருந்தால் லங்கனமும் ஆமத்தை பாசனமும் செய்விக்கலாம், லங்கனத்திற்குப் பிறகு திரவமான லகுவான உணவு கொடுக்கலாம். அதிஸார நோயில் நோயாளி பலவானுனல் லங்கனத்தைக் காட்டிலும் வேறு சிறந்த வழி கிடையாது. எவ்வளவு கொடுமையான மப்புச் சேர்க்கையையும் அது தணித்து ஜீர்ணமடையச் செய்து விடும்.

வெட்டிவேரும் இஞ்சியும், அல்லது கோரைக்கிழங்கும் பர்படகமும், அல்லது கோரைக்கிழங்கும் வெட்டிவேரும் சேர்த்துத் தயாரித்த வெந்நீர் நாவரட்சி ஏற்படும்போது சாப்பிடலாம். ஆமாதிஸாரத்தின் ஆரம்பநிலையில் மலத்தைக் கட்டுப்படுத்துவது தவறு. மப்பினுல் ஏற்பட்ட கெடுதி வளர்ந்து பல நோய்களுக்குக் காரணமாகலாம், அதிஸார ஆரம்பநிலையில் மலத்தைக் கட்டுவதால் வீக்கம், பாண்டு, மண்ணீரல் வீக்கம், குஷ்டம், குல்மம், உதரம், ஜ்வரம், தண்டகாலஸகம், வயிறு உப்புசம், கிரஹணீ, மூலநோய் இவை ஏற்படலாம். ஆனுல் சிசு வயோதிகர் வாத-பித்தாதிஸாரம், தாதுபலம் குறைந்தவன், கடும் ஜ்வரமுள்ளவன், தோஷம் மிகுந்தவன், அதிகமான பேதியானவன் இவர்களுக்கு ஆமமிருந்தாலும் ஸ்தம்பன (கட்டு) ஔஷதங்கள் கொடுப்பது நல்லது. பொதுவாக அதிஸாரம், ஜ்வரம், ரத்தபித்தம், கண்ணுேய் இவைகளில் அவை வந்தவுடனே வியாதி பிரத்யநீக சிகித்ஸை செய்வது உசிதமில்லை. ஏனெனில் அவைகளின் வேகம் தடுக்கமுடியாத நிலையை அடைந்து விடும்.

சிறிது சிறிதாகவும் மலக்கட்டுடனும் வலியுடனும் மலம் வெளியானுல் கடுக்காயையும் திப்பிலியையும் அரைத்துக் கல்கமாக்கிச் சூடு காட்டிக் கொடுத்து மலத்தை முதலில் இளக்கிக் கொள்ளுதல் நல்லது. பசி நன்றாக இருந்து, ஆனுல் தோஷம் மிகுந்திருக்கக் கட்டுடன் மலம் வெளியானுல் வாய்விளங்கம், திரிபலை, திப்பிலி-இவைகளின் கஷாயத்தில் மலத்தை இளக்கிக் கொள்ளுதல் நல்லது. இவ்விதம் மலமிளகிய பிறகு பசியால் களைப்பேற்பட்டால், வாயுவைக் கண்டிப்பதும் பசியைத் தூண்டுவதுமான மருந்துகளாலான கஞ்சியைக் கொடுத்தல் நல்லது. மலக்கட்டு மிகுந்து அதிக அளவில் மலம் வெளிப்பட்டால், முதலில் வமனத்திற்குக் கொடுத்த பின் லங்கனம் செய்விக்கலாம்.

*✲ லங்கனம் முதலியவைகளால் நல்ல பசி ஏற்பட்டவுடன் மருந்துச் சரக்குகளால் தயாரிக்கப்பட்ட கஞ்சிகள், நெல்பொரிசத்து, பாசிப்பருப்புக் கஞ்சி, துணியில் வடிகட்டிய கஞ்சித்தெளிவு இவைகளில் ஒன்றைக் கொடுக்கலாம். நெல் பொரி மாவை சிறிதளவு ஜலம் விட்டுக் குழைத்து லேகியம் போல் செய்து சாப்பிட எளிதில் ஜீர்ணமாகாமல் குருவாகும். அதையே அதிக ஜலம் விட்டரைத்துச் சாப்பிட எளிதில் ஜீர்ணமாகும். நோயாளிக்கு அதிக நாவரட்சி ஏற்பட்டால் கொத்துமல்லி விதையையும் வெட்டிவேரையும் (வட்டத்திருப்பிசேர்த்தோ, சேர்க்காமலோ) வென்னீர் விட்டுக்காய்ச்சி, குடிநீராகவும், அதிலேயே கஞ்சியும் தயாரித்துச் சாப்பிடலாம். ஓரிலை மூவிலை கண்டங்கத்திரிவேர் முள்ளுக்கத்திரிவேர், சிற்றுமுட்டிவேர், நெரிஞ்சில், வில்வவேர், வட்டத்திருப்பி, சுக்கு, கொத்துமல்லி விதை இவைகளை இடித்து ஷடங்கபானீய முறையில் (2 தோலா சரக்கை $\frac{3}{4}$ படி ஜலத்திவிட்டு காலே அரைக்கால் படி மீதமாகக் காய்ச்சிக் கொள்வது) குடிநீர் தயாரித்து அதிலேயே கஞ்சி முதலியவைகளைத் தயாரித்துக் கொடுக்க நல்லது. —(பை. ரத்னவளி)*

தேவதாரு, வசம்பு, கோரைக்கிழங்கு, சுக்கு, அதிவிடயம், கடுக்காய் இவைகளைக் கஷாயமிட்டு குடிநீராக உபயோகிக்கலாம். சுக்கு, திப்பிலி, மிளகு, அதிவிடயம், பெருங்காயம், வசம்பு, ஸௌவர்சில உப்பு, கடுக்காய் இவைகளின் சூர்ணத்தை வென்னீருடன் சாப்பிட ஆமாதிஸாரம் நிற்கும். வட்டத்திருப்பி, பெருங்காயம், ஓமம், வசம்பு, பஞ்சகோலம், (திப்பிலி, கண்டந்திப்பிலி, சவ்யம், கொடிவேலிவேர்பட்டை, சுக்கு) கோரைக்கிழங்கு, இந்துப்பு இவைகளின் சூர்ணம் வென்னீருடன் சாப்பிட வலியுடன் கூடிய ஆமாதிஸாரம் நிற்கும். கொடிவேலிவேர்பட்டை, கண்டந்திப்பிலி வசம்பு, கடுகுரோகிணி, வட்டத்திருப்பி, வெட்பாலையரிசி, கடுக்காய், சுக்கு இவை வாத கப பித்த ஆம அதிஸாரங்களைப் போக்கும். சுக்கு, கடுக்காய், கோரைக்கிழங்கு, வசம்பு அதிவிடயம், தேவதாரு இவைகளின் கஷாயம் அல்லது சுக்கு, கோரைக்கிழங்கு, அதிவிடயம், சீந்திற்கொடி இவைகளின் கஷாயம் ஆமாதிஸாரத்தில் நல்லது.

**தான்ய பஞ்சகம் —தான்ய சதுஷ்கம்:** கொத்துமல்லிவிதை. வெட்டிவேர், வில்வவேர், கோரைக்கிழங்கு, சுக்கு இவைகளின் கஷாயம், ஆமத்துடனும், வலியுடனுமுள்ள அதிஸாரத்தைப் போக்க வல்லது. கிராஹி (மலத்தை இறுக்கக்கூடியது) தீபனம் (பசிதூண்டி) பாசனம் (அஜீர்ணத்தைப்போக்கி ஜீர்ணமாக்க வல்லது) ஆகும். பித்த அதிஸாரத்தில் சுக்கு நீக்கி மற்றவைகளைக் கஷாயமிட்டுக் கொடுக்கலாம்.

சுக்கைத் தூளாக்கி நெய்விட்டுப்பிசறி சிற்ருமணக்கிலேயில் வைத்து மூடிச் சீலேயிட்டுப் புடபாகமிட்டு புட்டவியலாக வேக வைத்து எடுத்து அந்தத் தூளுடன் சம அளவு சர்க்கரை சேர்த்துக் கொடுக்க ஆமாதிஸாரத்தில் ஏற்படும் உபத்ரவங்கள் நீங்கும். வயிற்றுவலி, மலக்கட்டு, வயிற்றுப்புசம் இவை நீங்கும்.

வில்வத்தினுட்பசையை வெல்லம் சேர்த்துச் சாப்பிடலாம். சுக்கு, ஜீரகம், இந்துப்பு, பெருங்காயம், ஜாதிக்காய், மாம்பருப்பு அக்ரூட், வில்வவேர் கசகசா இவைகளே வகைக்கு ஸமனெடை சேர்த்துத் தூள் செய்துத் தயிர் சேர்த்து மாத்திரையாக்கிச் சாப்பிட ஆமர்திஸாரம், அக்னிமந்தம், அரோகம் இவைகளேப் போக்கும். சுக்கு, மிளகு, அதிவிடயம், சிறுதேக்கு இவை வகைக்குச் சமனெடை தூள்செய்து குளிர்ந்த ஜலத்துடன் சாப்பிட வலி மப்புடன் கூடிய அதிஸாரம் சமனமாகும். தயிரன்னம் ஏற்ற உணவு.

கஞ்சாத்தூள் ஸாகருட் (குஜராத்திபண்டம்) ஜீரகம் இவை களேத் தயிருடன் சாப்பிட ஆமாதிஸாரம் ரத்தாதிஸாரம் நீங்கும். சுக்கு, அதிவிடயம், பெருங்காயம், கோரைக்கிழங்கு, வெட்பாலேப் பட்டை, கொடிவேலிவேர் பட்டை இவைகளின் சூர்ணம் ஆமாதி ஸாரத்தைப் போக்க வல்லது. கடுக்காய், அதிவிடயம், இந்துப்பு, ஸௌவர்சலே உப்பு, வசம்பு, பெருங்காயம் இவைகளின் சூர்ணம் வென்னீருடன் சாப்பிட நல்லது. ஆமாதிஸாரம் நீங்கும். பசி உண்டாகும். மூன்று பங்கு ஜலம் சேர்த்த பசுவின்பாலில் 20 கோரைக்கிழங்குகளே வேக வைத்துப் பால் மீதமாகும் வரை சுண்டிய கஷாயம் ஆமத்தையும் சூலத்தையும் போக்கவல்லது. கொத்துமல்லிவிதை சுக்கு இவைகளின் கஷாயம் பாசனம், தீபனம். அதையே ஆமணக்கு வேர் சேர்த்துக்கஷாயமிட வாயு வலியும் போகும். ஓமம், சுக்கு விலாமிச்சைவேர், கொத்துமல்லி விதை, அதிவிடயம், கோரைக்கிழங்கு, வில்வப்பஞ்சு, ஓரிலே, மூவிலே— இவைகளின் கஷாயம் அல்லது சூர்ணம் தீபனமும் பாசனமுமாகும். வெட்பாலேயரிசி, அதிவிடயம், பெருங்காயம், மலக்கட்டு இவைகளேயும் போக்கும். நல்ல தீபன பாசனமாகும். ஆமமின்றி வலியுடனும் லங்கனம் முதலியவைகளால் ஏற்பட்ட களேப்புடனுமுள்ளவனுக்கு யவச்சாரம், சுக்கு, புளியாரை, இலந்தைப்புளிப்பு, தயிர் இவைகளேக் கொண்டு தயாரான நெய் சாப்பிடுவது நல்லது.

**பக்வாதீஸார சிகித்ஸை:** வெள்ளே லோத்ரப்பட்டை, காட்டகத்திப்பூ, வில்வப்பிஞ்சு, கோரைக்கிழங்கு, மாங்கொட்டைப் பருப்பு, வெட்பாலேயரிசி இவைகளே எருமை மோரில் அரைத்துக்

கலக்கிச் சாப்பிட பக்வாதீஸார்ரம் நிற்கும், பத்மகம், மஞ்சிட்டி, அதிமதுரம், வில்வப்பிஞ்சு இவைகளின் சூரணத்தைத் தேனும் அரிசிகழுவிய ஜலமும் சேர்த்துச் சாப்பிட நல்லது. வெட்பாலைப் பட்டை, அதிவிடயம் இவைகளின் சூரணத்தைத் தேன் சேர்த்துச் சாப்பிட நாட்பட்டதும் பித்தம் ரத்தம் கலந்ததுமான அதிஸாரத்தைப் போக்கும்.

**லகு கங்காதர சூர்ணம்:** இலவம்பிசின், கோரைக்கிழங்கு, சுக்கு, வட்டத்திருப்பி, பெருவாகைவேர், காட்டகத்திப்பூ இவைகளின் சூர்ணம் மோருடன் சாப்பிட கங்கைபோன்று பெருகும் அதிஸாரத்தையும் நிறுத்தும்.

**விருத்த கங்காதர சூர்ணம்.** கோரைக்கிழங்கு, இலவம்பிசின் லோத்திரப்பட்டை, காட்டகத்திப்பூ, வில்வப்பிஞ்சு, வெட்பாலையரிசி இவைகளின் சூர்ணத்தை மோருடன் வெல்லம் சேர்த்துக் கலக்கி சாப்பிட அதிஸாரம் நிற்கும்.

அழிஞ்சில் வேரின் கல்கத்தைத் தேனும் அரிசி கழுவிய ஜலமும் சேர்த்துச் சாப்பிட அதிஸாரம் நிற்கும். ஓமம், இலவம் பிசின், இஞ்சி. காட்டகத்திப்பூ இவைகளைத் தூளாக்கி மோருடன் சேர்த்துச் சாப்பிடலாம். சுக்கு. ஜீரகம் இந்துப்பு, பெருங்காயம், ஜாதிக்காய், மாம்பருப்பு, சங்கபஸ்மம், சர்க்கரை இவைகளை புளித்த தயிர் விட்டரைத்து வில்லை தட்டி அனலில் வாட்டி உலர்த்திச் சாப்பிட அதிசாரம், வலி, கிரஹணி இவை நாட்பட்டதாயிருந்தாலும் நிற்கும். ஆலம்விழுதை அரைத்து மோர், அரிசி கழுவிய ஜலத்துடன் சாப்பிட அதிஸாரம் நிற்கும்.

**வாதாதிஸார சிகித்ஸை:** விளாம்பழம், வில்வப்பசை, புளியாரை, புளிப்பு மாதுளை இவைகளைக்கொண்டு தயாரித்த கஞ்சி மோர் சேர்த்தும், ஓரிலை. மூவிலை. கண்டங்கத்திரி, முள்ளுக்கத்திரி நெரிஞ்சில், (சிறுபஞ்சமூலம்) இவைகளின் கஷாயத்தில் தயாரித்த கஞ்சியும் சாப்பிட நல்லது. சிறு பஞ்சமூலம். குருந்தோட்டிவேர், சுக்கு. கொத்துமல்லிவிதை, நீலோத்பலக்கிழங்கு, வில்வப்பிஞ்சு, இவைகளைக்கொண்டு தயாரித்த கஞ்சியும் கஷாயமும் கோதுமை அல்லது அரிசி சத்துமா சேர்த்து சாப்பிட நல்லது. (அல்லது இவைகளை மோரில் கலந்து கொடுக்கலாம்.)

வசம்பு அதிவிடயம் கோரைக்கிழங்கு. வெட்பாலை விதை இவைகளின் கஷாயம் சாப்பிட நல்லது. கழற்சிப்பருப்பு, திப்பிலி சுக்கு, சிற்றாமுட்டிவேர். கொத்துமல்லிவிதை, கடுக்காய், இவைகளின் சூர்ணத்தை வென்னீருடன் சாப்பிட நல்லது.

✻ (பை ரத்.) கடுக்காய் தேவதாரு, வசம்பு, சுக்கு, கோரைக்கிழங்கு, அதிவிடயம், சீந்திற்கொடி இவைகளின் கஷாயம் மிகவும் நல்லது.

**பித்தாதிஸார சிகித்ஸை:** ஆமத்துடன் பித்தாதி ஸாரம் காணப்பட்டால், லங்கனம் செய்வித்துப் பிறகு, அவனது தேக வாகிற்கேற்ப கஞ்சி முதலியவைகளைக் கொடுக்கலாம். சந்தனம், கோரைக்கிழங்கு, பேய்ப்புடல், விலாமிச்சைவேர், சுக்கு இவைகளின் பானீய கஷாயத்தில் கஞ்சி தயாரித்து, புளிப்பும் மோரும் சேர்த்துச் சாப்பிட பாசனம் ஏற்படும் மலம் கட்டும். கொத்துமல்லி விதை, விளாமிச்சை வேர் இவைகளைப்போட்டு வென்னீர் அல்லது அவைகளுடன் வட்டத்திருப்பி சேர்த்து வென்னீர் தயாரித்துக் கொடுக்க நல்லது. வில்வப்பிஞ்சு, வெட்பாலையரிசி, வெட்டிவேர், கோரைக்கிழங்கு, அதிவிடயம் இவைகளின் கஷாயம் ஆமத்துடன் கூடிய பித்தாதிஸாரத்தில் நல்லது. ரஸாஞ்சனம், அதிவிடயம், வெட்பாலையரிசி, வெட்பாலைப்பட்டை, காட்டு அகத்திப்பூ, இஞ்சி இவைகளின் தூளை அரிசி கழுவிய ஜலத்துடன் தேன் கலந்து சாப்பிட நல்லது. பசி அதிகமாகி வலி நிற்கும். அதிமதுரம், காய்பல், வெள்ளை லோத்திரப் பட்டை, மாதுளம்பழத்தோல் இவைகளின் சூர்ணத்தைத் தேனும் அரிசி கழுவிய ஜலமும் கலந்து கொடுக்க நல்லது. மஞ்சிட்டி, காட்டகத்திப்பூ, வில்வவேர், ஸௌவர்சலே உப்பு, கந்தக வெடியுப்பு, மாதுளை ஓடு இவைகளின் சூர்ணத்தைத் தேனும் அரிசி கழுவிய ஜலமும் சேர்த்துச் சாப்பிட நல்லது. அதிஸாரமும் வலியும் நிற்கும். அதிவிடயம், வெட்பாலைப்பட்டை, வெட்பாலையரிசி இவைகளைச் சூர்ணம் செய்து அரிசி கழுவிய ஜலமும் தேனும் சேர்த்துச் சாப்பிட நல்லது. காய்பல், அதிவிடயம், கோரைக்கிழங்கு, வெட்பாலைப்பட்டை, சுக்கு இவைகளின் கஷாயத்தைத் தேன் சேர்த்துச் சாப்பிட அதிஸாரம் நிற்கும்.

வெட்பாலையரிசி ஒரு பலத்தை அரைத்து நான்கு பலம் நெய்யில் குழப்பி 16 பலம் ஜலம் விட்டெரித்துக் கிருத பாகத்தில் வடித்த நெய் பித்தாதிஸாரத்தில் சிறந்தது. சிறந்த தீபனமும் பாசனமுமாகும்.

**ரக்தாதிஸார சிகித்ஸை:** நாவல், மா, நெல்லி இவைகளின் துளிர்களைப் பிழிந்தெடுத்த சாறு தேன் நெய் பால் சேர்த்துச் சாப்பிடக் கடும் ரத்தாதிஸாரம் நிற்கும். வெல்லத்துடன் வில்வப் பிஞ்சு சேர்த்து இடித்துச் சாப்பிடலாம். இதனால் ஆமம், வலி, மலக்கட்டு, வயிற்று நோய் நீங்கும். வெட்பாலைப்பட்டை, அதிவிடயம், கோரைக் கிழங்கு, வெட்டிவேர், வெள்ளை லோத்திரப் பட்டை, சந்தனத்தூள், காட்டகத்திப்பூ, மாதுளை ஓடு, வட்டத்

திருப்பி. இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துச் சாப்பிட வலி எரிச்சல் ஆமம் ரத்தம் உள்ள கடுமையான அதிஸாரமும் நீங்கும். குடஜாஷ்டகம் என இதற்குப் பெயர்.

வெட்பாலையரிசி. அதிவிடயம், வில்வப்பிஞ்சு. விளாமிச்சை வேர், கோரைக்கிழங்கு இவைகளின் கஷாயம் அஜீர்ணம், வலி, ரத்தம் இவைகளுடன் கூடிய நாட்பட்ட ரத்தாதிஸாரத்திலும் கொடுக்க நல்லது.

பிஞ்சுக்கடுக்காய் ஜீரகம் இரண்டும் சம அளவு எடுத்து இலேசாக வறுத்துத் தூள் செய்து அரிசி கழுவிய நீருடன் கொடுக்க அதிஸாரம நிற்கும். மாதுளம்பட்டை, வெட்பாலைப் பட்டை இவைகளின் கஷாயமும் தேன் சேர்த்துச் சாப்பிட ரத்தாதிஸாரத்தை நிறுத்தும். சந்தனத்தை அரைத்து அரிசி கழுவிய ஜலத்துடன் தேனும் சர்க்கரையும் சேர்த்துச் சாப்பிட நாவரட்சி, மயக்கம், உடல் எரிச்சல் இவைகளுடன் கூடிய ரத்தாதிஸாரம நிற்கும்.

விலாமிச்சைவேர், அதிவிடயம், கோரைக்கிழங்கு, வில்வப் பிஞ்சு, கொத்துமல்லிவிதை வெட்பாலையரிசி, மஞ்சிட்டி, காட்டகத்திப்பூ, லோத்திரப்பட்டை, சுக்கு இவை நல்ல தீபன பாசனமாகும். அரோசகம், ஆமம், சீதம், மலக்கட்டு, அதிகவலி, ஜ்வரம் இவைகளுடன் கூடிய ரத்தாதிஸாரத்தில் நல்லது. வில்வப்பிஞ்சை ஆட்டுப்பாலில் வேகவைத்து சர்க்கரை இலவம் பிசின் வெட்பாலையரிசித்தூள் இவைகளுடன் சேர்த்துக்கொடுக்க நல்லது. ரஸாஞ்சனம, அதிவிடயம், வெட்பாலைப்பட்டை, வெட் பாலையரிசி, காட்டகத்திப்பூ, சுக்கு இவைகளின் சூர்ணத்தை தேன் அரிசி கழுவிய ஜலத்துடன் சாப்பிட கடுமையான ரத்தாதி ஸாரமும் நீங்கும்.

**அரிசி கழுவிய நீர்—தண்டுலோதகம்.** அரிசியை இரண்டு மூன்றாக உடைத்து எட்டுபங்கு ஜலம் விட்டுக் குழப்பி எடுத்துக் கொண்ட ஜலம் நல்லது.

**கலிங்காஷ்டகம்.** (சிகித்ஸாகலிகா) கடுக்காய், அதிவிடயம், இந்துப்பு, வசம்பு, பெருங்காயம், வெட்பாலையரிசி இவைகளின் சூர்ணம் ரத்தாதிஸாரம் ஆஸனவாயில் வலி இவைகளில் நல்லது.

**பிச்சாபஸ்தி.** வயிற்றில் கடுப்பும் குத்துவலியும் ஏற்பட்டு மலமும் வாயுவும் கட்டி கொஞ்சம் கொஞ்சமாக ரத்தம் வெளியாகும் போது பிச்சாபஸ்தி கொடுப்பது நல்லது. இலவம்பூவைப் புடபாக முறைப்படி மண்பூசி அவித்து இடித்துப்பிழிந்த சாறும் காய்ச்சிய பசுவின் பாலும் வகைக்கு 4 தோலா, நெய் 6 தோலா, நல்லெண்

ணெய் 6 தோலா, அதிமதுரம் கல்கமாக 3 தோலா, தேன் 12 தோலா இவைகளை நன்கு கடைந்து கலந்துகொள்ளவும். அடி வயிறு ஆஸனவாய் இடுப்பு முதலிய இடங்களில் தைலம் தடவி தேய்த்துப் பிறகு முன்சொன்ன குழப்பிய திரவத்தை பஸ்தி யந்திரமூலமாக உட்செலுத்தி அது முழுவதும் வெளியானதும பசுவின்பால் மாத்திரம் சாப்பிடவும். பித்தாதிஸாரத்திலும் இதைச்செய்யலாம். இரிமுள் (சிம்சபா) மந்தாரை இவைகளின் கொழுந்துயவை அரிசி வகைக்கு ஒரு பங்கு எடுத்துக் கஞ்சி தயாரித்து நெய்யும் பாலும் சேர்த்து பஸ்தி கொடுக்க அடிபட்டதால் ஏற்படும் இளைப்பு, சீதம் வெளியாகுதல், குடல் வெளியாகுதல், முக்கல் வலி இவைகளில் சிறந்தது.

**குதப்ரம்சம்.** அடிக்கடி முக்கி மலத்தை வெளியாக்குவதால் குடலில் கடைசிபாகம் பித்தத்தால் பாகமடைந்து வெளியாகும். பேய்ப்புடலும் அதிமதுரமும் சேர்த்துத் தயாரித்த கஷாயத்தில் துணியை நனைத்து வெளியான குடலின் மேல் பிழிய வேதனை அகன்று குடல் உட்செல்லும். ரத்தாதிஸார நோயாளிக்கு ஆட்டுப்பாலில் தேனும் சர்க்கரையும் சேர்த்துச் சாப்பிடுவதும் ஆஸனவாயை அலம்பிக்கொள்வதும் நல்லது. எலியின் மாம்ஸத்தைக்கொண்டு ஒத்தடம் கொடுப்பதும், அதன் கொழுப்பைத் தடவிக்கொள்வதும், புளியாரையைக் கொண்டு நெய் தயாரித்து சாப்பிடுவதும் குடல் வெளியாவதில் நல்லது. ஆஸனவாயில் நெய் தடவி கிளிஞ்சலுக்குள்ளிருக்கும் மாமிசத்தை எண்ணெய் யும் உப்பும் சேர்த்து வேகவைத்து அதனால் ஒத்தடம் கொடுக்க உடன் குடல் தன் நிலையை அடையும்.

✲ வெல்லத்துடன் வில்வப்பழச் சதையைச் சாப்பிட ஆமம் வலியுடன் கூடிய ரத்தாதிஸாரம் நிற்கும். யானைவணங்கி, இலந்தை, நாவல், காட்டுமா (சாரைப்பருப்பு கிடைக்கும் காட்டு மாமரம்) மா, மருது இவைகளின் பட்டையைப் பாலில் அரைத்துக் கலக்கித் தேனுடன் சாப்பிட ரத்தம் நிற்கும். நாவல், மா, நெல்லி இவைகளின் துளிரை இடித்துப் பிழிந்த சாற்றுடன் ஆட்டுப்பாலும் தேனும் சேர்த்துச் சாப்பிடலாம். காட்டுச்சிறுகீரையை அரிசி கழுவிய நீருடன் தேன் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட நல்லது. தண்ணீர்விட்டான் கிழங்கின் கல்கத்தைப் பாலுடனும் சாப்பிட நல்லது. (பை. ரத்னவளி)

✲ **குடஜரஸக்ரியை.** (பை. ரத்.) வெட்பாலைப் பட்டையின் கஷாயத்தை மீண்டும் காய்ச்சிச் சுருக்கி லேகிய பதத்தில் இறக்கி அதிவிடயத்தூள் சேர்த்துப் பிசைந்து சாப்பிட எல்லா அதிஸாரமும் நிற்கும்.

✲ கருப்பு எள்ளின் சூர்ணத்தில் கால்பங்கு சர்க்கரை சேர்த்து ஆட்டுப்பாலுடன் சாப்பிடலாம். வில்வப்பிஞ்சு, கோரைக்கிழங்கு, காட்டகத்திப்பூ, வட்டத்திருப்பி, சுக்கு, காரிலவம்பிசின் இவை வகைக்குச் சம எடை தூள் செய்து வெல்லம் சேர்த்து மோரில் கலக்கிச் சாப்பிடக் கடுமையான அதிஸாரமும் நிற்கும். வெட்பாலைவேரை அலம்பி 8 தோலா அளவு எடுத்து $\frac{1}{2}$ படி ஜலத்திலிட்டுக் கஷாயமிட்டு கால்பாகம் மீதமான கஷாயத்தில் 8 தோலா ஆட்டுப்பால் சேர்த்துப் பால் மீதமாகும் வரை காய்ச்சி தேன் $\frac{1}{2}$ தோலா சேர்த்துச் சாப்பிட ரத்தாதிஸாரம் நீங்கும். ஆலம்விழுதை அரைத்து அரிசி கழுவிய ஜலத்துடன் மோர் சேர்த்துக் குழப்பிச் சாப்பிடலாம். அம்மாதிரியே அழிஞ்சில் வேரை அரிசி கழுவிய ஜலத்தில் கரைத்துச் சாப்பிடலாம். தேனும் வெண்ணெய்யும் குழப்பி அல்லது வெண்ணெய்யும் சர்க்கரையும் அல்லது தேன் வெண்ணெய் சிறுநாகப்பூ (நாககேசரம்) இவைகளையும் குழப்பிச் சாப்பிடலாம். தேன் $\frac{1}{4}$ பங்கும் சர்க்கரை $\frac{1}{2}$ பங்கும் வெண்ணெய் $\frac{1}{4}$ பங்குமிருக்க வேண்டும். (பை. ரத்னவளி)

✲ **நாராயண சூர்ணம்.** (பை.ர.) சீந்திற்கொடி, ஸமுத்ராப்பச்சை விதை, வெட்பாலைஅரிசி, வில்வப்பிஞ்சு, அதிவிடயம், கருசலாங்கண்ணி, சுக்கு, கஞ்சா இவை வகைக்குச் சமஎடை. எல்லாவற்றிற்கும் சமம் வெட்பாலைப்பட்டை இவைகளின் சூர்ணத்தை தேன் அல்லது வெல்லம் கலந்து சாப்பிடலாம். வீக்கம், ரத்தாதிஸாரம், ஜ்வரம், நாவரட்சி, இருமல், பாண்டு, காமாலை, அக்னிமந்தம், பிரமேகம், மூலம் இவைகளைப் போக்க வல்லது.

✲ **கனகமூலாதிவர்த்தி.** (பை. ரத்.) ஊமத்தைவேர், வெட்பாலையரிசி, அபின் இவைகளைச் சம அளவு சேர்த்து அரைத்து வர்த்தியாகச் செய்துகொண்டு தேன்மெழுகும் நெய்யும் மேல் பூசி ஆஸனவாயில் செருகி வைக்க, எரிச்சலும் பாகமும் நின்று வலி குறையும். குதத்தில் ஏற்படும் எல்லா நோய்களும் நீங்கும்.

**கபாதிஸார சிகித்ஸை.** முதலில் லங்கனமும் பாசனமும் செய்வித்துப் பிறகு ஆமாதிஸாரத்திற்கான தீபன ஔஷதங்களைக் கொடுக்க வேண்டும். ஆவல்பட்டை, திரிகடு, வில்வப்பழச்சதை, கொடிவேலிவேர் பட்டை, வட்டத்திருப்பி, மாதுளம் ஓடு, பெருங்காயம் இவைகளின் கஷாயத்தில் தயாரித்த கஞ்சி நல்லது. நெரிஞ்சில், தினை, கண்டங்கத்திரி வேர், இவைகளின் கஷாயம் ஆம—கபாதிஸாரங்களில் நல்லது. நல்ல தீபன பாசனமாகும். கடுக்காய், ஸௌவர்சலை உப்பு, பெருங்காயம், இந்துப்பு, அதிவிடயம், வசம்பு இவைகளின் சூர்ணம் வெந்நீருடன் சாப்பிட நல்லது.

✲ கடுக்காய், கொடிவேலிவேர்பட்டை, கடுகுரோகிணி, வட்டத் திருப்பி, வசம்பு, கோரைக்கிழங்கு வெட்பாலையரிசி, சுக்கு இவைகளின் கஷாயம் நல்லது. செவ்வியம், அதிவிடயம், கோரைக்கிழங்கு, வில்வப் பிஞ்சு, சுக்கு, வெட்பாலைப்பட்டை, வெட்பாலையரிசி, கடுக்காய் இவை களின் கஷாயம் வாந்தியையும் கபாதிஸாரத்தையும் போக்கும். வட்டத் திருப்பி, வசம்பு, கோஷ்டம், திரிகடு, கடுகுரோகிணி இவைகளின் சூர்ணம் வென்னீருடன் சாப்பிட நல்லது. (பை. ர.)

ஸந்நிபாதாதிஸார சிகித்ஸை

மஞ்சிட்டி, அதிவிடயம், கோரைக்கிழங்கு, சுக்கு, விலாமிச்சை வேர், காட்டகத்திப்பூ, வெட்பாலைப்பட்டை, வெட்பாலையரிசி, வில்வப்பிஞ்சு இவைகளின் கஷாயம் திரிதோஷாதிஸாரத்தில் நல்லது.

அபயாதிவடி: கடுக்காய், சுக்கு, கோரைக்கிழங்கு—இவைகளை வகைக்குச் சம எடை எடுத்து இடித்துச் சம அளவு வெல்லம் சேர்த்து மாத்திரையாக்கிச் சாப்பிட ஆமாதிஸாரம் வயிறு உப்பு சம், மலக்கட்டு, காலரா, கிருமி, அரோசகம் இவைகளைப் போக்கும். நல்ல தீபனமாகும்.

வேதனையின்றி பக்வமாகி மலம் வெளியாகியும் பசியிருந்தும் நாட்பட்டுமிருக்கும் நிலையில், மலம் பல நிறங்களுடன் வெளியாகும் போது புடபாகங்களாலான மருந்துகள் கொடுக்கலாம்.

குடஜ புடபாகம். மழமழப்பான பூச்சி புழுவரிக்காத பச்சையான வெட்பாலைப்பட்டையை எடுத்து அரிசி கழுவிய ஜலம் விட்டு இடித்து அதை நாவல் புரசு இவைகளின் இலையால் சுற்றி குசதர்ப்பத்தால் கட்டி மேல் மண் பூசி நிழலிலுலர்த்தி உள்ளிருப்பது வேகுமளவு எரித்து எடுத்து, உள்ளிருக்கும் பட்டையை எடுத்துப் பிழிந்தெடுத்த சாற்றுடன் தேன் சேர்த்து அதிஸார நோயாளிக்குக் கொடுக்கலாம்.

கபபித்தாதிஸார சிகித்ஸை

மஞ்சிட்டி, காட்டகத்திப்பூ, மாம்பருப்பு, சிறுநாகப்பூ, வில்வப் பிஞ்சு, இலவம்பிசின், வெள்ளை லோத்திரப்பட்டை, வெட்பாலைப் பட்டை, வெட்பாலையரிசி—இவைகளைக் கஷாயமாக்கியோ கல்க மாக்கியோ, அரிசி கழுவிய ஜலத்துடன் சாப்பிட கபபித்தாதி ஸாரமும் ரத்தாதிஸாரமும் நிற்கும்.

[ இதே யோகத்தில் தாமரை கேஸரம் அதிகம். (பை. ர.) ]

✲ முஸ்தாதி கஷாயம் (பை. ர.) கோரைக்கிழங்கு, அதிவிடயம், மருள்வேர், வசம்பு, வெட்பாலைப்பட்டை இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துச் சாப்பிட நல்லது.

**வாதகபாதிஸார சிகித்ஸை**

தித்திப்பும் உரைப்பும் மிக்கதான உணவுகளை அதிகம் ஏற்ப தால் அக்னி பலம் குன்றி அதிஸாரம் ஏற்படுகின்றது. திரவ மாயும், நுரையுடனும், மப்புடனும் வெடிப்பு நாற்றத்துடனும், சத்தமும் வேதனையும் வயிற்றில் புண்ணும், சோர்வு, மயக்கம், தலை சுற்றல், களைப்பு இவைகளும், துடை முழங்கால் கணுக்கால் இடுப்பு முதுகு எலும்புகளில் வலியுடன் மலம் வெளியாகும் போது முன் கூறப்பட்ட தான்ய பஞ்சக யூஷம் நல்லது. அல்லது கொத்தமல்லி விதையும் சுக்கும் சேர்த்த பானீய கஷாயத்தில் தயாரித்த ஆகாரமும் நல்லது. வாதாதிஸாரத்தில் கூறப்பட்ட வைகளையும் இங்குள்ள வாதகபச் சேர்க்கைக் கேற்றவாறு கவனித்துக் கொடுக்கலாம்.

✲ கொடிவேலிவேர்ப் பட்டை, அதிவிடயம், கோரைக்கிழங்கு, ஒற்றுமுட்டிவேர், வில்வவேர், சுக்கு, வெட்பாலையரிசி, வெட்பாலைப் பட்டை, கடுக்காய் இவைகளின் கஷாயமும் நல்லது. (பை.ர.

**வாத பித்தாதிஸார சிகித்ஸை**

காய்பல், அதிமதுரம், லோத்திரப்பட்டை, மாதுளை ஓடு இவைகளின் சூர்ணத்தைக் கழுநீருடன் சாப்பிடலாம். கோரைக் கிழங்கு, அதிவிடயம், மரமஞ்சள், வசம்பு, சுக்கு இவைகளின் கஷாயம் தேனுடன் சாப்பிட நல்லது. மரமஞ்சள், வசம்பு, வெள்ளைலோத்திரப்பட்டை, வெட்பாலையரிசி, சுக்கு, இவைகளின் சூர்ணத்தை மாதுளம்பழச் சாற்றுடன் சாப்பிட நல்லது.

**வாந்தி அதிஸார சிகித்ஸை**

வாந்தியுடன்கூடிய அதிஸாரத்தில் வில்வப்பழச்சதை, மாம் பருப்பு இவைகளின் கஷாயத்தைத் தேன் சர்க்கரை சேர்த்து சாப்பிடலாம். பேய்ப்புடல், யவையரிசி, கோரைக்கிழங்கு இவை களின் கஷாயம் தேன் சர்க்கரை சேர்த்துச் சாப்பிடலாம். ஞாழல்பூ, ரஸாஞ்சனம், கோரைக்கிழங்கு இவைகளின் சூர்ணத்தைத் தேனும் கழுநீரும் சேர்த்துச் சாப்பிட நல்லது, நாவல்துளிர், மாந்துளிர், விலாமிச்சைவேர், ஆலம் விழுது இவை களின் சாற்றையோ கஷாயத்தையோ சூர்ணத்தையோ தேனுடன் சாப்பிட வாந்தி, ஜ்வரம் அதிஸாரம் மூர்ச்சை, நாவரட்சி ரத்தப்பெருக்கு இவைகள் நீங்கும்.

**சோபாதிஸார சிகித்ஸை**

உடல் முழுதும் வீக்கத்துடன் ஏற்படும் அதிஸாரத்தில் தேவதாரு, அதிவிடயம், வட்டத்திருப்பி, வாய்விளங்கம், கோரைக்கிழங்கு, மிளகு, வெட்பாலைப்பட்டை இவைகளின் கஷாயம் நல்லது. நிலவேம்பு, கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி, சுக்கு, சந்தனம், விலாமிச்சைவேர், வெட்பாலையரிசி, இவைகளின் கஷாயம் ஜ்வரத்துடன்கூடிய சோபாதிஸாரத்தில் நல்லது.

✲ மூக்கரட்டை, வெட்பாலையரிசி, வட்டத்திருப்பி, வில்வப்பிஞ்சு, அதிவிடயம், கோரைக்கிழங்கு, மிளகு இவைகளின் கஷாயம் நல்லது, (பை. ர.)

**பயசோகாதிஸார சிகித்ஸை**

பயத்தாலும் சோகத்தாலும் ஏற்படும் அதிஸாரத்தில் வாதம் முக்கியம். அதற்கான சிகித்ஸையும் உற்சாகமூட்டுதலும், கவலையைத் தணித்தலும் அவசியம். மூவிலை, சிற்றாமுட்டிவேர், வில்வப்பிஞ்சு, கொத்துமல்லிவிதை, நீலோத்பலக்கிழங்கு, சுக்கு, வாய்விளங்கம், அதிவிடயம், கோரைக்கிழங்கு, தேவதாரு, வட்டத்திருப்பி, வெட்பாலையரிசி, மிளகு இவைகளின் கஷாயம் நல்லது.

**பிரவாஹிகா சிகித்ஸை**

முக்கி முக்கி சீதரத்தங்ளுடன் வெளியாகும் பிரவாஹிகையில் வில்வப்பிஞ்சு எள்ளு இவை சம அளவு சேர்த்து அரைத்துக் கல்கமாக்கி புளித்த தயிர்தெளிவும் நல்லெண்ணெய்யும் (அல்லது வெண்ணெய்யும்) சேர்த்துச் சாப்பிட ஆறுவகை பிரவாஹிகைகளும் நீங்கும். பயற்றங்கஞ்சி, மாம்ஸரஸம், மோர் இவைகளில் கொத்துமல்லிவிதை ஜீரகத்தூள் இந்துப்புசேர்த்து சாப்பிட பசி எடுக்கும். கிரஹணிதோஷம் விலகும். அரோசகம் ஜ்வரம் பிரவாஹிகை நிற்கும். வில்வப்பிஞ்சு, வெல்லம், நல்லெண்ணெய், திப்பிலி, சுக்கு, இவைகளைச் சாப்பிட வாயு தடைபட்டுக் கடும்வலியுடன் உண்டாகும் பிரவாஹிகை குணமாகும்.

திப்பிலியையோ மிளகையோ அரைத்துப் பாலில் கலக்கிச் சாப்பிட்டுவர நாட்பட்ட பிரவாஹிகை நிற்கும், நல்லெண்ணெய், நெய், தயிர், தேன், அதிவிடயத்தூள், சுக்கு, வெல்லப்பாகு இவைகளைக் கலந்து சாப்பிடலாம்.

**த்ரியூஷணுதிகிருதம்.** திரிகடு, திரிபலை, கொடிவேலிவேர்ப் பட்டை, யானைத்திப்பிலி, வில்வப்பிஞ்சு, வெள்ளரிவிதை,

முள்ளுக்கத்திரிவேர், கண்டங்கத்திரிவேர், வாய்விடங்கம் இவை களைக் கல்கமாக அரைத்துக் கலக்கி கோமூத்ரம் சேர்த்துக் காய்ச்சிய நெய் பிரவாஹிகையில் நல்லது.

※ வில்வப்பிஞ்சு, வெல்லம், வெள்ளைலோத்ரப்பட்டை, நல்லெண் ணெய் இவைகளை அரைத்துக் குழப்பிச் சாப்பிட நல்லது ஆடைத் தயிரில் தேன் விட்டுச் சேர்த்து உணவு கொள்வது நல்லது. தங்கத்தையோ வெள்ளியையோ பழுக்கக் காய்ச்சி 7 தடவை சுருக்குக் கொடுத்த ஆட்டுப் பாலும் சாப்பிட நல்லது. காட்டகத்திப்பூ, இலந்தையிலை, விளாம்பழம், தேன், வெள்ளைலோத்திரப்பட்டை இவைகளைத் தயிருடன் குழப்பிச் சாப்பிட நல்லது. (பை-ர)

**புரீஷக்ஷயத்தில் சிகித்ஸை**

அதிஸாரத்திலும் பிரவாஹிகையிலும் ஜடராக்னி பலம் மிகுந்து நுரைத்து சிறிதளவில் மலம் போகும்போது வெல்லப்பாகு, சுக்கு, தயிர், நல்லெண்ணெய் இவைகளைக் குழப்பிச் சாப்பிட நல்லது. ஆடைத்தயிருடன் தேன் சேர்த்தும், மோரில் சுக்கு சேர்த்துக் காய்ச்சியும், பாலைக்காய்ச்சி ஆறியபின் தேன் சேர்த்தும் சாப்பிட நல்லது. சிற்றுமுட்டிவேர், சுக்கு இவைகளைச் சேர்த்துக் காய்ச்சிய பசுவின் பாலை வெல்லமும் நல்லெண்ணெய்யும் சேர்த்துச் சாப்பிட நல்லது. முயல்மாம் ஸத்தில் கல்கண்டு, நெய் தயிர் சேர்த்துத் தயாரித்த உணவு நல்லது. வயிற்றில் வாயு தங்கி, வலியால் மலம் வெளியாவதும் தடைபட்டு முக்கலும் சீதமும் ரத்தமும் கடுமையாகி நாவரட்சி மிகுந்திருக்கும் நிலையில் பசுவின் பாலை அடிக்கடி சாப்பிடவும். பக்வாதிஸாரத்தில் பால் அமிருதத்திற்குச் சமம். ரத்தத்துடன் கூடியதில் ஜலம் கலந்தபின் நீர் சுண்டும்படி காய்ச்சிய பசுவின் பால் சாப்பிட நல்லது.

**ஜ்வராதிஸாரத்தில் சிகித்ஸை**

ஜ்வரத்துடன் அதிஸாரம் சேர்ந்து காணும்போது ஜ்வரத் திலும் அதிஸாரத்திலும் கூறப்பட்டுள்ள தனி ஔஷதங்கள் இதில் ஏற்றதல்ல. அவைகளில் ஜ்வரங்களைத் தணிக்கும் மருந்து அதிஸாரத்தையும் அதிஸாரத்தைக் குறைப்பது ஜ்வரத்தையும் சமனம் செய்யாது. அதனால் தனிப்பட்ட சிகித்ஸை சொல்லப் படுகிறது. [ஜ்வரத்தைக் குறைக்கும் மருந்து பொதுவாக மலத்தை இளக்கும் தன்மையுடையதாகவும் அதிஸாரத்தைத் தணிப்பது மலத்தைக் கட்டுவதாகவும் இருப்பதும் கவனிக்கத் தக்கது.]

ஜ்வரத்திலும் அதிஸாரத்திலும் ஆமம் மிகுந்து நோய் ஏற்படுவதால், முதலில் லங்கனம் பாசனம் நல்லது. பிறகு அறுபதாங்குருவை அரிசியுடன் நீலோத்பலக்கிழங்கு சேர்த்துக் கஞ்சியோ பொரிக்கஞ்சியோ சாப்பிட நல்லது. மூவிலேவேர் சிற்றுமுட்டி வேர், வில்வப்பழச்சத்து, சுக்கு, நீலோத்பலக்கிழங்கு, மல்லிவிதை, மாதுளம்பழம் இவை சேர்த்த கஞ்சி நல்லது. காட்டகத்திப்பூ கஷாயத்தில் தயாரித்த கஞ்சியில் இஞ்சித்தூளும் மாதுளம் பழரஸமும் சேர்த்துச் சாப்பிட நல்லது.

வட்டத்திருப்பி, வெட்பாலேயரிசி, நிலவேம்பு, கோரைக்கிழங்கு, பர்படகம், சுக்கு இவைகளின் கஷாயம் ஆமாதிஸாரத்துடன் கூடிய ஜ்வரத்தில் நல்லது. சுக்கு, அதிவிடயம், கோரைக்கிழங்கு, நிலவேம்பு, சீந்திற்கொடி, வெட்பாலேயரிசி, இவைகளின் கஷாயம் ஜ்வராதிஸாரத்தில் நல்லது. கொத்துமல்லி விதை, அதிவிடயம், கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி வில்வப்பிஞ்சு, சுக்கு இவைகளின் கஷாயம், அரோசகம், அஜீர்ணம், வயிற்றுவலி, ரத்தம் இவைகளுடன் கூடிய அதிஸாரத்தில் நல்லது. வெட்பாலேயரிசி, அதிவிடயம், சுக்கு, நிலவேம்பு, சிறுகாஞ்சூரிவேர் இவைகளின் கஷாயம் ஜ்வராதிஸாரத்தில் நல்லது, சீந்திற்கொடி அதிவிடயம் கொத்துமல்லிவிதை, சுக்கு, வில்வப்பிஞ்சு, கோரைக்கிழங்கு வெட்டிவேர், வட்டத்திருப்பி, வெட்பாலேப்பட்டை, நிலவேம்பு, சந்தனம், விளாமிச்சைவேர், பர்படகம் இவைகளின் கஷாயம் தேனுடன் சாப்பிட உமட்டல் அருசி, வாந்தி, நாவரட்சி எரிச்சலுடன் கூடிய அதிஸாரம் நிற்கும். வெட்பாலேயரிசி, தேவதாரு, கடுகுரோகிணி, யானைத்திப்பிலி இவைகளின் கஷாயமும், நெரிஞ்சில்முள், திப்பிலி, கொத்துமல்லிவிதை, வில்வப்பிஞ்சு, வட்டத்திருப்பி, ஓமம் இவைகளின் கஷாயமும் ஜ்வராதிஸாரத்தில் எரிச்சல் மிகுந்த நிலையில் நல்லவை.

**வ்யோஷாதிசூர்ணம்.** சுக்கு, திப்பிலி, மிளகு, வெட்பாலேயரிசி, வேப்பம்பட்டை, நிலவேம்பு, கருசலாங்கண்ணி, கொடிவேலிவேர் பட்டை, கடுகுரோகிணி, வட்டத்திருப்பி, மரமஞ்சள், அதிவிடயம், இவை வகைக்குச் சம எடை, இவைகளுக்குச் சமம் வெட்பாலேப் பட்டை, இவைகளின் தூளே அரிசி கழுவிய ஜலத்தைவிட்டு அரைத்துத் தேன் சேர்த்துச் சாப்பிட பாசனம், மலமிறுகும்; நாவரட்சி, அரோசகம், ஜ்வராதிஸாரம், காமலா, கிரஹணீ, குல்மம், மண்ணீரல் பெருத்தல், பிரமேகம், பாண்டு, வீக்கம் நீங்கும்.

விளாமிச்சைவேர், வெட்டிவேர் கோரைக்கிழங்கு, கொத்துமல்லி விதை, வில்வப்பிஞ்சு, மஞ்சிட்டி, காட்டகத்திப்பூ, லோத்திரப்பட்டை, சுக்கு இவைகளின் கஷாயம் அல்லது கல்கம் நல்ல தீபன பாசனமாகும். ஜ்வரம், அரோசகம், சீதபேதி, மலக்கட்டு, வலி, ரத்தாதிஸாரம் இவை நீங்கும். வில்வப்பிஞ்சு, வெட்டிவேர், நிலவேம்பு, சீந்திற்கொடி, கொத்துமல்லிவிதை, சுக்கு, வெட்பாலைப்பட்டை, கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி இவைகளின் கஷாயம், ஜ்வராதிஸாரம் சூலம் இவைகளை நீக்கும்.

லகுபஞ்சமூலம், வட்டத்திருப்பி, கோரைக்கிழங்கு, சிற்றாமுட்டிவேர் வெட்பாலைப்பட்டை, வெட்டிவேர், நிலவேம்பு, சீந்திற்கொடி, சுக்கு, வில்வவேர்—இவைகளின் கஷாயம் ஜ்வராதிஸாரம், வாந்தி, காஸம், ச்வாஸம், சூலம் இவைகளைக் குறைக்கும். (பித்தம் மிகுந்த நிலையில் லகுபஞ்சமூலமும் கபவாதங்கள் மிகுந்த நிலையில் மஹாபஞ்சமூலமும் நல்லது. —பை.-ர) பெருவாகைவேர், அதிவிடயம், கோரைக்கிழங்கு, சுக்கு, வில்வப்பிஞ்சு, மாதுளம் பழம் இவைகளின் கஷாயமும் நல்லது.

✲ **(பைஷஜ்யரத்னவளி.)** தசமூலகஷாயத்தில் சுக்குத் தூளைக் கால் தோலா அளவு கலந்து சாப்பிட வீக்கத்துடனுள்ள கிரஹணி நிற்கும். கொத்துமல்லிவிதை, சுக்கு இவ்விரண்டையும் தூள்செய்து சாப்பிட வாதகபங்கள் சமனமாகும். சூலமும் அதிஸாரமும் நிற்கும். கோரைக்கிழங்கு, விளாமிச்சைவேர், வட்டத்திருப்பி, அதிவிடயம், கடுக்காய், நீலோத்பலக்கிழங்கு, கொத்துமல்லிவிதை, கடுகுரோகிணி, கோரைக்கிழங்கு, வெட்பாலையரிசி இவைகளின் கஷாயம் ஜ்வராதிஸாரத்தில் நல்லது. கொத்துமல்லிவிதை, சுக்கு, வில்வப்பிஞ்சு, கோரைக்கிழங்கு, வெட்டிவேர் இவைகளின் கஷாயம் ஆமத்தையும் சூலத்தையும் போக்கும். கிராஹி - தீபனம்-பாசனமுமாகும். வெட்பாலைப்பட்டை, சுக்கு, கோரைக்கிழங்கு, சீந்திற்கொடி, அதிவிடயம் இவைகளின் கஷாயமும், நிலவேம்பு, கோரைக்கிழங்கு, சுக்கு, சந்தனத்தூள், வெட்டிவேர், வெட்பாலையரிசி இவைகளின் கஷாயமும் நல்லது. வாய்விளங்கம், அதிவிடயம், கோரைக்கிழங்கு, வட்டத்திருப்பி, தேவதாரு, வெட்பாலையரிசி, மிளகு, இவைகளின் கஷாயம் வீக்கத்துடன் கூடிய அதிஸாரத்தில் நல்லது. சுக்கு, வெட்டிவேர், கோரைக்கிழங்கு, வில்வப்பிஞ்சு, வட்டத்திருப்பி, அதிவிடயம், கொத்துமல்லிவிதை இவைகளின் கஷாயமும், ஓரிலை, மூவிலை, சிற்றாமுட்டிவேர், வில்வப்பிஞ்சு, மாதுளை ஓடு, இவைகளின் கஷாயமும் வாந்தி ஜ்வரத்துடன் கூடிய அதிஸாரத்தில் நல்லது.

✲ திப்பிலி, யானைத்திப்பிலி, நெல் பொறி இவைகளின் கஷாயத்தில் தேன் சர்க்கரை சேர்த்துக் கொடுக்க அதிஸாரத்தில் ஏற்படும் நாவரட்சி நிற்கும். நீலோத்பலக்கிழங்கு, மாதுளம்பட்டை, தாமரைகேஸரம் இவைகளின் சூர்ணம் அரிசி கழுவிய ஜலத்துடன் சாப்பிட ஜ்வராதிஸாரம் நிற்கும்.

**அதிஸாரத்தில் பொது சிகித்ஸை.**

ஜலத்தைச் சுண்டக் காய்ச்சி சாப்பிட அதிஸாரம் நிற்கும். எவ்வளவு ஜலம் சுண்டுகிறதோ அவ்வளவு நல்லது. நூறில் ஒரு பங்கு மிகுதியாகச் சுண்டிய ஜலம் மிக நல்லது.

**தாடிமாவலேஹம்.** மாதுளம்பழத்தோல் 64 தோலா, இடித்து 512 தோலா ஜலத்தில் போட்டுக் கஷாயமாக்கி 128 தோலா மிகுதியானதும் வடிகட்டி அதில் சர்க்கரை 64 தோலா, சுக்கு, கண்டந்திப்பிலி, திப்பிலி, கொத்துமல்லிவிதை ஓமம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, மிளகு, ஜீரகம், மூங்கிலுப்பு, கஞ்சா இலை, வேப்பிலை மஞ்சிட்டி, காரிலவம்பிசின், பெருவாகைவேர், அதிவிடயம், வட்டத்திருப்பி, கிராம்பு இவை வகைக்கு 4 தோலா சூர்ணம் தேன் நெய் வகைக்கு 64 தோலா இவைகளை லேகிய முறைப்படி கிளறி எடுத்துக்கொள்ளவும். ஜ்வராதிஸாரம், சீதரத்தபேதி, மப்புவலி, அக்னிமந்தம், வீக்கம் க்ஷயம், தாதுகத ஜ்வரம் இவைகளில் நல்லது.

**குடஜாவலேஹம்.** வெட்பாலைப்பட்டை 8 தோலா, சீந்திற்கொடி 8 தோலா இடித்து 128 தோலா ஜலத்திலிட்டுக் கஷாயமாக்கி 32 தோலா மீதமானதும் வடிகட்டி அதில் வெட்பாலையரிசி 32 தோலா தூள் செய்து போட்டுக் கிளறி லேகிய பதத்தில் இறக்கிக் கொண்டு சாப்பிட்டு வர அதிஸாரம், கிரஹணி குணமாகும். பசி அதிகமாகும்.

**குடஜாவலேஹம்.** (2) வெட்பாலைவேர்பட்டை 400 தோலா இடித்து $12\frac{1}{2}$ படி ஜலத்தில் $3\frac{1}{8}$படி மீதமாகக் கஷாயமாக்கி வடிகட்டி அதில் ஸௌவர்சலை உப்பு, யவக்ஷாரம், பிடலவணம், இந்துப்பு, திப்பிலி, காட்டகத்திப்பூ வெட்பாலையரிசி, ஓமம் இவைகளின் சூர்ணம், வகைக்கு 8 தோலா சேர்த்து லேகியபதம் வரும் வரை கிளறி ஆறிய பின் தேன் சேர்த்துச் சாப்பிட பக்வ—ஆமாதிஸாரங்கள் கிரஹணி, பிரவாஹிகை சமனமடையும்.

**குடஜாவலேஹம்.** (3) வெட்பாலைப்பட்டை, 32 தோலா, மாதுளம் பழத்தோல், 32 தோலா இரண்டையும் 8 பங்கு ஜலத்திலிட்டுக் கஷாயமாக்கி வடிகட்டி மறுபடியும் அதை லேகிய

பதம் வரும் வரை சுண்டக் காய்ச்சி எடுத்துக்கொண்டு ½ தோலா வரை மோருடன் கலக்கிச் சாப்பிட ரத்தாதிஸாரம் நிற்கும்.

✲ **குடஜாவலேஹம்.** (4) (பை. ர.) வெட்பாலைப்பட்டை 400 தோலா இடித்து 12½ படி ஜலத்திலிட்டுக் கால் பங்கு மீசமாக கஷாய மாக்கி அதில் 80 தோலா சர்க்கரை சேர்த்துப் பாகாக்கி, அதில் வட்டத் திருப்பி, மஞ்சிட்டி, வில்வப்பிஞ்சு, காட்டகத்திப்பூ, கோரைக்கிழங்கு, மாதுளை ஓடு, அதிவிடயம், லோத்திரப்பட்டை, காரிலவம்பிசின், வெள்ளைக்குங்கிலியம், ரஸாஞ்சனம், கொத்துமல்லிவிதை, விளாமிச்சை வேர், வெட்டிவேர் இவை வகைக்கு ¼ தோலா அளவு சேர்த்த இடித்த தூள் சேர்த்துக் கிளறி ஆறிய பின் தேன் 8 தோலா சேர்த்து வைத்துக் கொள்ளவும். எல்லாவித அதிஸாரங்கள், கிரஹணி, ரத்தப்போக்கு, ஜ்வரம், வீக்கம், வாந்தி, மூலநோய், நாவரட்சி, அம்லபித்தம், சூலம் அக்னிமந்தம் இவைகளில் இதனுல் நல்ல பலன் கிட்டும்.

✲ **மஹாகுடஜாவலேஹம்.** (5) (பை.ர.) வெட்பாலைப்பட்டை 400 தோலாவை இடித்து 12½படி ஜலத்தில் கால்பங்கு மீசமாகக் கஷாயமாக்கி வடிகட்டி அதில் 64 தோலா சர்க்கரை சேர்த்துப் பாகாக்கி, அதில் ஏலரிசி, வட்டத்திருப்பி, லவங்கப்பட்டை, கர்கடசிங்கி, ஜாதிக்காய், சோம்பு, வெட்பாலையரிசி, அதிவிடயம், யவக்ஷாரம், காகோலீ, ரஸாஞ்சனம், காரிலவம்பிசின், அதிமதுரம், மஞ்சிட்டி, செஞ்சந்தனம், ஆலம்மொக்கு, காசுக்கட்டி, நாவல்துளிர், மாந்துளிர் இவை வகைக்கு ½ தோலா எடுத்துத் தூளாக்கிய சூர்ணம் கலந்து கிளறி ஆறியபின் தேன் 16 தோலா சேர்த்து வேளைக்கு ஒரு தோலா சாப்பிடவும். தயிர் தெளிவு அல்லது ஆட்டுப் பால் அனுபானம். சம்பகவேர் சாறு, அல்லது வாழைக்கிழங்கின் சாறு ஒரு தோலா அளவு தினம் காலையில் சாப்பிடுவது நல்லது. விட்டு விட்டு மலமிளகிப்போகும் ஸங்கிரஹ கிரஹணியும் ரத்தாதிஸாரமும் ஜ்வரம் வீக்கம் இவைகளுடன் கூடிய அதிஸாரமும் இதனுல் நீங்கும்.

**குடஜாஷ்டகம்.** வெட்பாலைப்பட்டை 400 தோலா இடித்து 12½ படி ஜலத்திலிட்டுக் கால்பங்கு மீதமாகக் கஷாயமாக்கி வடி கட்டி அதை மறுபடியும் லேகிய பதம் வரும் வரை இளந்தீயில் காய்ச்சிக் கெட்டியாகும் தருவாயில், வட்டத்திருப்பி, காரிலவம் பிசின், காட்டகத்திப்பூ, கோரைக்கிழங்கு, அதிவிடயம், தொட்டாற் சுருங்கி, வில்வப்பிஞ்சு இவை வகைக்கு 4 தோலா இடித்துத் தூள் செய்து கலந்து இறக்கி, ஆட்டுப்பால் அல்லது பசுவின் பால் அல்லது கஞ்சித்தெளிவு அனுபானத்துடன் சாப்பிட அதிஸாரம், கிரஹணி, ரத்தபித்தம், ப்ரதரம், ரக்த மூலம் இவை நீங்கும்.

**கபித்தாஷ்டகம்.** ஓமம், கண்டந்திப்பிலி, ஏலரிசி லவங்கப் பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, சுக்கு, மிளகு, வெட்டி வேர், அசமதா ஓமம், கொத்துமல்லிவிதை, ஸூவர்சில உப்பு இவை வகைக்கு ஒரு தோலா, மங்குஸ்தான் ஓடு அல்லது பழச் சதை, காட்டகத்திப்பூ, திப்பிலி, வில்வப்பிஞ்சு, மாதுளம் ஓடு, சீரகம், இவை வகைக்கு 3 தோலா, சர்க்கரை 6 தோலா, விளாம் பழச்சதை 8 தோலா இவைகளைத் தூள்செய்து கொள்ளவும். இதைச் சாப்பிட அதிஸாரம், கிரஹணி, க்ஷயம், குல்மம், தொண்டை நோய், காஸம், சுவாஸம், அரோசகம், விக்கல் இவை நீங்கும்.

**தாடிமாஷ்டகம்.** மூங்கிலுப்பு, ஏலரிசி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ இவை வகைக்கு ஒரு தோலா, ஓமம், கொத்துமல்லிவிதை, ஜீரகம், கண்டந்திப்பிலி, சுக்கு திப்பிலி, மிளகு இவை வகைக்கு 4 தோலா, மாதுளை ஓடு 32 தோலா, சர்க்கரை 32 தோலா இவைகளின் சூர்ணம் கபித்தாஷ்ட கத்தின் குணத்தைக் கொடுக்க வல்லது.

**தாடிமபுடபாகம்.** நன்கு பழுத்த மாதுளம் பழத்தை மேல் மண் பூசி புடபாக முறைப்படி புடமிட்டு எடுத்து அதன் சாற்றைத் தேன் சேர்த்து சாப்பிட அதிஸாரம் நீங்கும். ஜாதிக் காய், அபின், வெங்காரம், கந்தகம், ஜீரகம், இவைகளை ஸம அளவு இளம் மாதுளை விதைகளுடன் சேர்த்து அரைத்து இந்த கல்கத்தை ஒரு மாதுளம் பழத்தினுள் செலுத்தி மேல் கோதுமை மாவால் பூசி, தணலில் வாட்டி மேல் பூச்சை அகற்றி பழத்தைச் சாப்பிட அதிஸாரம் நிற்கும்.

**பல்லாதகாதி சூர்ணம்.** சேங்கொட்டையைச் சுத்தி செய்து இரண்டு துண்டாக வெட்டி வறுத்து 8 தோலா, சுக்கு 4 தோலா, கடுக்காய், ஜாதிக்காய், ஒரு தோலா, வெந்தயம், வாய்விளங்கம், ஜீரகம், கடுகு, ஓமம் இவை வகைக்கு 2 தோலா, திப்பிலி, பெருங் காயம், மிளகு, கந்தக வெடியுப்பு, இந்துப்பு, ஜீரகம், குரோசாணி ஓமம் இவை வகைக்கு ஒரு தோலா இவைகளைச் சூர்ணித்துத் தயிருடன் குழப்பிச் சாப்பிட எல்லா அதிஸாரங்களும் நிற்கும்.

✲ **கலிங்காதிவடி:** (பை. ர.) வெட்பாலையரிசி, வேப்பம்பட்டை, வில்வப்பிஞ்சு, மாம்பருப்பு, விளாம்பழச்சதை, ரஸாஞ்சனம், கொம்பரக்கு, மஞ்சள், மரமஞ்சள், வெட்டிவேர், காய்பல், வட்டத்திருப்பி, லோத்திரப் பட்டை, காரிலவம்பிசின், சங்கு, காட்டகத்திப்பூ, ஆலம்மொக்கு, இவை களை அரிசி கழுவிய ஜலத்திலிட்டு அரைத்து $\frac{1}{2}$–1 தோலா மாத்திரை செய்து நிழலிலுலர்த்திக்கொள்ளவும். ஜ்வராதிஸாரம் வலி இவை நிற்கும்.

✲ **ஜாதீபலாதி வடி** (பை. ர.) ஜாதிக்காய், பேரீச்சங்காய், அபின் இவைகளை வகைக்கு சம எடை சேர்த்து வெற்றிலைச் சாற்றிலரைத்து 3–4 யவஅளவு மாத்திரை செய்து மோருடன் சாப்பிட எல்லா அதிஸாரங்களும் நிற்கும்.

✲ **ஜாதீபலாதி சூர்ணம்.** (பை, ர.) ஜாதிக்காய், கிராம்பு, ஜீரகம், பொரித்த வெங்காரம் இவைகளின் சூர்ணத்தைத் தேன் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட ஆமாதிஸாரம் நிற்கும். (இதற்கு சதுஸ்ஸமம் என்றும் பெயருண்டு.)

✲ அபின் $\frac{1}{4}$ - 1 குந்துமணி அளவு ஆட்டுப்பாலுடன் கலந்து சாப்பிட, கடுமையான அதிஸாரம் நிற்கும். அபினை அதிக அளவில் உபயோகிக்க அதிஸாரம் தற்போது நின்றாலும் பிறகு வரும், அதனால் மிகக் குறைந்த அளவில் யோகங்களுடன் சேர்த்துக் கொடுக்க நல்லது.

**அதிஸாரத்தில் ரஸௌஷதங்கள்.**

**சங்கோதரரஸம்,** சங்க பஸ்மம் 4 தோலா, அபின், ஜாதிக்காய், பொரித்த வெங்காரம் வகைக்கு ஒரு தோலா, இவைகளை நன்கு அரைத்து வேளைக்குக் குந்துமணி அளவு வெண்ணெய்யுடன் சாப்பிட எல்லா அதிஸாரங்களும் நிற்கும். (கடுமையான வயிற்றுவலியையும் வில்வப்பழக் கஷாயத்துடன் வெல்லம் சேர்த்துச் சாப்பிட அடிவயிற்று வலியையும் போக்கும். நல்ல ஜீரண சக்தி அளிக்கும். (—ரஸாயனஸங்கிரஹம்.)

**லகுலாயீ சூர்ணம்.** ரஸம், கந்தகம், மிளகு, திப்பிலி, ஓமம், ஜீரகம். கருஞ்சீரகம், ஸௌவர்சிலை உப்பு, இந்துப்பு, பெருங்காயம், கந்தகவெடியுப்பு. இவை வகைக்கு ஒரு தோலா, வெட்பாலையரிசி 12 தோலா இவைகளை நன்கு சூர்ணமாக்கிச் சாப்பிட கிரஹணீ, வயிற்றுவலி, வயிறு உப்புசம், அதிஸாரம் இவை நீங்கும்.

**மிருதஸஞ்சீவன ரஸம்.** ரஸம் ஒரு தோலா, கந்தகம் ஒரு தோலா, வத்ஸநாபி $\frac{1}{4}$ தோலா, அப்ரக பஸ்மம் $2\frac{1}{4}$ தோலா இவைகளை ஒன்றாக்கிச் சேர்த்தரைத்து சர்பாக்ஷி, காட்டகத்திப்பூ, ஊமத்தை இலை, அதிவிடயம், சுக்கு, கடுக்காய், கோரைக்கிழங்கு ஓமம், வில்வப்பிஞ்சு, கொத்துமல்லி விதை, ஜீரகம், வட்டத்திருப்பி, திப்பிலி, கஞ்சா, வெட்பாலைப்பட்டை, விளாம்பழ ஓடு, மாதுளம் பழம், வெட்பாலையரிசி இவைகளின் சாறு அல்லது கஷாயத்துடன் அரைத்துக் காய வைத்து மடக்கிலிட்டு சீலை

செய்து வாலுகாயந்திரத்தில் (எல்லாம் ஒன்ருகும் வரை) உருகும் வரை எரித்தெடுத்துக் கொள்ளவும். 2 யவ அளவு சாப்பிட எல்லா ஜ்வராதிஸாரங்களும் நிற்கும். சுக்கு, கோரைக்கிழங்கு காட்டகத்திப்பூ, தேவதாரு, ஓமம், வெட்டிவேர், திப்பிலி, வசம்பு, வெட்பாலைப்பட்டை, கொத்துமல்லி விதை, வில்வப்பிஞ்சு, வட்டத் திருப்பி, வெட்பாலையரிசி, காரிலவம் பிசின், கடுக்காய் இவை களின் சூர்ணம் தேனுடன் நல்ல அனுபான சூர்ணமாகும்.

✲ **சந்திரபிரபாவடி.** ரஸஸிந்தூரம், ஸ்வர்ணபஸ்மம், அப்ரக பஸ்மம் வகைக்கு ஒரு தோலா, காசுக்கட்டி 3 தோலா. காரிலவம் பிசின் 3 தோலா. இவைகளைக் கல்வத்திலிட்டு காரிலவம் வேர் கஷாயத்தில் 2 யாமமரைத்து கடலையளவு மாத்திரை செய்து கொள்ளவும். ஜீரகத்தூளுடன் சாப்பிட 3 தோஷங்களால் உண்டாகும அதிஸாரமும் நிற்கும்.

✲ **ஸித்தப்ராணேச்வரரஸம்,** [1] (பை. ர) சுத்த கந்தகம், ரஸம், அப்ரக பஸ்மம் வகைக்கு 4 பங்கு, ஸர்ஜக்ஷாரம், பொரித்த வெங்காரம், யவக்ஷாரம், ஐந்து உப்புகள், திரிபலை, திரிகடு, வெட்பாலையரிசி, ஜீரகம், கருஞ்சீரகம், கொடிவேலிவேர் பட்டை, ஓமம், பெருங்காயம், வாய்விளங்கம், சதகுப்பை இவை வகைக்கு ஒரு பங்கு எல்லாவற்றையும் சூர்ணம் செய்து முறைப்படி சேர்த்தரைத்து வைத்துக் கொள்ளவும். 6-10 யவம் வெற்றிலையில் வைத்து வென்னீருடன் சாப்பிட ஜ்வராதி ஸாரம், அதிஸாரம், ஜ்வரம், கிரஹணீ, ரத்தபித்தம், வாதரோகம், சூலம், பரிணமசூலம் இவை குணப்படும்.

✲ **கனகஸுந்தரரஸம்** [2] (பை.ர.) லிங்கம், மிளகு, கந்தகம், திப்பிலி, வெங்காரம், வத்ஸநாபி, கருஊமத்தைவிதை இவைகளை சுத்த மாக வகைக்குச் சம எடை சேர்த்து கஞ்சாவின் கஷாயம் விட்டரைத்து கடலையளவு மாத்திரை செய்து கொள்ளவும். கிரஹணீ, அக்னிமந்தம், ஜ்வரம், அதிஸாரம் இவைகளில் நல்லது. தயிர் அல்லது மோர் சேர்த்த உணவு நல்லது.

---

1. இந்த யோகத்தில் வெள்ளைக்குங்கிலியம் ஒரு பங்கு சேர்க்கும்படி ரஸசண்டாம்சு, ரஸேந்திரஸாரஸங்கிரஹ நூல்களில் காணப்படுகின்றது.

2. இந்த யோகத்தில் லிங்கத்திற்குப் பதிலாக ரஸம் சேர்ப்பது நிகண்டு ரத்னகரத்திலும், கஞ்சாவிற்குப் பதிலாக கருசலாங்கண்ணியின் சாறு சேர்த்து கனகப்ரபை என்ற வேறு பெயருடன் யோகரத்னகரத்திலும் மாறுதல் காணப்படுகின்றது.

✲ **மஹாகனகஸுந்தர ரஸம்** (பை. ர.) ரஸம், கந்தகம், மிளகு, வெங்காரம், கருஊமத்தை விதை, அப்ரகபஸ்மம் வகைக்குச் சம எடை. சிறு தேக்கு கஷாயத்தில் அரைத்து மாத்திரை 2 குந்துமணி அளவு செய்து கொள்ளவும். உக்ரமான பித்தாதிஸாரம் தணியும்.

✲ **ககனஸுந்தரரஸம்.** (பை. ர.) வெங்காரம், லிங்கம், கந்தகம், அப்ரகபஸ்மம்— இவை வகைக்குச் சம எடை சேர்த்து மஞ்சள் பூவுள்ள பிரும்ம தண்டிச் சாற்றில் 3 நாட்கள் பாவனை செய்து அரைத்து 2 குந்து மணி அளவு மாத்திரை செய்து வெள்ளைக் குங்கிலியத்தூளுடன் சேர்ந்துக் கொடுக்கவும். ரத்தாதிஸாரம், ஜ்வராதிஸாரம், ஆமசூலம், அக்னிமந்தம் இவைகளில் நல்லது. மோர், ஆட்டுப்பால் கலந்த உணவு நல்லது.

✲ **மிருதஸஞ்சீவனிவடி** (பை. ர.) திப்பிலி ஒரு தோலா, வத்ஸ நாபி ஒரு தோலா, லிங்கம் 2 தோலா— இவைகளை எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து $\frac{1}{4}$ யவ அளவு மாத்திரை செய்து குளிர்ந்த ஜலத்துடன் கொடுக்க ஜ்வராதிஸாரம், காலரா, ஸந்நிபாதஜ்வரம் இவைகள் நீங்கும்.

✲ **ஆனந்தபைரவ ரஸம்.** (பை. ர.) லிங்கம், வத்ஸநாபி, திரிகடு, வெங்காரம், கந்தகம் இவை வகைக்குச் சம எடை எலுமிச்சம்பழச்சாற்றில் 2 நாள் அரைத்து 2 யவ அளவு மாத்திரை செய்யவும். காஸம், ச்வாஸம், அதிஸாரம் கிரஹணி, அபஸ்மாரம், ஸந்நிபாதம், வாதவியாதி, பிரமேஹம், அஜீர்ணம், அக்னிமந்தம் இவைகளில் கொடுக்க நல்லது.

✲ **அர்ருதார்ணவம்** (பை. ர.) லிங்கத்திலிருந்து எடுத்த ரஸம், அயஸ்லிந்தூரம், கந்தகம், வெங்காரம், பூலாங்கிழங்கு, கொத்துமல்லி விதை, வெட்டிவேர், கோரைக் கிழங்கு, வட்டத்திருப்பி, ஜீரகம், அதி விடயம் இவை வகைக்கு ஒரு தோலா, ஆட்டுப்பால் விட்டரைத்து 6 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். கொத்துமல்லிவிதை, ஜீரகம், கஞ்சா விதை, தேக்குவிதை, இவைகளில் ஒன்றின் தூள், தேன், ஆட்டுப் பால், கஞ்சித் தெளிவு, குளிர்ந்தஜலம், வாழைக்கிழங்கின் சாறு, கண்டங் கத்திரிச் சாறு இவைகளில் ஒன்றுடன் சேர்த்துச் சாப்பிடலாம். எல்லாவித அதிஸாரத்திலும் நல்லது. வயிற்றுவலி, பசியின்மை, கிரஹணி, மூலம், அம்லபித்தம் இவை நீங்கும்,

✲ **அப்ரவடிகா** (பை. ர.) சுத்த ரஸம், கந்தகம், அப்ரக பஸ்மம் வகைக்கு ஒரு தோலா, சுக்கு, திப்பிலி, கருசலாங்கண்ணி, பொற்றலை கையாந்தரை, கருநொச்சி, கொடிவேலிவேர், க்ரீஷ்மஸுந்தரம் (கீமோசாக் என வங்கதேசத்தில் கிடைப்பது) முன்னை, பிரமிவழுக்கை, பங்கு, வெள்ளைக்காக்கரட்டான் இவைகளின் சாறு வகைக்கு 2 தோலா, மிளகு

3 தோலா, வெங்காரம் ½ தோலா இவைகளைக் கல்வத்திலிட்டு அரைத்துக் கடலையளவு மாத்திரை செய்து கொள்ளவும். வயதையும் பலத்தையும் ஜீர்ணசக்தியையும் அனுசரித்துக் கொடுக்க காஸம், க்ஷயம், ச்வாஸம், வாத கபநோய்கள் ஜ்வரம், அதிஸாரம், 4-ம் முறைக் காய்ச்சல், ஸூதிகா நோய்கள், இவைகளில் நல்லது. தயிர் உணவு சேர்ப்பது அவசியம். வேறு பத்யமில்லை.

✲ **காருண்யஸாகர ரஸம்** (பை. ர.) ரஸபஸ்மம் அல்லது ரஸ ஸிந்தூரம் ஒரு தோலா, கந்தகம் 2 தோலா, அப்ரகபஸ்மம் 4 தோலா, இவைகளை கடுகெண்ணெய் சேர்த்து 4 யாமமரைக்கவும். பிறகு சராவத் திலிட்டு மூடி வாலுகாயந்திரத்தில் எரித்தெடுத்துப் பின் கருசலாங்கண்ணி வேர் சாற்றால் ஒருயாமமரைத்து, ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம், வெங்காரம், ஐந்து உப்புகள், வத்ஸநாபி, திரிகடு, கொடிவேலிவேர்பட்டை, ஜீரகம், வாய்விளங்கம், இவைகளை வகைக்கு ஒரு தோலா சேர்த்து அரைத்துக் கொள்ளவும். 6-8 யவ அளவு அதிஸாரம் ஜ்வரம் விஷமஜ்வரம் சூலம் ரத்தாதிஸாரம் ஆமாதிஸாரம் க்ஷயாதிஸாரம் கிரஹணீ இவைகளில் கொடுக்க நல்லது.

✲ **மிருதஸஞ்சீவன ரஸம்** (பை. ர.) ரஸம் கந்தகம் வகைக்கு ஒரு தோலா, வத்ஸநாபி ¼ தோலா, அப்ரக பஸ்மம் 2¼ தோலா இவைகளை ஊமத்தை இலைச் சாற்றிலும் ஸர்பாக்ஷீ கஷாயத்திலும் ஒவ்வொரு யாமமும் காட்டகத்திப்பூ, அதிவிடயம் கோரைக்கிழங்கு, சுக்கு, ஜீரகம், வெட்டி வேர், ஓமம், கொத்துமல்லிவிதை, வில்வப்பிஞ்சு, வட்டத்திருப்பி, கடுக் காய், திப்பிலி, வெட்பாலைப்பட்டை, வெட்பாலைவிதை, விளாம்பழம், மாதுளம்பிஞ்சு இவைகளின் கஷாயத்தில் 3 நாளும் அரைத்து வாலுகா யந்திரத்திலிட்டு உருகும் வரை எரித்தெடுத்துக் கொள்ளவும். நன்கு ஆறிய பின் எடுத்துக் கொள்ளவும். 4 யவ அளவு தேனில் கொடுக்க அறு வகை அதிஸாரங்களும் நிற்கும். சுக்கு, அதிவிடயம், கோரைக்கிழங்கு, தேவ தாரு, திப்பிலி, வசம்பு, ஓமம், வெட்டிவேர், கொத்துமல்லிவிதை, வெட் பாலைப்பட்டை, கடுக்காய், காட்டகத்திப்பூ, வெட்பாலையரிசி, வில்வப் பிஞ்சு, வட்டத்திருப்பி, காரிலவம் பிசின், வகைக்கு சம எடை தூள் செய்து தேனில் அனுபானமாகக் கூட்டிக் கொடுக்கலாம்.

✲ **பிராணேச்வர ரஸம்** (பை. ர.) ரஸம், கந்தகம், அப்ரக பஸ்மம், வெங்காரம், சதகுப்பை, ஓமம், ஜீரகம் வகைக்கு 2 தோலா, யவக்ஷாரம் பெருங்காயம், ஐந்து உப்புகள், வாய்விளங்கம், வெட்பாலையரிசி, வெள்ளைக் குங்கிலியம், கொடிவேலிவேர்பட்டை வகைக்கு ஒரு தோலா சேர்த்து, அரைத்து 4 யவம் தேனில் கொடுக்கவும். அதிஸாரத்தில் நல்லது.

✲ **பூர்ண சந்திரோதய ரஸம்** (பை. ர.) சுத்த தாளகம், அயஸ் ஸிந்தூரம், அப்ரகபஸ்மம் வகைக்கு 4 தோலா; கர்பூரம், ரஸம், கந்தகம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, முராமாஞ்சி, (ஜடாமாஞ்சியில் ஒருவகை) லவங்கபத்திரி, பூலாங்கிழங்கு, தாளீஸபத்திரி, சிறுநாகப்பூ, சுக்கு, திப்பிலி, மிளகு, பச்சிலை, கண்டந்திப்பிலி, கிராம்பு இவை வகைக்கு ஒரு தோலா, இவைகளைச் சூரணம் செய்து கல்வத்திலிட்டு முறைப்படி அரைத்து வேளைக்கு 3—6 யவ அளவு தேனில் சாப்பிட எல்லா அதிஸாரங்களும், கிரஹணி, அம்லபித்தம், சூலம், பரிணாமசூலம் முதலிய நோய்களும் நீங்கும் நல்ல ரஸாயனமும் வாஜீகரணமுமாகும்.

✲ **பிருஹத் ககனஸுந்தர ரஸம்** (பை. ர.) ரஸம், கந்தகம், அப்ரகபஸ்மம், அயஸ்ஸிந்தூரம், சோழி பஸ்மம், வெள்ளி பஸ்மம், அதிவிடயம் வகைக்கு ஒரு தோலா முறைப்படி சேர்த்து கொத்துமல்லி விதை, சுக்கு இவ்விரண்டின் கஷாயத்திலிட்டரைத்துக் குந்துமணியளவு மாத்திரை செய்து சாப்பிடவும். அனுபானமாக வில்வக்காயைச் சுட்ட கரியுடன் வெல்லம் சேர்த்துக் கொடுக்கலாம். ஆட்டுப்பாலும், நாவல்பட்டை கஷாயமும் அனுபானமாகக் கொடுக்கலாம்.

✲ **லோகநாதரஸம்** * [பை. ர.] ரஸபஸ்மம், ஒரு பங்கு, சுத்த கந்தகம் 4 பங்கு, இவ்விரண்டையும் அரைத்து சோழியினுள் புகுத்தி மேல் வெங்காயத்தை அரைத்துப்பூசி, மடக்கிலிட்டுச் சீலைசெய்து கஜபுடமிடவும். ஆறியபின் சோழியுடன் சேர்த்தரைத்து 4 யவ அளவு தேனில் குழைத்துச் சாப்பிடவும். சுக்கு அதிவிடயம் கோரைக்கிழங்கு, தேவதாரு, வசம்பு இவைகளின் கஷாயத்தை அனுபானமாகக் கொடுக்கவும்.

✲ **சிந்தாமணி ரஸம்** [பை. ர] ரஸம், தாம்ர பஸ்மம், கந்தகம், வகைக்கு ஒரு தோலா, வத்ஸநாபி ½ தோலா. புளி கால் தோலா இவைகளை எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து வில்லை தட்டவும். வில்லைகளை வெற்றிலையில் சுற்றி ஆறங்குல அகலமும் ஆழமும் உள்ள குழியில் மேலும் கீழும் வெற்றிலை பரப்பி மூடி மேல் கஜபுடமிடவும். பிறகு வெற்றிலையுடன் சேர்த்துக் குந்துமணியளவு மாத்திரை செய்து சாப்பிட அதிஸாரம் கிரஹணி நீங்கும்.

✲ **புவனேச்வர ரஸம்** [பை. ர.] இந்துப்பு, கடுக்காய், தானிக்காய் நெல்லிமுள்ளி, ஓமம், வில்வப்பிஞ்சு, ஒட்டடை இவை வகைக்கு ஒரு

---

★ சில நூல்களில் இந்த யோகம் மூத்திரகிருச்ச்ர அதிகாரத்தில் காணப்படுகிறது. ரஸ பஸ்மத்திற்குப் பதில் சுத்த ரஸம் போடும்படி அங்கு கூறப்படுகின்றது. வெங்காரத்தை எருக்கம் பாலிலோ பசுவின் பாலிலோ அரைத்துப் பூசுவது வழக்கம்.

தோலா ஜலம் விட்டரைத்து, உளுந்தளவு மாத்திரை செய்து ஜலம் கலந்து சாப்பிட எல்லா அதிஸாரங்களும் நிற்கும்.

✲ **ஜாதீபல ஸிந்தூரம்** [பை. ர.] ரஸம், அப்ரக பஸ்மம், ரஸ ஸிந்தூரம், கந்தகம், ஜாதிக்காய், வெட்பாலையரிசி, கரு ஊமத்த விதை, வெங்காரம், சுக்கு, திப்பிலி, மிளகு, கோரைக்கிழங்கு, கடுக்காய், மாம் பருப்பு, வில்வப்பிஞ்சு, தேக்கு விதை, மாதுளை ஓடு, ஜீரகம் இதை வகைக்கு சமஅளவு கல்வத்திலிட்டு கஞ்சா கஷாயம் விட்டரைத்துக் குந்துமணியளவு மாத்திரை உருட்டி வெட்பாலை வேர்ப்பட்டை கஷா யத்துடன் சாப்பிட ஆமாதிஸாரம் நிற்கும். அக்னி மந்தம் நீங்கும். தேன் வில்வப்பிஞ்சும் சேர்த்துச் சாப்பிட ரத்த கிரஹணியும், சுக்கும் கொத்த மல்லி விதையும் சேர்த்துச் சாப்பிட அதிஸாரமும் நிற்கும்.

✲ **அபய நிருஸிம்ஹ ரஸம்** [பை. ர.] லிங்கம், வத்ஸநாபி, சுக்கு திப்பிலி, மிளகு, ஜீரகம், வெங்காயம், கந்தகம், அப்பிரக பஸ்மம், ரஸம் வகைக்கு ஒரு தோலா, மண்டூர பஸ்மம் 10 தோலா, எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து 2—4 யவ அளவு மாத்திரை செய்து ஜீரகத்தாலும், தேனும் சேர்த்துச் சாப்பிட ஜ்வரத்துடனும் ஜ்வரமில்லாமலும் ஏற்படும் முத்தோஷ அதிஸாரங்களும் கிரஹணியும் நீங்கும்.

✲ **கர்பூர ரஸம்** [பை. ர.] லிங்கம், அபின், கோரைக்கிழங்கு, வெட்பாலையரிசி, ஜாதிக்காய், சூடம் இவை வகைக்கு சம எடை சேர்த்து 2 குந்துமணியளவு மாத்திரை செய்து ஜ்வராதிஸாரம் அதிஸாரம் கிரஹணி ரத்தாதிஸாரம் இவைகளில் கொடுக்க நல்லது.

✲ **அதிஸாரவாரண ரஸம்** (பை. ர.) ரஸம், சூடம், கோரைக் கிழங்கு, வெட்பாலையரிசி இவைகளை அபின் ஜலம் விட்டரைத்து மாத்திரை செய்துகொள்ள நல்லது.

✲ **கனுநிலோஹம்** [பை. ர.] திப்பிலி, சுக்கு, வட்டத்திருப்பி, சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலம், லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை கடுக்காய் தோல், தானிக்காய் தோல், நெல்லிமுள்ளி, வில்வப்பிஞ்சு, சந்தனத் தூள், விலாமிச்சை வேர் இவை வகைக்குச் சம எடை, இவைகளுக்குச் சமம் அயச்சிந்தூரம், எல்லாவற்றையும் சேர்த்தரைத்துக் கொள்ளவும். 2—4 யவஅளவு தேனுடன் கொடுக்க நல்லது. பிரவாஹிகை அதிஸாரம் கிரஹணி நீங்கும்.

✲ **ஷடங்க கிருதம்** [பை. ர.] வெட்பாலையரிசி, மரமஞ்சள் தோல், திப்பிலி, இஞ்சி, கொம்பரக்கு, கடுகுரோஹிணி இவைகளைக்

கல்கமாக்கி நெய் தயாரித்து கஞ்சி அல்லது கூழுடன் கொடுக்க கடுமையான அதிஸாரமும் நிற்கும்.

✲ **பப்பூலாத்யரிஷ்டம்** [ பை ர. ] வெள்வேலம் அல்லது கருவேலம் பட்டை 800 தோலா, 50 படி ஜலத்தில் கஷாயமிட்டு 12½ படியாகக் காய்ச்சி, வடிகட்டி வெல்லம் 10 வீசை, காட்டாத்திப்பூ 64 தோலா திப்பிலி 8 தோலா, ஜாதிக்காய், வால்மிளகு, லவங்கப்பட்டை, ஏலரிசி, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, கிராம்பு, மிளகு இவை வகைக்கு 4 தோலா இவைகளை பிரக்ஷேபமாகப் போட்டு ஆஸவமாகத் தயாரிக்கவும். க்ஷயம், குஷ்டம், அதிஸாரம், பிரமேஹம், ச்வாஸம், காஸம் இவைகளில் நல்லது

✲ **குடஜாத்யரிஷ்டம்** ( பை. ர. ) வெட்பாலைப்பட்டை 400 தோலா, திராக்ஷை 200 தோலா, இலுப்பைப்பூ, குமிழம் வேர் வகைக்கு 40 தோலா இவைகளை 25 படி ஜலத்திலிட்டு 6¼ படி மீதமாகக் கஷாயமாக்கி வடிகட்டி, காட்டகத்திப்பூ 80 தோலா, வெல்லம் 400 தோலா சேர்த்து ஆஸவ முறைப்படி ஸந்தானம் செய்யவும். ஜ்வரம், அக்னிமந்தம், கிரஹணி, ரத்தாதிஸாரம் இவை சமனமாகும்.

✲ **அஹிபேனாஸவம்** ( பை. ர. ) இலுப்பைப்பூவில் தயாரான மத்யம் 400 தோலா ( 2½ படி ) அபின் 8 தோலா, கோரைக்கிழங்கு, ஜாதிக்காய், வெட்பாலையரிசி, ஏலரிசி வகைக்கு 4 தோலா, இவைகளை முறைப்படி ஸந்தானம் செய்து கொள்ளவும். கடுமையான அதிஸாரம் விஷூசி நிற்கும்.

**அதிஸாரத்தில் ஹிதமானவை:**

வாந்திக்குக் கொடுப்பது, பட்டினியிருப்பது, தூங்குவது. பழைய அரிசி சாதம் கூழ், பொரிக்கஞ்சி, துவரம்பருப்பு ஜலம் முயல், மான், சிவல்பக்ஷி, கலைமான், வெள்ளைத்தித்திரி - இவைகளின் சூப்பு, சிறுமீன்கள், எண்ணெய், ஆட்டுப்பால், ஆட்டு நெய், ஆட்டுத் தயிர், பசுவின் மோர், ஆட்டு மோர், பசு ஆடு இவைகளின் பாலிலிருந்து எடுத்த வெண்ணெய், புதிய வாழைப்பூ வாழைக்காய், தேன், நாவல் பழம், சுரைக்காய், இஞ்சி, சுக்கு தாமரைக்கிழங்கு, விளாம்பழம், மகிழம்பூ, வில்வபபிஞ்சு, பனச்சி, மாதுளை, புளிப்பு மாதுளை, புளியாரை, கஞ்சா, மஞ்சிட்டி, ஜாதிக்காய், அபின், ஜீரகம், மலையகத்தி, கொத்துமல்லி விதை, மலைவேம்பு, துவர்ப்புள்ள பதார்த்தங்கள், பசிதூண்டக்கூடியதும் ஜீர்ணமாகக்கூடியதுமான உணவு வகை இவை ஹிதமானவை. தொப்புளுக்கு அடியிலும் முதுகெலும் பின் அடியிலும் பாதி சந்திரன் போல் மெல்லிய கத்தியைப் பழுக்கக் காய்ச்சி சுடுவது நல்லது.

**அதிஸாரத்தில் அபத்தியமானவை :**

வேதுபிடித்தல், கண் மையிடுதல், ரத்தம் வெளியாக்குதல், நிறைய தண்ணீர் குடித்தல், ஸ்நானம், மைதுனம், கண்விழித்தல், புகைபிடித்தல், நஸ்யம், எண்ணெய் தேய்த்துக்கொள்ளுதல், மூத்திரம் மலம் எல்லா வேகங்களையும் தடை செய்தல் கோதுமை, உளுந்து, யவை, வாஸ்துக்கீரை, மணத்தக்காளிக்கீரை, அவரை, முருங்கை, மாம்பழம், பாக்கு, பூசனி, சுரை, இலந்தை, கனமான எளிதில் ஜீர்ணமாகாத உணவு, வரண்டதும், அவனவன் தேகவாகுக்கு ஒவ்வாததும் ஒன்றுக்கு ஒன்று முரணானதுமான உணவு, தாம்பூலம், கரும்பு, வெல்லம் மத்யம், பசலைக்கீரை, திராக்ஷை, புளிவஞ்சி, உள்ளிப்பூண்டு, நெல்லிமுள்ளி, பழைய கெட்ட ஜலம், தயிர்த்தெளிவு, காடி, இளநீர், எண்ணெய் பதார்த்தங்கள், கஸ்தூரி, இலையான கீரை வகை, பால், மலமிளக்கும் பொருள், மூக்கரட்டை, வெள்ளரி, உப்பும் புளிப்பும் மிக்கவை, ஸ்நானம், அமிழ்ந்துஸ்நானம், எண்ணெய் ஸ்நானம், தேகப்பயிற்சி, நெருப்படியில் வசித்தல்- அதிஸார நோயுள்ளவனுக்கு ஏற்காதவை.

அதிஸாராதிகாரம் முற்றிற்று.

# கிரஹணீ நிதானம்.

அதிஸாரம் வந்து நீங்கியோ நீங்காமலோ இருக்கும் நிலையில் அக்னி மந்தம் இருக்கையில் அபத்ய உணவு உட்கொண்டால் மேலும் மந்தம் அதிகமாகி கிரஹணியைக் கெடுத்து இந்நோய் ஏற்படுகிறது. கிரஹணிக்கு ஜடராக்னி பலமளிக்கின்றது. ஜடராக்னிபலத்தைக்கொண்டு தான் கிரஹணி தன் காரியத்தைச் செய்கின்றது.

தொப்புளுக்குமேல் ஆமாசயத்திற்கும் பக்வாசயத்திற்கும் நடுவிலுள்ள ஜீரணக்கருவியை கிரஹணி என்பர். அது அக்னி பலத்தை ஆதாரமாகவும் போஷகமாகவும் கொண்டு பித்ததர கலையாக இருப்பதால் அபக்வமான ஆகாரத்தை ஏற்றுப் பாகம் செய்து மலமாகவும் ஸாரமாகவும் பிரித்து ஸாரத்தை பக்கங்கள் வழியாக உட்செலுத்தியும் மலத்தைக் கீழே தள்ளியும் ஜீரணத்தில் உதவுகின்றது

வாயு பித்தம் கபம் இம்மூன்றும் தனித்தோ இரண்டாகச் சேர்ந்தோ மூன்றுகச் சேர்ந்தோ கிரஹணியைக் கெடுக்கும்போது சாப்பிட்ட உணவை ஜீரணமாகாததாகவோ ஜீரணமானதாகவோ வலியுடனும் மிகுந்த நாற்றத்துடனும் சில சமயம் கட்டியும் சில சமயம் நெகிழ்ந்தும் வெளியாக்கும். இதை கிரஹணி நோய் என்பர். கிரஹணி என்னும் உறுப்பின் பலவீனத்தால் ஏற்படுவதால் கிரஹணி என நோய்க்கும் பெயர்.

அதுவருமுன் நாவரட்சி, சோம்பல், பலக்குறைவு, அன்னம் சரியாக ஜரியாமை, வயிற்றில்புண், அன்னம் ஜீரணமாக அதிக நேரமாதல், உடல் கனம் முதலிய குறிகள் காணும்.

**வாதகிரஹணீ.** காரம் துவர்ப்பு கசப்பு மிக்கதும், வரண்டதும் கெட்டதுமான உணவு; அளவுக்குக் குறைந்தோ அதிகமாகவோ உண்ணுதல், மல மூத்திராதிகளின் வேகத்தை அதிகமாக அடக்குதல், அதிகப் புணர்ச்சி, இவைகளால் வாயுவிற்குப் பிரகோபம் ஏற்பட்டு அக்னிமந்தமாகி உணவு மிகவும் சிரமத்துடன் ஜீரணமாகும். மலம் வரண்டிருக்கும். உடல் கரகரப்பாகும், தொண்டை வாய் உலரும். பசி, தாகம் மிகும். கண் இருளும், காதில் சத்தம் கேட்கும், விலா துடை, இடுப்பு, கழுத்து இவைகளில் வலி, அடிக்கடி கடுமையான மலப்பிரவிருத்தி, மார்வலி,

இளைப்பு, பலக்குறைவு, நாவில் ருசியின்மை, வயிற்றில் கத்திரி போட்டு நறுக்குவது போல வலி, எல்லா சுவைகளிலும் விருப்பம், மனது களைத்தல், ஜீர்ணமாகும்போதும் ஆனபின்பும் வயிறு உப்புசம், வலி சாப்பிட்டவுடன் அமைதி; வாதகுல்மம், ஹிருதய நோய், ப்லீஹம் இந்நோய்கள் ஏற்பட்டுள்ளது போன்ற கவலை, கஷ்டப்பட்டு தாமதத்துடனும் சிறிது திரவமாகவும் சிறிது வரண்டும் மெல்லியதாகவும் அஜீரணத்துடன் சத்தத்துடனும் நுரையுடனும் அடிக்கடி மலப்பிரவிருத்தி, காஸம் சுவாஸம் இவை இதன் அறிகுறிகள்.

**பித்தகிரஹணீ.** உரைப்பும் கார்ப்பும் புளிப்பும் மிக்க உணவு கொள்ளுதல், விதாஹ அஜீர்ணம் இவைகளால் அக்னிமந்தம் ஏற்படுகின்றது, வென்னீரால் நெருப்பு அணைப்பது போல. பித்தாஜீர்ணம், கருத்தும் மஞ்சளாகவும் மலம் திரவமாக வெளியாகும். புளித்த நாற்றமுள்ள ஏப்பம், தொண்டை மார்பில் எரிச்சல், அருசி, நாவரட்சி இவை ஏற்படும்.

**கபக்கிரஹணீ.** எளிதில் ஜீர்ணமாகாததும் மிகவும் கொழுப்புள்ளதும், குளிர்ந்ததுமான உணவு. அளவுக்கு அதிகமான உணவுசாப்பிட்டவுடன் தூக்கம் இவைகளால் கபம் மிகுந்து கிரஹணி கெடுகின்றது, கஷ்டப்பட்டு ஜீரணமாகும். உமட்டல், வாந்தி, அரோசகம், வாயில் குழகுழப்பு, வாயில் இனிப்பு, இருமல், காரித்துப்புதல் தலைச்சளி, ஹிருதயம் உறைவதுபோலவும் வயிறு திமிர்த்தும் கனத்தும் இருக்கும். கெட்ட இனித்த ஏப்பம், உடல் சோர்வு, காமஸுகத்தில் வெறுப்பு, தளர்ந்த அஜீரணமான கனமான மலம் வெளியாகுதல், உடல் இளைக்காமலே பலவீனத்தை உணர்தல், சோர்வு இவை இதன் குறிகள்,

**ஸந்நிபாத கிரஹணீ.** மூன்று தோஷங்களின் பிரகோபமும் அதனல் ஏற்படும் முத்தோஷக் குறிகளும் இதில் காணும்.

**ஸங்கிரஹ கிரஹணீ:** வயிற்றில் இரைச்சல், சோர்வு, பலவீனம், அசதி, திரவமாயும் கனத்துடனும் வெளுத்தும் பிசுபிசுப்புடனும் இடுப்பு வலியுடனும் மலம் வெளியாதல், அதில் ஆமமும் சீதமும் வெளியாகும். மலம் வெளியாகும் போது இரைச்சலுமிருக்கும், பக்ஷத்திற்கோ மாஸத்திற்கோ பத்து நாட்களுக்கோ ஒருதடவை அல்லது தினமும் இந்நோய் வரலாம். இரவில் தொந்தரவு குறைந்தும் பகலில் தொந்தரவு மிகுந்தும் காணும், கண்டுபிடிப்பதில் சிரமமுண்டு. சிகித்ஸை செய்வதும்

கடினம். வெகு நாட்கள் தொடர்ந்து இருக்கும். ஆமமும் வாயுவும் பிராதான காரணமாகும.

இதில் வாந்தியும் பேதியும் அதிகமாக ஏற்பட்டால் 15 நாட்கள் தான் ஜீவித்திருப்பான்.

**கடீயந்திர கிரஹணீ.** (घटीयन्त्रग्रहणी) தூங்கும் போது விலாப்புறத்தில் புரண்டு படுக்கையில் சிறிய குடத்தின் வாயிலாக ஜலம் வெளியாகும் போது ஏற்படும் சப்தம் போல குடகுட என சத்தம் கேட்டால் இதை கடீயந்திர கிரஹணி என்பர். கிரஹணி உறுப்பே பலமிழந்து தன் செய்கையை முற்றிலும் செய்யாதிருப்பதால் இது மிகவும் அஸாத்தியம்.

**கிரஹணியில் ஆமம்.** உணவு அளவுக்குமீறி இருந்த நிலையில் இடமின்மை காரணமாக ஏற்படும் குழப்பத்தாலும், அளவுக்குக் குறைந்த நிலையில் புளிப்பு பாகம் ஏற்படுவதாலும் ஜீர்ணமாகாத அன்னம் வெளியாவதை ஆமம் என்பர்.

அதிஸாரத்தில் உள்ள மற்ற ஆம பக்வ லக்ஷணங்கள் முதலியவையை இதிலும் சேர்த்துக் கொள்ளலாம். பாலனுக்கு எற்படும் கிரஹணி ஸாத்யமே. நடுவயதினனுக்கு கஷ்டஸாத்யம் .வயதானவர்களுக்கு அஸாத்யமே.

## கிரஹணீ சிகித்ஸை.

கிரஹணியில் ஏற்பட்ட தோஷத்தை அஜீர்ணத்திற்கான சிகித்ஸை செய்து சரிப்படுத்தலாம். லங்கனமும் தீபனமும் அதிஸாரத்திற்கான மருந்தும் நல்லது. ஆமமுள்ளதையும் இல்லாததையும் அதிஸாரத்திற்கான பரீக்ஷையாலே அறியலாம். ஆமத்தை ஜீர்ணமாகச் செய்வதற்கும், அதிஸாரத்திற்கான வழியே போதுமானது. பஞ்சலவணம். பஞ்சகோலம் இவைகள் சேர்ந்த கஞ்சி வகை. மோர், மற்றும் தீபனமான உணவுகள் நல்லவை. வாதகிரஹணியில் ஆமம் பாகமடைந்தள்ளதை அறிந்து தீபனமான ஔஷதங்களால் தயாரான நெய்களால் சரிசெய்ய வெண்டும்.

**வாதகிரஹணியில்.** வயிறு உப்புசமும் சிக்கலுமுள்ள வாத கிரஹணியில் கொத்துமல்லிவிதை வில்வப்பிஞ்சு, சித்தாமுட்டி வேர், சுக்கு ஓலை இவைகளாலான கஷாயமும் பானீய கஷாயமும் நல்லது.

**பஞ்சமூலாதி கிருதம்:** ஓரிலை, மூவிலை, கண்டங்கத்திரிவேர், முள்ளுக்கத்திரிவேர், நெரிஞ்சில், கடுக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு, கண்டதிப்பிலி, இந்துப்பு, சித்தரத்தை, யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், ஓமம், வாய்விளங்கம், பூலாங்கிழங்கு, இவைகளாலான கல்கமும், கல்கத்திற்கு நான்கு பங்கு பசுநெய்யும், துரிஞ்சிச்சாறும், காய்ந்த முள்ளங்கிக் கஷாயமும், இலந்தைக் கொட்டைக் கஷாயமும், காடியும் மாதுளம்பழச்சாறும், மோரும் தயிர்தெளிவும் மத்யத்தின் வண்டலும், கோதுமைக் காடி, புளிப்பான பழச்சாற்றின காடி, தவிட்டுக்காடி இவை வகைக்கு நெய்க்குச் சம அளவு சேர்த்து நெய் காய்ச்சிக் கொடுக்க நல்ல பசி ஏற்படும். சூலம், குல்மம், உதரம், வயிற்று உப்புசம், இளைப்பு, வாயு இவைகளைப் போக்கும்,

**சுண்டீ கிருதம்.** சுக்கைக் கல்கமாக்கிக் கலந்து காய்ச்சிய நெய் வாதத்தை அனுலோமனம் செய்யும். கிரஹணி, பாண்டு, ப்லீஹம், காஸம், ஜ்வரம் இவைகளைப் போக்கும்.

**பித்தகிரஹணியில்:** ரஸாஞ்சனம், அதிவிடயம், வெட்பாலைப் பட்டை, வெட்பாலையரிசி, சுக்கு, காட்டகத்திப்பூ இவை வகைக்குச் சமனெடை தூள் செய்து கலந்து தேன் சேர்த்து அரிசி கழுவிய ஜலத்துடன் சாப்பிட பித்த கிரஹணி, பித்த தோஷம், மூலம், ரக்தபித்தம், பித்தாதிஸாரம் இவை நீங்கும். வில்வப்பிஞ்சின் கல்கத்தை சுக்குத்தூளுடன் கலந்து வெல்லம் சேர்த்துச் சாப்பிட கிரஹணீ குறையும். மோர் அன்னம் உட்கொள்ளவும்.

**நாகராதி சூர்ணம்.** சுக்கு, அதிவிடயம், கோரைக்கிழங்கு, காட்டகத்திப்பூ, ரஸாஞ்சனம், வெட்பாலைப்பட்டை, வெட்பாலையரிசி, வில்வப்பிஞ்சு, வட்டத்திருப்பி, கடுகுரோகிணி இவை வகைக்குச் சம எடை தூள்செய்து தேன் சேர்த்து அரிசி கழுவிய ஜலத்துடன் சாப்பிட நல்லது, பித்த கிரஹணி, ரத்தமூலம், ரத்தாதிஸாரம், ஹிருதயவலி, குதத்தில் வலி, பிரவாஹிகை இவை நீங்கும்.

**பூநிம்பாதி சூர்ணம்.** நிலவேம்பு, கடுகுரோகிணி, சுக்கு, திப்பிலி, மிளகு, கோரைக்கிழங்கு, வெட்பாலையரிசி வகைக்கு ஒரு தோலா, சித்ரமூலப்பட்டை 2 தோலா, வெட்பாலைப்பட்டை 16 தோலா, இவைகளைச் சூர்ணித்து வெல்லம் கரைத்த குளிர்ந்த ஜலத்துடன் சாப்பிட கிருஹணி, பித்ததோஷம் காமலை, ஜ்வரம், பாண்டு, மோஹம், அதிஸாரம் இவை நீங்கும்.

**கபக்கிரஹணியில்:** பூலாங்கிழங்கு, சுக்கு திப்பிலி, மிளகு, கடுக்காய், யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், கண்டந்திப்பிலி, மாதுளம் விதை இவைகளைச் சூர்ணம் செய்து எலுமிச்சம்பழச்சாறு அல்லது காடியுடன் இந்துப்பு சேர்த்துக் கலந்த அனுபானத்துடன் சாப்பிடலாம்.

**ராஸ்னாதி சூர்ணம்.** சித்தரத்தை கடுக்காய், பூலாங்கிழங்கு, சுக்கு திப்பிலி, மிளகு, யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், ஐந்து உப்புகள், கண்டதிப்பிலி இவைகளைச் சூர்ணித்து மாதுளம்பழச் சாறுவிட்டுப் பிசிறி உலர்த்தி, வெந்நீருடன் சாப்பிடலாம்.

## கிரஹணியில் பொதுவான சிகித்ஸை.

**சுண்ட்யாதி கஷாயம்.** சுக்கு, கோரைக்கிழங்கு, அதிவிடயம், சீந்திற்கொடி - இவைகளை சம அளவு சேர்த்துக் கஷாயமிட்டுச் சாப்பிட அக்னிமந்தம், ஆமவாதம், ஆம கிரஹணி நீங்கும்.

**சித்ரகாதிவடி.** கொடிவேலிவேர் பட்டை, கண்டந்திப்பிலி, யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், ஐந்து உப்புகள், சுக்கு, திப்பிலி, மிளகு, பெருங்காயம், ஓமம், சவ்வியம் இவை வகைக்குச் சமஎடை, இவைகளைத்தூள் செய்து மாதுளம்பழச் சாற்றில் அல்லது துறிஞ்சிச் சாற்றில் அரைத்து மாத்திரை செய்து கொள்ளவும். ஆமம் ஜீர்ணமாகும். பசி உண்டாகும்.

**சவ்யாதி சூர்ணம்:** சவ்வியம், கொடிவேலிவேர் பட்டை, வில்வப்பிஞ்சு, சுக்கு இவைகளின் சூர்ணம் மோருடன் கலந்து சாப்பிட கடுமையான கிரஹணியின் வேதனை குறையும்.

**பல்லாதகக்ஷாரம்.** சுத்திசெய்த சேங்கொட்டை, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய் தோல், தானிக்காய் தோல், நெல்லி முள்ளி, இந்துப்பு, கந்தகவெடியுப்பு, கடலுப்பு இவை வகைக்கு 8 தோலா எடுத்துச் சட்டியினுள் வைத்து மூடிச் சீலைசெய்து புகை வெளியேறாமல் வராட்டி நெருப்பில் எரித்தெடுத்து அந்த க்ஷாரத்தை நெய்யுடன் சாப்பிட, அல்லது சாதத்துடன் கலந்து சாப்பிட ஹிருதயரோகம், பாண்டு, கிரஹணி, குல்மம், உதாவர்தம் சூலம் இவைகளில் நல்ல பலனைத் தரும்.

**மோர் உபயோகித்தல்.** ஒருவாரம் அல்லது 10 நாள் அல்லது 15 நாள் அல்லது ஒருமாதம் வரை வியாதி சரீரம் இவைகளின் பலத்தையும் காலத்தையும் அனுசரித்து மோர்மாத்திரம் சேர்த்த உணவைச் சாப்பிடுவதும் தனிமோரைச் சாப்பிடுவதும்

நல்லது. அம்ருதம் போன்று மோர் நல்ல பலன் தரும். உரக்ஷத மிருக்கும் போதும் உஷ்ணகாலத்திலும் துர்பலனுக்கும் மூர்ச்சை தலைசுற்றல் எரிச்சல் ரத்தபித்தம் இவை இருக்கும்போதும் மோர் சேர்க்கக்கூடாது. கிரஹணியால் கஷ்டப்படுபவனுக்கு. மோர், லகுவாக இருப்பதால் தீபனமாயும் மலத்தைக் கட்டுவதாயுமிருக்கும். விபாகத்தில் இனிப்பாகுவதால் வியாதியில் சிறந்த பத்ய உணவாகின்றது. பித்தத்தைக் கெடுப்பதில்லை. துவர்ப்பும் சூடும் சீக்ரமாகப் பரவும் தன்மையும் வரட்சியும் உள்ளதால் கபத்தை அதிகப்படுத்தாது. சாந்தப்படுத்தும். இனிப்பும் புளிப்பும் குழகுழப்பு முள்ளதால் வாயுவைக் கண்டிக்கும். அத்துடன் புதிதாகக் கடைந்தெடுத்தமோர் விதாஹியுமல்ல.

மோரை அருசி ஏற்படும்போது மாதுளம் கேஸரத்துடன் நெய் இந்துப்பு சேர்த்தும் கொடுக்கலாம். காலை உணவு நேரத்தில் மோர் கொடுத்தல் நல்லது. கொடிவேலிவேர்பட்டை, ஓமம், இந்துப்பு, சுக்கு மிளகு இவைகளின் சூர்ணத்தைப் புளித்த மோருடன் சாப்பிட ஒருவாரத்தில் அக்னிமந்தம் கிரஹணீ அதிஸாரம் சூலம் இவை குறையும்

**தக்ரஹரீதகீ** மோர் 6¼படி எடுத்து அதில் 32 தோலா இந்துப்பு சேர்த்து 60 விதை நீக்கிய கடுக்காயும், சுக்கும், கொடிவேலிவேர் பட்டையும் வகைக்கு 16 தோலாவும். ஓமம், ஜீரகம் மிளகு திப்பிலி இவை வகைக்கு 4 தோலாவும் தூள் செய்து நெய் நல்லெண்ணெய் வகைக்கு 16 தோலா சேர்த்துப் பிசிறிக் காய்ச்சி, பதம் வந்ததும் எடுத்துச் சாப்பிட, அக்னி பலம் பெருகும். கிரஹணி நோய் நீங்கும்.

**கல்யாணகாவலேஹம்.** வட்டத்திருப்பி, கொத்துமல்லி விதை. ஓமம், ஜீரகம், கொட்டைக்கரந்தை, சவ்வியம், சித்ரமூலப் பட்டை, இந்துப்பு, யானைத்திப்பிலி, கருஞ்சீரகம், வாய்விளங்கம், கண்டதிப்பிலி, ஜடாமாஞ்சி, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய் தோல், தானிக்காய் தோல், நெல்லிமுள்ளி, ஏலரிசி, லவங்கப் பட்டை, லவங்கபத்திரி, இவை வகைக்கு ஒரு தோலா வீதமும், செவதைவேர் பட்டை 4 தோலாவும் சேர்த்து இடித்துத் தூள் செய்து கொள்ளவும். நெல்லிக்காய்ச் சாறு 2½ படி எடுத்து அதில் வெல்லம் 200 தோலா சேர்த்துப்பாகு செய்து நல்லெண்ணெய் 16 தோலா போட்டு முன் தயாரித்த சூர்ணத்தையும் சேர்த்து லேகியம் தயாரிக்கவும். இந்த லேகியத்தைச் சாப்பாட்டிற்கு முன் சாப்பிட கிரஹணீ, மூலம்

சோஷம், ச்வாஸம், வீக்கம், தொண்டை நோய், வயிற்று நோய், இவைகளைப் போக்கும்

**பில்வாதியோகம்,** வில்வப்பிஞ்சு, கோரைக்கிழங்கு, வெட் பாலையரிசி, வெட்டிவேர், இலவம்பிசின், இவைகளைக் கிழிகட்டிப் போட்டுக் காய்ச்சிய ஆட்டின்பால் மூன்று நாட்கள் தொடர்ந்து சாப்பிட, நாட்பட்ட கிரஹணி மாம்ஸம் ரத்தத்துடன் வெளி யாவதாயிருந்தாலும் அதைக் குணப்படுத்தும்.

**வ்யோஷாதி சூர்ணம்.** சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், குரோ சாணி ஓமம், வாய்விளங்கம், கொடிவேலிவேர்ப்பட்டை, பெருங் காயம், அமுக்கிராக்கிழங்கு, இந்துப்பு, ஜீரகம், கருஞ்சீரகம், வெடி யுப்பு, கொத்துமல்லி விதை அதிவிடயம், கிராம்பு இவை வகைக்குச் சமஎடை சூர்ணம் செய்து தேன் நெய் சேர்த்துச் சாப்பிட உடலுக்கு புஷ்டி, காந்தி, பலம் கிட்டும், கிரஹணி நீங்கும்.

**விருத்தகங்காதர சூர்ணம்.** கோரைக்கிழங்கு, வெட்டிவேர், லோத்திரப்பட்டை, வெட்பாலையரிசி, வட்டத்திருப்பி, சுக்கு, பெருவாகை, வில்வப்பிஞ்சு, காட்டகத்திப்பூ, தொட்டாச்சுருங்கி, இலவம்பிசின், மாம்பருப்பு, வெட்பாலைப்பட்டை, அதிவிடயம் இவைகளின் சூர்ணத்தைத் தேனில் குழப்பி அரிசி கழுவிய ஜலத்துடன் சாப்பிட கடுமையான பிரவாஹிகை, கிரஹணி, அதி ஸாரம் நிற்கும்.

**மஹாதாலீஸாதி சூர்ணம்.** தாளீஸபத்ரி, வசம்பு மூங்கிலுப்பு, திப்பிலி, கண்டதிப்பிலி, சவ்வியம், கொடிவேலிவேர்பட்டை, சுக்கு, மிளகு, மஞ்சள், வில்வப்பிஞ்சு, ஓமம், பூலாங்கிழங்கு, ஏலரிசி, லவங்கப்பட்டை, லவங்கபத்திரி, சிறுநாகப்பூ, கிராம்பு, காட்டகத்திப்பூ, அதிவிடயம், ஜாதிக்காய், குரோசாணிஓமம், வட்டத்திருப்பி, இலவம் பிசின், மாம்பருப்பு, ஐந்து உப்புகள், ஜீரகம், கருஞ்சீரகம், வாய்விளங்கம், புளிவஞ்சி, புளி, புரசிலை, ஜடாமாஞ்சி, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், தும்மட்டிவேர், பிராம்மி, கீழாநெல்லி, கோஷ்டம் இவை வகைக்கு ஒரு தோலா, சித்தாமுட்டிவேர் 43 தோலா, கஞ்சா 86 தோலா, சர்க்கரை 172 தோலா. இந்த சூர்ணம் கிரஹணி க்ஷயம், இருமல், ச்வாஸம், அரோசகம், ப்லீஹம், ஹ்ருதயரோகம், அபஸ்மாரம், பாண்டு, குல்மம், உதரம், கபபித்த உன்மாதம், இவைகளைப் போக்க வல்லது. குழந்தைகளுக்கு விசேஷமாக நல்லது. ஸ்பஷ்டமான குரல், புஷ்டி, பலம், காந்தி மேதை, ஞாபகசக்தி, புத்தி இவைகளை அளிக்கவல்லது.

**ஜாதீபலாதி சூர்ணம்.** கிராம்பு, ஏலரிசி, ஜாதிக்காய், லவங்கபத்திரி. லவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, சூடம், சந்தனத் தூள், எள்ளு, மூங்கிலுப்பு, தகரவிதை, நெல்லிமுள்ளி, தாளீஸ பத்திரி, திப்பிலி, கடுக்காய்தோல் பெருஞ்சீரகம், கொடிவேலி வேர்பட்டை, சுக்கு, வாய்விளங்கம், மிளகு இவை வகைக்கு ஒரு தோலா தூள் செய்து கஞ்சா 20 தோலா, சர்க்கரை 40 தோலா சேர்க்கவும். தேனில் சாப்பிட கிரஹணி, ச்வாஸம், காஸம், அருசி, க்ஷயம், பீநஸம் இவை போகும்.

**பில்வாதி கிருதம்.** வில்வப்பழச்சதை அல்லது பிஞ்சு, கொடிவேலிவேர்பட்டை, இஞ்சி, சுக்கு இவை கல்கம்; நெய், நெய்க்குச் சமஅளவு ஆட்டுப்பால் இவைகளைக் கொண்டு தயாரித்த நெய் வீக்கம், அக்னிமந்தம், அரோசகம் இவைகளைப் போக்கவல்லது.

கஷ்டப்பட்டுக் கெட்டியாக மலம் வெளியாகும் போது நெய்யை உப்பு சேர்த்துக் கொடுக்கவும். ஓமத்தையும் வெடியுப்பையும் வயிறு உப்புசம் இருக்கும் போது வென்னீரில் போட்டுக் கொடுக்கவும்.

**திராக்ஷாஸவம்.** திராக்ஷை 400 தோலா, 25படி ஜலத்தில் கால்பங்கு மீதமாகக் காய்ச்சி வடிகட்டி. தேன் 400 தோலா, கல்கண்டு 400 தோலா, காட்டகத்திப்பூ 64 தோலா, வால்மிளகு, கிராம்பு, ஜாதிக்காய், மிளகு, லவங்கப்பட்டை, ஏலரிசி, லவங்க பத்திரி, சிறுநாகப்பூ, திப்பிலி, கொடிவேலிவேர்பட்டை, சவ்வியம், கண்டந்திப்பிலி, அரேணுகம் இவைகளின் சூர்ணம் வகைக்கு 4 தோலா. ஆஸவ முறைப்படி ஸந்தானம் செய்து எடுத்து பச்சைக்கர்பூரம வாஸனைக்காக சேர்த்துக்கொள்ளவும். மூலம், மலபந்தம், உதரம் கிருமி, குஷ்டம், விரணம், கண்ணோய், தலைவலி தொண்டைநோய், ஜ்வரம், அஜீரணம், பாண்டு, காமலை இவைகளைப்போக்கும். பலம் புஷ்டியளிக்கும்.

✲ **கபித்தாதிபேயா.** (பை. ர.) விளாம்பழச்சதை, வில்வப்பழச் சதை, புளியாரைக்கீரை, மாதுளம்பழஓடு அல்லது விதை இவை வகைக்கு சம எடை சேர்த்து 4 தோலா, மோர் 28 தோலா, அரிசி 4 தோலா, 28 தோலா ஜலம்; மோர் அளவு மீதமாகும் வரை சுண்டவைத்த கஞ்சி இந்துப்பு சேர்த்து சாப்பிட நல்லது. வாயு மிகுந்திருந்தால் லகுபஞ்ச மூல கஷாயம் இதில் சேர்த்துக் கொள்ளவும்.

✲ **தான்யகாதி கஷாயம்.** (பை. ர.) கொத்துமல்லிவிதை, அதிவிடயம், வெட்டிவேர், ஓமம், கோரைக்கிழங்கு, சுக்கு, சித்தாமுட்டிவேர்,

ஓரிலைவேர், மூவிலைவேர், வில்வப்பிஞ்சு இவைகளின் கஷாயம் தீபனமும் பாசனமுமாகும்.

✲ **சாலிபர்ண்யாதி கஷாயம்.** (பை. ர.) மூவிலைவேர், சித்தா முட்டிவேர், வில்வப்பிஞ்சு, கொத்துமல்லிவிதை, சுக்கு இவைகளின் கஷாயம் வயிறு உப்புசம், வலியுடன்கூடிய வாதகிரஹணியில் நல்லது.

✲ **புனர்னவாதி கஷாயம்.** (பை. ர.) மூக்கரட்டைவேர், மிளகு, முள்ளிலவம்வேர்பட்டை, சுக்கு, கொடிவேலிவேர்ப்பட்டை, கடுக்காய், புங்கம்பட்டை, வில்வவேர் அல்லது வில்வக்காய்ச்சதை இவைகளின் கஷாயம் மூலம், குல்மம், கிரஹணி இவைகளைப் போக்க வல்லது.

✲ **யவானிகாதி கஷாயம்.** (பை. ர.) ஓமம், சுக்கு, விலாமிச்சைவேர், கொத்துமல்லிவிதை, அதிவிடயம், கோரைக்கிழங்கு, சித்தா முட்டிவேர், வில்வப்பிஞ்சு, ஓரிலைவேர், மூவிலைவேர் இவைகளின் கஷாயம் நல்ல தீபனபாசனமாகும்.

✲ **சாதுர்பத்ர கஷாயம்.** (பை. ர.) சீந்திற்கொடி, அதிவிடயம், சுக்கு, கோரைக்கிழங்கு இவைகளின் கஷாயம் ஆமம் கலந்த கிரஹணியைப் போக்கும், நல்ல தீபன பாசனமாகும்.

✲ **திக்தாதி கஷாயம்.** (பை. ர.) கடுகுரோகிணி, வெட்பாலைப் பட்டை, வெட்பாலைபரிசி, கோரைக்கிழங்கு, அதிவிடயம், கடுக்காய், ரஸாஞ்சனம், சுக்கு, காட்டகத்திப்பூ இவைகளின் கஷாயம் பித்தத்தால் ஏற்படும் கிரஹணியைப் போக்கும்.

✲ **ரஸாஞ்சனாதி சூர்ணம்.** (பை. ர.) ரஸாஞ்சனம், அதிவிடயம் வெட்பாலைப்பட்டை, வெட்பாலையரிசி, காட்டகத்திப்பூ, சுக்கு இவைகளின் சூர்ணத்தைத் தேனில் குழப்பி அரிசி கழுவிய நீருடன் சாப்பிட பித்தகிரஹணீ நீங்கும்,

✲ **ஹிமாம்ச்வாதி சூர்ணம்.** (பை. ர.) சூடம், சித்தரத்தை, ஐந்து உப்புகள், கடுக்காய், யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், சுக்கு, திப்பிலி, மிளகு இவைகளைச் சூர்ணம் செய்து கசப்பு நார்த்தைப் பழச் சாற்றில் ஊற வைத்துக் காய்ந்தபின் வென்னீருடன் சாப்பிட வாதகபகிரஹணீ நீங்கும். பலமும் வர்ணமும் அதிகமாகும்.

✲ **பாடாதி சூர்ணம்.** (பை. ர.) வட்டத்திருப்பி, வில்வப்பிஞ்சு, சித்ரமூலப்பட்டை, சுக்கு, திப்பிலி, மிளகு, நாவலிலை, மாதுளம்பிஞ்சு,

காட்டகத்திப்பூ, கடுகுரோகிணி, அதிவிடயம், கோரைக்கிழங்கு, மரமஞ்சள், நிலவேம்பு, வெட்பாலையரிசி இவைகளின் சூர்ணம் 15 தோலா, வெட்பாலைப்பட்டை சூர்ணம் 15 தோலா. கலந்து தேன் கலந்த அரிசி கழுவிய நீருடன் சாப்பிட வாந்தி ஜ்வரம் அதிஸாரம் சூலம் ஹிருதய ரோகம், கிரஹணீ, அரோசகம், அக்னிமந்தம் நீங்கும்.

✲ **ஸ்வல்பகங்காதர சூர்ணம்.** (பை. ர.) கோரைக்கிழங்கு, இந்துப்பு, சுக்கு, காட்டகத்திப்பூ வெள்ளைலோத்திரப்பட்டை, வெட்பாலையரிசி. வில்வப்பழச்சதை, காரிலவம்பிசின், வட்டத்திருப்பி, வெட்பாலைப் பட்டை, வெட்டிவேர், மாம்பருப்பு, அதிவிடயம், தொட்டாச்சுருங்கி இவை வகைக்குச் சம எடை, தேனும் அரிசி கழுவிய ஜலமும் சேர்த்துச் சாப்பிட பிரவாஹிகை அதிஸாரம் சூலம் கிரஹணீ ஸூதிகாவாயு நிற்கும்.

✲ **மத்யமகங்காதர சூர்ணம், 1.** அபின்கலந்தது. (பை. ர.) வில்வப்பழச்சதை. காரிலவம்பிசின், வட்டத்திருப்பி, காட்டகத்திப்பூ, கொத்துமல்லிவிதை, விலாமிச்சைவேர், சுக்கு, கோரைக்கிழங்கு, அதிவிடயம், அபின், வெள்ளைலோத்திரப்பட்டை, மாதுளம்பட்டை அல்லது பழ ஓடு, வெட்பாலைப்பட்டை, ரஸம் கந்தகம் இவை வகைக்குச் சமஅளவு அரைத்து மோருடன் சாப்பிட எட்டு வகை ஜ்வரங்களுடன் வரும் அதிஸாரம் கிரஹணி மற்றுமுள்ள குடல் நோய்கள் நீங்கும்.

✲ **மத்யமகங்காதர சூர்ணம். 2.** கஞ்சா கலந்தது. (பை. ர) வில்வப்பழச்சதை, ஜர்தால், மாதுளம் ஓடு அல்லது இலை, கோரைக்கிழங்கு, அதிவிடயம், வெள்ளைக் குங்கிலியம், காட்டகத்திப்பூ, மிளகு திப்பிலி, சுக்கு, மரமஞ்சள், நிலவேம்பு, வேப்பம்பட்டை. நாவல்பட்டை, ரஸாஞ்சனம், வெட்பாலையரிசி, வட்டத்திருப்பி, மஞ்சிட்டி, விலாமிச்சம் வேர், இலவம் பிசின், கஞ்சா, கருசலாங்கண்ணி இவை வகைக்குச் சம எடை, எல்லாவற்றிற்கும் சமம் வெட்பாலைப்பட்டை, இவை எல்லாவற்றையும் சூர்ணமாக்கிக் கொள்ளவும். பலவகைப் பட்ட அதிஸாரம், கிரஹணி, நாவரட்சி, காஸம், ஜ்வரம், வீக்கம், அருசி, பாண்டு, இவைகளைப் போக்கும். ஆட்டுப்பாலும் தயிர்த்தெளிவும் தேனும் அனுபானம்.

✲ **ஸ்வல்பலவங்காதி சூர்ணம்.** (பை. ர.) கிராம்பு, அதிவிடயம், கோரைக்கிழங்கு, வில்வப்பிஞ்சு, வட்டத்திருப்பி, இலவம்பிசின், ஜீரகம், காட்டகத்திப்பூ, வெள்ளைலோத்தி ப்பட்டை, வெட்பாலையரிசி, வெட்டிவேர், கொத்தமல்லிவிதை, வெள்ளைக்குங்கிலியம், கர்கடசிங்கி, திப்பிலி, சுக்கு, மஞ்சிட்டி, யவக்ஷாரம். இந்துப்பு, ரஸாஞ்சனம் இவை

வகைக்குச் சம எடை சூர்ணம் செய்து சாப்பிட அக்னிமந்தம், ஸங்கிரஹ க்ரஹணீ, அதிஸாரம், வீக்கத்துடன்கூடிய பாண்டு காமாலைகள், அஷ்டீ லிகா, காஸம், சுவாஸம், ஜ்வரம், வாந்தி, உமட்டல், அம்லபித்தம், வயிற்றுவலி, ஸந்நிபாதநிலை இவைகளில் நல்லது.

✲ **பிருஹத்லவங்காதி சூர்ணம்.** (பை. ர.) கிராம்பு, அதிவிடயம், கோரைக்கிழங்கு, திப்பிலி, மிளகு, இந்துப்பு, கொட்டக்கரந்தை, கொத்துமல்லிவிதை, காய்பல். புஷ்கரமூலம், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, ஜீரகம், ஸுவர்ச்சிலஉப்பு, ரஸாஞ்சனம், காட்டகத்திப்பூ, இலவம்பிசின், வட்டத்திருப்பி, தாளீசபத்திரி, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, கொடிவேலிவேர்பட்டை, வளையலுப்பு, காட்டுக்கொத்துமல்லிவிதை, வில்வப்பிஞ்சு, லவங்கப்பட்டை, ஏலரிசி, கண்டந்திப்பிலி, ஓமம், குரோசானி ஓமம் மஞ்சிட்டி, வெட்பாலையரிசி, சுக்கு, மாதுளம் ஓடு, யவக்ஷாரம், வேப்பம் பட்டை, ஸர்ஜரஸம், ஸர்ஜக்ஷாரம், உப்பு, வெங்காரம், விலாமுச்சை வேர், வெட்பாலைப்பட்டை, நாவல்கொட்டைப்பருப்பு, மாம்பருப்பு, கடுகுரோஹிணி, அப்ரகபஸ்மம், அயஸ்லிந்தூரம், ரஸம், கந்தகம், இவைகளில் ரஸம் கந்தகத்தைச் சேர்த்தரைத்து மற்றவைகளைக் கிரமமாகச் சேர்த்து அரைத்து அரிசி கழுவிய ஜலத்துடன் சாப்பிட வாதபித்தகப ஸந்நிபாதகிரஹணி, பக்வ—அபக்வ அதிஸாரம், கருத்தும் வெளுத்தும் சிவந்தும் மாம்ஸத்தைக் கழுவிய ஜலம் போலவும் பல நிறங்களில் போகும் அதிஸாரம், ஜ்வரம், அரோசகம், அக்னிமந்தம், காஸம், ச்வாஸம், வாந்தி, அம்லபித்தம், விக்கல், பிரமேஹம், ஹலீமகம், பாண்டு, மலக்கட்டு, மூலம், பிலீஹம், குல்மம், உதரம், வீக்கம், அதிஸாரம், பீநஸம், ஆம வாதம், அஜீரணம், ஸங்கிரஹ கிரஹணீ, உதரம், பிரதரம் இவைகளில் நல்லது.

✲ **மஹாலவங்காதி சூர்ணம்.** (பை. ர.) கிராம்பு, ஜீரகம், அரேணுகம், இந்துப்பு, ஏலரிசி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, ஓமம், குரோசானி ஓமம், கோரைக்கிழங்கு, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய் தோல், தான்றிக்காய்தோல், நெல்லிமுள்ளி, சதகுப்பை, வட்டத்திருப்பி, நிலவேம்பு, நெரிஞ்சில், ஜாதிக்காய், ஜாதிபத்திரி, மரமஞ்சள், ஜடாமஞ்சி, சந்தனம், முராமாம்ஸி, பூலாங்கிழங்கு, சோம்பு, வெந்தயம், வெங்காரம், கருஞ்சீரகம், யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், வெட்டிவேர், வில்வப்பிஞ்சு, புஷ்கரமூலம், கொடிவேலிவேர் பட்டை, கண்டந்திப்பிலி, வாய்விளங்கம், கொத்துமல்லிவிதை, ரஸம், கந்தகம், அப்ரகபஸ்மம், லோஹபஸ்மம், இவைகளை முறைப்படி சேர்த்துச் சூர்ணம் செய்து வெந்நீருடன் சாப்

பிட அஜீர்ணம் போகும். குளிர்ந்த ஜலத்துடன் சாப்பிட ஆமாதிஸாரம், கிரஹணீ, சூலம், மலக்கட்டு, வயிற்று உப்புசம், வாந்திபேதி, வீக்கம், காமாலே, ஹலீமகம், பாண்டு, காஸம் இவைகளேப் போக்கும். சர்க்கரை யுடன் கலந்து சாப்பிட வயிற்று உப்புசம் தணியும்.

✲ **ஸ்வல்பநாயிகா சூர்ணம்.** ( லாயீ சூர்ணம் ) (பை. ர) இந்துப்பு, ஸுவர்சலேஉப்பு, கந்தகவெடியுப்பு, கடல் உப்பு, கரியுப்பு, சுக்கு மிளகு திப்பிலி இவை வகைக்கு ஒரு தோலா, கந்தகம் $\frac{2}{3}$ தோலா, ரஸம் $\frac{1}{3}$ தோலா, கஞ்சா 5 தோலா இவைகளே ஒன்றுசேர்த்து அரைத் துத் தூள்செய்துகொண்டு காடியுடன் சாப்பிட நல்ல பசி ஏற்படும். கிரஹணி நீங்கும். ஜீரணமாகும்.

✲ **மத்யமநாயிகா சூர்ணம்.** (பை. ர.) கந்தகம் 1 தோலா, ரஸம் $\frac{1}{2}$ தோலா, கஜ்ஜலி செய்து கொண்டு, சுக்கு 2 தோலா, மிளகு 2 தோலா, திப்பிலி 2 தோலா, இந்துப்பு $1\frac{1}{2}$ தோலா, ஸுவர்சிலே உப்பு $1\frac{1}{2}$ தோலா, கந்தகவெடியுப்பு $1\frac{1}{2}$ தோலா, கடல்உப்பு $1\frac{1}{2}$ தோலா, கரியுப்பு $1\frac{1}{2}$ தோலா, கஞ்சாத்தூள் $8\frac{1}{3}$ தோலா, இவைகளே இடித்துத் தூள்செய்து வேளேக்கு 10—15 யவ அளவு காடியுடன் சாப்பிட அக்னி மந்தம், அதிஸாரம், காஸம், ச்வாஸம், சூலம். உதரம், ராஜயக்ஷ்மா, ப்லீஹம், ஆமவாதம், மூலம், குஷ்டம், வாதரக்தம், தொண்டைநோய்கள் நீங்கும்.

✲ **பிருஹந்நாயிகா சூர்ணம்.** ( பை. ர. ) கொடிவேலிவேர் பட்டை, கடுக்காய்தோல், தான்றிக்காய் தோல், நெல்லிமுள்ளி, சுக்கு, திப்பிலி, மிளகு, வாய்விளங்கம், மஞ்சள், மரமஞ்சள், சேங்கொட்டை, குரோசாணிஓமம், பெருங்காயம், இந்துப்பு, கடல் உப்பு, கந்தகவெடியுப்பு, கரியுப்பு, ஸுவர்சிலேஉப்பு, ஓட்டடை, வசம்பு, கோஷ்டம், கோரைக்கிழங்கு, அப்ரகபஸ்மம், கந்தகம், யவக்ஷாரம், ஸர்ஜ க்ஷாரம், வெங்காரம், ஓமம், ரஸம், யானைத்திப்பிலி. இவை வகைக்கு ஒரு தோலா, சுத்தபங்கு அல்லது கஞ்சா 30 தோலா, இவைகளின் ரஸத்தை யும் கந்தகத்தையும் கஜ்ஜலிசெய்து மற்றவைகளே முறைப்படி சேர்த்து அரைத்து வைத்துக்கொள்ளவும். 10—15 யவ அளவு. தேவிநாயிகாயோ கினியைப் பூஜைசெய்து சாப்பிடவும். அக்னிமந்தம், காஸம், அர்சஸ், ப்லீஹம், பாண்டு, நாட்பட்டஜ்வரம், பிரமேஹம், வீக்கம், மலக்கட்டு, ஸங்கிரஹக்ரஹணீ, அதிஸாரம், சூலம், ஆமவாதம், ஸூதிகாவாதம், இவைகளில் மிகச் சிறந்தது. இம்மருந்தைச் சாப்பிட்டுவரும்போது குளிர்ந்த ஜலம், அரிசிச்சாதம், உளுந்து, எண்ணெய் ஸ்நானம், மாமிஸ உணவு,

காடிப்புளிப்பு, வருத்தமீன், தயிர் இவை நல்ல உணவாகும். கட்டை கூட இதனால் ஜீரணமாகும்.

✲ **கிரஹணீசார்தூல சூர்ணம்.** (பை. ர.) ரஸம், கந்தகம், அயஸ்விந்தூரம், அப்ரகபஸ்மம், பெருங்காயம், பஞ்சலவணம், மஞ்சள், கோஷ்டம், வசம்பு, கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய்தோல், தான்றிக்காய்தோல், நெல்லிமுள்ளி, கொடி வேலிவேர்பட்டை, ஓமம், குரோசாணிஓமம், யானைத்திப்பிலி, யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், வெங்காரம், ஓட்டடை, இவை வகைக்கு ஒரு தோலா, பங்கு அல்லது கஞ்சா 30 தோலா இவைகளின் சூர்ணத்தை வேளைக்கு 15 யவ அளவு அரிசி கழுவிய ஜலத்துடன் சாப்பிட, கிரஹணி, அக்னி மந்தம், நாவரட்சி, ஜ்வரம், வீக்கம், பாண்டு, ப்லீஹம், நாட்பட்ட ஜ்வரம், இவைகளில் மிக நல்லது.

✲ **ஜீரகாதி சூர்ணம்.** (பை. ர.) ஜீரகம், வெங்காரம், கோரைக்கிழங்கு, வட்டத்திருப்பி, வில்வப்பிஞ்சு, கொத்துமல்லிவிதை, வெட்டிவேர், சதகுப்பை, மாதுளம்ஓடு, வெட்பாலைப்பட்டை, மஞ்சிட்டி, காட்டகத்திப்பூ, சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப் பத்திரி, காரிலவம்பிசின், வெட்பாலையரிசி, அப்ரகபஸ்மம், ரஸம், கந்தகம், இவை வகைக்கு ஒரு தோலா, ஜாதிக்காய் 23 தோலா, இவைகளின் சூர்ணம், அதிஸாரம், காமாலை, பாண்டு, அக்னிமந்தம், இவைகளைப் போக்கவல்லது.

✲ **மார்க்கண்டேய சூர்ணம்.** (பை. ர.) ரஸம், கந்தகம், விங் கம், வெங்காரம், சுக்கு, திப்பிலி, மிளகு, ஜாதிக்காய், கிராம்பு, லவங்கப் பத்திரி, ஏலரிசி, கொடிவேலிவேர் பட்டை, கோரைக்கிழங்கு, யானைத் திப்பிலி, சுக்கு, வெட்டிவேர், அப்ரகபஸ்மம், காட்டகத்திப்பூ, அதி விடயம், முருங்கைவிதை, இலவம்பிசின், அபின் இவை வகைக்கு 3 தோலா சேர்த்தரைத்து இதிலிருந்து 6—12 யவ அளவு சர்க்கரை கலந்து சாப்பிட்டு வர ஸங்கிரஹக்ரஹணி, அக்னிமந்தம் இவைகளில் நல்லது. தாதுவிருத்தி, வயோவிருத்தி, பலம், புஷ்டி இவைகளை அளிக்கவல்லது.

✲ **தாளீஸாதிவடி-சூர்ணம்.** (பை. ர.) தாளீஸபத்திரி, மிளகு செவ்வியம் வகைக்கு 2 தோலா, சுக்கு 6 தோலா, கண்டந்திப்பிலி 4 தோலா, திப்பிலி 4 தோலா, சிறுநாகப்பூ 1 தோலா, ஏலரிசி ½ தோலா, லவங்கப்பட்டை, விலாமிச்சைவேர், லவங்கப்பத்திரி வகைக்கு 1 தோலா, இவைகளின் சூர்ணத்திற்கு 3 பங்கு பழைய வெல்லம் இவைகளை இடித்து

½—1 தோலா அளவு வடகம் செய்து மத்யம், கஞ்சி, பால், மாம்ஸரஸம், ஜலம் இவைகளில் ஒன்றைத் தக்க அனுபானமாகக்கொண்டு சாப்பிட மூலம், சூலம், பாண்டு, வீக்கம், ஹிருதயரோகம், கிரஹணி, காஸம், விக்கல், அரோசகம், ச்வாஸம், கிருமி, அதிஸாரம், காமாலே, அக்னிமந்தம், மூத்திர கிருச்சிரம், சோகம் இவைகளைப் போக்கும்.

இதையே 4 பங்கு சர்க்கரை சேர்த்துச் சூர்ணமாகத் தயாரித்து எல்லா பித்த விகாரங்களிலும் கொடுக்கலாம்.

இதே வடி அல்லது சூர்ணத்தை திரிபலே சேர்த்துத் தயார்செய்து கொடுக்க வீக்கம், மூலம், கிரஹணீ, பாண்டு, சூலம் இவைகளில் நல்லது.

✲ **தசமூலகுடம்.** (பை. ர.) தசமூலம் 400 தோலாவை 12½ படி ஜலத்தில் கஷாயமிட்டு, கால்பாகம் மீதமானதும் வடிகட்டி அதில் 400 தோலா வெல்லத்தைக் கரைத்து இஞ்சிச்சாறு 64 தோலா சேர்த்துக் காய்ச்சி லேகியபதத்தில் கீழ்க்கண்ட வகைகளைச் சூர்ணமாகச் செய்து சேர்த்துக் கிளறிக் கொள்ளவும். திப்பிலி, கண்டந்திப்பிலி, மிளகு, சுக்கு, பெருங்காயம், சேங்கொட்டை, வாய்விளங்கம், ஓமம், யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், கொடிவேலிவேர் பட்டை, செவ்வியம், ஐந்து உப்புகள், இவை வகைக்கு 4 தோலா. இந்த லேகியத்தை ¼ தோலா அளவு காலையில் சாப்பிட அக்னிமந்தம், வீக்கம், ஆமகிரஹணி, ஆமசூலம், ப்லீஹம், உதரம், விஷ்டம்பம், மூலம், நாட்பட்ட ஜ்வரம் இவைகளில் நல்லது.

✲ **கூஷ்மாண்ட குடகல்யாணகம்.** (பை. ர.) நன்கு முற்றிய பூசனிக்காயை விதையும் தோலும் நீக்கித் துருவிச் சாற்றைப் பிழிந்து தனியாக்கி மீதியுள்ளதை 400 தோலா அளவு எடுத்துத் தாம்ரபாத்திரத்தில் 64 தோலா நெய்விட்டு வதக்கி பொன்நிறத்தில் வறுத்துக் கொள்ளவும். நெல்லிக்காய்ச் சாறு 192 தோலாவில் வெல்லம் 200 தோலா சேர்த்துப் பாகு செய்து அதில் நல்லெண்ணெய் 32 தோலா, பூஷணிக்காய் வதக்கியது, திப்பிலி, கண்டந்திப்பிலி, கொடிவேலிவேர் பட்டை, யானைத் திப்பிலி, கொத்துமல்லி விதை, வாய்விளங்கம், ஜீரகம், மிளகு, திரிபலே, ஓமம், கருஞ்சீரகம், வெட்பாலேயரிசி, இந்துப்பு, வகைக்கு 4 தோலா, சிவதைவேர் 32 தோலா, இவைகளின் சூர்ணம் சேர்த்து மாத்திரை உருட்டும் பதத்தில் பாகு வந்ததும் போட்டுக் கிளறி எடுத்து ½—1 தோலா அளவு மாத்திரை செய்து கொள்ளவும். கிரஹணி, குஷ்டம், பகந்தரம், ஜ்வரம், வயிற்று உப்புசம், ஹிருதயரோகம், குல்மம், உதரம், காலரா, காமாலே, பாண்டு, 20 வகை பிரமேஹங்கள், வாதரக்தம், விஸர்பம்,

தத்ரு, தோல்நோய்கள், ஹலீமகம் இவைகளில் நல்லது. வியாதியாலும், வயதாலும், போகத்தாலும் இளைத்துப் பலமிழந்தவர்கள் இதைச் சாப்பிட நல்லது. தாதுபுஷ்டி பலமளிக்கும். கர்ப்பம் நிலைப்படும்.

✲ **காமேச்வரமோதகம்.** (பை. ர.) நன்கு புடம் போட்ட அப்ரக பஸ்மம், காய்பல், கோஷ்டம், அமுக்காரக் கிழங்கு, நிலப்பூசனி, நெரிஞ்சில், நீர்முள்ளி, வாழைக்கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, ஓமம், ஜடாமாஞ்சி, எள்ளு, கொத்துமல்லி விதை, ஜாதிக்காய், இந்துப்பு, சிறுதேக்கு, கர்கடசிருங்கி, சுக்கு, மிளகு, திப்பிலி, ஜீரகம், கருஞ்ஜீரகம், கொடிவேலிவேர், ஏலரிசி, லவங்கப்பட்டை, லவங்கப் பத்திரி, சிறுநாகப்பூ, மூக்கரட்டைவேர், யானைத்திப்பிலி, திராக்ஷை, கச்சோரம், வெட்டிவேர், இலவம்வேர், திரிபலை, பூனைக்காலிவிதை, இவைகளின் சூர்ணம் வகைக்குச் சம எடை, கஞ்சா 45 தோலா, சர்க்கரை 90 தோலா, இவைகளைத் தேனும் நெய்யும் விட்டுப் பிசிறி ஒரு தோலா அளவு மாத்திரை செய்து சாப்பிட வீர்யபுஷ்டி, பலம், உத்ஸாஹம், கொடுக்கும். க்ஷயம், காஸம், ச்வாஸம், அதிஸாரம், மூலம். கிரஹணி, பிரமேஹம், கபநோய் இவைகளைப் போக்கும். கவிதை பெருகும்.

✲ **மதனமோதகம்.** (பை. ர.) விதையுடன் கூடிய கஞ்சாவை நெய்யில் வறுத்து நன்கு தூள் செய்யவும். அதன் சூர்ணம் 20 தோலா, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லி முள்ளித்தோல், கர்கடசிங்கி, கோஷ்டம், கொத்துமல்லிவிதை, இந்துப்பு, பூலாங்கிழங்கு, தாளிஸபத்திரி, காய்பல், சிறுநாகப்பூ, ஓமம், கருஞ் சீரகம், அதிமதுரம், வெந்தயம், ஜீரகம், குரோசாணி ஓமம் இவை களின் சூர்ணம் வகைக்கு ஒரு தோலா, சர்க்கரை 40 தோலா இவைகளை நன்கு சூர்ணம் செய்து துணியில் சலித்து எடுத்துக் கொண்டு நெய்யும் தேனும் சேர்த்து $\frac{1}{4}$—$\frac{1}{2}$ தோலா அளவு மாத்திரை யுருட்டி ஏலம் லவங்கப் பட்டை பச்சிலை பச்சைக்கர்பூரம் இவைகளின் தூளை மேல் தூவி சில நாள் வைத்திருந்து பின்னர் உபயோகிக்க வாத கப நோய்கள், காஸம், சூலம், ஆமவாதம், கிரஹணி, வீர்யநாசம் இவைகளில் நல்லது.

✲ **மேதீமோதகம்.** (பை. ர.) சுக்கு, திப்பிலி, மிளகு, கோரைக்கிழங்கு, ஜீரகம், கருஞ்சீரகம், கொத்துமல்லிவிதை, காய்பல், புஷ்கரமூலம், கர்கடசிங்கி, குரோசாணிஓமம், இந்துப்பு, கந்தகவெடியுப்பு, தாளிஸபத்ரி, சிறுநாகப்பூ, பச்சிலை, லவங்கப்பட்டை, ஏலரிசி, ஜாதிக் காய், ஜாதிபத்திரி, கிராம்பு, முராமாஞ்சி, பச்சைக்கர்பூரம், சந்தனம் இவை வகைக்கு ஒரு தோலா, வெந்தயம் 27 தோலா, இவைகளைச்

சூர்ணம் செய்துகொண்டு, பழைய வெல்லம் 54 தோலா சேர்த்துத் தேனும் நெய்யும் விட்டு இடித்து 1—2 தோலா அளவு மாத்திரை உருட்டிக்கொண்டு சாப்பிட நல்ல பசி, பலம், நிறம் அளிக்கும். கிரஹணி, பிரமேஹம், மூத்ராகாதம், அச்மரீ, பாண்டு, காஸம், க்ஷயம், காமலை இவை நீங்கும். ஸ்தனங்கள் கெட்டிப்படும். கண் பார்வை தெளிவுபடும். கர்ப்பம் தரிக்கச் செய்யும்.

✲ **பிருஹன் மேதீ மோதகம்.** (பை. ர.) கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, கொத்துமல்லி விதை, கோரைக் கிழங்கு, சுக்கு, திப்பிலி, மிளகு, காய்பல், இந்துப்பு, கர்கடசிங்கி, ஜீரகம், கருஞ்சீரகம், புஷ்கரமூலம், குரோசாணி ஓமம், சிறுநாகப்பூ, பச்சிலை, தாளிஸபத்திரி, கந்தகவெடியுப்பு, ஜாதிக்காய், லவங்கப்பட்டை, ஏலரிசி, ஜாதிபத்திரி, பச்சைக்கர்ப்பூரம், கிராம்பு, சதகுப்பை. மூராமாஞ்சி, அதிமதுரம், பதிமுகம், செவ்வியம், சோம்பு, தேவதாரு, இவை வகைக்கு ஒரு தோலா, வெந்தயம் 32 தோலா, இவைகளின் சூர்ணத்தை 64 தோலா சர்க்கரையைப் பாகு செய்து அதில் போட்டுக்கிளறி தேன் நெய் விட்டு மாத்திரையாக்கிச் சாப்பிட அக்னிமந்தம், வீர்யநாசம், ஆமவாதம், கிரஹணி, மூலம், ப்லீஹம், பாண்டு, 20 வகை பிரமேஹம், காஸம், ச்வாஸம், வாந்தி, அதிஸாரம், அரோசகம் இவை நீங்கும்.

✲ **முஸ்தகாதிமோதகம்.** (பை. ர.) கொத்துமல்லிவிதை, கடுக்காய்தோல், தான்றிக்காய்தோல், நெல்லிமுள்ளி, லவங்கப்பட்டை, ஏலம், ஜீரகம், கருஞ்சீரகம். குரோசாணி ஓமம், காய்பல், வெட்டிவேர், காட்டகத்திப்பூ, கோஷ்டம், ஜாதிபத்திரி, ஜாதிக்காய், லவங்கப்பட்டை, சோம்பு, ஓமம், கொட்டைக்கரந்தை, வெற்றிலை, வசம்பு, பூலாங்கிழங்கு, ஜடாமாஞ்சி, வெட்பாலையரிசி, மூங்கிலுப்பு, இவை வகைக்கு ஒரு தோலா, கோரைக்கிழங்கு 32 தோலா, வெல்லம் 64 தோலாவைப் பாகு செய்து மற்றவைகளைச் சூர்ணம் செய்து போட்டுக் கிளறி தேன் நெய்விட்டுப் பிசிறி மாத்திரை செய்து சாப்பிட, அக்னிமந்தம் ரத்தத்துடன் கூடிய ஸங்கிரஹக்ரஹணீ, அதிஸாரம், ஜ்வரம், பாண்டு, ஹலீமகம், கிருமிநோய்கள். ரத்தபித்தம், மூலம் இவை நீங்கும்.

✲ **முஸ்தகாதிமோதகம்.** (பை. ர) சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, கொடிவேலிவேர் பட்டை, கிராம்பு, ஜீரகம், கருஞ்சீரகம், ஓமம், குரோசாணிஓமம், சோம்பு, வெற்றிலை, சதகுப்பை, திரிபலை, கொத்துமல்லி விதை, ஏலம், லவங்கப்பட்டை. பச்சிலை, சிறுநாகப்பூ, மூங்கிலுப்பு, வெந்தயம்,

ஜாதிக்காய் வகைக்கு ஒரு தோலா, கோரைக்கிழங்கு 24 தோலா, வெல்லம் 48 தோலா. வெல்லத்தைப் பாகு செய்து மற்றவைகளைச் சூர்ணம் செய்து சாப்பிட, கிரஹணி, அதிஸாரம், அக்னிமந்தம், அருசி, ஆமம், விஷூசி இவைகளைப் போக்கும். தேகத்திற்குப் புஷ்டி, பலம், வர்ணம் அளிக்கும்.

❋ **ஜீரகாதிமோதகம்.** (பை. ர.) ஜீரகம் 32 தோலா, கஞ்சா விதையுடன் 16 தோலா, அயஸ்ஸிந்தூரம், வங்கபஸ்மம், அப்ரகபஸ்மம், சோம்பு, தாளீஸபத்ரி, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கொத்துமல்லிவிதை திரிபலை, ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, கிராம்பு, கல்பாசி, சந்தனம், செஞ்சந்தனம், ஜடாமாஞ்சி, திராக்ஷை, பூலாங் கிழங்கு, பொரித்த வெங்காரம், குந்துருக்கம், அதிமதுரம், மூங்கிலுப்பு, வால்மிளகு, வெட்டிவேர், யானைக் குறுந்தோட்டி, சுக்கு, திப்பிலி, மிளகு, காட்டகத்திப்பூ, வில்வவேர், மருதம்பட்டை, சதகுப்பை, தேவ தாரு, பச்சைக்கர்பூரம், ஞாழல்பூ, ஜீரகம், இலவம்பிசின், கடுகுரோ ஹிணி, தாமரைத்தண்டு இவை வகைக்கு ஒரு தோலா, இவைகளை இடித்துச் சூர்ணம் செய்து சூர்ணத்திற்கு இரண்டு பங்கு வெல்லம் பாகு செய்து நெய் தேன் சேர்த்து மாத்திரை உருட்டிக் கொள்ளவும். குளிர்ந்த ஜலத்துடன் சாப்பிட கிரஹணி, ஆமத்தால் மூடிய பித்தம், அக்னிமந்தம், ரத்தாதிஸாரம், அதிஸாரம், விஷமஜ்வரம், அம்லபித்தம், உதரம், கிர ஹணீ, சூலம், அருசி இவைகள் நீங்கும்.

❋ **பிருஹஜ்ஜீரகாதிமோதகம்.** (பை. ர.) ஜீரகம், கருஞ்சீரகம், கோஷ்டம், சுக்கு, திப்பிலி, மிளகு, திரிபலை, லவங்கப்பட்டை, லவங்கப் பத்திரி, ஏலரிசி, சிறுநாகப்பூ, மூங்கிலுப்பு, கிராம்பு, கல்பாசி, சந்தனம், செஞ்சந்தனம், காகோலீ, க்ஷீரகாகோலீ, (அமுக்கராக் கிழங்கு—சீமை அமுக்கராக் கிழங்கு) ஜாதிக்காய், ஜாதிபத்திரி, அதிமதுரம், சோம்பு, ஜடாமாஞ்சி, கோரைக் கிழங்கு, ஸௌவர்சலைஉப்பு, பூலாங்கிழங்கு, கொத்து மல்லிவிதை, தேவதாளிப்பீர்க்கு, முராமாஞ்சி, திராக்ஷை, நாகணம், சதகுப்பை, பதிமுகம், வெந்தயம், தேவதாரு, வெட்டிவேர், விலாமிச்சை வேர், இந்துப்பு, யானைத்திப்பிலி, பச்சைக்கர்பூரம், ஞாழல்பூ, ஸர்ஜ ரஸம் வகைக்கு ஒரு தோலா, அயஸ்ஸிந்தூரம், அப்ரகபஸ்மம், வங்கபஸ் மம் வகைக்கு 2 தோலா. எல்லாவற்றிற்கும் ஸமம் ஜீரகம் (வறுத்தது) சர்க்கரை 2 பங்கு. தேவையான தேன் நெய் சேர்த்து வடகமாக்கிக் கொள்ளவும். பசுவின் பால் சர்க்கரை சேர்த்துச் சாப்பிடவும். வாத ரோகங்கள், பித்தரோகங்கள் எல்லாவற்றிலும் கொடுக்கவும். அதிஸாரம், ஆமதோஷம், சூலம், மூலம், ஜீர்ணஜ்வரம், ஸததஜ்வரம், விஷமஜ்வரம்,

ஸ்திரீகளுக்கு மாதவிடாய் தடை, கர்ப்பம் ஏற்படாதிருத்தல், ஸூதிகா ரோகம், பிரதரம் இவைகளைப் போக்க வல்லது. உடல் முழுவதும் வாத பித்தங்களால் ஏற்படும் எரிவைப் போக்கும்.

✲ **அக்னிகுமாரமோதகம்.** (பை. ர.) விலாமிச்சைவேர், வெட்டிவேர், கோரைக்கிழங்கு, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறு நாகப்பூ, ஜீரகம், கருஞ்சீரகம், கர்கடசிருங்கி, காய்பல், புஷ்கரமூலம் பூலாங்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, வில்வப்பிஞ்சு, கொத்துமல்லி விதை, ஜாதிக்காய், கிராம்பு, பச்சைக்கர்பூரம், காந்தபஸ்மம், சிலாஜது, மூங்கிலுப்பு, ஏலரிசி, ஜடாமாஞ்சி, சித்தரத்தை, தகரம், பன்றிமோந்தான் கிழங்கு, மஞ்சிட்டி, பேராமுட்டி, அப்ரகபஸ்மம், முராமாஞ்சி, வங்க பஸ்மம், இவை வகைக்கு ஒரு தோலா. வெந்தயம் 32 தோலா, கஞ்சா 16 தோலா, 2 பங்கு சர்க்கரை தேவையான தேன் சேர்த்து வடகம் தயாரித்து குளிர்ந்த ஜலத்துடன் அல்லது ஆட்டுப்பாலுடன் சாப்பிட கிரஹணி, ச்வாஸம், காஸம், ஆமவாதம், அக்னிமந்தம், அஜீரணம் விஷமஜ்வரம், மலக்கட்டு, வயிற்றுப்புசம், சூலம், யகிருத் — ப்லீஹ உதரங்கள், குஷ்டம், கிரஹணீ, உதாவர்த்தம், குல்மம் இவை போகும்.

**சதுர்மூர்த்தி ரஸம்.** ரஸம், கந்தகம், அயஸ் ஸிந்தூரம், வத்ஸ நாபி, கொடிவேலி இலை, திரிபலை, தண்ணீர்விட்டான் கிழங்கு, அரேணுகம், கோரைக் கிழங்கு, ஏலரிசி, கண்டங் திப்பிலி, சிறு நாகப்பூ, திரிகடு, தாம்ர பஸ்மம் இவை சம எடை சேர்த்து அரைத்துக் கொள்ளவும். 4–6 யவ அளவு. கிரஹணி, பாண்டு அதிஸாரம், க்ஷயம், காஸம், பிரமேஹம், விஷம ஜ்வரம் இவை களில் தேனுடன் கொடுக்க நல்லது.

**ஸுவர்ண ரஸ பர்படி.** ரஸம் ஒரு தோலா கல்வத்திலிட்டுக் கால் தோலா தங்க ரேக்கு சேர்த்தரைக்க ஒன்றாகும். அதை வென்னீர் விட்டலம்பி 5 தோலா கந்தகம் சேர்த்தரைத்து இலந் தைக்கரித் தணலில் இருப்புக் கரண்டியிலிட்டு உருக்கி சாணத் தின் மேல் வைக்கப்பட்ட வாழை இலை மீது தடவி மேலும் சாணம் மேலுள்ள வாழையிலையால் அமுக்கவும். பப்படம் போன்று மெல்லியதாக இருக்கும். அதை அரைத்து குந்துமணி அளவில் ஆரம்பித்து தினம் ஒரு குந்துமணி அளவு அதிகரித்து வந்து 7—9 குந்துமணி வரை அதிகமாக்கிப் பிறகு கிரமமாகக் குறைத்து விடவும். இவ்விதம் 14 அல்லது 18 நாட்கள் சாப்பிட கிரஹணீ, க்ஷயம், காஸம், ச்வாஸம்; மேஹம், சூலம், அதிஸாரம், பாண்டு இவை நீங்கும். நல்ல பலம், பசி, வீர்யம் ஜீர்ணசக்தி அளிக்க வல்லது.

**கிரஹணீ கபாட ரஸம். (1)** வெள்ளி பஸ்மம், முத்து பஸ்மம், தங்க பஸ்மம். அயஸ் ஸிந்தூரம் வகைக்கு ஒரு தோலா, கந்தகம் 2 தோலா, ரஸம் 3 தோலா இவைகளை விளா இலை அல்லது பழ ரஸம் விட்டரைத்து மான் கொம்பினுள் (சுரண்டி) வைத்து பாதி கஜபுட மிடவும். பிறகு எடுத்து சிற்றுமுட்டி கஷாயத்தில் 7 நாட்களும், நாயுருவிச் சாற்றில் 3 நாட்களும், வெள்ளை லோத்திரப் பட்டை, அதிவிடயம், கோரைக் கிழங்கு, காட்டகத்திப்பூ, சீந்திற் கொடி இவைகளின் தனித் தனி கஷாயத்தில் 3-3 பாவனையும் செய்து 4 யவ அளவு மாத்திரை செய்து தேனும் மிளகுத் தூளும் சேர்த்துச் சாப்பிடவும். அதிஸாரம். கிரஹணீ இவைகளில் மிக நல்லது.

**கிரஹணீ கபாடம் (2)** ரஸம், கந்தகம், அதிவிடயம், கடுக்காய், அப்ரக பஸ்மம், யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், வெங்காரம், காரிலவம் பிசின், வசம்பு, கஞ்சா இவை வகைக்குச் சமனெடை சேர்த்து எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்து சாப்பிட கிரஹணியில் நல்லது.

✲ **கிரஹணீ கபாடம் (3)** ( *ரஸராஜலக்ஷ்மீ* ) சோழியையும் சேங்கொட்டையையும் சம அளவு சேர்த்து கருவேல முள் சுற்றி லகுபுடமிட்டு எடுத்து அதில் கால் பங்கு ரஸம் சம அளவு வத்ஸநாபி சேர்த்து அரைத்து கஞ்சா கஷாயத்தில் 7 நாள் பாவனை செய்து 3-6 யவ அளவு மாத்திரை செய்து சாப்பிட கிரஹணி நிற்கும்.

✲ **கிரஹணீ கபாடம் (4)** (பை. ர.) லிங்கம், கந்தகம், மூங்கிலுப்பு, அபின், சோழி பஸ்மம் இவைகளைச் சம எடை ஆட்டுப் பால் விட்டரைத்து 2-4 யவ அளவு மாத்திரை செய்து சாப்பிட கிரஹணியும் ரத்தாதிஸாரமும் நிற்கும்.

✲ **கிரஹணீ கபாடம் (5)** (பை. ர) ரஸம், கந்தகம், ஜாதிக்காய், கிராம்பு, இவை வகைக்குச் சம எடை ஸூர்யாவர்த்தத்தின் சாற்றிலும் வில்வ இலைச் சாற்றிலும் சிருங்காடகத்தின் இலைச் சாற்றிலும் அரைத்து வெய்யிலிலுலர்த்தி 4 யவ அளவு வில்வ இலைக் கஷாயம் அனுபானத்துடன் சாப்பிட கிரஹணி பாண்டு அதிஸாரம் வீக்கம் ஜ்வரம் இவைகள் நீங்கும்.

✲ **கிரஹணீ கபாடம் (6)** (பை. ர) வெள்ளைக் குங்கிலியம், கந்தகம், ரஸம் இவைகளைக் கல்வத்திலிட்டு ஸூர்யாவர்த்தத்தின் சாறு, வில்வ இலைச் சாறு, சிருங்காடகத்தின் சாறு இவைகளிலரைத்து 4-6 யவ அளவு தேனில் சாப்பிட கிரஹணி நிற்கும். தயிர் சாதம் பத்தியம்.

✲ **கிரஹணீகபாடம் (7)** (பை. ர.) கந்தகத்தையும் ரஸத்தையும் கஜ்ஜலிசெய்து இஞ்சிச்சாறு விட்டரைத்துக்கொண்டு இதற்கு 2 பங்கு வெட்பாலேப்பட்டைச் சாம்பல் சேர்த்து நன்கு அரைத்துக் கொண்டு 4-8 யவஅளவு ஆட்டுப்பால், அல்லது வெட்பாலேப்பட்டை கஷாயத்துடன் கொடுக்கவும். பசி எற்படும் போது பாசிப்பருப்புக்கஞ்சி, தயிர், குளிர்ந்த ஜலம் இவைகளேக் கொடுக்கலாம். அல்லது இந்த மருந்தையே 4 யவத்தி லிருந்து ஆரம்பித்து தினம் 2 யவமாக அளவை அதிகரிக்கச்செய்து 10 யவ அளவு வரை சாப்பிட்டுப் பின்னர் கிரமமாகக் குறைத்துவர நல்லது. கிரஹணியைப் போக்கும். குடலே மெதுவாக்கி பலம் தரும்.

✲ **கிரஹணீ கபாடம் (8)** (பை. ர.) வெங்காரம், கந்தகம், ரஸம், ஜாதிக்காய், வில்வப்பிஞ்சு அல்லது பழச்சதை, காசுக்கட்டி, ஜீரகம், கழற்சிவிதைப்பருப்பு, அகத்திப்பூ இவைகளே வகைக்குச் சம எடை எடுத்துத் தூள் செய்து வில்வ இலே, பருத்திக்காய், புளியாரை இலே, புளி யாரை வேர், குடுகுடுப்பூண்டு இவைகளின் சாறு விட்டரைத்து 2 யவ அளவு மாத்திரை செய்து 3 நாட்கள் தயிர் தெளிவு அனுபானத்துடன் சாப்பிட கிரஹணி, ஆமசூலம், ஜ்வரம், காஸம், ச்வாஸம், வீக்கம், பிரவாஹிகை இவைகளில் மிக நல்லது. இதைச் சாப்பிடும் போது ரத்தஸ்ராவம் செய்யும் உஷ்ண சிகித்ஸை செய்யக்கூடாது. கத்திரிக்காய், தயிர், மோர் சாப்பிடுவது நல்லது. வாயு மிருந்து காணப்பட்டால் வென்னீர் சாப்பிடுவ தும் வாதஹரதைலங்கள் கொண்டு சமனம் செய்வதும் நல்லது.

✲ **கிரஹணீ கபாடம் (9)** (பை. ர) ரஸம், கந்தகம், யவக்ஷாரம், முன்னே, வசம்பு, அப்ரக பஸ்மம், பொரித்த வெங்காரம், இவைகளேச் சமனெடை சேர்த்து முன்னே இலேச்சாறு, கையாந்தரைச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு இவை விட்டு மூன்று நாள் அரைத்து உருண்டை செய்து இளந் தீயிலிட்டு ½ யாமம் வாட்டி எடுத்து ஆறியதும், முன்னே இலேச்சாறு, கரு வேலம் பட்டைச் சாறு, கஞ்சா கஷாயம் இவை ஒவ்வொன்றிலும். 7 நாள் அரைத்துக்கொள்ளவும். 4-6 யவ அளவு தேனுடன் சாப்பிட கிரஹணி நிற்கும்.

**கிரஹணீ கஜகேஸரீ ரஸர்.** கந்தகம், ரஸம், அப்ரக பஸ்மம், லிங்கம், அயஸ் ஸிந்தூரம், ஜாதிக்காய், வில்வப்பழச் சதை, காரில வம் பிசின், வத்ஸநாபி, அதிவிடயம், சுக்கு, திப்பிலி, மிளகு, காட்டகத்திப்பூ, கஞ்சா (அல்வது பங்க்) கடுக்காய்த் தோல், விளாம்பழச் சதை அல்லது ஓடு, கோரைக் கிழங்கு, ஜீரகம், கொடிவேலி வேர் பட்டை, மாதுளே ஓடு அல்லது விதை,

வெங்காரம் பொரித்தது. வெட்பாலை யரிசி, ஊமத்தை விதை. இவை வகைக்கு ஒரு தோலா, அபின் 6 தோலா, ஊமத்தை இலைச்சாற்றில் 2 நாள் அரைத்து மிளகளவு மாத்திரை செய்து சாப்பிட ரக்த-ஆம-கிரஹணீ, அதிஸாரம், காலரா முதலியவை நிற்கும்.

**ரஸ பர்படி.** ரஸம், கந்தகம் சம எடை சுத்தி செய்ததைக் கல்வத்திலிட்டரைத்து பர்படி முறைப்படி செய்து எடுத்துக் கொள்ளவும். பத்ய உணவுடன் சாப்பிட கிரஹணி நிற்கும்.

**பஞ்சாமிருத பர்படி.** அயஸ் ஸிந்தூரம், அப்ரக பஸ்மம், தாம்ர பஸ்மம், ரஸம் வகைக்கு ஒரு தோலா, கந்தகம் 2 தோலா, ரஸத்தையும் கந்தகத்தையும் கஜ்ஜலி செய்து மற்றவைகளையும் சேர்த்தரைத்து இருப்புக் கரண்டியிலிட்டு தணலில் உருக்கி பசுவின் சாணத்தின் மேல் வைத்துள்ள வாழை இலை மேல் தடவி மேலமுத்த பர்படியாகும். இதை அரைத்து எடுத்துக் கொள்ளவும். கிரஹணீ, க்ஷயம், அதிஸாரம், ஜ்வரம், ஸ்திரீ ரோகங்கள், பாண்டு, இடுவிஷம், அம்லபித்தம், அர்சஸ், அக்னி மந்தம் இவை நீங்கும். பெருங்காயம், இந்துப்பு, ஜீரகம் இவைகளின் சூரணத்தைப் பொதுவாகவும், ஜீரகத் தூளைப் பாண்டுவிலும் இடுவிஷத்திலும் அனுபானமாகக் கொள்ளவும்.

**கனகஸுந்தர ரஸம்.** மிளகு, கந்தகம், லிங்கம், வத்ஸநாபி, திப்பிலி, வெங்காரம், ஊமத்தை விதை இவை வகைக்குச் சம எடை கல்வத்திலிட்டு கஞ்சா கஷாயம் விட்டரைத்து 2 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். கிரஹணீ, ஜ்வரம், அதிஸாரம், அக்னி மந்தம் இவை நீங்கும்.

**சங்கவடி.** புளியம் க்ஷாரம் 4 தோலா, ஐந்து உப்புகளும் சேர்த்து ஒரு பலம், இவைகளை எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்துக் கலக்கிக் கொள்ளவும். இதில் சங்கு 4 தோலா எடையுள்ளதைச் சுட்டுச் சுருக்குக் கொடுக்கவும். சங்கு கரைந்ததும் பெருங்காயம் சுக்கு மிளகு திப்பிலி வகைக்கு ஒரு தோலா, ரஸம் கந்தகம் வத்ஸநாபி வகைக்கு ½ தோலா. இவைகளைச் சேர்த்து அரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். க்ஷயம், கிரஹணீ, சூலம், பரிணாம சூலம் முதலியவை நீங்கும்.

**அக்னிஸூநு ரஸம்.** சோழி பஸ்மம் 1 தோலா, சங்கு பஸ்மம் 2 தோலா, கந்தகம், ரஸம் இரண்டையும் சமஎடை சேர்த்தரைத்த கஜ்ஜலி ஒரு தோலா, மிளகு 3 தோலா, எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து மாத்திரை செய்து கொள்ளவும். அக்னி மந்தத்

தில் நல்லது. நெய்யும் கல்கண்டும் சேர்த்துச் சாப்பிட உடல் இளைப்பு நீங்கும். திப்பிலி சூர்ணம் சேர்த்துச் சாப்பிட கிரஹணீ நீங்கும். மோர் அனுபானத்துடன் சாப்பிட சோஷம், ஜ்வரம், அரோசகம், சூலம், குல்மம், பாண்டு, உதரம், அர்சஸ், கிரஹணீ இவை நீங்கும்.

**அகஸ்திஸூத ராஜ ரஸம்.** ரஸம் ஒரு தோலா, கந்தகம் ஒரு தோலா, லிங்கம் ஒரு தோலா, கருஊமத்தை விதை ஒரு தோலா, அபின் ஒரு தோலா இவைகளை கஞ்சா கஷாயத்திலரைத்து 1-2 யவ அளவு மாத்திரை செய்து சாப்பிட கிரஹணீ நீங்கும். திரிகடு சூர்ணமும் தேனும் அனுபானமாகச் சாப்பிட வாந்தி, சூலம், கபவாத நோய்கள், அக்னி மந்தம், தூக்கமின்மை இவைகளை நீக்கும். நெய்யும் மிளகுத் தூளும் அனுபானமாக்கிக் கொள்ள பிரவாஹிகையையும், ஜீரக-ஜாதிக்காய்த் தூளுடன் சாப்பிட அதிஸாரத்தையும் போக்கும்.

**க்ஷார தாம்ர ரஸம்.** சங்க பஸ்மம், தாம்ர பஸ்மம், சோழி பஸ்மம், அயஸ் ஸிந்தூரம், மண்டூர பஸ்மம், யவக்ஷாரம், பொரித்த வெங்காரம் திரிகடு, இந்துப்பு வகைக்குச் சமனெடை சேர்த்து, கஞ்சா கஷாயம் ஆடாதோடைச் சாறு, இஞ்சிச் சாறு இவை விட்டு அரைத்துக் கடலை யளவு மாத்திரை செய்து கொள்ளவும். ச்வாஸம், காஸம், சளி, நாட்பட்ட ஜ்வரம், அக்னி மந்தம், கிரஹணீ— இவைகளில் 7 நாட்கள் தக்க அனுபானத்துடன் கொடுக்க நல்லது. நாட்பட்ட நோயானால் ஒரு மண்டலம் சாப்பிடலாம்.

❊ **ஹம்ஸ போட்டலீ ரஸம்.** (பை. ர.) சோழி பஸ்மம், சுக்கு, மிளகு, திப்பிலி, பொரித்த வெங்காரம், வத்ஸநாபி, கந்தகம், ரஸம் இவை வகைக்கு ஒரு தோலா எலுமிச்சம் பழச் சாறு விட்டரைத்து 3 யவ அளவு மாத்திரை செய்து இஞ்சிச் சாறும் தேனும் சேர்த்துச் சாப்பிட கிரஹணி நீங்கும். மோரன்னம் உணவாகக் கொள்ளவும்.

❊ **கிரஹணீ கபர்த பொட்டலீ ரஸம்,** (பை. ர.) சோழி பஸ்மம், ரஸம், கந்தகம், அயஸ் ஸிந்தூரம், வெங்காரம் இவைகளை முன்னை இலை அல்லது கஞ்சா கஷாயத்திலரைத்து வில்லை தட்டி மடக்கிவிட்டு சுண்ணம்பும் வெல்லமும் சேர்த்த சீலையிட்டு மணல் உள்ள பானையில் நடுவில் வைத்து ஒரு யாமம் எரித்தெடுக்கவும். 2–4 யவ அளவு சாப்பிடவும். வாத கிரஹணி நீங்கும்.

❊ **அக்னிகுமார ரஸம்** (பை. ர.) ரஸம், கந்தகம், வத்ஸநாபி, திரிகடு, வெங்காரம், அயபஸ்மம், ஓமம், அபின் இவை வகைக்கு ஒரு

தோலா, அப்ரக பஸ்மம் 10 தோலா இவைகளைக் கொடிவேலிவேர் கஷாயத்தில் ஒரு யாமம் அரைத்து மிளகளவு மாத்திரை செய்து சாப்பிடவும். அஜீர்ணம், கிரஹணீ, ஆமதோஷம் இவைகளில் நல்லது.

✲ **ஸங்கிரஹக்ரஹணீகபாடம்.** (பை. ர.) முத்து, தங்கம், ரஸம், கந்தகம், வெங்காரம், அப்ரகபஸ்மம், சோழிபஸ்மம், வச்ஸநாபி இவை வகைக்கு ஒரு தோலா, சங்கபஸ்மம் 8 தோலா எல்லாவற்றையும் கல்வத்தி விட்டு அதிவிடய கஷாயத்தில் அரைத்து உருண்டை செய்து சீலைமண் சுற்றி பானையிலிட்டு வாலுகாயந்திரத்தில் 12 மணி நேரம் எரித்துப் பிறகு ஊமத்தையிலை அல்லது வேர்ச்சாறு, கொடிவேலிவேர்பட்டைக் கஷாயம், நிலைப்பனைக்கிழங்குக் கஷாயம், இவை விட்டரைத்துக் கொள்ளவும். தேனும் மிளகுத்தூளும் கலந்து வாதக்ரஹணியிலும், தேனும் திப்பிலித் தூளும் சேர்த்துப் பித்தக்கிரஹணியிலும், கஞ்சா கஷாயம் அல்லது திரிகடு சூர்ணத்துடன் கபக்கிரஹணியிலும் நெய் சேர்த்துக் கொடுக்கலாம். க்ஷயஜ்வரம், மூலம், அக்னிமந்தம், அதிஸாரம். அருசி, பீநஸம், மேஹம் மூத்ரகிருச்ரம், வாதநோய் இவைகளில் மிகவும் நல்லது.

✲ **கிரஹணீகஜேந்திரவடி.** (பை. ர.) ரஸம், கந்தகம், அயபஸ்மம், சங்கு பஸ்மம், வெங்காரம், பெருங்காயம், பூலாங்கிழங்கு, தாளீஸபத்திரி, கோரைக்கிழங்கு, கொத்துமல்லிவிதை, ஜீரகம், இந்துப்பு. காட்டகத்திப்பூ, அதிவிடயம், சுக்கு, ஒட்டடை, கடுக்காய், சேங்கோட்டை, லவங்கப்பத்திரி, ஜாதிக்காய். கிராம்பு, லவங்கப்பட்டை, ஏலரிசி, வெட்டிவேர், வில்வப் பிஞ்சு, வெந்தயம் இவை வகைக்குச் சம எடை கஞ்சா கஷாயம் விட்டரைத்து மாத்திரை செய்து சாப்பிடவும். கிரஹணி, ஜ்வராதிஸாரம், சூலம், குல்மம், அம்லபித்தம், காமலா, ஹலீமகம், அரிப்பு, குஷ்டம், விஸர்பம், குதமிறக்கம், கிருமி இவைகளைப் போக்கும்.

✲ **கிரஹணீசார்தூலம்.** (பை. ர) ரஸம், கந்தகம், கிராம்பு, வேப்பிலை, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, ஏலரிசி இவை வகைக்கு ஒரு தோலா, தங்கபஸ்மம் வீசம் தோலா. இவைகளை அரைத்து முத்துச்சிப்பியினுள் வைத்து மூடிப் புடமிட்டு 5 குந்துமணி எடை வீதம் சாப்பிட, ஸூதிகா ரோகம், கிரஹணி, அர்சஸ், காஸம், ச்வாஸம், அதிஸாரம், ஸங்கிரஹக்ரஹணி, ஆமசூலம் இவைகளைப் போக்கும். பசி பலம் புஷ்டி தரும்.

✲ **கிரஹணீசார்தூலவடி** (பை ர.) ஜாதிக்காய், கிராம்பு, ஜீரகம், கோஷ்டம், வெங்காரம், கந்தகவெடியுப்பு, லவங்கப்பட்டை, ஏலரிசி, ஊமத்தை விதை, அபின் வகைக்குச் சமஎடை இவைகளை முதியார் கூந்தல் சாறு விட்டரைத்து மாத்திரை செய்து சாப்பிட பலநிறத்தில் பேதியாகும் அதிஸாரம், பிரவாஹிகை, கிரஹணி நீக்கும்.

✲ **வஜ்ரகபாடரஸம்.** (பை. ர.) ரஸம், கந்தகம், அபின், இலவம் பிசின் திரிகடு, திரிபலை, இவை வகைக்குச் சம எடை எடுத்து கஞ்சா கருசலாங்கண்ணிச் சாறுகளில் அரைத்து 3 குந்துமணியளவு மாத்திரை செய்து தேனுடன் சாப்பிட கிரஹணி நீங்கும்.

✲ **மஹாகந்தகம்.** (பை. ர.) கந்தகத்தையும் ரஸத்தையும் வகைக்கு ஒரு தோலா எடுத்துக் கஜ்ஜலி செய்து சிறுதீயில் இலேசாக வாட்டி எடுத்துக்கொள்ளவும். ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, கிராம்பு, வேப்பிலை, நொச்சி இலை, ஏலரிசி இவை வகைக்கு ஒரு தோலா இவைகளுடன் முன் தயாரித்த கஜ்ஜலியையும் சேர்த்தரைத்து முத்துச்சிப்பியிலிட்டுச் சீலைமண் செய்து புடபாகமிடவும். 6 குந்துமணி யளவு சாப்பிட ஜ்வரம் பசியின்மை, கிரஹணி, பிரவாஹிகை, ஸூதிகாரோகங்கள், காஸம், ச்வாஸம், அதிஸாரம், பாலரோகங்கள் இவை நீங்கும். இதில் சிப்பியிலிட்டுப் புடம் போடாமல், கஜ்ஜலியையும் மற்றவைகளையும் சேர்த்தரைத்து உபயோகப்படுத்தலாம். இவ்விதம் தயாரித்ததை **ஸர்வாங்கஸுந்தரரஸம்** என்பர்.

✲ **ஸ்ரீ வைத்யநாதவடிகா.** (பை. ர.) ரஸம் ஒரு தோலா எடுத்து காடியிலும் கொடிவேலிவேர்ப்பட்டை கஷாயத்திலும் திரிபலை கஷாயத்திலும் ஒவ்வொரு யாமம் அரைத்து அலம்பி எடுத்துக் கொண்டு, அரைத் தோலா கந்தகம் சேர்த்துக் கஜ்ஜலி செய்து, கருசலாங்கண்ணிச் சாறு விட்டரைத்துக் கொள்ளவும். பிறகு நொச்சி, பிரமிவழுக்கை, விஷ்ணுக்ராந்தி, வட்டத்திருப்பி, தும்பைப்பூ, கருசலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி, முன்னையிலை, கஞ்சா, கரும்பு இவைகளின் சாற்றில் வகைக்கு ஒரு தோலா சாறு விட்டரைத்துக் கடுகளவு மாத்திரை செய்து கிரஹணி ஆமவாதம், அக்னிமந்தம், ஜ்வரம், பலஹீனம், உதரம், வாதநோய்கள் இவைகளில் தயிர்த் தெளிவுடன் கொடுக்க நல்லது. ஜலமும் மோரும் நிறைய சாப்பிடலாம்.

✲ **கஸர்பணவடிகா.** (பை. ர.) ரஸத்தை செங்கல்தூள் மஞ்சள் ஒட்டடை இவைகளுடன் சேர்த்து அரைத்துச் சுத்திசெய்த பின் ஒரு தோலா எடுத்துச் சம அளவு கந்தகம் சேர்த்துக் கருசலாங்கண்ணிச்சாற்றாலரைத்துக் கொள்ளவும். பிறகு நொச்சி, பிரமிவழுக்கை, பொன்னாங்கண்ணி, தும்பை, நீலப்பூவுள்ள விஷ்ணுக்ராந்தி, கார்போகரிசியிலை, செங்கொடி வேலியிலை இவைகளின் சாறு வகைக்கு ஒவ்வொரு தோலா தனித் தனியாகச் சேர்த்தரைத்துக் கடுகளவு மாத்திரை செய்து கொள்ளவும். 7 மாத்திரை தயிர் தெளிவுடன் கொடுக்க குடல் தோஷம், கிரஹணி, அதிஸாரம் ஜ்வரம் போகும்.

✻ **ரஸாப்பிரவடி** (பை. ர.) ரஸம் ஒரு தோலா, கந்தகம் ஒரு தோலா இரண்டையும் கஜ்ஜலி செய்து கொள்ளவும். அத்துடன் அப்ரக பஸ்மம் 2 தோலா சேர்த்துக் கருசலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி, நொச்சி, கொடிவேலி, தும்பை, பிரமிவழுக்கை, முன்னை, கஞ்சா, வெள்ளைப்பூவுள்ள விஷ்ணுக்ராந்தி - இவைகளின் இலைச்சாறு வகைக்கு ஒரு தோலா விட்டுத் தனித்தனியாக அரைத்துக் காய்ந்தவுடன் மிளகு $\frac{1}{2}$ தோலா, வெங்காரம் $\frac{1}{2}$ தோலா சேர்த்த அரைத்துக் கடலையளவு மாத்திரை உருட்டிக் கொள்ளவும். காஸம், க்ஷயம், ச்வாஸம், வாதகபநோய்கள் ஜ்வரம், அதிஸாரம், நான்காம்முறை ஜ்வரம், கிரஹணி இவைகளில் நல்லது. தயிர்த்தெளிவு அனுபானம், தயிரன்னம் உணவு.

✻ **மஹாப்பிரவடி** (பை. ர.) அப்ரகபஸ்மம், தாம்ரபஸ்மம், அயபஸ்மம், கந்தகம், ரஸம் மனோசிலை, வெங்காரம் திரிபலை வகைக்கு 3 தோலா, கிருஷ்ணவிஷஸர்பவிஷம் $\frac{1}{4}$ தோலா இவைகளைக் கல்வத்திலிட்டு கஞ்சா, கருசலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி, கார்போகரிசியிலை, வில்வஇலை, மலைவேப்பிலை, முன்னை யிலை, ஸமுத்ராப்பச்சையிலை, கொத்துமல்லி, பிரமிவழுக்கை, நொச்சி, ஆவலிலை, ஊமத்தை இலை, வெள்ளைப்பூவுள்ள விஷ்ணுக்ராந்தி, இஞ்சி, தும்பை இலை, ஆடாதோடை இலை, வெற்றிலை இவைகளின் சாறு வகைக்கு 3 தோலா விட்டரைத்துக் கடைசியில் சிறிது திரவம் மீதமிருக்கும்போதே மிளகுத்தூள் 3 தோலா சேர்த்து அரைத்துக் கொள்ளவும். ஜ்வரம், அதிஸாரம், காஸம், ச்வாஸம், க்ஷயம், ஸந்நிபாதஜ்வரம், விஷமஜ்வரம், க்ஷயம், சுக்கிலக்ஷயம், கிரஹணி, ஸூதிகாரோகம், வீக்கம், வலி, ஆமவாதம், அக்னிமந்தம், கபநோய்கள், பீநஸம், வாதகபநோய்கள், இந்திரியங்களுக்கு பீடை தரும் வாதநோய்கள், வாத கப ஆவரணம், உதரம், தொண்டைநோய்கள் - வாதகப ஆவரணம், உதரம், தொண்டை நோய், அஜீரணம், காதுநோய் இவைகளில் நல்லது,

✻ **பீயூஷவல்லீ ரஸம்.** (பை. ர.) ரஸம், கந்தகம், அப்ரகபஸ்மம் வெள்ளி பஸ்மம், அயஸ்ஸிந்தூரம், வெங்காரம், அஞ்சனக்கல், ஸ்வர்ணமாக்ஷிகம், கிராம்பு, சந்தனம், கோரைக்கிழங்கு, வட்டத்திருப்பி, ஜீரகம். கொத்துமல்லிவிதை, மஞ்சிட்டி, அதிவிடயம், லோத்திரப்பட்டை, வெட்பாலைப்பட்டை, வெட்பாலைபரிசி, லவங்கப்பட்டை, ஜாதிக்காய், சுக்கு. வில்வப்பழச்சதை. ஊமத்தைவிதை, மாதுளம்ஓடு, காட்டகத்திப்பூ, கோஷ்டம் இவை வகைக்கு ஒரு தோலா சேர்த்து, கருசலாங்கண்ணிச்சாற்றிலும் ஆட்டுப்பாலிலும் அரைத்துக் கடலையளவு மாத்திரை செய்து கொள்ளவும். சுட்ட வில்வப் பழச்சதையும் வெல்லமும் அனுபானமாகக் கொண்டு இந்த மாத்திரையைச் சாப்பிடவும். கடுமையான ஜ்வரம், அதிஸாரம், ரத்தாதி

ஸாரம், கிரஹணீ, வீக்கம், அர்சஸ், ஆமசூலம், மலக்கட்டு. ஸங்கிரஹ க்ரஹணீ, பிரவாஹிகை, நாவரட்சி, எரிச்சல். உமட்டல், அருசி, வாந்தி, குடல்இறங்குதல், கல்லீரல் பெருக்கம், உதரம், வயிறு உப்புசம், ஸூதிகா ரோகம், பிரதரம், காமலா, பாண்டு, மலடு, பிரமேஹம் இவைகளைப் போக்க வல்லது.

✲ பாநீய பக்த வடி (பை. ர.) அப்ரகபஸ்மம், மண்டூர பஸ்மம், வாய்விளங்கம் இவை வகைக்கு 4 தோலா, செவ்வியம், சுக்கு மிளகு, திப்பிலி, கடுக்காய் தோல், தான்றிக்காய் தோல், நெல்லிமுள்ளி, கருசலாங் கண்ணி, தந்தீமூலம், கோரைக்கிழங்கு, திப்பிலி, கொடிவேலிவேர்பட்டை, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, மானகந்தம் (ஓர் வகைக்கருணைக்கிழங்கு. வங்காளத்தில் ஸத்ராகாசிமான் என்ற பெயரில் கிடைப்பது) முள்ளுக் கத்திரிவேர், செவதைவேர், ஸூர்யகாந்திப்பூ. மூக்கரட்டை வகைக்கு ½ தோலா. இஞ்சிச்சாறு சேர்த்தரைத்து மாத்திரை செய்து கொள்ளவும். அம்லபித்தம், அரோசம், கிரஹணீ, அர்சஸ், காமலை, பகந்தரம், வீக்கம். குல்மம், பரிணமசூலம், அக்னிமந்தம், குஷ்டம், நரை, திரை, ச்வாஸம், காஸம், பாண்டு இவைகளில் நல்லது. ஜலம் விட்ட சாதம், மாம்ஸம், தயிர் காடி, மோர், மீன், புளி, எண்ணெய் இவைகளைச் சேர்த்துக்கொள்ளலாம். எல்லாவித பாலும் இளநீரும் பருப்பு வகையும் வெல்லமும் வில்வப்பழ மும் தள்ளவேண்டும்.

✲ நிருபதிவல்லபரஸம். (பை. ர) ஜாதிக்காய், கிராம்பு, கோரைக் கிழங்கு. லவங்கப்பட்டை, ஏலம், வெங்காரம், பெருங்காயம், ஜீரகம், லவங்க பத்திரி, ஓமம், சுக்கு, இந்துப்பு, அயபஸ்மம், ரஸம், கந்தகம், தாம்ரபஸ்மம், இவை வகைக்கு 4 தோலா, மிளகு 8 தோலா இவைகளை வெள்ளாட்டுப் பால் அல்லது நெல்லிக்காய்ச் சாற்றில் அரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும், தினம் 2 மாத்திரை காலையில் 18 நாட்கள் சாப்பிட வும். அக்னிமந்தம், ஆமதோஷம், காலரா, ப்லீஹம், குல்மம், உதரம், அஷ் டீலை, யகிருத்ரோகம், பாண்டு, காமலை, ஹிருதய சூலம், விலாவலி, முதுகு வலி, இடுப்புவலி, வயிற்றுவலி, வயிறு உப்புசம், சூலம், காஸம், ச்வாஸம் ஆமவாதம், ச்லீபதம், அர்புதம், கலஃண்டம், கண்டமாலை, அம்லபித்தம், கிருத்ரஸீ, கிருமி, குஷ்டம், தத்ரூ, வாதரக்தம், பகந்தரம், உபதம்சம், அதி ஸாரம், கிரஹணீ, அர்சஸ், பிரமேஹம். அச்மரீ, மூத்ரகிருச்ரம், மூத்ரா காதம், ஜ்வரம், சோம்பல், அசதி, தலைசுற்றுதல், எரிச்சல், வித்ரதி, விக்கல், ஜடத்தன்மை, திக்கிப்பேசுதல், வாய்பேச முடியாமை, தொண்டைக்கட்டு, அண்டவிருத்தி விஸர்பம், ஊருஸ்தம்பம், ரத்தபித்தம், குடலிறக்கம், அருசி, காது மூக்கு தொண்டை நோய்கள், பல்நோய்கள், பீநஸம், வீக்கம், சீதபித்தம், ஸ்தாவரஜங்கமவிஷங்கள் இது போன்ற

மற்றும் பல நோய்களைப் போக்க வல்லது. ஆரோக்யப் பாதுகாப்பில் மிகச் சிறந்தது.

❋ **பிருஹந்நிருபதி வல்லப ரஸம்**, (பை. ர.) ரஸம், கந்தகம், அயபஸ்மம், அப்பிரக பஸ்மம், காரீய பஸ்மம், கொடிவேலி வேர் பட்டை, செவதை வேர், பொரித்த வெங்காரம், ஜாதிக்காய், பெருங்காயம், லவங்கப் பட்டை, ஏலம், கோரைக் கிழங்கு, கிராம்பு, லவங்கப்பத்திரி, ஓமம், குரோசாணி ஓமம், சுக்கு இந்துப்பு, மிளகு, வெள்ளி பஸ்மம் வகைக்கு ஒரு தோலா, தங்க பஸ்மம் 2¼ யவம், இவைகளை இஞ்சிச் சாறு நெல்லிக்காய் சாறு இவைகளில் பாவனை செய்யவும். 2—3 யவ அளவு தேனில் கொடுக்க அக்னி மந்தம், அஜீர்ணம், அர்சஸ், கிரஹணி, ஆமாஜீர்ணம் மற்றுமுள்ள வயிற்று நோய்கள் நீங்கும்.

❋ **மஹாராஜ நிருபதிவல்லப ரஸம்** (பை. ர.) காந்த பஸ்மம் 3 தோலா, அப்ரக பஸ்மம், தாமரபஸ்மம், ஸ்வர்ண மாக்ஷிக பஸ்மம், இவை வகைக்கு ஒரு தோலா, வெள்ளி பஸ்மம் 2 தோலா, தங்கபஸ்மம், வெங்காரம், கிராம்பு, யானைத்திப்பிலி, தந்திமூலம், மிளகு, லவங்கப்பத்திரி, ஓமம், வெட்டி வேர், கோரைக்கிழங்கு, சுக்கு, கொத்துமல்லிவிதை, இந்துப்பு, சூடம், வாய்விடங்கம், கொடிவேலிவேர்பட்டை, வத்ஸநாபி, ரஸம், கந்தகம் வகைக்கு ஒரு தோலா, செவதைவேர் 2 தோலா, கிராம்பு 8 தோலா, ஜாதிக்காய், 8 தோலா, ஜாதிபத்திரி 8 தோலா, கந்தகவெடியுப்பு 30½ தோலா, லவிசி 91½ தோலா இவைகளை எல்லாம் ஆட்டுப்பால் விட்டு ஏழுநாள் அரைத்துப் பிறகு புளிமாதுளைச் சாற்றில் ஏழு நாள் அரைத்து 10 யவ அளவில் மாத்திரை செய்து கொள்ளவும். தினம் 2-3 வேளை சாப்பிடவும்.

அக்னிமந்தம், கிரஹணி கிருமி, பாண்டு, ஆமம், வாந்தி, அம்லபித்தம், ஹ்ருதயரோகம், குல்மம், உதரம், ஆநாஹம், பகந்தரம், அர்சஸ், பித்த நோய்கள், சூலம், அஜீர்ணம், விஷ்டம்பம், விஸர்பம், விதாஹம், விலம்பிகா, அலஸகம், பிரமேகம், குஷ்டம், காஸம், சோஷம், வீக்கம், ஜ்வரம், மூத்ர கிருச்ரம் முதலியவை நீங்கும்.

❋ **மஹாராஜ நிருபவல்லப ரஸம்** (பை. ர.) ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், அயக்காந்தபஸ்மம், அப்ரகபஸ்மம், வங்கபஸ்மம், வெள்ளிபஸ்மம், தங்க பஸ்மம், கண்டதிப்பிலி, ஓமம், லவங்கப்பட்டை, தாம்ரபஸ்மம், சுக்கு, வெங்கார பஸ்மம், இந்துப்பு, வெட்டிவேர், கோரைக்கிழங்கு, கொத்துமல்லி விதை, கந்தகம், ரஸம், கர்கடசிருங்கி, சூடம் வகைக்கு ஒரு தோலா, பெருங்காயம் ⅙ தோலா, மிளகு, ⅓ தோலா, ஜாதிபத்திரி, கிராம்பு, லவங்க பத்திரி வகைக்கு ஒரு தோலா, சங்கபஸ்மம், வாய்விளங்கம், ⅓ தோலா,

வத்ஸநாபி $\frac{1}{8}$ தோலா, வலரிசி $6\frac{1}{2}$ தோலா, கந்தகவெடியுப்பு 2 தோலா இவைகளை ஆட்டுப்பால் விட்டரைக்கவும். 4 யவ அளவு தேனுடன் சாப்பிட வயிறு உப்புசத்துடன் கூடிய கிரஹணியைப் போக்கும்.

❋ ஜாதீபலாத்யா வடீ (பை. ர.) ஜாதிக்காய், வெங்காரம், அப்ரக பஸ்மம், ஊமத்தைவிதை சுத்திசெய்தது வகைக்கு ஒரு தோலா, அபின் 2 தோலா, இவைகளை யரைத்து முதியார்கூந்தல் சாறு விட்டரைத்து கடலைபளவு மாத்திரை செய்த தேனுடன் கிரஹணி அதிஸார நோய்களில் கொடுக்க நல்லது.

❋ மஹாஜாதீபலாதி வடீ (பை. ர.) அப்ரகம், ரஸம், கந்தகம் வகைக்கு $1\frac{1}{3}$ தோலா, கஜ்ஜலி செய்த பின் ஜாதிக்காய், இலவம்பிசின், கோரைக்கிழங்கு, வெங்காரம், அதிவிடயம், ஜீரகம், மிளகு இவை வகைக்கு $1\frac{1}{3}$ தோலா, வத்ஸநாபி $\frac{1}{4}$ தோலா, இவைகளை முறையே ஒரு தோலா அளவுள்ள பின்வரும் பச்சிலைகளின் சாறு அல்லது கஷாயத்தால் அரைத்து பாவனை செய்யவும். மாவிலை, மூங்கிலிலை, முதியார்கூந்தல், கருநொச்சி, பங்து, நாவலிலை, முன்னைஇலை, மாதுளைஇலை, பொற்றலைக் கையாந்தரை இலை, வட்டத்திருப்பி இலை, கருசலாங்கண்ணி இலை இப்பச்சிலைச்சாறுகளை விட்டரைத்துப் பின்னர் 6 யவ அளவில் மாத்திரை செய்து சாப்பிடவும். அக்னிமாந்தம், காஸம், அம்லபித்தம், கிரஹணீ, குடல்தோஷம், வீக்கம், அர்சஸ், அதிஸாரம் முதலிய நோய்களில் மிகவும் நல்லது.

❋ வடவா முகரஸம் (பை. ர) ரஸம், கந்தகம், தாம்ரபஸ்மம், அப்ரகபஸ்மம், வெங்காரம், உப்பு, யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், இந்துப்பு, சுக்கு, நாயுருவிஉப்பு, புரசக்ஷாரம், மாவிலங்கைக்ஷாரம், வகைக்குச் சமனெடை எலுமிச்சம்பழச் சாற்றிலும் வெருகன் கிழங்குச் சாற்றிலும் அரைத்து மாத்திரை செய்து சாப்பிட கிரஹணி நிற்கும்.

❋ ரஸபர்படிகா (பை. ர) முன்னைஇலைச்சாற்றிலும் சிற்றாமணக்கிலைச்சாற்றிலும், இஞ்சிச்சாற்றிலும், மணத்தக்காளியிலைச்சாற்றிலும், அரைத்து சுத்தி செய்து வடிகட்டி எடுத்த ரஸம், கருசலாங்கண்ணிச் சாற்றில் சுத்திசெய்த கந்தகம், இவ்விரண்டையும், கஜ்ஜலிசெய்து இரும்புக் கரண்டியிலிட்டு, உருக்கி எண்ணெய்போலானதும் கோமயத்தின் மேல் பரப்பிய வாழையிலைமேல் சாய்த்து விடவும். (பிறகு கரண்டியில் மிகுந்துள்ள ரஸத்தை எடுத்துக் கொள்ளக்கூடாது. அது கடினமாகியிருக்கும்.) மேலும் வாழையிலையைப்பரப்பி சாணத்தை வைக்கவும். பிறகு எடுக்க அதில் மயில் தோகையிலுள்ளது போல தளுக்கு தெரியாது. அதைத் தூள் செய்து ஜீரகத்தூள் 2 யவமும் பெருங்காயம் $\frac{1}{2}$ யவம் இவைகளுடன் சாப்பிடவும். உடன் ஜலம் சாப்பிடக்கூடாது.

இதைத் தினம் ஒரு குந்துமணியளவிலாரம்பித்து 10 குந்துமணிவரை தினம் ஒரு குந்துமணியாக அளவை அதிகரித்துப் பிறகு அதே முறையில் தினம் ஒரு குந்துமணியாகக் குறைத்துச் சாப்பிடுவது (வர்த்தமான முறை)வழக்கம். வெயில், காற்று, கோபம், கவலை, ஆகாரவேளை பிசகுதல், தேகப்பயிற்சி, ஆயாஸம், ஸ்னானம், அதிகப்பேச்சு இவை மிகவும் கெடுதல். சிறிது நெய்யும் ஜீரகமும் கொத்துமல்லியும் இந்துப்பும் சேர்த்து அன்னம் சாப்பிடலாம். முழுப்பயறு, மணத்தக்காளி, இஞ்சி, புடல், புடலிலை இவை நல்லது. ஜலம் அதிகம் சாப்பிடக்கூடாது. வாழைப்பழம், இலை, பூ, கிழங்கு இவை சாப்பிடக்கூடாது. சூடாகச் சாப்பிடக் கூடாது. புளிப்பு, தயிர், கீரை சாப்பிடக்கூடாது. கரும்பு, வெல்லம், கற்கண்டு, சர்க்கரை பாகவிலை பாகற்காய் இவை சேர்க்கக் கூடாது. வயிற்றிற்குச் சற்று தேவை இருக்கும்போதே உணவை நிறுத்த வேண்டும். பசி வந்ததும் சாப்பிட வேண்டும். இது நடுநிசியிலும் செய்யலாம். ஸமஜலம் அல்லது அதிக ஜலம் விட்டுக் காய்ச்சிய பசுவின் பால் நல்லது. உணவு வேளை தாண்டியதால் ஜ்வரமோ பேதியோ ஆனால் வாந்திக்குக் கொடுக்கலாம். இளநீர், பசுவின் பால் சாப்பிடலாம். ஸ்வப்னஸ்கலித மேற்பட்டு பேதி அதிகமானால் பால் சாப்பிட நல்லது. பசி ஏற்படாது அசதி தலைவலி முதலியவை உண்டானாலும் தவறே. பசி ஏற்பட்டு உணவு ஏற்காவிட்டாலும் பசியில்லாமலிருந்தாலும் இதில் தவறுதான். அடிக்கடி பசி ஏற்பட்டதும் பால் சாப்பிடலாம். இவ்விதம் செய்ய மூலம், கிரஹணீ, சூலம், அதிஸாரம், காமாலை, பாண்டு, ப்லீஹை, குல்மம், ஜலோதரம், பஸ்மகம், ஆமவாதம், குஷ்டம், சோதம், அம்லபித்தம் இவை நீங்கும். உடலுக்கு நல்ல வலுவேற்படும்.

✲ **லோஹபர்படீ** (பை. ர) ரஸம் கந்தகம் வகைக்கு ஒரு தோலா, அயஸ்ஸிந்தூரம் ஒரு தோலா, ரஸத்தையும் கந்தகத்தையும் கஜ்ஜலி செய்து பிறகு அயஸ்ஸிந்தூரத்தையும் சேர்த்து அரைத்து ரஸபர்படி போல் பர்படி தயாரித்துக் கொடுக்க நல்லது. கொத்துமல்லிவிதைத்தூள் ஜீரகத்தூள் இவ்விரண்டையும் அனுபானமாக்கிக் கொள்ளவும். 7—14 நாட்கள் வர்த்தமான முறையில் கொடுக்க ஸூதிகாஜ்வரம், கிரஹணீ, ஆமசூலம், அதிஸாரம், பாண்டு, காமலை, கல்லீரல் பெருக்கம், மண்ணீரல் பெருக்கம். அக்னிமந்தம், பஸ்மகம், ஆமவாதம், உதாவர்த்தம் குஷ்டம், முதலிய நோய்கள் தணியும். செஞ்சம்பா அரிசிச் சாதம் சாப்பிடவும் வெயில், காற்று, கவலை, மைதுனம் இவைகளைத் தவிர்க்கவும்.

✲ **ஸ்வர்ணபர்படீ** (பை. ர) ரஸம் 4 தோலா, தங்கபஸ்மம் 1 தோலா ( அல்லது தங்கரேக்கு ஒரு தோலா ) கந்தகம் 4 தோலா இவை

களில் ரஸத்தையும் தங்க (பஸ்ம)த்தையும் ஒன்ருகச் சேர்த்துப் பின் கந்தகம் சேர்த்துக் கஜ்ஜலி செய்து முன்போல பர்படி செய்யவும். ராஜயக்ஷ்மா, சூலம் இவை நீங்கும்.

✲ **பஞ்சாமிருதபர்படி** (பை. ர) கந்தகம் 8 தோலா, ரஸம் 4 தோலா, அயஸ்விந்தூரம் 2 தோலா, அப்ரகபஸ்மம் ஒரு தோலா, தாம்ர பஸ்மம் ½ தோலா. இவைகளில் ரஸத்தையும் கந்தகத்தையும் கஜ்ஜலி செய்து மற்றவைகளையும் சேர்த்து அரைத்து முன்போல பர்படி செய்து கொள்ளவும். 2-4 யவ அளவில் தேனும் நெய்யும் சேர்த்துச் சாப்பிடலாம். அல்லது 7-14 நாட்கள் வர்த்தமான முறையில் சாப்பிடலாம். கிரஹணி. அருசி, அர்சஸ், வாந்தி, அதிஸாரம், ஜ்வரம், ரத்தபித்தம், க்ஷயம், கண்ணோய்கள் இவை நீங்கும்.

✲ **விஜயபர்படி** (பை. ர.) கந்தகத்தைத் தூள் செய்து கருசலாங்கண்ணிச்சாற்றில் 3 அல்லது 7 பாவனை செய்து பின் உருக்கி கருசலாங்கண்ணிச்சாற்றில் சாய்க்கவும். காய்ந்தபின் அந்த கந்தகத்தில் 4 தோலா, ரஸம் 2 தோலா சேர்த்து கஜ்ஜலி செய்து கொள்ளவும். அத்துடன் வெள்ளி பஸ்மம் 1 தோலா, தங்கபஸ்மம் ½ தோலா, வைக்ராந்தபஸ்மம் ¼ தோலா, முத்து பஸ்மம் ¼ தோலா, எல்லாவற்றையும் சேர்த்தரைத்து பர்படி செய்து கொள்ளவும். மயில்தோகை நிறத்திலிருக்கும்.

பர்படி பாகம் மிருது — மத்யம் — கரம் என 3 விதமாகும். மிருதுவும் மத்யமும் ஏற்கத்தக்கது. கரபாகம் விஷம் போன்றது — தள்ளத்தக்கது, கஜ்ஜலியை உருக்கி இலையில் தடவி எடுக்கும் போது ஆறியதும் ஒடியாமலிருந்தால் மிருது பாகம். வெள்ளித்துண்டு போல ஒடிந்தால் மத்யபாகம். சீக்ரமாக ஒடிந்தும், தொட்டால் கரகரப்புடனும் சிவந்துமிருந்தால் கரபாகமாகும். முதல் தினம் காலை சடவுளை பூஜித்து விட்டு 2 யவ அளவு சாப்பிடவேண்டும். பிறகு தினம் 2 யவ அளவு அதிகப்படுத்திவந்து 20 யவ அளவு ஆனபிறகு கிரமமாகக் குறைத்து வரவும். ஆரோச்யம் கிட்டும் வரை இவ்வகையில் 2-3 தடவை சாப்பிடலாம். பர்படிக்குள்ள பத்யங்கள் கவனிக்கப்படவேண்டும். கடுமையான கிரஹணீ, பாண்டு, சூலம், அதிஸாரம், மூலம், க்ஷயம், வீக்கம், காமலை கல்லீரல் வீக்கம், மண்ணீரல் வீக்கம், ஜலோதரம், பரிணும சூலம். அம்லபித்தம், வாதரக்தம், வாந்தி, கிருமி, குஷ்டம். பிரமேஹம், விஷமஜ்வரம் இவை நீங்கும்.

✲ **விஜயபர்படி (2)** (பை. ர) ரஸம் 1 தோலா, கந்தகம் 7 தோலா, வைரபஸ்மம், தங்கபஸ்மம், வெள்ளிபஸ்மம், முத்துபஸ்மம், தாம்ரபஸ்மம், அப்ரகபஸ்மம் இவை வகைக்கு ஒரு தோலா, இதைக்கொண்டு பர்படி

செய்து முன்போல உபயோகிக்க முன் விஜயபர்படியில் கூறியுள்ள நோய்களில் மிகவும் நல்லது.

✲ **ஹிரண்யகர்ப்பபொட்டலீரஸம்** (பை. ர) ரஸம் ஒரு தோலா, தங்கபஸ்மம் 2 தோலா, முத்து பஸ்மம் 4 தோலா, சங்கபஸ்மம் 6 தோலா, கந்தகம் 3 தோலா, சோழிபஸ்மம் 3 தோலா, வெங்காரம் $\frac{1}{4}$ தோலா, இவைகளைச் சேர்த்து எலுமிச்சம்பழச்சாறு விட்டு ஒரு யாமம் அரைத்து வில்லைதட்டிக் காய வைத்து சிறு சராவத்தில் வைத்து வெல்லம் சுண்ணும்பு முதலியவைகளால் நன்கு சீலை மண் செய்து காய்ந்ததும் ஒரு முழ அளவு பூமியில் பள்ளம் தோண்டி, அதில் 30 வராட்டிகளின் நடுவில் இட்டு புடம் போடவும். பிறகு எடுத்தரைத்து 4-8 யவ அளவு தேனும் நெய்யும் 29 மிளகின் தூளும் சேர்த்துச் சாப்பிட அக்னி மந்தம், கிரஹணீ, விஷ ஜ்வரம், மூலம், சூலம், பீநஸம், ச்வாஸம், காஸம், அதிஸாரம், கிரஹணீ, வீக்கம், பாண்டு, யகிருத் ப்லீஹ நோய்கள் இவை நீங்கும்.

✲ **ரஸேந்திரசூர்ணம்** (பை. ர) ரஸஸிந்தூரம் 4 தோலா, மூங்கிலுப்பு, முத்துபஸ்மம், ஸ்வர்ணபஸ்மம் வகைக்கு $\frac{1}{3}$ தோலா, அபின் $\frac{1}{3}$ தோலா (பாலில் அரைத்துக் கரைத்து வடிகட்டிப் பாலுடன் சேர்த்துக் கொள்ளவும்.) இவைகளை நன்கு அரைத்துக் காய்ந்ததும் 4 யவ அளவு பாலுடன் சாப்பிடவும். பசியெடுத்ததும் பாலன்னம் மாத்திரம் சாப்பிடவும். உப்பும் ஜலமும் தள்ளவும். நெய்யில் தயாரித்த லட்டு பசி வந்தால் சாப்பிடலாம். வென்னீரைக் கொண்டு சௌசாதிகளைச் செய்து கொள்ளலாம். ஸ்னானம் செய்யக்கூடாது. உடலைத்துணியைக் கொண்டு போர்த்திக் கொள்ளவும். பர்படிக்குள்ள நியமங்களை அனுஷ்டிக்கவும். கிரஹணி, ரத்தாதிஸாரம், ஸூதிகாநோய், அக்னிமந்தம் இவை நீங்கும். பலம் புஷ்டி தரும்.

✲ **பூர்ணகலாவடீ** (பை. ர) ரஸம், கந்தகம், கோரைக்கிழங்கு, அய பஸ்மம், காட்டகத்திப்பூ, வில்வப்பிஞ்சு, வத்ஸநாபி, வெட்பாலையரிசி, வட்டத்திருப்பி, ஜீரகம், கொத்துமல்லிவிதை, ரஸாஞ்சனம், வெங்காரம், சிலாஜது, ஜாதிக்காய், அப்ரகபஸ்மம் வகைக்கு 3 தோலா, பிரமிவழுக்கை வேர், ஓரிலைவேர், மூவிலைவேர், கண்டங்கத்திரிவேர், முள்ளுக்கத்திரி வேர், நெரிஞ்சில் வேர், சிற்றாமுட்டிவேர், நீர்திப்பிலி, மாதுளைவிதை, சிருங்காடகம், சிறுநாகப்பூ, நாவல்விதை, முன்னையிலை, பொன்னாங்கண்ணி, கருசலாங்கண்ணி இவைகளைத் தயிர் தெளிவு விட்டரைத்து 6-12யவ அளவு மாத்திரை செய்து மோருடன் சாப்பிட கிரஹணீ, சூலம், எரிச்சல், ஜ்வரம், பிரமம், வாந்தி இவை நீங்கும்.

✻ **சம்பூகாதிவடீ** (பை. ர) கிளிஞ்சல் பஸ்மம், இந்துப்பு ஸம அளவு சேர்த்து அரைத்து வைத்துக் கொள்ளவும். தேனுடன் 6-12 யவ அளவு சாப்பிட வாத கிரஹணீ நீங்கும்.

✻ **துக்தவடீ** (பை. ர) லிங்கம் ஒரு தோலா, கிராம்பு, அபின், வத்ஸநாபி, ஜாதிக்காய், ஊமத்தைவிதை இவை வகைக்கு ½ தோலா, கஞ்சா கஷாயம் கொண்டுப் பயறளவு மாத்திரை செய்து கொள்ளவும். வீக்கத்தில் பாலுடனும், கிரஹணியில் கஞ்சா கஷாயத்துடனும் சாப்பிடவும். பாலன்னம் சாப்பிடவும். உப்பும் ஜலமும் நீக்கவும். தாகம் மிகவும் அதிகமாகவிருந்தால் இளநீர் சாப்பிடவும். வீக்கம், அதிஸாரம், ஜ்வரம், கிரஹணீ நீங்கும்.

✻ **துக்தவடீ (2** (பை. ர) வத்ஸநாபி 12 குந்துமணி, அபின் 12 குந்துமணி, காந்தபஸ்மம் 5 குந்துமணி, அப்ரகபஸ்மம், 6 குந்துமணி பால் விட்டரைத்து 2 யவ அளவு மாத்திரைகள் செய்து கொண்டு பாலுடன் காலையில் சாப்பிடவும். வீக்கம், கிரஹணீ, விஷமஜ்வரம், அக்கினி மந்தம், பாண்டு இவை நீங்கும்.

✻ **பஞ்சாமிருதமண்டூரம்** (பை. ர) அயபஸ்மம், தாம்ரபஸ்மம், கந்தகம், அப்ரக பஸ்மம், ரஸம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லி முள்ளி, கோரைக்கிழங்கு, வாய்விளங்கம், கொடிவேலி வேர் பட்டை, நிலவேம்பு, தேவதாரு, மஞ்சள், மரமஞ்சள், புஷ்கரமூலம், ஓமம், ஜீரகம், கருஞ்சீரகம், பூலாங்கிழங்கு, கொத்துமல்லிவிதை, செவ்யம், வகைக்கு ஒரு தோலா, மண்டூரபஸ்மம் 13 தோலா, மண்டூரத்தை 52 தோலா அளவு கோமூத்திரத்தில் கரைத்து அடுப்பிலேற்றிச் சுண்ட வைத்து கோமூத்திரம் சுண்டியதும் மூக்கரட்டைவேர் கஷாயம் 104 தோலா அளவு சேர்த்துச் சுண்டியதும் மற்றதுகளைச் சேர்த்துக் கிளறி இறக்கிக் காய வைத்துக் கொள்ளவும். பிறகு தேனும் நீர்முள்ளிக் கஷாயமும் அனுபானமாகக் கொண்டு சாப்பிட கிரஹணீ, வீக்கம், பாண்டு, காமலை, அக்னிமந்தம், ஜீரண ஜ்வரம், ப்லீஹம், குல்மம், யகிருத்-உதரம், காஸம், ச்வாஸம், பீநஸம் இவை நீங்கும்.

✻ **கடிகாதிபேயா** (பை. ர) சாக்கட்டி 4 தோலா, சர்க்கரை 2 தோலா, கருவேலம்பிசின் 2 தோலா, சோம்பு ஒரு தோலா, லவங்கப் பட்டை ஒரு தோலா இவைகளை இடித்து 32 தோலா ஜலத்தில் இரவு ஊரவைத்து காலையில் வடிகட்டிச் சாப்பிட பிரவாஹிகா கிரஹணீ, ரத்தபித்தம், அம்லபித்தம் முதலியவைகளில் கொடுக்க நல்லது. அம்லபித்தத்தில் கிராம்பும் கொத்துமல்லிவிதையும் சேர்த்தும், ரத்தாதிஸாரத்தில் வில்வப்பழச்சதையும் சேர்த்துச் சாப்பிடவும்.

❋ **அஜாஜ்யாதி சூர்ணம்** (பை. ர) ஜீரகம் 8 தோலா, யவக்ஷாரம் 4 தோலா, கோரைக்கிழங்கு 8 தோலா, அபின் 4 தோலா, எருக்கம் வேர் 16 தோலா, இவைகளின் சூர்ணம் கடுமையான கிரஹணீ, ரத்தாதிஸாரம், ஜ்வராதிஸாரம், விஷூசி இவைகளில் நல்லது.

❋ **சுக்ரம் (சுக்தம்) லகு** (பை. ர) வெல்லம் ஒரு பங்கு, தேன் 2 பங்கு, அன்னக்காடி 4 பங்கு, தயிர்தெளிவு 8 பங்கு இவைகளைச் சேர்த்துப் பானையிலிட்டு மூன்று நாட்கள் நெல் குவியலில் வைத்திருக்க சுக்ரம் தயாராகும்.

❋ **சுக்ரம் (சுக்தம்) பிருஹத்** (பை. ர) அரிசிகழுவிய ஜலம், 64 தோலா, கோதுமை தவிடு ஊரவைத்தெடுத்த புளித்த ஜலம் 192 தோலா, தயிர் 32 தோலா, காடியில்ஊறி எடுத்த முள்ளங்கி 32 தோலா, வெல்லம் 64 தோலா, தோல் நீக்கிய இஞ்சித்துண்டு 64 தோலா. இந்துப்பு 8 தோலா, ஜீரகம் 8 தோலா, திப்பிலி 8 தோலா, மிளகு 8 தோலா, மஞ்சள் 8 தோலா, இவைகளைக் கலந்து பானையிலிட்டு நெற் குவியலில் ஆனி ஆடி ஆவணி புரட்டாசி மாதங்களில் 3 நாட்களும், ஐப்பசி கார்த்திகை மாதங்களில் 4 நாட்களும், பங்குனி சித்திரை வைகாசிகளில் 6 நாட்களும் மார்கழி தை மாசிகளில் 8 நாட்களும் வைத்திருந்து வடிகட்டி அதில் லவங்கப்பட்டை. கிராம்பு, ஏலம், சிறுநாகப்பூ, இவைகளின் தூள் வகைக்கு 2 தோலா, வாஸனைக்குச் சேர்த்து வைத்துக் கொள்ளவும். இதை $\frac{1}{2}$-1 அவுன்ஸ் அளவு சாப்பாட்டிற்குப் பின்னர் சாப்பிட வாயு கபம் இவைகளால் ஏற்படும் வயிற்று நோய்கள் முக்யமாக குல்மம், சூலம், மூலம், உதரம், கிரஹணி இவை நீங்கும்.

❋ **ஆயாம காஞ்சிகம்** (பை. ர) யவையை உமிநீக்கி 14 பங்கு ஜலம் விட்டுக் கொதிக்க வைத்து யவை வெந்ததும் இறக்கிய கஞ்சியின் தெளிவு 256 தோலா, யவஸத்து 256 தோலா, முள்ளங்கி துண்டு துண்டாக நறுக்கியது 256 தோலா, இவைகளைப் பானையிலிட்டு, அதில் $6\frac{1}{4}$ படி ஜலம் விட்டு ஸர்ஜக்ஷாரம் யவக்ஷாரம் கொத்துமல்லி விதை, ஓமம், கந்தகவெடியுப்பு, இந்துப்பு, கரியுப்பு, நெய்யில் பொரித்த பெருங்காயம் டீகாமலி, செவ்யம், வகைக்கு 8 தோலா திப்பிலி, ஜீரகம், கருஞ்சீரகம், கடுகு, கொடிவேலிவேர் பட்டை, இவை வகைக்கு ஒரு தோலா. இவைகளைத்தூள் செய்து போட்டு 15 நாட்கள் வைத்திருந்த பின்னர் எடுத்து உபயோகிக்கவும். சாப்பிட்டதும் உணவை ஜீர்ணம் செய்யும். உதரம், குல்மம், ப்லீஹம். ஹ்ருதயரோகம், உப்புஸம், அரோசகம், அக்னிமந்தம், சூலம், மூலம், பகந்தரம், வாதரோகம், இவைகளைப் போக்கும்.

✲ **அஷ்டபல கிருதம்** (பை. ர) சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய் தோல், தான்றிக்காய்தோல், நெல்லிமுள்ளி இவை எல்லாம் கல்கமாக 8 தோலா, நெய் 64 தோலா சேர்த்துக் காய்ச்சி வடிகட்டி வெல்லம் 8 தோலா சேர்த்துச் சாப்பிட்டுவர கிரஹணியின் முக்ய காரணமான அக்னிமந்தம் குணமாகும்.

✲ **பில்வகர்ப்ப கிருதம்** (பை. ர) துவரம்பருப்பின் கஷாயம் 4 பங்கு, நெய் ஒரு பங்கு வில்வக்காய்ச்சதை $\frac{1}{4}$ பங்கு, இதைக் கொண்டு நெய் காய்ச்சி சாப்பிட கிரஹணி, பாண்டு, காமாலைகள் குணமாகும். தானியங்களுடனும் பிராணிகளின் அங்கங்களுடனும் தயாராகும் நெய்யை ஒரே நாளில் தயாராக்கவேண்டும். நாட்பட்டால் கெடுதி - நாற்றமுண் டாகும்.

✲ **சுண்டீகிருதம்** (பை. ர) தசமூல கஷாயம் 4 பங்கு, நெய் ஒரு பங்கு, சுக்கு கல்கமாக $\frac{1}{4}$ பங்கு சேர்த்துக் காய்ச்சிய நெய், கிரஹணி, வீக் கம், அக்னிமந்தம், அஜீர்ணம் இவைகளைப் போக்கும். தசமூல கஷாய மில்லாமல், தனி நெய்யுடன் சுக்கை கல்கமாக்கி ஜலம் 4 பங்கு சேர்த்துக் காய்ச்சியும் உபயோகப் படுத்தலாம்.

✲ **சித்ரக கிருதம்** (பை. ர) கொடிவேலிவேர்பட்டை கஷாயமும் கல்கமும் சேர்த்துத் தயாரித்தநெய் குல்மம், வீக்கம், உதரம், மண்ணீரல் வீக்கம், சூலம், மூலம் இவைகளைப் போக்கும்.

✲ **சாங்கேரீ கிருதம்** (பை. ர) சுக்கு, கண்டந்திப்பிலி, கொடி வேலிவேர்பட்டை, யானைத்திப்பிலி, நெரிஞ்சிமுள், திப்பிலி, கொத்து மல்லி விதை, வில்வப்பிஞ்சு, வட்டத்திருப்பி, ஓமம், இவை கல்கம் கால் பங்கு, புளியாரையின் சாறு ஒரு பங்கு, தயிர் 4 பங்கு, நெய் ஒரு பங்கு இவைகளைக் கொண்டு தயாரித்த நெய் கபவாத நிலைகளிலுள்ள மூலம், கிரஹணீ, மூத்ரகிருச்சிரம், பிரவாஹிகை, குதப்ரம்சம், வயிற்று உப்புசம், இவைகளைப் போக்கவல்லது.

✲ **மரிசாதி கிருதம்** (பை. ர) மிளகு, கண்டதிப்பிலி, சுக்கு, திப் பிலி, செங்கொட்டை, ஓமம், வாய்விளங்கம், யானைத்திப்பிலி, பெருங் காயம், ஸௌவர்சல உப்பு, கந்தக வெடியுப்பு, இந்துப்பு, கடலுப்பு, யவக்ஷா ரம், கொடிவேலிவேர்பட்டை, வசம்பு, இவை வகைக்கு 2 தோலா கல்க மாக்கிக் கொள்ளவும். நெய் 64 தோலா, தசமூலகஷாயம் 4 பங்கு, பசுவின் பால் 2 பங்கு, இவைகளை கிருதமாக்கிக் கொள்ளவும். அக்னிமந்தம், கிரஹணீ மலக்கட்டு, அஜீர்ணம், பலக்குறைவு, மண்ணீரல் பெருக்கம்,

காஸம், சுவாஸம், க்ஷயம், மூலம், பகந்தரம் கபவாத நோய்கள் இவைகளைப் போக்கவல்லது.

✲ **மஹாஷட்பல கிருதம்** (பை. ர) ஸௌவர்சல உப்பு, சுக்கு, திப்பிலி, கண்டதிப்பிலி, செவ்யம், கொடிவேலிவேர்பட்டை, இந்துப்பு, கொட்டைக்கரந்தை, கந்தகவெடியுப்பு, ஓமம், யவக்ஷாரம், பெருங்காயம். ஜீரகம், வெடியுப்பு, கருஞ்சீரகம், ஆவல்பட்டை, இவைகளை வகைக்கு $\frac{1}{2}$ பலமெடுத்து கல்கம். இஞ்சிச்சாறு, காடி, பால் தயிர்தெளிவு, தசமூல கஷாயம் வகைக்கு ஒருபிரஸ்தம், நெய் ஒருபிரஸ்தம், நெய் தயாரித்துக் கொள்ளவும். அன்னத்துடனே தனித்தோ சாப்பிட கிருமி, மண்ணீரல் பெருக்கம், அஜீர்ணம், ஜ்வரம், குஷ்டம், பிரவாஹிகை, வாதரோகம் கபம், சூலம். அரோசகம், பாண்டு, க்ஷயம், காஸம், பலக்குறைவு, கிரஹணீ இவைகள் நீங்கும்,

✲ **பில்வ தைலம்** (பை. ர) காய்ந்த வில்வபழச்சதை 200 தோலா, தசமூலம் 200 தோலா, இதை $12\frac{1}{2}$படி ஜலத்தில் கால்பாகம் மீதமாகக் கஷாயமிட்டுக் கொள்ளவும். இஞ்சிச்சாறு 64 தோலா, காடி 64 தோலா, நல்லெண்ணெய் 64 தோலா, பசுவின் பால் 64 தோலா, கல்கமாக காட்டகத்திப்பூ, வில்வப்பிஞ்சு, கோஷ்டம், பூலாங் கிழங்கு, சித்தரத்தை, மூக்கரட்டை வேர், சுக்கு, மிளகு, திப்பிலி, கண்டந்திப்பிலி, கொடிவேலிவேர்பட்டை, யானைத்திப்பிலி, தேவதாரு, வசம்பு, கோஷ்டம், இலவம்பிசின், கடுகுரோகிணி, லவங்கபப்த்திரி ஓமம், ஜீவநீயகணம், இவை வகைக்கு 2 தோலா, இவைகளை மிருதுவான தீயில் காய்ச்சி வடிகட்டிய தைலம் அக்னிமந்தம், கிரஹணீ, அதிஸாரம், அரோசகம், ஸங்கிரஹக்ரஹணீ, அர்சஸ். ச்லீபதம் அந்திரவிருத்தி, கபவாதசோதம், ஜ்வரம், காஸம், ச்வாஸம், குல்மம், பாண்டு, மங்குத்துவலி ஸூதிகாவாயு, மூடகர்ப்பம், தலைநோய், ஸ்திரீகள்நோய், மாதவிடாய் சுக்கிலம் சம்பந்தப்பட்ட நோய்கள், இவைகளுக்கு மிகவும் நல்லது.

✲ **கிரஹணீமிஹிர தைலம்** (பை. ர) கொத்துமல்லிவிதை, காட்டகத்திப்பூ, வெள்ளைலோத்திரப்பட்டை, மஞ்சிட்டி, அதிவிடயம், கடுக்காய், விளாமிச்சைவேர், கோரைக்கிழங்கு, வெட்டிவேர், இலவம்பிசின், ரஸாஞ்சனம், வில்வப்பிஞ்சு, நீலோத்பலக் கிழங்கு, லவங்கபத்திரி, சிறுநாகப்பூ, தாமரைகேஸரம், சீந்திற்கொடி, வெட்பாலையரிசி, தினை, பதிமுகம், கடுகுரோகிணி, தகரவிதை, ஜடாமாஞ்சி, கருசலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி, மூக்கரட்டைவேர், மாம்பட்டை, நாவல்பட்டை, வெட்பாலைப் பட்டை, ஓமம், ஜீரகம் இவை வகைக்கு ஒரு தோலா, கல்கமாக்கிக் கொள்ளவும். நல்லெண்ணெய் 128 தோலா, மோர் அல்லது வெட்-

பாலைப்பட்டை கஷாயம், அல்லது கொத்துமல்லிவிதை கஷாயம் 512 தோலா (தோஷநிலைக்கேற்றவாறு சேர்த்துக் கொள்ளவும்) சேர்த்து தைலம் முறைப்படி தயாரிக்கவும். நல்ல ரஸாயனமான தைலமாகும். நரை திரை போக்கும். அதிஸாரம், கிரஹணீ, ஜ்வரம், நாவரட்சி, காஸம், விக்கல், ச்வாஸம், வாந்தி, மயக்கம், சூலம் இவைகளைப் போக்கும். கர்ப்பத்தைக் காப்பாற்றி வளர்க்கும். உடல்பருக்கும். எல்லா நோய்களும் நீங்கும். 5-10 சொட்டு அளவு, புஷ்ய நக்ஷத்ரம் கூடிய ஞாயிற்றுக்கிழமை களில் உபயோகிக்க நல்லது.

✲ **மஹாக்ரஹணீமிஹிர தைலம்** (பை. ர) நல்லெண்ணெய் 128 தோலா, பசுவின் மோர் 512 தோலா, வெட்பாலைப்பட்டை கொத்து மல்லிவிதை வகைக்கு 400 தோலாவை 12½படி ஜலத்திலிட்டுக் கால் பங்கு மீதமாக எடுத்த கஷாயம், கல்கமாக — கொத்துமல்லி விதை காட்டகத்திப்பூ, வெள்ளைலோத்திரப்பட்டை, மஞ்சிட்டி, அதிவிடயம் கடுக்காய், கிராம்பு, வெட்டிவேர் சிருங்காடகம், ரஸாஞ்சனம் சிறுநாகப்பூ, கடுகுரோகிணி, தாமரைகேஸரம், தகரவிதை, நாணல் வேர், சீந்திற்கொடி, வெட்பாலையரிசி, ஞாழல்பூ, பதிமுகம், கருசலாங்கண்ணி, பொன்னாங் கண்ணி, மூக்காட்டைவேர், மாம்பட்டை, நாவல்பட்டை அடப்பம்பட்டை இவை வகைக்கு ஒரு தோலா, இவைகளைத்தைலமாகக் காய்ச்சிக் கொள்ள வும். கிரஹணீ, நரை, திரை, அதிஸாரம், ஜ்வரம், தாகம், ச்வாஸம், காஸம், விக்கல், வாந்தி தலைசுற்றல், கோஷ்டசூலம் இவைகளைப்போக் கும். புஷ்ய நக்ஷத்திரத்தில் சாப்பிட ஆரம்பிக்கவும்.

✲ **தாடிமாதி தைலம்** (பை. ர) மாதுளம்பட்டை, வெட்டிவேர், கொத்துமல்லிவிதை, வெட்பாலைப்பட்டை, இவை வகைக்கு 256 தோலா இவைகளை 12½படி ஜலத்திலிட்டு கால் பங்கு மீதமாகக் கஷாயமாக்கிக் கொள்ளவும். அத்துடன் மோர் 256 தோலா, நல்லெண்ணெய் 256 தோலா, கல்கமாக – திரிகடு, திரிபலை, கோரைக்கிழங்கு, செவ்யம், ஜீரகம், இந்துப்பு, ஏலம், சிறுநாகப்பூ லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சோம்பு, ஜடாமாஞ்சி கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கொத்துமல்லிவிதை ஓமம், குரோசாணிஓமம், வெட்டிவேர், அதிவிடயம், கருசலாங்கண்ணி, சிருங்காடகம், கண்டங்கத்திரி, முள்ளுக்கத்திரி, மாம்பட்டை, நாவல் பட்டை, ஓரிலை, மூவிலை, மஞ்சிட்டி, வெட்பாலையரிசி, தண்ணீர்விட் டான் கிழங்கு, காட்டகத்திப்பூ, வில்வப்பிஞ்சு, இலவம்பிசின், நிலப்பனைக் கிழங்கு. வெட்பாலையரிசி, சிற்றாமுட்டிவேர், நெரிஞ்சில்முள், வெள்ளை லோத்திரப்பட்டை, வட்டத்திருப்பி, கருங்காலி, சீந்திற்கொடி, இலவம் பட்டை, இவை வகைக்கு 2 தோலா அரிசி கழுவியஜலம் விட்டரைத்துக் கொள்ளவும். கிரஹணீ, பிரமேஹம், மூலம் இவைகளைப்போக்கும்.

✻ தக்ராரிஷ்டம் (பை. ர) ஓமம், நெல்விமுள்ளி, கடுக்காய், மிளகு இவை வகைக்கு 12 தோலா, இந்துப்பு, கடல்உப்பு, வெடியுப்பு, கரியுப்பு இவை வகைக்கு 4 தோலா, இவைகளைத்தூள் செய்து 512 தோலா பசுவின் புளித்த மோரில் கலக்கி 3–8 நாள் வைத்திருந்து வடிகட்டி எடுத்துக் கொள்ளவும். வீக்கம், குல்மம், அர்சஸ், கிருமி, மேஹம், உதரம் இவை போகும்.

**க்ரஹணிநோயில் பத்யம் — தள்ளவேண்டியவை—** ரத்தம் வெளியாக்குதல், கண்விழித்தல், அதிகநீர் பருகுதல், ஸ்நானம், காமஸங்கம், மலமூத்திராதிவேகங்களைக் கட்டுப்படுத்துதல், நஸ்யம், அஞ்சனம், ஸ்வேதம், தூமபானம், களைப்பு தரும்வேலை, மாறுபட்ட உணவு, வெயில், கோதுமை அவரை, கட்லை, உளுந்து, யவை, இஞ்சி, நிலக்கொடை, மொச்சை, பசளை, சக்ரவர்த்திக்கீரை மணத்தக்காளி, பூசணி, சுரை, முருங்கை, வெற்றிலை, கரும்பு, இலந்தை, கக்கிரி, பாக்கு, உள்ளிப்பூண்டு, காடிகள், பால், வெல்லம், தயிர் தெளிவு, இளநீர், மூக்கரட்டை, கத்திரி, கீரைகள், பழைய ஜலம், மற்றும் மலத்தை இளக்குபவை, கோமூத்திரம், திராக்ஷை, புளிப்புள்ளவை, ஜீர்ணமாகாதவை இவைகளைத் தள்ள வேண்டும்.

**சேர்த்துக்கொள்ளத்தக்கவை -** தூக்கம், வாந்தியாகுபவை, பட்டினி, நாட்பட்ட அரிசி, பொரிக்கஞ்சி, துவரம்பருப்பு, பயற்றம் பருப்பு இவை வேகவைத்த ஜலம், வெண்ணெய் எடுத்த தயிர், பசு அல்லது ஆட்டின் வெண்ணெய், நல்லெண்ணெய், கள்ளு, தேன், மாதுளை, வாழைப்பூ, வில்வப்பிஞ்சு, புளியாரை, கஞ்சா, விளாம்பழம், வெட்பாலைப்பட்டை, ஓமம், தாமரைக்கிழங்கு, மோர், ஜாதிக்காய், நாவல்பழம், கொத்துமல்லி, பனச்சி, வேப்பம்பூ, சீவல்பட்சி, தித்திரிபட்சி, முயல், மான், சிறுமீன் இவைகளின் மாமிசம், துவர்ப்பு சுவை உள்ளவை இவை நல்லது. தொப்புளுக்கு மேல் இரண்டங்குலத்திலும் முதுகெலும்பின் கீழ் பாகத்திலும் அர்த்த சந்திரன் போன்று சூடு போடுவதும் நல்லது.

கிரஹணி அதிகாரம் முற்றிற்று.

உ

# யோகரத்னாகரம்

## முதல் பகுதி—அகராதி.


| | பக்கம் |
|---|---|
| அகஸ்திஸூதராஜ ரஸம் | 146 |
| அக்னிகுமார மோதகம் | 142 |
| அக்னிகுமார ரஸம் | 63, 90, 146 |
| அக்னிஸூநு ரஸம் | 145 |
| அங்காரக தைலம் | 48 |
| அச்வகந்தாதி தைலம் | 46 |
| அச்வகந்தி பலாலாக்ஷாதி தைலம் | 46 |
| அஜாஜ்யாதி சூர்ணம் | 157 |
| அஞ்சனபைரவ ரஸம் | 66 |
| அஞ்சனம் ஜ்வரத்தில் | 24 |
| அதிஸாரம் | 97 |
| — அபத்தியம் | 124 |
| — அஸாத்தியக் குறிகள் | 98 |
| — ஆமநிலை | 98 |
| — உபத்திரவங்கள் | 98 |
| — குணமடைந்ததன் குறி | 99 |
| — சிகித்ஸை | 99, 100, 114 |
| — பக்வக்குறிகள் | 98 |
| — பூர்வரூபம் | 97 |
| — மரணக்குறிகள் | 99 |
| — ரூபம் | 97 |
| — ஸம்ப்ராப்தி | 97 |
| — ஹிதமானவை | 123 |
| அதிஸாரவாரண ரஸம் | 122 |
| அநந்தாதி சூர்ணம் | 39 |
| அந்தக ஜ்வரம் | 4 |
| — சிகித்ஸை | 27 |
| அந்தர்வேக ஜ்வரம் | 41 |
| அந்யேத்யுஷ்க ஜ்வரம் | 9 |
| — சிகித்ஸை | 34 |
| அபயந்ருஸிம்ஹ ரஸம் | 122 |
| அபயாதிவடீ | 108 |
| அபிந்யாஸஜ்வரம் | 5 |
| — சிகித்ஸை | 31 |
| அபிஷங்க ஜ்வரம் | 7 |
| அபூர்வமாலினீவஸந்தம் | 59 |
| அப்ரவடீ | 119 |
| அம்ருதகலாநிதி | 57 |
| அம்ருதமஞ்சரீ | 63 |
| அம்ருதாதி கிருதம் | 44 |
| அம்ருதார்ணவம் | 119 |
| அம்ருதாரிஷ்டம் | 91 |
| அம்ருதாஷ்டகம் | 21 |
| அம்ருதோருபூகாதி | 27 |
| அரிசி கழுவிய நீர் | 105 |
| அஷ்டகுணமண்டம் | 20 |
| அஷ்டபலகிருதம் | 158 |
| அஷ்டாங்கதூபம் | 38 |
| அஷ்டாங்காவலேஹம் | 23 |
| அஷ்டாதசாங்க கஷாயம் | 25 |
| அஸ்திகத ஜ்வரம் | 92 |
| அஹிபேநாஸவம் | 123 |
| ஆகந்து ஜ்வரம் | 7 |
| — சிகித்ஸை | 32 |
| — பத்தியம் | 95 |
| ஆசுகாரிஸந்நிபாதம் | 6 |
| ஆனந்தபைரவ ரஸம் | 119 |

| | பக்கம் |
|---|---|
| ஆனந்தபைரவ வடீ | 68 |
| ஆமஜ்வரக் குறிகள் | 9 |
| ஆமம் | 1 |
| ஆமாசயகத ஜ்வர சிகித்ஸை | 93 |
| ஆமாதிஸாரம் | 98 |
| ஆயாமகாஞ்சிகம் | 157 |
| ஆரநாளம் | 48 |
| உந்மத்த ரஸம் | 66 |
| ஔஷதம் ஏற்கும் முறை | 17 |
| ,, ஜீர்ணமானதன் குறி | 15 |
| ககநஸௌந்தர ரஸம் | 119 |
| கடிகாதிபேயா | 156 |
| கடீயந்திரகிரஹணீ | 127 |
| கடுகெண்ணெய்-மூர்ச்சனை முறை | 52 |
| கட்பலாதி சூர்ணம் | 40 |
| ,, பாசன கஷாயம் | 18 |
| கட்பலாவலேஹம் | 23 |
| கணாதிலோஹம் | 122 |
| கண்டகுப்ஜம் | 5 |
| — சிகித்ஸை | 29 |
| கதமுராரி | 63 |
| கநகப்ரபா | 118 |
| — மூலாதிவர்த்தி | 107 |
| — ஸௌந்தரம் | 118, 145 |
| கந்தககஜ்ஜலி | 89 |
| கபகேது | 72 |
| க்ரஹணீ | 126 |
| — சிகித்ஸை | 129 |
| ஜ்வரம் | 2 |
| — சிகித்ஸை | 19 |
| பித்தாதிஸார சிகித்ஸை | 108 |
| ப்ரதான ஸந்நிபாத சிகித்ஸை | 26 |
| கபாதிஸாரம் | 97 |
| — சிகித்ஸை | 107 |
| கபித்தாஷ்டகம் | 116 |
| கபோல்பண ஸந்நிபாதம் | 6 |
| கம்பனம் | 6 |
| கர்ணகம் | 5 |

| | பக்கம் |
|---|---|
| கர்ணக சிகித்ஸை | 29 |
| கர்பூர ரஸம் | 122 |
| கலிங்க ஷட்கம் | 105 |
| கலிங்காதி வடீ | 116 |
| கல்பதரு | 83, 89 |
| கல்யாணகாதிலேஹம் | 130 |
| கஸர்பணவடீ | 148 |
| கஸ்தூரிபூஷண ரஸம் | 72 |
| ,, பைரவம் | 71 |
| காச்மர்யாதி கஷாயம் | 18 |
| காமேச்வர மோதகம் | 139 |
| காய்ப்பல் | 18 |
| காருண்யஸாகர ரஸம் | 120 |
| கிரந்திகாதி கஷாயம் | 27 |
| கிரஹணீ | 125 |
| — அபத்யம் | 161 |
| — ஆமம் | 127 |
| — சிகித்ஸை | 127, 129 |
| — பக்வம் | 127 |
| — பத்தியம் | 161 |
| — மோர் உபயோகித்தல் | 129 |
| கஜகேஸரீ | 144 |
| கஜேந்திரவடீ | 147 |
| கபர்தபொட்டலீ ரஸம் | 146 |
| கபாட ரஸம் | 143, 144 |
| சார்தூலம் | 137, 147 |
| மிஹிரதைலம் | 159 |
| கிராதாதி கஷாயம் | 17 |
| ,, தைலம் | 51 |
| கிருதங்கள் கொடுக்க வேண்டிய நிலை | 44 |
| — ஜ்வரத்தில் | 44 |
| — பாகமுறை | 45 |
| — மூர்ச்சனை முறை | 44 |
| கிருஷ்ணாதிகணம் | 51 |
| குடஜபுடபாகம் | 108 |
| குடஜரஸக்ரியை | 106 |
| குடஜாத்யரிஷ்டம் | 122 |
| குடஜாவலேஹம் | 114, 115 |

| | பக்கம் |
|---|---|
| குடஜாஷ்டகம் | 115 |
| குடூச்யாதி கிருதம் | 46 |
| ,, பாசன கஷாயம் | 17 |
| குதப்ரம்சம் | 106 |
| குரண்டகாதிலேஹம் | 43 |
| குலவதூ ரஸம் | 66 |
| கூஷ்மாண்ட குடகல்யாணகம் | 138 |
| கொம்பரக்கு திரவம் எடுக்கும் முறை | 47 |
| கோரோசனாதி சூர்ணம் | 38 |
| க்ஷாரதாம்ர ரஸம் | 146 |
| க்ஷீரஷட்பலகிருதம் | 45 |
| க்ஷௌத்ராதி கஷாயம் | 37 |
| சக்ராஹ்வாதி கஷாயம் | 37 |
| சக்ரிகா ரஸம் | 67 |
| சக்ரீ ரஸம் | 67 |
| சங்கவடீ | 145 |
| சங்கோதர ரஸம் | 117 |
| சண்டேச்வர ரஸம் | 65 |
| சதுர்த்தக ஜ்வரம் | 9 |
| — சிகித்ஸை | 34 |
| சதுர்மூர்த்தி ரஸம் | 142 |
| சந்தனபலாலாக்ஷாதி தைலம் | 48 |
| சந்தனாதிலோஹம் | 85 |
| சந்திரகலா ரஸம் | 60 |
| சந்திரசேகர ரஸம் | 57 |
| சந்திரபிரபாவடீ | 118 |
| சம்பூகாதி சூர்ணம் | 156 |
| சவ்யாதி சூர்ணம் | 129 |
| சாங்கேர்யாதி கிருதம் | 158 |
| சாதுர்த்திக ஜ்வரம் | 9 |
| — சிகித்ஸை | 34 |
| சாதுர்த்திகாரி ரஸம் | 79 |
| சாதுர்பத்ர கஷாயம் | 133 |
| சாதுர்பத்ராவலேஹம் | 20 |
| சாலிபர்ண்யாதி கஷாயம் | 18, 133 |
| சித்தப்பிரம ஸந்நிபாதம் | 4 |
| — சிகித்ஸை | 28 |

| | பக்கம் |
|---|---|
| சித்ரககிருதம் | 158 |
| சித்ரகாதிவடீ | 129 |
| சிந்தாமணி | 69, 78, 121 |
| சிருங்கியாதி கஷாயம் | 32, 37 |
| சிலேஷ்மகாலாநலம் | 73 |
| சைலேந்திரம் | 88 |
| சீதபஞ்சீ | 60, 74, 77 |
| சீதபேதி | 99 |
| சீதஹாரி | 74 |
| சீதாங்க ஸந்நிபாதம் | 4 |
| — சிகித்ஸை | 28 |
| சீதாங்குசம் | 55,74 |
| சீதாரி | 74, 80, 82 |
| சுக்தம் | 50, 157 |
| — பிருஹத் | 157 |
| — லகு | 157 |
| சுக்ரகதஸ்வரம் | 92 |
| சுக்ரம் | 157 |
| சுண்டியாதி கஷாயம் | 129 |
| சுண்டீகிருதம் | 128, 158 |
| சோகாதிஸாரம் | 98 |
| — சிகித்ஸை | 110 |
| சோபாதிஸார சிகித்ஸை | 110 |
| ஸ்ரீராம ரஸம் | 62 |
| ஸ்ரீ வைத்யநாத | 148 |
| ஜயந்தீவடீ | 64 |
| ஜயமங்களம் | 82 |
| ஜயா வடீ | 64 |
| ஜலதோஷம் ஏற்படாதிருக்க | 94 |
| ஜலமஞ்சரீ | 57 |
| ஜாதீபலஸிந்தூரம் | 122 |
| ஜாதீபலாதி சூர்ணம் | 117, 132 |
| வடீ | 117, 152 |
| ஜிஹ்வகஸந்நிபாதம் | 5 |
| — சிகித்ஸை | 31 |
| ஜிஹ்வாலேபம் | 24 |
| ஜீரகாதி சூர்ணம் | 137 |
| மோதகம் | 141 |
| ஜீர்ண ஜ்வரஹரம் | 60 |

| | பக்கம் |
|---|---|
| ஜீர்ண ஜ்வராங்குசம் | 54 |
| ஜீவநாநந்தாப்ரம் | 85 |
| ஜ்வரம் | 1 |
| அபத்தியம் | 94 |
| அஸாத்திய நிலை | 6 |
| ஆகந்து | 7 |
| உபத்ரவங்கள் | 9 |
| தாது பாகம் | 6 |
| நிராம நிலை | 10 |
| பச்யமான நிலை | 10 |
| பத்திய உணவு | 16 |
| பத்தியம் | 94 |
| பாசன சிகித்ஸை | 17 |
| பூர்வரூபம் | 2 |
| பொதுக் குறிகள் | 2 |
| பொது சிகித்ஸை | 10, 20 |
| மலபாகம் | 6 |
| விட்டதன் குறி | 10 |
| ஸம்ப்ராப்தி | 1 |
| ஸாத்யநிலை | 6 |
| ஜ்வரகாலகேது | 80 |
| குஞ்சர பாரீந்த்ர ரஸம் | 82 |
| கேஸரீ | 65, 73 |
| க்னீவடீ | 55 |
| சூலஹரம் | 82 |
| தூமகேது | 62 |
| நாகமயூர சூர்ணம் | 43 |
| பைரவ சூர்ணம் | 42 |
| பைரவ தைலம் | 52 |
| மாதங்ககேஸரீ | 73 |
| முராரி | 57, 58, 73 |
| வித்ராவணம் | 88 |
| ஸிம்ஹரஸம் | 63 |
| ஹரீவடி | 63 |
| ஜ்வராங்குசம் | 75 |
| ஜ்வராசனி | 81 |
| ஜ்வராதிஸாரம் | 99 |
| —சிகித்ஸை | 111 |
| ஜ்வராந்தக லோஹம் பிருஹத் | 87 |

| | பக்கம் |
|---|---|
| ஜ்வராந்தகம் | 81 |
| ஜ்வராரி | 74, 81 |
| ஜ்வரார்யப்ரம் | 85 |
| தக்ரஹரீதகி | 130 |
| தக்ராரிஷ்டம் | 161 |
| தசமூல குடம் | 138 |
| தசமூல ஷட்பலகிருதம் | 46 |
| தசமூலாத்யஷ்டாதசாங்கம் | 26 |
| தண்டுலோதகம் | 105 |
| தந்த்ரா | 12 |
| தந்திரிகஸந்நிபாதம் | 5 |
| —சிகித்ஸை | 29 |
| தருணஜ்வரம் | 54 |
| அபத்தியம் | 95 |
| பத்தியம் | 94 |
| தருணஜ்வராரி | 61 |
| தாடிம புடபாகம் | 116 |
| தாடிமாதி தைலம் | 160 |
| தாடிமாவலேஹம் | 114 |
| தாடிமாஷ்டகம் | 116 |
| தாதுகதஜ்வரம் | 92 |
| —சிகித்ஸை | 92 |
| தாத்ரியாதி சூர்ணம் | 37 |
| தாந்யகாதி கஷாயம் | 132 |
| தாந்யகாதிசூர்ணம் | 38 |
| தாந்யசதுஷ்கம் | 101 |
| பஞ்சகம் | 101 |
| தார்வ்யாதிகஷாயம் | 26, 37 |
| தாளாங்கரஸம் | 83 |
| தாளீஸாதிசூரணம் | 39, 137 |
| வடீ | 137 |
| திக்தகாதி கஷாயம் | 133 |
| திராக்ஷாதி கஷாயம் | 18 |
| திராக்ஷாதி சூர்ணம் | 39 |
| திராக்ஷாஸவம் | 132 |
| திரிதோஷநீஹார்யஸௌர்யரஸம் | 70 |
| திரிதோஷாதிஸாரம் | 97 |
| திரிநேத்ரரஸம் | 90 |
| திரிபலாதிமோதகம் | 18 |

| | பக்கம் |
|---|---|
| திரிபலா பிப்பலீ | 39 |
| திரிபுர பைரவம் | 62, 90 |
| திரிபுராரி | 80 |
| திரிபுவன கீர்த்தி | 55 |
| திரியாஹிகாரி | 79 |
| திரியூஷணுதி கிருதம் | 110 |
| திருதீயக ஜ்வரம் | 9 |
| — சிகித்ஸை | 31 |
| திரைலோக்ய சிந்தாமணி | 84 |
| டம்பரம் | 56 |
| தாபஹரம் | 56 |
| ஸுந்தரம் | 68 |
| துக்தவடீ | 156 |
| துராலபாதி கஷாயம் | 18 |
| துர்ஜலஜேதாரஸம் | 94 |
| ஜ்வரம் | 93 |
| துவாத்ரிம்சதங்ககஷாயம் | 24 |
| தைலங்கள் ஜ்வரத்தில் | 46 |
| தைலபாகம் மூர்ச்சனைமுறை | 46 |
| நவஜ்வர முராரி | 58 |
| ஜ்வரஹர வடீ | 61 |
| ஜ்வராங்குசம் | 62 |
| ஜ்வராரி | 61 |
| ஜ்வரேபஸிம்ஹரஸம் | 61 |
| ஜ்வரேபாங்குசம் | 53 |
| நஸ்ய பைரவரஸம் | 66 |
| நஸ்யம் ஜ்வரத்தில் | 23 |
| நாகராதி சூர்ணம் | 128 |
| நாட்பட்ட ஜ்வரத்தில் ஹித மானவை | 95 |
| நாராயண சூர்ணம் | 107 |
| ஜ்வராங்குசம் | 54 |
| நிதிக்திகாதி கஷாயம் | 36 |
| நிம்பாதி சூர்ணம் | 42 |
| நிருபதிவல்லபம் | 151 |
| நிஷ்டீவனம் ஜ்வரத்தில் | 23 |
| பக்வாதீஸார சிகித்ஸை | 102 |
| பஞ்சதிக்த கஷாயம் | 26 |
| க்ருதம் | 44 |
| பஞ்சபத்ர கஷாயம் | 21 |
| பஞ்சமுஷ்டீகயூஷம் | 25 |
| பஞ்சமூலாதிகிருதம் | 128 |
| பஞ்சவக்த்ரரஸம் | 59 |
| பஞ்சஸாரம் | 35 |
| பஞ்சாநநஜ்வராங்குசம் | 73 |
| பஞ்சாநநம் | 73, 74 |
| பஞ்சாமிருதபர்படீ | 145, 154 |
| பஞ்சாமிருத மண்டூரம் | 156 |
| பஞ்சாமிருதரஸம் | 54 |
| படோலாதி கஷாயம் | 21, 94 |
| பத்மகாதி தைலம் | 50 |
| புப்பூலாத்யரிஷ்டம் | 123 |
| பயாதிஸார சிகித்ஸை | 110 |
| பர்ண கண்டேச்வரரஸம் | 74 |
| பர்படாதி கஷாயம் | 19 |
| பர்படீ செய்முறை | 64, 154 |
| பர்படீ ரஸம் | 84 |
| பலாச்வகந்தாதி தைலம் | 46 |
| பல்லாதகாதி சூர்ணம் | 116 |
| பல்லாதக க்ஷாரம் | 129 |
| பஸ்மேச்வரரஸம் | 90 |
| பஹிர்வேகஜ்வரம் | 42 |
| பாகங்கள் | 53 |
| பாசன கஷாயங்கள் | 17 |
| பாசனம் | 11, 23 |
| பாடவரஸம் | 71 |
| பாடாதி சூர்ணம் | 133 |
| பாநீயபக்தவடீ | 150 |
| பாநுசூடாமணி | 78 |
| பார்ங்க்யாதி கஷாயம் | 36 |
| சூர்ணம் | 38 |
| பிச்சாபஸ்தி | 105 |
| பித்தகப ஜ்வரக் குறிகள் | 3 |
| சிகித்ஸை | 21 |
| பித்தக்ரஹணீ | 126 |
| —சிகித்ஸை | 128 |
| பித்தஜ்வரக் குறிகள் | 2 |
| —சிகித்ஸை | 18 |

பக்கம்

பித்தாதிஸாரம் 97
—சிகித்ஸை 104
பித்தோல்பண ஸந்நிபாதம் 6
பிப்பலீபாகம் 53
பிப்பல்யாதி கிருதம் 45
பிப்பல்யாதி சூர்ணம் 60
பிரசண்டேச்வர ரஸம் 62
பிரசேதனவடி 28
பிரதாபதபனம் 70
பிரதாபமார்த்தண்டரஸம் 64
பிரலாபக ஜ்வரம் 5
—சிகித்ஸை 31
பிரவாஹிகா 99
—குணமடைந்ததன் குறிகள் 99
—சிகித்ஸை 110
பிராகிருத ஜ்வரம் 41
பிராணேச்வர ரஸம் 120
பிராம்ஹீவடீ 76
பிரும்மரந்திர ரஸம் 67
பிருஹத் அங்காரகதைலம் 48
கட்வரதைலம் 51
கநகஸுந்தரரஸம் 121
கஸ்தூரிபைரவம் 72
சூடாமணி 77
ஜீரகாதி மோதகம் 141
ஜ்வரசூடாமணி 78
ஜ்வராங்குசம் 75
நாயிகாசூர்ணம் 136
நிருபதிவல்லபரஸம் 151
பிப்பல்யாதி தைலம் 51
மேதீமோதகம் 140
லவங்காதிசூர்ணம் 135
லாக்ஷாதிதைலம் 47, 49
பில்வகர்ப்ப கிருதம் 158
பில்வதைலம் 159
பில்வாதி கிருதம் 131
யோகம் 132
பீஜபூராதி பாசனம் 19
பீயூஷவல்லி 149

பக்கம்

புக்நநேத்ர ஸந்நிபாதம் 5
—சிகித்ஸை 30
புரீஷக்ஷயத்தில் சிகித்ஸை 111
புவனேச்வரரஸம் 127
புனர்னவாதி கஷாயம் 133
பூதரயந்திரம் 68
பூநிம்பாதி கணம் 81
கஷாயம் 28
சூர்ணம் 128
பூர்ணகலாவடீ 155
சந்த்ரோதயம் 121
பொரிக்கஞ்சி 22
மஜ்ஜகத ஜ்வரம் 92
மதநமோதகம் 139
கங்காதரசூர்ணம் 134
மத்யம கஸ்தூரிபைரவம் 72
ஜ்வரத்தில் பத்தியம் 95
நாயிகாசூர்ணம் 136
லாக்ஷாதிதைலம் 50
மந்தரஜ்வரம் 93
—சிகித்ஸை 93
மரிசாதி கிருதம் 158
சூர்ணம் 18
மருந்துகளின் அளவு 15
மஹா கநகஸுந்தரம் 115, 119
கந்தகம் 148
கபகேது 72
கிராதாதிதைலம் 52
குடஜாவலேஹம் 115
க்ரஹணீமிஹிரதைலம் 159
சந்திரகலாரஸம் 83
ஜாதீபலாதி வடீ 152
ஜ்வராங்குசம் 55, 76
தாளீஸாதி சூர்ணம் 131
ப்ர வடீ 149
ராஜநிருபதிவல்லபம் 151
ராஜநிருபவல்லபம் 151
ராஜவடீ 84
லவங்காதிசூர்ணம் 135

| | பக்கம் |
|---|---|
| மஹாலாக்ஷாதி தைலம் | 50 |
| ஷட்குண தக்ரதைலம் | 50 |
| ஷட்பலகிருதம் | 45 |
| மாம்ஸகதஜ்வரம் | 92 |
| மார்க்கண்டேய சூர்ணம் | 137 |
| மாஹேச்வர தூபம் | 38 |
| மித்யாவிஹாரம் | 1 |
| மித்யாஹாரம் | 1 |
| மிருகமதாஸவம் | 91 |
| மிருதஸஞ்சீவனரஸம் | 69, 117, 120 |
| மிருதஸஞ்சீவனீ வடீ | 60, 90, 119 |
| ஸுரா | 91 |
| மிருதோத்தாபனம் | 68 |
| மிருத்யுஞ்சயரஸம் | 57, 59 |
| முக்தாபஞ்சாமிருதரஸம் | 54 |
| முத்ரோத்காடனரஸம் | 74 |
| முஸ்தாதி கஷாயம் | 108 |
| மோதகம் | 140 |
| மேகநாதரஸம் | 80 |
| மேதீ மோதகம் | 139 |
| மேதோகதஜ்வரம் | 92 |
| மோஹாந்தஸூர்யரஸம் | 66 |
| யவானிகாதி கஷாயம் | 133 |
| ரக்தகத ஜ்வரம் | 92 |
| ஷ்டீவிஸந்நிபாதம் | 5 |
| —சிகித்ஸை | 30 |
| ரக்தாதிஸாரம் | 98 |
| —சிகித்ஸை | 101 |
| ரத்நகிரி ரஸம் | 64, 76 |
| ரத்நபிரபா | 77 |
| ரவிஸுந்தரஜ்வராங்குசம் | 76 |
| ரஸகதஜ்வரம் | 92 |
| ரஸபர்படீ | 89, 145, 152 |
| ரஸராஜரஸம் | 58, 74 |
| ரஸராஜேந்திரம் | 70 |
| ரஸாஞ்சநாதி சூர்ணம் | 133 |
| ரஸாப்பிரவடி | 149 |
| ரஸேந்திரசூர்ணம் | 155 |
| ரஸோனகல்கம் | 37 |

| | பக்கம் |
|---|---|
| ராஸ்நாதி கஷாயம் | 27 |
| சூர்ணம் | 129 |
| ருக்தாஹஜ்வரம் | 4 |
| —சிகித்ஸை | 27 |
| லகுகங்காதர சூர்ணம் | 102 |
| மாலினீவஸந்தம் | 58 |
| லாக்ஷாதிதைலம் | 47 |
| லாயிசூரணம் | 117 |
| ஸுதர்சனசூர்ணம் | 40 |
| லக்ஷ்மீவிலாஸம் | 88 |
| லங்கனம் | 10, 22 |
| லசுநாதிகஷாயம் | 27 |
| லவங்காதிசூர்ணம் | 42 |
| லாக்ஷாதி தைலம் | 49 |
| லாஜமண்டம் | 22 |
| லேஹங்கள்-ஜ்வரத்தில் | 23 |
| லோகநாதரஸம் | 121 |
| லோஹபர்படீ | 153 |
| லோஹாஸவம் | 91 |
| வஜ்ரகவாடரஸம் | 148 |
| வடவாமுகரஸம் | 152 |
| வயிற்றுக்கடுப்பு | 99 |
| வர்த்தமானபிப்பலி | 35 |
| வஸந்தமாலதீ | 58 |
| ராஜம் | 58 |
| வாத கப ஜ்வரம் | 3 |
| சிகித்ஸை | 21 |
| கபாதிஸார சிகித்ஸை | 100 |
| க்ரஹணீ | 125 |
| —சிகித்ஸை | 127 |
| ஜ்வரம் | 2 |
| —சிகித்ஸை | 17 |
| பஞ்சனம் | 60 |
| பித்தஜ்வரம் | 2 |
| —சிகித்ஸை | 21 |
| பித்தாதிஸார சிகித்ஸை | 100 |
| பித்தாந்தகம் | 81 |
| ப்ரதான ஸந்நிபாத சிகித்ஸை | 26 |

| | பக்கம் |
|---|---|
| வாதாதிஸாரம் | 96 |
| —சிகித்ஸை | 103 |
| வாதோல்பண ஸந்நிபாதம் | 6 |
| வாந்தி அதிஸார சிகித்ஸை | 109 |
| வாலுகாஸ்வேதம் | 23 |
| வாஸாதிக்ருதம் | 46 |
| விக்ரமகேஸரீ | 79 |
| விச்வதாபஹர ரஸம் | 56 |
| விச்வேச்வரம் | 79 |
| விஜயாபர்படீ | 154 |
| வியாதிகஜகேஸரீ | 58 |
| வியோஷாதி சூர்ணம் | 112, 131 |
| விருத்தகங்காதரசூர்ணம் | 103,131 |
| விருத்தஹிங்குலேச்வரம் | 60 |
| விஷமஜ்வராக்னி | 77 |
| விஷமஜ்வரம் | 7 |
| சிகித்ஸை | 33 |
| பத்யம் | 96 |
| ஸ்வரூபம் | 8 |
| ஜ்வராந்தகலோஹம் | 85, 86 |
| விஸ்பாரகம் | 6 |
| வென்னீர் | 14 |
| வேதாள ரஸம் | 67 |
| வைக்ருத ஜ்வரம் | 41 |
| வைத்யனுதவடி | 67, 148 |
| ஷடங்க கிருதம் | 122 |
| ஷடங்கயூஷம் | 99 |
| ஷடாநநரஸம் | 83 |
| ஷட் கட்வரதைலம் | 47 |
| சரணதைலம் | 48 |
| தக்ரதைலம் | 47 |
| பலகிருதம் | 45 |
| ஸங்கிரஹக்ரஹணீ | 126 |
| ஸங்கிரஹகிரஹணீகபாடரஸம் | 147 |
| ஸததஜ்வரம் | 8 |
| சிகித்ஸை | 34 |
| ஸந்ததஜ்வரம் | 8 |
| சிகித்ஸை | 34 |
| ஸந்திகஜ்வரம் | 4 |

| | பக்கம் |
|---|---|
| ஸந்திகஜ்வர சிகித்ஸை | 27 |
| ஸந்நிபாதக்ரஹணீ | 126 |
| ஸந்நிபாதஜ்வரம் | 3 |
| குறிகள் | 3 |
| கஷாயங்கள் | 25 |
| சிகித்ஸை | 22 |
| பத்தியம் | 95 |
| ஸந்நிபாத பைரவரஸம் | 55, 69 |
| (லகு) | 56 |
| ஸௌர்யம் | 70 |
| ஸந்நிபாதாதிஸார சிகித்ஸை | 108 |
| ஸப்தமுஷ்டிகயூஷம் | 24 |
| ஸம்சமன மருந்துகள் | 17 |
| ஸர்வகந்தம் | 33 |
| ஜ்வரஹரலோஹம் | 86, 87 |
| ,, (பிருஹத்) | 87 |
| ஜ்வராங்குசம் | 75 |
| ஸர்வதோபத்ர ரஸம் | 84 |
| ஸர்வாங்கஸுந்தரம் | 61, 148 |
| ஸிதோபலாதி சூர்ணம் | 39 |
| ஸித்தப்பிராணேச்வரரஸம் | 118 |
| ஸித்தார்த்தாதி பிரலேபம் | 25 |
| ஸுதர்சன சூரணம் | 40, 41 |
| ஸூசிகாபரணம் | 71 |
| ஸுவர்ணரஸ பர்படீ | 142 |
| ஸேவந்திபாகம் | 53 |
| ஸௌபாக்யவடீ | 66 |
| ஸ்வச்சந்தபைரவரஸம் | 61, 80 |
| ஸ்வர்ண பர்படீ | 153 |
| மாலினீவஸந்தம் | 58 |
| வஸந்தமாலதீ | 58 |
| ஸ்வல்பகங்காதர சூர்ணம் | 134 |
| நாயிகாசூர்ணம் | 136 |
| லவங்காதிசூர்ணம் | 134 |
| ஸ்வேதசைத்யாரி | 71 |
| ஹம்ஸபோட்டலீரஸம் | 146 |
| ஹிங்குலேச்வரரஸம் | 60 |
| ஹிமாம்ச்வாதிசூர்ணம் | 133 |
| ஹிரண்யகர்ப்ப போட்டலீ ரஸம் | 155 |

# யோகரத்னுகரம்.

## அர்சோரோகம்

### நிதானம்

அரி (எதிரி) போல முளைத்த முளைகள் மனிதனை உடனிருந்தே உபத்ரவப்படுத்துவதாலும் குத வழியைத் தடுத்து வேதனையை ஏற்படுத்துவதாலும் அர்சஸ் எனப் பெயர் ஏற்பட்டது. வாதார்சஸ், பித்தார்சஸ், கபார்சஸ், ஸந்நிபாதார்சஸ், ரக்தார்சஸ், ஸஹஜ (பிறவியிலேயே ஏற்பட்ட) அர்சஸ் என ஆறு வகைப்படும். குதவாயின் கடைசி மூன்று மடிப்புகளில் இது ஏற்படுகின்றது. வாத பித்த கபங்கள் சீர்கேடடைந்து குதவழியிலுள்ள தோல், தசை, மேதஸ் இவைகளைக் கெடுத்து பல உருவங்களில் மாம்ஸ முளைகளை ஏற்படுத்துகின்றன.

**காரணம்:** துவர்ப்பு, காரம், கசப்பு, வரட்சி, குளிர்ச்சி மிக்க உணவு, லகுபாகமடையும் உணவு, அளவில் மிகக் குறைந்த உணவு, கடும் மத்யம், அதிமைதுனம், அதிகப்பட்டினி, சீததேசத்தில் சீதகாலத்தில் அதிகவாஸம், அதிகத் தேகப் பயிற்சி, மனவருத்தம், கடுங்காற்றிலும் வெயிலிலும் அடிபடுதல் இவை வாத அர்சஸ்ஸிற்குக் காரணமாகின்றன.

காரம், புளிப்பு, உப்பு, சூடு மிக்க உணவு அதிகம் ஸேவித்தல், கடும் தேகப்பயிற்சி, நெருப்பு புகை, வெயில் வெளிச்சம் இவைகளை அதிகமாகக் கொள்ளுதல், உஷ்ண தேச - கால வாஸம், கோபம், மத்ய ஸேவை, அஸூயை, மனப்பான்மை மிகுந்திருத்தல், காரம், சூடு மிகுந்த பான - உணவுகள் இவை பித்த பிரதானமான அர்சஸிற்குக் காரணமாகின்றன.

இனிப்பு, நெய்ப்பு, குளிர்ச்சி, உப்பு புளிப்பு, குருத்தன்மை மிகுந்த உணவு. தேகப்பயிற்சியின்மை, பகல் தூக்கம், படுக்கையிலும் ஆஸனத்திலும் அதிக விருப்பத்துடன் சோம்பிக் காலம் கழித்தல், கீழ்காற்றில் ஸஞ்சரித்தல், குளிர்ந்த தேசமும் காலமும், கவலையற்ற தன்மை இவை கபப்பிரதானமான அர்சஸிற்குக் காரணமாகின்றன.

இவைகளிலேயே இரண்டு மூன்று தோஷங்கள் கெடுவதற்குக் காரணமானவைகளைச் சேர்ந்து ஸேவிக்கும் போது ஸம்ஸர்க்க (இரண்டு தோஷச் சேர்க்கை) த்தாலும் ஸந்நிபாத (மூன்றுதோஷச்சேர்க்கையாலும்) அர்சஸ் உண்டாகிறது. [1]

**பூர்வரூபம்:** மலக்கட்டு. அங்க பலவீனம், வயிற்றுப் பொறுமல், இளைப்பு, ஏப்பமிகுதி, துடைவலுவிழத்தல், பலக்குறைவு, கிரஹணியோ, பாண்டுவோ, உதரமோ ஏற்பட்டிருப்பதாக ஒரு ஸந்தேகம் இவை முன்னறிவிக்கும் குறிகளாகும்.

**குறிகள் — வாதார்சஸ்:** வாதம் மிகுதியால் ஏற்படும் முளைகள் காய்ந்து வரண்டு எரிச்சலுடன் காணும். வாடிக் கருத்தும் சிவந்தும் உணர்ச்சியற்று மறத்தும், தடித்தும், கடினமாயும் பிசிபிசிப்பற்று சொரசொரப்புடனும் காணும். முளைகளில் ஒன்றுக்கொன்று உருவில் வேற்றுமையுடனிருக்கும். நுனி வளைந்து கூராக வாய்வெடித்து இருக்கும். கோவை ஈச்சை பேரீச்சை பருத்தி இவைகளின் காய்போலும், கடுகுபோலும், கதம்ப (அடப்பம்) புஷ்பம் போலும் இருக்கும். தலை, விலா, தோள், இடுப்பு, துடை, கவிட்டி இவைகளில் கடுப்புவலி அதிகமாக இருக்கும். தும்மல், ஏப்பம், மலக்கட்டு, மார்பிடிப்பு, அருசி, இருமல், ச்வாஸம், அக்னிமந்தம், காது இரைச்சல், தலைசுற்றல் இவைகள் ஏற்படும். வாதார்சஸால் உபத்திரவப்படுபவனுக்கு முடிச்சு முடிச்சாகவும் கொஞ்சம் கொஞ்சமாகவும் சத்தத்துடனும் முக்கலுடனும் வலி நுரை சீதத்துடனும் கெட்டியான மலம் வெளியாகும். தோல், நகம், மலம், மூத்திரம் கண், வாய் இவைகளில் கருமை காணும். இதன் உபத்திரவமாக

---

1. **இந்நோய் ஏற்பட முக்ய காரணங்கள்.** மத்யம் நிறைய சாப்பிடுவது, குந்தி உட்காருவது, மேடுபள்ள முள்ள கடினமான ஆஸனத்திலும் வெறிபிடித்த யானை குதிரை முதலிய வாஹனங்களிலும் உட்காருவது, ஒட்டகை ஏறுவது, அதிகமைதுனம், எனிமா கொடுக்கும் போது அதன் யந்திரத்தைச் சரியாக வைத்துக் கொள்ளாமை, இவைகளால் குத மடிப்புகளில் ஏற்படும் புண், உடை புல் பூண்டு முதலியவை குதமடிப்புகளில் உராய்வது, கீழ்வாயு - மூத்திரம் - மலம் இவைகளின் வேகத்தை (அது உண்டாகாத போதே) முக்கி முக்கி வெளிப்படுத்துதல், வந்த வேகத்தை அடக்குதல், ஸ்திரீகளுக்கு கர்பஸ்ராவம் போன்ற கர்ப்பபீடைகள், பிரஸவத்தில் ஏற்படும் கோளாறுகள், இவைகளால் அபான வாயுவின் வேகம் தடைப்பட்டு சீர் கெட்டு மலத்தை இருக்கி குதமடிப்புகளில் அழுத்தம் அதிகமாகி இந்த நோயை உத்பத்தி செய்கின்றது.

இவை சுஷ்கமென்றும் ஆர்த்ரமென்றும் இரண்டுவகை. வாதார்சஸும் கபார்சஸும் சுஷ்கார்சஸ். இவைகளில் கசிவு அதிகமில்லை. ரத்தார்சஸும் பித்தார்சஸும் ஆர்த்ரம், இதில் கசிவு மிகுதி. — சரகர்.

குல்மம், மண்ணீரல் பெருக்கம், உதரம், அஷ்டீலை நோய்கள் ஏற்படலாம்.

**பித்தார்சஸ்.** பித்தம் மிகுந்திருப்பதால் ஏற்படும் அர்சஸில் முளைகள் வாய் நீலமாகவும் சிவந்தும் மஞ்சளாகவும் வெளுத்தும் காணும். மெல்லிய ரத்தக் கசிவும் நாற்றமும் ஏற்படும். முளைகள் மெல்லியதாகவும் மெதுவாகவும் தளர்ந்தும் காணும். கிளி மூக்கு, கல்லீரல், அட்டையின் வாய் போன்று அமைந்திருக்கும். எரிச்சல், பாகம், ஜ்வரம், வியர்வை, தாகம், மூர்ச்சை, பரபரப்பு, மயக்கம் இவை காணும். ஆவியுடன் திரவமாகவும் நீலமாகவும் மஞ்சளாகவும் சிவந்தும் உஷ்ணமாக ஜீர்ணமாகாத மலம் வெளியாகும். யவை போன்று முளைகளின் நடுபாகம் பருத்துக் காணும். தோல் நகம் முதலியவை மஞ்சளாகவும் சிவந்தும் காணப்படும்.

**கபார்சஸ்:—** கபம் மிகுதியால் ஏற்படும் அர்சஸில் முளைகள் அடிபருத்தும் தடித்தும் வலி மந்தமாகவும் வெளுத்தும் உயர்ந்தும் அகன்றும் நெய்ப்புடனும் உருண்டை வடிவுடனும் கனத்துடனும் திடமாகக் காணும். பிசுபிசுப்பும் வழவழப்பும் அரிப்பும் காரணமாக விரல்களால் நெரடும் போது இதமாக இருக்கும். மூங்கில் குருத்து, பலாக் கொட்டை, மாட்டின் மடிக்காம்பு போன்ற உருவத்திலிருக்கும் கவுட்டியில் புடைப்பு, குதவாய், பஸ்தி, தொப்புள் இவைகளை உள்ளிழுப்பது போன்ற உணர்ச்சி காஸம், ச்வாஸம். உமட்டல், வாயில் ஜலம் ஊறுதல், அருசி, பீனசம், மூத்ரகிருச்சிரம், தலைகனம், குளிர்ஜ்வரம், நபும்ஸகத் தன்மை, அக்னிமந்தம், வாந்தி, அஜீர்ணம் இவை உபத்திரவமாக ஏற்படலாம். கொழுப்பு, கபம் மிகுதியான மலம் முக்கி வெளியாகும். முளைகளில் வெடிப்போ கசிவோ ஏற்படாது. தோல்கள் முதலியவை வெளுத்துக் காணும்.

**ஸந்நிபாதார்சஸ் – ஸஹஜார்சஸ்**[1] மூன்று தோஷங்களாலும் ஏற்படுவதிலும் பிறவியிலேயே ஏற்படுவதிலும் மூன்று தோஷங்களின் லக்ஷணம் காணப்படும்.

---

1. **ஸஹஜார்சஸ் — லக்ஷணம்.** மிகவும் கஷ்டப்பட்டு பார்க்கத் தக்கவைகளாயும் வெளுத்தும், தொட்டால் கரகரப்புடனும், உள்பக்கம் முகமுள்ளதாயும் காணும். இந்நோயாளி மிகவும் இளைத்தும் கம்மின பேச்சுடன், பசி குன்றியிருப்பான், சுக்கிலம் க்ஷீணித்து உடல் முழுதும் பச்சை நரம்போடியிருப்பான். குழந்தைகள் ஏற்படாது. கோபம் மிகுதியாகக் காணும். உடைந்த வெங்கலம் போன்று பேசுவான். தலை கண் காது மூக்கு இவைகளில் அடிக்கடி நோய்கள் ஏற்படும். ஹிருதயத்தில் கபலேபம் ஏற்பட்டு நோய் உண்டாதம்,
— பாவப்ரகாசம்,

**ரக்தார்சஸ்: —** ரத்தமும் கெடுவதை முக்ய காரணமாகக் கொண்டு ஏற்படும் அர்சஸில் முளைகள் பித்தார்சஸின் லக்ஷணங் களுடன் காணப்படுகின்றன. ஆலம்விழுது, குந்துமணி, பவழம் போன்ற நிறத்திலும் உருவத்திலும் ஏற்படுகின்றன. மிகவும் உஷ்ணத்துடன் இறுகிய மலம் போகும் போது உடன் ரத்தம் மிகுந்த அளவில் வெளியாகி, ரத்த க்ஷயத்தால் உடல் தவளை போன்று வெளுத்து நிறம் பலம் உத்ஸாஹம் காந்தி இந்திரியங்களின் வலு மிகவும் குறைந்து விடும். மலமும் கருத்து இறுகி வரண்டு கெட்டியாய் வெளியாகும். கீழ்வாயு சரியாக பிரிந்து வெளியாகாது.

ரத்தார்சஸில் ரத்தம் மெல்லியதாகவும் சிகப்பாகவும் நுரை யுடனும் வெளிப்பட்டு இடுப்பு துடை ஆஸனவாய் இவைகளில் வலியும் துர்பலமும் ஏற்பட்டிருந்தாலும் இந்த நோய் வரண்ட உணவுப் பொருள்களை அதிகம் ஏற்பதால் உண்டாகியிருந் தாலும் இதில் வாதத்தின் சேர்க்கை மிகுந்துள்ளதை அறிய முடியும்.

மலம் தளர்ந்து வெண்மை கலந்த மஞ்சள் நிறத்தில் பிசிப் புடன் கனமாக குளிர்ச்சியுடன் வெளியாகி, ரத்தமும் நூல் நூலாக உரைந்து பிசிப்புடன் வெளியாகியும், குதமும் பிசிபிசிப் புடன் மறத்து காணப்பட்டாலும் அங்கு கபத்தின்சேர்க்கை மிகுந்துள்ளதை அறிய முடியும்.[1]

அர்சஸ் நோயில் பொதுவாக பிராணன் முதலிய ஐந்து வாயுக்களும் பித்தமும் கபமும் சேர்ந்தே கோபமடைவதன் காரணமாக கஷ்டமளிப்பதாயும் பல உபத்ரவங்களை உண்டு பண்ணுவதாயும் சரீரத்தின் எல்லா பாகங்களையும் பீடிக்க வல்ல தாயும் சிகித்ஸைக்கு மிகவும் கஷ்டப்பட்டு உட்படுபவையாயு மிருக்கும். ஆனால் முளைகள் வெளிமடிப்பில் மாத்திரம் ஏற் பட்டும் ஏதாவது ஒரு தோஷத்தின் சீர்கேட்டை முக்யமாகக் கொண்டு ஏற்படுவதாயும் நாட்படாததாயும் உள்ள அர்சஸ் எளிதில் சிகித்ஸைக்கு வசப்படும். இருமடிப்புகளில் தொடர் புள்ளதும் இரு தோஷங்கள் கெடுவதால் ஏற்படுவதும் ஒரு வருஷத்திற்கு மேற்பட்டதுமானது சிகித்ஸைக்கு மிகவும்

---

1. ரத்தார்சஸில் ரத்தம் மிகுதியாக வெளிப்பட்டால், தலையில் கொதிப்பு, கண் இருளுதல், பொட்டையாகுதல், அதிமந்தம், திமிரம் என்ற கண்ணோய்கள், தாது க்ஷயம், ஆக்ஷேபகம், பக்ஷவாதம், ஏகாங்கவாதம், நாவரட்சி, எரிச்சல், விக்கல், காஸம், சுவாஸம், பாண்டுரோகம் இவைகளை ஏற்படுத்தி உடலை அழிக்கும். — ஸுச்ருதர்.

கஷ்டப்பட்டே ஸாத்யமாகும். உள் தசை வளையத்தில் ஏற்பட்டதும் மூன்று தோஷங்களும் மிகுந்து ஏற்பட்டதுமான முளைகள் அஸாத்யமானவையே, இவை காலத்தைக் கடத்த ஆயுளை வளர்க்கும் பல்வேறு வழிகளைக் கையாண்டு தள்ள வேண்டியவையே.

கை - கால், முகம், தொப்புள் ஆஸனவாய், விருஷணங்கள் இவைகளில் வீக்கம், மார்பு விலாப்புறங்களில் வலி ஏற்பட்டால் அஸாத்யமே. மார்பு விலாப்புறவலி, மயக்கம், வாந்தி உடல்வலி, ஜ்வரம், நாவரட்சி, குதம் வெந்துபோதல், இவை நோயாளியைக் கொல்லக் கூடியவை. நாவரட்சி, ருசியின்மை, வயிற்றுவலியுடன் ரத்தம் மிகவும் அதிகமாக வெளியாகியும் வீக்கமும் அதிஸாரமும் ஏற்பட்டால் நோயாளி குலைந்து விடுவான்.

இந்த முளை ஆண்குறி, மூக்கு, தொப்புள் முதலிய இடங்களிலும் மண்ணுண்ணிப் பாம்புபோல் பிசுபிசுப்புடன் மெதுவாக ஏற்படலாம்.

**சர்மகீலம்:** – வியானவாயு கபத்தைக் காயவைத்துத் தோலின் அடியில் முளைபோன்று தடித்த கரகரப்பான முளையை ஏற்படுத்தும். இதைச் சர்மகீலம் என்பர். இதில் வாயு மிகுந்திருந்தால் குத்துவலியும் கரகரப்பும் பித்தம் மிகுந்திருந்தால் கருஞ்சிவப்பு நிறமும், கபம் மிகுந்திருந்தால் பிசு பிசுப்பும் முடிச்சுடன் தோலின் நிறத்திலேயே இருப்பதும் அடையாளமாகும்.

## சிகித்ஸை

வாதத்தால் ஏற்பட்டதில் ஸ்னேஹம் ஸ்வேதமும் பித்தத்தில் விரேசனமும் கபத்தில் வமனமும் மற்ற தோஷாநுஸாரியான சிகித்ஸைகளும் தோஷக்கலப்பில் கலப்பிற்கேற்ப சிகித்ஸையும் ரத்தார்சஸ்ஸில் பித்தத்திற்கான சிகித்ஸையும் செய்ய வேண்டும். மூலம் அதிஸாரம் கிரஹணீ இவை ஒன்றுக்கொன்று காரணமாகும், இவை அக்னி மந்தத்தால் ஏற்படுபவை. அக்னி நன்கு பாதுகாக்கப்பட்டால் இவை ஏற்படுவதில்லை, அதனல் அக்னி (பசி - ஜீர்ணசக்தியை) சரியாகக் காப்பாற்ற வேண்டும்.

அர்சஸின் சிகித்ஸை நான்கு வகைப்படும். மருந்துகளைச் சாப்பிடுவது, க்ஷாரங்களைமேல் பூசித்தீய்ப்பது, சஸ்திரங்களால்

அறுத்து முளேயை அகற்றுவது. நெருப்பால் சுட்டுத் தீய்ப்பது இவை நான்கும் சிகித்ஸையாகும்.

✲ (பை. ர.) வாயுவை அனுலோமப்படுத்தவும் அக்னி பலத்தை அதிகப்படுத்த உதவும் ஔஷதங்கள் அனுபானங்கள் இவைகளேச் சாப்பிட வேண்டும். சுஷ்கமான நோயில் தீக்ஷணமான மேல்பூச்சுக்களும் ரத்தக் கசிவுள்ள நோய்களில் ரத்த பித்த சிகித்ஸையும் செய்ய வேண்டும்.

**திலாதிமோதகம்:** — எள்ளு, சுத்திசெய்த சேங்கொட்டை, கடுக்காய், வெல்லம் இவை வகைக்குச் சமனெடை சேர்த்து இடித்து வடகங்களாகச் செய்து சாப்பிட அர்சஸ், ச்வாஸம் - காஸம், மண்ணீரல் வீக்கம், பாண்டு, ஜ்வரம் நீங்கும்.

**மரிசாதி மோதகம்** — மிளகு 2 பங்கு, சுக்கு 4 பங்கு, கொடிவேலிவேர்பட்டை 6 பங்கு, காட்டுக்கருணேக் கிழங்கு 8 பங்கு, வெல்லம் 20 பங்கு இவைகளே இடித்து மோதகங்களாகச் செய்து சாப்பிட நல்லது.

**பிராணத மோதகம்** — தாளீஸபத்திரி, கொடிவேலி வேர் பட்டை, மிளகு, சவ்யம் இவை வகைக்கு 1 தோலா, திப்பிலி 2 தோலா, கண்டந்திப்பிலி 2 தோலா, சுக்கு 3 தோலா, ஏலம் லவங்கப்பட்டை, லவங்கபத்திரி, சிறுநாகப்பூ வகைக்குக் கால் தோலா, வெல்லம் 36 தோலா இவைகளே முறைப்படி வடகங்களாகச் செய்து சாப்பிட காஸம் ச்வாஸம் அக்னிமந்தம் அர்சஸ் ப்லீஹம் ப்ரமேஹம் நீங்கும்.

[ பைஷஜ்யரத்னுவளியில் இந்த யோகத்தில் சில மாறுதல்கள் காணப்படுகின்றன, சுக்கு 3 தோலா, மிளகு 4 தோலா, திப்பிலி 2 தோலா, சவ்யம் ஒரு தோலா, தாளீஸபத்திரி ஒரு தோலா, சிறுநாகப்பூ ½ தோலா, கண்டதிப்பிலி 2 தோலா, லவங்கப்பத்திரி ⅛ தோலா. ஏலம் ¼ தோலா லவங்கப்பட்டை ¼ தோலா தாமரைக் கிழங்கு ¼ தோலா, பழைய வெல்லம் 30 தோலா இவைகளே வடகங்களாகச் செய்து சாப்பாட்டிற்கு முன்னும் பின்னும் வியாதிபலத்தை அனுஸரித்துச் சாப்பிட வேண்டும், மாத்திரையின் அளவு ½ தோலா, வாதகபப் பிரதானமாயின் மத்யமும் வாதப்பிரதானமாயின் சூப்பும் கபப்பிரதானமாயின் பயற்றங்கஞ்சியும் பித்தப்பிரதானமாயின் பாலும் குளிர்ந்த ஜலமும் அனுபானமாக சாப்பிடலாம். எல்லா மூல நோய்களும் பானாத்யயம், மூத்திரகிருச்சிரம், வாதரோகம், தொண்டைப் பிடிப்பு, விஷமஜ்வரம், அக்னிமந்தம், பாண்டு, கிருமிஹிருத்ரோகம், குல்மம், சூலம், ச்வாஸகாஸம் இவை நீங்கும். மலக்கட்டிருந்தால் சுக்கிற்குப் பதில் கடுக்காய் தோல் சேர்க்கலாம். பித்தார்சஸிலும்

அம்ல பித்தமிருந்தாலும் வெல்லத்திற்குப் பதில் மற்ற சரக்குகளின் சூர்ண அளவிற்கு 4 பங்கு சர்க்கரை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அஷ்டாங்க ஹிருதயத்தில் இதுவே தாளீஸாதி வடி என்ற பெயரில் வழங்கப்படுகின்றது. அதில் யோகரத்னாகரயோகமே விலாமிச்சை வேர் ¼ தோலா அதிகமும் வெல்லம் 2 பங்கும் சேர்த்துத் தயாரிக்கப்பட்டுள்ளது. பித்தப்ரதான நிலையில் வெல்லத்திற்குப் பதில் 4 பங்கு சர்க்கரையும் மலபந்தத்தில் சுக்கிற்குப் பதில் கடுக்காயும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ]

**காங்காயனவடி** — கடுக்காய் தோல் 20 தோலா, மிளகு ஜீரகம் திப்பிலி இவை வகைக்கு 4 தோலா, கண்டந்திப்பிலி 8 தோலா, சவ்யம் 12 தோலா, கொடிவேலி வேர்பட்டை 16 தோலா, சுக்கு 20 தோலா, சுத்தி செய்த சேங்கொட்டை 32 தோலா, காட்டுக்கருணைக்கிழங்கு 64 தோலா, யவக்ஷாரம் 8 தோலா, வெல்லம் 378 தோலா இவைகளை வடகமாகச் செய்து கொண்டு சாப்பிட்டு வர க்ஷார சிகித்ஸை, அக்னி சிகித்ஸை சஸ்திர சிகித்ஸை செய்தும் குணமேற்படாதவிடங்களில் இது நல்லது.

**ஸூரணாதி மோதகம்.** கொடிவேலிவேர் பட்டை 4 தோலா, காட்டுக்கருணைக்கிழங்கு 8 தோலா, சுக்கு 2 தோலா, மிளகு ½ தோலா, சுத்திசெய்த சேங்கொட்டை கண்டந்திப்பிலி வாய் விளங்கம் கடுக்காய்தோல், தான்றிக்காய் தோல், நெல்லிமுள்ளி, திப்பிலி தாளீஸபத்திரி இவை வகைக்கு 1 தோலா, ஸமுத்ராப் பச்சைவேர் 8 தோலா நிலப்பனைக்கிழங்கு 4 தோலா, லவங்கப் பட்டை ஏலரிசி ½ தோலா இவைகளைத் தூள் செய்து கொண்டு 2 பங்கு வெல்லம்சேர்த்து வடகங்கள் செய்துகொண்டு சாப்பிட மூலம் குணமாகும். நல்ல பசி உண்டாகும்.

**ஸூரணாதி மோதகம் (2)** காட்டுக்கருணைக்கிழங்கு சூர்ணம் 2 பங்கு, சுக்கு திப்பிலி மிளகு கொடிவேலிவேர்பட்டை திரிபலை, ஜீரகம் பெருங்காயம் ஓமம், குரோசாணி ஓமம் இவைகளை ஸமபாகத்தில் சேர்த்து இடித்த சூர்ணம் 1 பங்கு, இந்துப்பு ¼ பங்கு, இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றில் ஒரு நாள் ஊற வைத்து வடகங்களாக்கி சாப்பிட்டு வர சூலம் கிரஹணீ அதிஸாரம் பிரவாஹிகை குல்மம் அர்சஸ் இவைகளில் நல்லது. அக்னிபலம் உடல் வலிவு இவைகளை அளிக்கும். வாயுவை நன்கு கண்டிக்கும். கர்ப்பிணி, ரத்த பித்தமுள்ளவனுக்கு ஏற்றதல்ல.

**ஸூரணபுடபாகம்.** காட்டுக்கருணைக்கிழங்கை மேல்மண்பூசிச் சுட்டு உள்வெந்தவுடன் எடுத்து நல்லெண்ணெய்யும் இந்துப்பும்

சேர்த்துச் சாப்பிட மூலம் குணமாகும். இந்துப்பிற்குப்பதில் வெல்லமும் சேர்க்கலாம்.

**பாஹுசால குடம்—** பேய்த்தும்மட்டிக்காய், செவதைவேர், பூலாங்கிழங்கு, வாய்விளங்கம், நெரிஞ்சில், கொடிவேலிவேர் பட்டை, வாலுளுவை இவை வகைக்கு ½ தோலா, காட்டுக் கருணைக்கிழங்கு 32 தோலா, ஸமுத்ராப்பச்சைவேர் 16 தோலா, சுத்தி செய்த சேங்கொட்டை 16 தோலா இவைகளை 6¼ படி ஜலத்திலிட்டுக் கால் பங்கு மீதமாகக் கஷாயமிட்டு வடிகட்டி அதில் 160 தோலா வெல்லத்தைக் கரைத்துப் பாகானவுடன் கொடிவேலி வேர்பட்டை, செவதை வேர், வாலுளுவை, தந்தீ மூலம் வகைக்கு 4 தோலா, திரிகடு, ஏலம், மிளகு, லவங்கப் பட்டை இவை வகைக்கு 12 தோலா இடித்துத் தூளாக்கிக் கலந்து இறக்கி ஆறியபின் தேன் 64 தோலா சேர்த்துக் கொள்ளவும். அர்சஸ், குல்மம், வாதோதரம், ஆமவாதம், பீநஸம், கிரஹணீ, க்ஷயம், ஹலீமகம், பாண்டு, பிரமேஹம் இவைகளைப் போக்கும் நல்ல ரஸாயனமாகும்.

[ பைஷஜ்யரத்னாவளியிலுள்ள இம்முறையில் சில மாறுபாடுகள் உள்ளன. தேன் கிடையாது. ஸமுத்ராப்பச்சை வேர் 16 தோலா விற்குப் பதில் 12 தோலா, பிரக்ஷேப சூர்ணத்தில் காட்டுக்கருணைக் கிழங்கு 4 தோலா அதிகம். திரிகடுவிற்கு பதில் ஆனைத்திப்பிலி. ]

**அகஸ்தி மோதகம்** கடுக்காய்தோல் 12 தோலா, திரிகடு 12 தோலா, லவங்கப்பட்டை லவங்கப்பத்திரி வகைக்கு 2 தோலா, வெல்லம் 32 தோலா, இவைகளை வடகங்களாக்கிச் சாப்பிட வீக்கம், மூலம், கிரஹணீ, காஸம், மலக்கட்டு இவைகளைப் போக்கும்.

**லகுஸூரண மோதகம்.** திப்பிலி 1 பங்கு, மிளகு 2 பங்கு சுக்கு 4 பங்கு, கொடிவேலிவேர் பட்டை 8 பங்கு, காட்டுக் கருணைக்கிழங்கு, 16 பங்கு வெல்லம் 32 பங்கு இவைகளை வடக மாக்கிச்சாப்பிட அர்சஸ் நீங்கும்.

**பிருஹத்பல்லாதகலேஹம்.** சுத்தி செய்த சேங்கொட்டையை வெட்டி 256 தோலா எடுத்து 6¼படி ஜலத்தில் கால் பங்கு மீத மாகக் க்ஷாயமிட்டு வடிகட்டி அந்த ஜலத்துடன் பசுவின் பால் 6¼ படி சேர்த்து நெய் 64 தோலா கல்கண்டு 64 தோலா சேர்த்துப் பாகாக்கி இறக்கி 7 நாள் வைத்திருந்த பின்னர் சாப்பிட ஜடராக்னி தோஷங்கள் நீங்கும், அர்சஸ் நீங்கும். கேசங்கள் கறுக்கும். உடல் வலிவு அதிகமாகும். காந்தி பெருகும், போக சக்தி நீடிக்கும். விசேஷ பத்யமில்லை.

**சர்க்கராஸவம்.** சிறுகாஞ்சூரிவேர் 64 தோலா, கொடிவேலி வேர்பட்டை, ஆடாதோடைவேர், கடுக்காய் தோல், நெல்லி முள்ளி, வட்டத்திருப்பி, சுக்கு இவை வகைக்கு 8 தோலா இவைகளை இடித்து 12½ படி ஜலத்திலிட்டு 3⅛ படி மீதமாகக் காய்ச்சி வடிகட்டி அதில் சர்க்கரை 400 தோலா கலந்து கொள்ள வும். திப்பிலி, செவ்வியம், ஞாழல்பூ - இவைகளைத் தூள் செய்து தேன் நெய் விட்டுக் கலந்து பானையினுட்புறம் பூசிக் காய்ந்த பின் அதில் மேற்கூறிய திரவத்தைப் போட்டு சீலமண் செய்து ஒரு மாதம் கழித்து எடுத்துக் கொள்ளவும். மூலம், கிர ஹணி, மலக்கட்டு, அரோசகம், மூத்திரக்கட்டு, ஏப்பம் தடைபடு தல், அக்னி மந்தம், ஹிருதய ரோகம், பாண்டு இவைகளைப் போக்கவல்லது.

**திராக்ஷாஸவம்.** திராக்ஷை 400 தோலா, 25 படி ஜலத்தில் 6¼ படி மீதமாக காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். அதில் சர்க் கரை 400 தோலா, தேன் 400 தோலா, காட்டகத்திப்பூ 28 தோலா, ஜாதிக்காய், கிராம்பு, வால் மிளகு, மிளகு, சந்தனத் தூள், திப்பிலி, ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, வகைக்கு 2 தோலா இவைகளின் சூர்ணம் கலந்து பானை யிலிட்டு மூடி வைத்து ஆஸவமான பின்னர் சாப்பிடவும். மூலம் சோஷம், அருசி, ஹிருதயரோகம், பாண்டுரோகம், ரத்தபித் தம், பகந்தரம், குல்மம், உதரம், கிருமி ரோகம், கிரந்தி, க்ஷதம், ஜ்வரம் இவைகளில் உதவக்கூடியது. வாதபித்தங்களைத் தணிக்க வல்லது. பலத்தையும் நிறத்தையும் அளிக்கும்.

**ஸமசர்க்கர சூர்ணம்.** சுக்கு, திப்பிலி, மிளகு, சிறுநாகப்பூ, லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, ஏலரிசி இவை முறையே 7, 6, 5, 4, 3, 2, 1 தோலா வீதம் எடுத்து சூர்ணித்து சர்க்கரை 28 தோலா சேர்த்துச் சாப்பிட மூலம், அக்னிமந்தம், குல்மம், உதரம், வீக்கம், பாண்டு முதலிய நோய்களில் நல்லது.

**வ்யோஷாதி சூர்ணம்.** சுக்கு, திப்பிலி, மிளகு, கொடிவேலி வேர்பட்டை, சேங்கொட்டை, வாய்விளங்கம், எள்ளு, கடுக் காய் தோல் இவைகளின் சூர்ணத்தை சம அளவு வெல்லத் துடன் சேர்த்துச் சாப்பிட அர்சஸ், வீக்கம், இடுவிஷம், குஷ் டம், மலபந்தம் கிருமி பாண்டு இவை நீங்கும். [சூர்ணமாகத் தயாரிக்கும்போது சம அளவும், மோதகமாகத் தயாரிக்கும் போது 2 பங்கும் வெல்லம் சேர்க்கவேண்டும்]

**வ்யோஷாதிவடீ.** சுக்கு, திப்பிலி, மிளகு, திரிபலை, வாய் விளங்கம், எள்ளு, சேங்கொட்டை, கொடிவேலிவேர்பட்டை இவைகளின் சூர்ணத்துடன் 2 பங்கு வெல்லம் சேர்த்து மோதகமாகத் தயாரித்துச் சாப்பிட மூலநோயும் தோலைப் பற்றிய நோயும் நீங்கும்,

சுக்கு, திப்பிலி, கடுக்காய்தோல், மாதுள விதை இவைகளில் ஒன்றின் சூர்ணத்தை வெல்லத்துடன் ஆமம், அஜீர்ணம், அர்சஸ், மலபந்தம் இவைகளிருக்கும் போது சாப்பிட நல்லது. காட்டுக்கருணைக்கிழங்கு சூர்ணமும் சர்க்கரையும் அல்லது தேனும் வெண்ணெய்யும் சாப்பிட மூலம் தணியும். கோகம்பம் எனும் மங்குஸ்தான் வேரையும் இலையையும் சூர்ணித்து 8 தோலா, சேங்கொட்டை 4 தோலா, மிளகு 8 தோலா இவைகளின் சூர்ணம் சாப்பிட நல்லது.

**பாடாதி சூர்ணம்.** காஞ்சூரிவேர், வில்வப்பிஞ்சு, ஓமம், சுக்கு இவைகளில் ஏதாவது ஒன்றுடனே எல்லாவற்றுடனே வட்டத்திருப்பி சேர்த்து இடித்து சாப்பிட மூல வேதனை தீரும்.

நாயுருவி விதையை அரைத்து அரிசி கழுவிய ஜலத்தில் கரைத்துச் சாப்பிட ரத்த மூலம் நிற்கும். சந்தனத்தூள், நிலவேம்பு, காஞ்சூரிவேர், சுக்கு இவைகளின் கஷாயமோ, மரமஞ்சள், லவங்கப்பட்டை, விலாமிச்சை, வேப்பம்பட்டை இவைகளின் கஷாயமோ சாப்பிட நல்லது. மோரில் ஓமமும் சுக்கும் அரைத்துக் கலக்கிச் சாப்பிட மூலம் திரும்பாது. சித்திரமூலப் பட்டைத்தூளைப் போட்டு பாலில் புரை குத்தித் தயாரிக்கப் பெறும் மோரைச் சாப்பிட மூலம் கிளம்பாது. தினமும் அன்னத்துடனே தனித்தோ மோரையே உணவாகக் கொண்டு 7, 10, 15, 30 நாட்கள் இருத்தல் நல்லது. பலத்தையும் காலத்தையும் உணர்ந்து இந்த பத்தியத்தில் இருத்தல் நல்லது. மோரில் கடுக்காய்த் தூளையோ திரிபலையின் தூளையோ போட்டுச் சாப்பிடுதல் நல்லது. கொடிவேலி வேர்பட்டை, கொட்டக் கரந்தை வேர், பெருங்காயம் இவைகளின் சூர்ணத்தையோ மோரில் கலக்கி சாப்பிடலாம். கொடிவேலிவேர் பட்டையை அரைத்துப் பானையில் பூசி அதில் பாலை வைத்துத் தயாரித்த தயிரையும் கடைந்த மோரையும் சாப்பிடுவது நல்லது. நிலப்பனைக்கிழங்கு, கடுகுரோஹிணி, கொடிவேலி வேர் பட்டை இவைகளின் சூர்ணத்தை மோரில் கலந்து சாப்பிடுதல் நல்லது. பெருவாகைப்பட்டை. கொடிவேலிவேர்

பட்டை, வெட்பாலையரிசி, புங்கம்பட்டை, இந்துப்பு, சுக்கு இவைகளின் சூர்ணத்துடன் கலந்த மோர் ஒருவாரம் சாப்பிட மூலம் குணமடையும்

**ஹபுஷாதி தக்ராரிஷ்டம். (மோர்காடி.)** கொட்டக்கரந்தை, வெந்தயம், கொத்துமல்லி விதை, ஜீரகம், கருஞ்சீரகம், பூலாங் கிழங்கு, திப்பிலி, கண்டந்திப்பிலி, கொடிவேலிவேர்பட்டை, யானைத்திப்பிலி, ஓமம், குரோசாணி ஓமம் இவைகளின் சூர்ணத்தை மோரில் கரைத்துப் பானையிலிட்டு மூடிவைத் திருந்து நன்கு புளிப்பும் காரமும் ஏற்பட்டதும் வடிகட்டி, சாப் பிடும்போதும் நீர் அருந்தும் போதும் சாப்பிட அக்னிமந்தம், அரோசகம், கபவாதத் தடை, மூலம், வீக்கம், அரிப்பு இவை களில் நல்லது. பலம் தர வல்லது.

**சவ்யாதி கிருதம்.** செவ்வியம், சுக்கு, திப்பிலி, மிளகு, வட்டத்திருப்பி, யவக்ஷாரம், கொத்துமல்லிவிதை, ஓமம், கண்டந்திப்பிலி, கந்தகவெடியுப்பு, இந்துப்பு, கொடிவேலிவேர் பட்டை, வில்வப்பசை, கடுக்காய்த்தோல் இவை வகைக்கு $2\frac{3}{4}$ தோலா இடித்துக் கல்கமாக்கி 160 தோலா நெய்யில் கலக்கி ஜலம் 4 படி சேர்த்துக் காய்ச்சி வடிகட்டி சாப்பிட்டு வர, மல மும் வாயுவும் கட்டாமல் பிரியும். பிரவாஹிகா, குதம் தள்ளு தல், மூத்ர கிருச்சிரம், குதவலி, கவுட்டிவலி இவைகளைப் போக்கும்.

**சுண்டி கிருதம்.** சுக்கு 120 தோலா இடித்து $6\frac{1}{4}$ படி ஜலத்தி விட்டுக் கஷாயம் கால் பங்கு மீதமாகக் காய்ச்சி வடிகட்டி நெய் 64 தோலா சேர்த்து சுக்கு 16 தோலா கல்கமாக அரைத்துக் கலக்கி நெய் தயாரித்து சாப்பிட அர்சஸ், ச்வாஸம், காஸம், மண்ணீரல் பெருக்கம். பாண்டு, விஷமஜ்வரம், தாகம், அரோ சகம் இவை நீங்கும். கல்கமாக மாத்திரம் சுக்கைச் சேர்த்து 4 பங்கு ஜலம் சேர்த்துத் தயாரித்த நெய் பஸ்தி (மூத்திரப்பை) வயிறு இவ்விடத்தில் ஏற்படும் நோய்களில் நல்லது.

**லகுசவ்யாதி கிருதம்.** செவ்வியம், கடுகுரோகிணி, வெட் பாலையரிசி, சதகுப்பை, ஐந்துப்புகள் இவைகளைக் கல்கமாக அரைத்துக் கலக்கித் தயாரித்த நெய், அர்சஸ், கிரஹணீ இவை களில் நல்லது.

**ஹ்ரீபேராதி கிருதம்.** வெட்டிவேர், நீலோத்பலக்கிழங்கு, லோத்திரப்பட்டை, மஞ்சிட்டி, செவ்யம், செஞ்சந்தனம்,

வட்டத்திருப்பி, அதிவிடயம், வில்வப்பிஞ்சு, காட்டகத்திப்பூ, தேவதாரு, மரமஞ்சள். லவங்கப்பட்டை, சுக்கு, ஜடாமாஞ்சி, கோரைக்கிழங்கு யவக்ஷாரம், கொடிவேலிவேர் பட்டை இவை களின் கல்கம் 1 பங்கு, நெய் 4 பங்கு, புளியாரைக்கீரைச்சாறு 4 பங்கு இவைகளை முறைப்படி காய்ச்சி நெய் வடிகட்டிச் சாப்பிட மூலம், அதிஸாரம், கிரஹணீ, பாண்டு, ஜ்வரம், அருசி, மூத்திர கிருச்சிரம், குதம் தள்ளுதல், மூத்திரப்பை நோய்கள், வயிற்று உப்புசம், பிரவாஹிகை. சீதம் போதல் இவைகளில் நல்லது.

**லேபங்கள்**. எருக்கம்பால். கள்ளித்தண்டு, பேய் சுரைத் துளிர், புங்கம் விதை இவைகளை ஆட்டு மூத்திரத்தில் அரைத்துப் பூச நல்லது இந்துப்பு, தேவதாளிப்பீர்க்கின் விதை இவைகளைக் காடிவிட்டரைத்துப் பூசலாம். திப்பிலி, வாகை விதை, எருக்கம்பால், கள்ளித்தண்டு, இந்துப்பு இவை களையோ, கள்ளித்தண்டும் இந்துப்பும் தவிர மற்றவைகளையோ, மஞ்சள், கரடிமலம், குந்துமணி, திப்பிலி, பசுவின் மூத்திரம் இவைகளையோ அரைத்துப் பூசலாம். வாலுளுவை விதையை அரைத்துப் பூச, ரத்த மூலம் குறையும். பேய்ப்பீர்க்கின் சூர்ணத்தை மேல் வைத்துத் தேய்க்க மூலம் குறையும். மஞ்சளையும் பேய்ப்பீர்க்கின் சூர்ணத்தையும் கள்ளிப்பால் இந்துப்பு, கள்ளிப்பால் கோமூத்திரம் சேர்த்தரைத்துப் பூசலாம்.

**லேபங்கள்**. (பை. ர.) கபார்சவில் மூலமூளையின் ஒரு ஓரத்தில் கீறி இரத்தத்தை வெளிப்படுத்தி கள்ளிப்பாலைத் தடவலாம். அல்லது க்ஷாரத்தாலோ சூட்டுக்கோலாலோ சுடலாம். மஞ்சளையும் பேய்ப் பீர்க் கின் தூளையும் கடுகெண்ணெய் விட்டரைத்துப் பூசலாம். திப்பிலி, இந் துப்பு, கோஷ்டம், வாகை விதை இவைகளை கள்ளிப்பால் விட்டரைத்துப் பூசலாம். காட்டுக்கருணைக்கிழங்கு, மஞ்சள், கொடிவேலிவேர்பட்டை, வெங் காரம், வெல்லம் இவைகளைக் காடிவிட்டரைத்துப் பூச நல்லது. வாகை விதை, கோஷ்டம், எருக்கம் பால், திப்பிலி, இந்துப்பு இவைகளையோ, கலப்பைக் கிழங்கு ஸர்ஜக்ஷாரம் கொடிவேலி வேர் பட்டை தந்திமூலம் கோமூத்திரம் இவைகளையோ, கோழிமலம், குந்துமணி, மஞ்சள், திப்பிலி இவைகளையோ அரைத்துப் பூச நல்லது. பேய்ச்சுரைவிதை வெடியுப்பு இவைகளைக் காடி விட்டரைத்து சிறுவத்திகளாகச் செய்து குதத் துவாரத்தில் வைத்திருந்து தயிரன்னம் மாத்திரம் சாப்பிட - மூன்று நாட்கள் வைத்திருக்க நல்லது.

✲ (பை. ர.) கருப்பு எள்ளு 4 தோலா இடித்துத் தூள் செய்து சாப்பிட்டு மேல் குளிர்ந்த ஜலம் சாப்பிட்டு வர பல் கெட்டிப்படும் மூலம் நசிக்கும். கபத்தால் ஏற்படும் அர்சவில் சுக்கு கஷாயம் தினம் உபயோகிக்க நல்லது. மலமிளகியிருக்கும் நிலையில் வாதாதிஸார சிகித்ஸையும் மலமிறுகி யிருக்கும் நிலையில் உதாவர்த்த சிகித்ஸையும் அடிக்கடி கவனித்துச் செய்யலாம் மலமிறுகியிருக்கும் போது ஓமமும் கந்தக வெடியுப்பும் கலந்த மோர் நல்லது. வாதகப அர்சஸ்களில் மோரைக் காட்டிலும் உயர்ந்த மருந்து கிடையாது. கொடிவேலி வேர் பட்டையை அரைத்துப் பானைக்குள் பூசி அதில் பாலை வைத்துப் புரை குத்தி எடுத்த தயிரும் மோரும் மூலத்தில் நல்லது. வெல்லத்துடன் கடுக்காய்த்தூள் சேர்த்துச் சாப்பிடுவது கப பித்தங்களைக் குறைக்கவும், அரிப்பு சொரி சினப்பு வலிகளைப் போக்கவும் உதவும். அத்துடன் திப்பிலி சேர்த்து நெய்யில் வறுத்துச் சாப்பிடலாம். மல சுத்தி சரியாக இல்லாவிட்டால் செவதை வேர் சூர்ணம், தந்தி மூலத்தின் சூர்ணம் சேர்த்துச் சாப்பிடலாம்.

எள்ளும் சேங்கொட்டையும் சேர்த்துச் சாப்பிட பசி தூண்டப் பெற்று குஷ்டம் மூலம் இவை நீங்கப் பெறலாம். கோமூத்திரத்தில் ஊற வைத்த கடுக்காயைத் தூள் செய்து வெல்லம் பஞ்சகோல சூர்ணம் சேர்த்து மோருடன் கொடுக்கலாம். பேய்ச்சுரையை க்ஷாரமாக்கி அதைக் கரைத்த ஜலத்தில் கத்தரிக்காயை வேக வைத்து நெய்யில் வதக்கி வெல்லம் சேர்த்து திருப்தி ஏற்படும் வரை சாப்பிட்டு மேல் மோர் சாப்பிட மூலம் 7 நாட்களில் நீங்கும். கடுக்காய் சுக்கு வாய்விளங்கம் கொடிவேலி வேர் பட்டை ஓமம் மிளகு இவைகளின் கஷாயம் மூலம், சூலம் மலபந்தம், வயிற்று உப்புசம் இவைகளைப் போக்கும்.

புங்கம்பட்டை, மூக்கரட்டை, கொடிவேலி வேர் பட்டை, இந்துப்பு கடுக்காய், திப்பிலி, சுக்கு இவைகளின் சூரணம் மூலம், பகந்தரம், குல்மம் இவைகளைப் போக்கும். ஒரு பட்டு நூலில் கள்ளிப்பாலில் மஞ்சள் பொடி சேர்த்த கல்கத்தை அடிக்கடி பூசி உலர்த்தி எடுத்து முளையில் கட்டினால் முளையை அறுத்து விடும்.

✲ **லவணோத்தமாதி சூர்ணம்:** (பை. ர.) இந்துப்பு, கொடிவேலி வேர்பட்டை, வெட்பாலையரிசி, புங்கம்பட்டை, மலைவேம்பின் பட்டை, இவைகளின் சூர்ணம் மோருடன் சாப்பிட மூலம் குறையும்.

✲ **சிரிபில்வாதி சூர்ணம்:** (பை. ர.) புங்கம்பட்டை, அல்லது கழற்சிவித்து, கொடிவேலி வேர்ப் பட்டை, இந்துப்பு, வெட்பாலையரிசி,

வாகைப்பட்டை இவைகளின் சூர்ணத்தை மோருடன் சாப்பிட ரத்தார்சஸ் நீங்கும்.

✲ **விஜய சூர்ணம்:** (பை. ர.) திரிபலே, திரிகடு, திரிஜாதகம், வசம்பு, பெருங்காயம், வட்டத்திருப்பி, யவக்ஷாரம், மஞ்சள், மரமஞ்சள், செவ்யம், கடுகு ரோகிணி, வெட்பாலேயரிசி, கொடிவேலி வேர் பட்டை, சதகுப்பை, ஐந்து உப்புகள், கண்டந்திப்பிலி, வில்வ வேர் ஓமம் இவைகளே இடித்து சூரணம் செய்து 20-30 யவ அளவு வென்னீருடன் சாப்பிடவும். சாப்பிடும்போது சிறிது ஆமணக்கெண்ணெய் சேர்த்துக் கொள்ளலாம். காஸம், வீக்கம், மூலம், பகந்தரம், ஹிருதய சூலம், விலாப்புற சூலம், வாத குல்மம், வாதோதரம், விக்கல், சுவாஸம், பிரமேஹம், காமலா, பாண்டு, ஆமம். மலக்கட்டு, அந்திரவிருத்தி, கிருமி, கிரஹணி, ஜ்வரம், பூததோஷம் இவை நீங்கும். மலட்டுத்தனம் நீங்கும்.

✲ **தத்தூராதி சூர்ணம்:** (பை. ர.) கரு ஊமத்தை விதை, திப்பிலி, சுக்கு, கடுக்காய் தோல், வெட்டிவேர். இவைகளே இடித்துச் சூர்ணம் செய்து சமம் வெல்லம் சேர்த்து 16 யவ அளவு தினம் இரவு சாப்பிட்டு மேல் தேன் நெய் சர்க்கரை சாப்பிட்டு வர பித்தார்சஸ் நீங்கும்.

✲ **கங்கோலாதி சூர்ணம்:** (பை. ர.) வால்மிளகு, ஏலரிசி, அஸாரூன், சுக்கு, சிறுநாகப்பூ, ஜாதிக்காய், சூடம், விலாமிச்சை வேர், கருஞ்சீரகம், கிராம்பு, லவங்கப்பட்டை, ஜடாமாஞ்சி, காரகில், நீலோத்பலக் கிழங்கு, திப்பிலி, சந்தனம், மூங்கிலுப்பு, ஜடாமாஞ்சி இவைகளே சம அளவு எடுத்துச் சூர்ணம் செய்து சூர்ணத்திற்குப் பாதி சர்க்கரை சேர்த்துச் சாப்பிட வாதார்சவில் நல்ல குணம் கிட்டும். பீநஸம், காஸம், ச்வாஸம், விக்கல், யக்ஷ்மா, அரோசகம், பலக் குறைவு, பிரமேஹம், தமகம், கிரஹணி, அதிஸாரம், குல்மம் இவைகளேப் போக்க வல்லது.

❋ **வேல்லஜாதி சூர்ணம்:** (பை. ர.) மிளகு, இந்துப்பு, திப்பிலி, ஜீரகம், சுக்கு, கடுக்காய், கோஷ்டம், ஓமம், கொடிவேலிவேர் பட்டை, பெருங்காயம், வசம்பு, வாய்விளங்கம் இவை வகைக்குச் சம அளவு. இவைகளின் சூர்ணத்திற்கு வெல்லம் 2 பங்கு, இவைகளே ஒன்ருக்கி தினம் 30 யவம் வரை 2-3 வேளே சாப்பிட்டு மேல் மோர் சாப்பிட நல்லது.

❋ **நாகராதி மோதகம்:** (பை. ர.) சுக்கு, சுத்தி செய்த சேங்கொட்டை, ஸமுத்ராப்பச்சை விதை இவைகளே வகைக்குச் சம எடை

சேர்த்துத் தூள் செய்து, 2 பங்கு வெல்லம் சேர்த்து இடித்து வடகங்களாகச் செய்து சாப்பிட மூலம் நீங்கும்.

✲ **பிருஹத்ஸூரணமோதகம் :** (பை. ர.) காட்டுக் கருணைக் கிழங்கு 16 தோலா, கொடிவேலி வேர் பட்டை 8 தோலா, சுக்கு 4 தோலா, மிளகு 2 தோலா, திரிபலா, திப்பிலி, கண்டந்திப்பிலி, தாளீச பத்திரி, சேங்கொட்டை, வாய்விளங்கம் இவை வகைக்கு 4 தோலா நிலப்பனைக்கிழங்கு 8 தோலா, ஸமுத்திராப்பச்சை விதை 16 தோலா. லவங்கம், ஏலரிசி இவை வகைக்கு 2 தோலா இவைகளைச் சூர்ணம் செய்து சூர்ணத்திற்கு 2 பங்கு வெல்லம் சேர்த்துச் சாப்பிடவும். மிகவும் பொருள் வசதியுள்ளவர்கள் தான் இதைச் சாப்பிடலாம். நல்ல பசிக்கேற்றவாறு நல்ல உணவு ஏற்க வேண்டும். மூலம் வீக்கம், கிரஹணீ, விக்கல், வாயு, ச்வாஸம், காஸம், ராஜயக்ஷ்மா, பிரமேஹம், ப்லீஹ விருத்தி இவைகளைப் போக்கும். நல்ல ரஸாயனமாகும்.

✲ **மாணிபத்ர மோதகம் :** (பை, ர.) வாய்விளங்கம் 4 தோலா, நெல்லி முள்ளி 4 தோலா, கடுக்காய் தோல் 4 தோலா, செவதை வேர் பட்டை 12 தோலா, பழைய வெல்லம் 24 தோலா. இவைகளை இடித்து 1-2 தோலா எடையுள்ள வடகங்களாகச் செய்து சாப்பிட்டு வர காஸம், க்ஷயம், குஷ்டம், பகந்தரம், மண்ணீரல் நோய், ஜலோதரம், மூலம், இவை நீங்கும். இச்சா பத்தியம்.

✲ **நாகார்ஜுன யோகம் :** (பை. ர.) திரிபலை, ஐந்து உப்புகள், கோஷ்டம், கடுகு ரோகிணி, தேவதாரு. வாய்விளங்கம், வேப்பங் கொட்டை, சிற்றாமுட்டி வேர், மஞ்சள், மாமஞ்சள், மஞ்சள் பூவுள்ள பிரும்மதண்டி, இவை வகைக்குச் சமனெடை சேர்த்து இடித்துப் புங்கம் பட்டைச் சாற்றில் அரைத்து இலந்தை விதை யளவு மாத்திரை செய்து தகுந்த அனுபானத்துடன் சாப்பிடலாம். அக்னிமந்தத்தில் வென்னீர், மூலத்தில் மோர், குல்மத்தில் எலுமிச்சம் பழச்சாறு, விஷ சுடியில் சுத்த ஜலம், தோல் நோய்களில் கருங்காலிக் கட்டை கஷாயம், நீர்சுருக்கில் சுத்த ஜலம், மார்வலியில் நல்லெண்ணெய், ஜ்வரத்தில் மழைஜலம், சூலத்தில் கசப்பு நார்த்தைச் சாறு, விஷத்தில் விளாம்பழம்–பனச்சிச்சாறு, குஷ்டத்தில் சாணிப்பால், ஜலோதரத்தில் செவதை வேர் பட்டை கஷாயம், அன்னத்தின் விருப்ப மின்மையில் சாப்பாட்டிற்குப் பின் ஜலத்துடன் இவை அனுபானமாகும், கண்ணோய்களில் அஞ்சனமாக இடலாம். பிரதமம் நன்கு குணமாகும்.

✲ **குடஜாவலேஹம்:** (பை. ர) கசப்பு வெட்பாலைப் பட்டை 400 தோலாவை $12\frac{1}{2}$படி ஜலத்தில் அரைக்கால் பங்கு மீதமாகக் கஷாய மிட்டு வடிகட்டி வெல்லம் 120 தோலா சேர்த்து கெட்டியாகும் வரை மறு படியும் காய்ச்சவும். அதில் சுத்தி செய்த சேங்கொட்டை, வாய்விளங்கம், திரிகடு, திரிபலை, ரஸாஞ்சனம், சித்திரமூலப் பட்டை, வெட்பாலையரிசி, வசம்பு, அதிவிடயம், வில்வப் பிஞ்சு இவை வகைக்கு 4 தோலா, இவை களின் சூர்ணத்தைப் போட்டுக் கிளறி இறக்கித் தேன் 64 தோலா சேர்த் துக் கொள்ளவும். ரத்த மூலமும் மற்ற எல்லா மூலங்களும் இதனல் குறையும். அம்ல பித்தம், அதிஸாரம், பாண்டு, அருசி, கிரஹணி, இளைப்பு, வீக்கம், காமாலை, இவைகளில் நல்லது. நெய், தேன், மோர், ஜலம், பால் இவைகளில் தக்கவாறு ஒன்றை அனுபானமாக்கிக் கொள்ளலாம்.

✲ **குடஜரஸக்ரியா:** (பை. ர.) வெட்பாலைப் பட்டை பச்சையா கக் கொணர்ந்து 400 தோலா இடித்து மழைஜலம் சேர்த்து இடித்துச் சக்கையில் சுவை மாறும் வரை கசக்கிப் பிழிந்த சாறு அல்லது கஷாயம் எடுத்துக் கொண்டு அதை மறுபடியும் அடுப்பிலிட்டு கெட்டியாகும் வரை இளந்தீயில் எரிக்கவும். அதில் இலவம் பிசின், மஞ்சிட்டி, ஞாழல்பூ, இவை வகைக்கு 4 தோலா, வெட்பாலை யரிசி 12 தோலா இவைகளைச் சூர்ணித்துச் சேர்த்து விடவும். இதை ஆட்டுப் பாலுடன் சாப்பிட ரத்த மூலம், ரத்தாதிஸாரம், சூலம், ரத்தபித்தம் இவை நீங்கும்.

✲ **தசமூலகுடம்:** (பை. ர.) தசமுலம், கொடிவேலி வேர் பட்டை, தந்திமூலம் இவை வகைக்கு 20 தோலா, இவைகளை $6\frac{1}{4}$ படி ஜலத்தில் கஷாயமிட்டு கால் பங்கு மீதமாகக் காய்ச்சி வடிகட்டி அதில் 400 தோலா வெல்லத்தைக் கரைத்து பாகு பதத்தில் செவதை வேர்ப் பட்டை சூர்ணம் 64 தோலா, திப்பிலி சூர்ணம் 32 தோலா, இவைகளைக் கலந்து நெய் பூசிய பாத்திரத்தில் வைத்து வேளைக்கு ஒரு தோலா வீதம் சாப்பிட மூலம், அஜீர்ணம், பாண்டு முதலிய நோய்கள் நீங்கும்.

✲ **பாஹுசாலகுடம்:** (பை. ர.) செவதை வேர், வாலுளுவை, தந்திமூலம், நெரிஞ்சில், கொடிவேலிவேர் பட்டை, பூலாங்கிழங்கு, பேய் தும்மட்டி வேர், கோரைக்கிழங்கு, சுக்கு, வாய்விளங்கம், கடுக்காய், இவை வகைக்கு 4 தோலா, சேங்கொட்டை 32 தோலா, ஸமுத்ராப்பச்சை வேர் 24 தோலா, காட்டுக் கருணைக்கிழங்கு 64 தோலா, இவைகளை $12\frac{1}{2}$ படி ஜலத்திலிட்டுக் கஷாயமாக்கி $3\frac{1}{8}$ படி மீதமாக்கி வடிகட்டி 492 தோலா வெல்லத்தை அதில் கரைத்துப் பாகாக்கி இறக்கிக் கீழ்க்கண்டவைகளின்

சூர்ணத்தைப் போட்டு கிளறிக் கொள்ளவும். செவதை வேர், வாலுளுவை, கொடிவேலி வேர் பட்டை இவை வகைக்கு 8 தோலா, ஏலரிசி, லவங்கப்பட்டை, மிளகு, ஆனைத்திப்பிலி வகைக்கு 24 தோலா, இவைகள் சூரணமாகப் போடத் தகுந்தவை. பாலன்னமும் மாம்ஸ ரஸமும் சாப்பிடலாம். குல்மம், பிரமேகம், பாண்டு, காமாலை, மூலம், உதரம், கிரஹணீ, ராஜயக்ஷ்மா இவைகள் போகும்.

✲ **குடபல்லாதகம்-1:** (பை.ர.) சேங்கொட்டை ஜலத்தில் அமிழ்வதாகப் பொறுக்கி எடுத்தது எண்ணிக்கையில் 2000 எடுத்து 6 படி ஜலத்தில் 1½ படி மீதமாகக் கஷாயமிட்டு வடிகட்டி அதில் 400 தோலா வெல்லத்தைக் கரைத்துப் பாகாக்கி அதில் 500 சேங்கொட்டையை வெட்டிப் போட்டு லேஹிய பதத்தில் திரிபலை, திரிகடு, ஓமம், கோரைக்கிழங்கு, இந்துப்பு, சதுர்ஜாதம் (13 சரக்குகள்) இவைகள் வகைக்கு ஒரு தோலா தூள் செய்து போட்டுக் கிளறி தினம் காலையில் ஒரு தோலா வரை சாப்பிட மூலம், குஷ்டம், காமாலை, பிரமேஹம், கிரஹணீ, குல்மம், பாண்டு, ப்லீஹோதரம், காஸம், கிருமி, பகந்தரம் இவை நீங்கும்.

✲ **குருபல்லாதகம்-2:** (பை. ர.) தசமூலம் சீந்திற்கொடி, சிறுதேக்கு, நெரிஞ்சில்முள், கொடிவேலி வேர் பட்டை, பூலாங்கிழங்கு இவை வகைக்கு 4 தோலா சேங்கொட்டை 1000, இவைகளை 6 படி ஜலத்தில் $1\frac{1}{2}$ படி மீதமாகக் கஷாயமிட்டு, வடிகட்டி, 400 தோலா வெல்லம் சேர்த்துப் பாகாக்கி சிற்றாமணக்கெண்ணெய் 16 தோலாவும், திப்பிலி 16 தோலா, ஏலரிசி 5 தோலா, லவங்கப்பட்டை 5 தோலா, மிளகு 5 தோலா இவைகளின் சூர்ணத்தையும் கலந்து, ஆறிய பின்னர் தேன் 16 தோலா கலந்து கொள்ளவும். மூலம், காஸம், மலபந்தம், பாண்டு சோதம், அக்னிமந்தம் இவை நீங்கும்.

✲ **வார்த்தாகு குடிகா:** (பை. ர.) கள்ளித்தண்டு 16 தோலா, ஸௌவர்சிலை உப்பு 4 தோலா. இந்துப்பு 4 தோலா, கந்தகவெடியுப்பு, 4 தோலா, முள்ளுக்கத்திரி 16 தோலா, எருக்கம் வேர் 32 தோலா, கொடிவேலி வேர் 8 தோலா இவைகளை எரித்து க்ஷாரமாக்கி, முள்ளுக்கத்திரிச் சாற்றாலரைத்து மாத்திரை செய்து உணவிற்குப் பின் சாப்பிட காஸம் ச்வாஸம், மூலம், காலரா சளி, ஹிருதயரோகம் இவைகளில் நல்லது.

## ரத்தார்சஸில் சில பொதுமுறைகள்.

ரத்த அர்சஸில் முதலில் ரத்தத்தைத் தடைசெய்யக் கூடாது. அவ்விதம் செய்தால் அசுத்த ரத்தம் வெளியாவது தடைபடுவதால்,

வயிற்றுக்குத்து வலி, வயிற்று உப்புசம் விஸர்பம் போன்றவை ஏற்படும். வெட்பாலையரிசியின் கஷாயம், வெட்பாலை, சுக்கு இவைகளின் கஷாயம், வில்வப் பிஞ்சின் சூர்ணம் இவை உள்ளுக்குச் சாப்பிடவும். பேய்ச்சுரையின் வேரை அரைத்து மூலத்தின் வேரில் தடவுவதும் நல்லது (வெட்பாலையரிசிக்குப் பதில் கஷாயத்தில் வெட்பாலைப்பட்டை சேர்த்துக் கொள்வதும் உண்டு.)

ரத்த மூலத்தில் வெண்ணெய்யில் எள்ளுப் பொடி கலந்தும், நாக கேஸரம் அல்லது தாமரை கேஸரம் அல்லது குங்குமப்பூவை வெண்ணெய்யும் சர்க்கரையும் சேர்த்தும், தினம் சாப்பிட்டு வருவது நல்லது அம்மாதிரியே தயிர் மேல் தெளிவைப் பிரித்து அத்தெளிவை நன்கு கடைந்து சாப்பிடுவதும் நல்லது.

மஞ்சிட்டி, நீலோத்பலம் இலவம்பிசின், வெள்ளை லோத்திரப் பட்டை, கருப்பு எள்ளு, வெண் சந்தனம் இவைகளைத் தூள் செய்து கொண்டு ஆட்டுப்பாலுடன் சாப்பிட்டுவர நல்லது. காலையில் ஆட்டுப் பாலைக் குடித்து மேல் இளம் தாமரை இலையை அரைத்து சர்க்கரை சேர்த்து மென்று சாப்பிடலாம். எள்ளை அரைத்துச் சர்க்கரை சேர்த்து ஆட்டுப்பாலில் குழப்பி சாப்பிடலாம். வெட்பாலைப் பட்டையை அரைத்து மோரில் குழப்பிச் சாப்பிடலாம். நாயுருவி வேர் 1 தோலாவைக் கழுநீர் விட்டரைத்து கழுநீர்விட்டுக் குழப்பிச் சாப்பிட்டு மேல் ஆட்டுப் பால் சாப்பிடலாம்.

மாதுளம் பழத்தை ஓட்டுடன் புடபாகம் செய்து சாறு பிழிந்து சர்க்கரை சேர்த்தும் மாதுளம்பழ மணிகளை சர்க்கரை சேர்த்துப் பிசிறிச் சாறு எடுத்தும் சாப்பிடலாம். நாககேஸரமும் தாமரை கேஸரமும் சர்க்கரை சேர்த்துத் தூள்செய்து தேன், புதிய வெண்ணெய் இவைகளுடன் இடைவிடாமல் சாப்பிடலாம். மனிதன் தலைமயிர், பாம்புச் சடை, பூனைத்தோல், எருக்கம்வேர், வன்னி இலை இவைகளை மூலமுளைக்குப் புகையிடுதல் நலம்.

நொச்சிவேர் அல்லது இலை, முள்ளுக்கத்திரி, அமுக்கராக்கிழங்கு, திப்பிலி இவைகளின் சூரணத்தை நெய் விட்டுப் பிசிறி முளைக்குப் புகை போடலாம். வெள்ளைக் குங்கிலியத் தூளை கடுகெண்ணெய் விட்டுப் பிசிறி, புகையிடுதலும் கர்பூரப்புகை இடுதலும் நல்லது. கோதுமை மாவு 4 தோலா, பெருங்காயம் $\frac{1}{6}$ தோலா, சேங்கொட்டை 4, இவைகளை இடித்துப் பிசிறி முளைக்கு மாத்திரம் புகையிட நல்லது.

❋ **பிருஹத்பல்லாதகாவலேஹம் :** (பை. ர.) நல்ல பழுத்த சேங்கொட்டை 256 தோலா. இவைகளை வெட்டி 6 படி பால் கலந்து சிறிது நெய்யும் 64 தோலா சர்க்கரையும் சேர்த்துக் கெட்டியாகப் பால் கோவாவாக ஆகும் வரை காய்ச்சி எடுத்துக் கொள்ளவும். இதைத் தகுந்த பத்யத்துடன் சாப்பிட்டு வர மூலம் நீங்கும். கேசங்கள் கறுக்கும். கண் பார்வை கூர்மை பெறும் நிறம் தெளிந்து அழகுடன் இருக்கும். சிறந்த ரஸாயனமாகும்.

❋ **தந்த்யரிஷ்டம் :** (பை. ர.) தந்தீ மூலம், கொடிவேலி வேர் பட்டை, தசமூலம் திரிபலை (15 சரக்குகள்) இவை வகைக்கு 4 தோலா, இவைகளை 6 படி ஜலத்தில் 1½ படி மீதமாகக் காய்ச்சி, வடிகட்டி அதில், 400 தோலா வெல்லம் போட்டுப் பானையிலிட்டு ஒரு மாதம் வைத்திருந்து நன்கு அரிஷ்டமானவுடன் சாப்பிட கிரஹணீ, பாண்டு, மலக்கட்டு, வாயுக்கட்டு, அருசி, மூலம் இவை நீங்கும்.

❋ **அபயாரிஷ்டம் :** (பை. ர.) கடுக்காய் தோல் 400 தோலா, திராக்ஷை 200 தோலா, வாய்விளங்கம் 40 தோலா, இலுப்பைப்பூ 40 தோலா, இவைகளை 25 படி ஜலத்திட்டு 6¼ படி மீதமாகக் காய்ச்சி, வடிகட்டி வெல்லம் 400 தோலா, நெரிஞ்சில், செவதைவேர், மல்லிவிதை, காட்டகத்திப்பூ, பேய்த்தும்மட்டிக்காய், செவ்யம், சோம்பு, சுக்கு, தந்தி மூலம், காரிலவம்பிசின் இவை வகைக்கு 8 தோலா, சூர்ணம் செய்து போட்டு அரிஷ்டமாக்கிய பின்னர் சாப்பிடவும். மூலம், உதரம், மல மூத்ரக்கட்டு, அக்னிமந்தம் இவைகளில் நல்லது.

❋ **பிருஹத்திராக்ஷாஸவம் :** (பை ர.) திராக்ஷை 400 தோலா, கல்கண்டு 1600 தோலா, இலந்தைவேர் 200 தோலா, காட்டகத்திப்பூ 100 தோலா, பாக்கு, கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, ஏலரிசி, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, திரிகடு, ரூமிமஸ்தகீ, தாமரைக்கிழங்கு, அக்காரகாரம், கோஷ்டம் இவை வகைக்கு 40 தோலா, இவைகளை இடித்து 70 படி ஜலத்தில் போட்டு பூமிக்குள் பதினைந்து தினங்கள் வைத்திருந்து அர்க்கயந்த்ரத்திலிட்டு ஊறலை எடுத்து அர்க்க தாரை விழுமிடத்தில் கஸ்தூரியும் குங்குமப்பூவும் முடித்துக் கட்டி வைத்து அந்த அர்க்கத்தைத் தயாரிக்கவும். இந்த அர்க்கத்தை மத்யான்னவேளையில் 2–4 அவுன்ஸ் அளவும், இரவு 3-6 அவுன்ஸ் அளவும் சாப்பிடலாம். நல்ல ஸ்நிக்தமான குருவான உணவு சாப்பிடவேண்டும். நல்ல பலமும் வீர்யமும் பெருகும்.

✲ **உத்பலஷட்பலககிருதம் :** (பை. ர.) திப்பிலி, கண்டங் திப்பிலி, செவ்யம், கொடிவேலிவேர் பட்டை, சுக்கு, யவக்ஷாரம் இவை வகைக்கு 4 தோலா, இவைகளின் கல்கத்தை 64 தோலா நெய்யில் குழப்பி $1\frac{1}{4}$ படி ஜலமும் $\frac{3}{8}$ படி பசுவின் பாலும் சேர்த்துக் காய்ச்சிய கிருதத்தை மூலம், ப்லீஹம் காஸம் இவைகளில் கொடுக்க நல்லது.

✲ **வ்யோஷாத்யகிருதம் :** (பை. ர.) சுக்கு, திப்பிலி, மிளகு இவை வகைக்கு 4 தோலா, இவை கல்கம், நெய் 48 தோலா, புரசம் பட்டை க்ஷாரம் கரைத்த ஜலம் 144 தோலா இவைகளைக் கிருதமாகக் காய்ச்சி எடுத்துச் சாப்பிட நல்லது.

✲ **குடஜாதிகிருதம் :** (பை. ர.) வெட்பாலையரிசி, வெட்பாலைப் பட்டை, சிறுநாகப்பூ, அல்லிப்பூ, வெள்ளை லோத்திரப்பட்டை காட்ட கத்திப்பூ வகைக்கு 1 தோலா இவை கல்கம், நெய் 24 தோலா (ஜலம் 96 தோலா) இவைகளை நெய்யாகக் காய்ச்சிச் சாப்பிட நல்லது.

✲ **ஸிம்ஹ்யாதிகிருதம் :** (பை. ர.) கண்டங்கத்திரி 400 தோலா, சீந்திற்கொடி 400 தோலா, இவைகளை 25 படி ஜலத்தில் $6\frac{1}{4}$ படி மீதமாகக் கஷாயமிட்டு நெய் 256 தோலா, சித்திர மூலப் பட்டை, திரிபலை, திரிகடு, ஆவல்பட்டை, வெட்பாலையரிசி, குமிழம்பட்டை, வாய் விளங்கம் இவை (11) களை வகைக்கு 6 தோலா கல்கம் ; சேர்த்துக் கிருத மாக்கவும், மூலத்திலும் பிரமேகத்திலும் நல்லது.

✲ **ஸுநிஷண்ணகசாங்கேரீகிருதம் :** (பை ர.) சோம்பு, சிற்ரு முட்டிவேர், மரமஞ்சள், மூவிலை, நெருஞ்சி, ஆலம்மொக்கு, அத்திமொக்கு, அரசமொக்கு இவை வகைக்கு 8 தோலா, இவைகளை 3 படி ஜலத்தில் $\frac{3}{4}$ படி மீதமாகக் கஷாயமிட்டு வடிகட்டிக் கொள்ளவும். அடபதியன் கிழங்கு, கடுகுரோகிணி, திப்பிலி, கண்டந்திப்பிலி மிளகு தேவதாரு, வெட்பாலையரிசி, இலவம்பூ, கோவைவேர், சந்தனம், அஞ்சனக்கல், காய்ப்பல், கொடிவேலி வேர் பட்டை, கோரைக்கிழங்கு, ஞாழல்பூ, அதிவிடயம், ஓரிலைவேர், மூவிலைவேர், தாமரை கேஸரம், அல்லிகேஸரம், மஞ்சிட்டி, கண்டங்கத்திரிவேர், வில்வப்பிஞ்சு, இலவம்பிசின், வட்டத் திருப்பி இவை ஒரு தோலா வீதம் எடுத்த கல்கம், பசலைக்கீரையின் சாறும் புளியாரைக் கீரையின் சாறும் வகைக்கு 256 தோலா, நெய் 256 தோலா. இவைகளைக் கிருதமாகத் தயாரித்துக் கொள்ளவும். மூலம் அதிஸாரம், ரத்தஸ்ராவம், பிரவாஹிகா, குதப்ரம்சம், சீதபேதி, வீக்கம், சூலம், நீர்க்கட்டு, மூடவாதம், அக்னிமந்தம் அருசி இவைகளில் நல்லது.

✲ **காஸீஸாதி தைலம்** (பை. ர.) அன்னபேதி, தந்தீமூலம், இந்துப்பு, அரளிவேர், கொடிவேலி வேர் பட்டை இவைகளைக் கல்கமாக அரைத்துக் கலக்கி எருக்கம் பால் நல்லெண்ணை சேர்த்துக் காய்ச்சிய தைலம் மூல முளையில் நல்லது.

✲ **மஹா காஸீஸாதி தைலம்** (பை. ர.) அன்னபேதி, இந்துப்பு, திப்பிலி, சுக்கு, கோஷ்டம், கலப்பைக் கிழங்கு, சிறுபூளை, அரளிவேர், தந்தீமூலம், வாய்விளங்கம், கொடிவேலி வேர் பட்டை, தாளகம், மனோசிலை, குடுகுடுப்பூண்டு இவை கல்கம், கள்ளிப்பால், எருக்கம்பால் நல்லெண்ணைக் குச் சம அளவு, கோமூத்திரம் 4 பங்கு இவைகளைக் கலக்கிக் காய்ச்சி வடிகட்டி யெடுத்த தைலம் மூல முளைகளை அகற்றும்.

✲ **பிப்பல்யாதி தைலம்** (பை. ர.) திப்பிலி, அதிமதுரம், வில்வப் பிஞ்சு, சதகுப்பை, மலங்காரை, வசம்பு, கோஷ்டம் சுக்கு, புஷ்கர மூலம், கொடிவேலி வேர் பட்டை, தேவதாரு இவை வகைக்கு ஒரு தோலா கல்கம், நல்லெண்ணெய் 44 தோலா, பால் 88 தோலா இவைகளை முறைப்படி காய்ச்சி எடுத்த தைலம் நல்ல அனுவாஸன தைலமாகும். ஆஸனம் வெளியாதல், வலி, நீர்ச் சுருக்கு, சீதபேதி, இடுப்பு முதுகு வலி, வயிறு உப்புசம், சீதமாக வெளியாதல், குதத்தில் வீக்கம், மல வாயுக் கட்டு, அடிக்கடி மலம் சிறிதளவில் வெளியாதல் இவைகளில் நல்லது. மலபந்தமும் மலம் வரண்டு உருண்டு வெளியாகுவதும் வாயு தடை படுதலும் இருக்கும் போது இதை அனுவாஸனம் கொடுக்கலாம்.

✲ **மாண சூரணாதி லோஹம்** (பை. ரா.) மாணகந்தம் (ஒரு விதமான கருணைக்கிழங்கு காட்டுக் கருணைக்கிழங்கு, சுத்த சேங்கொட்டை, சிவதை, தந்தீமூலம், திரிகடு, திரிபலை, வாய்விளங்கம், கோரைக் கிழங்கு, கொடி வேலி வேர் பட்டை இவைகளின் சூர்ணம் வகைக்கு ஒரு தோலா, அயபஸ்மம் 14 தோலா. இவைகளைக் கல்வத்திலிட்டரைத்து வைத்துக் கொள்ளவும். 10-15 யவ அளவு சாப்பிட மூலம் நீங்கும்

✲ **அக்னிமுக லோஹம்** (பை. ர.) சேவதை வேர், கொடிவேலி வேர் பட்டை, நொச்சி, கள்ளி வேர், கொட்டை காந்தை வேர், கீழா நெல்லிவேர், இவை வகைக்கு 32 தோலா, இடித்து $6\frac{1}{4}$ படி ஜலத்திலிட்டு கால் பங்கு மீதமாகக் கஷாயமாக்கி வடிகட்டிக் கொள்ளவும். வாய்விளங்கம் 12 தோலா, சுக்கு, மிளகு, திப்பிலி வகைக்கு 3 தோலா, திரிபலை 20 தோலா, சிலாஜது 54 தோலா இவைகளைத் தூள் செய்து முன் கஷா யத்தில் கரைத்து அடுப்பிலேற்றி லேஹ்ய பாகம் வரும்வரை இளம் சூடாக எரித்துக் கிளறி மனோசிலை சேர்த்து அல்லது முள்ளுமுருங்கைச் சாற்றில்

அரைத்துப் புடமிட்ட உருக்கு (அயம்) பஸ்மம் 48 தோலாவையும் நெய் 96 தோலாவையும் சேர்த்துக் கிளறி இறக்கி தேனும் சர்க்கரையும் வகைக்கு 58 தோலா சேர்த்துப் பின்னர் உபயோகிக்கவும். இதற்கு அக்னிமுகம் எனப் பெயர். நல்ல பசி, ஜீர்ணசக்தி உண்டாகும். சோகை, மூலம், வீக்கம், குஷ்டம், மண்ணீரல் பெருக்கம், உதரம், ஆமவாதம் இவைகளைப் போக்கும். பாகல், வாழை, மணத்தக்காளி, பூசணி, பழுபாகல், இலந்தை, கொள்ளு, விளாம்பழம், காடை புறா மாம்ஸம் இவைகள் தள்ளவும்.

✲ **சந்திரபிரபா குடிகா** (பை. ர.) வாய்விளங்கம், கொடிவேலி வேர் பட்டை, திரிகடு, திரிபலா, தேவதாரு, சவ்யம், நிலவேம்பு, கண்டங்திப்பிலி, கோரைக் கிழங்கு, பூலாங்கிழங்கு, வசம்பு, ஸ்வர்ணமாக்ஷிகபஸ்மம், இந்துப்பு, யவக்ஷாரம், மஞ்சள், மரமஞ்சள், மல்லி, யானைத்திப்பிலி, அதிவிடயம் இவை வகைக்கு ஒரு தோலா, சிலாஜது 32 தோலா, குக்கில் 8 தோலா, அயஸ்ஸிந்தூரம் 8 தோலா, சர்க்கரை 16 தோலா, மூங்கிலுப்பு 4 தோலா, தந்தீமூலம் 4 தோலா, செவதை வேர் 4 தோலா, ஏலம், லவங்கப் பட்டை, லவங்கப் பத்திரி வகைக்கு 4 தோலா, இவைகளை நன்கு அரைத்து 10-15 யவ அளவு மாத்திரை செய்து கொள்ளவும். மூலம், பகந்தரம், பாண்டு, காமாலை, அக்னி தீப்தி, பித்தகப நோய்கள், நாடீ விரணம், மர்மவிரணம், கிரந்தி, அர்புதம், வித்ரதி, ராஜயக்ஷ்ம, மேகம், பகந்தரம், பிரதரம், சுக்ரக்ஷயம், அச்மரீ, நீர்சுருக்கு, உதரம் இவைகளில் நல்லது. மோர், தயிர் தெளிவு, ஆட்டு மாம்ஸ ரஸம், பால், குளிர்ந்த நீர் இவை அனுபானம். வேறு பத்யம் கிடையாது. நல்ல பலம், புத்தி அழகு ஏற்படும்

இம் மருந்தில் சிலர் ரஸம் 2 தோலா, கந்தகம் 2 தோலா, அப்ரக பஸ்மம் 4 தோலா சேர்ப்பது வழக்கம்.

✲ **தீக்ஷ்ணமுகரஸம்** (பை. ர) ரஸஸிந்தூரம், தாம்ர பஸ்மம், தங்க பஸ்மம், அப்ரக பஸ்மம், உருக்கு பஸ்மம், இரும்பு பஸ்மம், கந்தகம், மண்டூர பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம் இவை வகைக்கு ஒரு தோலா கல்வத்திலிட்டு நன்கு அரைத்து கற்றாழைச் சோறு சேர்த்து 3 தினம் அரைத்து அந்த மூஷையிலிட்டு கடுந்தீயில் புடமிடவும். தானே ஆறிய பின் எடுத்து 2-யவ அளவு சர்க்கரை சேர்த்துச் சாப்பிட மூலம் குணமாகும்.

✲ **அர்சகுடாரம்** (பை. ர) ரஸம் 4 தோலா, கந்தகம், அயஸ்ஸிந்தூரம், தாம்ர பஸ்மம், இவை வகைக்கு 8 தோலா, தந்தீமூலம், சுக்கு, மிளகு, திப்பிலி, காட்டுக் கருணைக்கிழங்கு, மூங்கிலுப்பு, வெங்காரம், யவக்ஷாரம், இந்துப்பு இவை வகைக்கு 20 தோலா, கள்ளிப்பால் 32 தோலா, இவைகளை நன்கு அரைத்து கோமூத்திரம் 128 தோலா

சேர்த்து இளந் தீயிலிட்டு மாத்திரை உருட்டும் பதத்தில் எடுத்து இறக்கிக் கொள்ளவும். வேளைக்கு 20–30-யவ அளவில் மாத்திரை செய்து சாப்பிட மூலம் குணமாகும்.

✲ **சஞ்சத்குடாரம்** (பை. ர) ரஸஸிந்தூரம், கந்தகம், அயஸ் ஸிந்தூரம் வகைக்கு 8 தோலா, திரிகடு, தந்திமூலம், கோஷ்டம் இவை வகைக்கு 4 தோலா, கலப்பைக் கிழங்கு 24 தோலா, இந்துப்பு, யவக்ஷாரம், வெங்காரம், இவை வகைக்கு 20 தோலா, கோமூத்ரம் 128 தோலா, கள்ளிப்பால் 128 தோலா இவைகளை முன்யோகத்தைப் போலத் தயாரித்து 4-யவ அளவில் மாத்திரை செய்து சாப்பிட நல்லது.

✲ **சக்ரேச்வர ரஸம்** (பை. ர) ரஸஸிந்தூரம் 4 தோலா, வெங்காரம் 5 தோலா, அப்ரக பஸ்மம் 5 தோலா இவைகளை வெள்ளைச் சாரணைச் சாற்றில் 3 நாள் பாவனை செய்து வெயிலிலுலர்த்தி அரைத்து 4-யவ அளவில் சாப்பிட்டு வர வாதமூலம் குணமாகும்.

✲ **சிலாகந்தகாதிவடி** (பை. ர) மனேசிலை, கந்தகம் இவைகளை தனித்தனியே வேறு வேறு கல்வத்திலிட்டு 7 நாள் கருசலாங்கண்ணிச் சாற்றில் பாவனை செய்து எடுத்து இரண்டையும் சேர்த்து தேனும் நெய்யும் விட்டரைத்துக் கொடுக்க மூலம் குணமாகும்.

✲ **ஜாதீபலாதி வடி** (பை. ர) ஜாதிக்காய், கிராம்பு, திப்பிலி, இந்துப்பு, சுக்கு, ஊமத்த விதை, லிங்கம், வெங்காரம் இவைகளை எலுமிச் சம்பழச் சாற்றிலிட்டரைத்து 4-யவ அளவில் மாத்திரை செய்து சாப்பிட்டு வர மூலம், அக்னி மந்தமும் குணமாகும்.

✲ **பஞ்சாநநவடி** (பை. ர) ரஸஸிந்தூரம், அப்ரக பஸ்மம், அயஸ் ஸிந்தூரம், தாம்ர பஸ்மம், கந்தகம் இவை வகைக்கு ஒரு தோலா, காட்டுக் கருணைக்கிழங்கின் சாற்றில் ஒரு நாள் அரைத்து தேனுடன் 15-யவ அளவு சாப்பிட்டு வர மூலம், குஷ்டம் குணமாகும்.

✲ **நித்யோதித ரஸம்** (பை. ர) ரஸ ஸிந்தூரம், அப்ரக பஸ்மம், அயஸ் ஸிந்தூரம், தாம்ர பஸ்மம், சுத்தமான வத்ஸநாபி, கந்தகம் வகைக்கு ஒரு தோலா, சேங்கொட்டை சுத்தி செய்தது 6 தோலா இவைகளை காட்டுக் கருணைக்கிழங்கின் சாறு விட்டரைத்து உளுந்தளவு மாத்திரை செய்து சாப்பிட மூலம் குணமாகும்.

✲ **அஷ்டாங்க ரஸம்** (பை. ர) கந்தகம், ரஸம், அயஸ் ஸிந்தூரம், மண்டூர பஸ்மம், திரிபலை, திரிகடு, சித்ரமூலப்பட்டை, கருசலாங்கண்ணி

இவை வகைக்கு சம அளவு காரிலவிலைச் சாற்றிலும் சீந்திற்கொடிச் சாற்றிலும் 3 யாமம் அரைத்து 15-யவ அளவு சாப்பிட மூலம் குறையும்

**அர்சஸில் பத்யம்.** விரேசனம், மேல் பூச்சுகள், முளையிலிருந்து அட்டைவிட்டு ரத்தம் எடுத்தல், க்ஷார சிகித்ஸை, சூடு போடுதல், சஸ்திர சிகித்ஸை, இவை செய்து பழைய செங்குறுவை அரிசியையும் அறுபதாங் குறுவை அரிசியையும் யவையையும் கொள்ளையும் உணவுப் பொருளாக்கிச் சாப்பிடலாம். புடல், உள்ளிப் பூண்டு, மூக்கரட்டை இலை, வன்னியிலை, கருணைக்கிழங்கு, வாஸ்துக்கீரை, பாலைக்கீரை, எலுமிச்சை, சுக்கு, நெல்லிக்காய், கடுக்காய், வெண்ணை, சேங்கொட்டை, கடுகெண்ணை, கோமூத்திரம், காடி, வால்மிளகு, கரியுப்பு, விளாம்பழம், ஒட்டகையின் மூத்திரம், பால், நெய், மற்றும் வாதத்தைப்போக்க வல்ல உணவுகள் நல்லது.

**தள்ளவேண்டியவை.** நீர்ப்பாங்கான தேசத்திலுள்ள பசு பக்ஷி மாம்ஸங்கள், மீன், பிண்ணாக்கு, தயிர், மாவுப் பண்டங்கள், உளுந்து, அவரை, மொச்சை, வில்வப்பழம், சுரை, பசளைக்கீரை, மாம்பழம், சேம்பு மற்றும் வாயுவை அதிகமாக்கும் உணவுப் பண்டங்கள் தள்ளத் தக்கவை.

வமனம், பஸ்தி, வெயில் கொள்ளுதல், மல மூத்திரங்களைத் தடை செய்தல், ஸம்போகம், வாஹனமேறுதல், குந்தி உட்காருதல் இவை தள்ளத்தக்கவை. மற்றும் ரத்தார்சஸில் ரத்த பித்தத்திற்கான சிகித்ஸையை மனதிற் கொள்ளுதல் நல்லது.

# அக்னிமாந்த்யம் முதலிய ரோகங்கள்

மந்தாக்னி, தீக்ஷ்ணாக்னி, விஷமாக்னி என ஜடராக்னியில் ஏற்படும் சீர்கேடு காரணமாக மூன்று அக்னி ரோகங்கள் ஏற்படுகின்றன. மந்தாக்னி அல்லது அக்னி மந்தத்தில் கபமும் தீக்ஷ்ணாக்னியில் பித்தமும் விஷமாக்னியில் வாயுவும் அதிகமாகி ஜடராக்னியை தூஷிப்பதால் இந்த சீர்கேடுகள் ஏற்படுகின்றன. மூன்று தோஷங்களும் ஸமமான நிலையிலிருந்து ஆரோக்கியமளிக்கும் போது ஜடராக்னியை ஸமாக்னி என்பர். ஸமாக்னியில் உண்ட உணவு சரியாக ஜீர்ணமாகும். மந்தாக்னியில் சிறிதளவுகூட ஜீர்ணமாகாது. விஷமாக்னியில் சில சமயம் உணவு நன்கு ஜீர்ணமாகியும் சில சமயம் ஜீர்ணமாகாமலும் உபத்திரவிக்கும். எவ்வளவு கடினமான குருவான உணவை உண்டாலும் ஜீர்ணம் செய்யும் தன்மை தீக்ஷ்ணாக்னிக்குண்டு. விஷமாக்னியால் வாதரோகங்களும், தீக்ஷ்ணாக்னியால் பித்த ரோகங்களும், மந்தாக்னியால் கபரோகங்களும் உண்டாகும்.

✲ (பை. ர) மந்தாக்னியில் வாந்தி, உடல் கனத்தல், அசதி, வாயில் ஜலம் ஊறுதல், தலை கனத்தல், வயிறு கனத்தல் இவை ஏற்படும். தீக்ஷ்ணாக்னியை சிலர் எல்லாவற்றையும் ஜீர்ணம் செய்யும் சக்தி யேற்படுவது காரணமாக நல்லதென்பர். விஷமாக்னியில் வயிறு உப்புசம், மலக்கட்டு, நீர்கட்டு, வயிற்றுவலி, வயிறு கனத்தல், சீதபேதி, வயிறுகடுப்பு, அதிஸாரம், குடல் இரைச்சல் இவை ஏற்படும்.

## மந்தாக்னி முதலியவைகளின் சிகித்ஸை.

மந்தாக்னியில் கபத்தை வரளச்செய்வதும், தீக்ஷ்ணாக்னியில் பித்தத்தைக் குறைப்பதும், விஷமாக்னியில் வாயுவைக் கட்டுப்படுத்துவதும் சிகித்ஸையாகும். ஸமாக்னி என்பது ஆரோக்ய நிலை. அதை ஹிதமான உணவுகளையும் பானங்களையும் ஏற்பதன் மூலம் சரியாக வைத்துக்கொள்ளவேண்டும். அக்னி மந்தித்திருக்கும் மந்தாக்னியில் உரைப்பு கசப்பு துவர்ப்பு மிக்க உணவு, ஔஷதங்களாலும், தீக்ஷ்ணாக்னியில் தயிர், பால், பாலாலான உணவுகள் இவையாலும், விஷமாக்னியில் ஸ்நேஹங்கள் (தைலங்கள்—கிருதங்கள்) புளிப்பு, உப்பு மிக்க உணவுகள் இவையாலும் அக்னியை (ஜீர்ணசக்தியை) சரியான நிலைக்குக் கொணரவேண்டும்.

**திருவிருதாதி சூர்ணம் :** ஜீரகம், ஸர்ஜக்ஷாரம், சுக்கு, திப்பிலி, மிளகு, வாய்விளங்கம், இந்துப்பு, ஓமம், பெருங்காயம், கடுக்காய் இவை வகைக்கு ஒரு தோலா, செவதை வேர் 4 தோலா இவைகளைச் சூர்ணம் செய்து கொள்ளவும். இதைச் சாப்பிட அக்னிபலம் ஏற்படும். ஜீர்ணமாகும். மலமிளகி வெளியாகும்.

✲ (பை. ர.) கடுக்காயையோ சுக்கையோ, வெல்லத்துடனே இந்துப்புடனே தொடர்ந்து சாப்பிட அக்னிபலம் பெருகும். வெல்லத்துடன் சுக்கையோ திப்பிலியையோ கடுக்காயையோ மாதுளம்பழத்தையோ சாப்பிட அஜீரணம் மூலம் அக்னிமந்தம், மலக்கட்டு முதலியவை விலகும்.

யவக்ஷாரத்தையும் சுக்கையும் ஸம அளவில் சூர்ணம் செய்து சேர்த்து நெய்யில் குழப்பி சாப்பிட்டு, மேல் இளஞ்சூடான வென்னீர் சாப்பிட பசி அதிகமாகும். அல்லது தனி சுக்குத் தூளையும் இவ்விதம் சாப்பிடலாம். கொதி கஞ்சியை ஸௌவர்சல உப்பும் பெருங்காயமும் சேர்த்துச் சாப்பிட விஷமாக்னியும் சரியாகும். சாப்பிடுவதற்கு உட்காருமுன் நாக்கை வழித்துவிடுவதும் தொண்டையை சுத்தி செய்துகொள்வதும் இஞ்சியுடன் உப்பு சேர்த்து சாப்பிடுவதும் பசி தூண்ட உதவும். எளிதில் ஜீர்ணமாகாததும்

(குரு) மேதையை வளரச் செய்வதும், கபத்தை வளர்ப்பதுமான உணவும் பகல் தூக்கமும், ஜீர்ணமாகாமலிருக்கும் தருவாயிலேயே மேல் உணவு உட்கொள்ளுவதும் இதற்கு சிகித்ஸையாகும். வயிற்றில் உணவில்லாமல் பட்டினியாக இருந்தால் வயிற்றின் சூடு குடலையே தாக்கும்.

## பஸ்மகம்

இது தீக்ஷ்ணாக்னி முற்றுவதால் ஏற்படுவது. கபம் குறைந்து பித்தாசயமான சிறுகுடல் ஆரம்பத்தில் வாயுவினால் தூண்டப் பட்ட பித்தம் ஜடராக்னி சக்தியைப் பெருக்கி பஸ்மகத்தை உண்டாக்குகின்றது. உரைப்பு மிகுந்ததும் வரண்டதுமான உணவு உட்கொள்பவர்களுக்கு, கபம் குறைந்து வாயுவும் பித்த மும் அதிகமாகி அங்குள்ள ரஸதாதுவைக் குறைத்து உண்ட உணவை உடன் ஜீர்ணமாக்கி வெளியனுப்புவதால் சிறு குடலில் காந்தல் மிகுந்து நாவரட்சி, எரிச்சல், ச்வாஸம், காஸம், தலைசுற்றுதல், மயக்கம், வீக்கம், மலம் தீய்ந்து போதல், உடல் தளர்ச்சி முதலியவை உண்டாகும். இது கட்டுப்படாது போனால் உடலிலுள்ள ஜலாம்சம் குறைந்து உடல் வரண்டு போகும். அதனால் துர்பலமும் சரீர நாசமும் ஏற்படலாம். இதில் உணவு உட்கொண்டவுடன் களைப்பும் வேதனையும் நீங்குவதும், உணவு ஜீர்ணமானதும் களைப்பும் வேதனையும் மிகுந்து போவ தும், நாவரட்சி எரிச்சல் தலை சுற்றுதல் முதலியவை ஏற்படு வதும் காணப்படும்.

இதிலும் தீக்ஷ்ணாக்னிக்கான சிகித்ஸை குணம் தர வல்லது. எளிதில் ஜீரணமாகாததும் நெய் எண்ணெய் மிகுந்ததும் குழ குழப்புள்ளதும் கெட்டியானதும் குளிர்ந்ததுமான உணவு களும், பானங்களும், பித்தஹரமான விரேசனங்களும் உபயோ கிக்கலாம். எருமைத்தயிர், எருமைப்பால், எருமைநெய் இவை களை அதிகமாய் உபயோகித்தல், கொதிகஞ்சியில் நெய் விட்டுச் சாப்பிடுவதும் அடிக்கடி பித்தத்தை வெளியாக்குவதும் நல்லது. செவ்வதை வேர், கருஞ்செவதை வேர் இவை போட்டுத் தயாரித்த பால் கஷாயம் நல்லது. குறைந்துள்ள கபத்தை அதிகப் படுத்தி வாயுவின் கோபத்தைத் தடுத்தால் பித்தம் தன் நிலைக்கு வந்து நோய் குணமாகும். இலந்தைக் கொட்டையை கல்கமாக அரைத்து ஜலத்துடன் கரைத்துச் சாப்பிடுதல், அத்திப்பட்டை யை தாய்ப் பாலில் அரைத்துக் குழப்பிச் சாப்பிடுதல், சம்பா அரிசி, குருவை அரிசி சாதத்தைப் பாலும் நெய்யும் சேர்த்து பாயஸமாக்கிச் சாப்பிடுதல், பால் முதுக்கன் கிழங்கின் சாற்

றுடன் பாலும் சேர்த்து 8 பங்கு எருமைநெய் ஒரு பங்கு ஜீவனீய கணம் கல்கமாக்கிச் சாப்பிடுதல் நல்லது.

## அஜீர்ண நிதானம்

அக்னிமந்தம் ஏற்பட்டால், உட்கொண்ட உணவு பாக மடையாமல், அதனின்றும் ஏற்பட்ட ரஸம் என்ற அன்னஸாரம் சரியாக உடலில் சேரும் தகுதியடைந்திராத நிலையை அஜீர்ணம் என்கின்றனர். இதுவே ரோகங்களுக்கு முக்கிய காரணம். ஆமம் என்ற மற்றொரு பெயரும் இதற்கு உண்டு.

ஆமம், விதக்தம், விஷ்டப்தம், ரஸசேஷாஜீர்ணம், தின பாசி அஜீர்ணம், பிராகிருத அஜீர்ணம் என இது அறுவகைப் படும். முதல் நான்கும் கெடுதி விளைவிப்பவை.

அதிக ஜலம் பருகுதல், முறைதவறி அளவைக் கவனிக்கா மல் உணவு உட்கொள்ளுதல், மலம் மூத்திரம் முதலியவைகளின் வெளியேற்றத்தை அடக்கித் தடைசெய்தல், தூக்கமின்மை இவை காரணமாக வேளையில் ஒத்துக்கொள்ளக் கூடிய லகு வான உணவும் ஜீர்ணமாகாது. அஸூயை, பயம், கோபம், பேராசை, வருத்தம், ஏக்கம், வெறுப்பு, அதிகத் தூக்கம், அதிகக் கண் விழிப்பு இவைகளின் காரணமாகவும் உட்கொண்ட உணவு ஜீர்ணமாகாமல் போகலாம்.

தளர்ச்சி, உடல் கனத்தல், மயக்கம், வாயு தடைபடுதல், மல மூத்ரங்கள் தடைபடுதல், மல மிறுகிக்கொள்ளுதல், அல்லது மல மிளகி அதிகமாக வெளியாகுதல் இவை பொதுவாக அஜீர்ணத்தின் அறிகுறிகள்.

**ஆமாஜீர்ணம்:** சரீரமும் வயிறும் கனத்தும், உமட்டலும், கன்னம் கண் இவைகளில் வீக்கமும், சாப்பிட்ட உணவின் மணம் ருசியுடன் சாப்பிட்ட உணவு ஜீர்ணமாகாததை உணர்த் தும் ஏப்பமும், ஆமாஜீர்ணத்தின் அறிகுறி. (இதில் உண்ட உணவு ஒருவித மாறுபாடும் ஏற்படாமல் ஆமாசயத்திலேயே தங்கியிருப்பதை உணரலாம்.

**விதக்தாஜீர்ணம்:** இதில் தலை சுற்றுதல், நாவரட்சி, மூர்ச் சை, பித்தத்தால் ஏற்படும் பல்வேறு வேதனைகள், புகைச்சலும் புளிப்பும் கூடிய ஏப்பம், வியர்வை, எரிவு இவை அறிகுறிகளா

கும். (உண்ட உண்வுடன் பித்தநீர் கலந்தும் ஜீர்ணமாகாதிருக்கும் நிலே.)

**விஷ்டப்தாஜீர்ணம்** : இதில் வயிற்றில் குத்துவலி, வயிற்று உப்புசம், மற்ற வாதத்தால் ஏற்படும் வேதனைகள், மலமும் கீழ் வாயுவும் சரியே வெளியாகாமை, மயக்கம், சரீரத்தில் பிடிப்பு, ஸ்தம்பித்திருப்பது போன்ற உணர்வு, உடல்வலி இவை அறி குறியாம்.

**ரஸசேஷாஜீர்ணம்** : இதில் முன் உணவு ஜீர்ணமானதன் அறிகுறியாக சுத்தமான ஏப்பம் ஏற்பட்டும் உணவில் விருப்ப மிராது. ஹிருதயம் கனத்திருக்கும். உணவில் வெறுப்பு ஏற்படும். இது உணவின் ஸாரமான பாகம் குடலிலிருந்து பிரிபடாமல் இருப்பதைக் காட்டும்.

**அஜீர்ண உபத்ரவங்கள்** : மூர்ச்சை, பிதற்றல், வாந்தி, வாயில் நீரூற்றம், கைகால் ஓய்ச்சல், தலே சுற்றுதல், இவை இதன் உபத்ரவங்கள். கடுமையான அஜீர்ணத்தால் மரணமும் ஸம்பவிக்கலாம்.

தூஷிக்கப்பட்ட அன்னரஸம் (மப்பு) உடலிலுள்ளவரை உட்கொள்ளப்பட்ட விஷத்தைப் போல் மர்மஸ்தானங்களைத் தாக்கிக்கொண்டே இருக்கும். தன்னடக்கமில்லாத மனிதன் அளவின்றி விலங்கினத்தைப் போல உணவை உட்கொண்டால், எல்லா ரோகங்களுக்கும் மூலமான அஜீர்ணத்தை அடைகிறுன். ஆமம் விஷ்டப்தம் விதக்தம் என்ற இந்த மூன்று நோய்கள் கடுமைபெறின் முறையே விஷூசீ அலஸகம் விலம்பிகா என்ற மூன்று நோய்கள் ஏற்படுகின்றன,

**விஷூசிகா** : அஜீர்ணத்தால் வாயு சரீரம் முழுவதும் தடைபட்டு ஊசிகளால் குத்துவது போல வேதனையை உண்டு பண்ணுவதால் விஷூசிகா என்ற பெயர் ஏற்படுகின்றது. உணவு ஏற்கும் வழி தெரிந்து உணவை அளவுடன் ஏற்பவர்களுக்கு இந்நோய் வருவதில்லே. வழி தெரியாது உணவில் பேராசைகொண்டு தன்னடக்கமில்லாமல் உண்பவர்கள் இந்நோய்க்கிலக்காகிறுர்கள்

மூர்ச்சை, அதிஸாரம், வாந்தி, நாவரட்சி, சூலம், மயக்கம், கைகால் குடைச்சல், கொட்டாவி, எரிச்சல், நிறம் குன்றுதல், நடுக்கம், மார்புவலி, தலேவலி இதன் குறிகள்.

**அலஸகம் :** வயிறு மிகவும் உப்பி கனக்கும். அதனால் தடுமாற்றம் அதிகமாகும். வயிற்றில் இரைச்சல், தடைபட்ட வாயு மேலும் கீழும் ஓடுவதால் ஏற்படும் வேதனை, கீழ்வாயு மலம் தடைபடுதல், நாவரட்சி, ஏப்பம் இவை இதன் அறி குறிகள்.

**விலம்பிகா :** வாயுவும் கபமும் கீழும் மேலும் அடைத்துக் கொண்டு நடுவில் கெட்டுள்ள உணவை மேல் முகமாகவோ கீழ்முகமாகவோ வெளியேறுவதைத் தடை செய்வதால் ஆமா சயத்திலேயே உணவு தங்கி இந்நோயை உண்டாக்குகின்றது. இது மிகக் கடுமையான ரோகம்,

இந்த ஆமம் எந்த இடத்தில் தங்குகின்றதோ; அந்த ஸ்தானத்திற்கேற்றவாறும், எந்த தோஷத்துடன் சேர்கிறதோ அந்த தோஷத்திற்கேற்றவாறும் விசேஷக் குறிகளை உண் டாக்குகின்றது.

**விஷூசியின் அஸாத்ய லக்ஷணங்கள் :** பற்கள் உதடு நகங் கள் இவை கருத்தும், ஞாபகசக்தி குன்றியும், வாந்தி யிருந்தும், கண் பஞ்சடைந்து உள்ளடங்கியும், குரல் ஈனமாயும், பூட்டுகள் கலகலத்துமிருக்க மனிதன் மீள்வது அரிது. தூக்கமின்மை, ஆராட்டம், நடுக்கம், நீர்த்தடை, பிரக்ஞையின்மை இவை ஐந்துகளும் விஷூசியின் உபத்திரவங்கள்.

**உணவு ஜீர்ணமானதன் அறிகுறிகள் :** சுத்தமான ஏப்பம் உத்ஸாஹம், மல மூத்திர வாயுக்கள் தடையற்று சரியாக வெளி யாதல், உடல் இலேசாக இருத்தல், சரியான பசி தாகம் இவை ஆகாரம் ஜீர்ணமானதற்கான அறிகுறிகள்.

# அஜீர்ண சிகித்ஸை

அனேகமாக கெட்ட உணவால் அஜீர்ணம் ஏற்படு கின்றது. அஜீர்ணத்தால் ரோகங்கள் அனைத்தும் ஏற்படு கின்றன. அஜீர்ணம் நீங்கியதும் வியாதிகளும் நீங்கிவிடுகின்றன. ஆமாஜீர்ணத்தில் வாந்தி செய்விப்பதும், விதக்தாஜீர்ணத்தில் பட்டினியிருப்பதும், விஷ்டப்தத்தில் ஒத்தடமும், ரஸசேஷத் தில் தூங்குவதும் சரியான உபசாரங்கள்.

உப்பு கரைத்த ஜலத்தைக் குடித்து வாந்தி எடுப்பதும், கொத்துமல்லி விதையையும் போட்டுக் காய்ச்சிய ஜலத்தைச்

சாப்பிடுவதும் ஆமாஜீர்ணத்தைப் போக்கும். வலியைக் குறைக்கும். சிறு நீரைப் பிரித்து சுத்தி செய்யும்.

விதக்தாஜீர்ணமேற்பட்டவன் குளிர்ந்த ஜலத்தைச் சாப்பிட புளிப்பு கலந்து ஸ்தம்பித்து நிற்கும் உணவு ஜீர்ணமாகி பித்தம் குறைந்து உணவுப் பாதையில் கீழிறங்கி வெளியாகும்.

விஷ்டப்தாஜீர்ணத்தில் ஒத்தடம் கொடுத்தும், உப்பு கலந்த நீரைக் குடித்தும் ஸ்தம்பத்தை மாற்றலாம்.

ரஸசேஷாஜீர்ணத்தில் பகல் தூக்கம், பட்டினி, அதிகக் காற்றோட்டமில்லாத இடத்தில் வசிப்பது இவை நல்லது.

கடுக்காயை சிற்றாமணக்கெண்ணெய்யில் வறுத்துச் சாப்பிட்டு மேல் அந்த எண்ணெயையே சாப்பிட வலியுடன் கூடிய விஷ்டப்தாஜீர்ணம் வாத பித்தகபங்களால் ஏற்பட்டதாயினும் நிவிருத்தியாகும். வயிற்றின் மேல் சுக்கு, திப்பிலி, மிளகு, பெருங்காயம், இந்துப்பு இவைகளைப் பற்றுப் போட்டு பகலில் தூங்க எல்லா அஜீர்ணமும் நிவிருத்தியாகும்.

தேகப்பயிற்சி, ஸ்திரீபோகம், வழிநடை, குதிரை போன்றவைகளின் ஸவாரி இவைகளில் அதிக ஈடுபாடுடையவர்கள் களைப்புற்றவர்கள் அதிஸாரம், சூலம், ச்வாஸம், நாவரட்சி, விக்கல், வாத நோய் இவை உள்ளவர்கள், இளைத்தவர்கள், கபம் குறைந்தவர்கள், குழந்தைகள், மதுவால் மதமடைந்தவர்கள். வயதானவர்கள், அஜீர்ணமுள்ளவர்கள், இரவில் கண் விழிப்பவர்கள், பட்டினி கிடப்பவர்கள் இவர்களை நன்கு பகலில் தூங்கச்செய்ய ஆரோக்யம் வளரும்.

**பத்யாதி சூர்ணம்:** கடுக்காய் தோல், திப்பிலி, ஸௌவர்சிலை உப்பு இவை மூன்றையும் சமனெடை சேர்த்துச் சூர்ணம் செய்து தயிர் தெளிவுடனே வென்னீருடனே சாப்பிட அஜீர்ணம், அக்னிமந்தம், அருசி, வயிறு உப்புசம், வாதகுல்மம், சூலம் இவை நீங்கும்.

**லகுவைச்வாநர சூர்ணம்:** (ஸைந்தவாதி சூர்ணம்) இந்துப்பு. கடுக்காய் தோல், திப்பிலி, கொடிவேலிவேர் பட்டை, இவைகளைச் சூர்ணம் செய்து வென்னீருடன் சாப்பிட மாம்ஸமும் நெய்யும் கலந்த உணவும் எளிதில் ஜீர்ணமாகும்.

**ஹிங்க்வஷ்டக சூர்ணம் :** (அஷ்ட சூர்ணம்) சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், இந்துப்பு, ஜீரகம், கருஞ்சீரகம், பொரித்த பெருங் காயம், இவைகளைச் சமஅளவில் சேர்த்து சூர்ணம் செய்து நெய் சேர்த்து, சாப்பிடும்போது முதல் கவளத்துடன் சாப்பிட அக்னி தீப்தி ஏற்படும். வாதகுல்மம் நீங்கும்.

**ஹிங்க்வாதி சூர்ணம் :** பெருங்காயம் பொரித்தது 1 பங்கு, கந்தகவெடியுப்பு 2 பங்கு, மிளகு, இந்துப்பு, சுக்கு, திப்பிலி, ஓமம், ஜீரகம், குரோசாணி ஓமம், கருஞ்சீரகம், தான்றிக்காய் தோல், கடுக்காய் தோல் இவை வகைக்கு 4 பங்கு, சூரத் தாவாரை, நெல்லிமுள்ளி வகைக்கு 8 பங்கு, இலந்தைப்பழம் விளாம்பழம் வகைக்கு 16 பங்கு, இவைகளை துறிஞ்சிப்பழச் சாற்றில் ஊரவைத்துக் காயவைத்துச் சூர்ணம் செய்து சாப்பிட அருசி, வயிறு உப்புசம், மலபந்தம், அக்னிமந்தம் இவை குறையும்.

**பாஸ்கரலவணம் :** திப்பிலி, கண்டந்திப்பிலி, கொத்துமல்லி விதை, கருஞ்சீரகம், இந்துப்பு, கந்தகவெடியுப்பு, தாளீஸ பத்திரி, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, வகைக்கு 8 தோலா, ஸெளவர்சில உப்பு 20 தோலா, மிளகு, ஜீரகம், சுக்கு வகைக்கு 4 தோலா ஏலரிசி, லவங்கப்பட்டை வகைக்கு 2 தோலா, கடல் உப்பு 32 தோலா, மாதுளம்விதை 16 தோலா, புளிவஞ்சி 8 தோலா, இவைகளின் சூர்ணத்தை மோர், தயிர்தெளிவு, ஸுரை, ஸீது, காடி, மாம்ஸரஸம் இவைகளுடன் சாப்பிட அக்னிமந்தம் நீங்கும். கபவாததோஷங்களால் ஏற்படும் வாத குல்மம், சூலம், அருசி, அர்சஸ், கிரஹணீ, குஷ்டம், பகந்தரம், ஹிருதய நோய், ஆமாஜீர்ணம், மலபந்தம், உதரம் முதலியவை களில் மிகவும் உதவும்.

**அக்னிமுக சூர்ணம் :** பெருங்காயம் ஒரு பங்கு, வசம்பு 2 பங்கு, திப்பிலி 3 பங்கு, சுக்கு 4 பங்கு, ஓமம் 5 பங்கு, கடுக் காய் தோல் 6 பங்கு, கொடிவேலிவேர் பட்டை 7 பங்கு, கோஷ் டம் 8 பங்கு இவைகளைச் சூர்ணம் செய்து தயிருடனே, தயிர் தெளிவுடனே, கள்ளுடனே சாப்பிட மலச்சிக்கல், அஜீர்ணம், மண்ணீரல் பெருக்கம், உதரம், உடல் சோர்வு, விஷத்தீண்டல், மூலம், சூலம், குல்மம், காஸம், ச்வாஸம், க்ஷயம் இவைகளில் நல்லது. பசியை நன்கு தூண்டும்.

✲ **பிருஹதக்னிமுக சூர்ணம் :** (பை. ர) யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், கொடிவேலிவேர் பட்டை, வட்டத்திருப்பி, புங்கம் விதை, ஐந்து உப்புகள்,

ஏலரிசி, லவங்கப்பத்திரி, சிறுதேக்கு, வாய்விளங்கம், பெருங்காயம், புஷ்கரமூலம், பூலாங்கிழங்கு, மரமஞ்சள், செவதைவேர், கோரைக்கிழங்கு, வசம்பு, வெட்பாலையரிசி, நெல்லிமுள்ளி, ஜீரகம், புளிவஞ்சி, யானைத் திப்பிலி, கருஞ்சீரகம், புளி, கொடுக்காய்புளி, ஓமம், தேவதாரு, கடுக்காய் தோல், அதிவிடயம் செவதைவேர், கொட்டக்கரந்தை, சரக்கொன்னைப் பட்டை, எள்ளுக்ஷாரம், காட்டுப்பருத்தி க்ஷாரம், முருங்கை க்ஷாரம், நீர்முள்ளி க்ஷாரம், புரசின் க்ஷாரம், பழுக்கக் காய்ச்சி கோமூத்திரத்தில் சுருக்குக் கொடுத்த மண்டூரம் இவை வகைக்குச் சமனெடை சூர்ணம் சேர்த்து துறிஞ்சிப்பழச் சாற்றில் 3 தினங்கள் பாவனை செய்து பின் மூன்று நாள் சுக்தத்திலும் * இஞ்சிச் சாற்றிலும் 3—3 தினங்கள் பாவனை செய்து உலர்த்தி எடுத்துக்கொள்ளவும் நல்ல பசி ஜீர்ணசக்தி கொடுக்க வல்லது. அஜீர்ணம், குல்மம், மண்ணீரல் பெருக்கம், அர்சஸ், உதரம், குடல் இரக்கம், அஷ்டீலை, வாதரக்தம் இவைகளைப் போக்கவல்லது.

**க்ஷாமுத்ராதி சூர்ணம் :** உப்பு, ஸூவர்சலைஉப்பு, இந்துப்பு, யவக்ஷாரம், ஓமம், குரோசாணி ஓமம், கடுக்காய் தோல், திப்பிலி, சுக்கு, பெருங்காயம், வாய்விளங்கம் இவை ஸம அளவில் சேர்த்துச் சூர்ணம் செய்து நெய் கலந்து சாப்பிட அஜீர்ணவாதம், குதவாதம், வாதகுல்மம், வாதபிரமேஹம், விஷமவாதம், விஷூசிகா, காமாலை, பாண்டு, ச்வாஸம், காஸம் இவை நீங்கும்.

**வ்யோஷாதி சூர்ணம் :** சுக்கு, திப்பிலி, மிளகு, பெருங்காயம், சிறுதேக்கு, கந்தகவெடியுப்பு, யவக்ஷாரம், வட்டத்திருப்பி, ஓமம், புளியம்பட்டை க்ஷாரம், செவ்யம், சித்திரமூலம், யானைத் திப்பிலி, லவங்கப்பட்டை, இந்துப்பு, கண்டந்திப்பிலி, ஜீரகம் இவைகளை ஸமனெடை சேர்த்துச் சூர்ணம் செய்து நெய் சேர்த்து மூன்று நாட்கள் சாப்பிட அக்னி மந்தத்தால் ஏற்படும் நோய்கள் விலகும்.

✲ **ஸைந்தவாதி சூர்ணம் :** (பை ர) இந்துப்பு, கொடிவேலிவேர் பட்டை, கடுக்காய் தோல், கிராம்பு, மிளகு, திப்பிலி, வெங்காரம், சுக்கு, செவ்வியம், ஓமம், சோம்பு, வசம்பு இவைகளை ஸமனெடை சேர்த்துச் சூர்ணம் செய்து 21 நாட்கள் எலுமிச்சம்பழச் சாற்றில் பாவனை செய்து உலர்த்தி 15-30 யவங்கள் சாப்பிட்டு மேல் வெந்நீர், இந்துப்பு போட்ட மோர், தயிர்தெளிவு காடி இவைகளைச் சாப்பிட நல்ல பசி ஏற்படும்.

---

* கிழங்கு, வேர், பழங்களை ஜலத்தில் ஊரவைத்துப் புளிக்க வைத்து எண்ணெய்யும் உப்பும் சேர்த்த காடியை சுக்தமென்பர்.

✱ **படபாமுக சூர்ணம் :** (பை. ர) கடுக்காய் தோல், சுக்கு, திப்பிலி, புங்கம்விதை, வில்வவேர், கொடிவேலிவேர் பட்டை, இவை ஸமனெடை சேர்த்துச் சூர்ணம் செய்து சம அளவு சர்க்கரை சேர்த்துச் சாப்பிட குருவான உணவையும் ஜீர்ணிக்கச் செய்யும்.

✱ **அக்னிமுகலவணம் :** (பை. ர) கொடிவேலிவேர் பட்டை, கடுக்காய் தோல், தான்றிக்காய் தோல், நெல்லிமுள்ளி, தந்தீமூலம், செவதைவேர் பட்டை, புஷ்கரமூலம் இவை வகைக்கு ஸம அளவில் சேர்த்து எல்லாவற்றிற்கும் சம இந்துப்பு சேர்த்து கள்ளிப்பால் விட்டுப் பிசறி கள்ளித் தண்டில் நடுவில் குடைந்தெடுத்த பள்ளத்திலிட்டு நிரப்பி, மேல் 2 அங்குலம் மெல்லிய களிமண் பூசிக் காய்ந்ததும் அடுப்பிலிட்டு பூச்சு சிவக்கும் வரை எரித்தெடுத்து ஆறியதும் சூர்ணம் செய்து சாப்பிட நல்ல பசி ஏற்படும். கல்லீரல் பெருக்கம், மண்ணீரல் பெருக்கம், உதரம், வயிற்று உப்புசம், குல்மம், மூலம், விலாவலி இவைகளைப் போக்கும்.

✱ **படபானல சூர்ணம் :** இந்துப்பு கண்டந்திப்பிலி, திப்பிலி, செவ்யம், கொடிவேலிவேர் பட்டை, சுக்கு, கடுக்காய் இவை முறையே ஒவ்வொரு பங்கு அதிகமாகச் சேர்த்துச் சூர்ணம் செய்து கொள்ளவும். அக்னிபலம் பெருக நல்லது.

**ஸஞ்சீவினி குடிகா:** வாய்விளங்கம், சுக்கு, திப்பிலி, கடுக்காய் தோல், கொடிவேலிவேர் பட்டை, தான்றிக்காய் தோல், வசம்பு, சீந்திற்கொடி, சேங்கொட்டை, வத்ஸநாபி, இவைகளை வகைக்குச் சமனெடை சேர்த்து கோமூத்திரம் விட்டரைத்துக் குந்துமணியளவு மாத்திரை செய்து கொள்ளவும். இஞ்சிச் சாற்றுடன் அஜீர்ணத்தில் ஒரு மாத்திரையும் விஷூசிகாவில் இரண்டும், பாம்பு விஷத்தில் மூன்றும் ஸந்நிபாதத்தில் நான்கும் கொடுக்க நல்லது.

**தநஞ்ஜய சூர்ணம் :** ஜீரகம், கொடிவேலிவேர் பட்டை, செவ்வியம், சந்தனம், வசம்பு, லவங்கப்பட்டை, ஏலரிசி, பூலாங்கிழங்கு, கொட்டக்கரந்தை, கருஞ்சீரகம், சிறுநாகப்பூ, இவை வகைக்கு 1 தோலா சோம்பு ½ தோலா, ஓமம், கண்டந்திப்பிலி, ஸர்ஜக்ஷாரம், கடுக்காய் தோல், ஜாதிக்காய், கிராம்பு, இவை வகைக்கு 2 தோலா, கொத்துமல்லி விதை, கொடிவேலிவேர் பட்டை வகைக்கு 3 தோலா, திப்பிலி 4 தோலா, சாம்பர்உப்பு 4 தோலா, மிளகு 7 தோலா, செவதைவேர் 8 தோலா, உப்பு இந்துப்பு, சுக்கு வகைக்கு 10 தோலா, காடி 32 தோலா, புளி

16 தோலா, இவைகளை யரைத்து மாத்திரை செய்துகொள்ளவும். அஜீர்ணம், சூலம், மலக்கட்டு, வயிற்று உப்புசம், கிரஹணீ, அருசி இவை நீங்கும்.

**சங்கவடீ 1 :** புளியம்பட்டை க்ஷாரம், அரசம்பட்டை க்ஷாரம், கள்ளி க்ஷாரம், நாயுருவி க்ஷாரம், எருக்க க்ஷாரம், ஐந்து உப்புகள், இவை எல்லாம் சேர்த்து 8 தோலா, வத்ஸநாபி, கந்தகம், ரஸம், வெங்காரம், இவை வகைக்கு ஒரு தோலா, பெருங்காயம், திப்பிலி, சுக்கு, மிளகு, ஜீரகம், இவை வகைக்கு 2 தோலா, சங்குத் தூள் 2 தோலா, திரிபலை ஒரு தோலா, கிராம்பு 2 தோலா. இவைகளைச் சூர்ணம் செய்து ஏழுநாள் எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்து 2-4 யவ அளவு மாத்திரை செய்யவும். இதைச் சாப்பிட வாத அஜீர்ணம், பித்தாஜீர்ணம், கபாஜீர்ணம், விஷூசி, சூலம், வயிற்று உப்புசம், இவை நீங்கும்.

**சங்கவடீ 2 :** புளியம்பட்டை க்ஷாரம் 4 தோலா, ஐந்து உப்புகள் சேர்ந்து 4 தோலா, இதை எலுமிச்சம்பழச் சாற்றில் கரைத்து அதில் பழுக்கக் காய்ச்சிய ஒரு பலம் நிறையுள்ள சங்கைத் துவைத்து சங்கு கரைந்ததும் அதில் பெருங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலி, இவை வகைக்கு 4 தோலா, ரஸம், கந்தகம், வத்ஸநாபி, வகைக்கு 1/3 தோலா இவைகளை முறைப்படி கலந்து மாத்திரை செய்துகொள்ளவும். ஜ்வரம், கிரஹணி, வயிற்றுவலி, பரிணாமசூலம் இவை நீங்கும்.

**அமிருதஹரீதகீ :** நூறு சூரத்துக் கடுக்காய்களை மோருடன் வேகவைத்து வெந்ததும் விதை நீக்கி, அத்துடன் திப்பிலி, கண்டந்திப்பிலி, செவ்யம், கொடிவேலிவேர் பட்டை, சுக்கு, மிளகு, இந்துப்பு, ஸௌவர்சிலைஉப்பு, வெடியுப்பு, கந்தகவெடியுப்பு, சவுட்டுப்பு, பெருங்காயம், யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், ஜீரகம், ஓமம், வகைக்கு 2 தோலா, செவதைவேர் 16 தோலா, இவைகளின் வஸ்திரகாயம் செய்த சூர்ணத்தை, காடியில் பாவனை செய்து கடுக்காயின் உள் திணித்து வெயிலிலுலர்த்திக் கொள்ளவும். தினமும் ஒரு கடுக்காய் சாப்பிட அஜீர்ணம் அக்னிமந்தம், உதரம், குல்மம், சூலம், கிரஹணீ, அர்சஸ், மலபந்தம், வயிற்று உப்புசம், வயிற்று வலி, ஆமவாதம் இவைகளை நீக்கும்.

**விடங்காதி அவலேஹம் :** வாய்விளங்கம், சேங்கொட்டை சுத்தி செய்தது, கொடிவேலிவேர் பட்டை, கடுக்காய் தோல்,

சுக்கு இவைகளின் சூர்ணத்தை சம அளவு வெல்லமும் நெய்யும் சேர்த்து சாப்பிட அக்னிமந்தம் தீரும்.

உண்ட உணவும் மார்பகத்திலும் கோஷ்டத்திலும் கலந்த மலங்களும் விதாஹமடைந்து எரிவை உண்டாக்கினுல், திராக்ஷையையோ கடுக்காயையோ தேன் சர்க்கரை சேர்த்துச் சாப்பிட ஸுகம் பெறலாம்.

கொடிவேலிவேர் பட்டை, செவ்யம், சுக்கு, திப்பிலி, ஓமம் இவை சேர்த்து கஞ்சி தயாரித்துச் சாப்பிட குல்மம், வாதசூலம் குறையும். அக்னிமந்தம் நீங்கும்.

கிராம்பும் கடுக்காயும் சேர்த்துக் கஷாயமிட்டு இந்துப்பு போட்டு சாப்பிட மப்பு மலமிளகி வெளியாகி அஜீர்ணம் நீங்கும். கொத்துமல்லிவிதை, சுக்கு இவைகளாலான கஷாயம் ஆமாஜீர்ணத்தை நீக்கும். சூலம் அக்னிமந்தம் இவைகளைப் போக்கும்.

**அக்னிகர கிருதம்:** ஓரிலைவேர், கண்டங்கத்திரிவேர், முள்ளுக்கத்திரிவேர், நெரிஞ்சில், கடுக்காய் தோல், சுக்கு, திப்பிலி, மிளகு, கண்டந்திப்பிலி, இந்துப்பு, சித்தரத்தை, யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், ஜீரகம், வாய்விளங்கம், பூலாங் கிழங்கு இவை வகைக்கு ஒரு தோலா கல்கம், நெய் 68 தோலா, துறிஞ்சிப்பழச் சாறு, இஞ்சிச் சாறு, மோர், தயிர் தெளிவு, கள்ளுத் தெளிவு, ஸௌவீரக்காடி, துஷோதகக்காடி, அன்னக் காடி, இவை வகைக்கு 68 தோலா, இவைகளை முறைப்படி காய்ச்சி கிருதமாக்கிச் சாப்பிட சூலம், குல்மம், உதரம், ச்வாஸம், காஸம், வாயு, கபம் நீங்கும்.

**தசமூல கிருதம்:** மிளகு, கண்டந்திப்பிலி, சுக்கு, திப்பிலி, சேங்கொட்டை, ஓமம், வாய்விளங்கம், யானைத்திப்பிலி, பெருங் காயம், ஸுவர்சிலை உப்பு, ஜீரகம், கந்தகவெடியுப்பு, கொத்து மல்லிவிதை, கடல்உப்பு, இந்துப்பு, யவக்ஷாரம் வசம்பு, கொடி வேலிவேர் பட்டை, வசம்பு-இவை வகைக்கு 2 தோலா கல்கம், நெய் 128 தோலா, தசமூல கஷாயம் 512 தோலா, பால் $6\frac{1}{4}$ படி இவைகளைக் கஷாயமாக்கிச் சாப்பிட அக்னிமந்தம், கிரஹணீ, மலக்கட்டு, அஜீர்ணம், துர்ப்பலம், மண்ணீரல் பெருக்கம், காஸம், ச்வாஸம், க்ஷயம், அர்சஸ், பகந்தரம், கபவாயு, கிருமிக ளால் ஏற்படும் நோய்கள் நீங்கும்.

# அஜீர்ண மாற்றுபசாரங்கள்

தேங்காய் உண்டதால் ஏற்பட்ட அஜீர்ணத்தில் அரிசியை மென்று சாப்பிட நல்லது. அவ்விதமே மாம்பழத்திற்குப் பாலும், நெய்க்கு எலுமிச்சம்பழச் சாறும், வாழைப்பழத்திற்கு நெய்யும், கோதுமையன்னத்திற்கு கக்கரிக்காயும், மாம்ஸ உணவிற்குக் காடியும், நார்த்தைக்கு வெல்லமும், கேழ்வரகுக்கு சக்கரவள்ளிக்கிழங்கும், பலாப்பழத்திற்கு வாழைப்பழமும், எலுமிச்சம்பழத்திற்கு உப்பும், உப்புக்கு அரிசி கழுவிய ஜலமும், உளுந்துக்கு மோரும், கொண்டைக்கடலைக்கு முள்ளங்கியும், பயற்றுக்கு நெல்லிமுள்ளியும், யவைக்கு ஓமமும், உளுந்துக்குக் கல்கண்டும், கொள்ளுக்கு நல்லெண்ணெய்யும், முலாம் பழம், பிஸ்தா, சப்போட்டா இவைகளுக்கு திராக்ஷையும், வாதாம்பருப்பு, வெள்ளரிவிதை இவைகளுக்கு கிராம்பும், தினை, வரகு, கம்பு, மங்குட்டப்பயறு இவைகளுக்கு தயிர்த் தெளிவும், துவரைக்குக் காடியும், மாவுப் பண்டங்களுக்குக் குளிர்ந்த ஜலமும், உப்புமா போன்றவைகளுக்கு இந்துப்பும், உளுந்தாலானவைகளுக்கு வேப்பம்வேரும், பாலால் தயாரான பாயசத்திற்கு பயற்றங்கஞ்சியும், மீனுக்கு மாம்பழமும், ஆமை மாமிசத்திக்கு யவச்சாரமும், மயில், புறு, காடை மாமிசங்களுக்கு நாணல் வேரும், கருணைக்கிழங்கு வெல்லமும், சேப்பங்கிழங்கிற்கு அரிசி கழுவிய ஜலமும், க்ஷாரங்களுக்கு மோரும், பசுவின் மோருக்கு மோர்தெளிவு காய்ச்சியதும், எருமை மோருக்கு உப்பும், எருமைத் தயிருக்கு சங்குத்தூளும், பால் பானகங்களுக்குத் திரிகடு சூர்ணமும், கல்கண்டுக்கு சுக்கும், வெல்லத்திற்கு சுக்கும், கோரைக்கிழங்கும், கரும்பிற்கு இஞ்சியும் அஜீர்ணத்தை மாற்றும் சரக்குகளாகும்.

(பாவப்ரகாசம்) பனம் நொங்கிற்கு அரிசியும், ஒட்டுமாம் பழத்திற்குப் பாலும், சாரைப்பருப்பிற்கு கடுக்காயும், இலுப்பை வில்வம் வெள்ளரி, ஈச்சை, பேரீச்சை, விலாம்பழம், நெய் மோர் இவைகளுக்கு, வேப்பங்கொட்டையும், பேரீச்சை, சிங்காடங்காய் இவைகளுக்கு கோரைக்கிழங்கும் சுக்கும், அத்திப்பழத்திற்கும் அரசம்பழத்திற்கும் இச்சிப்பழத்திற்கும் நீராகாரமும், அரிசிக்குப் பாலும், பாலுக்கு ஓமமும், அறுபதாங் குறுவைக்கு மோர்த்தெளிவும், அஜீர்ணத்தை மாற்றவல்லவை.

**அஜீர்ணஹரீ வடீ:** சுத்த நேர்வாள் விதை, சித்திர மூலப் பட்டை, சுக்கு, கிராம்பு, கந்தகம், ரஸம், வெங்காரம், மிளகு, ஸமுத்ராப்பச்சைவேர், வத்ஸநாபி இவை சம அளவு கல்வத்திலிட்டு, இரண்டு யாமங்கள் அரைத்துப் பிறகு தந்தீமூல கஷாயம் விட்டு 15 பாவனைகள் செய்தரைத்துப் பிறகு எலுமிச்சம் பழச்சாறு, சித்திரமூலப்பட்டை கஷாயம் இஞ்சிச்சாறு இவைகளில் 3-3 பாவனையும் செய்து காய்ந்த பட்டாணி அளவு மாத்திரை செய்து கொள்ளவும். மலத்தை இளக்கும். பசியைத்தூண்டும். சூலம், ஜீர்ணஜ்வரம், காஸம், அரோசகம், பாண்டு, உதரம், சொரி, பஸ்திசூலம், ஹலீமகம், மந்தாக்னி இவைகளைப் போக்கும்.

**அக்னிகுமார ரஸம்:** (1) ரஸம், கந்தகம், வத்ஸநாபி, வெங்காரம் வகைக்கு ஒரு தோலா, மிளகு 8 தோலா, சங்குபஸ்மம் வராடபஸ்மம் 2-2 தோலா இவைகளை எலுமிச்சம்பழச் சாறு விட்டு 7 நாள் பாவனை செய்து 2 குந்துமணியளவு மாத்திரை செய்து கொள்ளவும். வாதாஜீர்ணம், விஷூசிகா, கபநோய் இவைகளைப் போக்கும்.

**அக்னிகுமார ரஸம்:** (2) முதல் அக்னிகுமார ரஸத்தில் வத்ஸநாபியை மாத்திரம் 3 தோலா சேர்த்து மற்றவைகளை அதன்படி சேர்த்துத் தயாரிப்பது. இதுவும் வாதாஜீர்ணம் முதலியவைகளில் நல்லது.

✲ **அக்னிகுமார ரஸம்:** (3) (பை. ர.) ரஸம் 1 தோலா, கந்தகம் 2 தோலா, வெங்காரம் 2 தோலா, திரிபலை, யவக்ஷாரம், திரிகடு, ஐந்துப்புகள், இந்த 12 சரக்குகளும் வகைக்கு 1 தோலா, இவைகளை இஞ்சிச்சாறு விட்டு 7 நாள் அரைத்துக் காய வைத்துத் தூளாக்கி இஞ்சிச் சாற்றுடன் 10-யவ அளவு கொடுக்க நல்ல அக்னிபலம் கொடுக்கும், அக்னிமந்தம், வீக்கம், பாண்டு, அர்சஸ், கிரஹணீ, அஜீர்ணம் இவைகளில் நல்லது. பத்யம் கிடையாது.

**கிரவ்யாத ரஸம்:** ரஸம் ஒரு தோலா, கந்தகம், அயஸ் பஸ்மம், திப்பிலி, கண்டந்திப்பிலி, சித்திரமூலவேர் பட்டை, சுக்கு, கிராம்பு, மிளகு, வெங்காரம் வகைக்கு 2 தோலா, ஸௌவர்சலை உப்பு ஒரு தோலா இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றில் 7 பா

வனை செய்து காயவைத்து 10-யவ அளவு மோருடன் சாப்பிட எல்லா உணவும் ஜீர்ணமாகும்.

**மஹா கிரவ்யாத ரஸம்:** ரஸம் 4 தோலா, கந்தகம் 8 தோலா, தாம்ரபஸ்மம், லோஹ பஸ்மம் 2—2 தோலா, இவைகளை அரைத்து (நெய் தடவிய இருப்புக் கரண்டியிலிட்டு நெருப்பில் வைத்து) உருக்கி (சாணத்தின்மேல் வைத்த) சிற்றுமணக்கிலை மேல் தடவி மூடி பர்ப்படி செய்து இருப்புச் சட்டியிலிட்டு 400 தோலா எலுமிச்சம்பழச்சாறு விட்டு அடுப்பிலேற்றி இளந் தீயில் எரித்துச் சுண்டிய பின் அவ்விதமே திப்பிலி, கண்டந் திப்பிலி, செவ்யம், கொடிவேலிவேர்ப்பட்டை, சுக்கு இவை களின் கஷாயம் 200 தோலா, புளிவஞ்சி கஷாயம் 200 தோலா இவைகளில் 50 பாவனை செய்து எடுத்துத் தேறிய மருந்திற்குச் சமம் வெங்காரமும் கந்தக வெடியுப்பு பாதியும் சேர்த்து எல்லா வற்றிற்கும் சமம் மிளகுத் தூளும் கடலைப்புளிப்பும் விட்டு 7 நாள் அரைத்துக் கொள்ளவும். இதில் 2—4 யவ அளவு இந்துப்பு சேர்த்த மோருடன் சாப்பிட மிகக்குருவான மாமிச உணவும்கூட ஜீர்ணமாகும். மிக இளைப்பு, மிகப் பருத்திருத் தல், இடுவிஷம், ஆமாதிஸாரம், குல்மம், மண்ணீரல் பருத்தல், ஜலோதரம், சூலம், வாதகப நோய்கள், கிரஹணீ, அதிஸாரம், வாத கிரந்தி, மஹோதரம் இவைகள் நீங்கும்.

**அஜீர்ணஹரயோகம்:** யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், வெங் காரம், ரஸம், கிராம்பு, இந்துப்பு, உப்பு, கந்தகவெடியுப்பு, திப்பிலி, கந்தகம், சுக்கு, மிளகு, இவை வகைக்கு 4 தோலா, வத்ஸநாபி 1 தோலா, இவைகளைக் கல்வத்திலிட்டு எருக்கம் பாலில் 7 பாவனை செய்து மடக்கிலிட்டு சீலைமண் செய்து கஜ புடமிட்டாறியபின் எடுத்து, கிராம்பு, மிளகு, படிக்காரம், இவை வகைக்கு 4 தோலா சேர்த்தரைத்து தினம் மாலை வேளை களில் 4-யவ அளவு கொடுக்க உண்ட உணவு ஜீர்ணமாகும். கபநோய் தீரும்.

**அக்னிமுக ரஸம்:** ரஸம், கந்தகம், வத்ஸநாபி இவைகளை வகைக்கு ஒரு தோலா சேர்த்து இஞ்சிச் சாறு விட்டரைத்துக் கொள்ளவும். அதில் அரசம்பட்டைக்ஷாரம், புளியம்பட்டை க்ஷாரம், நாயுருவிப்பட்டை க்ஷாரம், யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், வெங்காரம், ஜாதிக்காய், கிராம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, திரிபலை, இவை வகைக்கு 1 தோலா, சங்கபஸ்மம், 5 தோலா, பெருங்காயம், ஜீரகம் வகைக்கு 2 தோலா. இவைகளை எலுமிச் சம்பழச் சாறு விட்டரைத்துக் குன்றுமணியளவு மாத்திரை

செய்து கொடுக்க, தீபன பாசனமாகும். அஜீர்ணம், சூலம், காலரா, விக்கல், குல்மம், உதரம் இவைகளைப் போக்கும்.

**அஜீர்ணரி ரஸம் :** ரஸம், கந்தகம் 4—4 தோலா, கடுக்காய் தோல் 8 தோலா, சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு 12—12 தோலா கஞ்சா அல்லது பங்கு 16 தோலா, இவைகளை எலுமிச் சம்பழச் சாற்றில் அரைத்து 7 நாள் வெயிலிலிட்டு, எடுத்துக் கொள்ளவும். நல்ல தீபன பாசனமாகும். ஆஹாரம் ஜீர்ண மாகி மலமுமிளகிப் போகும்.

**அஜீர்ணஹர ரஸம் :** ரஸம், கந்தகம், வத்ஸநாபி, வெங் காரம், யவக்ஷாரம், சிறுதேக்கு, கொடிவேலிவேர்ப் பட்டை, மூக்கரட்டை, திரிகடு, அயஸ்பஸ்மம், அப்பிரக பஸ்மம், திரிபலை, இவைகளை கருசலாங்கண்ணிச் சாற்றிலும், நொச்சிச் சாற்றி லும், இஞ்சிச் சாற்றிலும், துறஞ்சிச் சாற்றிலும் ஒவ்வொரு பாவனை செய்து உலர்த்தி 5-யவ அளவு சாப்பிட மண்ணீரல் பருத்தல், குல்மம், ஜலோதரம் இடுப்புவலி, உதரம், வீக்கம், ஆமசூலம் இவை நீங்கும்.

**பாசுபத ரஸம் :** ரஸம் 1 தோலா, கந்தகம் 2 தோலா. கஜ் ஜலி செய்யவும். எஃகு பஸ்மம் 3 தோலா, வத்ஸநாபி 6 தோலா இவைகளை கொடிவேலிச் சாறு விட்டு பாவனை செய்து திரிகடு, கிராம்பு, ஏலம், 3—3 தோலா, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, ஐந் துப்புகள் 1½—1½ தோலா, கள்ளி, எருக்கு, புளியம்பட்டை, நாயுருவி, அரசம்பட்டை இவைகளின் தனித்தனி க்ஷாரம் 2—2 தோலா, வெங்காரம். யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், பெருங்காயம், ஜீரகம், கடுக்காய் இவை வகைக்கு ஒரு தோலா, ஊமத்தை விதை பஸ்மம் 7½ தோலா இவைகளைச் சேர்த்து எலுமிச்சம் பழச் சாற்றிலரைத்து குந்துமணி அளவு மாத்திரை செய்து கொள்ளவும். பனங்கிழங்குச் சாற்றுடன் மோர் சேர்த்து உதரத்திலும், காரிலவம்பட்டை கஷாயத்துடன் அதிஸாரத்தி லும், மோரும் இந்துப்பும் சேர்த்து கிரஹணியிலும், சுக்கு. பெருங்காயம் ஸுவர்சல உப்பு இவைகளுடன் சூலத்திலும், மோருடன் மூலத்திலும், ராஜயக்ஷ்மாவில் திப்பிலியும், சுக்கு. சுவர்சலைஉப்புடன் வாதநோயிலும் சீந்தில்சர்க்கரையுடன் பித்த நோயிலும், திப்பிலித்தூள் தேன் சேர்த்துக் கபநோயிலும் கொடுக்க நல்லது.

**ஆதித்ய ரஸம் :** லிங்கம், வத்ஸநாபி, கந்தகம், திரிகடு, திரிபலை ஜாதிக்காய், கிராம்பு, ஐந்து உப்புகள் இவைகளைச் சம எடை சேர்த்து எலுமிச்சம்பழச் சாறு விட்டு 7 பாவனை செய்து அரைத்து ½ குந்துமணி யளவு மாத்திரை செய்யவும். ஜீர்ணகாரி. அஜீர்ணம் நீங்கும்.

**ஹுதாசன ரஸம் 1 :** வத்ஸநாபி 1 பங்கு, வெங்காரம் 4 பங்கு, மிளகு 12 பங்கு. இவைகளையரைத்துக் கொள்ளவும். கபவாத நோய்களை நீக்கும். நல்ல தீபனமாகும்.

**ஹுதாசன ரஸம் 2 :** ரஸம், கந்தகம், வெங்காரம், 1—1 தோலா, சோழி பஸ்மம், சங்கு பஸ்மம். வத்ஸநாபி, ஓட்டடை 3—3 தோலா, மிளகு 8 தோலா எலுமிச்சம்பழச் சாற்றிலிட்டு அரைத்துப் பயறளவு மாத்திரை செய்து கொள்ளவும். குல்மம், அரோசகம், சூலம், அக்னிமந்தம், அஜீர்ணம், விஷூசீ, கபம், தலைகனம், காசம் இவைகளில் இஞ்சிச் சாற்றுடன் கொடுக்க நல்லது.

**அஜீர்ணகண்டக ரஸம் :** சுத்தரஸம், வத்ஸநாபி, கந்தகம் 1—1 தோலா மிளகு 3 தோலா இவைகளை கண்டங்கத்திரிப் பழச் சாற்றில் 21 நாள் அரைத்து குந்துமணி அளவு சாப்பிட உபத்திரவமுள்ள விஷூசிகா, அஜீர்ணம் நீங்கும்.

✲ **ராமபாணம் :** (பை. ர.) ரஸம் வத்ஸநாபி, கிராம்பு, கந்தகம் 1—1 தோலா, மிளகு 2 தோலா, ஜாதிக்காய் ½ தோலா இவைகளை புளியம்பழச் சாற்றில் அரைத்து உளுந்தளவு மாத்திரை செய்யவும். அக்னி மந்தம், கிரஹணீ, ஆமவாதம் இவை நீங்கும்.

**அக்னிதுண்டி :** ரஸம், வத்ஸநாபி, கந்தகம், ஓமம், திரிபலை, ஸர்ஜக்ஷாரம், யவக்ஷாரம், சித்ரமூலப்பட்டை, இந்துப்பு, ஜீரகம், ஸுவர்சிலைஉப்பு, வாய்விளங்கம், உப்பு, வெங்காரம் இவை வகைக்கு 1 தோலா, எட்டிக்கொட்டை சுத்திசெய்தது 16 தோலா இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து மிள களவு மாத்திரை செய்து சாப்பிட அக்னிமந்தம் தீரும்.

✲ **அமிருதகல்ப வடீ :** (பை. ர.) ரஸம், கந்தகம், வத்ஸநாபி, வெங்காரம் இவைகளைக் கருசலாங்கண்ணிச் சாற்றில் 3 நாட்கள் அரைத்து பயறளவு மாத்திரை செய்து கொடுக்க சூலம், அக்னிமந்தம், அஜீர்ணம், இவைகளைப் போக்கும். தாதுபுஷ்டி யளிக்கும்.

✲ அம்ருதவடி (பை. ர.) சுத்த வத்ஸநாபி 2 பங்கு, சோழிபஸ்மம் 5 பங்கு, மிளகு 9 பங்கு, இவைகளை ஜலம் விட்டரைத்துப் பயறளவு மாத்திரை செய்து கொடுக்க பித்தங்களால் ஏற்படும் அக்னிமந்தம் நீங்கும்.

✲ க்ஷாரதாஸாகர ரஸம் (பை. ர.) திரிகடு, திரிபலை, ஐந்து உப்புகள், யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், வெங்காரம், ரஸம், கந்தகம் இவை வகைக்கு 1 தோலா, வத்ஸநாபி 2 தோலா இவைகளை ஜலம் விட்டரைத்து மணியளவு மாத்திரை செய்து 5 கிராம்புகள் சேர்த்துச் சாப்பிட பசி வளரும்.

✲ லவங்காதி வடீ (பை. ர.) கிராம்பு, சுக்கு, மிளகு, பொரித்த வெங்காரம் இவைகளை நாயுருவி கஷாயத்தாலும், கொடிவேலிப் பட்டைச் சாற்றாலுமரைத்து 4-6 யவ அளவு மாத்திரை செய்து கொண்டு சாப்பிட மாமிச உணவும் ஜீர்ணமாகும்.

✲ மஹாலவங்காதி வடீ (பை. ர.) லவங்கம், ஜாதிக்காய், கொத்துமல்லிவிதை, சோஷ்டம் ஜீரகம், கருஞ்சீரகம், சுக்கு, திப்பிலி, மிளகு கடுக்காய் தோல், தான்றிக்காய் தோல், நெல்லிமுள்ளி, ஏலரிசி, லவங்கப்பட்டை, வெங்காரம், சோழிபஸ்மம், கோரைக்கிழங்கு, வசம்பு, ஓமம், கந்தகவெடியுப்பு, இந்துப்பு இவை வகைக்கு ஒரு தோலா, ரஸம், கந்தகம், அப்பிரகபஸ்மம் $\frac{1}{2}$—$\frac{1}{2}$ தோலா, அயஸ்ஸிந்தூரம் 1 தோலா, இவைகளை வெற்றிலைச் சாற்றிலரைத்து 6 யவ அளவு மாத்திரை செய்து வென்னீருடன் சாப்பிட கிரஹணி, மலக்கட்டு, மப்பு, பிரவாஹிகை, ஜ்வரம், கபசூலம், குஷ்டம், அம்லபித்தம், வாயு, அக்னிமந்தம், கோஷ்டவாயு இவை நீங்கும்.

✲ மஹோததி ரஸம் (பை. ர.) வத்ஸநாபி, ரஸம், 1—1 தோலா ஜாதிக்காய், பொரித்த வெங்காரம் 2—2 தோலா, திப்பிலி 3 தோலா, சுக்கு 6 தோலா, சோழி பஸ்மம் 6 தோலா, கிராம்பு 5 தோலா இவைகளைக் கல்வத்திலிட்டு ஜலம் விட்டரைத்து 4-6 யவ அளவு மாத்திரை செய்து சாப்பிட பசி வளரும். ஜீர்ண சுக்தி சீராகும்.

✲ பிருஹன்மஹோததி ரஸம் (பை. ர.) கிராம்பு, கொடிவேலி வேர்பட்டை, சுக்கு, நேர்வாளம், பொரித்த வெங்காரம் வகைக்கு $\frac{1}{2}$ தோலா, சமுத்திராப்பச்சைவேர் 1 தோலா, எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு தந்தீமூலத்தின் கஷாயத்தால் 14 பாவனையும் எலுமிச்சம்பழச் சாற்றால் 3 பாவனையும், ஸமுத்திராப்பச்சை இலைச்சாற்றால் 5 பாவனையும்

செய்து, பிறகு அதில் ரஸம் கந்தகம் வத்ஸநாபி வகைக்கு ஒரு தோலா சேர்த்து, இஞ்சிச்சாற்றிலும் கொடிவேலிவேர் சாற்றிலும் அரைத்துப் பயறளவு மாத்திரை செய்து தினமும் சாப்பிட பசி அதிகமாகும். நாட்பட்ட ஜ்வரம் போகும்.

❋ **ஹுதாசன ரஸம்** (பை. ர.) கந்தகம் வெங்காரம் 1–1 தோலா, வத்ஸநாபி 3 தோலா, மிளகு 8 தோலா இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து பயறளவு மாத்திரை செய்து இஞ்சிச் சாற்றுடன் கொடுக்க சூலம், அரோசகம், குல்மம், விஷூசீ, அக்னிமந்தம், அஜீரணம், ஸந்நிபாதம், சீதம், ஜாட்யம், தலைவலி இவை நீங்கும்.

❋ **ஜாதீபலாதி வடீ** (பை ர.) ஜாதிக்காய், கிராம்பு, திப்பிலி, இந்துப்பு, வத்ஸநாபி, சுக்கு, கருஊமத்தை விதை, லிங்கம், வெங்காரம், இவைகளை வகைக்குச் சம எடை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்து சாப்பிட அக்னிமந்தம் தீரும்.

❋ **பாஸ்கர ரஸம்** (பை. ர.) வத்ஸநாபி, ரஸம், ஜாதிக்காய், கந்தகம், சுக்கு, மிளகு, திப்பிலி, வெங்காரம், ஜீரகம், வகைக்கு ஒரு தோலா, அயஸ்லிந்தூரம் 2 தோலா, சங்கபஸ்மம், அப்பிரகபஸ்மம், சோழிபஸ்மம், இவைகளுக்குச் சமம் கிராம்பு, இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றில் 7 நாள் அரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்து வெற்றிலையில் வைத்துச் சாப்பிட சூலம், விஷூசி, அக்னிமந்தம் இவை நீங்கும்.

❋ **அக்னிஸந்தீபன ரஸம்** (பை. ர.) திப்பிலி, கண்டந்திப்பிலி, செவ்யம், கொடிவேலிவேர்பட்டை, சுக்கு, ஐந்துப்புகள். யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், ஜீரகம், கருஞ்சீரகம், ஓமம், குரோசாணி ஓமம், சோம்பு, பொரித்த பெருங்காயம், கொடிவேலிவேர்பட்டை, ஜாதிக்காய், கோஷ்டம், ஜாதிப்பத்திரி, ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, புளியம்பட்டை க்ஷாரம், நாயுருவி க்ஷாரம், வத்ஸநாபி, ரஸம், கந்தகம், அயஸ்லிந்தூரம், அப்ரகபஸ்மம், வங்கபஸ்மம், கிராம்பு, கடுக்காய் இவை வகைக்கு 1 தோலா, புளிவஞ்சி 2 தோலா, சங்கபஸ்மம் 4 தோலா, இவைகளைத் திப்பிலி, கண்டந்திப்பிலி, செவ்யம், கொடிவேலிவேர் பட்டை, சுக்கு இவைகளின் கஷாயத்திலும், கொடிவேலிவேர் பட்டை கஷாயத்திலும், நாயுருவிவேர் கஷாயத்திலும் உப்பிலாங்கொடிச் சாற்றிலும் 3—3 பாவனை செய்து எலுமிச்சம்பழச் சாற்றில் 21 பாவனை செய்து இலந்தைக்கொட்டையளவு மாத்திரை செய்து காலையிலும் மாலையிலும் சாப்பிட பசி அதிகமாகும். அஜீர்ணம், அம்லபித்தம், சூலம் இவை நீங்கும்.

✲ **திரிபலாலௌஹம்** (பை. ர.) திரிபலை, கோரைக்கிழங்கு, வாய் விளங்கம், சர்க்கரை, திப்பிலி, நாயுருவிவிதை, அயஸ்விந்தூரம் இவை ஸம அளவு சேர்த்தரைத்து 4 யவ அளவு சாப்பிட பஸ்மகம் நீங்கும்.

✲ **பிரதீபனராஜவல்லப ரஸம்** (பை. ர.) ரஸம் 2 தோலா, கந்தகம் 2 தோலா, வத்ஸநாபி 2 தோலா நவச்சாரம் 1 தோலா, இவைகளை அரைத்து உளுந்தளவு மாத்திரை செய்து சாப்பிட அஜீர்ணம், அக்னி மந்தம் தீரும்.

✲ **விஜய ரஸம்** (பை. ர.) ரஸம், வத்ஸநாபி, கந்தகம், யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், பொரித்த வெங்காரம் வகைக்கு 4 தோலா, கிராம்பு 20 தோலா, இவைகளை தசமூல கஷாயத்திலும், கஞ்சா கஷாயத்திலும் கொடிவேலிவேர்பட்டை கஷாயத்திலும், கரிசலாங்கண்ணிச் சாற்றிலும் முருங்கைப்பட்டைக் கஷாயத்திலும் கரைத்து வில்லை தட்டிச் சட்டியிலிட்டு மூடி ஒரு யாமம் எரித்தெடுத்து ஆறிய பின்னர் இஞ்சிச்சாறு விட்டரைத்து 10 யவ அளவு மாத்திரை செய்து வெற்றிலையில் வைத்துச் சாப்பிட அக்னி மந்தம் தீரும்.

✲ **ஸ்வயமக்னி ரஸம்** (பை. ர.) மிளகு, கோரைக்கிழங்கு, வசம்பு, கோஷ்டம், வத்ஸநாபி வகைக்கு ஒரு தோலா, இவைகளை இஞ்சிச்சாற்றில் அரைத்துப் பயறளவு மாத்திரை செய்து சாப்பிட எல்லா அஜீர்ணமும் நீங்கும்.

✲ **டங்கணுதி வடீ** (பை. ர.) வெங்காரம், சுக்கு, கந்தகம், ரஸம், வத்ஸநாபி, மிளகு இவை வகைக்குச் சம எடை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து மிளகளவு மாத்திரை செய்து சாப்பிட பசி அதிகமாகும்.

✲ **ரஸராக்ஷஸம்** (பை. ர.) தாம்ரம், ரஸம், கந்தகம், சுக்கு, திப்பிலி, மிளகு, அயஸ்விந்தூரம், ஸுவர்சிலஉப்பு இவைகளை வகைக்குச் சம எடை அரைத்து வில்லைதட்டி வாலுகாயந்திரத்தில் பானையிலிட்டு மூடி ஒரு யாமம் எரித்தெடுத்துச் சம அளவு மூக்கரட்டைக்ஷாரம் சேர்த்து நறிஞ்சிப் பழச் சாற்றிலரைத்துக் கொள்ளவும். அஜீர்ணம் நீங்கும்.

✲ **பஞ்சாமிருத வடீ** (பை. ர.) அப்பிரகபஸ்மம், ரஸம், தாம்ர பஸ்மம், கந்தகம், மிளகு இவை வகைக்குச் சம எடை சேர்த்து புளியாரைச் சாற்றிலரைத்துப் பின்னர் முன்னை இலைச் சாற்றிலும் நொச்சிச் சாற்றிலும் அரைத்துக் குந்துமணி அளவு மாத்திரை செய்து கொடுக்க அக்னிமந்தம் நீங்கும்.

✲ ஜ்வாலாநலம் (பை. ர.) யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், ரஸம், கந்தகம், திப்பிலி, கண்டந்திப்பிலி, செவ்யம், கொடிவேலிவேர் பட்டை, சுக்கு, இவை 1—1 தோலா கஞ்சா 9 தோலா, முருங்கைப்பட்டை 4½ தோலா, இவைகளை கஞ்சா, முருங்கைப்பட்டை, கொடிவேலிவேர்ப்பட்டை, கருசலாங்கண்ணி இவைகளின் சாற்றில் ஒவ்வொருநாளரைத்து 3 தினம் வெயிலிவிட்டுப் பின் 7 நாள் இஞ்சிச்சாறு விட்டரைத்து 4-5 யவ அளவு சாப்பிடபாசன தீபனமாகும். வயிற்று நோயில் நல்லது.

✲ பக்தவிபாக வடி (பை. ர.) ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், ரஸம், கந்தகம், மனோசிலை, செவதைவேர்ப்பட்டை, தந்தீமூலம், கோரைக்கிழங்கு, கொடிவேலிவேர்ப்பட்டை, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், ஓமம், கருஞ்சீரகம், பெருங்காயம் கடுகுரோகிணி, வட்டத்திருப்பி, இந்துப்பு, குரோசாணி ஓமம், ஜாதிக்காய், யவக்ஷாரம் இவை வகைக்குச் சம எடை இஞ்சிச் சாற்றிலும் நொச்சிச் சாற்றிலும் சூரத்தாவாரைச் சாற்றிலும் துளசிச் சாற்றிலும் அரைத்து வெயிலிலிட்டுக் குந்துமணி அளவு மாத்திரை செய்து சாப்பிட அஜீர்ணம், மலபந்தம், சோதம், உதரம், அர்சஸ், அஜீர்ணம், சூலம், ஜ்வரம் நீங்கும்.

✲ பிருஹத்பக்தவிபாக வடி (பை. ர.) அப்பிரகபஸ்மம், ரஸம், கந்தகம், தாம்ரபஸ்மம் தாளகம், மனோசிலை, வங்கபஸ்மம், திரிபலை, வத்ஸநாபி, மனோசிலை, கர்கடசிங்கி, சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், கொடிவேலிவேர்ப்பட்டை, கோரைக்கிழங்கு, ஜீரகம், கருஞ்சீரகம், பொரித்த வெங்காரம், ஏலரிசி, லவங்கப்பத்திரி, கிராம்பு, பெருங்காயம், கடுகுரோகிணி, ஜாதிக்காய், இந்துப்பு இவை 1—1 தோலா, நேர்வாளம் 3 தோலா, இவைகளை கொடிவேலிவேர்ப்பட்டை, தந்தீமூலம், துளசி, ஆடாதோடை, வில்வஇலை, இவைகளின் தனித்தனிச் சாற்றில் அல்லது கஷாயத்தில் 7 நாள் அரைத்து 2 யவ அளவு மாத்திரை செய்து சாப்பிட்டு வீர கபத்தினால் ஏற்படும் மலபந்தம், மப்பு, அக்னிமந்தம், விஷமஜ்வரம், சூலம் இவைகளைப் போக்கும்.

✲ அஜீர்ணபலகாலானல ரஸம் (பை. ர.) ரஸம், கந்தகம் 8—8 தோலா, அயஸ்ஸிந்தூரம், தாம்ரபஸ்மம், தாளகம், வத்ஸநாபி, துத்தம், வங்கபஸ்மம், கிராம்பு, வெங்காரம், தந்தீமூலம், செவதைவேர் வகைக்கு 4 தோலா, ஓமம், ஜீரகம் யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், ஐந்துப்புகள் இவை வகைக்கு 2 தோலா, இவைகளை இஞ்சிச்சாற்றில் 21 தடவை, திப்பிலி, கண்டந்திப்பிலி, சுக்கு, செவ்யம், சித்திரமூலவேர்பட்டை இவைகளின் கஷாயத்தில் 10 தடவை, சீந்திற்கொடி கஷாயத்தில் 10 தடவை பாவனை

செய்து பின் மிளகுத்தூள் எல்லாவற்றிற்கும் பாதி அளவு சேர்த்து 2 குந்து மணி யளவு மாத்திரை செய்து கொள்ளவும். அஜீர்ணம், அக்னிமந்தம், ஆமவாதம், ப்லீஹவிருத்தி, பாண்டு, பிரமேகம், வயிற்று உப்புசம், மலக் கட்டு, ஸூதிகாரோகம், கிரஹணீ, ச்வாஸம், காஸம், ப்ரதிச்யாயம், யக்ஷ்மா, அம்லபித்தம், சூலம், பகந்தரம், மூலம், உதரம் இவை நீங்கும்.

✲ **சங்கவடீ 1** (பை. ர.) ரஸம் $1\frac{1}{2}$ தோலா, கந்தகம் $1\frac{1}{2}$ தோலா, வத்ஸநாபி 3 தோலா, மிளகு 6 தோலா, சங்கபஸ்மம் 6 தோலா, சுக்கு 5 தோலா, ஸர்ஜக்ஷாரம், பெருங்காயம், திப்பிலி, இந்துப்பு, ஸௌவர்சல உப்பு, வளையலுப்பு, உப்பு, வெடியுப்பு இவை வகைக்கு 5 தோலா, இவை களை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து 4—6 யவ அளவு மாத்திரை செய்து சாப்பிட கிரஹணீ, அம்லபித்தம், சூலம், அக்னிமந்தம், ஆமம் இவை நீங்கும்.

✲ **சங்கவடீ 2** (பை. ர.) யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், ரஸம், கந்த கம், இந்துப்பு, சுக்கு, திப்பிலி, மிளகு, வத்ஸநாபி இவை வகைக்கு ஒரு தோலா. புளியம்பட்டைக்ஷாரம், சங்கபஸ்மம், வகைக்கு 4—4 தோலா, லோஹபஸ்மம், பெருங்காயம், வங்கபஸ்மம் 1-1 தோலா, இவைகளை எலுமிச்சம்பழச் சாறுவிட்டரைத்து மாத்திரை செய்துகொள்ளவும். சூலம், காஸம், ச்வாஸம், க்ஷயம், அக்னிமந்தம், வாதவியாதி, மஹோதரம், நாவரட்சி, கிருமி இவைகளை நீக்கும்.

✲ **மஹாசங்கவடீ 1** (பை. ர.) சங்கு சுட்ட பஸ்மம், ஐந்து உப்புகள், புளியம்பட்டை க்ஷாரம், திரிகடு, பெருங்காயம், வத்ஸநாபி, கந்தகம், ரஸம், இவைகளை நாயுருவி, கொடிவேலிவேர் இவைகளின் கஷாயத்திலும், எலுமிச்சம்பழச் சாற்றிலும் விசேஷித்து அம்ல வர்க்கத்திலும் பாவனை செய்துகொள்ளவும். நல்ல புளிப்பேறபட்டதும் மாத்திரையாக்கிக் கொள்ளவும். நல்ல ஜீர்ணசக்தி அளிக்கும். பஸ்மகம், அஜீர்ணம், ஜ்வரம், குல்மம், பாண்டு, குஷ்டம், சூலம், பிரமேஹம், வாதரக்தம், வீக்கம், மூலம் இவைகளைப் போக்கும்.

இந்த சங்கவடியிலேயே லோகபஸ்மமும் சங்கபஸ்மமும் சேர்த்து மாத்திரைசெய்ய மிகவும் நல்லது. வென்னீர் அனுபானம் சிறந்தது.

எலுமிச்சை, புளிப்பு மாதுளை, துறிஞ்சி, புளியாரை, புளிச்சக்கீரை, புளி, இலந்தை, களா இவை எட்டும் **அம்ல வர்க்கம்** எனப்படும்.

✲ **மஹா சங்கவடீ 2** (பை. ர.) ஐந்துப்புகள், பெருங்காயம், சங்க பஸ்மம், புளியம்பட்டைக்ஷாரம், திரிகடு, ரஸம், கந்தகம், வத்ஸநாபி,

வகைக்கு 1 தோலா, இவைகளை முதலில் நாயுருவி கஷாயத்திலும், நல்ல புளிப்பேற்படும் வரை அம்ல வர்கத்திலும் பாவனை செய்து மாத்திரை செய்துகொள்ளவும். உணவிற்குப் பின் ஒரு மாத்திரை கொடுக்கவும். அக்னி மந்தம், மூலம், கிரஹணி நீங்கும்.

✲ **மஹாசங்கவடீ 3** (பை. ர.) கண்டந்திப்பிலி, கொடிவேலிவேர் பட்டை, தந்தீமூலம், ரஸம், கந்தகம், திப்பிலி, யவக்ஷாரம், ஸர்ஜக்ஷாரம், வெங்காரம், ஐந்து உப்புகள், மிளகு, சுக்கு, வத்ஸநாபி, ஓமம், சீந்திற் கொடி, பெருங்காயம், புளியம்பட்டைக்ஷாரம் இவை வகைக்கு 1 தோலா, சங்குபஸ்மம் 2 தோலா, இவைகளை அம்லவர்க்கச் சாற்றால் அரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்து புளிப்பு மாதுளம்பழச் சாறு அல்லது எலுமிச்சம்பழச் சாற்றுடன் சேர்த்துச் சாப்பிடலாம். மோர், தயிர்த் தெளிவு, காடி, கள், வெந்நீர் முதலியவை அனுபானம். அக்னிமந்தம், மூலம், கிரஹணி, குஷ்டம், பிரமேஹம், பகந்தரம், மண்ணீரல்கட்டி, அச்மரீ, ச்வாஸம், காஸம், உதரம், கிருமி, ஹிருதயரோகம், பாண்டு, மலக் கட்டு இவைகளைப் போக்கும்.

✲ **வஜ்ரக்ஷாரம்** (பை. ர.) ஸர்ஜக்ஷாரம், ஸுவர்சலக்ஷாரம், வகைக்கு $\frac{1}{3}$ தோலா, யவக்ஷாரம் 2 தோலா, இவைகளை இளந்தீயில் இருப்புச் சட்டியிலிட்டு, உருக்கி, உருகியதும் அகன்ற பீங்கான் தட்டில் அப்பளம் போன்று விசிறிச் சாய்க்கவும். ஆறியதும் தூள் செய்து 4 யவ அளவு ஜலம் கோரைக்கிழங்கு கஷாயம் இவைகளுடன் கொடுக்க அக்னி மந்தம், அஜீர்ணம், சூலம், வயிற்று உப்பிசம், உதரம், அம்லபித்தம், மல பந்தம், குல்மம் இவைகளைப் போக்கும்.

✲ **விச்வோத்தீபகாப்பிரகம்** (பை. ர.) அப்பிரகபஸ்மம் 4 தோலாவை செவ்வியம், கொடிவேலிவேர்பட்டை நொச்சியிலை, ஊமத்தை இலை, வில்வஇலை, இஞ்சி, கண்டந்திப்பிலி, சோம்பு, கடம்பவேர், எருக்கின்வேர், இவைகளின் சாறு அல்லது கஷாயத்தால் (வகைக்கு 4 தோலா எடை உள்ளதால்) பாவனை செய்து அத்துடன் வெங்காரம் 1 தோலா சேர்த்தரைத்து 4 யவ அளவு மாத்திரை செய்துகொள்ளவும். இதை மலைவேம்பின் கஷாயத்துடன் சாப்பிடவும். அக்னிமந்தம், குல்மம், சூலம், அம்லபித்தம், ஜ்வரம், வாந்தி, வைஸூரி, அலஸகம், ச்வாஸம், காஸம் நாவரட்சி, மண்ணீரல் பெருத்தல், கல்லீரல்நோய், க்ஷயம், தொண்டைக்கம்மல் குஷ்டம், அரோசகம், நாவரட்சி, மோஹம், மூலம், ஆமவாதம், நீரடைப்பு, கண்ணோய் இவைகளைப் போக்கும். ஜீர்ணசக்தி பலம் புஷ்டியளிக்கும்.

✲ **வீரபத்திராப்ரகம்** (பை. ர.) 1000 புடமிட்ட அப்பிரகம், 2 தோலாவை 90 நாள்வரை கொடிவேலிவேர்பட்டைச் சாறு அல்லது கஷாயம் விட்டரைத்துப் பின் இஞ்சிச் சாறுவிட்டு ஒரு நாள் அரைத்து 2-4 யவ அளவு மாத்திரை செய்துகொள்ளவும். வெற்றிலைச்சாறு, இஞ்சிச் சாறு இவைகளுடன் சாப்பிட ச்வாஸம், காஸம், வாந்தி, வீக்கம், காமலை, ப்லீஹம், குல்மம், உதரம், அருசி, பிரமம், ரத்தபித்தம், கல்லீரல், அம்ல பித்தம், சூலம், வயிற்று நோய், காலரா, ஆமவாதம், ரக்தவாதம், எரிச்சல், பலக்குறைவு, இளைப்பு, வித்ரதி, இடுவிஷம், தலைநோய், கண்ணோய் இவைகளில் நல்லது.

✲ **விஷூசிவித்வம்ஸன ரஸம்** (பை. ர.) வெங்காரம், ஸ்வர்ண மாக்ஷிகபஸ்மம், சுக்கு, ரஸம், கந்தகம், வத்ஸநாபி, கருநாகப்பாம்பு விஷம் இவை வகைக்கு 1 தோலா, லிங்கம் 7 தோலா இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து வெண்கடுகளவு மாத்திரை செய்துகொடுக்க காலரா நீங்கும். தயிரன்னம் பத்தியமாகும்.

✲ **வடவாநல ரஸம்** (பை. ர.) ரஸம், கந்தகம், திப்பிலி, இந்துப்பு, உப்பு, கந்தகவெடியுப்பு, ஸௌவர்சிலஉப்பு, வெடியுப்பு, மிளகு, திரிபலை, யவக்ஷாரம் ஸர்ஜக்ஷாரம், வெங்காரம் இவைகளைச் சூர்ணம் செய்து நொச்சியிலைச்சாற்றில் ஒரு நாளரைத்துக் காயவைத்துக் கொள்ளவும். அக்னிமந்தம் நீங்கும்.

✲ **அஜீர்ணரி ரஸம்** (பை. ர.) ரஸம், கந்தகம் 4—4 தோலா, கடுக்காய்தோல் 8 தோலா, திரிகடு, இந்துப்பு 12—12 தோலா, கஞ்சா 16 தோலா இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றிலிட்டு 7 பாவனை செய்து வெயிலிலிட்டு உலர்த்தி வைத்துக் கொள்ளவும். தீபனம், பாசனம், ரேசன மாகும்.

✲ **கந்தகவடீ** (பை. ர) ரஸம் 4 தோலா, கந்தகம் 2 தோலா, சுக்கு 2 தோலா, கிராம்பு மிளகு 4—4 தோலா இந்துப்பு, ஸௌவர்சலை உப்பு 12—12 தோலா, கடலைப்புளிப்பு 8 தோலா, முள்ளங்கிக்ஷாரம் 8 தோலா, இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றில் 7 நாள் பாவனை செய்து வெயிலிலிட்டு உலர்த்தி இலந்தைக்கொட்டையளவு சாப்பிட அஜீர்ணம் நீங்கும். கடலைப்புளிப்பு கிடைக்காவிடத்தில் காடி சேர்க்கலாம்.

✲ **லவங்காதிமோதகம்** (பை. ர.) கிராம்பு, திப்பிலி, சுக்கு, மிளகு, ஜீரகம், கருஞ்சீரகம், சிறுநாகப்பூ, அஸாரூன், ஏலரிசி, ஜாதிக்காய், மூங்கிலுப்பு, காய்பல், லவங்கப்பத்திரி, தாமரைவிதை, சந்தனத்தூள்,

வால்மிளகு, அகில், விலாமிச்சைவேர், அப்பிரகபஸ்மம், பச்சைக்கர்பூரம், ஜாதிபத்திரி, கோரைக்கிழங்கு, ஜடாமாஞ்சி, யவையரிசி, கொத்துமல்லி விதை, சதகுப்பை இவை வகைக்கு 1 தோலா, கிராம்பு, 26 தோலா, பழுப்புசர்க்கரை 104 தோலா, இவைகளை இடித்து அல்லது சர்க்கரையைப் பாகாக்கிக்கலந்து ⅛ தோலா எடையுள்ள மோதகமாக்கிக்கொள்ளவும். அம்லபித்தம், அக்னிமந்தம், ஜீர்ணம், காமலா, பாண்டு இவைகள் குறையும். பலம், புஷ்டி, வீர்யம் அளிக்கும். கிரஹணி நீங்கும்.

✻ ஸுகுமாரமோதகம் (பை. ர.) திப்பிலி, கண்டந்திப்பிலி, சுக்கு, மிளகு, கடுக்காய், நெல்லிக்காய், கொடிவேலிவேர், அப்பிரகபஸ்மம், சிந்திற்கொடி, கடுகுரோகிணி, இவை வகைக்கு 1 தோலா, தந்திமூலம் 3 தோலா, செவதைவேர் 12 தோலா, சர்க்கரை 12 தோலா, இவைகளைத் தேன் விட்டரைத்து மோதகமாக்கிக் கொள்ளவும். வாதாஜீர்ணம், விஷ்டப்தாஜீர்ணம், மலக்கட்டு, வயிற்றுஉப்புசம் நீங்கும்.

✻ சார்தூலகாஞ்சிகம் (பை. ர.) திப்பிலி, இஞ்சி, தேவதாரு, கொடிவேலிவேர்பட்டை, செவ்வியம், வில்வப்பழச்சதை, ஓமம், கடுக்காய் தோல், சுக்கு, ஜீரகம், கருஞ்சீரகம், கொத்துமல்லிவிதை, மிளகு, பெருங்காயம் இவை வகைக்கு ஒரு தோலா, அன்னக்காடி 122 தோலா, ஜலம் 2½ படி சேர்த்து அடுப்பிலிட்டு காடி மீதமாகும்வரை காய்ச்சி எடுத்து வடிகட்டி அதில் கடுகெண்ணெய்யில் ஜீரகம் பெருங்காயம் முதலியவைகளை தாளித்து வைத்துக்கொள்ளவும். காஸம், ச்வாஸம், அதிஸாரம், பாண்டு, காமாலை, ஆமம், குல்மம், வாதசூலை, அர்சஸ், வீக்கம், இவை நீங்கும்,

✻ முஸ்தாரிஷ்டம் (பை. ர.) கோரைக்கிழங்கு 800 தோலா, 51 படி ஜலத்தில் கால்பங்கு மீதமாகக் கஷாயமிடவும். வடிகட்டி அதில் 1200 தோலா எடை வெல்லத்தைக் கரைத்து மேல் காட்டகத்திப்பூ 64 தோலா, ஓமம், சுக்கு, மிளகு, கிராம்பு, வெந்தயம், கொடிவேலிவேர் பட்டை, ஜீரகம் வகைக்கு 16 தோலா இடித்துச் சேர்த்து ஒரு மாதம் மூடிவைத்திருந்த பின்னர் எடுத்து உபயோகிக்கவும்.

# விஷூசீ முதலியவைகளின் சிகித்ஸை

உடல் முழுதும் ஊசிபோன்று வாயுவால் குத்தல் ஏற்பட்டு அஜீர்ணத்தால் அதிஸாரம் மிகுந்து காணப்படின் விஷூசிகா எனப்படும். இது அதிகமானுல் குதிகாலில் சூடு போடலாம். கந்தகம், குங்குமப்பூ இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றுடன் கொடுக்கலாம், திரிகடு, புங்கம் விதை, மஞ்சள் இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து நஸ்யமும் அஞ்சனமுமிடலாம். இதிலேயே துறிஞ்சியின் வேரும் சேர்த்துக்கொண்டும் அஞ்சனமிடலாம். புங்கம்விதை, வேப்பம்பட்டை, நாயுருவி விதை, சீந்திற்கொடி, மருதம்பட்டை, வெட்பாலைப்பட்டை. இவைகளின் கஷாயம் வாந்தியை உண்டாக்கி பேதியை நிறுத்தும்.

புளியை எலுமிச்சம்பழச்சாற்றில் கரைத்துச் சாப்பிட நிற்கும். பாலுடன் வெங்காரம் சாப்பிடலாம். அதிக நாவரட்சியில் கிராம்பு ஜலம் சாப்பிடலாம். அவ்விதமே ஜாதிக்காய் ஜலம், கோரைக்கிழங்கு ஜலம் சாப்பிடலாம்.

**த்வகாதி உத்வர்தன தைலம்:** லவங்கப்பட்டை, லவங்கப் பத்திரி, சித்தரத்தை, அகில், முருங்கைப்பட்டை, கோஷ்டம் வசம்பு, சதகுப்பை இவைகள் எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து எண்ணெய்யில் கலந்து காய்ச்சி தேய்க்க குடைச்சல் நீங்கும்.

**சுக்ராதி தைலம்:** காடி 4 தோலா, கோஷ்டம் 2 தோலா, இந்துப்பு, திப்பிலி, ஜாதிக்காய் வகைக்கு 1—1 தோலா, கல்கமாக்கி கடுகெண்ணெய் 16 தோலாவில் கலந்து எரித்தெடுத்த தைலம் குடைச்சலைப் போக்கும்.

அவ்விதமே கோஷ்டம் இந்துப்பு இவைகளைக் காடிவிட்டரைத்து எண்ணெய்யில் கலக்கி எரித்தெடுத்த தைலமும் நல்லது.

விலம்பிகையில் அலஸகத்திலும் மேலும் கீழும் சோதனமாகும்படி சிகித்ஸை செய்யவேண்டும். வாய்வழியே குழாய் விட்டு மேல் வயிற்றிலுள்ளதை வெளிக்கொணரவேண்டும். பலவர்த்தி போன்றவைகளால் அடிவயிற்றில் அடைத்துள்ளதை வெளிக்கொணரவேண்டும்.

நல்ல ஏப்பம், உத்ஸாஹம், மலமூத்திரங்கள் சரியே வெளியாதல், உடல் இலேசாக இருத்தல், சரியான பசி, தாகம் இவை உணவு ஜீர்ணமானதன் அறிகுறிகள்.

அக்னிமாந்த்யாஜீர்ணுதிகாரம் முற்றிற்று.

# இரண்டாவது பகுதி—அகராதி.


| | பக்கம் |
|---|---|
| அகஸ்திமோதகம் | 8 |
| அக்னிகரகிருதம் | 35 |
| அக்னிகுமார ரஸம் | 37 |
| அக்னிதுண்டீ | 40 |
| அக்னிமாந்த்யம் | 24 |
| அக்னிமுக சூர்ணம் | 31 |
| ரஸம் | 38 |
| லவணம் | 33 |
| லோஹம் | 21 |
| அக்னி ஸந்தீபன ரஸம் | 42 |
| அஜீர்ணம் | 27 |
| — உபத்ரவங்கள் | 28 |
| — சிகித்ஸை | 29 |
| — மாற்றுபசாரங்கள் | 37 |
| அஜீர்ண கண்டகரஸம் | 40 |
| பலகாலாநலரஸம் | 44 |
| ஹரயோகம் | 38 |
| ஹரரஸம் | 39 |
| ஹரீவடீ | 37 |
| அஜீர்ணாரி | 39,47 |
| அபயாரிஷ்டம் | 19 |
| அமிருதகல்பவடீ | 40 |
| அமிருதவடீ | 41 |
| ஹரீதகீ | 34 |
| அர்சஃகுடாரம் | 22 |
| அர்சோரோகம் | 1 |
| ஆர்திரம் | 2 |
| குறிகள் | 2 |
| சிகித்ஸை | 5 |
| சுஷ்கம் | 2 |
| தள்ளவேண்டியவை | 24 |
| நிதானம் | 1 |
| பத்தியம் | 24 |
| பூர்வரூபம் | 2 |
| லேபங்கள் | 2 |

| | பக்கம் |
|---|---|
| அலஸகம் | 29 |
| அஷ்டாங்கரஸம் | 23 |
| ஆதித்யரஸம் | 40 |
| ஆமாஜீரணம் | 27 |
| உணவு ஜீர்ணக்குறிகள் | 29 |
| உத்பல ஷட்பலகிருதம் | 20 |
| கங்கோலாதி சூர்ணம் | 14 |
| கந்தகவடீ | 47 |
| கபார்சஸ் | 3 |
| காங்காயனவடீ | 7 |
| காஸீஸாதி தைலம் | 27 |
| கிரவ்யாத ரஸம் | 37 |
| குடஜரஸக்ரியை | 16 |
| குடஜாதிகிருதம் | 16 |
| குடஜாவலேஹம் | 16 |
| குடபல்லாதகம் | 17 |
| க்ஷுதாஸாகரம் | 41 |
| சக்ரேச்வர ரஸம் | 23 |
| சங்கவடீ | 34, 45 |
| சஞ்சத்குடாரம் | 23 |
| சந்திரபிரபாவடீ | 22 |
| சர்க்கராஸவம் | 9 |
| சர்மகிலம் | 5 |
| சவ்யாதிகிருதம் | 11 |
| சார்தூலகாஞ்சிகம் | 48 |
| சிரிபில்வாதி சூர்ணம் | 13 |
| சிலாகந்தாதிவடீ | 23 |
| சுண்டீகிருதம் | 11 |
| ஜாதீபலாதிவடீ | 23, 48 |
| ஜ்வாலாநலம் | 44 |
| டங்கணாதிவடீ | 43 |
| தசமூல கிருதம் | 35 |
| ,, குடம் | 16 |
| தத்தூராதி சூர்ணம் | 14 |
| தநஞ்சய சூர்ணம் | 33 |

| | பக்கம் |
|---|---|
| தந்த்யரிஷ்டம் | 19 |
| திராக்ஷாஸவம் | 9 |
| திரிபலாலோஹம் | 42 |
| திருவிருதாதி சூர்ணம் | 25 |
| திலாதிமோதகம் | 6 |
| தீக்ஷ்ணமுக ரஸம் | 22 |
| தீக்ஷ்ணாக்னி | 24 |
| நாகராதிமோதகம் | 14 |
| நாகார்ஜுனயோகம் | 15 |
| நித்யோதித ரஸம் | 23 |
| பக்தவிபாகவடீ | 44 |
| பஞ்சாநநவடீ | 23 |
| பஞ்சாமிருதவடீ | 43 |
| படவாநல சூரணம் | 33 |
| முகசூர்ணம் | 33 |
| பத்த்யாதி சூர்ணம் | 30 |
| பஸ்மகம் | 26 |
| பாகுசாலகுடம் | 8, 16 |
| பாசுபதரஸம் | 39 |
| பாடாதி சூர்ணம் | 10 |
| பாஸ்கர ரஸம் | 42 |
| பித்தார்சஸ் | 3 |
| பிப்பல்யாதி தைலம் | 21 |
| பிரதீபன ராஜவல்லபம் | 43 |
| பிராணதமோதகம் | 6 |
| பிருஹத் அக்னிமுக சூர்ணம் | 31 |
| திராக்ஷாஸவம் | 19 |
| பல்லாதகலேஹம் | 8, 19 |
| மஹோததி ரஸம் | 41 |
| விபாகவடீ | 44 |
| ஸூரணமோதகம் | 15 |
| மந்தாக்னி | 24 |
| மரிசாதிமோதகம் | 6 |
| மஹா காஸீஸாதி தைலம் | 21 |
| க்ரவ்யாத ரஸம் | 38 |
| சங்கவடீ | 45, 46 |
| லவங்காதிவடீ | 41 |
| மஹோததி ரஸம் | 41 |

| | பக்கம் |
|---|---|
| மாணசூரணாதி லேஹம் | 21 |
| மாணிபத்ரயோகம் | 15 |
| முஸ்தாரிஷ்டம் | 48 |
| ரக்தார்சஸ் | 4 |
| — சிகித்ஸா | 17 |
| ரஸசேஷாஜீர்ணம் | 28 |
| ராக்ஷஸம் | 43 |
| ராமபாணம் | 40 |
| லகுசவ்யாதி கிருதம் | 11 |
| லகுவைச்வாநர சூர்ணம் | 30 |
| லகுஸூரண மோதகம் | 8 |
| லவங்காதி மோதகம் | 44 |
| மோதகம் | 47 |
| லவணோத்தமாதி சூர்ணம் | 13 |
| வஜ்ரக்ஷாரம் | 46 |
| வடவாநலம் | 47 |
| வாதார்சஸ் | 2 |
| வார்த்தாகுகுடிகா | 17 |
| விச்வோத்திபிகாப்பீரம் | 46 |
| விஜய சூர்ணம் | 14 |
| ரஸம் | 43 |
| விடங்காதிலேஹம் | 34 |
| விதக்தாஜீர்ணம் | 27 |
| வியோஷாதி கிருதம் | 20 |
| சூரணம் | 9, 32 |
| வடீ | 10 |
| விலம்பிகா | 29 |
| விஷமாக்னி | 24 |
| விஷூசிகா | 28 |
| அஸாத்ய லக்ஷணம் | 29 |
| விஷூசிவித்வம்ஸனம் | 47 |
| விஷ்டப்தாஜீர்ணம் | 28 |
| வீரபத்ராப்ரகம் | 47 |
| வேல்லஜாதி சூர்ணம் | 14 |
| ஸஞ்சீவனீ குடிகா | 33 |
| ஸந்நிபாதார்சஸ் | 3 |
| ஸமசர்க்கரா சூர்ணம் | 9 |
| ஸஹஜார்சஸ் | 3 |

| | பக்கம் |
|---|---|
| ஸாமுத்ராதி சூர்ணம் | 32 |
| ஸிம்ஹ்யாதி கிருதம் | 20 |
| ஸுகுமாரபோதகம் | 48 |
| ஸுநிஷண்ணகசாங்கேரி கிருதம் | 20 |
| ஸூரணாதி புடபாகம் | 7 |
| ஸூரணாதி மோதகம் | 7 |
| ஸைந்தவாதி சூர்ணம் | 32 |
| ஸ்வயமக்னி | 43 |
| ஹபுஷாதிதக்ராரிஷ்டம் | 10 |
| ஹிங்க்வாதி சூர்ணம் | 31 |
| ஹிங்க்வாஷ்டகம் | 31 |
| ஹுதாசனம் | 40, 42 |
| ஹ்ரீபேராதிகிருதம் | 11 |